
தமிழ்ச்

சாசனங்கள்



வித்துவான்: வ. தங்கையா நாடார்.

முன்னுரை

குறள் வெண்பா

நானே வழியுமெய்யு நல்லுயிரு மென்றபொருள்
தானேமுன் னிற்கவருள் தந்து.

'தென்னிந்திய தமிழ்ச் சாசனங்கள்' என்னும் பெயருடைய இந்நூல், சென்னைப் பல்கலைக் கழகத்தார் 1958-ஆம் ஆண்டு முதல் வித்துவான், கீழ்க்கலைத் (B.O.L) தேர்வுகளுக்கென வெளியிட்டுள்ள முப்பது கல்வெட்டுகளையும், அவற்றிற்குரிய குறிப்புரை, விளக்கவுரை, வரலாற்றுரை, ஆராய்ச்சியுரை முதலியவற்றையும் கொண்டுள்ளது இதற்கு முன்னர் வித்துவான் தேர்வுக்குரியதாய் என்னால் வெளியிடப்பட்ட சாசன உரை நூல், **'தமிழ்ச் சாசனங்கள்'** என்று பெயரிடப் பெற்றிருந்ததால், இஃது அதனினும் வேறு என்று அறிதற்கு இப்பெயர் இடப்பட்டது. முந்திய சாசனத் தொகுதியில் இருந்து, இத்தொகுதியில் எட்டு சாசனங்கள் இடம் பெற்றுள்ளன. 1954ஆம் ஆண்டு முதல் பீ. ஏ. ஆனர்சு., எம். ஏ. தமிழ்த்தேர்வுகளுக்கும் இஃது பாடமாய் இருந்து வந்துள்ளமையும் குறிப்பிடத் தக்கது.

இந்நூலில் ஒவ்வொரு சாசனத்தின் முன்னரும் முன்னுரையாக அது காணப்படும் இடம், அதன் காலம், அக்காலத்திய அரசர், எழுதப்பட்ட மொழி, எழுத்துவகை வரி முதலியவையும், அதில் கூறப்படும் செய்தியும் தெளிவாய்க் கூறியிருப்பதோடு, அடிக்குறிப்பில் அந்தந்த அரசர் வரலாற்றினையும் விரிவாகக் கூறியுள்ளேன். சாசனப் பகுதிகளுக்கு அந்தந்தப் பக்கங்களில் அடிக் குறிப்பாக விளக்கம் தந்திருப்பதோடு, சாசனத்தின் முடிவில் பயிற்சி வினுக்களும் அமைத்துள்ளேன்.

நூலின் தொடக்கத்தில், தமிழ்ச் சாசன வரலாறும், நூலில் அமைந்துள்ள முப்பது சாசனங்களைப் பற்றிய விரிவான ஆராய்ச்சிக் கட்டுரையும் எழுதியிருப்பதோடு, இறுதியில் 'விசேடக்குறிப்புக்கள்' முதலியனவும் அமைத்துள்ளேன். இந்நூல் தேர்வுக்குப் பயிலும் மாணவர்களுக்கு மட்டுமன்றி, தமிழ்ச் சாசன அறிவு பெற அவாவும் தமிழறிஞர் அனைவர்க்கும் அருந்துணை புரியுமென்பதற்கு ஐயமில்லை. பேராசிரியர்கள், பள்ளித்தலைவர்கள், மாணவர்கள், நூல் நிலையப் பொறுப்பாளர்கள் அனைவரும் இந்நூலை வாங்கி ஆதரிப்பார்கள் என்று நம்புகின்றேன்.

பாளையங்கோட்டை,
1—6—1958.

ஆசிரியர்.

பொருளடக்கம்

தமிழ்ச் சாசன வரலாறும் ஆராய்ச்சியும்

சாசனம் என்பது ஒரு வடசொல்; அது கட்டளை அல்லது உத்தரவு என்று பொருள்படும். அரசர்கள் கோயில்களுக்கும், புலவர் முதலியவர்களுக்கும் அளித்த தானங்களைப் பற்றிய உத்தரவு அல்லது கட்டளை ஆதியில் சாசனம் என்று பெயர் பெற்றது, இடைக் காலத்தில் பிற தானத்தைக் குறிப்பதற்கும் அச் சொல் வழங்கப்பட்டது. இப்பொழுது நிலத்தின் கிரய பத்திரத்தைக் குறிப்பதற்கு நாம் அச் சொல்லை வழங்குகின்றோம்.

சாசனங்கள் தங்கம், வெள்ளி, செம்பு முதலிய உலோகங்களில் எழுதப்படினும், பெரும்பாலும் அவை கல்லில் வெட்டப்பட்டு வந்ததனால், 'கல்வெட்டுக்கள்' என்றும், 'சிலாலேகை' என்றும் பெயர் பெற்றன. செம்பு முதலிய உலோகங்களில் எழுதப்பட்டவை செப்புப் பட்டயம், செப்பேடு எனவும், தாமிரப் பட்டயம் தாமிரசாசனம் எனவும் பெயர் பெற்றன. அவற்றை வேறு அடைமொழி யின்றிப் 'பட்டயம்' என வழங்குதலு முண்டு. உலோகங்கள், கருங்கற்கள் ஆகியவற்றி லன்றிச், சாசனங்கள் மட்பாண்டம், செங்கல், சுட்டமண், பளிங்குக்கல், படிமம் முதலியவற்றிலும் எழுதப்பட்டு வந்தன.

தமிழ்நாட்டில் கோயில் சுவர்கள், கற்பாறைகள், மலைக் குகைகள், மண்டபங்கள், படிமங்கள், நடுகற்கள் முதலியவற்றில் கல்வெட்டுக்கள் காணப்படுகின்றன. செப்பேடுகளெல்லாம் கல்வெட்டுக்களின் படிகளே யாதலின், அவையும் கல்வெட்டுக்கள் என்றே சொல்லத் தகுந்தனவாம்.

தென்னிந்தியாவில் பிராகிருதம், சமஸ்கிருதம், தமிழ், தெலுங்கு, கன்னட முதலிய பல மொழிகளில் எழுதப் பெற்ற கல்வெட்டுக்கள் காணப்படுகின்றன. அவைகளில் சில கல்வெட்டுக்கள் இருமொழிகள் கலந்து காணப்படுகின்றன. தமிழ்மொழியில் எழுதப் பெற்ற சாசனங்களும் கூட, கிரந்த எழுத்துக்களும், சமஸ்கிருத மொழிகளும் கலந்து எழுதப் பெற்றுள்ளன. சில செய்யுள் வடிவத்திலும், சில உரை நடையிலும்,இன்னும் சில அவை இரண்டும் கலந்தும் காணப்படுகின்றன. இந்நூலில் தென்னிந்தியாவில் தமிழ் மொழியில் எழுதப் பெற்ற முப்பது கல்வெட்டுக்களைப் பற்றிக் கூறப்படுதலின், இஃது 'தென்னிந்திய தமிழ்ச் சாசனங்கள்' என்று பெயர் பெற்றது.

இத்தகைய கல்வெட்டுக்கள் தமிழ்நாட்டில் பழங்கால முதலே தோன்றியுள்ளன என்பதற்குப் பல சான்றுகள் காணப்படுகின்றன. இன்றைக்குச் சுமார் ஐயாயிரம் ஆண்டு கட்கு முன் தோன்றியதாகக் கருதப்படும் 'தொல் காப்பியம்' என்னும் இயற்றமிழ் இலக்கண நூலில்,

"காட்சி கால்கோள் நீர்ப்படை நடுகல்
சீர்த்தகு சிறப்பிற் பெரும்படை வாழ்த்தலென்
றிருமூன்று வகையிற் கல்லொடு புணர"
(தொல். 1006)

என வரும் சூத்திரத்தாலும், அதன் உரையாலும், அக்காலத் தில் போர்க்களத்தே வென்றுபட்ட வீரர்களுக்குக் கல்லெடுத் தலும், அக் கல்லில் அவர்தம் வீரச் செயல்களைப் பொறித்து நடுதலும், அதற்குக் கோயிலெடுத்து வழிப்படுதலுமாகிய செய்திகள் கூறப்பட்டுள்ளன என்பது புலனாகின்றது. இச் செய்திகளைக் கடைச்சங்க காலத்தில் தோன்றியனவாகக் கருதப்படும் அகநானூற்றில்;

"நல்லமர்க் கடந்த நாணுடை மறவர்
பெயரும் பீடு மெழுதி அதர்தொறும்
பீலி சூட்டிய பிறங்குநிலை நடுகல்" (அகம். 67)

எனவும், புறநானூற்றில்

"மரல்வகுந்து தொடுத்த செம்பூங் கண்ணியொ
டணிமயிற் பீலி சூட்டிப் பெயர்பொறித்
தினிநட் டனரே கல்லும்" (புறம். 264)

எனவும் வருவனவற்றால் காணலாம். தொல்காப்பியத்தின் வழியாகப் பிறந்த பன்னிருபடலம், புறப்பொருள் வெண்பாமாலை முதலிய இலக்கண நூல்களிலும் இச் செய்திகள் பல வெண் பாக்களால் விரிவாகக் கூறப்பட்டுள்ளன. திருக்குறள், கலிங்க துப்பரணி, மூவருலா, திருவாரூர் மும்மணிக்கோவை முதலிய தமிழ் இலக்கிய நூல்களிலும் இவைகள் பற்றிய குறிப்புக்கள் பல காணப்படுகின்றன.

முற்காலத்தில் போர்வீரர்களின் வெற்றிகளே யன்றி அவர்தம் கொடைச் சிறப்பும் கல்லில் பொறிக்கப் பட்டன என்பதைப் புறநானூற்றுப் பாடலொன்று குறிப்பாகக் காட்டுகின்றது. அக நானூற்றுச் செய்யுளொன்றிலும்,

"ஆடவர்,
பீடும் பெயரும் எழுதி அதர்தொறும்
பீலி சூட்டிய பிறங்குநிலை நடுகல்"

என வரும் அடிகளால் அக்காலத்து நடுகற்களில் போர்வீரர்களது பெருமைக்குக் காரணமான கல்வி, தறுகண், புகழ்,

முதலியனவும் எழுதப்பட்டு வந்தன என்பது விளக்கமாகின்றது.

இடைக்காலத்தில் பௌத்த, சமண முனிவர்கள் தத் தம் மதத்தைப் பரப்புதற்கென்று தமிழ்நாட்டிற்கு வந்து, அரிய நோன்பியற்றி, தம் ஆருயிர் துறந்த இடங்களில் அவர் தம் மாணுக்கர்கள் அவர்களைப் பற்றிய செய்திகளை மலைப் பாறைகளிலும், குன்றுகளிலும், குகைகளிலும் பொறித்து வைத்துள்ளமையைச் செஞ்சிக் கடுத்த திருநாதர் குன்றிலும், திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள கழுகுமலையிலும், மதுரை மாவட்டத்திலுள்ள ஆனைமலையிலும், திருச்சிராப் பள்ளிக் குன்றிலும் நாம் இப்பொழுதும் காணலாம். இவ்வாறு கிறித்து சமயத்தைப் பரப்புதற்கு மேனாட்டினின்றும் வந்து, தமிழ் நாட்டில் இறந்தவர்களுடைய கல்லறைகளிலும், கிறித்துவக் கோயில் சுவர்களிலும் பொறித்து வைக்கப் பெற்ற அவர் தம் செய்திகளை யெல்லாம் தொகுத்து, இற்றைக்கு பத்து ஆண்டுகட்கு முன்னர் நமது சென்னை அரசாங்கத்தார் "List of Inscriptions on Tombs or Monuments in Madras" என்ற பெயரோடு இருபெரு நூல்களாக வெளியிட்டுள்ளமை இங்குக் குறிப்பிடத் தக்கதாகும்.

இவ்வாறு நடுகல் சாசனங்களாகவும், சமாதிச் சாசனங்களாகவும் தோன்றிய கல்வெட்டுக்கள், கி. பி. 4ஆம் நூற்றுண்டு முதல் 9ஆம் நூற்றுண்டு வரை தமிழ் நாட்டின் வட பகுதியை ஆண்ட பல்லவர்கள் காலத்தில் வளர்ச்சியுற்றன என்று நாம் சொல்ல வேண்டும். அவர்கள் முதலில் தங்கள் தாய் மொழியான பிராகிருத மொழியிலேயே சாசனங்களை எழுதி வந்தனர். பின்னர் வடமொழியிலும், கி. பி. ஆறும் நூற்றுண்டு முதல் தமிழ்மொழியிலும் அவர் தம் கல்வெட்டுக்கள் தோன்றலாயின. அவர்கள் கி. பி. ஏழாம் நூற்றுண்டு முதல் தமிழ் நாட்டில் கற்கோயில்கள் பல கட்டினுர்கள். அக் கோயில்களில் நாள்வழிபாடும், திங்கள் விழா, ஆண்டுவிழாக் களும் நடைபெறும் பொருட்டுப் பொன்னும் நிலமுமாகப் பல நிவந்தங்களைக் கொடுத்தனர். அவர்களைப் போல பிற அரசியல் அதிகாரிகளும், பொது மக்களும் கோயில்களுக்குத் தானங்கள் வழங்கினர். அவர்கள் அளித்த தானங்களைச் செப்பேடுகளில் எழுதி, கோயில்களுக்குக் கொடுத்தனர். கோயில் அதிகாரிகளும், ஊர்ச்சபையினரும் அதனை எல்லாரும் அறிந்து எப்பொழுதும் அது நடை பெறுமாறு எல்லாரும் காண கோயில் சுவர்களில் பொறிக்கலாயினர். இங்ஙனம் நடுகல் சாசனங்களும், சமாதிச் சாசனங்களும் பல்லவர்கள் காலத்தில் கோயில் சாசனங்களாக வளர்ச்சியுற்றன.

பல்லவர்களுக்குப் பின் ஏறக்குறைய நானூற்றுமுப்பது ஆண்டுகள் சோழர்கள் தஞ்சையிலிருந்து தமிழ் நாட்டை ஆண்டனர். அவர்களைத் 'தஞ்சைச் சோழர்கள்' அல்லது 'பிற்காலச் சோழர்கள்' என்று கூறுவார்கள். அவர்களும் பல கற்கோயில்களைக் கட்டி நிவந்தங்கள் கொடுத்து சாசனங்களை பிறப்பித்தனர். அவர்களுக்குபின் வந்த பிற்காலப் பாண்டிய மன்னர்களும் சாசனங்களை எழுதி வைக்கும் பழக்கத்தை மேற்கொண்டனர். அதனால் பிற்காலத்தில் சாசனங்கள் பல வகையிலும் வளர்ச்சியுற்றன. அரசர்களும் பொது மக்களும் கோயில்களுக்கு மானிபம் அளிப்பது, பார்ப்பனர்களுக்கு ஊர் அளிப்பது, அறச்சாலைகளுக்கு நிவந்தங்கள் தருவது, கோயில்கள், மண்டபங்கள் எடுப்பது, கோயில் திருப்பணிகள் பல செய்வது, கோயில்களுக்கு நந்தாவிளக்குகள் அளிப்பது, திருவிழாக்கள் நடைபெறுவதற்கு மானிபமளிப்பது, அரசர்கள் அல்லது அடியார்கள் பிறந்த நாட்களைக் கோயில்களில் கொண்டாடத் தானமளிப்பது முதலிய பலவகைச் செய்திகள் பற்றியும் சோழர்காலத்திலும், பாண்டியர் காலத்திலும் சாசனங்கள் தோன்றலாயின. சுருங்கக் கூறின், தமிழ்நாட்டின் இடைக்கால வரலாறு அவர்கள் காலத்திய சாசனக்களின் வாயிலாகவே அறியக் கூடிய தாயுள்ள தென்றால், சாசன வளர்ச்சி அவர்கள் காலத்தில் எவ்வாறிருந்த தென்பது சொல்லாமலே விளங்கு மல்லவா?

பல்லவர் கல்வெட்டுக்கள் மூன்று கூறுபாடுகளை யுடையன. அதன் துவக்கத்தில் அக் காலத்து அரசனுடைய பெருமை கூறப் பெற்றிருக்கும். பின்னர் இன்னின்னார் இன்னின்ன அறத்தின் பொருட்டு இன்னின்ன பொருட்களைக் கொடுத்தனர் என்பன போன்ற செய்திகள் காணப்படும். முடிவில், அவ்வறத்தின் பாதுகாவல் பற்றிக் கூறும் 'காப்பு நிலை' குறிக்கப் பெற்றிருக்கும். அவர்கள் சாசனங்களின் துவக்கத்திலும் முடிவிலும் ஏதாவது ஒரு வடமொழிச் சுலோகத்தைப் பெற்றிருப்பது முண்டு. பல்லவர் காலத்தை அடுத்து வாழ்ந்த சோழர், பாண்டியர் சாசனங்களில் அரசனது பெருமை, சிறப்பு முதலியவைகளைக் கூறும் பகுதி வடமொழியிலும், செய்திகளைக் கூறும் பிற்பகுதி தமிழ் மொழியிலும் அமைந்து காணப்பட்டன. முதலாம் இராசராசன்

காலத்திலிருந்துதான் அரசனது போர் வென்றிகள், ஆட்சிச் சிறப்பு, கொடை முதலியவற்றைக் கூறும் மெய்க்கீர்த்திகள் விரிவாகக் கூறப்பட்டு வந்தன.

> "சீர்நான் காகி இரண்டடித் தொடையாய்
> வேந்தன் மெய்ப்புகழ் எல்லாம் சொல்லியும்
> அந்தத் தவன்வர லாறு சொல்லியும்
> அவளுடன் வாழ்கெனச் சொல்லியும் மற்றவன்
> இயற்பெயர்ப் பின்னர் சிறக்க யாண்டென
> திறம்பட உரைப்பது சீர்மெய்க் கீர்த்தி"
>
> (பன்னிருபாட்டியல் 110)

என்பது சாசனங்களின் துவக்கத்தில் செய்யுள் வடிவில் காணப்பெறும் மெய்க் கீர்த்திக் குரிய இலக்கணமாகும். இவ் விலக்கணம் பன்னிரு பாட்டியல் என்னும் பாட்டியல் நூலில் கூறப்படுகிறது. மெய்க் கீர்த்தியின் இலக்கணத்தைக் கூறும் வேறு நூல்கள் வச்சணந்திமாலை என்னும் வெண்பாப் பாட்டியல், இலக்கண விளக்கப்பாட்டியல் முதலியன வாகும்.

இச் சாசனங்களில் குறிக்கப் பெறும் செய்திகளும் பல வாம். கோயில்களில் நடைபெறும் நாள் வழிபாடுகள் விழா நிகழ்ச்சிகள், இரவும் பகலும் இடைவிடாமல் எரிக்கப் படும் நத்தா விளக்குகள், வழிபாட்டு வேளைகளில் மட்டும் எரிக்கப்படும் சந்தி விளக்குகள், படிவம் திருவுருவங்களுக் குரிய அணிகலன்கள், வெள்ளி செப்புக் கலங்கள் முதலிய வற்றின் எடை முதலியன, கோபுரம் மண்டபம் திருச்சுற்று மாளிகைகள், படிமம் ஆகியவற்றின் பெயர்கள் முதலியவற் றைப் பற்றிய செய்திகள் கல்வெட்டுக்களில் காணப்படுகின் றன. அன்றியும் அரசர், அரசியல் அதிகாரிகள் முதலியோர் செய்த தானங்கள், உறுதிமொழிகள், அறச்செயல்கள் முதலியனவும் சாசனங்களில் கூறப்பெற்றுள்ளன.

இத்தகைய சாசனங்களாலும், சாசனங்களில் அமைந்த மெய்க்கீர்த்திகளாலும் உண்டான பயன்கள் பலவாகும். நாம் கேட்கும் பாரம் பரியக் கதைகள், படிக்கும் இலக்கியங் கள், காணும் கலை நுட்பங்கள் ஆகிய இவைகளின் மூலம் தோன்றும் வரலாற்றை வரிசைப்படக் கூறுவது சாசனங்க ளே. சாசனங்கள் நாட்டுவரலாற்றைக் கூறும் நோக்கத் தோடு எடுதப்படவில்லை யாயினும் அவைக ளின்றேல் இன் றைய நம் இந்திய நாட்டு வரலாறுகள் இத்துணை விரிவாக

சிறப்பாக நடத்தினுர். சமஸ்கிருதம், பிராகிருத முதலிய மொழிகளில் நல்ல தேர்ச்சி பெற்றிருந்த அவர், அம்மொழி களிலுள்ள பல நூல்களை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து வெளியிட்டார். அக்காலத்தில் உயர்திரு து. அ. கோபிநாத ராவ், திருவி. வெங்கையா முதலியவர்களை அவர் தம் ஆராய்ச்சிக்குத் துணையாகக் கொண்டு அவர்களையும் அதில் ஈடுபடும்படியாகச் செய்தார். நாளடைவில் பலர் இத்துறை யில் ஈடுபட்டு, சிறந்த பணி செய்து வந்துள்ளனர்.

இதுகாறும் தென்னிந்திய சாசனத் தொகுதிகளில் பதின் மூன்று தொகுதிகளும், அவைகளைப் பற்றிய ஆண்டு அறிக் கைகளும் வெளிவந்துள்ளன. அவைகளில் முதல் மூன்று தொகுதிகள் உல்சு துரை மகனுரால் ஆராய்ச்சிக் குறிப்பு ரைகளுடன் வெளியிடப்பட்டன என்று மேலே கூறினேம். நான்காம் தொகுதி முதல் எட்டாம் தொகுதி வரை சானங்க ளின் மூல மட்டும் அமைந்த தொகுதிகளாகக் காணப்படுகின் றன. 9, 10, 11 ஆம் தொகுதிகள் தெலுங்கு, கன்னடமொழி களில் அமைந்த சாசனங்க ளாகும். 12, 13,ஆம் தொகுதிகள் இரண்டும் ஆராய்ச்சி முன்னுரையுடன் வமிச வாரியாக முறையே பல்லவர்களையும், சோழர்களையும் பற்றிய சாசனங்க ளாகத் தொகுக்கப்பட்டுள்ளன.

உயர்திரு. து. அ. கோபிநாதராவ் அவர்கள் 1902 ஆம் ஆண்டு முதல் திருவனந்தபுரம் சமத்தானத்தில் சாசன ஆராய்ச்சித் துறைத் தலைவராக விருந்து வெளி யிட்ட தொகுதிகளே திருவாங்கூர் சாசனத் தொடர் (Travancore Archaeological series) என்று பெயர் பெறும். சாசன ஆராய்ச்சிக்குத் துணையாக அவர் எழுதிய பண்டைத் தமிழ் எழுத்துக்கள் பற்றிய ஆராய்ச்சிகள் யாவராலும் போற்றத் தக்கன வாகும். இவை யன்றி, புதுக்கோட் டைஇராச்சிய சாசனங் கள், கர்னடக, இராச்சிய சாசனங்கள் முதலிய பல சாசனத் தொகுதிகளும் வெளி வந்துள்ளன. அரசாங்கத்தார் படி எடுத்த சாசனங்களில் இன்னும் வெளியிடப்படாதன முப்பதி னுயிரத்திற்கு அதிகமாயுள்ளன என்று கூறுகின்றனர். அவைகளும் வெளிவரக் கூடுமாயின், இந்திய நாட்டின் வரலாற்றுண்மைகளை அறிவதற்கு பெரிதும் உதவு மென்ப தற்கு ஐயமின்று.

இங்ஙனம் இந்திய நாட்டு வரலாற்று ஆராய்ச்சிக்கு மிகவும் சிறந்த சான்றுகளாயுள்ள சாசனங்களின் பதிப்புக

ளுக்குக் காரணமாயிருந்த மேனாட்டவரில் ராபர்ட் சிவெல், டாக்டர் கில் ஹார்ன், டாக்டர் பர்னல், டாக்டர் பூலர், டாக்டர் உல்சு, கர்னல் காலின் மக்கென்ஸி முதலியவர்களும், தமிழ்நாட்டவரில் உயர் திரு. து. அ. கோபிநாதராவ், திரு. வி. வெங்கையா, திரு, P. T. ஸ்ரீனிவா சையங்கார் எம்.ஏ. முதலியவர்களும் குறிப்பிடத் தக்கவ ராவர். இக்காலத்திலும் திரு. மு. இராகவையங்கார், திரு. T. N. சுப்பிரமணி யன், திரு. C.M. இராமச்சந்திர செட்டியார், திரு. T.V. சதாசிவ பண்டாரத் தார் முதலியோர் சாசன ஆராய்ச்சியில் மதிநுட்பமுடையவர்க ளாய்ப் பல வரலாற்றுண்மைகளைக் கண்டு வெளியிட்டுள் ளனர்.

இச்சாசனங்களில் சென்னைப் பல்கலைக் கழகத்தார், முப்பது சாசனங்களைத் தேர்ந்தெடுத்து, ஆங்கில முன்னுரை யுடனும், சாசன மூலத்தை யடுத்து ஆங்கில மொழி பெயர்ப் புடனும், ஓரளவு அடிக் குறிப்புடனும் 1952ஆம் ஆண்டு வெளியிட்டுள்ளனர். அது 1954ஆம் ஆண்டு முதல் பீ. ஏ. ஆனர்சு, எம். ஏ. தமிழ்த் தேர்வுகளுக்குப் பாட நூலாகவும், 1958 ஆம் ஆண்டு முதல் தமிழ் வித்துவான், கீழ்க்கலைத் (B.O.L) தேர்வுகளுக்குப் பாட நூலாகவும் குறிக்கப் பெற் றுள்ளது. அதில் முதல் சாசனம் இந்திய சாசனத் தொகுதி யிலும், 2 முதல் 22 வரையுள்ள சாசனங்கள் தென்னிந்திய சாசனத் தொகுதியிலும், 23, 24, 25, 26, 30 ஆம் சாசனங்கள் திருவாங்கூர் சாசனத் தொகுதியிலும், 27, 28, 29 ஆம் சாசனங்கள் புதுக்கோட்டை இராச்சிய சாசனத் தொகுதியிலும் இருந்து தொகுக் கப் பெற்றவை யாகும்.

அவற்றுள், முதல் சரசனம் திருவல்லிக்கேணி பார்த்த சாரதி கோயிலிலும், 2ஆம் சாசனம், திருச்சானூர் (சித்தூர் மாவட்டம்) பத்மாவதி அம்மன் கோயிலிலும், 3 ஆம் சாசனம் ஆனைமலை (மதுரை மாவட்டம்) நரசிங்கப் பெருமாள் கோயிலி லும், 4ஆம் சாசனம் திருப்பாக்கடல் கர்ப்பூர ஈசுவரன் கோயி லிலும், 5, 8, 9, 10, 11, 12, 14, 18, 20 ஆம் சாசனங்கள் தஞ் சைப் பெரிய கோயிலிலும், 6 ஆம் சாசனம் உக்கல் (செங்கல் பட்டு மாவட்டம்) விஷ்ணு கோயிலிலும், 7ஆம் சாசனம், மேற் பாடி) வடார்க் காடு) சோழேசுவரர் கோயிலிலும், 13ஆம் சாச னம், திருமலை குந்தவை சினயத்திலும், 15, 16, 17, 22 ஆம் சாசனங்கள் மணிமங்கலம் (செங்கல்பட்டு) இராச கோபாலப் பெருமாள் கோயிலிலும், 19 ஆம் சாசனம் திருவரங்கம் (திருச்சி) சம்புகேசுவர சுவாமி கோயிலிலும், 21ஆம் சாசனம் திருமழபாடி (திருச்சி) வைத்தியநாதசுவாமி கோயிலிலும்,

23 ஆம் சாசனம், திருக்கோகர்ணம் (புதுக்கோட்டை) கோகர்னேசுவரர் கோயிலிலும், 24 ஆம் சாசனம் மலையக்கோயில் (புதுக்கோட்டை) குடம்போகக் கோயிலிலும், 25 ஆம் சாசனம் கண்ணனூர் (புதுக்கோட்டை) பாலசுப்பிரமணியசுவாமி கோயிலிலும் 26, 30 ஆம் சாசனங்கள்) நெய்வாசல் (புதுக்கோட்டை) அகத்தீசுவரர் கோயிலிலும், 27, 28 ஆம் சாசனங்கள் தென்காசி (நெல்லை) விசுவநாத சுவாமி கோயிலிலும், 29 ஆம் சாசனம் செங்கோட்டை (நெல்லை) சிவன் கோயிலிலும் பொறிக்கப் பெற்றவையாகும்.

இச்சாசனங்களைப் பல்லவர் சாசனங்கள், சோழர் சாசனங்கள், பாண்டியர் சாசனங்கள் என மூன்றாகப் பிரிக்கலாம். பல்லவர் சாசனங்கள் இரண்டும் தந்திவர்மன் (கி. பி. 775–825) காலத்தன வாகும். சோழர் சாசனங்களில் முதலாம் பராந்தகன் (907—953) சாசனம் ஒன்று; இரண்டாவது பராந்தகன் படைத் தலைவனான பார்த்திவேந்திராதி வர்மன் (957—970) சாசனம் ஒன்று; முதலாம் இராசராசன் (985—1014) சாசனங்கள் நான்கு; முதலாம் இராசேந்திர சோழன் (1012–1044) சாசனங்கள் ஆறு; முதலாம் இராசாதி ராசன் (1018—1054) சாசனம் ஒன்று; இரண்டாம் இராசேந்திர சோழன் (1051—1063) சாசனம் ஒன்று; முதலாம் வீரராசேந்திரன் (1063—1070) சாசனம் ஒன்று; முதலாம் குலோத்துங்க சோழன் (1070—1120) சாசனங்கள் இரண்டு; விக்கிரம சோழன் (1120–1136) சாசனங்கள் இரண்டு; மூன்றும் இராசராச சோழன் (1216—1256) சாசனம் ஒன்று.

பாண்டியர் சாசனங்களில், மாறன் சடையன் (765—790) சாசனம் ஒன்று; குலசேகரதேவர் (1190—1216) சாசனம் ஒன்று; சுந்தரபாண்டியன் (1216-1238) சாசனங்கள் இரண்டு; அரிகேசரி பராக்கிரம பாண்டியன் (1422—1463) சாசனங்கள் இரண்டு; குலசேகர தேவ பராக்கிரம பாண்டியன் (1543–1552) சாசனம் ஒன்று; வீரபாண்டியன் (1296–1342) சாசனம் ஒன்று. எனவே, பல்லவர் சாசனங்கள் இரண்டு; சோழர் சாசனங்கள் இருபது; பாண்டியர் சாசனங்கள் எட்டு ஆகும். இவைகளில் காலத்தால் முந்தியது, மாறன் சடையன் சாசனமும் (கி. பி. 781—'82), தந்திவர்மன் சாசனமும் (கி.பி. 789) ஆகும். காலத்தால் பிந்தியது, குலசேகரதேவ பராக்கிரம பாண்டியன் சாசனம் (கி. பி. 1545) ஆகும்.

தந்திவர்மன் சாசனம் தமிழ்மொழியில் எழுதப்படினும், கிரந்த லிபியில் சமஸ்கிருத மொழிகள் பல கலந்து எழுதப் பெற்றதனுல் பல்கலைக் கழகப் பதிப்பில் அஃதன் ஆங்கில மொழிபெயர்ப்பே பாடமாகக் குறிக்கப் பெற்றுள்ளது. அது 'ஸ்வஸ்திஸ்ரீ' என்று தொடங்கி, 'சுவஸ்தி' என முடிவு பெற்றிருப்பது குறிப்பிடத் தக்கது. முதலாம் பராந்தக சோழன் சாசனம் என்னும் மூன்ருவது சாசனம், தமிழ் மொழியில் வட்டெழுத்தில் எழுதப் பெற்றது. பிற சாசனங்கள் எல்லாம் தமிழ் மொழியில் கிரந்த எழுத்துக்கள் கலந்து எழுதப் பெற்றன வாகும்.

பல்லவர் காலத்துத் தந்திவர்மன் சாசனங்கள் இரண்டும், அவன் அரசியல் தலைவர்களான புகழ்த்துணை விசயரயனுலும், சோழநாட்டுச் சோழரான உலகப் பெருமானுராலும் ஏற்பட்டவை. முதலாம் பராந்தகன் சாசனம், அவனது அரசியல் தலைவனுன மருதூருடையான் அருணிதிக் கலியனுலும், பார்த்திவேந்திராதி வர்மன் சாசனம், காவிரிப் பாக்கம் என்னும் அவனி நாராயண சதுர்வேதி மங்கலம் ஊர்ச்சபையாராலும், முதலாம் இராசராசன் சாசனங்கள் நான்கனுள் ஒன்று அவனுலும், மற்ருென்று பொய்கை நாட்டு கிழவன் ஆதித்த சூரியன் என்னும் அவன் அரசியல் தலைவனுலும், இன்னொன்று கண்ணன் ஆருரன் என்னும் அவன் வேலைக்காரனுலும், பிறிதொன்று மேற்பாடியாகிய இராசாச்ரயபுரத்து நகரத்தாராலும் ஏற்பட்டவை யாகும். இவைகளில் முதலாம் இராசராசனுல் ஏற்பட்ட சாசனம் தஞ்சைப் பெரிய கோயிலில் திருப்பதியம் விண்ணப்பம் செய்ய ஏற்பாடு செய்த தாகும்.

முதலாம் இராசேந்திர சோழன் சாசனங்கள் ஆறனுள், ஒன்று அவனுலும், மற்ருென்று அவனது அத்தையான ஆழ்வார் பராந்தகன் குந்தவையாராலும், மூன்று சாசனங்கள் அவன் அரசியல் தலைவனுன பொய்கைநாடு கிழவன் ஆதித்த சூரியனுலும், மற்ருென்று வியாபாரியான நன்னப்பையன் மனைவியாகிய சாமுண்டப்பையாலும், ஏற்பட்டனவாகும். அவற்றுள் முதலாம் இராசேந்திர சோழனுல் ஏற்பட்ட சாசனம், அவன் தனது சைவ ஆச்சாரியராகிய சர்வ சிவ பண்டிதர்க்கும், அவர் மாணவர்க்கும் ஆசாரிய போகமாக ஆண்டு தோறும் 2000 காடி நெல் கொடுத்த செய்தி பற்றிய தாகும்.

முதலாம் இராசாதிராசன் சாசனம். இரண்டாம் இராசேந்திர சோழன் சாசனம் இரண்டும் மணி மங்கலம் சபையோ

ரால் ஏற்பட்டவை. முதலாம் வீரராசேந்திர தேவன் சாசனம் அவனது படைத்தலைவனுன சேனுதிபதி செயங்கொண்ட சோழ பிரமாதிராயரால் ஏற்பட்டது. முதலாம் குலோத்துங்க சோழன் சாசனங்கள் இரண்டனுள் ஒன்று அவனது மெய்க் கீர்த்தி மட்டுமுள்ளது. மற்றொன்று முனையன் அருண் மொழித் தேவனுன வில்லவராயனுல் ஏற்பட்டது. விக்கிரம சோழன் சாசனகள் இரண்டும் அவனுல் ஏற்பட்டவை. அவை களில் ஒன்று அவன் கல்லாலை என்பவனைக் காணிக்காரளவு என்னும் அலுவலில் வைத்தமையும், மற்றொன்று அவன் தில்லையில் செய்த திருப்பணியைக் கூறுவதுமாகும்.

பாண்டியர் சாசனங்களில் மாறன் சடையன் சாசனம் வர குணவதி அரையன் என்னும் நக்கஞ் செட்டியாராலும், குல சேகர தேவர் சாசனம் கல்வாயில் நாடுடையான் என்னும் அரசியல் தலைவனுலும், சுந்தரபாண்டியன் சாசனம் இரண் டனுள் ஒன்று அவனுலும், மற்றொன்று கூத்தன் தில்லை நாயகன் என்னும் வியாபாரியாலும், அரிகேசரி பராக்கிரம பாண்டியன் சாசனங்கள் இரண்டும் அப்பாண்டியனுலும், குலசேகரபராக்கிரம பாண்டியன் சாசனம், குலசேகரபராக் கிரமபாண்டியனுலும், வீரபாண்டியன் சாசனம் அழகிய பெருமாள் என்பவனுலும் ஏற்பட்டனவாகும்.

இச்சாசனங்களையெல்லாம் தான சாசனங்கள் எனவும், இலக் கிய சாசனங்கள் எனவும், வரலாற்றுச் சாசனங்கள் எனவும், சமய சம்பந்தமான சாசனங்கள் எனவும், வாழ்க்கைச் சாசனங்கள் எனவும், போலிச் சாசனங்கள் எனவும் பலவகையாகப் பிரிப்பர். இவற் றுள் தான சாசனம் என்பது, இம்மை மறுமை இன்பங் கிடைக்குமாறு கோயில்களுக்கும், பிறர்க்கும் கொடுத்த தானங்களைப் பற்றிய சாசனங்களாகும். தந்திவர்மன் சாச னம், புகழ்துணை விசயரயன் திருவல்லிக்கேணி கோயிலார் ஒற்றி வைத்த நிலத்தைக் காசு கொடுத்துத் திருப்பி, அதன் விளைச்சலில் ஒரு பகுதியை அக்கோயிலுக்குக் கொடுத்ததாக வும், ஈழவிளக்கு, வட்டில், உலோகபானை முதலியன கொடுத் ததாகவும் கூறுகின்றது. விசயதந்தி விக்கிரமவர்மன் சாச னத்தால் சோழநாட்டுச் சோழரான உலகப்பெருமானுர் திருச் சோகினுர் திருவிளங்கோயிலுக்கு ஒரு நந்தா விளக்கும், அதன் செலவுக்கு முதலாக 30 கழஞ்சு பொன்னும் கொடுத்த தாகக் நாம் அறிகின்றோம். முதலாம் பராந்தகன் சாசனம், மருதூருடையான் அருணிதிக் கலியன் என்பான் நரசிங்கப் பெருமாள் கோயில்கடனைத் தீர்த்து, இறைவன் திருவமுதுக்

கும். ஐந்து வேதப் பிராமணர்க்கும் 300 கல நெல் தானமாகக் கொடுத்த செய்தியைக் கூறுகின்றது முதலாம் இராசேந்திரன் சாசனம் ஒன்றில் வைகாவூர் ஸ்ரீகுந்தவை சினலயத்திற்குச் சாமுண்டப்பை என்பாள் ஒரு நந்தாவிளக்கு வைத்து அதன் செலவுக்கும், அக்கோயில் தேவர் திருவமுதுக்கும் முப்பது காசு கொடுத்ததாகச் சொல்லப்படுகிறது.

இனி, முதலாம் இராசேந்திர சோழன் தனது சைவ ஆசாரியரான சர்வ்வ சிவபண்டிதர்க்கும், அவரது மாணவர்களுக்கும் ஆசாரிய போகமாக ஆண்டுதோறும் 2000 காடி நெல் கொடுத்ததாகக் கூறும் சாசனமும் தான சாசனமே யாகும். இரண்டாம் இராசேந்திர சோழன் சாசனத்தில், மணிமங்கலம் சபையார் காமக்கவ்வையள் என்பாளிடம் பணம் பெற்று, அமண்பாக்கம் கிராமத்திலுள்ள சில நிலங்களை மணிமங்கலம் காமக்கோடி விண்ணகராழ்வார்க்குத் தானமாகக் கொடுத்த செய்தி கூறப்படுகிறது.

இவ்வாறு பாண்டியர் காலத்து மாறவர்மன் சாசனத்தில் கல்குறிச்சி வரகுணவதி அரையனான நக்கஞ் செட்டி என்பான் திருக்கோகர்ணங் கோயில் இறைவற்கு ஒரு நந்தா விளக்கு வைத்து அதன் செலவுக்கு 15 கழஞ்சு பொன் கொடுத்ததும், சுந்தரபாண்டியன் சாசன மொன்றில், கூத்தன் தில்லைநாயகன் என்னும் வியாபாரி சில நிலங்களை விலைக்கு வாங்கி அகத்தீசுவரம் கோயிலுக்கு நெல்லும், ஊர்ச் சபையாருக்கு வரியும் கொடுத்ததும், அரிகேசரி பராக்கிரம பாண்டியன் சாசனமொன்றில் அவன் தென்காசிக் கோயிலுக்குச் சில ஊர்களைத் தானமாகக் கொடுத்ததும், குலசேகர தேவ பராக்கிரம பாண்டியன் சாசனத்தில் அவன் சில நிலங்களைச் செங்கோட்டைச் சிவன் கோயிலுக்குத் தானமாகக் கொடுத்ததும், வீரபாண்டியன் சாசனத்தில் சூரைக்குடி பொன்னனான அழகிய பெருமாள் என்பான் கல்வாயில் நாட்டில் சில நிலங்களை விலைக்கு வாங்கி நெய்வாசல் அகத்தீசுவரர் கோயிலுக்கு உரிமையாக்கி, அதன் விளைச்சலில் ஒரு பகுதியை அக்கோயில் இறைவற்கும், கோயில் அதிகாரிகளுக்கும் கொடுத்ததுமான செய்திகள் தான சாசனச் செய்திகளாகவே கொள்ளப்படும்.

இனி, இலக்கிய சாசனமென்பது, இலக்கியப் பண்புடைய சாசனங்களைக் குறிக்கும். பொதுவாக சாசனங்களே தனி இலக்கியப் பண்புடையன; ஆயினும் சிறப்பாக, அச்சாசனங்களில் வரும் மெய்க்கீர்த்திக ளெல்லாம் இலக்கிய வளம்

பொருந்தியதாய் இலக்கண அமைதி பெற்று விளங்குகின்றன. இந்நூற் சாசனங்களில் 6, 7, 8, 13, 14, 15, 16, 17, 18, 19, 20, 21, 24, 25, 27 ஆகிய பதினைந்து சாசனங்களிலும் மெய்க்கீர்த்திகள் அமைந்துள்ளன. முதலாம் குலோத்துங்க சோழன் சாசன மொன்று முழுவதும் செய்யுள் நடையிலமைந்த மெய்க்கீர்த்தியாகவே யுள்ளது. அரிகேசரி பராக்கிரம பாண்டியன் இரண்டாவது சாசனம் ஆசிரிய விருத்தம், கட்டளைக் கலித்துறை, வெண்பா முதலிய செய்யுட்களிலமைந்த சாசனமாகவே காணப்படுகிறது. அது அரிகேசரி பராக்கிரமபாண்டியன் செய்த திருப்பணிகளை வரிசைப்படக் கூறுதலின், அதனை இக் காலத்தார் 'திருப்பணி மாலை' என்னும் நூல் வகையில் சேர்த்துக் கூறுவர்.

வரலாற்றுச் சாசனம் என்பது, ஒருவரது புகழையோ, சிறப்பையோ பற்றிக் கூருது, அவர் கால நிகழ்ச்சியை வரிசைப் படக் கூறும் சாசனமாகும். முதலாம் இராசராசன், முதலாம் இராசேந்திர சோழன், முதலாம் இராசாதி ராசன் முதலியோர் சாசனங்களி லமைந்த மெய்க்கீர்த்திப் பகுதிகள் அந்தந்த மன்னருடைய போர் வென்றிகளை வரிசைப்பட எடுத்துக் கூறுகின்றன. வீரராசேந்திரன் சாசனத்தில் அவன் ஆகவமல்லனேடு ஐந்து தடவை போர் செய்து அவனை வென்ற செய்தி கூறப்படுகின்றது. அன்றியும் அவரவர் காலத்தை நிச்சயித்துக்கொள்வதற்கும் இவ்வகைச் சாசனங்கள் உதவுகின்றன என்னலாம். உதாரணமாக, முதலாம் பராந்தகன் சாசனத்தில், கூறப்படும் ஐந்து வேதப்பிராமணர்களுக்கு உணவு அளிக்கும் நாளின் தொடக்கத்தைக் கொண்டு, சோதிடநூல் வல்லார் அவன் காலத்தை நிச்சயித்துள்ளனர். கோயில்களில் திருப்பதியம் பாடுவதற்கு முதலாம் இராசராசன் ஏற்பாடு செய்தது, விக்கிரம சோழன் தில்லையின் திருப்பணி செய்தது, அரிகேசரி பராக்கிரம பாண்டியன் தென்காசி விசுவநாதர் கோயிலைக் கட்டியது முதலிய நிகழ்ச்சிகளெல்லாம் அன்னர் சாசனங்களில் காலக் குறிப்போடு அமைந்திருப்பது வரலாற்றுண்மைகளை விளக்குவனவாகும்.

முதலாம் இராசராசன் காலத்திலும், முதலாம் இராசேந்திர சோழன் காலத்திலும் பொய்கை நாடு கிழவன் ஆதித்த சூரியன் என்பான், தஞ்சைப் பெரிய கோயிலில் தேவாரம் பாடிய மூவர், மெய்ப் பொருள் நாயனர், சிறுத்தொண்டநாயனர் முதலியோர்க்குத் திருவுருவங்கள் செய்து வைத்து, அணிகலன்கள் பல சார்த்திய தாகக் கூறும் செய்

திகளிலிருந்து, நாயன்மார் சிலருடைய காலத்தை ஒருவாறு நிச்சயிப்பதற்கு அச்சாசனங்கள் உதவி புரிகின்றன. "தத்தா நமரே காண் என்ற மிலாடுடையார்" என வரும் பொய்கை நாடு கிழவன் ஆதித்த சூரியனுல் ஏற்பட்ட ஒரு சாசனத் தொடர், பெரிய புராணத்தின் பழமையை நமக்கு எடுத்துக்காட்டுகின்றது. இவையன்றி, முதலாம் இராசராசன் திருப்பதிய விண்ணப்ப சாசனத்தில் குறிக்கப் பெறும் பெயர்களால் பிற சிவனடியார் காலத்துடன் கம்பர் காலத்தையும் நிச்சயித்தற்கு இடமுள்ள தென்பது குறிப்பிடத் தக்கது.

இனிச், சமய சம்பந்தமான சாசனங்களும் இந்நூலில் இடம் பெற்றுள்ளன என்னலாம். முதலாம் இராசராசன் காலத்திலும், முதலாம் இராசேந்திர சோழன் காலத்திலும். பொய்கை நாடு கிழவன் ஆதித்த சூரியன் என்பான் தஞ்சைப் பெரிய கோயிலில் நம்பியாரூரர், நங்கை பரவையார், திருநாவுக்கரையர், திருஞானசம்பந்த அடிகள், பெரிய பெருமாள் (முதலாம் இராசராசன்), உலோகமாதேவியார், சிறுத்தொண்ட நம்பி, திருவெண்காட்டு நங்கை, சீராளதேவர், மெய்ப்பொருள் நாயனர் முதலிய அடியார்க்குப் படிமங்களும், சந்திரசேகர தேவர், சேத்திர பாலதேவர், வைரவ மூர்த்திகள் முதலிய தேவர்களுக்குத் திருமேனிகளும் செய்து வைத்து, அணிகலன்கள் பல சார்த்தினமை பற்றிய சாசனங்கள் (5, 10, 11, 12) சமய சம்மந்தமான சாசனங்களாகும். முதலாம் இராசராசன் திருப்பதிய விண்ணப்ப சாசனமும் (5), முதலாம் இராசேந்திர சோழன், சாசனங்களுள் ஆழ்வார் பராந்தகன் குந்தவையார் திருப்பணி சாசனமும் (9), விக்கிரம சோழன் தில்லைத் திருப்பணி சாசனமும் (21), மூன்றும் இராசராச சோழன் சாசனமும் (22), அரிகேசரி பராக்கிரம பாண்டியன் தென்காசிக் கோயில் திருப்பணி சாசனமும் (28) சமய சம்பந்தமான சாசனங்களே.

இவையன்றி, வாழ்க்கைச் சாசனங்கள் அல்லது சமூகம் பற்றிய சாசனங்களும் இந்நூலில் சில உள. பார்த்திவேந்திராதிவர்மன் சாசனம் (4), காவிரிப் பாக்கமாகிய அவனி நாராயண சதுர்வேதி மங்கலம் சபையார் புறம்போக்கு நிலத்தைப் பயனுள்ள நிலமாக்குவதற்கு ஏற்பாடு செய்த செய்தியைக் கூறுகின்றது. முதலாம் இராசராச சோழன் பெயரால் அவன் வேலைக்காரனை கண்ணன் ஆரூரன் ஒரு கிணறு வெட்டி தண்ணீர்ப் பந்தல் வைத்த செய்தியை அம் முதலாம் இராசராசன் சாசனங்களிலொன்று (6) கூறுகின்றது. அவனுடைய மற்றொரு சாசனம் (7),

அவன் தன் பாட்டனுன அரிஞ்சய சோழன் பெயரால் மேற்பாடி என்னுமூரில் கட்டிய கோயிலுக்கும், அதன் திருச்சுற்றுலயம் முதலியவற்றிற்கும் அவ்வூர்ச் சபையினர் நிலங் கொடுத்த செய்தியைக் கூறுகின்றது. முதலாம் இராசாதிராசன் சாசனத்தில் (15) மணி மங்கலம் சபையோர் கோயில் பணத்திலிருந்து நூறுகாசு கடன் வாங்கி, அக்கடனுக்கு வட்டியாக அவ்வூரிலுள்ள சில நிலங்களைக்கொடுத்த செய்தி கூறப்படுகிறது.

மேலும் அரசியல் பற்றிய சாசனங்களும் இந்நூலில் ஒன்றிரண்டு காணப்படுகின்றன. விக்கிரம சோழன் சாசனங்களில் ஒன்று (20), விக்கிரம சோழன் இராசராச பல்லவரையனுன ஆவுடையான் அரையன் உடையானுக்கு உரிமையாய் இருந்த காணி காரளவு (கோயில் நெல்லை அளந்து களஞ்சியத்தில் சேர்க்கும் பணி) என்னும் அலுவலை அவன் இறந்தபின் அவன் மகன் கல்லாலை என்பவனுக்கு உரிமையாக்கிய செய்தி கூறுகின்றது. குலசேகர தேவர் சாசனத்தில், கல்வாயில் நாடுடையான் என்னும் அரசியல் அதிகாரி அரசனுடைய உத்தரவு பெற்று சில தேவதான நிலங்களுக்குரிய கடமை, வரி, அந்தராயம் என்னும் வரிகளை நீக்கிய செய்தி கூறப்பட்டுள்ளது. திருநாவலூர், அஞ்சன மங்கலம் என்னும் ஊர்களிலுள்ள குடிகள் கேட்டுக்கொண்டபடி, அவர்கள் செலுத்தவேண்டிய வரியைக் குறைத்த செய்தி சுந்தரபாண்டியன் சாசனத்தால் (25) அறியப்படுகிறது.

இனிப், போலிச் சாசனங்கள் என்பது, ஒருவர் தமக்கு உரிமையல்லாத நிலத்தை உரிமைப் படுத்துவதற்காகவும், தம்மிடமுள்ள உரிமைச் சீட்டை இழந்து அதை உறுதிப் படுத்திக் கொள்வதற்காகவும். தாமே கல்லிலும் செம்பிலும் வெட்டிக் கொண்ட சாசனங்கள் ஆகும். அவை பெரும்பாலும் அரசியல் மாற்றத்தால் ஏற்பட்டவை. இடைக்காலத்துத் தமிழ் இலக்கியங்கள் பலவற்றில் இடைச்செருகல்கள் தோன்றியது போல, பிற்காலச் சாசனங்களிலும் போலிச் சாசனங்கள் பல தோன்றலாயின. அத்தகைய போலிச் சாசனமொன்றும் இந்நூலில் காணப் படவில்லை என்பது குறிப்பிடத் தக்கது.

இனி, இச் சாசனங்களின் அமைப்பு முறையை நோக்குமிடத்து ஒவ்வொரு சாசனமும் ஐந்து பகுதிகளையுடைய

தாய் அமைந்திருப்பதைக் காணலாம். அவை மங்கலமொழி, சாசனம் தோன்றிய காலம், செய்திகள், கையெழுத்துக்கள், காப்பு நிலை என்பனவாகும்.

சாசனங்களின் தொடக்கத்தில் மங்கல மொழியாக 'ஸ்வஸ்திஸ்ரீ' என்று பெரும்பாலும் காணப்படுகிறது. 'மங்களம் உண்டாக' என்பது அதன் பொருள். அதனைப் பல்லவர், சோழர் சாசனங்களில் மிகுதியும் காணலாம். சில சாசனங்களில் இம் மங்கலமொழி சாசனத்தின் இறுதியிலும் அமைந்துள்ளது. உதாரணமாக, தந்திவர்மன் சாசனத்திலும், சுந்தரபாண்டியன் முதல் சாசனத்திலும் அங்ஙனம் வந்திருத்தல் காண்க. பிற்காலப் பாண்டியர் சாசனங்களில் மங்கல மொழியாக 'சுபமஸ்து', 'சுபமஸ்து உ' என வந்திருத்தலை அரிகேசரி பராக்கிரம பாண்டியன் சாசன முதலியவற்றில் காணலாம். குலசேகரதேவ பராக்கிரம பாண்டியன் சாசனத்தின் தொடக்கத்தில் 'சுபமஸ்து ஸ்வஸ்திஸ்ரீ' என மங்கலமொழி அமைந்திருத்தலும் குறிப்பிடத் தக்கது.

சாசனங்களில் மங்கலமொழியை யடுத்து அரசனது ஆட்சியாண்டு குறிக்கப் பெற்றிருக்கும். அதுவே அச்சாசனம் தோன்றிய காலத்தைக் குறிப்பதாகும். உதாரணமாக தந்திவர்மன் சாசனத்தில் 'ஸ்ரீதந்திவர்ம்ம மஹாராஜர்ற்கு வர்ஷவர்த்தனம் யாண்டு பன்னிரண்டாவது' எனவும், விசயதந்தி விக்கிரமவர்மன் சாசனத்தில், 'ஸ்ரீகோவிசெய தந்தி விக்கிரமவர்மற்கு யாண்டு ஐம்பத்தொன்ருவது' எனவும் முதலாம் இராசராசன் சாசனத்தில் 'ஸ்ரீராசராச தேவர்க்கு யாண்டு உ௰௬ ஆவது' எனவும் வந்திருத்தல் காண்க. இனி, "ஸ்ரீராஜராஜீஸ்வரம் உடையார் கோயிலில் யாண்டு இருபத்தொன்பதாவது வரை' என்பது போலவும், 'பராக்கிரமபாண்டிய தேவர்க்கு யாண்டு இருபத்தெட்டாவதின் எதிராவது' என்பது போலவும் சாசன ஆண்டுகள் குறிக்கப் பெறுதலுமுண்டு. இதில் 'இருபத்தொன்பதாவது வரை' என்பது, 'இருபத்தொன்பதுக்கு முன்பு' எனவும், 'இருபத்தெட்டாவதின் எதிராவது' என்பது, 'இருபத்தெட்டாவதற்குப் பின்பு' எனவும் பொருள் படும். இவ்வாறன்றி, 'ஸ்ரீபார்த்திவேந்திராதிபன்மர்க்கு யாண்டு மூன்ருவது நாள் முப்பத்தொன்பதாவது' எனவும், 'ஸ்ரீ ராசேந்திர சோழ தேவர்க்கு யாண்டு ௰௬ ஆவது நாள் இருநூற்று நாற்பத்திரண்டினுல்' (14) எனவும் அரசன் ஆட்சி ஆண்டுடன் நாளும் குறிக்கப் பெறுதலுண்டு.

இனி, இரண்டாம் இராசேந்திர சோழன் சாசனத்தில் 'ஸ்ரீ ராசேந்திர தேவர்க்கு யாண்டு நாலாவது நாள் ௬௰உ ஜயங்கொண்ட

சொழமண்டலத்து செங்காட்டுக் கொட்டத்து மாகணூர் நாட்டு......இவ் வாட்டை ஸிம்ஹ நாயற்று அபரபக்ஷத்து அஷ்டமியும் வியாழக்கிழமை யும் பெற்ற ரோஹிணி நாள்'' என வரும் குறிப்பால், அரசனது ஆட்சி ஆண்டு, நாள் இவற்றுடன், திங்கள், பக்ஷம், திதி, கிழமை, நட்சத்திரம் முதலியனவும் குறிக்கப் பெறுதலுமுண்டு என்று அறிகின்றோம். இவ்வாறே 'ஸ்ரீராஜராஜ தெவற்கு யாண்டு ௰௪ஆவது தநுநாயற்று பூர்வபக்ஷத்து பஞ்சமியும் புதன்கிழ மையும் பெற்ற அவிட்டத்தினாள்' (22) எனவும், 'சிரி விரசுந் தர பாண்டிய தெவற்கு யாண்டு ௩ ஆவதின் எதிராமாண்டு இசப நாயிற்று யிருபத்திரண்டாந் திபதியும் திங்கட்கிழமை புணர்பூசத்து நாள்' (26) எனவும் வந்திருத்தல் காண்க.

இனி, ஆண்டு, திங்கள், பக்ஷம், திதி, கிழமை, நாள் இவற்றுடன், யோகம், கரண மூலியனவும் குறிப்பிடப்பட் டிருப்பதைக் குலசேகரதேவ பராக்கிரம பாண்டியன் சாசனத் தில் காண்கின்றோம். அதில் அரசனுடைய ஆட்சி யாண்டு சக ஆண்டு முறையில், 'சகாப்தம் ௲௪௱௭௰௰௭ல் மூன்றுவது விஸ் வாவஸு வர்ஷம் அற்பசி மாஸம் முப்பதாந் தியதி ''எனக் குறிப் பிட்டிருத்தலும் ஆராயத் தக்கது. இதனால், அவ்வரசனது ஆட்சிக் காலம் இன்னதென நாம் எளிதில் கண்டுகொள்ள வும் முடிகின்றது. மேலும் சாசனங்கள் தோன்றிய காலத் தைக் குறிக்கு முறையில் காணப்படும் வெவ்வேறு முறை களை அரிகேசரி பராக்கிரம பாண்டியன் திருப்பணி சாசனத் தில் (28) கண்டுகொள்ளலாம். அதில் தென்காசிக் கோயில் கோபுரம் கட்டடத் தொடங்கிய நாள் கலியுக ஆண்டு முறை யிலும், சக ஆண்டு முறையிலும் கூறப்பெற்றிருத்தல் குறிப் பிடத் தக்கது.

சாசனம் தோன்றிய காலக்குறிப்பிற்குப் பின்னர், செய்தி கள் கூறப்பெற்றிருக்கும். அச்செய்திகள் பல திறப்படும். இந் நூலில் காணப்படும் சாசனங்களில், கோயிலார் ஒற்றி வைத்த நிலத்தைக் காசு கொடுத்துத் திருப்பிப் பயிரிட்டு, கோயிலுக்கு வேண்டும் நெல் கொடுத்தல், ஈழ விளக்கு, வட் டில், உலோகபாணை முதலியன கொடுத்தல் (1), திருவிளக் கும் அதன் செலவுக்கு முதலும் கொடுத்தல் (2, 13), கோயில் கடனைத் தீர்த்து அதற்குப் பதிலாகக் கோயில் நிலத்தை விதைக்கும் உரிமை பெற்று, கோயிலுக்கு வேண்டும் நெல் முதலியன கொடுத்தல் (3), ஊர்ச் சபையாரிடம் முறை யிட்டுக் குறை தீர்த்துக் கொள்ளுதல் (4) கோயில்களில்

பிரதிமங்கள் செய்து வைத்தல் (5, 9, 10, 11, 12), தண்ணீர்ப் பந்தல் வைத்தல் (6), திருப்பதியம் பாட ஏற்பாடு செய்தல்(7), ஆசாரிய போகமாக நெல் கொடுத்தல் (14), கோயில் பணத்தில் கடன் வாங்கி வட்டி கொடுத்தல்(15), கோயிலுக்கு நிலம் வாங்குவதற்குப் பணம் கொடுத்தல் (16), கோயில் அர்ச்சன போகத்திற்கு நெல் முதலியன கொடுத்தல் (17), பயிரிடாது பாழாய்க் கிடந்த கோயில் நிலத்தைத் திருத்திப் பயிரிட்டுக் கோயில் பூசைக்கும் விழாவிற்கும் வேண்டும் நெல் கொடுத்தல் (19), கோயில் நெல்லை யளந்து களஞ்சியத்தில் சேர்க்கும் காணிக் காரளவு என்னும் அலுவலுக்கு ஆட்களைத் தெரிந்து நியமித்தல் (20), கோயில் திருப்பணிகள் செய்தல் (21, 22) முதலிய செய்திகள் பல்லவர் சாசனங்களிலும், சோழர் சாசனங்களிலும் காணப்படுகின்றன.

கோயிலுக்கு நந்தா விளக்கு வைத்து அதன் நிரந்தர செலவுக்கு முதலாக பல இடங்களிலும் யாசித்துப் பணங் கொடுத்த செய்தி மாறன் சடையன் சாசனத்தில் காணப்படுகிறது. தேவதான நிலத்திற்கு வரி நீக்கிய செய்தியும், வரி குறைத்த செய்தியும் முறையே குலசேகர தேவர் சாசனத்திலும், சுந்தரபாண்டியன் சாசனத்திலும் காணப்படுகின்றன. அரிகேசரி பராக்கிரம பாண்டியன் சாசனங்களில் அவன் தென்காசிக் கோயில் எடுத்த செய்தியும், அதன் நாள் வழிபாட்டிற்கும் ஆண்டு விழாவிற்கும் சில நிலங்களைத் தானமாகக் கொடுத்த செய்தியும் கூறப்பட்டுள்ளன. குலசேகர தேவ பராக்கிரம பாண்டியன் சாசனமும், வீரபாண்டியன் சாசனமும் நிலத் தானத்தைக் குறிப்பிடுகின்றன.

இனிச், சாசனங்களின் செய்திகளை யடுத்து, அச்சாசனம் எழுதியவர், கையொப்ப மிட்டவர் முதலியோர் பெயர்கள் குறிக்கப் பட்டுள்ளன. அதற்குச் சான்ருகப், பார்த்தி வேந்திராதிவர்மன் சாசனத்தையும் (4), வீரபாண்டியன் சானத்தையும் (30) கூறலாம். அன்றியும், 'இந்நகரத்தார் சொல்ல எழுதினேன் இந்நகரக் கரணத்தான் நாராயண னடைக்கலவனெனேன் இவை யென்னெழுத்து' (7) எனவும், "திருமந்த்ரி ஓலை செம்பியன் விழுப்பரையன் எழுத்தினுல்...... த்திருவாய்க் கெழ்விப்படி கல்லில் வெட்டித்து" (14) எனவும் "பணி கெட்டு எழுதினேன் இவ்வூர் ஊர்க்கரணத்தான் அலங்காரன் சீராமநேன் இவை என் எழுத்து (16) எனவும், ' பணி கெட்டு எழுதிநேன் ஊர்க்கரணத்தான் வடுகன் பாக்கரநேன் இவை என் எழுத்து (17) எனவும், "கொயிலில் ஸ்ரீமாஹெச்வரொமும்... ...

உள்ளிட்ட ஸ்தாநத்தொம் எழுத்து'' (21) எனவும், ''இவை கிடாரத் தூருடையான் எழுத்து உ துல்யம்'' (27) எனவும் வந்திருத்தல் காண்க.

இனிச், சாசனங்களின் முடிவு சிவன்கோயில் சாசன மாயின், 'இது பந்மாஹேஸ்வர ரக்ஷை' என்றும், விஷ்ணு கோயிலாயின், 'வைஷ்ணவ ரக்ஷை' என்றும் காணப்படும். ''சைவ அடியார்கள் காப்பார்களாக'', 'வைணவ அடியார்கள் காப்பார்களாக' என்பன முறையே அவற்றின் பொருள்களாகும். இவை சாசனங்களின் 'காப்பு நிலை' என்று சொல்லப்படும் முதலாம் இராசராச சோழன் சாசனங்களில் ஒன்றும் (7), முதலாம் குலோத்துங்க சோழன் சாசனங்களி லொன்றும் (19), சுந்தர பாண்டியன் சனங்களிலொன்றும் (26) 'இது பன்மாஹேஸ்வர ரக்ஷை' என்று முடிந்துள்ளன. முதலாம் இராசேந்திர சோழன் சாசனங்களி லொன்று (14)''இவ் வம்சத்துள்ள சைய்வ்வ ஆசார்ய்யர்களே இத்தன்மம் ரக்ஷிக்க உ'' என முடிவு பெற்றுள்ளது. ''இதனை ரக்ஷித்தாரடி இரண்டும் என் முடி மேலன ஸ்வஸ்தி' (3) எனவும், 'இதன்மம் ரக்ஷித்தான்......'' (3) எனவும் முறையே தந்திவர்மன் சாசனமும், முதலாம் பராந்தகன் சாசனமும் முடிந்துள்ளன.

இதுகாறும் சாசனங்களின் பொதுவான தன்மைகளை ஆராய்ந்தோம். இனிச், சிறப்பாக இச்சாசனங்கள் மூலம் நாம் அறியக் கூடும் அக்கால அரசியல் நிலைகளைக் காண்போம். சாசனங்கள் மெய்க்கீர்த்தி பெற்றும் பெறாமலும் வரப் பெறு மென்பதைத் தந்திவர்மன் சாசனத்தாலும், முதலாம் இராசராசன் சாசனங்களாலும் அறிகின்றோம். மெய்க்கீர்த்திகள் அரசனது வெற்றிகள், ஆட்சி முறை முதலியவற்றைத் தெரிவிக்கின்றன. முதலாம் இராசராசன் முதலிய பிற்காலச் சோழ மன்னர்கள் புதிதாக செயித்த நாடுகளை அறிய அவர்கள் மெய்க்கீர்த்திகள் பெரிதும் உதவுகின்றன. காம்பிலி கொப்பம், கூடல் சங்கமம், கலிங்கம் முதலிய இடங்களில் ஆகவ, மல்லனோடு சோழ மன்னர்கள் நடத்திய போர்களைப் பற்றிய விரிவான செய்திகள் அவர்கள் மெய்க்கீர்த்திகளில் கூறப்பட்டுள்ளன. மெய்க்கீர்த்தி யில்லாத சாசனங்களிலும், அரசர்களுடைய புகழைக் குறிக்கும் தொடர்கள் அமைந்தே காணப்படுகின்றன, சான்றாக, தந்திவர்மன் சானத்தில் ''பல்லவ குல திலத பாரத்துவாஜ கோத்ராலங் காரபதியாகிய ஸ்ரீ தந்திவர்ம்ம மஹாராஜற்கு'' எனவும், முதலாம் பராந்தகன் சானத்தில்'' மதிரைகொண்ட கொப்பரகேசரி பன்மற்கு'' (3) எனவும் வந்திருத்தல் காண்க.

மெய்க் கீர்த்திகளில், சோழ மன்னர் மெய்க்கீர்த்திக்கும் பாண்டிய மன்னர் மெய்க்கீர்த்திக்கும் ஒரு பெரிய வேறுபாடு காணப்படுகிறது. சோழ மன்னர் மெய்க்கீர்த்திகளில் அந்தந்த மன்னர் வெற்றிகளே கூறப்படுகின்றன. பாண்டிய மன்னரோ அவர்கள் வெற்றிகளோடு அவர்களுடைய முன்னோர்களின் அரிய செயல்களையும் சேர்த்துக் கூறியுள்ளனர் இதற்குச் சான்றாக, குலசேகரதேவர் சாசனத்தி லமைந்த மெய்க் கீர்த்தியைக் கூறலாம். இனிச், சோழமன்னர்கள் தங்கள் இயற்பெயர்களுக்கு முன் 'இராசகேசரி', 'பரகேசரி' என்ற பட்டப் பெயர்களையும், பாண்டிய மன்னர்கள், 'மாறவர்மன்' 'சடையவர்மன்' என்ற பட்டப் பெயர்களையும் வைத்து வழங்கி வந்தமையாகிய தொல்லை மரபொன்று சாசனங்களில் காணப்படுகின்றது. சோழர்களில் தந்தை இராசகேசரியானால், மகன் 'பரகேசரி' என்ற பட்டப் பெயரைப் பெற்றுள்ளான். முதலாம் இராசராசன் 'இராசகேசரி' பட்டம் பெற்றவன். அவன் மகன் முதலாம் இராசேந்திர சோழன் 'பரகேசரி' என்று அழைக்கப்பட்டுள்ளான். அவ்வாறே பாண்டிய மன்னர்களில் குலசேகரதேவ பாண்டியன் 'சடையவர்மன்' என்றும், அவனுக்குப்பின் பாண்டிய மன்னனான சுந்தர பாண்டியன் 'மாறவர்மன்' என்றும் சிறப்புப் பெயர் பெற்றுள்ளனர். இச்சிறப்புப் பெயர்களால் இன்ன அரசனுக்குப்பின் பட்டமெய்தியவன் இன்னான் என்று அறிய முடிகின்றது. முதலாம் வீரராசேந்திர தேவன், முதலாம் குலோத்துங்க சோழன். இவர்கள் இருவரும், இராசகேரி'பட்ட மெய்தியவர்கள் எனவே,முதலாம் வீரராசேந்திர தேவனுக்குப்பின் 'பரகேசரி' பட்ட மெய்திய ஒருவன் ஆண்டிருத்தல் வேண்டும். அவனே பரகேசரி அதிராசேந்திர சோழனாவான் என்றறிக.

கோயிலுக்குத் தானமாகக் கொடுக்கப்பட்ட பொருட்களில், ஈழ விளக்கு, வட்டில், உலோகபானை என்பவை தந்திவர்மன் சானத்தாலும். நந்தா விளக்கு என்பது விசய தந்தி விக்கிரமவர்மன் சாசனத்தாலும், முதலாம் இராசேந்திர சோழன் சாசனத்தாலும், மாறஞ்சடையன் சாசனத்தாலும் அறியப்படுகின்றன. இனிப், பண்டைக் காலத்தில் கோயிலார் கொண்ட கடனைத் தீர்த்து, அதற்குப் பதிலாகப் கோயில் நிலத்தைப் பயிரிட உரிமை பெற்று, கோயிலுக்கு நெல் அளந்த செய்தி தந்திவர்மன் சாசனத்தாலும், முதலாம் பராந்தகன் சாசனத்தாலும், கோயில் நிலத்தை விலை கொடுத்து வாங்கி, பயிர் செய்தற்கு உரிமை யாக்கிய செய்தி முதலாம்

வீர ராசேந்திர தேவன் சானத்தாலும் தெரிகிறது. பண்டைக் காலத்தில் ஆறு மாதங்களளவும் தண்ணீர்ப் பந்தல்கள் வைத்து நடத்தப்பட்டு வந்தனவென்பதும், கோயில்களில் திருப்பதியங்கள் பாடப்பட்டன வென்பதும், அப்பொழுது உடுக்கை, கொட்டிமத்தளம் போன்ற இசைக் கருவிகள் வாசிக்கப்பட்டன வென்பதும், கோயில் கட்டும் பணியில் அரசரும் குடிகளும் ஒன்றுபட்டுப் பணிபுரிந்து வந்தன ரென்பதுமான செய்திகள் முதலாம் இராசராசன் சாசனத் தால் விளக்கமாகின்றன.

சோழமன்னர் காலத்தில் கோயில்களுக்கே யன்றி, கோ யில்களில் பணிபுரியும் வேதப் பிராமணர்க்கும், ஆசாரிய போ கத்திலுள்ளவர்களுக்கும் நிவந்தங்கள் கொடுத்து வந்தன ரென்பது முதலாம் பராந்தகன் சாசனத்தாலும், முதலாம் இராசேந்திர சோழன் சாசனத்தாலும் அறியப்படுகிறது. முத லாம் இராசாதிராச தேவன் காலத்து மணிமங்கலம் சபை யோர் சாசனம், கோயில் பண்டாரத்திலிருந்து கடன் வாங் கும் பழக்கம் அக்காலத்தில் இருபத்தென்பதைக் தெரிவிக் கின்றது. கோயில்களுக்கு நிவந்தமாக நிலங்களே யன்றி நெல் முதலிய பொருட்களையும் கொடுத்துவந்தனரென்பது, பல்லவர், சோழர் சாசனங்களால் புலனாகின்றது. தானம் கொடுத்தற்கு மட்டுமன்றி, நிலவரியை நீக்குதற்கும், குறைத் தற்கும் சாசனங்கள் ஏற்பட்டன என்பது குலசேகர தேவர் சாசனத்தாலும், சுந்தரபாண்டியன் சாசனத்தாலும் அறியப் படுகிறது. கோயில் நிலங்கள் சிலவற்றிற்கு வரி வாங்கப் பட்டு வந்ததென்பது, முதலாம் பராந்தகன் சாசனத்தாலும், சுந்தரப் பாண்டியன் சாசனத்தாலும் தெரிகின்றது.

சோழ மன்னர் சாசனங்களால் சோழ இராச்சியம் பல மண்டலங்களாகவும், மண்டலம் பல வளநாடுகளாகவும்,வள நாடு பல நாடுகளாகவும், நாடு பல கூற்றங்களாகவும், கூற் றம் பல ஊர்களாகவும் பிரிக்கப்பட்டிருந்த தென அறியப் படுகிறது. சோழமண்டலம், ஜெயங்கொண்ட சோழமண் டலம், அதிராசராச மண்டலம் முதலிய மண்டலங்களும், நித்தாவினோத வளநாடு, குலோத்துங்க சோழ வளநாடு, இரா சேந்திர சோழ வளநாடு, க்ஷத்திரிய சிகாமணி வளநாடு, முதலிய வளநாடுகளும், தென்கரை நாடு, வெங்கலநாடு, மாகணூர் நாடு முதலிய நாடுகளும்,ஆவூர் கூற்றம், குன்றக் கூற்றம் முதலிய கூற்றங்களும், ஆவூர் முதலிய ஊர்களும் சோழர் சாசனங்களில் காணப்படும் மண்டலங்களும் அவை

களின் பிரிவுகளுமாகும். நாடுகளில் சில 'தனியூர்' என்றும், 'சதுர்வேதி மங்கலம்' என்றும் அழைக்கப்பட்டன. ஸ்ரீவிக்கிரமாபரண சதுர்வேதி மங்கலம், செயங்கொண்ட சோழ மண்டலத்துக் காலியூர்க் கோட்டத்திலுள்ளது. மண்டலங்களில் செயங்கொண்ட சோழ மண்டல(தொண்டை மண்டலம்) மட்டும் பல்லவர் காலத்தில் இருந்தபடி பல கோட்டங்களாகவும், நாடுகளாகவும், ஊர்களாகவும் பிரிக்கப்பட்டிருந்தது.

பாண்டிய இராச்சியமும் இவ்வாறு பல நாடுகளாகவும் ஊர்களாகவும் பிரிக்கப்பட்டிருந்தமை அவர்கள் சாசனங்களால் அறியப்படுகிறது. வளநாடுகளும், சதுர்வேதி மங்கலங்களும் பிற்காலத்தில் ஏற்பட்டனவாய், அந்தந்தக் காலத்து அரசர்களின் பட்டப் பெயர்களைப் பெற்று வழங்கி வந்திருத்தல் குறிப்பிடத் தக்கது. முதலாம் இராசராசன் காலத்தில் 'இராசேந்திரசிங்க வளநாடு' என்று பெயர் பெற்றிருந்த வளநாடு, முதலாம் குலோத்துங்க சோழன் காலத்தில் 'தியாகவல்லி வளநாடு' என்றும், விக்கிரமசோழன் காலத்தில் 'திரிபுவன முழுதுடை வளநாடு' என்றும் பெயர் பெற்றிருந்தது. முதலாம் இராசாதிராசன் காலத்தில் 'செயங்கொண்ட சோழ மண்டலத்துச் செங்காட்டுக் கோட்டத்து மாகணூர் நாட்டிலிருந்த மணி மங்கலமான இராச சூளமாணி சதுர்வேதி மங்லம் என்னும் ஊர், முதற் குலோத்துங்க சோழன் காலத்தில் குலோத்துங்க சோழ வளநாட்டுக் குன்றத்தூர் நாட்டிலுள்ள மணிமங்கலமான 'பாண்டியனை இருமடி வென்கொண்ட சோழ சதுர்ப்பேதிமங்கலம்' என்று அழைக்கப்பட்டது.

அக்கால அரசர்கள், அவர்கள் ஆட்சியின் காலத்திலேயே அவர்களுடைய மங்களுக்கு இளவரசு பட்டம் கொடுத்து அரசராக்கியுள்ளதாகத் தெரிகின்றது. அதனாலேயே, அரசர்களுடைய ஆட்சி யாண்டு, சாசனங்களில் அவர்கள் இளவரசு பட்டம் பெற்ற ஆண்டிலிருந்து கணக்கிடப்படுகின்றது. முதலாம் இராசராசன் கி. பி. 985 முதல் 1014 வரை சோழ நாட்டை ஆண்டான் என்றும், அவன் மகன் முதலாம் இராசேந்திர சோழன் கி. பி. 1012 முதல் 1044 வரை ஆண்டான். என்றும் குறிக்கப்பெற்றுள்ளன. இவ்வாறே முதலாம் இராசேந்திர சோழன் மகனான முதலாம் இராசாதி ராசன், அவன் தந்தைக்குப்பின் கி. பி. 1054 வரை ஆண்டனுயினும், சாசனங்களில் அவன் ஆட்சி கி. பி. 1018 முதல் எண்ணப்பட்டு வந்திருப்பது குறிப்பிடத் தக்கதாகும். இனிச், சோழ

மன்னர் தங்கள் நாடுகளின் பல பிரிவுகளையும் ஆளும்படி அவர்களுக்கு நெருங்கிய இனத்தவரையும், மக்களையும், பெயரர்களையும் நியமித்த செய்தி முதலாம் இராசாதிராச தேவன் சானத்தாலும், இரண்டாம் இராசேந்திர சோழன் சாசனத்தாலும் அறியப்படுகிறது.

சுந்தரபாண்டியன் தன் மைத்துனனுன அழகப் பெருமாளை அரசியல் அதிகாரியாக நியமித்துள்ளமை அவன் சாசனத்தால் அறியப்படுகிறது. விக்கிரம சோழன், அவன் ஆட்சியின் நாலாவது ஆண்டில், தஞ்சைப் பெரிய கோயில் காணிக்காரளவு என்னும் அலுவலுக்கு, இராசராச பல்லவரையன் என்னும் ஆவுடையான் அரையன் உடையானை யும், அவன் இறந்தபின் அவன் மகன் உடையான் கல்லாலை என்பானையும் நியமித்த செய்தி அவ் விக்கிரம சோழன் சாசனத்தால் தெரிகிறது.

புகழ்த்துணை விசயரயன், சோழ நாட்டுச் சோழரான உலகப் பெருமானுர் இருவரும் தந்திவர்மன் காலத்து அரசியல் அதிகாரிகளாவர். சோழபாண்டியர் காலத்து அதிகாரிகளில், 'உடன் உட்டத்து அதிகாரிகள்' குறிப்பிடத் தக்கவராவர். வரியிலார், புரவுவரி, புரவுவரித் திணைக்கள நாயகம், திருவாய்க் கேள்வி, திருமந்திரவோலை, திருமந்திர வோலை நாயகம் முதலிய அதிகாரிகளும் அக்காலத்தில் இருந்ததாகச் சாசனங்கள் கூறுகின்றன. இவர்களில் வரியிலார், வரிகளாக வரும் தொகையைக் கணக்கில் எழுதிக் கொள்பவரும், அரசிறை நீக்கிய ஊர்களிலிருந்து வருவதற்குரிய பிற வரிகளைக் கணக்கு வைப்பவருமாவர். அவர்கள் 'புரவுவரி' என்றும், அவர்களுக்குத் தலைவராயிருப்பார், 'புரவுவரித் திணைக்கள நாயகம்' என்றும் அழைக்கப்பட்டனர். அரசன் திருவாய் மொழிந்தருளியதைக் கேட்டுத் திருமந்திர வோலை முதயவர்களுக்கு அறிவிப்பவர் 'திருவாய்க் கேள்வி' என்றும், அரசன் ஆணை முதலியவற்றை எழுதியவர் 'திருமந்திரவோலை' என்றும், அவர்களுக்குத் தலைவராயிருப்போர் 'திருமந்திர வோலை நாயகம் என்னும் அழைக்கப்பட்டனர். இதனை முதலாம் இராசேந்திர சோழன் ஆருவது சாசனத்தில் காண்க

அரசியல் அதிகாரிகளுக்கு அரசன் பல பட்டப் பெயர்களை வழங்கி வந்ததோடு, தன் பட்டப் பெயர்களையும் அவர்கள் இட்டுக்கொள்வதற்கு உரிமை யளித்திருந்தனன். மூவேந்தவேளான், தொண்டைமான், வாணகோ வரையன், சேதிராயர், வாணராயர், விழுப்பரையன் என்பன,

அவற்றுள் சில பட்டப் பெயர்களாகும். சோழ நாட்டுச் ரோழனூர், சோழப் பெருமானடிகள் அதிகாரிகள், ஊராள்கின்ற பல்லவன், கண்காணி, தென்னவன் மூவேந்த வேளான், (செம்பியன்) விழுப்பரையன், வில்வராயன் சேனுபதிகள், பிள்ளையார் (அழகப்பெருமாள்) முதலியன இந்நூற் சாசனங்களில் காணப்படும் அரசியலதிகாரிகளின் பட்டப் பெயர்களில் சிலவாகும்.

அக்கால மன்னர்களுக்கு நில வரியே யன்றி, பல வகைத் தொழில் வரிகளும், சுங்கவரி, முதலியனவும் வருவாயாக வந்ததெனத் தெரிகிறது. குடிகள் செலுத்தி வந்த நிலவரி 'காணிக் கடன்' எனப்பட்டது. அது ஆறிலொன்று என்பது, 'ஆறிலொன்று ஆவனியுட் கூறுகொள் பொருள்களும்' என முதலாம் இராசாதிராச தேவன் சாசனத்தில் வரும் தொடரால் விளங்குகிறது. கடமை, வரி, அந்தராயம், திருவெழுச்சி குடிமை, நாடென்றவரி, வெட்டி, முட்டையாள், இறை, குடிமை, வாரமங்கலம், கணக்கப்பெறு, அஞ்சாலி, பாட்டம், முறைபாடு, முதலியன பிற வரிகளாகும். சிற்றுயம், ஏலவை, உகதை முதலியன இறையிலி நிலங்களிலுள்ளவர்களிடம் வாங்கப் பெற்ற வரிகளாகும். பகைவர் நாட்டைச் செயித்துக் கொள்ளைகொண்ட பொருள்களும், பலவகைத் தண்டப் பொருள்களும் அக்கால அரசர்களுக்குப் பிற வகையால் வந்த வருவாய்கள் என்னலாம். மன்றுபாடு, தண்டம், குற்றம் முதலியன அக்காலத்தில் தன்மாசனத்தார் குற்றவாளிகளுக்கு விதித்த அபராதங்களாகும். கோயில் சம்பந்தமான சில குற்றங்களுக்குத் தண்டனையாகக் குற்றவாளிகளைக் கோயிலில் திருநுந்தா விளக்குப் போடுவதற்கு ஏற்பாடு செய்ததுமுண்டு.

பல்லவர், சோழர் காலத்தில் வழங்கிவந்த நாணயமொன்று 'நற்காசு' என்று பெயர் பெற்றுள்ளது. எனவே அது பொன்னால் செய்யப்பட்ட நாணயமென்பது வெளிப்படை. அதனைப் 'பொன்' என்று தந்தி வர்மன் சாசனங்கள் கூறுகின்றன. "காண விலையின் புடவை" என வரும் தொடரில் 'காணம்' என்ற பெயரும் அக்காலத்தில் வழங்கியதொரு பொற்காசையே குறிக்குமென்று தெரிகிறது. நான்கு குன்றி எடை கொண்டது ஒரு காணம் என்றும், பத்துக் காணம் கொண்டது ஒரு காசு என்றும் இதற்கு வாய்பாடு கூறுவர். இனி, முதலாம் பராந்தகன் சாசனத்தில், ஒரு வகைக் காசு 'ஈழக்காசு' என்றும், அதன் பகுதி 'புத்தக்கம்' என்றும் பெயர் பெற்றுள்ளன. அவை பொற்காசு' என்னும் பொருளையே குறித்து நின்றன. அக்க மென்பது பொன் புத்தக்கம் என்பது புதிய பொன் என்று பொருள் படும். $7\frac{1}{2}$ புத்தக்கம் கொண்டது ஒரு ஈழக்காசாகும். சுந்தரபாண்டியன் சாசனத்தால் 'திரமம்' என்னும் ஒருவகை கிரேக்க நாணயம் நாட்டில் வழங்கி வந்ததாக அறிகின்றோம்.

அக்காலத்தில் நிலங்கள் அளக்கப்பட்டும், அதனதன் தன்மைக் கேற்றவாறு பிரிக்கப்பட்டும் குடிகளிடம் நிலவரி வாங்கப் பட்டதென்று அறிகின்றோம். நிலங்கள் அவைகளின் விளைச்சலுக் கேற்றவாறு நஞ்செய், புஞ்செய், காடு (தோட்டம்) என மூன்றாகப் பிரிக்கப்பட்டிருந்தன. முதல் கொண்ட நிலம், நீரிலி நிலம், குளப்புரவு, கண்ணாறு முதலியன பாண்டியர் சாசனங்களில் கூறப்படும் நிலப் பிரிவுகளாகும். இவைகளில் நெல், கரும்பு, நவிரை, வரகு. எள், திணை, மஞ்சள், வாழை முதலியன விளைவிக்கப்பட்டன. கார், பசானம் என்பன நஞ்செய் நிலத்தில் விளையும் இருபோக நெல்லைக் குறிக்கும். ஆடிக்குறுவை, அற்பசிக்குறுவை, என்னும் நெல் வகை சுந்தரபாண்டியன் சாசனத்தில் கூறப்பட்டுள்ளன.

கோயில் பிரதிமங்கள், திருமேனிகள் முதலியவற்றின் அகல உயரங்கள் தோரை, விரல், சாண், முழம் முதலிய அளவைகளால் அளக்கப்பட்டு வந்தனவென்பது முதலாம் இராசராசன் முதலாம் இராசேந்திர சோழன் ஆகியோர் சாசனங்களால் அறியப்படுகிறது. குழி, மா, வேலி என்பன அக் காலத்தில் நிலங்களை அளக்கும் நீட்டலளவைப் பெயர்கள். "நிலம் ஒன்பது மா முந்திரிகையின் மூன்றுமா முக்காணியும் நீங்கலாக" (27) என வரும் தொடர் அக்காலத்தில் நிலங்கள் எவ்வளவு நுட்பமாக அளக்கப்பட்டிருந்தன வென்பதைக் காட்டும். குலசேகரதேவ பராக்கிரம பாண்டியன் சாசனத்தில் (29), அவன் செங்கோட்டைச் சிவன் கோயிலுக்குத் தானமாகக் கொடுத்த அரைமா நிலத்திற்கு அளவு கூறுமிடத்தும் இத்தகைய அளவு குறிக்கப்பட்டிருத்தல் காண்க. வரி நீக்கப்பட்டதான இறையிலி நிலங்கள், புதிய பெயர்களைக் கொண்டிருந்தன. சைவ வைணவ கோயில்களுக்குத் தானமாகக் கொடுக்கப்பட்ட இறையிலி நிலங்கள் முறையே 'தேவதானம்' என்றும், 'திருவிடையாட்டம்' என்றும், சைவ பௌத்த கோயில்களுக்குக் கொடுக்கப்பட்ட நிலங்கள் 'மடப்புறம் என்றும் அழைக்கப்பட்டன. கோயில் அந்தணர்களுக்குக் கொடுக்கப்பட்ட நிலங்கள் பிரமதேயம் எனப்பட்டன.

நில அளவைகளைப் போல பொருட்களை அளப்பதற்கு உபயோகித்து வந்த நிறுத்தலளவைகளும், முகத்தலளவைகளும் இச்சாசனங்களில் காணப்படுகின்றன. மணி, பொன் முதலியவற்றை நிறுப்பதற்கு மா, குன்றி, மஞ்சாடி, கழஞ்சு ஆகிய நிறை கற்கள் உபயோகத்திலிருந்தன. அவையொழிந்த பொருட்கள் கஃசு, பலம் என்னும் எடைக் கற்களால் நிறுக்கப்பட்டன. தஞ்சைப் பெரிய கோயிலில் பொன்னை நிறுத்தற்கு ஆடவல்லான் என்னும் நிறைகல்லும், மணி முதலியவற்றை நிறுத்தற்குத் 'தக்ஷிணமேரு விடங்கன்' என்றும் நிறை கல்லும் வழக்கத்திலிருந்ததாக, முதலாம் இராச

ராசன், முதலாம் இராசேந்திர சோழன் சாசனங்களால் அறிகின்றோம். நெல், அரிசி, நெய், பால், உப்பு முதலியவற்றை அளப்பதற்கிருந்த பல அளவைகளில் செவிடு, ஆழக்கு, உழக்கு, உரி, நாழி, குறுணி (மரக்கால்), பதக்கு, தூணி, காடி, கலம் என்பன சிலவாகும். இவற்றைத் தந்திவர்மன் சாசனத்திலும், முதலாம் இராசராசன் சாசனங்களிலும் காணலாம். 'ஜ' என்பது நெல்லையும், 'ங' என்பது குறுணியையும், 'கள' என்பது கலத்தையும், 'வத' என்பது இரு தூணியையும் குறிக்கும் எழுத்துக்களாகச் சாசனங்களில் வழங்கியுள்ளன. அருண்மொழித் தேவன் மரக்கால், இராசராசன் மரக்கால், ஆடவல்லான் மரக்கால், அருண்மொழி நங்கை மரக்கால் என்பன சாசனங்களில் காணப்படும். சில மரக்கால்களின் பெயர்களாகும்.

'உடையார் கொயிலில் முழத்தால் அளந்தும்' (5) எனவும், 'கல்வாயில் நாட்டுக் கடைமைக் காலாலிறுப்பதாகவும்' (26)எனவும், 'கோல் குடி தாங்கியால் புள்ளி புக்க நிலம் ஒருமாவுக்கு (26) எனவும் வரும் தொடர்களால், அக்காலத்தில் அரசியலாரிடத்தும், குடிகளிடத்தும், கோயில்களிடத்தும் வெவ்வேறான அளவைகள் வழக்கத்தில் இருந்தனவென்று காண்கின்றோம்.

அக்காலக் கோயில்கள் கருப்பகிருகம், அர்த்த மண்டபம், இடைநாழிகை, மகா மண்டபம் முதலியவற்றையும், உயர்ந்த கோபுரங்களையும், சுற்றிலும் சிறு தெய்வங்களுக்குக் கோயில்கள் அமைக்கப்பெற்ற திருச்சுற்று மாளிகைகளையும், சுற்று மதில்களையும் உடையனவாய்த் திகழ்ந்தன. திருவுண்ணாழிகையுள்ளார், பலிகொட்டுவார். திருப்பள்ளித் தாமம் பறிப்பார், திருப்பதியம் பாடுவார் முதலிய திருப்பணியாளர்கள் கோயில்களில் இருந்து திருப்பணி செய்து வந்தனர். அவர்கள் 'தேவகன்மிகள்' என்றும், அவர்களை மேற் பார்வை செய்வார் 'ஸ்ரீகாரியஞ் செய்வார்' என்றும் அழைக்கப்பட்டனர். குலங்கிழார் என்றும் அன்னார் அழைப்பட்டுள்ளமை தந்திவர்மன் சாசனத்தால் அறியப்படுகிறது. விக்கிரம சோழன் தில்லைத் திருப்பணி சாசனத்தில்' 'ஆதிசண்டேஸ்வர தெவர் ஆதெசம் அருளால் இக்கொயிலில் ஸ்ரீமாஹெச்வரொமும் ஸ்ரீ காரியஞ் செய்வாரும் இக்கொயில் கணக்கு நெல்குப்பெயுடையாநு முள்ளிட்ட ஸ்தாநந்தொம்' (21)என வரும் அடிகளால் கோயில் பணியாளர் இன்னின்னார் என்பது புலனாதல் காண்க.

அக்கால அரசர்களுக்குக் காலாட் படை, குதிரைப்படை, யானைப் படை ஆகியவை இருந்தன. ஆனால் அவர்களுக்குத் தேர்ப் படை இருந்ததாகத் தெரியவில்லை. காந்தளூர்ச்சாலைக் கல மறுத்தது. ஈழங்கொண்டது, கடாரம் கொண்டது போன்ற செய்திகளால் சோழ மன்னர்களுக்குப் பலம் பொருந்திய கப்பற்படைகளு மிருந்தன என்று தெரிகிறது.

முடிவாகக், கிராமச் சபைகளைப் பற்றிச் சிறிது கூறுவாம். சோழபாண்டியர் காலத்தில் ஊர்தோறும் கிராமச் சபைகள் இருந்தன என்று தெரிகிறது. இச்சபையினர் ஊர்ப் பொது மக்களால் குடவோலை மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டனர். கிராமங்கள் சிறிதாயிருப்பின் இரண்டு மூன்று கிராமங்களைச் சேர்த்து, அவைகளுக்குப் பொதுவான ஒரு சபையை ஏற்படுத்தி ஆட்சி புரிந்து வந்தன ரென்று அறிகின்றோம். இச்சிறு கிராமங்களின் தொகுதியே பிற்காலத்தில் 'சதுர்வேதி மங்கலம்' என்று பெயர் பெற்றது போலும். இச்சபையில், சம்வற்சரவாரியம், தோட்டவாரியம், ஏரிவாரியம், கழனிவாரியம், பஞ்சவார வாரியம், கணக்கு வாரியம், கலிங்கு வாரியம், தடிவழி வாரியம் முதலிய பல உட்கழகங்கள் இருந்தன வென்பது, பார்த்திவேந்திராதிவர்மன் சாசனத்தால் அறியப்படுகிறது.

ஊர்ச் சபையின் உட்பிரிவுகள் ஒவ்வொன்றும் பல உறுப்பினரையுடையதாய், தனித்தனி வேலைகளைக் செய்து வந்தது. நியாயம் வழங்குவது, அறநிலையங்களைக் கண்காணிப்பது, நீர் நிலைகளைப் பாதுகாத்துப் பயன்படச் செய்வது, நிலபுலங்களைப் பரிபாலிப்பது, அரசனுக்குக் குடிகள் செலுத்தவேண்டிய நிலவரியையும், பிற வரிகளையும் வாங்கி அரசாங்க பொருள் நிலையத்திற்கு அனுப்புவது போன்ற எல்லா வேலைகளையும் கிராமச் சபையினரே செய்து வந்தனர் கோயில் ஆட்சியும் அவர்கள் வசமே இருந்து வந்தது. சுருங்கக்கூறின், இவர்களே கிராம ஆட்சியைச் நடத்தி வந்தன ரென்னலாம். அவர்கள் கூடித் தங்கள் கடமைகளை நிறைவேற்றுவதற்கு ஊர்தோறும் பொது மன்றங்க ளிருந்தன. சில சமயங்களில் கோயில் மண்டபங்களும், பள்ளிக்கூடங்களும், ஊர்ச்சபை கூடுவதற்குப் பயன்பட்டன. சபையில் நிறைவேற்றும் தீர்மானங்களையும் பிறவற்றையும் எழுதி வைப்பவன் 'ஊர்க்கரணத்தான் அல்லது மத்தியஸ்தன் என்று அழைக்கப்பட்டான்.

சாசனங்களில், 'ஊர்க்கரணத்தான் வடுகன் பாக்கரநேன்' (17). 'இந்நகரக் கரணத்தான், நாராயணன டைக்கலனென்' (7) நாட்டுக் கணக்கு மயிலேறும் பெருமாள் ஸிவஞாந தெவன்' என வரும் தொடர்கள் அக்காலத்தில் ஊர்ச்சபை, நகர சபை, நாட்டுச் சபைகள் இருந்தன என்பதைப் புலப்படுத்தும். அவை இக்கால ஊர்ப் பஞ்சாயத்து, நகராண்மைக் கழகம், நாட்டாண்மைக் கழக முதலியவற்றிலும் சிறப்பாக விளங்கின என்பது இச்சாசனங்களால் அறியப்படும் உண்மையாகும்.

தமிழ்ச் சாசனங்கள்.

1. தந்திவர்மன் சாசனம்.*

முன்னுரை

தந்திவர்மன் சாசனம் என்பது, தந்திவர்மன் காலத்துச் சாசனம் என்று பொருள்படும். இச் சாசனம் பல்லவ மன்னனான தந்திவர்மன் காலத்தில், அவனது ஆட்சியின் 12ஆம் ஆண்டில் ஏற்பட்டது. இஃது திருவல்லிக்கேணி பார்த்தசாரதி சுவாமி கோயில் கருப்ப கிருகத்திற்குச் செல்லும் வாயிலுக்குப் பக்கத்தில் உள்ள தளவரிசைக் கல் ஒன்றில் காணப்படுகிறது. தமிழ் மொழியில், கிரந்த எழுத்தால் எழுதப் பெற்ற பல சமஸ்கிருத சொற்கள் கலந்து எழுதப்பட்டது. பத்தொன்பது வரிகளையுடையது.

இச் சாசனத்தில் தந்திவர்ம பல்லவன், பல்லவ குல திலதம் என்றும், பாரத்வாஜ கோத்திரா லங்கார பதி என்றும் கூறப் பெற்றுள்ளான். திருவல்லிக்கேணி குலங்கிழார் (கோயில் அதிகாரிகள்) கரு[illegible]ாரச் சேரியிலுள்ள கோயில் நிலத்தில் ஒரு பகுதியை ஒற்றி வைத்ததால், அதிலிருந்து கிடைத்த நாற்பத்தைந்து காடி நெல்லுக்குரிய வட்டியைக் கொண்டு கோயில் இறைவனுக்குத் திருவமுது செய்து தடை பட்டது. அதனால் புகழ்த் துணை விசையரயன் என்னும் அரசிய லதிகாரி முப்பது காடி நெல்லும், ஐந்து கழஞ்சுப் பொன்னும் கொடுத்து,

---

* Epigraphia Indica, Vol. VIII, No. 29, pp 290—96.

[1] இவன் இரண்டாம் நந்திவர்ம பல்லவன் மகன். இவன் தாயின் பெயர் ரேவா. இவள் இராஷ்டிரகூடர் முதலரசனான தந்திதுர்கன் என்னும் தந்திவர்மன் மகளா யிருத்தல் வேண்டுமென்று வரலாற்றாசிரியர் கூறுகின்றனர். எனவே, இவன் பாட்டன் பெயரே இவனுக்கும் இடப்பட்டது என்று கருதப்படுகிறது. தொடக்கத்தில் தொண்டை நாடும், சோழ நாடும் இவனாட்சியின்கீழ் இருந்தது. ஆகையால் இவன் கல்வெட்டுக்கள் அவ்விரு நாடுகளிலும் காணப்படுகின்றன. இவன் ஆட்சியின்கீழ் முத்தரையர் சிற்றரசர்களா யிருந்தனர். ஆனால், இறுதிக் காலத்தில் இராஷ்டிரகூட மன்னருள் மூன்றாம் கோவிந்தன் இவனோடு போர் செய்து, இவன் வலிமையை அழித்தான். வரகுண பாண்டியன் இவனை வென்று சோழ நாட்டையும் தொண்டை நாட்டின் ஒரு பகுதியையும் தன்னாட்சியின்கீழ்ப் படுத்தினான். இவன் காலத்தில் குளங்கள்,

அந்த நிலத்தை மீட்டுத் தனக்குரிய தாக்கி, அதன் வருவாயிலிருந்து 45 காடி நெல் கோயிலுக்குத் தானமாகக் கொடுத்தான். கோயில் அதிகாரிகள் அந் நெல்லுக்கு வட்டியாக நாளொன்றுக்கு வந்த ஐந்து நாழி நெல்லை வாங்கி, அரிசியாக்கி இறைவனுக்கு நாள்தோறும் இரவு நிவேதனம் கொடுப்பதாகவும், அங்ஙனம் நிவேதனம் கொடுக்கத் தடை ஏற்பட்டால், கோயிலுக்குரிய சில நிலங்களின் விளைச்சலிலிருந்து கொடுப்பதாகவும் அவனுக்கு உறுதி செய்து கொடுத்தனர். இச் செய்திகளுடன் புகழ்த்துணை விசையரயன் அக்கோயிலுக்கு ஒரு ஈழ விளக்கும், வட்டிலும், உலோக பாணையும் தானமாகக் கொடுத்து, அவைகளைப் பாதுகாக்குமாறு கோயில்அதிகாரிகளை வேண்டிக்கொண்ட செய்தியும் இதில் கூறப்பட்டுள்ளது. எனவே, இச் சாசனத்தைத் திருவல்லிக்கேணி குலங்கிழார் சாசனம் என்றாயினும், புகழ்த்துணை விசையரயன் சாசனம் என்றாயினும் நாம் கூறலாம்.

தந்திவர்ம பல்லவன் கி. பி. 775 முதல் 825 வரை தமிழ் நாட்டை ஆண்டான். இச் சாசனம் அவனது ஆட்சியின் 12ஆம் ஆண்டில் ஏற்பட்டதெனவே, இதன் காலம் கி. பி. 789ஆம் ஆண்டு என்னலாம்.

சாசனம்

1. ஸ்வஸ்தி ஸ்ரீ பல்லவகுல திலத பார –
2. த் வாஜ கோத்ராலங் கார பதி யாகிய ஸ்ரீ –

ஏரிகள், கால்வாய்கள் பல வெட்டப்பட்டுள்ளன. சோழ நாட்டில் பல பிரமதேயங்களை இவன் செய்துள்ளான். மாற்பிடுகு, வயிரமேகன் என்னும் பெயர்களும் இவனுக்கு உண்டு. சில சாசனங்களில் இவன் பெயர் 'கோவிசய தந்தி விக்கிரம வர்மன்' என்று காணப் படுகிறது. இவன் காலத்தில்தான் சுந்தரர் வாழ்ந்ததாகத் தெரிகிறது. நம்மாழ்வாரும் இவன் காலத்தில் இருந்தார் என்று கூறுவர். புகழ்த்துணை விசையரயன், உலகப்பெருமானார் முதலியோர் இவன் அரசியல் அதிகாரிகளாவர்.

குறிப்புரை

1. ஸ்வஸ்தி ஸ்ரீ: இது சாசனங்களின் துவக்கத்தில் மங்கலமாக வழங்கும் ஒரு வடமொழித் தொடர். மங்களம் உண்டாக என்பது இதன் பொருள். 'நலம் வளர்க' என்றும் இதற்குப் பொருள் கூறுவர்.

பல்லவ குல திலதம்: பல்லவர் குலப் பிரிவுகளில் இஃது ஒரு பிரிவின் பெயர். இக்குலத்தினர் பாரத்துவாச கோத்திரத்தைச் சேர்ந்தவர்கள். தந்திவர்மனும் அவனுக்குப் பின் வந்த பல்லவ மன்னர்களும் இக் குலத்தைச் சேர்ந்தவர்கள் என்று தெரிகிறது. இனிப், பல்லவ குல

3. தந்திவர்ம்ம மஹாராஜற்கு வர்ஷவர்த்தன –
4. ம் யாண்டு பன்னிரண்டாவது திருவல்லி –
5. க்கேணி குலங்கிழார்கள் கருமாரச்சேரிப் புலம்
6. ஒற்றியிட்டு நாற்பத்தைங் காடி நெல் பொலியூட்ட திரு–

திலதம் என்பது, தந்திவர்ம பல்லவனுக்கு வழங்கிய பட்டப்பெயர்களில் ஒன்று என்பாரு முளர்.

2. பாரத்வாஜ கோத்ரா லங்கார பதி: பல்லவர்களுக்குரிய கோத்திரங்களில் பாரத்துவாச கோத்திரமும் ஒன்று. பல்லவர்க்குக் குடி முதல்வன் திருமால் என்றும், அவன் வழி வந்தோர் பிரமன், ஆங்கிரசு, பிரகஸ்பதி, சம்யு, பாரத்துவாசன், துரோணன், அசுவத்தாமா, பல்லவன் முதலியோர் ஆவர் என்றும் கூறுவர். தந்திவர்மன் அப் பாரத்துவாச கோத்திரத்து மன்னர்களில் புகழ்பெற்றவனுதலால், அவன் ‘பாரத்வாஜ கோத்திரா லங்கார பதி’ என்று அழைக்கப்பட்டான். கோத்ரம் – குடி; அலங்காரம் – அழகு, ஒளி; பதி –மன்னன், தலைவன்.

3. ஸ்ரீ தந்திவர்ம்ம மஹாராஜர்: இவன் வரலாற்றை இச் சாசன முன்னுரைப் பகுதியில் காண்க.

வர்ஷ வர்த்தனம் யாண்டு – ஆட்சியின் நிறைவு ஆண்டு; வர்ஷம் – ஆட்சி ஆண்டு; வர்த்தனம் – நிறைவு, வளர்ச்சி.

4. திருவல்லிக்கேணி: இஃது சென்னை நகரைச் சுற்றியுள்ள மயிலாப்பூர், திருவான்மியூர், எழுமூர், நுங்கம்பாக்கம், திருவறையூர் முதலிய ஊர்களைப் போன்று பழங்கால முதலே சிறப்புற்றிருந்த ஒரு சிற்றூர். இவ்வூரில் பார்த்தசாரதி சுவாமி கோயில் உளது அக் கோயிலில் தந்திவர்மன் சாசனத்தோடு, சோழருடைய பல சாசனங்களும், பாண்டியன் மாறவர்மன் குலசேகரன் கல்வெட்டுக்களும், விஜய நகர மன்னர்களுடைய சாசனங்களும் காணப்படுகின்றன. இவைகளால் இக்கோயில் தந்திவர்மன் காலமாகிய கி. பி எட்டாம் நூற்றுண்டிற்கு முற்பட்டது என்று தெரிகிறது.

5. குலங்கிழார்கள் –கோயில் வேலையை நடத்துபவர்கள்; குலம்–கோயில்; கருமாரச் சேரிப்புலம் – கருமாரச்சேரி என்னும் ஊரிலுள்ள நிலம்; புலம் – வயல் நிலம்.

6 ஒற்றியிட்டு – ஒற்றி வைத்து, அடகு வைத்து; நாற்பத்தைங் காடி நெல் பொலியூட்ட - 45 காடி நெல்லுக்கு பொலியூட்டாக வந்த நெல்லால்; காடி என்பது, அக்காலத்திய முகத்தலளவைகளில் ஒன்று. தானியங்களைப் பெரும்பாலும் இவ்வளவையினுல் அளப்பர். செவிடு, ஆழாக்கு, உழக்கு, உரி, நாழி, குறுணி, பதக்கு, தூணி, காடி, கலம்

7. வடிகட்கு திருவமிர்து முட்ட புகழ்த்துணை விசெய்-
8. யரையன் முப்பதின் காடி நெல்லும் ஐங்கழஞ்சு
9. பொன்னும் குடுத்து மீட்டுத் தனதாக்கி நாற்பத்-
10. தைங் காடியும் நிசதி ஐஞ்ஞாழி நெல்லால் இருநா -

என்பவை பல்லவர் காலத்து முகத்தலளவைகளாகும். 5 செவிடு=1 ஆழாக்கு; 2 ஆழாக்கு = 1 உழக்கு; 2 உழக்கு=1 உரி; 2 உரி=1 நாழி; 8 நாழி=1 குறுணி; 2 குறுணி = 1 பதக்கு; 4 குறுணி= 1 தூணி; 5 குறுணி =1 காடி; 12 குறு ணி= 1 கலம்.

பொலியூட்டு – வட்டி பெறுகை; பொலி– பொலிசை, தானியமாகக் கொடுக்கும் வட்டி

திருவடிகட்கு – கோயில் இறைவனுக்கு.

7. திருவமிர்து – நிவேதன வுணவு (Boiled rice offered to an idol or great person); முட்ட – தட்டுப்பட, தடைபட ; புகழ்த்துணை விசையரையன்: இவன் தந்திவர்ம பல்லவன் அரசியல் அதிகாரிகளில் ஒருவன்; திருவல்லிக்கேணி கோயில் கிழார்கள் கோயில் நிலத்தில் ஒரு பகுதியை ஒற்றி வைத்ததால் அதன் வருவாயாக வந்த 45 காடி நெல் குறைந்து அதற்குக் கிடைக்கும் வட்டியும் இல்லாமல் போக, இவன் 30 காடி நெல்லும் 5 கழஞ்சு பொன்னும் கொடுத்து, அந்த நிலத்தை மீட்டுத் தனக்குச் சொந்தமாக்கி, அந்த நிலத்து வருவாயிலிருந்து 45 காடி நெல் தானமாகக் கொடுத்தான். அந்நெல்லுக்கு நாளொன்றுக்கு வட்டியாகவந்த 5 நாழி நெல்லைக்கொண்டு கோயில் அதிகாரிகள் இறைனுக்கு நாள் தோறும் இரவு நிவேதன உணவு படைக்குமாறு ஏற்பாடு செய்தான். அன்றியும் இவன் அக்கோயிலுக்குத் தானமாக ஒரு ஈழ விளக்கு, வட்டில், உலோக பானை ஆகியவற்றைக் கொடுத்து, அவைகளைப் பாதுகாத்து வருமாறும் அவர்களை வேண்டிக்கொண்டான்.

8. முப்பதின் காடி நெல் – 30 காடி நெல்; ஐங்கழஞ்சு பொன் – 5 கழஞ்சு பொன்; கழஞ்சு – 12 பண எடை அல்லது 20 மஞ்சாடி. இது ஒரு நிறுத்த லளவை; பொன் முதலியன இதனால் நிறுக்கப்படும். 2 குன்றிமணி=1 மஞ்சாடி; 20 மஞ்சாடி =1 கழஞ்சு.

9. குடுத்து மீட்டு – கொடுத்து வாங்கி; தனதாக்கி – தனக்குச் சொந்தமாக்கி; நாற்பதைங் காடியும் – 45 காடி நெல்லும் கொடுத்து; 5 குறுணி அல்லது 40 நாழி=1 காடி.

10. நிசதி – நாள்தோறும்; ஐஞ்ஞாழி நெல்லால் – 45 காடி நெல்லுக்கு வட்டியாக வந்த ஐந்து நாழி நெல்லைக்கொண்டு. இதனால், அக்காலத்தில் 45 காடி நெல்லுக்கு ஆண்டுக்கு 18¾ கலம் நெல், வட்டி என்று அறிகின்றோம்.

11. ழி தூக்குத்த லரிசியால் இராப்போனகம் ஜங்க ச –
12. ர்மனும் ஜத்தி சர்மனும் இளைய சத்தி சர்மனும் கா
13. ட்டுவாரானுர்கள் முட்டில் அவிப்புலத்தும் தத்தன் புல–
14. த்துங் காரைக்கிழான் புலத்தும் சுவாமி போகத்துத் திருவ
15. மிர்து காட்டுவோ மானேம் இத்தர்மத் துள்ளார் யாவ
16. ரேனுங் கோச் செய்வது செய்து செலுத்த வொட்டிக் குடுத் –

---

11. தூக்குத்த லரிசியால் – *தீட்டிய குத்த லரிசியால்;* இராப்போனகம் – *இராப்போசனம்;* இரவு உணவு; *போனசம் – போசனம், நிவேதன உணவு.*

12. ஜங்க சர்மன், ஜத்தி சர்மன், இளைய சத்தி சர்மன்: *சர்மா என்பது அந்தணருக்குரிய பட்டப் பெயர் இவ்வாறு அரசர் வர்மா என்றும், வணிகர் கருமா என்றும், சூத்திரர் தாசர் என்றும் அழைக்கப் படுவர். சங்க சர்மன் முதலிய மூவரும் திருவல்லிக்கேணி பார்த்தசாரதி கோயிலில் திருப்பணி செய்து வந்தவர்கள். இவர்களே புகழ்த்துணை விசையரயன் மீட்ட நில வருமானத்திலிருந்து கொடுத்த 45 காடி நெல்லுக்கு நாள் தோறும் வட்டியாக வந்த 5 நாழி நெல்லையும் வாங்கி, குற்றித் தீட்டி இரண்டு நாழி அரிசி யாக்கி, கோயில் இறைவனுக்கு இரவு நிவேதனம் கொடுக்க உறுதி கூறியவர்க ளாவர்.*

13. காட்டுவாரானுர்கள்–*உறுதி கூறினர்;* முட்டில்–*தடைபட்டால்.*

14. அவிப்புலம், தத்தன்புலம், காரைக்கிழான் புலம்: *இவை மூன்றும் திருவல்லிக்கேணி கோயிலுக்குச் சொந்தமான வேறு வயல் நிலங்கள்; கோயில் அதிகாரிகளுக்குக் கொடுக்கப்பட்டவை. முந்திய ஏற்பாட்டின்படி இவர்கள் கோயில் இறைவனுக்கு நாள்தோறும் இரவுப் போனகம் கொடுக்கத் தடைபட்டால், இம்மூன்று நிலங்களின் வருவாயி னின்றும் போனகம் கொடுத்தல் வேண்டுமென்பது இச்சாசனத்தில் கண்ட வாக்குறுதிகளில் ஒன்றாகும்.* சுவாமி போகத்து – *சுவாமிக்குரிய நிலத்து விளைச்சலில்; அஃதாவது, அவிப்புலம் முதலிய மூன்று புலங்களி லிருந்தும் கோவிலுக்கு வரும் விளைச்சலில் என்பது.*

15. காட்டுவோ மானேம் – *உறுதி சொன்னேம்.* இத் தர்மத்து உள்ளார் – *இப் பணியைச் செய்ய ஏற்றுக்கொண்டவர்கள்;* யாவரேனும் – *யாவரானாலும்.*

16. கோச் செய்வது செய்து–*நாட்டு மன்னன் குடிகளுக்குக் குறைவின்றி உதவி செய்வது போல, இத் தருமத்தைக் குறைவின்றி செய்து:* செலுத்த – *நடத்த;* ஒட்டிக் கொடுத்தோம் – *உறுதிசெய்து கொடுத்தோம்.*

17. தோம் ஈழவிளக்கும் வட்டில் லோகபானையும்
ரக்ஷிப்ப –
18. து புகழ்த்துணை விசையரயன் தர்மமிது இதனை ர –
19. க்ஷித்தா ரடி இரண்டும் என் முடி மேலின ஸ்வஸ்தி.

---

17. ஈழ விளக்கு – கோயிலுக்குத் தனமாகக் கொடுக்கும் விளக்கு வகைகளில் ஒன்று: இவ்வகை விளக்கு, ஈழநாட்டிலிருந்து வந்தது போலும். இனி ஈழம் என்பதற்குப் பொன் என்று பொருள்கொண்டு, இதனைப் 'பொன் விளக்கு' என்பாருமுளர். வட்டில் – கிண்ணம்; உண் கலம் எனினுமாம். லோக பானை– உலோக பானை; அஃதாவது உலோகத்தால் செய்த பானை; இதனை வெண்கலப் பானை என்பாரும், செப்புப் பானை என்பாருமுளர்

ஈழவிளக்கு, வட்டில், உலோக பானை மூன்றும் புகழ்த்துணை விசையரயனால் பார்த்தசாரதி சுவாமி கோயிலுக்குத் தானமாகக் கொடுக்கப் பட்டவை. இவைகளைப் பாதுகாக்கும் பொறுப்பு, கோயில் திருப்பணியாளர்களான சங்க சர்மன், சத்தி சர்மன், இளஞ்சத்தி சர்மன் ஆகிய மூவர்களிடமும் விடப்பட்டது

18. தர்மம் – தானம்; அவைகளாவன திருவல்லிக்கேணி பார்த்தசாரதி சுவாமிக்குத் திருவமிர்து படைக்க புகழ்த்துணை விசையரயன் 45 காடி நெல் கொடுத்ததும், கோயிலுக்கு வேண்டும் ஈழ விளக்கு, வட்டில், உலோக பானை ஆகியவற்றைக்கொடுத்தது மாகும். ரக்ஷித்தார்- காத்தார்.

19. அடி யிரண்டும்-பாதங்கள் இரண்டும்; என்முடி மேலின–என் தலையில் இருக்கக் கடவது; அஃதாவது, இத் தருமங்களைக் காத்தார் பாதங்கள் இரண்டிற்கும் என் வணக்கம் என்பது. ஸ்வஸ்தி: இவ்வட சொல், இச் சாசனத்தின் துவக்கத்தில் ஸ்வஸ்தி ஸ்ரீ என வந்துள்ளது. சாசனங்களின் இறுதியில் இவ்வாறு வருதல் சிறுபான்மை யாகும்.

பயிற்சி வினாக்கள்

1. தந்திவர்மன் சாசனம் எங்குக் காணப்படுகிறது? அதன் காலம் எது?

2. இச் சாசனத்தில் சொல்லப்பட்டுள்ள செய்திகள் யாவை?

3 ஸ்வஸ்தி ஸ்ரீ, பல்லவ குல திலதம், பாரத்வாஜ கோத்ரம், வர்ஷ வர்த்தனம், சருமாரச் சேரிப்புலம், புகழ்த்துணை விசையரயன்– இவற்றை விளக்குக

4. இச் சாசனத்தில் குலங்கிழார் செய்து கொடுத்த உறுதிகள் யாவை?

5. குலம் குழார்கள், பொலியூட்டல், திருவமிர்து, நிசதி இராப் போனகம், ஒட்டிக் கொடுத்தல், ஈழவிளக்கு — பொருள் தருக

6. இச்சாசனத்தில் வரும் அளவைப் பெயர்களைக் குறிப்பிட்டு விளக்குக

7. இச்சாசனத்தில் அறியப்படும் வட்டி வகைகளைக் குறிப்பிடுக.

2. விஜய தந்தி விக்கிரமவர்மன் சாசனம்.*

முன்னுரை

விஜய தந்தி விக்கிரம வர்மன் என்பது, தந்திவர்ம பல்லவனுக்கு வழங்கிய மற்ெருரு பெயர். விஜய தந்தி விக்கிரம வர்மஞன தந்திவர்மன் காலத்துச் சாசனம், விஜய தந்தி விக்கிரம வர்மன் சாசனம் எனப்பட்டது. இச் சாசனம் தந்திவர்மன் காலத்தில், அவன் ஆட்சியின் 51-ஆம் ஆண்டு ஏற்பட்டது. சித்தூர் மாவட்டம் சந்திரகிரி தாலூகா திருச்சோகினூரிலுள்ள பத்மாவதி அம்மன் கோயில் வாயிலுக்குப் போகும் வழியில் தரையில் தனியாக அமைந்த ஒரு கல்லில் காணப்படுகிறது. இஃது தமிழ் மொழியில், கிரந்த எழுத்துக்கள் கலந்து எழுதப்பட்டது. ஐந்து வரிகளை யுடையது.

இச் சாசனத்தில், திருவேங்கடக் கோட்டத்தைச் சேர்ந்த திருச்சோகினூர் திருவிளங்கோயில் பெருமானுக்குச் சோழநாட்டுச் சோழரான உலகப் பெருமானூர் என்னும் அரசியல் அதிகாரி ஒரு திருவிளக்கு வைத்து, அதற்கு முதலாக 30 கழஞ்சு பொற்காசுகள் தானம் அளித்துள்ளமையும், ஊர்ச் சபையோர் அப்பொற் காசு முப்பதுக்கும் கருக்குப்பட்டி என்னும் நிலத்தை ஈடாகக் கொண்டு, அதன் வருவாயிலிருந்து கோவிலுக்குத் திருவிளக்கு வைப்பித்தமையு மாகிய செய்திகள் கூறப்படுகின்றன. எனவே, இச்சாசனத்தை உலகப் பெருமானூர் திருவிளக்குச் சாசனம் என்ருயினும், திருச்சோகினூர் சபையோர் சாசனம் என்ருயினும் நாம் கூறலாம்.

தந்திவர்ம பல்லவன் கி. பி. 775 முதல் 825 வரை தமிழ் நாட்டை ஆண்டான். இச் சாசனம் அவனது ஆட்சியின் 51-ஆம் ஆண்டில் ஏற்பட்டதெனவே, இதன் காலம் கி. பி. 824 - 825-ஆம் ஆண்டு என்னலாம்.

சாசனம்

1. ஸ்வஸ்தி ஸ்ரீ கொவிசெய தந்தி விக்கிரமவர்மற்கு யாண்டு அம்பத்தொன்ருவது திருவெங் –

---

* S. I. I., Vol. XII, No. 43, pp. 17—18.

குறிப்புரை

1 ஸ்வஸ்தி ஸ்ரீ –மங்களம் உண்டாக; 'நலம் வளர்க' எனினுமாம். கொவிசெய தந்தி விக்கிரமவர்மர்: இஃது தந்திவர்ம பல்லவனுக்கு

2. கடக் கொட்டத்துக் குடவூர் நாட்டுத் திருச்சொகினூர்த் திருவெங்கடத்து எம்பெருமா னடிகளுக் –

3. கு எழுந்தருளுவித்த திருவிளங் கொயிற் பெருமா னடிகளுக் குச் சொழநாட்டுச் சொழனூர் –

வழங்கும் மற்றொரு பெயர். தென்னிந்திய சாசனத் தொகுதிகளில் பன்னிரண்டாவது தொகுதியில் இவனைப் பற்றி ஆறு சாசனங்கள் (39–44) காணப்படுகின்றன அவைகளிலெல்லாம் இவன் பெயர் இவ்வாறே வழங்கப்பட்டுள்ளது [இவனுடைய வரலாற்றை முந்திய சாசனக் குறிப்புரையில் காண்க]. யாண்டு அம்பத் தொன்றுவது – ஆட்சியின் 51ஆம் ஆண்டு.

2. திருவெங்கடக் கொட்டத்துக் குடவூர்நாட்டுத் திருச்சொகினூர்: பல்லவர் ஆண்ட தொண்டை நாட்டுப் பகுதி இருபத்துநான்கு கோட்டங்களாகவும், ஒவ்வொரு கோட்டமும் பல நாடுகளாகவும் ஊர்களாகவும் பிரிக்கப்பட்டிருந்தது. திருவேங்கடக் கோட்டம், தொண்டை நாட்டு இருபத்து நான்கு கோட்டங்களில் ஒன்று; குடவூர் அக்கோட்டத்தினுளடங்கிய ஒரு நாடு. அக்கால நாடுகளை இக்கால மாவட்டத்திற்கு ஒப்பிடலாம். திருச்சோகினூர் குடவூர் நாட்டிலுள்ளது. அது இப்பொழுது திருச்சானூர் என்று வழங்குகிறது. திருவெங்கடத்து எம்பெருமானடிகள்: இஃது திருச்சோகினூர் இறைவன் பெயர். எம்பெருமான் என்பது, திருமாலுக்கு வழங்கும் சிறப்புப் பெயர்.

3. எழுந்தருளுவித்த – அபிடேகம் செய்து வைத்த; திருவிளங் கோயில் பெருமானடிகள்: இளங்கோயில் என்பது, பழைய கோயிலைப் புதுப்பிக்குமிடத்து, அக்கோயில் மூர்த்தியைப் பக்கத்தில் எழுந்தருளச் செய்து வழிபடும் இடத்தைக் குறிக்கும். எனவே, இங்குக் குறிப்பிட்ட பெருமானடிகள், திருவேங்கடத்து எம்பெருமானடிகளின் திருமூர்த்தியையே குறிக்கும். மூர்த்தி – இறைவன் திருவுருவம்.

சொழநாட்டுச் சொழனூர் உலக பெருமானூர்: இவர் தந்தி வர்மன் ஆட்சியின் கீழ் சோழநாட்டுப் பகுதியை ஆண்டு வந்த, அவன் அரசியல் தலைவர்களில் ஒருவராவர். இவர் சோழர் பரம்பரையைச் சேர்ந்தவராதலால், 'சோழநாட்டுச் சோழனூர்' எனப்பட்டார். உலகப் பெருமானூர் என்பது, இவரது இயற்பெயர். இதனால் சோழநாட்டின் ஒரு பகுதி தந்திவர்மன் ஆட்சியின் கீழ் இருந்ததென்பது போதரும்.

4. உலக பெருமானுர் வைத்த திருவிளக்கு முதல் முப்பதின் கழஞ்சு இம்முதலுக்காகக் கருக்கி –

5. பட்டி இப்பொன்னுக்குக் கொண்டு குடுத்துத் திருவிளக்கு வைப்பித்தோம் –

---

4. வைத்த – தானமாகக் கொடுத்த; திருவிளக்கு முதல் முப்பதின் கழஞ்சு – திருவிளக்குச் செலவுக்காக முதலாகக் கொடுத்த முப்பது கழஞ்சு எடையுள்ள முப்பது பொற்காசுகள். திருவிளக்கு – கோயில் நந்தா விளக்கு; முதல் – செலவுக்காகச் சேமித்து வைக்கும் மூலநிதி; கழஞ்சு என்பது பொன் முதலியவற்றை நிறுக்கும் ஒரு நிறுத்தலளவையின் பெயர்; 20 மஞ்சாடி எடையுள்ளது. இதனுல் பல்லவர் காலத்தில் கழஞ்சு எடையுள்ள பொற்காசுகள் இருந்தமை தென்று தெரிகிறது.

கருக்கு பட்டி: இஃது திருச்சோகினூர் கோயில் நிலங்களில் ஒன்றன் பெயர். ஊர்ச் சபையோர் மேல் பார்வையில் இருந்தது. உலகப் பெருமானுர், அக் கோயிலில் திருவிளக்கு வைப்பதற்குத் தானமாகக் கொடுத்த முப்பது கழஞ்சு பொன்னுக்கும் ஈடாக, ஊர்ச் சபையோர், இந்த நிலத்தைக் காட்டி இதன் வருமானத்தைக் கொண்டு திருவிளக்கு வைக்க ஏற்பாடு செய்தனர்.

5. இப்பொன்னுக்கு – இந்தப் பொற்காசுக்கு; கொண்டு குடுத்து– ஈடாகக் காட்டி; வைப்பித்தோம்–வைக்க ஏற்பாடு செய்தோம்; இங்ஙனம் ஏற்பாடு செய்தவர், திருச்சோகினூர் ஊர்ச் சபையோர்.

பயிற்சி வினுக்கள்

1. விஜய தந்தி விக்கிரம வர்மன் யார்? அவன் சாசனம் எங்குக் காணப்படுகிறது?

2. இச் சாசனத்தில் கூறப்படும் செய்திகள் யாவை?

3. திருச்சோகினூர் அக்காலத்தில் எங்கு இருந்தது? இக்காலத்தில் அது இருக்கும் இடம் யாது?

4. திருவேங்கடத்து எம்பெருமானடிகள், திருவிளங்கோயில் சோழநாட்டுச் சோழனுர், கருக்குபட்டி—இவற்றை விளக்குக.

5. கோட்டம், திருவிளக்கு, எழுந்தருளுவித்தல் — பொருள் தருக.

6. பல்லவர் காலத்தில் அவர் நாடு எங்ஙனம் பிரிக்கப்பட்டிருந்தது? சான்று காட்டி விளக்குக.

3. முதலாம் பராந்தகன் சாசனம் *

முன்னுரை

முதலாம் பராந்தகன் சாசனம் என்பது, முதலாம் பராந்தக சோழன் காலத்துச் சாசனம் என்று பொருள்படும். இச் சாசனம் சோழ மன்னனான முதலாம் பராந்தகன்[1] காலத்தில், அவன் ஆட்சியின் 33ஆம் ஆண்டில் ஏற்பட்டது. இஃது மதுரையை யடுத்த ஆனைமலையிலுள்ள நரசிங்கப் பெருமாள் கோயில் நடு விடத்துக் கருப்ப கிருகத்திற்குச் செல்லும் வழியில் ஒரு பாறையில் காணப்படுகிறது. தமிழ் மொழியில், வட்டெழுத்தில் எழுதப் பெற்றது. இருபத்திரண்டு வரிகளையுடையது. இதன் இறுதியிலுள்ள சில சொற்கள் விடப்பட்டுள்ளன.

இச் சாசனத்தின் தொடக்கத்தில் முதலாம் பராந்தக சோழன், 'மதுரை கோண்ட கோப்பர கேசரி பன்மர்' என்று குறிக்கப்பட் டுள்ளான். பின்னர், நரசிங்க மங்கலத்துச் சபையார், முதலாம் பராந்தக சோழனது அரசியலதிகாரியான மரு தூருடையான் அருணிதி கலியனுக்குச் செய்து கொடுத்த சில உறுதிமொழிகள் காணப்படுகின்றன. அஃதாவது, திருவானை மலையிலுள்ள நரசிங்கப் பெருமாள் கோவிலி லிருந்து ஊர்ச்சபை யாருக்கு இறைக் காசாகக் கொடுக்க வேண்டிய ஈழக்காசு பதி னெட்டில், சபையாரிடம் கோவிலிலிருந்து வைக்கப்பட்ட 15 ஈழக்காசுக்கு வட்டியாக வந்த ஈழக்காசு ஆறு நீங்கலாக, மீதி 12 ஈழக்காசுகளைச் செலுத்துவதற்கு அருணிதி கலியன் என் பான், முதலாகக் கொடுத்த காசுக்கு அவன் பெற்றுக்கொண்ட ஊருடையான் குளமென்னும் கலியனேரியை, அவன் விரும்பிய படி ஆழமாகத் தோண்டவும், அதன் கரையை நீளமாகவும், உயரமாகவும் அமைக்கவும், அதில் அதிகமாகச் சேர்க்கப்படும் தண்ணீரை அவன் விரும்பிய வயல்களுக்கு நீர்ப்பாய்ச்சவும் ஊர்ச்சபையினர் அவனுக்கு உரிமை கொடுத்தனர்.

---

* S. I. I., Vol. III, Part III, No. 106, pp. 239 – 242.

[1] இவன் ஆதித்த சோழன் மகன். கி. பி. 907ல் பட்ட மெய்தியவன். பரகேசரி பட்டம் பெற்றவன். இவன் நாடு வடக்கே திருக்காளத்தி வரையும் பரவியிருந்தது. தொண்டை மண்டலமும், கொங்கு நாடும் இவன் ஆட்சிக்குட்பட் டிருந்தன. இவன் ஒரு சிறந்த வீரன். இவனுக் கும் இரண்டாம் இராச சிம்மனுக்கும் வெள்ளூர் என்ற இடத்தில் பெரும் போர் நடந்தது. அப் போரில் இவன் வெற்றி பெற்றான். பாண்டிய நாடு இவன் வசமாயிற்று. பின்னர், இவன் இராசசிம்மனுக்கு உதவி

அன்றியும், அவன் அந்தக் குளத்துப் பாய்ச்சலில் இரண்டு வேலி நஞ்செய் நிலம் வாங்கி, அந்த நிலத்தினின்றும் விளைவித்த 300 கலம் நெல்லையும் ஊர்ச் சபையோர் பெற்று, அவன் விரும்பியபடி அதில் 150 கலம் நெல்லால் நாள்தோறும் மூன்று வேளையும் கோயில் இறைவனுக்கு திருவமுது படைக்கவும், மீதி 150 கலம் நெல்லால் நாள்தோறும் ஐந்து வேதப் பிராமணர்களுக்கு உணவு கொடுக்கவும் அவர்கள் உறுதி கூறினர். எனவே இச்சாசனத்தை நரசிங்கமலங்கலத்துச் சபையோர் சாசனம் என்றாயினும், மருதூருடையான் அருணிதி கலியன் சாசனம் என்றாயினும் நாம் கூறலாம்.

இதில் வேதப்பிராமணர் ஐவருக்கும் உணவளிக்கும் நாளின் தொடக்கம், கர்க்கடக ஞாயிறாகிய ஆடிமாதம் வெள்ளிக்கிழமை சூரிய கிரகணமும் ஆயிலிய நாளும் கூடிய நேரம் என்று குறிக்கப்பட்டிருப்பதால், முதலாம் பராந்தக சோழன் காலத்தைக் குறித்ததற்கு இச் சாசனம் பெரிதும் உதவுகின்றதென்று சோதிட வல்லார் கூறுவர்.

முதலாம் பராந்தகன் கி. பி. 907 முதல் 953 வரை சோழ நாட்டை ஆண்டான். இச் சாசனம் அவனது ஆட்சியின் 33ஆம் ஆண்டில் ஏற்பட்டதெனவே, இதன் காலம் கி. பி. 939-940ஆம் ஆண்டு என்னலாம்.

புரிந்த இலங்கை மன்னனான ஐந்தாம் காசிபனோடு போர்செய்து வெற்றியடைந்தான். அதனால் இவன் 'மதிரையும் ஈழமும் கொண்ட கோப் பரகேசரி' என்று அழைக்கப்பட்டான். சங்கிராம ராகவன் என்ற இவனது சிறப்பு பெயரும், இவனது இலங்கை வெற்றி பற்றி ஏற்பட்டதே யாகும். இவையன்றி, இவன் இரு வாணகுல மன்னரையும், வைதும்பராயனான சயந்தன் என்னும் தெலுங்கர் மன்னனையும் வென்றதாகத் தெரிகிறது.

ஆயினும் தக்கோலம் என்னுமிடத்தில், இவனுக்கும் இராஷ்டிரகூட மன்னனான மூன்றாம் கிருஷ்ண தேவனுக்கும் நடந்த போரில் இவன் தோல்வி அடைந்தான். இவன் முதல் மகனான இராசாதித்தன் அப் போரில் இறந்தான். இவன் ஆட்சிக்கு உட்பட்டிருந்த தொண்டை நாடும், திருமுனைப்பாடி நாடும் மூன்றாம் கிருஷ்ண தேவன் வசமாயின.

முதலாம் பராந்தகன் சிறந்த கடவுள் பத்தி யுள்ளவன். தில்லைச் சிற்றம்பலத்தைப் பொன்னால் வேய்ந்தான். இவன் காலத்தில் பல கற்கோயில்கள் கட்டப்பட்டன. ஏரிகள் தோண்டப் பட்டன. ஏமகர்ப்பம், துலாபார தானம் முதலியவைகளை இவன் செய்தான். நாட்டில் கிராம ஆட்சி சிறப்பாக நடந்தது. வீரசோழன், பண்டித

சாசனம்

1. ஸ்வஸ்தி ஸ்ரீ மதிரை கொண்ட கொப்பரகெசரிபன் மற்கு யாண்டு முப்பத்து மூன்ருவது இவ்வாண்டு தெவ தானங் கிழிரணிய முட்டத்துப்படும் பி—

வற்சலன், குஞ்சர மல்லன் முதலிய இவனுடைய சிறப்புப் பெயர்கள் இவன் பெருமையைப் புலப்படுத்தும்.

இவனுக்குப் பல மனைவியர் இருந்தனர். சேரகுலப் பெண்மணி யான கோக்கிழானடி என்பவளே இவன் பட்டத் தரசியாவாள். இராசாதித்தன் அவள் மகன். இவனுக்கு நான்கு புதல்வரும் இரு மக ளிரும் இருந்தனர். இவன் கி. பி. 953ல் இறந்தான். இவனுக்குப் பின் சோழ நாட்டை ஆண்ட இவன் மகனுன கண்டராதித்தன் கி. பி. 953ல் பட்டத்திற்கு வந்தான்.

குறிப்புரை

1. ஸ்வஸ்தி ஸ்ரீ - மங்களம் உண்டாக; 'நலம் வளர்க' எனினுமாம். மதிரைகொண்ட கொப்பரகெசரி பன்மர்: இத்தொடர் முதலாம் பராந்தக சோழனைக் குறிக்கும். இவன் வெள்ளூர் என்ற இடத்தில் நடந்த போரில் இரண்டாம் இராச சிம்ம பாண்டியனை வென்று இத்தகைய சிறப்புப் பெயரைப் பெற்ருன். பரகேசரி என்னும் சிறப்புப் பெயர் பெற்றவன். இவன் வரலாற்றை இச்சாசனத்தின் முன்னுரைப் பகுதி யில் காண்க.

பிற்காலச் சோழ அரசர்கள் தங்கள் இயற்பெயர்களுக்கு முன் இராசகேசரி, பரகேசரி என்னும் பெயர்களைத் தமக்குள் மாறி மாறிப் புனைந்து வந்தனர். உதாரணமாக, முதலாம் பராந்தகன் தந்தையான ஆதித்தசோழன் இராசகேசரி பட்ட மெய்தியவன். பராந்தகன் பரகே சரி பட்டம் பெற்றவன். இவன் மகன் கண்டராதித்தன் இராசகேசரி பட்டம் பெற்றுள்ளான். இதனுல் இன்ன அரசருக்குப் பின் இன்ன அரசர் பட்ட மெய்தினர் என்பதை நாம் எளிதில் அறிந்து கொள்ள முடிகிறது. இவ்வாறே, பிற்காலத்துப் பாண்டிய மன்னர்களும் மாற வர்மன், சடைய வர்மன் என்றும் பட்டப் பெயர்களை அவர்களுக்குள் மாறி மாறிப் புனைந்து வந்துள்ளனர். இராசகேசரி என்பது, அரசர் களுக்குள் சிங்கம் போன்றவன் என்றும், பரகேசரி என்பது, பகைவர் களுக்குச் சிங்கம் போன்றவன் என்றும் பொருள்படும்.

யாண்டு முப்பத்து மூன்ருவது — ஆட்சியின் 33வது ஆண்டு; சோழ நாட்டை முதலாம் பராந்தகன் கி. பி. 907 முதல் 953 வரை

2. ரம்மதெயம் நரசிங்கமங்கலத்துச் சவையொஞ் சொழப் பொருமானடிக ளதிகாரிகள் சொழநாட்டுப் புறங்கரம் பைனுட் –

3. டு மருதூர் மருதூருடையா னருணிதி கலியனுக்கு ஒட்டிக்குடுத்த பரிசாவது எங்களூர்த் திருவானை மலை நரசிங்கப் பெருமானடிகள் த –

4. முடைய நிலத்தால்ச் சவையொமுக்கு ஆண்டெடுத்து இடக் கடவ ஈழக்காசு பதினெட்டு இக்காசு பதி னெட்டிலும் முன்றத்தொன்று ஈ–

ஆண்டான். எனவே இவன் ஆட்சியின் 33வது ஆண்டு, கி. பி. 940 ஆகும். இவ்வாண்டு: முதற் பராந்தகன் ஆட்சியின் 33வது ஆண்டாகிய கி. பி. 940 ஆம் ஆண்டு. தெவதானம் - கோவிலுக்கு விடப்பட்ட இறையிலி நிலம். கிழிரணிய முட்டத்துப் படும் – கிழக்கு இரணிய முட்டத்திற்கு உட்பட்ட; இரணிய முட்டமென்பது, மதுரையை யடுத்த ஆனைமலைப் பகுதியைச் சேர்ந்த ஒரு சிறு நாடு என்று தெரிகிறது. படும் - உள்ளடங்கும். பிரம்ம தெயம் - பிரமதேயம், பிராமணருக்குத் தானமாகக் கொடுக்கப்பட்ட ஊர்.

2. நரசிங்க மங்கலம்: இது ஆனைமலை நரசிங்கப் பெருமாள் கோவிலுக்குத் தானமாகக் கொடுக்கப்பட்ட இறையிலி நிலமாகிய இரணிய முட்டத்தைச் சேர்ந்தது; பிரமதேயமா யமைந்தது. எனவே, இவ்வூர் அந்தணர் வாழும் இட மென்பது போதரும். சொழப் பெருமா னடிகள் அதிகாரிகள்: சோழப் பெருமான் அடிகள் என்றது, முதலாம் பராந்தக சோழனைக் குறிக்கும். அவனுடைய அரசியல் அதிகாரி, 'சோழப் பெருமா னடிகள் அதிகாரிகள்' எனப்பட்டான்.

3. மருதூருடையான் அருணிதி கலியன்: இவன் முதலாம் பராந் தகன் அரசியல் அதிகாரிகளில் ஒருவன். மருதூரைச் சொந்தமாக வுடையவன். அது சோழ நாட்டின் ஒரு பகுதியான புறங்கரம்பை நாட் டைச் சேர்ந்தது. அருணிதி கலியன் என்பது இவனது இயற்பெயர். ஒட்டிக் குடுத்த – உறுதி செய்து கொடுத்த; பரிசு – சாசனம்; எங்கள் ஊர்: இவ்வாறு நரசிங்கமங்கலத்து ஊர்ச் சபையினர் கூறினர்.

திருவானைமலை நரசிங்கப் பெருமானடிகள்: இதில் 'நரசிங்கப் பெரு மான் அடிகள்' என்றது, நரசிங்க மங்கலத்துக் கோவில் இறைவன் பெயர். அக்கோவில் ஆனைமலையில் உள்ளது.

4. தமுடைய நிலத்தால் – நரசிங்கப் பெருமாள் கோவில் நிலத் திற்குப் பதிவாக; சபையொமுக்கு–நரசிங்க மங்கலத்துச் சபையோராகிய

5. ழக்காசு ஆறு இவ்வாறு ஈழக்காசுக்கும் பலிசையாகச் சவையார் கைய்வழி குடுத்த ஈழக்காசு பதினேன்து பதினஞ்சினாலும் வந்த பலி –

6. சையாவது ஈழக்காசின் வாய்த் திங்கள் காற் புத்தக்க மாக ஒரொ திங்களால் வந்த புத்தக்க முன்றெ முக்கால் முன்றெ முக்காலு ஒராண்டு பங்கிரண்டு தி –

7. ங்களால் வந்த புத்தக்கம் நாற்பத்தைஞ்சு நாற்பத்தைஞ் சினலொரு ஈழக்காசுக்குப் புத்தக்கம் எழரை ஆக ஈழக் காசு ஆறு இவ்வாறு ஈழ –

எமக்கு; ஆண்டெடுத்து இடக் கடவ – ஆண்டுதோறும் இறைக் காசாகக் கொடுக்க வேண்டுவது. ஆண்டெடுத்து – ஆண்டுதோறும். ஈழக்காசு: இஃது சோழர் காலத்து நாணய வகைளில் ஒன்று; இதில் 'ஈழம்' என்ப தற்குப், 'பொன்' எனப்பொருள் கொண்டு, இதனைப் 'பொற்காசு' என்று கூறலாம். இக்காசு பதினெட்டிலும் – இப்பதினெட்டுப் பொற்காசு களில் முன்றத்தொன்று - மூன்றில் ஒரு பகுதி; அஃதாவது, ஆறு ஈழக் காசு என்பது.

5. பலிசை – பொலிசை, வட்டி; சவையார் கைய்வழி குடுத்த – ஊர்ச் சபையார் கையிடத்து முதற் பொருளாகக் கொடுத்த; பதினேன்து– பதினைந்து.

நரசிங்கப்பெருமாள் கோயில் நிலத்திற்கு வரியாக ஊர்ச் சபையா ருக்குக் கொடுக்க வேண்டிய 18 ஈழக்காசில், 6 ஈழக் காசு கோயிலி லிருந்து சபையாரிடம் கொடுக்கப்பட்ட 15 ஈழக்காசுக் குரிய வட்டியி லிருந்து பெறுவதற்குக் கோயில் அதிகாரிகள் ஏற்பாடு செய்தனர்.

6. ஈழக்காசின்வாய் – ஈழக்காசு ஒன்றுக்கு: புத்தக்கம்: இஃது ஒரு பொன் நாணயம் போலும்; அக்கம் – பொன்; புத்தக்கம் – புதிய பொற்காசு. $7\frac{1}{2}$ புத்தக்கம்=1 ஈழக்காசு. ஒரோ திங்களால் – ஒரு திங்க ளுக்கு; திங்கள் – மாதம். ஒராண்டு பந்நிரண்டு திங்களால் வந்த புத்தக்கம் நாற்பத்தைந்து – [ஒரு ஈழக்காசுக்கு ஒரு மாதத்திற்கு வட்டி கால் புத்தக்கமாக, 15 ஈழக்காசுக்கு ஒரு மாதத்திற்கு $3\frac{3}{4}$ புத்தக்கமாய்] 12 மாதங்களுக்கு வட்டி 45 புத்தக்கம்.

7. நாற்பத்தைஞ்சினல் – புத்தக்கம் 45க்கு; ஒரு ஈழக் காசுக்குப் புத்தக்கம் ஏழரை வீதமாக - ஒரு ஈழக்காசுக்கு $7\frac{1}{2}$ புத்தக்கமாக; எனவே, 15 ஈழக்காசுக்கு ஆண்டு வட்டியாக வந்த 45 புத்தக்கம், 6 ஈழக்காசு ஆகும்.

8. க் காசும் இறை நீக்கித் தெவர் சவையார்க்கு இடக் கடவ காசு ௰உ பன்னிரண்டும் நீக்கி அதிகாரிகள் மரு தூருடையான் அருணிதி கலியன் இறை காவலாக காத்த

9. காசினுல் வந்த நிலன் ஊருடையான் குளமான கலிய னெரியும் இக்குளந் தான் வேண்டுமாறு கல்லிக் கரை நீளம் அட்டப்பெறுவதாகவும் இ –

10 க்குளங்கரை உசர அட்டப்பெறுவதாகவும் இக்குளத்

---

8. இறை நீக்கி – வரி தள்ளி; இறை – அரசிறை; தெவர் – நரசிங்கப் பெருமாள் கோயில் இறைவன்; இடக் கடவ – கொடுக்க வேண்டிய; பன்னிரண்டும் நீக்கி – 12 ஈழக்காசையும் தள்ளி; அதிகாரிகள் மருதூருடையான் அருணிதி கலியன் – முதலாம் பராந்தகன் அரசியல் அதிகாரிகளில் ஒருவனும் மருதூருக்குத் தலைவனுமாகிய அருணிதி கலியன் என்பது. இவன் நரசிங்கப் பெருமாள் கோயிலிலிருந்து சபையாருக்குச் செலுத்த வேண்டிய பதினெட்டு ஈழக்காசில் 12க்கு, ஒரு தொகையை மூலப் பொருளாக வைத்து அதன் வருவாயாக வந்த வட்டியின் மூலம் அதனைச் செலுத்தி கோயில் நிலத்தை இறையிலி நிலமாக்கினுன் என்பது. இறைகாவலாக வைத்த காசு – இறைப்பொருளுக்கு மூலப் பொருளாக வைத்த தொகை.

அக்காலத்தில், ஒரு நிலத்தை வாங்கி அதன் வட்டியாகவோ, விளைச்சலாகவோ வரும் வருவாயைக் கொண்டு மற்றொரு நிலத்திற்கு வரி செலுத்துவது வழக்கம் என்பது இதனுல் தெரிகிறது. எனவே, வரி செலுத்துவதற்கு ஏற்படுத்திய மூலப்பொருளை 'இறைகாவல்' என்பர் போலும்.

9. நிலன் – கோயில் நிலம்; அது ஊருடையான் குளமான கலியன் ஏரியாகும். ஊருடையான் குளமான கலியனேரி : ஊருடையான் குளமென்பது, இயற்பெயர்; கோயிலுக்குரிய குளம் என்பது இதன் பொருள். நரசிங்கப் பெருமாள் கோயிலிருந்து ஊர்ச்சபையார்க்குச் செலுத்த வேண்டிய 12 ஈழக்காசுக்கும் அருணிதி கலியன் இறை காவலாக வைத்திருந்த காசைக்கொண்டு இந்தக் குளத்தை வாங்கிக், கோயிலுக்குரிய இறையிலி நிலமாக்கினுன். அதனுல் இது அவன் பெயரால், 'கலியனேரி' என்று பின்னர் அழைக்கப்பட்டது போலும். இக்குளம் – இந்தக் குளத்தை; தான் வேண்டுமாறு – தான் விரும்பியபடி. கல்லி – ஆழமாகத் தோண்டி; கரை நீளம் அட்டப் பெறுவதாகவும்– குளத்தின் கரையை நீளமாக்கிக் கொள்ளக்கடவர்.

10. கரை உசர அட்டப்பெறுவதாகவும் – குளத்தின் கரையை உயரமாகச் செய்து கொள்ளவும்; உசர - உயரமாக. தொக்கப் பெறுவ

தினீர் தான் வெண்டு அளவுங் கொக்கப் பெறுவ தாகவு மிக்குளம் இதின் கீழ் நீர் நில ருனிவே –

11. லியு மருதூருடையா னருணிதி கலியன் விலைக்குக் கொண்டு இக்குளத்தின்கிழ் நீர்நிலனிரு வேலியி னுல் வந்த பொகம் அஞ்ஞாழிக்காலால் நெல்லு ௩௱ கலம்.

12. இவையிற்றின் பாதி ௱௫௰ நெல்லுங்கொண்டு இவர்க்கு மூன்று சந்தியு திருவமிர்து செவதாகவும் நின்ற ௱௫௰ நெல்லுங் கொண்டு திருவமிர்து உ—

13. த்தம அக்கிரமாகத் தெவர் அமிர்து செய்யும் பொழுது

தாகவும் – கொள்ளப் பெறுவதாகவும்; அஃதாவது, நீரை வேண்டிய அளவு எடுத்துக்கொள்ளவும் என்பது. இக்குளம் இதன் கீழ் - இக்குளத்தின் கீழ், இந்தக் குளத்து நீர்ப்பாய்ச்சலில்; 'இந்தக் குளத்திற்குக் கீழ்ப் பக்கம்' என்பாருமுளர். நீர் நிலம் - வயல் நிலம்; இருவேலியும் – இரண்டு வேலி நிலமும்; வேலி என்பது ஒரு நில அளவு: 674 ஏக்கர் அல்லது 2000 குழி அளவினை யுடையது.

11. விலைக்குக்கொண்டு – விலைக்கு வாங்கி; நீர் நிலன் இரு வேலியினுல் வந்த யோகம் - இரண்டு வேலி வயலிடத்தும் வந்த வருவாய்' போகம் - நிலவருமானம். அஞ்ஞாழிக்காலால் – அந்நாள் வழங்கிய மரக்காலால்; கால் - மரக்கால். இதற்கு, 'ஐந்து நாழி கொண்ட மரக்காலால்' என்று பொருள் கொள்வாரு முளர். நெல்லு ௩௱ கலம் – 300 கலம் நெல்; கலமென்பது ஒரு முகத்தலளவை; 12 குறுணி = 1 கலம்.

12. இவையிற்றின் பாதி ௱௫௰ நெல்லும் கொண்டு, - இந்த 300 கலத்தில், 150 கலம் நெல்லையும் வைத்துக்கொண்டு; இவர்க்கு–நரசிங்கப் பெருமாள் கோயில் இறைவற்கு; மூன்று சந்தியும்–காலை, நண்பகல்' மாலை ஆகிய மூன்று பொழுதும்; சந்தி - பொழுது, வேளை; திருவமிர்து- இறைவனுக்குக் கொடுக்கும் நிவேத உணவு செவதாகவும் – செய்வதாகவும், செய்து கொள்ளவும். நின்ற ௱௫௰ நெல்லும் கொண்டு - மீதியாயுள்ள 150 கலம் நெல்லையும் கொண்டு; திருவமிர்து உத்தம அக்கிரமாக- அந்தணர்க்கு கொடுக்கப்படும் நான்கு கவளபிச்சை உணவுத் தானம்; உணவுத் தானம் பிச்சை, அக்கிரம், அந்தகாரம் என்று மூன்று வகைப் படும். ஒரு கவளம் கொடுப்பது பிச்சை; நான்கு கவளம் கொடுப்பது அக்கிரம்; எட்டுக் கவளம் கொடுப்பது அந்தகாரம்.

13. தெவர் - நரசிங்கப் பெருமாள் கோயில் இறைவர்; வேதப் பிராமணர் - வேத மோதும் அந்தணர்; நிசதம் - நாள்தோறும்; ஐய்வர்-

வெதப் பிராமணர் நிசதம் அய்வர் அமிது செய்வதாக வும் வச்சபடி பத்தெட்டுக் குத்தல் ஒருவனு –

14. க்கு அரிசி இரு நாழியுங் கறி முன்றும் தயிர் நாழியும் நெயிரு செவிடும் காய்யிலை இரண்டும் தாலமஞ்சும் வட்டி லெஞ்சும் ஒட்டுட்டி ஒன்று –

15. ம் சட்டுவம் ஒன்று அடுவான் ஞெருவனுக்கு நிசதி நெல்லு அஞ்ஞாழி அறுதிங்க ளொரு புடவை வைச்சு இப்பரிசு இக்கல முட்டுவதாக இவ் –

16. வாட்டை கற்கடக நாயிற்று வெள்ளிக்கிழமை பெற்ற ஆயிலெ யத்திஞன்று சூற்றியக் கிரண வெலைக் குரை கிராணம் பற்றின அன்றுமுதலாக இக்கலம்

ஐந்துபேர்; அமிது செய்தாகவும் – உணவு கொள்ளவும்; வச்சபடி – ஏற்பாடு செய்தபடி; பத்தெட்டு குத்தல் – எட்டு அல்லது பத்துத் தடவை குத்தியது; அதாவது, பல தடவை குத்திய அரிசி என்பது.

14. அரிசி இரு நாழி - இரண்டு நாழி (குத்தல்) அரிசி; நாழி - ஒரு படி; கறி மூன்று – மூன்று வகைக் காய்கறி; தயிச் நாழி –ஒரு படி தயிர்; நெயிரு செவிடு – இரண்டு செவிடு நெய்; செவிடு – $\frac{1}{5}$ ஆழாக்கு அல்லது 360 தானியம். காய் இலை இரண்டும் - காய் இரண்டும் இலை இரண்டும்; காய்–அடை காய், பாக்கு; இலை–வெற்றிலை; தாலம் அஞ்சு–5 உண்கலம்; வட்டில் அஞ்சு - 5 கிண்ணம்; வட்டில்–கிண்ணம்; தட்டு எனினுமாம்: ஒட்டுட்டி ஒன்றும் – ஒரு ஒட்டுட்டியும்; ஒட்டுட்டி – ஒட்டு வட்டில்; தண்ணீர் வைத்தற்குரிய சிறு பாத்திரம் எனினுமாம்.

15. சட்டுவம்- அகப்பை; அடுவான்–சமைப்போன்; நிசதி நெல்லு அஞ்ஞாழி–நாளொன்றுக்கு ஐந்து நாழி நெல்; அறுதிங்க ளொருபுடவை– ஆறு மாதத்திற்கு ஒரு ஆடை; திங்கள்–மாதம்; புடவை-ஆடை; வைச்சு-கொடுத்து; இதனால் திருவமுது சமைப்பவனுக்கு நாளொன்றுக்கு 5 நாழி நெல்லும் ஆறு மாதத்திற்கு ஒரு புடவையும் கூலியாகக் கொடுக்கப்பட்டது என்பது தெரிகிறது. இப்பரிசு இக் கல முட்டுவதாக - இந்தப்படி இந்த 300 கலம் நெல்லால் நிறைவேற்றுவதாக; இவ்வாட்டை – இந்த ஆண்டு.

16. கற் கடக நாயிறு - கர்க்கடக மாதம்; அஃதாவது, ஆடி மாதம். இந்த மாதத்தில் ஞாயிறு கர்க்கடக ராசியில் நிற்கும்; வெள்ளிக் கிழமை பெற்ற ஆயிலெயத்தி ஞன்று – வெள்ளிக்கிழமையோடு கூடிய ஆயிலிய நட்சத்திரத் தன்று; ஆயிலியம்– ஆயிலிய நாள், 9வது நாள். சூற்றியக் கிரண வெலை – சூரிய கிரகண நேரம்; வேலை – வேளை, நேரம்; குரை கிரணம் பற்றிய அன்று முதலாக – பூரண கிரகணம்

17. இப் பரிசெய் ஊட்டுவதாக நின்று சிறிகாறியமா ராய்கின்ற திருவாய்ப்பாடி நாராயணனும் இவ்வூர்ச் சவையாரும் இப்பரிசெய் அக்கிரமுட்டாமெய் சந்திரா-
18. தித்தவலும் ஊட்டுவிப்பொ மானெம் திருவானைமலை நரசிங்கப் பெருமானடிகளுக்கு சிரிகாரிய மாராய் வாரும் சவயொமும் இதிற் றிரம்பினேனமைச் சவைய்-
19. யாரும் சிரிகாற்றிய மாராய்வானுந் திறமினான் நிசதி இறுகாசு அன்ருழ் கொவினுக்குத் தண்டம்பட்டு அக்காசு கொண்டு தெவர்க்குத் திருவிளக்கு எரிவதாக வும் சவையார்

பொருந்திய அந்த நேர முதல். 'குறை கிராணம்' என்பது, 'நிறை கிராணம்' என்றிருத்தல் வேண்டும். கிராணம்—கிரகணம். இக் கலம்—இந்த 300 கலம் நெல்லால்.

17. இப் பரிசெய் ஊட்டுவதாக நின்று – இந்த முறையே நடத்துவதாக ஏற்று நின்று; பரிசெய் – பரிசு, தன்மை; சிறி காறிய மாராய் கின்ற - கோவில் காரியங்களை மேல்பார்வை செய்கின்ற; சிறிகாறியம்—ஸ்ரீ காரியம், கோயில் வைபவங்கள்; திருவாய்ப்பாடி நாராயணன் – திருவாய்ப் பாடி என்னும் ஊரினனாகிய நாராயணன். இவன் நரசிங்கப் பெருமாள் கோயில் காரியங்களை மேற்பார்வை செய்வோன். இவ்வூர் சபையார் – நரசிங்க மங்கலம் ஊர்ச் சபையினர். அக்கிர முட்டாமெய்—உணவுத் தானம் குறைவுபடாமல். அக்கிரம் - உணவுத் தானம்; முன்னரும் 'உத்தம அக்கிரமாக' என வந்திருத்தல் காண்க. சந்திராதித்த வலும் – சந்திராதித்த வரையும், சந்திர சூரியர் உள்ள அளவும்.

18. ஊட்டுவிப்பொமானெம் – நிறைவேற்றுவோம்; திருவானை மலை நரசிங்கப் பெருமானடிகள்—ஆனைமலை நரசிங்கப் பெருமாள் கோயில் இறைவன். சிரிகாரிய மாராய்வாரும் - ஸ்ரீ காரியம் ஆராய்வாரும், கோயில் காரியங்களை மேல் பார்வை செய்வோருள்ளும்; சவயொமும் - நரசிங்கமங்கலத்து ஊர்ச்சபையாராகிய எமக்குள்ளும்; இதில் திரம்பினேமை – இப்பணி செய்வதில் தவறியவைகளை; சவைய்யாலும் – சபையாரிலும்.

19. சிரிகாற்றிய மாராய் வானும் - கோயில் காரியத்தை மேற்பார்வை செய்வானிலும். திறமினான் - செய்யத் தவறியவன்; நிசதி - நாள் தோறும்; இறு காசு - இரண்டு காசு; காசு - பொற்காசு. அன்ருழ் கொவினுக்கு— அப்பொழுது ஆட்சி புரிகின்ற அரசனுக்கு; தண்டம் பட்டு - அபராதம் கொடுத்து; தண்டம் - அபராதம்; தெவர்க்கு -

20. த்திரம்பில் ஆறு காசு தண்டப்படுவதாகவும் ஒட்டிக் குடுத்தொம் சவையொமும் சிரிக் காசிரிய மாராய் வானும் மருதூருடையா னருணிதி கலியனுக்கு இத் தண்ட மிறு –

21. த்து மித் தன்மம் முட்டாமெ அய்வரையும் சந்தி ராதிச்சர் உள்ளனவும் ஊட்டுவிப் பொமாஞெஞ் சவைய் யும் சிரி காரியம் ஆராயும் வயிஷ்ணவரும் இதன் –

22. மம் ரக்ஷித்தான் ....

நரசிங்கப் பெருமாள் கோயில் இறைவனுக்கு; திருவிளக்கு - நந்தா விளக்கு; எரிவதாகவும்–ஏற்றி வைப்போமாகவும்; அருணிதி கலியன் தந்த 300 கலம் நெல்லால் நரசிங்கப் பெருமாள் கோயில் இறைவனுக்கும், வேதப் பிராமணர் ஐவருக்கும் நாள்தோறும் மூன்று வேளை திருவமுது படைக்கத் தவறியவர்களில் ஸ்ரீகாரியம் ஆராய்பவராயினும், சபை உறுப் பினராயினும், அன்று ஆட்சி புரியும் அரசனுக்கு இரண்டு பொற்காசு அபராதம் கொடுக்க வேண்டுமென்பதும், அந்தக் காசைக்கொண்டு கோ விலுக்குத் திருவிளக்கு வைத்தல் வேண்டும் என்பதுமாம்.

20. சவையார் திறம்பில் – ஊர்ச் சபையார் செய்யத் தவறினல்; ஆறுகாசு தண்டப்படுவதாகவும் –சபையார் 6 பொற்காசு அபராதமாகச் செலுத்தக் கடவர்; ஒட்டிக் குடுத்தோம் - உறுதி செய்து கொடுத்தோம். இத்தண்டம் இறுத்து – இந்த அபராதம் கொடுத்து;

21. இத்தன்மம் முட்டாமெ – இந்தத் தானம் தடைபடாமல்; தன்மம் – தருமம், தானம்; முட்டுதல் - தடைபடுதல் அய்வரையும் - வேதப் பிராமணர் ஐந்து பேரையும்; சந்திராதிச்சர் உள்ளளவும் -சந்திர சூரியர் உள்ள காலம் அளவும்; சந்திரன் – திங்கள்; சூரியன் – ஞாயிறு; சந்திர + ஆதிச்சர் – சந்திராதிச்சர்; ஆதிச்சர் – ஆதித்தர், ஞாயிறு. ஊட்டுவிப்போமாஞேம் – நிறைவேற்றுவோம்; சவைய்யும் - ஊர்ச் சபையினரும்; சிரிகாரியம் ஆராயும் வயிஷ்ணவரும் - கோயில் காரியங் களை மேற் பார்வை செய்யும் திருமால் அடியாரும்.

22. இ தன்மம் – இந்தத் தருமத்தை; ரக்ஷித்தான் காத்தான்; இரட்சித்தல் - பாதுகாத்தல்.

* இதற்கு மேலுள்ள சில சொற்கள் இச் சாசனத்தில் விடப் பட்டுள்ளன.

பயிற்சி விஞக்கள்

1. நரசிங்க மங்கலத்துச் சபையோர் சாசனம் எக்காலத்து? அதற்குப் பாட நூலில் வழங்கும் பெயர் யாது?

2. தமிழ் மொழியில் வட்டெழுத்தில் அமைந்த சாசனம் எது எவ்விடத்தில் காணப்படுகிறது? அதில் கூறப்படும் செய்திகள் யாவை?

3. முதலாம் பராந்தகனுக்குச் சாசனத்தில் வழங்கும் பெயர் யாது? அதன் வரலாறு தருக.

4. பரகேசரி, தேவதானம், பிரமதேயம், சிரிகாரியம், இறை காவல், கலியனேரி, உத்தம அக்கிரம், வேதப் பிராமணர், பத்தெட்டுக் குத்தல், கற்கடக நாயிறு, அன்றுள்கோ, சந்திராதிச்சர் - இவற்றை விளக்குக.

5. பொருள் தருக:— ஒட்டி குடுத்தல், பரிசு, ஆண்டெடுத்து, ஈழக்காசு, பலிசை, புத்தக்கம், இறை,அட்டப்பெறுதல், நீர் நிலம்,வேலி, போகம், கலம், சந்தி, நிசதம், கறி, செவிடு, தாலம், ஒட்டுட்டி, சட்டுவம், தண்டம், தன்மம்.

6. நரசிங்கமங்கலம் எங்குள்ளது? அல்லது கீழரணிய முட்டத்துப் படும் பிரமதேயம் என்ன பெயர் பெறும்? அங்கு எழுந்தருளிய இறைவன் பெயர் யாது?

7. மருதூருடையான் அருணிதி கலியன் யார்? அவனுடைய ஊர், நாடு முதலியன எவை?

8. முதலாம் பராந்தகன் சாசனத்தில் கூறப்படும் செய்திகள் யாவை? அல்லது நரசிங்கமங்கலம் சபையோர் அருணிதி கலியனுக்குக் கொடுத்த உறுதி மொழிகள் யாவை?

9. நரசிங்கப் பெருமான் கோயில் தேவர், சபையாருக்குக் கொடுக்க வேண்டும் 18 ஈழக்காசும் எவ்வாறு கொடுக்கப்பட்டன?

10. அருணிதி கலியன் செய்த தானங்கள் எவை?

11. வேதப் பிராமணர் அமுது செய்வதற்கு ஒருவருக்கு ஒரு நாளைக்கு எது எது கொடுக்கப்பட்டன? அத் தானம் தொடங்கிய நாளும் நேரமும் எங்ஙனம் குறிக்கப்பட்டுள்ளன? திருவமுது சமைப்பவனுக்குக் கொடுக்கப்பட்ட சம்பளம் என்ன?

12. முதலாம் பராந்தகன் சாசனத்தில் குறித்த தானம் முட்டுப் படில் யார் யாருக்கு என்னென்ன தண்டங்கள் கூறப்பட்டுள்ளன? விளக்கி எழுதுக.

13. திருவாய்ப்பாடி நாராயணன் யார்? அல்லது சிரி காரியம் ஆராய்கின்ற வயிஷ்ணவன் பெயர் என்ன?

14. முதலாம் பராந்தகன் சாசனத்திலிருந்து அறியப்படும் அளவைப் பெயர், நாணயங்களின் பெயர், வட்டி வகை, தண்ட வகை முதலியவைகளைக் குறிப்பிடுக.

4. பார்த்திவேந்திராதி வர்மன் சாசனம் *

முன்னுரை

பார்த்திவேந்திராதி வர்மன் சாசனம் என்பது, பார்த்தி வேந்திராதி வர்மன் காலத்துச் சாசனம் என்று பொருள்படும். இஃது, சுந்தரசோழன் என்னும் இரண்டாவதுபராந்தகன் படைத் தலைவனும், அவன் ஆட்சிக்குட்பட்டுத் தொண்டை நாட்டை ஆண்டு வந்த சிற்றரசனுமான பார்த்திவேந்திரவர்மன் காலத்தில், அவன் ஆட்சியின் மூன்றாவது ஆண்டு முப்பத்தொன்பதாம் நாளில் ஏற்பட்டது. இது திருப்பாற்கடல் திருக்கரபுரத்தீசுவரன் கோயில் நடுவிடத்துக் கருப்ப கிருகத்தின் வடக்குச் சுவரில் காணப்படுகிறது. தமிழ்மொழியில் கிரந்த எழுத்துக்கள் கலந்து எழுதப் பெற்றது. பதினேழு வரிகளையுடையது. இறுதி மூன்று வரிகள் தெளிவாக வாசிக்கக் கூடாதபடி பெரிதும் சிதைந்து காணப்படுகின்றன.

இச் சாசனத்தில், காவேரிப்பாக்கமென்னும் அவனி நாராயண சதுர்வேதி மங்கலம் ஊர்ச்சபையோரிடத்து, அவ்வூர் கோயில் பாதுகாப்பாளரில் ஒருவரான சிவப் பிராமணனை மாகண்ட நன்பெருமாள் என்பார், திருக்கரபுரம் இறைவன் அர்ச்சனா போகத்திற்குரிய தோட்டமும் வயலும் ஆற்று மணல் நிரம்பிப் பயனற்றுக் கிடக்கின்றன என்று விண்ணப்பஞ் செய்ய, சபையோர் அதனைக் கழனி வாரியத்தாருக்குத் தெரியப்படுத்தி

---

* S. I. I., Vol. III, Part III, No. 156, pp. 327–330.

[1] இவன் அரிஞ்சயசோழன் மகன். முதலாம் பராந்தகன் இவன் பாட்டன். அவன் பெயரே இவனுக்கும் இடப்பட்டதால் இவன் இரண்டாம் பராந்தக சோழன் என்று அழைக்கப் பட்டான். சுந்தர சோழன் என்பது இவனுக்கு உண்டான சிறப்புப் பெயர். முதலாம் பராந்தகனுக்குப் பின், அவனது இரண்டாவது மகனான கண்டராதித்தனும் (கி. பி. 950—957), அவனுக்குப் பின் மூன்றாவது மகனான அரிஞ்சயனும் (கி. பி. 956—957) சோழநாட்டை ஆண்டனர். அரிஞ்சயனுக்குப் பின், சுந்தர சோழன் கி. பி. 957 முதல் 970 வரை ஆண்டான்.

இவன் தன் பாட்டன் இழந்த பாண்டிய நாட்டை, மீண்டும் கைப்பற்ற எண்ணி இரண்டாம் இராச சிம்ம பாண்டியன் மகனான வீர பாண்டியனோடு போர் செய்து, அவனைச் சுரம் புகச் செய்தான். அதனால் இவன், 'மதுரை கொண்ட இராசகேசரி வர்மன்' என்றும், 'பாண்டியனைச் சுரம் இறக்கின பெருமான்' என்றும் அழைக்கப்பட்டான். ஆயினும் இவன் வீரபாண்டியனுக்கு உதவி புரிந்த இலங்கை வேந்தனாகிய நான்

அந்நிலத்தோடு ஒருவருக்கும் சொந்தமல்லாத புறம்போக்கு நிலம் சிலவற்றையும் சேர்த்து 1400 குழி நிலமாக்கி, கல் நட்டு, சிலாலேகை செய்து கொடுத்து, அந்நிலத்து வருவாயிலிருந்து திருக்கரபுரத்துப் பெருமானடிகளுக்கு நாள்தோறும் இருநாழி அரிசியால் ஒருவேளை திருவமுது படைத்தும், மூன்று வேளையும் ஒரு விளக்கு எடுத்தும் வழிபாடு செய்யுமாறு பணித்தனர் என்ற செய்தி கூறப்படுகிறது. எனவே, இச் சாசனத்தை அவனி நாராயண சதுர்வேதி மங்கலத்துச் சபையார் சாசனம் என்றும் நாம் கூறலாம்.

இச் சாசனத்தில், அக்காலத்தில் கிராம ஆட்சி எங்ஙனம் நடைபெற்ற தென்பதையும், நாட்டிலுள்ள புறம்போக்கு நிலங்களை கிராம அதிகாரிகள் எங்ஙனம் பயன்படச் செய்தனர் என்பதையும் அறிந்து கொள்ளுகின்றோம்.

சுந்தர சோழன் சோழ நாட்டை கி. பி. 957 முதல் 970 வரை ஆண்டான். அவன் ஆட்சியின் காலமே, அவன் ஆட்சிக் குட்பட்ட பார்த்திவேந்திர வர்மன் காலமு மாகும். இச் சாசனம் பார்த்திவேந்திர வர்மன் ஆட்சியின் மூன்றாவது ஆண்டில் ஏற்பட்டதெனவே, இதன் காலம் கி. பி. 960ஆம் ஆண்டு என்னலாம்.

காம் மகிழ்ந்தனோடு போர் செய்து தோல்வியுற்றான். அது கேட்ட வீரபாண்டியன் மீண்டும் மதுரைக்கு வந்து முடி சூடிக் கொண்டான். அதனால் சுந்தர சோழன் தன் முதல் மகனான ஆதித்த கரிகாலனோடு கொடும்பாளூர் வேள் பூதி விக்கிரம கேசரியையும், தன் ஆட்சியின் கீழ் தொண்டை நாட்டை ஆண்ட பார்த்திப வேந்த வர்மனையும் அனுப்பி வீர பாண்டியனை எதிர்த்தான். அப் போரில் வீரபாண்டியன் தலை துணிக் கப்பட்டது. போருக்குச் சென்ற மூவரும், 'வீரபாண்டியனைத் தலை கொண்ட கோப்பர கேசரி வர்மர்' என்ற பட்டப் பெயரைச் சூடிக் கொண் டனர். ஆயினும் சுந்தர சோழன் காலத்தில், பாண்டிய நாடு இவன் ஆட்சியின் கீழ் வரவில்லை. பிற்காலத்தில் இவன் இராஷ்டிரகூடர் களுடன் போர் செய்து தொண்டை நாட்டையும் திருமுனைப்பாடி நாட் டையும் தன் ஆட்சிக்குட் படுத்தினான்.

சுந்தரசோழன் பழையாறை என்னும் நகரில் இருந்து ஆட்சி புரிந் தான். இவன் சிறந்த சிவ பத்தி யுள்ளவன். தமிழ்ப் புலவர்களை ஆத ரித்துள்ளமை இவனைப் பற்றிய இரு பாடல்கள் வீரசோழிய வுரையில் காணப்படுவதால் தெரிகிறது. இவனுக்கு இரு மனைவியரும், இரு புதல்வரும், ஒரு புதல்வியும் இருந்தனர். வீரபாண்டியன் தலையைக் கொண்ட ஆதித்த கரிகாலனே இவன் முதல் மகன். இரண்டாவது

சாசனம்

1. ஸ்வஸ்தி ஸ்ரீ கொ பார்த்திவெந்திராதி பந்மர்க்கு யாண்டு முன்ருவது நாள் முப்பத்தொன்பதாவது படுவூர் கொட்டத்து காவிரி பாக்கமாகிய அமநி நாராயண சதுர்வேதி மங்கலத்துள் இவ்வாட்டை ஸம்வத்சர வாரிய —

மகன் பெயர் அருண்மொழி தேவன். அவனே பிற்காலத்தில் தமிழ் நாட்டில் புகழ்பெற்ற முதலாம் இராசராசன். இவன் தன் ஒரே மகள் குந்தவையை கீழைச் சாளுக்கிய மன்னஞன வல்லவரையன் வந்திய தேவனுக்கு மணஞ் செய்து கொடுத்தான்.

சுந்தர சோழன் முதல் மகஞன ஆதித்த சோழனைச் சில அரசிய லதிகாரிகள் வஞ்சகமாகக் கொன்று விட்டனர். அதன் வருத்தத்தால், இவன் கி பி. 969ல் காஞ்சிபுரத்திலுள்ள பொன்மாளிகையில் இறந்தான். இவனுடன் இவன் முதல் மனைவியான வானவன் மாதேவி உடன் கட்டை ஏறினுள். இவர்கள் இருவருக்கும், பிற்காலத்தில் குந்தவையார் தஞ்சையில் முதலாம் இராசராசன் கட்டிய இராசராசேசுவரம் என்னும் பெரிய கோயிலில் இரு பிரதிமங்களைச் செய்து வைத்து, அவற்றின் வழிபாட்டிற்கு நிறைய செல்வமும் அளித்தாள். அன்றியும், சுந்தர சோழன் பெயரால் தஞ்சையில் ஒரு மருத்துவ நிலயத்தை ஏற்படுத்தி, அதற்குப் பல நிலங்களையும் தானம் செய்தாள். சுந்தர சோழனுக்குப் பின், கண்டராதித்தன் மகஞன உத்தம சோழன் கி. பி. 970 முதல் 985 வரை சோழநாட்டை ஆண்டான்.

குறிப்புரை

1. **ஸ்வஸ்தி ஸ்ரீ** — மங்களம் உண்டாவதாக; 'நலம் வளர்க' எனினுமாம்.

கொ பார்த்திவெந்திராதி பந்மர்: பார்த்திவேந்திராதி பன்மர் என்னும் அரசன் என்பது. இவன் சுந்தர சோழன் என்னும் இரண்டாவது பராந்தக சோழன் படைத் தலைவர்களில் ஒருவன். அவன் ஆட்சியின் கீழ் தொண்டை நாட்டை ஆண்டு வந்தான். எனவே அவனுடைய ஆட்சியின் காலமாகிய கி. பி. 957 முதல் 970 வரை, இவனும் ஆட்சிபுரிந்தான் என்னலாம். இவனும், சுந்தரசோழன் முதற் புதல்வஞன ஆதித்த கரிகாலனும், கொடும்பாளூர் வேள் பூதி விக்கிரம கேசரியும் ஆகிய மூவரும் கி. பி 969ல், பாண்டிய நாட்டின்மீது படை எடுத்துச் சென்று, வீரபாண்டியனேடு போர் செய்தனர். அப்போரில், ஆதித்த கரிகாலன் வீரபாண்டியன் தலையைக் கொய்து,

2. பெருமக்களும் தொட்ட வாரிய பெருமக்களும் எரி வாரிய பெருமக்களும் கழனி வாரிய பெருமக்களும் ஸ்ரீ வடவிர நாரண பெருமக்களும் பஞ்சவார வாரிய பெருமக்களும் கணக்கு வாரிய பெருமக்களும் கலிங்கு வாரிய பெரும-

---

'வீரபாண்டியனைத் தலை கொண்ட கோப்பர கேசரி' என்னும் சிறப்பைப் பெற்றான். அவ்வீரச் செயலை அவனுடன் சென்ற பார்த்திவேந்திராதி பன்மனும், வேள் பூதி விக்கிரமகேசரியும் தாங்கள் செய்ததாகத் தங்கள் கல்வெட்டுக்களிலும் கூறிக் கொண்டனர். பார்த்திவேந்திராதி பன்மன் கல்வெட்டுக்கள் தென்னாற்காடு, வடஆற்காடு, செங்கல்பட்டு மாவட்டம் முதலிய இடங்களில் காணப்படுகின்றன.

யாண்டு மூன்றுவது நாள் முப்பத்தொன்பதாவது: ஆட்சி ஆண்டு மூன்றில் 39வது நாளில்; யாண்டு – ஆண்டு; நாள் – தேதி. இதனால் அக்காலத்தில் நாள் குறித்தற்கு ஆண்டு ஒன்றையே கூறுவதும், ஆண்டும் நாளும் கூறுவதும் முறையே பல்லவர் சாசனங்களாலும், இச்சாசனத்தாலும் காண்கிறோம். திங்கள் முதலியவற்றைக் குறிப்பிடுவதும் சில சாசனங்களில் காணப்படுகிறது.

படுவூர் கோட்டம்: இது இப்பொழுது செங்கல்பட்டு மாவட்டம் என்று வழங்குகிறது. அக்காலத்தில் தொண்டைமண்டலம் 24 கோட்டங்களாகப் பிரிக்கப்பட்டிருந்தது. அவைகளில் படுவூர் கோட்டம் ஒன்று. மீயாறு நாடு, காரை நாடு முதலியவை இக்கோட்டத்தைச் சேர்ந்தவை. படுவூர் கோட்டம், வடஆற்காடு மாவட்டத்தைச் சேர்ந்த தென்று கூறுவாரு முளர்.

காவிரி பாக்கமாகிய அமனி நாராயண சதுர்வேதி மங்கலம்: காவிரி பாக்கம் என்பது படுவூர் கோட்டத்திலுள்ளதோர் ஊர். இதன் மற்றொரு பெயர் '**அவனி நாராயண சதுர்வேதி மங்கலம்**' என்பது. அவனி நாராயணன் என்பது விஜயநந்தி விக்கிரமவர்மனுக்குரிய சிறப்புப் பெயர்களில் ஒன்று. சதுர்வேதி மங்கலம் என்பதால், இது அந்தணர் வாழும் ஊர் என்பது வெளிப்படை. **இவ்வாட்டை** – இந்த ஆண்டிற்குரிய; **சம் வத்சர வாரிய பெருமக்கள்:** ஆண்டுதோறும் தெரிந்தெடுக்கப்பட்ட கிராம நிர்வாக சபை; நியாயம் விசாரித்து தீர்ப்பு கூறுவது இச்சபையினர் வேலை. சம்வத்சரம் – ஆண்டு; வாரிய பெருமக்கள் – ஊராளும் சபையோர்; இங்கு வாரியமென்பது ஊர் மகா சபைக்கு உட்பட்ட சிறுசபையைக் குறிக்கும்.

2. **தொட்டவாரிய பெருமக்கள்** – தோட்டக்கால்களைக் கவனிக்கும் குழுவினர்; தோட்டவாரி – நிலங்களைப் பற்றிய எல்லாவற்றையும் கண்காணிப்பது. **ஏரிவாரிய பெருமக்கள்** – ஏரி குளங்களை மேற்

3. க்களும் தடிவழி வாரிய பெருமக்களும் பட்டர்களும் விஸிட்டர்களும் உள்ளிட்ட மஹாசபையும் ஊராள் கிந்ற பல்லவன் ப்ரஹமாதரயனும் கண்காணி அரும்பா கிழானும் இவூர் பெரிய தளி அபிஷெக மண்டபத்தெ

4. கூடி இருக்க இத் தானம் முடைய சிவப் பிராம்மணன் மாகண்ட நன்பெருமாள் திருக்கரபுரத்து பெருமான்

பார்வை செய்யும் குழுவினர். ஏரிவாரியம் — நீர்நிலைகளைப் பாது காத்துப் பயன்படச் செய்வது. கழநி வாரிய பெருமக்கள் — வயல் நிலங் களைக் கண்காணிக்கும் குழுவினர்; கழநி—வயல்; ஸ்ரீ வடவிர நாரண பெரு மக்கள் — புறஞ்சேரியைக் கண்காணிப்போர்; பஞ்சவாரிய பெருமக்கள் — அரசனுக்குக் குடிமக்கள் செலுத்தவேண்டிய நிலவரியையும் பிற வரிகளை யும் வாங்கி அரசாங்கப் பொருளகத்திற்கு அனுப்புவோர். கணக்கு வாரிய பெருமக்கள் — வரவு செலவு கணக்குகளை மேற்பார்வையிடும் குழுவினர்; கணக்கு — வரவு செலவு கணக்கு; கலிங்குவாரிய பெரு மக்கள் — ஏரியில் கட்டப்படும் மதகு, அணைகள் முதலியவற்றைக் கவனிக்கும் குழுவினர்; கலிங்கு - மதகு, அணை.

தடிவழிவாரிய பெருமக்கள் — வயல்களுக்கிடையே செல்லும் சிறு வழிகளை மேற்பார்வை செய்வோர்; தடிவழி - தடியளவாகவுள்ள வழி, வயல் வரம்பு. பட்டர்கள் — கோயில் பூசகர்; விஸிட்டர்கள் — கல்வி முதலியவற்றால் சிறந்த பெரியோர்; உள்ளிட்ட—அடங்கிய; மஹா சபை— ஊர்ச் சபையோர்; ஊராள்கிந்ற பல்லவன் ப்ரஹமாதரயன் — ஊர் அதிகாரியான பல்லவன் பிரமாதரயன்; இவன் காவிரிப் பாக்கமாகிய அவனிநாராயண சதுர்வேதி மங்கலம் என்னும் ஊர் அதிகாரி. கண் காணி அரும்பா கிழான் — பயிர் வகைகளை மேற்பார்வை செய்வோனாகிய அரும்பா கிழான். இவன் காவேரி பாக்கம் கிராமத்தில் விளையும் தானியங்களை அளந்து கணக்குப் பார்க்கும் ஒரு கிராம அதிகாரி; கண் காணி — மேற் பார்வையாளன்; இவனை இக்காலத்துக் கிராமக் கணக் கருக்கு ஒப்பிடலாம்.

இவ்வூர் — காவிரிபாக்கம் என்னும் இந்த ஊரிலுள்ள; பெரிய தளி — பெரிய கோவில்; தளி—கோவில்; அபிஷேக மண்டபம் - விழாக் காலங்களில் கோவில் மூர்த்தியை வைத்து திருமஞ்சன மாட்டுதற்கு ஏற்பட்ட ஒரு கட்டடம்; அது கல்லால் கட்டப்பட்டிருக்கும். ஊர்ச் சபையோர் இதில் கூடியிருந்து பொதுவான காரியங்களைப் பேசி முடிவு செய்வர்.

4. இத்தானம்முடைய — இந்தக் கோவிலிலுள்ள; தானம் — ஸ்தானம், கோவில்; சிவப்பிராம்மணன் மாகண்ட நன் பெருமான் - சைவ

அடிக்கு அர்ச்சனுபொகமான தொட்டமும் புலமும் ஆறு உடைத்து மணல் இட்டு கிடந்திதென்று விண்ணப்பம் செய

5. ஸபெயாரும் இவ்வாட்டை கழநி வாரிய பெருமக்கள் ளெ இத் திருகரபுரத்து பெருமான் னடிகள் அர்ச்சனு பொகம்மான பூமி மணல் இட்டு கெட்டு கிடந்த பூமி யொடு இந் நிலம் கழநி கொல்லால் ஆயிரத்து நாநூறு குழி

6. ஊர் மஞ்சிக்கமாந பூமி நொக்கி கல் நட்டு சிலாலெ கைய் செய்து கொள்க என்று சபெவெ திருமுகமருளி செய்த திருமுகத்தின்படி கழநி வாரிய பெருமக்களொம் திருகரபுரத்து பெருமான் அடிகளுக்கு அர்ச்சனு—

அர்த்தணனுகிய மாகண்ட நன்பெருமாள் என்போன். மாகண்ட நன் பெருமாள் என்பது, இயற்பெயர். திருக்கரபுரத்து பெருமான் அடிக்கு — திருக்கரபுரம் இறைவனுக்கு; பெருமான் அடிகள் — இறைவன், சுவாமி; அர்ச்சனு போகம் — கோயில் அர்ச்சகர்களுக்கு விடப்பட்ட மானியம்; தொட்டமும் புலமும் — தோட்டமும் வயலும்; புலம் — வயல் நிலம்; மணல் இட்டு-மணல்மூடி; கிடந்திதென்று-கிடந்ததென்று; விண்ணப்பஞ் செய்ய - சபையோர்க்குச் சொல்ல.

ஸபெயாரும் — ஊர்ச் சபையாரும்; இவ்வாட்டை — இந்த ஆண்டிற்குரிய; பூமி — நிலம்; மணல் இட்டு — மணல் நிரம்பி; இந்நிலம் — இப்பொழுது தரப்படும் நிலம்; அவை கீழே கூறப்படுகின்றன. கழநி கொல்லால் — கழநிக் கோல் அளவால்; கழநிக் கோல் — வயல் நிலத்தை அளக்கும் அளவுகோல்.

ஆயிரத்து நாநூறு குழி — 1400 குழி நிலம்; இவை முன்னர் கோயில் அர்ச்சனு போகமாகக் கொடுக்கப்பட்டு ஆற்று மணலால் நிரம்பி பயனற்றுப் போன நிலத்தோடு புதிதாகக் கொடுக்கப்பட்ட நிலத்தையும் குறிக்கும். குழி என்பது, ஒரு நில அளவு; அதனை ஒரு சதுர அடி என்றும், பன்னீரடி சதுரக்குழி என்றும், 144 சதுர அடி முதல் 576 சதுர அடிவரையுமென்றும் வெவ்வேறு விதமாகக் கூறுவர். ஆனுல் சாதாரணமாக ஒரு குழி என்பது, 33 அங்குல நீலமுள்ள தச்சுமுழக் கோலால் அளந்த சதுரமான நில அளவைக் குறிக்கும்.

6. ஊர் மஞ்சிக்கமான பூமி நொக்கி — ஊருக்குப் புறம்போக்காக வுள்ள தரிசு நிலத்தை அளந்து; மஞ்சிக்கம் — ஊர்ப் புறத்தே வரியின்றிப் புறம்போக்காகக் கிடக்கும் தரிசு நிலம். பூமி — நிலம்; நோக்கி —

7. பொகம் செய்வதாந பூமி இவ்வூர் பிடாகை ஒச்செரி வடகழனி மஹாத வாய்க்கால் தெற்கு ஊர் மஞ்சிக்கம் ஆய் வரிசிலத்து கிடந்த பூமிக்கு கீழ்பாற் கெல்லை மாங் காட்டுச் சொமாசி பூமிக்கு

8. மெர்கும் தென்பார்க் கெல்லை ஊர் மஞ்சிக்கமாய் கிடந்த மெட்டுக்கு வடக்கும் மெல்பார்க் கெல்லை திருபன்றி ஸ்வரத்து திருமுலட்டானத்து பெருமான் னடிகள் உதமாதம்பட்டிக்கு கிழக்கும் வடபாற்கெல்லை மா –

அளந்து பார்த்து; கல் நட்டு – எல்லைக் கற்களை நட்டுவித்து; சிலா லெகைய் செய்து கொள்க – கல்லில் வெட்டிக் கொள்க; சிலா லேகை – கல்வெட்டு; திருமுகமருளி – கட்டளையிட்டு; திருமுகம்–கட்டளை; சாச னம் எனினுமாம்; அர்ச்சநு பொகம் செய்வதாந பூமி – அர்ச்சனு போக மாகச் செய்து கொடுத்த நிலமாவது.

7. இவ்வூர் பிடாகை – இந்த ஊரிலுள்ள சேரி; அது இங்கு ஒச்சேரி என்னும் சிற்றூராகும். பிடாகை – ஓர் ஊரைச் சேர்ந்த மற்றொரு சிற்றூர்; இதனை உட்கிடையூர் என்பர். 'ஒச்செரி' என்பது, 'உவச்சர்சேரி' என்றிருந்தல் வேண்டும் போலும் ஒச்செரி வட கழனி மஹாத வாய்க்கால் – ஒச்சேரி கிராமத்தைச் சேர்ந்த வடக்குப் புறத்து வயலுக்குரிய மஹாத வாய்க்கால்; ஊர் மஞ்சிக்கமாய் – ஊருக்குப் புறத்தே தரிசாக.

வரிசிலத்து கிடந்த பூமி–வரியின்றிக் கிடந்த நிலம்; வரி சிலத்து என்பது, வரி செத்து என்று இருத்தல் வேண்டும் போலும்; வரி செத்து – வரியின்றி.

திருக்கரபுரத்துப் பெருமனடிகளுக்கு அர்ச்சனு போகமாகக் கொடுக்கப்பட்ட நிலங்களுள், காவிரி பாக்கமாகிய அவனி நாராயண சதுர்வேதிமங்கலத்துப் புறஞ்சேரியாய் இருந்த ஒச்சேரி என்னும் சிற்றூரை யடுத்த வடக்கு வயல்களுக்குரிய மகாத வாய்க்காலுக்கு தெற்கே தரிசாக, வரியின்றிக் கிடந்த நிலம் ஒன்று. அது 400 குழி அளவுள்ளது. கிழக்கில் மாங்காட்டு சோமாசி நிலமும், தெற்கில் ஊர்ப் புறம்போக்காய்க் கிடந்த மேட்டு நிலமும், மேற்கில் திருப்பன்றீசுவரம் திரு மூலட்டானம் இறைவனுக்குரிய உதமாடம் பட்டியும் அதற்கு எல்லைகளாக அமைந்திருந்தன.

கிழ்பாற்கெல்லை – கீழ்பால் எல்லை; கிழக்கு எல்லை. மாங்காட்டு சோமாசி பூமி – மாங்காடு என்னும் ஊர் சோமாசி என்பவன் நிலம்; மெர்கும் – மேற்கும்.

8. தென்பார்க்கெல்லை – தென்பால் எல்லை; ஊர் மஞ்சிக்கமாய் – ஊருக்குப் புறம் போக்காய்; மெட்டுக்கு – மேட்டு நிலத்திற்கு; மேல்

9. த வாய்க்காலுக்கு தெற்கும் இங்நால்பால்கெல்லையும் உள்ளகப்பட்ட நிலம் கழனிகொலால் நானூறு குழியும் இதன் தெற்கில் ஊர்மஞ்சிகமான மெட்டு சிறு கருகெசுவ கழநி திருநாரண வாய்க்கால் வ –

10. டசிறகு ஊர் மஞ்சிக்கமாய் வரிசிலத்து கிடந்த பூமி கிழ்பாலற் கெல்லை அங்காரை மாதெவபட்டர் பூமி மெலருகெ பொன நடைகாலுக்கு மெற்கு தென்பால் கெல்லை திருநாரண வாய்க்காலின் வடக்கும் மெல்பால் கெல்லை ஐயன் பெருமாந் பூமிக்கு கிழக்கு வடபார் கெல்லை முடும்பைப் பொற கூளி பூமிக்கு வடக்கும் நாற்பாலெல்லை யுள்ளகப்பட்ட நிலம் க –

பார்க்கெல்லை – *மேற்பால் எல்லை;* திரு பன்றி ஸ்வரத்து திரு மூலட்டானத்து பெருமான் அடிகள் உதமாதம் பட்டி – *திருப்பன்றீசுவரம் கோயில் திருமூலட்டானம் இறைவனுக்குரிய உதமாதம் பட்டி என்னும் நிலம் என்பது. இதனால் பன்றீசுவரம் கோயில் இறைவன் பெயர், திரு மூலட்டானத்துப் பெருமான் அடிகள் என்பது அறியப்படும்.* வடபாற்கெல்லை – *வடபால் எல்லை.*

மாத வாய்க்கால் – *மஹாத வாய்க்கால்;* இதன் தெற்கில் – *அர்ச்சனை போகத்திற்கு விடப்பட்ட இந்த நிலத்திற்குத் தெற்கில்;* சிறு கருகெசுவ கழநி திருநாரண வாய்க்கால் – *சிறு கருகேசவன் வயலுக் குரிய திருநாரண வாய்க்கால்;* வடசிறகு – *வடக்குப் பக்கம்.*

10. கிழ் பாலற்கெல்லை – *கிழக்கு எல்லை; முடும்பை பொற கூளி பூமிக்கு 'வடக்கில்' என்பது, 'தெற்கில்' என்றிருத்தல் வேண்டும்.* நடைகால் – *நடுகால், நடுவிடத்து வாய்க்கால்.*

திருக்கரபுரத்துப் பெருமானடிகளுக்கு அர்ச்சனை போகமாகக் கொடுக்கப்பட்ட இரண்டாவது நிலம், முந்திய நிலத்திற்குத் தெற்கில் ஊர் மஞ்சிக்கமாயுள்ள மேட்டு நிலத்தை யடுத்த சிறு கருகேசுவ கழனிக்குரிய திருநாரண வாய்காலுக்கு வடக்குப் பக்கத்தில் உள்ளது. ஊர்ப் புறம்போக்கு நிலமாய் அமைந்தது; வரியின்றிக் கிடந்தது. 400 *குழி அளவுடையது.* கிழக்கில், *அங்காரை மாதவப்பட்டர் நிலத்தின் மேல் பக்கமாய்ச் சென்ற நடைகாலும்,* தெற்கில் *திருநாரண வாய்க்காலும்,* மேற்கில் *ஐயன் பெருமாள் நிலமும்,* வடக்கில் *முடும்பை பொறி கூளி நிலமும் இந்த நிலத்திற்கு எல்லைகளாகும்.*

11. முனிகொலால் நாநூறு குழியும் இக்கால் தென் சிறகு ஊர் மஞ்சிகமாய் வரிசிலத்து கிடந்த பூமிக்கு கிழ்பார் கெல்லை வரிசிரையாய் கிடந்த பூமிக்கு மெர்கும் தெங்பார் கெல்லை அவட்டை கிழவங் நிலமாந சொமாசி பூமிக்கு இதன் கிழக்கில் குண்டிலுக்கும் வடக்கும் மெல்பார் கெல்லை எடுக்குப்பட்டிகளும் இகுடிகாளய சொமாசி பூமிக்கு கிழக்கும் காலுக்கு தெற்கும் நால்பால் எல்லை...

12. யும் ஆக மாநிலம் கழநிகொலால் அறுநூறு குழியும் ஆக ஆயிரத்து நாநூறு குழியும் இத் திருகரபுரத்து பெருமான் அடிகளுக்கு நிசதம் இருநாழி அரிசியால் ஒருபொழுது திரு அமுதுக்கும் முந்று சந்தியும் ஒரு விளக்கு கொளித்திகொண்டு திரு ஆராதினை செய்வதர்குமாக சந்திராதித்த காலமும் இறைஇலி அர்ச்சநா போகமாக வைச்சு சிலாலெகை செய்து கல் நட்டு குடுத்தொம் சபெயார் ... கு ...

---

11. இக்கால்—இந்த திருநாரண வாய்க்கால்; வரிசிரையாய் கிடந்த பூமி—வரியின்றிக் கிடந்த நிலம்; மெர்கும்-மேற்கும்; காலுக்குத் தெர்கும் — திருநாரண வாய்க்காலுக்குத் தெற்கும்.

திருக்கரபுரத்துப் பெருமானடிகளுக்கு அர்ச்சன போகமாகக் கொடுக்கப்பட்ட மூன்றாவது நிலம், திருநாரண வாய்க்காலுக்கு தென் பக்கத்தில் உள்ளது. ஊர்ப் புறம்போக்கு நிலமாய் அமைந்தது. வரியின்றிக் கிடந்தது. 600 குழி அளவுடையது. கிழக்கில், வரியின்றிக் கிடந்த ஒரு நிலமும், தெற்கில் அவட்டைக் கிழவனுக்குச் சொந்தமான சோமாசி நிலமும், அதற்குக் கிழக்கிலுள்ள குண்டிலும், மேற்கில் சோமாசி நிலமும், வடக்கில் திருநாரணவாய்க்காலும் இந்த நிலத்திற்கு எல்லைகளாகும்.

12. மாநிலம் — பெரிய பூமி; முன்னைய இரு நிலங்களுக்கும் இது அளவில் பெரியதாதலின் 'மாநிலம' எனப்பட்டது; இனி, மா என்பதற்கு ஒருமா அளவுள்ள நிலமெனக் கொள்வாருமுளர். 100 குழி = 1 மா. குறிக்கப்பட்ட நிலம் 600 குழி நிலமாகையால் அது பொருந்தாது.

திருகரபுரத்து பெருமான் அடிகள் — திருக்கரபுரம் கோயில் இறைவன்; நிசதம் — நாள்தோறும்; ஒரு பொழுது — ஒரு நேரம்; முந்று சந்தி — மூன்று வேளை; அவை காலை, நண்பகல், மாலை என்பன. ஒரு விளக்கு கொளுத்தி — ஒரு விளக்கு எரித்து; திருஆராதினை — வழிபாடு;

13. இவ்வாட்டெடை கழநி வாரிய பெருமக்களோம் இது குறியுள்ளிருந்து பணிகெட்டு சிலாலெகை எழுதிநென் இவ்வாட்டை கழநி வாரிய கணக்கன் மணிமங்கலமுடையான் கங்காதரமா –

14. யிலட்டியென் இவை என்னெழுத்து இது குறியுள்ளிருந்து பணிகெட்டெழுதிநென்......கணக்கங் மத்தியஸ்தன் வாமன ஏழாயிரவன்நென் இது குறியிலிருந்து பணிக்க எழு

15. .....ட்டி குறி...கல்...... ஆதித்த ஏழாயிரவன்னேன் இது குறியிலிருந்து பணி கெட்டு எழுதிநென்

சந்திராதித்த காலமும் – *சந்திர சூரியர் உள்ள அளவும்.* இறையிலி அர்ச்சநா போகமாக – *அர்ச்சனு போகத்திற்குரிய வரியில்லாத நிலமாக; அர்ச்சனு போகம் – கோயில் பூசகர்களுக்கு விடப்படும் நிலம்; இறையிலி – வரியில்லாத நிலம்;* வைச்சு - *கொடுத்து;* சிலா லேகை செய்து – *கல்லில் வெட்டி; சிலாலேகை – சாசனம், கல்வெட்டு;* கல்நட்டு—*எல்லைக் குறித்து, எல்லைக் கற்களை நட்டு.*

13. ஆட்டை—*ஆண்டு, வருடம்;* கழநி வாரிய பெருமக்களோம்– *வயல் நிலங்களைக கவனிக்கும் குழுவினராகிய யாம்;* இது குறியுள்ளிருந்து – *இந்த ஊர்ச் சபையிலிருந்து; குறி – ஊர்ச்சபை.* பணிகேட்டு – *கட்டளையின்படி;* சிலாலேகை எழுதினேன் – *சாசனம் எழுதினேன்;* மணிமங்கலமுடை யான் கங்காதர மாயிலட்டி: *இவன் திருக்கரபுரத்துக் கோயில் இறைவனுக்கு அர்ச்சனு போகமாகக் கொடுக்கப்பட்ட 1400 குழி நிலத்தைப் பற்றிய சாசனத்தைக் கல்லில் எழுதியவன்; அவ்வாண்டு கழனி வாரியத்தாருக்குரிய கணக்கன்.*

14. கணக்கன் மத்தியஸ்தன் வாமன ஏழாயிரவன்: *ஊர்க்கரணத்தானுன வாமன ஏழாயிரவன் என்பது: இவன் திருக்கரபுரத்துச் சபையார், அவ்வூர் கோயில் பெருமானுக்கு அர்ச்சனு போகமாகக் கொடுத்த 1400 குழி நிலம்பற்றிய சாசனத்தை, அவர்கள் கட்டளைப்படி ஓலையில் எழுதியவன். மத்தியஸ்தன்—ஊர்க்கரணத்தான். இவன் சபையார் கட்டளையை ஓலையில் எழுதுபவன். பிறர் கணக்கரினின்றும் வேறுபடுத்தற்கு, இவன் 'கணக்கன் மத்தியஸ்தன்'என்று அழைக்கப்பட்டான். இச்சாசனத்தைக் கல்லில் எழுதியவன் கழனிவாரிய கணக்கனுன மணிமங்கலமுடையான் கங்காதர மாயிலட்டி என்போன். இவர்கள் இருவரும் ஊர்ச்சபையின் அங்கத்தினரா யிருந்தனர் என்பது நோக்கத் தக்கது.* பணிக்க – *சபையார் கட்டளையிட.*

16. கணவதியெந் இது குறியுள்ளிருந்திவ் வாரிகப் பெரு மக்கள் பணிப்ப எழுதினென் மத்தியஸ்தன் மங்கல ஸெனுபதி ஸ்ரீ......வன் எழாயிர நிலையலங்கன் கற்பகா தித்தனென் இது குறியுள்ளிருந்திவ் வாரிகப் பெரு மக்கள் பணிப்ப.....மத்தியஸ்தந்........குறியுள்ளிருந் தி வாரிகப் பெருமக்கள் பணிக்க எழுதிநென் மத்தியஸ்த னெட்டி ......

17. க்குறி ஸ்ரீ காவெரி மங்கல தெரனென்

15–17. இப்பகுதியில், பார்த்திவேந்திராதி வர்மன் சாசனத்தில் கையெழுத்திட்ட, மணிமங்கலமுடையான் கங்காதர மாயிலட்டி என்னும் கழனிவாரியக் கணக்கனோடு, ஆநித்த ஏழாயிரவன், கணவதி, மத்தியஸ் தன் மங்கல சேனபதி ஏழாயிர நிலையலங்கன் கற்பகாதித்தன், மத்தியஸ் தன் எட்டி ஸ்ரீ காவெரி மங்கல தெரன் என்போர் பெயரும் வேறு இருவர் பெயர்களும் காணப்படுகின்றன. இம் மூன்று வரிகளும் வாசித்தறிய முடியாதபடி பெரிதும் சிதைந்துள்ளன.

பயிற்சி வினுக்கள்

1. பார்த்திவேந்திராதி வர்மன் யார்? அவன் பெயரால் வந் துள்ள சாசனம் எங்குக் காணப்படுகிறது? அதன் காலம் எது?

2. பார்த்திவேந்திராதி சாசனத்தில் கூறப்படும் செய்திகள் யாவை?

3 பார்த்திவேந்திராதி வர்மன் சாசனத்திற்கு வேறு எப்பெயர் இடலாம்? அதிலிருந்து நாம் அறியக் கூடியன யாவை?

4. அவனிநாராயண சதுர்வேதி மங்கலம் எங்கு உள்ளது? அதற்குரிய மற்ரெரு பெயர் யாது?

5. அவனி நாராயண சதுர்வேதி மங்கலத்துக் சபையோருக்குள் இருந்த குழுப் பெயர்களையும், அவர்கள் வேலைகளையும் குறிப்பிடுக.

6. பொருள் தருக:— வாரியம், கலிங்கு, தடிவழி, பட்டர், விசிட் டர், தளி, தானம், புலம், பூமி, கழனிக்கோல், சிலாலேகை, திருமுகம், பிடாகை, சந்தி, திருவாராதனை, இறையிலி, ஆட்டை, குறி, பணி, கேட்டல்.

7. விளக்குக:— சதுர்வேதி மங்கலம், ஸம்வத்சர வாரியம், அபி ஷேக மண்டபம், அர்ச்சனு போகம், ஊர்மஞ்சிக்கம், மத்தியஸ்தன்.

8. அவனி நாராயண சதுர்வேதி மங்கலத்துச் சபையுள்ளிருந்த உறுப்பினருள் நால்வர் பெயர்களைக் குறிப்பிட்டு, அவருள் அரசியலதிகாரிகளா யிருந்தார் இன்னார் என்றும் எழுதுக.

9. திருக்கரபுரத்துக் கோயில் பெருமான் அடிகளுக்கு அர்ச்சனை போகமாகக் கொடுக்கப்பட்ட நிலங்கள் இருக்கும் இடம், எல்லை, அளவு இவற்றைக் குறிப்பிடுக.

10 அவனி நாராயண சதுர்வேதி மங்கலத்துச் சபையார் கழனி வாரியத்தாருக்கு இட்டபணி யாது? அல்லது திருக்கரபுரத்துப் பெருமான் அடிகளுக்கு கொடுக்கப்பட்ட நிலம் எவ்வளவு? அதன் வருவாய் எவைகளுக்குப் பயன்பட்டன?

11. திருக்கரபுரத்துக் கோயில் இறைவனுக்குக் கொடுக்கப்பட்ட நிலங்களுக்கு எல்லையாக அமைந்துள்ள நிலங்களில் நான்கன் பெயர்களையும், வாய்க்கால்களில் இரண்டன் பெயர்களையும் குறிப்பிடுக.

12. பார்த்திவேந்திராதி வர்மன் சாசனத்தை எழுதியவன், கல்லில் வெட்டியவன் இன்னார் என்று குறிப்பிடுக.

முதலாம் இராசராசன் சாசனங்கள்.

5. பொய்கைநாடு கிழவன் ஆதித்த சூரியன் சாசனம்.

முன்னுரை

முதலாம் இராசராசன் சாசனங்கள் என்பவை, முதலாம் இராசராசனுல் ஏற்பட்ட சாசனங்களும், அவன் காலத்தில் பிறரால் ஏற்பட்ட சாசனங்களு மாகும். அவை பொய்கைநாடு கிழவன் ஆதித்த சூரியன் சாசனம், ஸ்ரீ ராஜராஜன் கிணறு, மேற்பாடி என்னும் இராச்ரயபுரத்து நகரத்தார் சாசனம், திருப்பதியம் என்பன வாகும். இவற்றுள் திருப்பதியம் ஒன்றும் முதலாம் இராசராசனுல் ஏற்பட்டது. ஏனைய மூன்றும் அவன் காலத்தில் பிறரால் ஏற்பட்டவை.

பொய்கைநாடு கிழவன் ஆதித்த சூரியன் சாசனம், பொய்கை நாட்டுத் தலைவனும், தஞ்சாவூர் பெரிய கோயில் என்னும் இராசராசேசுவரம் கோயில் மேற்பார்வையாளனுமான ஆதித்த சூரியன் என்னும் தென்னவன் மூவேந்த வேளானுல் ஏற்பட்டதாகும். இச் சாசனம், அருண்மொழி தேவர் என்னும் இயற்பெயரையுடைய [1]முதலாம் இராசராசன் காலத்தில், அவன் ஆட்சியின் 29ஆம் ஆண்டிற்கு முன்னர் ஏற்பட்டது. தஞ்சை இராசராசேசுவர முடையார் கோயில் மேற்குப்புற வாயிலிலுள்ள ஒரு மாடத்தில் மூன்றுவது சாசனமாகக் காணப்படுகிறது. தமிழ் மொழியில் எழுதப் பெற்றது. நான்கு பகுதிகளாயமைந்தது. அறுபது வரிகளை யுடையது.

---

[1]இவன் சுந்தர சோழன் என்னும் இரண்டாம் பராந்தகனுக்கு வானவன் மாதேவியிடம் பிறந்த மகன். அருண்மொழி தேவன் என்பது இவனது இயற்பெயர். இளமையில் இவன் உத்தமசோழன் மனைவி யாகிய செம்பியன் மாதேவியாலும், இவன் தமக்கை குந்தவையாலும் வளர்க்கப்பட்டு, சைவ சமயத்திலும், சிற்ப ஓவிய முதலிய கலைகளிலும் சிறந்து விளங்கினுன். இதனுல் பிற்காலத்தில் இவன் ஆட்சித் திறத்திலும், சைவப் பற்றிலும், கோயில் கட்டுவதிலும் புகழ் பெற்ற மன்னனுனன்.

இவன் தன் சிறிய தாதையாகிய உத்தம சோழனுக்குப் பின், கி. பி 985 முதல் 1014 வரை, 29 ஆண்டுகள் சோழநாட்டை ஆண்டான். தன் ஆட்சியின் மூன்ரும் ஆண்டு சேர மன்னனுன பாற்கர ரவி வர்மனையும் (கி. பி 978–1036), அவனுக்கு உதவியாக வந்த

இச் சாசனத்தில் ஆதித்த சூரியன் என்பான், தஞ்சை இராசராசேசுவரம் கோயிலில் சில பிரதிமங்களைச் செய்து வைத்ததும், அவைகளுக்கு அவனும், குருவாணியக் குடியாகிய பரகேசரி புரத்து நகரத்தாரும், வெண்ணி நகரத்தாரும் பல அணிகலன்களைக் கொடுத்ததுமான செய்திகள் கூறப்படுகின்றன. நம்பியாரூரனர், நங்கைப் பரவையார், திருநாவுக்கரயர், திருஞானசம்பந்த அடிகள், பெரியபெருமாள், உலோகமா தேவியார், சந்திரசேகர தேவர் ஆகிய எழுவர் பிரதிமங்களை தஞ்சை இராசராசேசுவரர் கோயிலில் ஆதித்த சூரியன் செய்து வைத்தான் என்றும், அவைகளின் உயரம் கோயில் முழத்தாலும், அணிகலன்களிலுள்ள இரத்தினங்கள் தட்சணமேரு விடங்கன் என்னும் கோயில் நிறை கல்லாலும், பொன் ஆடவல்லான் என்னும் நிறை கல்லாலும் அளவிடப்பட்டு, கல்லில் வெட்டப்பட்டன என்றும் இச்சாசனம் கூறுகின்றது.

இப் பிரதிமங்களில், நம்பியாரூரனர், திருநாவுக்கரையர், திருஞானசம்பந்த அடிகள் பிரதிமங்கள் மூன்றும், தேவாரம் பாடிய மூவர்க்கும் உரியவை. நங்கை பரவையார், நம்பியாரூரர் இரு மனையருள் முதல் மனைவி. இதனால் தேவாரம் பாடிய மூவர் காலம் முதலாம் இராசராசன் ஆட்சியாண்டு இருபத்தொன்ப

அமரபுயங்கன் என்னும் பாண்டியனையும் காந்தளூர்ச் சாலை, உதகை, விழிஞம் என்னும் இடங்களில் வென்று, இராசராசன் என்ற சிறப்புப் பெயரைப் பெற்றான். இதனால் சேரநாட்டின் ஒரு பகுதியான கொல்லமும், அதனைச் சேர்ந்த கொடுங்கோளூரும் இவன் வசமாயிற்று. பின்னர் குடமலை நாடு, கங்கபாடி, தடிகைபாடி ஆகிய நாடுகளை இவன் வென்றான். சேரபாண்டியர்க்கு உதவியாக வந்த ஐந்தாம் மகிந்தனோடு போர் செய்து ஈழ நாட்டையும் கைப்பற்றினன்.

இதன் பின்னர், மேலைச் சாளுக்கிய மன்னரான சத்திய சிரயனேடும், அவன் மகன் இரண்டாம் தைலபனேடும் போர் செய்து இரட்டபாடி ஏழரை இலக்கத்தை வென்றான். தெலுங்கசோழரை வென்று, அவர்களது சிட்புலி நாட்டையும், பாகு நாட்டையும் கைப் பற்றினன். சக்தி வர்மன் என்னும் வேங்கை நாட்டு மன்னனுக்கு உதவியாகச் சென்று, அவன் பகைவர்களை வென்று, அந்நாட்டையும் தன் ஆட்சிக் குட்படுத்தினன். வேங்கை நாட்டு மன்னனான சக்திவர்மன் மகன் விமலாதித்தனுக்கே தன் ஒரே மகள் குந்தவையை மணஞ் செய்து கொடுத்தான். பின்னர், கலிங்க நாட்டையும், இறுதியாக முந்நீர்ப் பழந்தீவு பன்னீராயிரத்தையும் வென்றான். இப் போர்களிலெல்லாம், இவன் மகன் இராசேந்திரன் இவனுக்கு உதவியாக இருந்தான்.

துக்கும் முற்பட்டது; அஃதாவது, பத்தாம் நூற்றுண்டிற்கு முற்பட்டதென்று நாம் அறிகின்றேம். இவர்கள் பிரதிமங்களுக்கு ஆதித்த சூரியனும், பரகேசரிபுரத்து நகரத்தாரும், வெண்ணி நகரத்தாரும் அணிகலன்கள் கொடுத்துள்ளமை குறிப்பிடத் தக்கது. இனி பெரிய பெருமாள் என்பது, முதலாம் இராசராசனை யும், உலோகமா தேவியார் என்பது, அவன் பட்டத்தரசியையும், சந்திரசேகர தேவர் என்பது, அவர்கள் வழிபட்டு வந்த சிவ பெருமானையும் குறிக்கும். இவர்கள் பிரதிமங்களுக்கு ஆதித்த சூரியன் அணிகலன்கள் கொடுத்திருப்பதால், அவன் தேவாரம் பாடிய மூவரிடத்தும், முதலாம் இராசராசனிடத்தும் அதிகப் பற்றுள்ளவன் என்பது தெரிகிறது.

முதலாம் இராசராசன் கி. பி. 985 முதல் 1014 வரை சோழநாட்டை ஆண்டான். இச் சாசனம் அவன் ஆட்சியின் 29ஆம் ஆண்டிற்கு முற்பட்டதெனவே, இதன் காலம் கி. பி. 1014ஆம் ஆண்டிற்கு முற்பட்டதென்னலாம்.

இவன் தன் நாட்டைப் பல மண்டலங்களாகவும், வளநாடுகளாக வும் வகுத்தான். அவைகள் இவனுடைய சிறப்புப்பெயர்களால் அழைக் கப்பட்டன. தொண்டை மண்டலம் சயங்கொண்ட சோழமண்டல மென்றும், ஈழ மண்டலம் மும்முடிச் சோழ மண்டல மென்றும், பாண்டி மண்டலம் இராச ராச மண்டலம் என்றும், நுளம்பபாடி நிகரிலி சோழ மண்டல மென்றும் பெயர் வழங்கின. தன்னுட்சியின் 16ஆம் ஆண்டு, நாட்டின் நிலங்களை அளந்து, விளைச்சல் நிலங்களுக்கு வரி விதித்தான். நாட்டில் கிராம ஆட்சி சிறப்பாக நடைபெற்றது. இவனுக்குப் பலம் பொருந்திய தரைப் படைகளும், கப்பல் படைகளும் இருந்தன. இவனுட்சியின் கீழ் பல குறுநில மன்னர்கள் இருந்தனர். பொய்கை நாடு கிழவன் ஆதித்த சூரியனுன தென்னவன் மூவேந்த வேளான் போன்ற சிறந்த அரசியல் தலைவர்களும் இருந்தனர். இவன் சைவ சமயப் பற்றுள்ளவன். ஆயினும் பிற சமயங்களை இவன் தன்னுட்டில் ஆதரித்து வந்தான்.

தஞ்சையில் இராசராசேசுவரம் என்னும் பெரிய கோயிலைக் கட்டி, அதன் வழிப்பாட்டிற்கும், திருவிழாக்களுக்கும் பல நிவந்தங் களைக் கொடுத்தான். இவனுடைய அரசியலதிகாரிகளும், அக் கோயிலுக்குப் பல தானங்கள் செய்தனர். இவன் காலத்தில் வாழ்ந்த கருவூர்த் தேவர் அக்கோயில் இறைவனைப் பாடியுள்ளார். அப்பாடல்கள் சைவத் திருமுறையில் இடம் பெற்றுள்ளன. தஞ்சையிலுள்ள தளிக் குளம் என்னும் பழைய கோயிலையும் இவன் கற்கோயிலாகக் கட்டி, நிவந்தங்கள் கொடுத்துள்ளான். நம்பியாண்டார் நம்பிகளைக் கொண்டு

சாசனம்
முதற்பகுதி

1. ஸ்வஸ்தி ஸ்ரீ உடையார் ஸ்ரீ ராஜ ராஜீஸ்வரம் உ
2. டையார்க்கு ஸ்ரீ கார்யஞ் செய்கின்ற பொய்கை—

திருமுறை வகுத்தவனும் இவனே என்பர். இறுதிக் காலத்தில் இவன் துலாபார தானமும், இவன் மனைவி உலோகமாதேவி இரணிய கருப்ப தானமும் கொடுத்துள்ளனர்.

இவனுக்குப் பல மனைவியர் இருந்தனர் அவர்களில் உலோகமா தேவியே இவன் பட்டத்தரசி யாவாள். இவனுக்கு இராசேந்திரன் என்னும் ஒரே புதல்வனும், மாதேவடிகள், குந்தவை என்னும் இரு புதல்வி யரும் இருந்தனர். இராசேந்திரன் தாயின் பெயர் வானவன் மாதேவி. அவனே பின்னர், முதலாம் இராசேந்திர சோழன் என்னும் பெயர் பெற்று, வடக்கே கங்கை வரை தன் புகழை நிலை நாட்டியவன். இராச ராசன் மகள் குந்தவைக்கும் கீழைச் சாளுக்கிய மன்னனான விமலா தித்தனுக்கும் பிறந்த மகனே இராசநரேந்திர வர்மன். அவனுடைய மகனே, பிற்காலச் சோழர்களில் புழ்பெற்ற முதலாம் குலோதுங்க சோழனுவான்.

இராசராசன் காலத்தில், இவன் வரலாற்றைக் கூறும் ஸ்ரீராசராச விஜயம் என்னும் வடமொழி நூல் ஒன்று இருந்தது. 'ஸ்ரீராசராசேசுவர நாடகம்' என்னும் தமிழ் நூல், இராசராசன் கால முதல் தஞ்சை பெரிய கோவிலில் நடிக்கப்பட்டு வந்த ஒரு நாடக நூலாகும். இவனுக் குப்பின் இவன் மகன் இராசேந்திரன் கி. பி 1012 முதல் 1044 வரை சோழநாட்டை ஆண்டான். அவனே 'கங்கைகொண்ட சோழன் என்று பெயர் பெற்றவன்.

குறிப்புரை

1. ஸ்வஸ்திஸ்ரீ—மங்களம் உண்டாக; 'நலம் வளர்க' எனினுமாம். உடையார்: இது கடவுகளுக்கும் அரசர்க்கும் வழங்கப்படும் பொதுப் பெயர். 'எல்லாம் உடையவர்' என்பது இதன் பொருள். ஸ்ரீ ராஜ ராஜீசுவரம் உடையார்க்கு – தஞ்சை இராசராசேசுவரம் கோயில் இறைவனுக்கு; உடையார் — இறைவன்.

2. ஸ்ரீ காரியம் செய்கின்ற — கோயில் காரியங்களை மேற்பார்வை செய்கிற; ஸ்ரீகாரியம்-கோயில் காரியம்; பொய்கை நாடு கிழவன் - பொய் கை நாட்டிற்குத் தலைவன்; இவன் முதலாம் இராசராசன் அரசியல் அதி காரிகளில் ஒருவன். இராசராசனால், இராசராசேசுவரம் கோயில் காரியங்களை மேற்பார்வை செய்ய நியமிக்கப்பட்டவன். இவன் சிவபெரு மானிடத்திலும், அவர் அடியாரிடத்திலும் சிறந்த பக்தியுடையவன்: இராசராசேசுவரத்தில், திருஞான சம்பந்த அடிகள் முதலிய மூவருக் கும், நங்கை பரவையார், மெய்ப்பொருள் நாயனார், சிறுத் தொண்ட நாயனார் முதலியவர்களுக்கும் செப்புப்படிவங்கள் செய்வித்து, அவை களுக்குப் பல அணிகலன்களும் அளித்துள்ளான்.

3. நாடு கிழவன் ஆதித்தன் சூரியனுன தென்னவ—
4. ன் மூவெந்தவெளான் ஸ்ரீ ராஜராஜீஸ்வரம் உ
5. டையார் கொயிலில் யாண்டு இருபத்தொன்பதாவது
6 வரை எழுந்தருளுவித்த செப்பு ப்ரதிமங்கள் வடிவம்
7. உடையார் கொயிலில் முழத்தால் அளந்தும் ரத்நங்கள் சரடு நீ—
8. க்கி தக்ஷிண மெரு விடங்கன் என்னுங் கல்லால் நிறை எடு—

---

3. **ஆதித்தன் சூரியனுன தென்னவன் மூவெந்த வெளான்** – *ஆதித்த சூரியன் என்பது இவனது இயற்பெயர். தென்னவன் மூவேந்த வெளான் என்பது இவனுக்கு இடப்பட்ட சிறப்புப் பெயர். இதனுல் இவன் அரசியலதிகாரி என்பது போதரும். இவன் பொய்கை நாட்டிற்குத் தலைவனுதலால், 'பொய்கை நாடு கிழவன்' என்றும் அழைக்கப் பட்டான். பொய்கை நாடு, சோழ நாட்டில் இராசேந்திர சிங்க வள நாட்டின் உள்நாடுகளுள் ஒன்று.*

4. **ஸ்ரீராஜராஜீஸ்வரம் கொயில்** - *தஞ்சைப் பெரிய கோவில்*

5. **யாண்டு இருபத்தொன்பதாவது வரை** – *முதலாம் இராச ராசன் ஆட்சி ஆண்டு 29க்கு முன்; முதலாம் இராசராசன் கி. பி. 985 முதல் 1014 வரை ஆண்டான். எனவே, இவனது ஆட்சியாண்டு 29 என்பது, கி. பி. 1014 ஆகும்.*

6. **எழுந்தருளுவித்த** – *செய்து வைத்த;* **செப்பு ப்ரதிமங்கள்** - *செம்பினுல் செய்த மக்கள் உருவங்கள்; கல்வெட்டுக்களில் இறைவன் திருவுருவங்கள் 'திருமேனி' எனவும் 'மூர்த்தி' எனவும் அழைக்கப்படும். மக்கள் உருவம் 'பிரதிமம்' என்று சொல்லப்படும். இச்சொல் வடமொழி ப்ரதிமா என்னும் சொல்லிலிருந்து வந்தது என்பர்.*

7. **உடையார் கொயிலில் முழத்தால்** – *இராசராசேசுவரமுடையார் கோயிலிலுள்ள முழக்கோலால்; 8 தோரை (நெல்) = 1 விரல்; 12 விரல் = 1 சாண்; 2 சாண் = 1 முழம்.* **அளந்தும்** – *அளந்து கணக்கிட்டும்;* **ரத்நங்கள்** – *மணிகள்; இவை நவமணிகளையும் சுட்டும்.* **சரடு நீக்கி** — *இரத்தினங்களைக் கோத்த கயிற்றைத் தள்ளி; சரடு – கயிறு.*

8 **தக்ஷிண மெரு விடங்கன் என்னும் கல்லால்** – *தட்சின மேரு விடங்கன் என்னும் நிறை கல்லால்; இது கோயில் நிறுத்த லளவையின் பெயர். கோயில் படிமங்களுக்குச் சார்த்தப்பட்ட இரத்தினங்களை அளப்பதற்குப் பயன் பட்டது. தட்சிணமேரு என்பது இராசராசேசுவரம் கோயில் விமானத்தின் பெயர்.*

9. த்தும் பொன் ஆடவல்லால் என்னுங் கல்லால் நிறை எடுத்—
10. துங் கல்லில் வெட்டினபடி [க] பாதாதிகெஸாந்தம் பதினெழு வி—
11. ரலெ இரண்டு தொரை உசரமும் இரண்டு திருக்கையும் உடையராகக் கன—
12. மாக எழுந்தருளுவித்த நம்பி ஆரூரனுர் ப்ரதிமம் ஒன்று [உ] இவர் நின்ற இரு வி—
13. ரலரை உசரத்து பத்மம் ஒன்று [ரு] இதனொடுங் கூடச் செய்த எண்விரல் ச—
14. ம சதுரத்து மூவிரலெ இரண்டு தொரை உசரத்து இவர் எழுந்தருளி நின்ற
15. பீடம் ஒன்று [ச] பதினறு விரல் நிளத்து இ ர ண் டு திருக்கையுடையராகக் கன—

---

9. பொன்—பொன்னை; இரத்தினங்களைப் பொதிவதற்கும் கோப்பதற்கும் பொன் பயன்பட்டது. ஆடவல்லான் — கோயிலிலுள்ள ஒரு நிறை கல்; பொன் முதலியவற்றை நிறுப்பது. ஆடவல்லான் என்பது; சிவபெருமானுக்கு வழங்கிய பெயர்களில் ஒன்று. நிறை எடுத்தும் — நிறுத்து அளந்தும்

10–14 நம்பி ஆரூரனுர் ப்ரதிமம்—நம்பியாரூரர் படிவம்; நம்பியாரூரர் சைவ சமயாசாரியர் நால்வருள் ஒருவர். சுந்தரர் என்றும் இவர் அழைக்கப்படுவர். தேவாரம் பாடிய மூவருள்ளும் இவர் ஒருவர். இவருடைய படிவம் இரு கைகளையுடையது செம்பினல் கட்டியாகச் செய்யப்பட்டது. அடிமுதல் முடிவரை 17 விரல் 2 தோரை உயரமுள்ளது. அப்படிவம் நின்ற தாமரை வடிவமான ஆசனம் $2\frac{1}{2}$ விரல் உயரமும்; அதைத் தாங்கிய பீடம் 8 விரல் சமசதுரமும், 3 விரல் 2 தோரை உயரமு முடையது.

கல்லில் வெட்டினபடி — கல்லில் வெட்டின சாசனத்தின்படி; பாதாதிகெஸாந்தம் — அடிமுதல் முடிவரை; விரல், தோரை: இவை நீட்டலளவைப் பெயர்கள். விரல் — 8 தோரை (நெல்) நீளம்; தோரை — 1 நெல் அளவு. உசரம்—உயரம்; இரண்டு திருக்கையும் உடையராக — இரண்டு கைகளையும் கொண்டதாக; கனமாக - கட்டியாக; பத்மம் — தாமரை வடிவமாகச் செய்யப்பட்ட ஆசனம்; பீடம் — இருப்பிடம்.

15–18 நங்கை பரவையார் ப்ரதிமம் —பரவை நங்கையார் படிவம்; பரவையார், நம்பியாரூரர் இரு மனைவியருள் முதல் மனைவி. அவர் படிவம் இரு கைகளை யுடையது; செம்பினல் கட்டியாகச் செய்யப் பட்டது.

16. மாக எழுந்தருளுவித்த நங்கை பரவையார் ப்ரதிமம் ஒன்று [ரு] இவர் எழுந்த—
17. ருளி நின்ற இரு விரலெ இரண்டு தொரை உசரத்து பத்மம் ஒன்று [சு] இதனொ—
18. டுங் கூடச் செய்த அறுவிரலெ இரண்டு தொரை சம சதுரத்து மூ விரல் உச
19. ரத்து பீடம் ஒன்று [எ] பாதாதிகெஸாந்தம் இருபத்து இரு விரலெ இரண்டு தொ
20. ரை உசரத்து இரண்டு திருக்கைய்யுடையராகக் கன மாக எழுந்தருளிவித்த திரு—
21. நாவுக்கரையர் ப்ரதிமம் ஒன்று [அ] இவர் எழுந்தருளி நின்ற இரு விரலெ ஆறு
22. தொரை உசரத்து பத்மம் ஒன்று[கூ]இதனொடுங் கூடச் செய்த எண் விரலெ
23. ஆறு தொரைச் சம சதுரத்து நால் விரல் உசரத்து பீடம் ஒன்று [ௐ] பாதாதிகெ
24. ஸாந்தம் இருபத் திருவிரலெ இரண்டு தொரை உசரத்து இரண்டு திருக் கையுடை—

அடிமுதல் முடிவரை 16 விரல் உயரமுடையது. அப்படிவம் நின்ற தாமரை வடிவமான ஆசனம், 2 விரல் 2 தோரை உயரமும், அதைத் தாங்கிய பீடம் 6 விரல் 2 தோரை சம சதுரமும், 3 விரல் உயரமு முடையது.

பதினறு விரல் நிளத்து என்பது 'பதினறு விரல் உயரத்து' என்றிருத்தல் வேண்டும். பதினறு – பதினறு; நிளம் – நீளம்; இங்கு உயரத்தைச் சுட்டும். நங்கை பரவையார், உலோகமா தேவியார் படிவங் களுக்குக் 'கேசாதி பாதம்' கூறுதிருத்தல் குறிப்பிடத் தக்கது.

19–23 திருநாவுக்கரையர் ப்ரதிமம் – திருநாவுக்கரசர் படிவம்; திருநாவுக்கரசர் சைவ சமயாசாரியர் நால்வருள் ஒருவரும், தேவாரம் பாடிய மூவருள் ஒருவரு மாவர். இவருடைய படிவம் இரு கைகளை யுடையது. செம்பினல் கட்டியாகச் செய்யப்பட்டது. அடிமுதல் முடிவரை, 22 விரல் 2 தோரை உயரமுடையது. அப் படிவம் நின்ற தாமரை வடிவமான ஆசனம், 2 விரல் 6 தோரை உயரமும், அதைத் தாங்கிய பீடம், 8 விரல், 6 தோரை சம சதுரமும், 4 விரல் உயரமு முடையது.

24–29. திருஞானசம்பந்தடிகள் ப்ரதிமம் – திருஞானசம்பந்தர் படிவம்; திருஞானசம்பந்தர் சைவ சமயாசாரியார் நால்வருள் முதல்

25. யராகக் கனமாக எழுந்தருவித்த திருஞானசம்பந்தடி கள் ப்ரதிமம் ஒன்று [௰௧]
26. இவர் எழுந்தருளி நின்ற இருவிரலே இரண்டு தொரை உசரத்து பத்மம் ஒன்று [௰௨]
27. இதனொடுங் கூடச் செய்த ஒன்பதிற்று
28. விரலெ இரண்டு தொரைச் சம சதுரத்—
29. து நால் விரல் உசரத்து பீடம் ஒன்று [௰௩]
30. பாதாதிகெஸாந்தம் ஒரு முழமெ நால் விர—
31. லரை உசரத்து இரண்டு திருக்கை யுடையரா

இரண்டாம் பகுதி

32. கக் கனமாக எழுந்தருளுவித்த பெரிய பெருமாள் ப்ர திமம் ஒன்று [௰௪] இவர் எழுந்தருளி நின்ற ஐய்விரலே இரண்டு தொரை உசரத்து பத்மம் ஒன்—
33 று [௰௫] இதனொடுங் கூடச் செய்த பதினொரு விரற் சம சதுரத்து ஐய்விரலெ ஆறுதொரை உசரத்து பீடம் ஒன்று [௰௬] இருபத்து இருவிரலெ இரண்டு தொ—
34. ரை உசரத்து இரண்டு திருக்கையுடையராகக் கனமாக எழுந்தருளுவித்த இவர் நம்பிராட்டியார் ஒலொகமா

வரும், தேவாரம் பாடிய மூவருள் ஒருவரு மாவர். இவருடைய படிவம் இரண்டு கைகளையுடையது. செம்பினுல் கட்டியாகச் செய்யப்பட்டது. அடிமுதல் முடிவரை 22 விரல் 2 தோரை உயரமுள்ளது. அப் படிவம் நின்ற தாமரை வடிவமான ஆசனம் 2 விரல் 2 தோரை உயரமும், அதைத் தாங்கிய பீடம் 9 விரல் 2 தோரை சம சதுரமும், 4 விரல் உயர மு முடையது. **திருஞானசம்பந்தடிகள்** — திருஞானசம்பந்த சுவாமிகள்: அடிகள் — பெரியார், சுவாமிகள்.

30–33. **பெரிய பெருமாள் ப்ரதிமம்** — முதலாம் இராசராசன் படிவம். இவன் படிவம், இரண்டு கைகளையுடையது; செம்பினுல் கட்டியாகச் செய்யப்பட்டது. அடிமுதல் முடிவரை ஒரு முழம் $4\frac{1}{2}$ விரல் உயரமுள்ளது. அப் படிவம் நின்ற தாமரை வடிவமான ஆசனம், 5 விரல் 2 தோரை உயரமும், அதைத் தாங்கிய பீடம் 11 விரல் சம சதுரமும், 5 விரல் 6 தோரை உயரமு முடையது.

33–35. **ஒலொகமா தெவியார் ப்ரதிமம்** — உலோகமா தேவியார் படிவம்; உலோகமா தேவியார், முதலாம் இராசராசன் பட்டத்தரசி இவரைத் 'திரைலோக்கிய மாதேவி', என்றும் அழைப்பர். இத் தேவியார் படிவம் இரண்டு கைகளை யுடையது. செம்பினுல் கட்டியாகச் செய்யப்

தெவியார் ப்ரதிமம் ஒன்று [யஎ] இவர் எழுந்தரு—
35. ளி நின்ற ஐய்விரல் உசரத்து பத்மம் ஒன்று [யஅ] இதனொடுங் கூடச் செய்த ஒன்பதிற்று விரற் சம சதுரத்து ஐய்விரலெ இரண்டு தொரை உசரத்து பீடம் ஒன்—
36. று [யகூ] பெரிய பெருமாளுக்கு தெவார தெவராக எழுந்தருளிவித்த தெவர் பாதாதிகெஸாந்தம் ஐவிரலெ இரண்டு தொரை உசரத்து நாலு ஸ்ரீஹஸ்தமும் உடையராகக் க—
37. னமாகப் பித்தளையால் எழுந்தருளுவித்த சந்திரசெகர தெவர் திருமெனி ஒன்று [உ0] இவரொடுங்கூடச் செய்த ஒரு விரலரை உசரத்து பத்மமும் இருவிரலெ நாலு
38. தொரை சம சதுரத்தும் ஒரு விரல் உசரத்தும் பித்தளையால் செய்த பீடம் ஒன்று [உக] இவரைக் கவித்த இருபத்து ஒருவிரற்ச் சுற்றிற் கனமாகச் செம்பால் செய்த ப்ரபெ

பட்டது. அடிமுதல் முடிவரை 22 விரல் 2 தோரை உயரமுடையது. அது நின்ற தாமரை வடிவமான ஆசனம், 5 விரல் உயரமும், அதைத் தாங்கிய பீடம், 9 விரல் சம சதுரமும், 5 விரல் 2 தோரை உயரமுமுடையது. இவர் நம்பிராட்டியார்—பெரியபெருமாள் என்னும் முதலாம் இராசராசன் பட்டத்தரசியார்.

36–38 சந்திரசெகர தெவர் திருமெனி—சந்திரனை முடியில் வைத்த சிவபெருமான் திருவுருவம். சந்திரசேகர தேவர், முதலாம் இராசராசனுடைய வழிபடு தெய்வம். அவர் திருவுருவத்தின் முன்னர் இராசராசன் தேவாரம் பாடி வழிபட்டு வந்தமையால், அவர் 'தேவார தேவர்' எனப்பட்டார். அவர் திருவுருவம் நான்கு கைகளை யுடையது; பித்தளையினால் கட்டியாகச் செய்யப்பட்டது. அடிமுதல் முடிவரை 5 விரல் 2 தோரை உயரமுடையது. அவ்வுருவத்தோடு கூடிய தாமரை வடிவமான ஆசனம், $1\frac{1}{2}$ விரல் உயரமும், அதைத் தாங்கிய பீடம், 2 விரல் 4 தோரை சம சதுரமும், ஒரு விரல் உயரமு முடையது. அதன் தலையில் வளையமாகக் கவிக்கப்பட்ட கலன், 21 விரல் சுற்றளவுடையது.

பெரிய பெருமாள் – முதலாம் இராசராசன்; தேவார தேவர் – முதலாம் இராசராசனது தேவாரப் பாடலின் வழிபாட்டிற்குரிய இறைவன். இவர் பெயர் 'சந்திரசேகர தேவர்' என்பது. ஸ்ரீ ஹஸ்தம் –

39. ஒன்று [உஉ] இவனெ நம்பி ஆரூரனுர்க்குக் குடுத்தன [உங] உத்திராக்ஷத் தாழ்வடம் ஒன்றிற் பொன்னின் சுரி ஐய்ம்பத்தாறும் உத்திராக்ஷம் ஐய்ம்பத்தாறும் உட்பட நிறை—

40. எண் கழஞ்செய் ஒன்பது மஞ்சாடிக்கு விலெ காசு இருபத்தைஞ்சு [உச] இவனெ நங்கை பரவையார்க்குக் குடுத்தன [உரு] திருக்கைய்க் காறை ஒன்று பொன் கழ—

41. ஞ்சரையாக இரண்டினுற் பொன் முக்கழஞ்சு [உசு] திருக்காற்க் காறை ஒன்று பொன் கழஞ்சரையாக இரண்டினுற் பொன் முக்கழஞ்சு [உஎ] மொதிரம் ஒன்று பொ—

மூன்றும் பகுதி

42. ன் அரைக்கழஞ்செய் மஞ்சாடியுங் குன்றி [உஅ] இவனெ திரு நாவுக்கரையர்க்குக் குடுத்தன [உகூ] உத்திராக்ஷச்சுரி பொன்னின் நூலிற்க் கொத்த உத்திராக்ஷம்

திருக் கைகள்; சந்திரசேகர தேவர் – முதலாம் இராசராசனுல் வழிபடப் பெற்ற சிவபெருமான்; திருமேனி – இறைவன் திருவுருவம்; இதனை 'மூர்த்தி' என்றும் கூறுவர். ஆனல் மக்கள் உருவத்தைப் 'பிரதிமம்' என்று கூறுவர் இவரைக் கவித்த – சந்திரசேகர தேவர் திருமேனியின் தலையில் சூடிய; பிரபை – திருவுருவங்கள் தலையில் கவிக்கும் ஒரு வகை மாலை (ornamented Arch over the head of the idol) இதனைத் 'திருவாசிகை' என்றும், 'திருவாசி' என்றும் கூறுவர்.

39–40. இவனெ நம்பி ஆரூரனுர்க்குக் குடுத்தன – ஆதித்த சூரியன் நம்பியாரூரர் உருவத்திற்குக் கொடுத்தது; அது ஒரு உருத்திராட்சத் தாழ்வடம்; அதில் பொன்னுல் செய்யப்பட்ட திருகாணி 56ம், உருத்திராட்சமணி 56ம் இருந்தன. அது 8 கழஞ்சு, 9 மஞ்சாடி எடையும் 25 காசு மதிப்புமுள்ளது. உத்திராட்ச தாழ்வடம்–உருத்திராட்ச மாலை; பொன்னின் சுரி – பொன்னுல் செய்யப்பட்ட திருகாணி; உத்திராட்சம் – உருத்திராட்ச மணி; நிறை – எடை; கழஞ்சு – 20 மஞ்சாடி; மஞ்சாடி – 2 குன்றிமணி; விலை – மதிப்பு; காசு – பொற்காசு.

40–42. இவனெ நங்கை பரவையார்க்குக் குடுத்தன – ஆதித்த சூரியன் பரவையார் உருவத்திற்குக் கொடுத்தவை. அவை திருக்கைக்காறை 2, திருக்கால் காறை 2, மோதிரம்; காறை

ஒன்றுட்பட நிறை ஆறு மஞ்சாடியும் இரண்டு மாவுக்கு விலை காசு ஒன்று [௩௰] உத்திராக்ஷச்சுரி பொன்னின் நூலிற்—

43. கொத்த உத்திராக்ஷம் ஒன்றும் உட்பட நிறை ஆறு மஞ்சாடியும் இரண்டு மாவுக்கு விலை காசு ஒன்று [௩௧] கண்டிகை உத்திராக்ஷம் ஒன்றும் சுரி ஒன்றும் உட்பட நிறை ஐய்ங்க .... மஞ்சாடியுங் குன்றிக்கு விலை காசு எட்டு [௩௨] திருப் பொற் பூ ஒன்று பொன் முக் காலெ நாலு மஞ்—

44. சாடியுங் குன்றி [௩௩] திருக்கைய்க் காறை ஒன்று இருகழஞ்சு [௩௪] திருக்கைய்க் காறை ஒன்று பொன் கழஞ்செ முக்காலெ நாலு மஞ்சாடி [௩௫] இவனெ திருஞான சம்பந்தடிகளுக்குக் குடுத்தன. [௩௬] உத்தி

என்பது பெண்களும், குழந்தைகளும் கழுத்தில் அணியும் ஒருவகை அணி. அது இங்குக் கைகளிலும் கால்களிலும் அணிந்து கொள்ளும் அணிவகையைக் குறித்தது. பரவையார் உருவத்திற்கு அணிந்த காறைகள் பொன்னலானவை. அவைகளில், கையில் அணிந்த காறை ஒன்றின் எடை $1\frac{1}{2}$ கழஞ்சாக, 2 காறைகள் 3 கழஞ்சு எடையுள்ளவை. காலில் அணிந்த காறை ஒன்றின் எடை $1\frac{1}{2}$ கழஞ்சாக, 2 காறைகள் 3 கழஞ்சு எடையுள்ளவை. மோதிரம் $\frac{1}{2}$ கழஞ்சு, 1 மஞ்சாடி, 1 குன்றி எடையுள்ளது.

42–44. இவனெ திருநாவுக்கரையர்க்குக் குடுத்தன —ஆதித்த சூரியன் திருநாவுக்கரசர் உருவத்திற்குக் கொடுத்தவை. அவை உத்திராக்ஷச் சுரி 2, கழுத்தணி மாலை 1, திருப்பொற்பூ 1, திருக்கைக் காறை 2; உத்திராக்ஷச்சுரி ஒவ்வொன்றும் பொன்னலான நூலில் கோக்கப்பட்ட ஒவ்வொரு உருத்திராட்ச மணியையுடையது 6 மஞ்சாடி 2 மா எடையும், ஒரு காசு மதிப்பு முடையது. கழுத்தணி மாலை ஒரு உருத்திராட்சமும், திருகாணியுமுடையது; 5 கழஞ்சு............. குன்றி எடையும், 8 காசு மதிப்பு முடையது. திருப்பொற்பூ, பொன்னலானது; $\frac{3}{4}$ கழஞ்சு 4 மஞ்சாடி 1 குன்றி எடையுள்ளது. திருக்கைக்காறை ஒன்று 2 கழஞ்சு எடையுள்ளது; மற்றொன்று $1\frac{3}{4}$ கழஞ்சு, 4 மஞ்சாடி எடையுள்ளது

உத்திராக்ஷச் சுரி–உத்திராட்ச மாலையிலுள்ள திருகாணி; மா $=\frac{1}{20}$ ஆறு மஞ்சாடி இரண்டு மா – $6\frac{1}{10}$ மஞ்சாடி; 'மா' என்பதை நிறுத்தலளவைகளில் ஒன்று என்பாரு முளர். ஆங்கிலமொழி பெயர்ப்பாளர்'உ மா' என்பதை "two tenths" என்று மொழி பெயர்த்திருப்பது ஆராயத்

ராக்ஷச்சுரி பொன்னின் நூலிற் கொத்த உத்ராக்ஷம் ஒன்றுட்பட நிறை

45. அரைக் கழஞ்செ இரண்டு மஞ்சாடிக்கு விலெ காசு ஒன்றரை [௱எ] உத்திராச்க்ஷச்சுரி பொன்னின் நூலிற் கொத்த உத்திராக்ஷம் ஒன்றுட் பட நிறை அரைக் கழஞ்செ மஞ்சாடியுங் குன்றிக்கு விலெ காசு ஒன்றரை [௱அ] தாழ்வடம் ஒன்றிற் பொன்னின் சுரி ஐம்பத் தாறும் உட்பட நிறை எண் கழஞ்செ—

46. ய் நாலு மஞ்சாடியுங் குன்றிக்கு விலெ காசு இருபத் தைஞ்சு [௱௯] திருப்பொற்பூ ஒன்று பொன்கழஞ் செய் குன்றி [சய] திருக்கைய்க்காறை ஒன்று பொன் இரு கழஞ்செய் குன்றி [சக] திருக்கைய்க்காறை ஒன்று பொன் கழஞ்செ முக்காலெ நாலுமஞ்சாடி [சஉ] திருப் பட்டிகை ஒன்று பொன் இருகழஞ்சு [சங] இவனெ

தக்கது. கண்டிகை உத்திராக்ஷம் — உருத்திராட்ச மாலெ; கண்டிகை — மாலெ, தாழ்வடம்: பதக்கம் அல்லது வாகுவலயம் எனினுமாம்.

44–48. இவனெ திருஞானசம்பந்தடிகளுக்குக் குடுத்தன— ஆதித்த சூரியன் திருஞானசம்பந்தர் உருவத்திற்குக் கொடுத்தவை. அவை உருத் திராட்சச் சுரி 2, தாழ்வடம், திருப் பொற்பூ 1, திருக் கைக்காறை 2, திருப்பட்டிகை 1; இவற்றுள் உருத்திராட்சச் சுரிகள் பொன்னூலான நூலில் கோத்த ஒவ்வோர் உருத்திராட்சத்தை உடையது. அவற்றுள் ஒன்று $\frac{1}{2}$ கழஞ்சு 2 மஞ்சாடி எடையும், $1\frac{1}{2}$ காசு மதிப்பு முடையது. மற் றொன்று $\frac{1}{2}$ கழஞ்சு 1 மஞ்சாடி 1 குன்றி எடையும், $1\frac{1}{2}$ காசு மதிப்பு முடையது. தாழ்வடம் 56 திருகாணிகளும் 56 உருத்திராட்ச மணி களும் கொண்டது. 8 கழஞ்சு 4 மஞ்சாடி 1 குன்றி எடையும், 25 காசு மதிப்பு முடையது. திருக் கைக்காறைகள் இரண்டும் பொன்னூலானவை: ஒன்று 2 கழஞ்சு 1 குன்றி எடையும், மற்றொன்று $1\frac{3}{4}$ கழஞ்சு 4 மஞ் சாடி எடையு முடையன. திருப்பட்டிகை பொன்னூலானது; 2 கழஞ்சு எடையுள்ளது.

சுரி — திருகாணி; உருத்திராக்ஷம் — உருத்திராக்க மாலெ; தாழ் வடம் — கழுத்தணி; திருக்கைய்க்காறை — கையில் அணியும் காறை என்னும் அணிவகை; திருப்பட்டிகை — மேகலெ; அரைக்கச்சை எனினு மாம்.

47. பெரிய பெருமாளுக்குக் குடுத்தன [சச] திருக்கைய்க் காறை ஒன்று பொன் கழஞ்செய் ஆறு மஞ்சாடியும் முன்று மாவாக இரண்டிஞற்பொன் இருகழஞ்சரையெ இரண்டு மஞ்சாடியும் ஆறு மா [சரு] திருக்குதம்பை ஒன்று பொன் எட்டு மஞ்சாடியும் எழுமாவாக இரண் டிஞற் பொன் முக்காலெ இரண்டு மஞ்சா—

48. டியும் நான்கு மா [சசு] இவனெ இவர் நம்பிராட்டியார் ஒலொகமா தெவியார்க்குக் குடுத்தன [சஎ] திருக்கு தம்பை ஒன்று பொன் எழு மஞ்சாடியுங் குன்றியாக இரண்டிஞற் பொன் முக்கால் [சஅ] திருக்கைய்க் காறை ஒன்று பொன் கழஞ்செய் இரண்டு மஞ்சாடியும் மூன்று மா [சகூ] திருக்கைய்க் காறை ஒன்று பொன் கழஞ்—

49. செ எட்டு மா [ருய] இவன் எழுந்தருளுவித்த திரு ஞான சம்பந்தடிகளுக்கு இராஜெந்திர சிங்க வள நாட்டுத் திருவாலி நாட்டு உடையார் ஸ்ரீ ராஜராஜீஸ்

---

47. **இவனெ பெரிய பெருமாளுக்குக் குடுத்தன** – *ஆதித்த சூரியன் முதலாம் இராசராசன் உருவத்திற்குக் கொடுத்தவை; அவை திருக் கைக் காறை* 2, *திருக்குதம்பை* 2; *இவை பொன்னுலானவை. இவற் றுள் திருக்கைக்காறை ஒன்று* 1 *கழஞ்சு* 6 *மஞ்சாடி* 3 *மா வீதம்* 2 *திருக்கைக் காறைகள்* 2½ *கழஞ்சு* 2 *மஞ்சாடி* 6 *மா எடையுடை யவை. திருக்குதம்பை ஒன்று* 8 *மஞ்சாடி* 7 *மா வீதம்,* 2 *திருச்குதம்பை கள்* ¾ *கழஞ்சு* 2 *மஞ்சாடி* 4 *மா எடையுள்ளன*

48. **இவனெ இவர் நம்பிராட்டியார் ஒலொகமா தெவியார்க்குக் குடுத்தன** – *ஆதித்த சூரியன் பெரிய பெருமாள் என்னும் முதலாம் இராசராசன் பட்டத்தரசியான உலோகமா தேவியார் உருவத்திற்குக் கொடுத்தவை. அவை திருக்குதம்பை* 2, *திருக்கைய்க் காறை* 2; *இவை பொன்னுலானவை. இவற்றுள் திருக்குதம்பை ஒன்று* 7 *மஞ்சாடி* 1 *குன்றியாக,* 2 *திருக் குதம்பைகள்* ¾ *கழஞ்சு எடையுடையன. திருக் காறை ஒன்று* 1 *கழஞ்சு* 2 *மஞ்சாடி* 3 *மா எடையும், மற்றொன்று* 1 *கழஞ்சு* 8 *மா எடையும் உடையன.* **நம்பிராட்டியார்** – *தேவியார்;* **திருக்குதம்பை** – *காதணி வகை*

49–53. **பரகேசரிபுரத்து நகரத்தார்:** *பரகேசரிபுரத்து நகரம் தஞ்சை இராசராசேசுவரம் கோயில் இறைவனுக்குத் தேவதானமா யமைந்தது இது சோழநாட்டில் இராசேந்திர சிங்கவள நாட்டிலுள்ள*

வரம் உடையார்தெவ தானங் குறுவாணியக் குடி
யாகிய பரகேசரிபுரத்து நகரத்தார் யாண்டு இருபத்
தொன்பதாவது வரை குடுத்த ரத்னங்கள் தக்ஷிணமே
ருவிடங்கள் என்னுங் கல்லால் நிறை எடுத்தும் பொ-

50. ன் ஆடவல்லான் என்னுங் கல்லால் நிறை எடுத்துங்
கல்லில் வெட்டின [ருக] உத்திராக்ஷம் பொன்னின் சுரி
கட்டிற்று ஒன்றும் நாண் படு கண்ணுங் கொக்கு
வாயும உட்பட நிறை கழஞ்செய் எழுமஞ்சாடிக்கு விலை
காசு மூன்றெகால் [ருஉ] இவன் எழுந்த—.

51. ருளுவித்த திருநாவுக்கரையர்க்குக் குடுத்தன [ரு௩]
உத்திராக்ஷம் பொன்னின் சுரிகட்டிற்று ஒன்றும் நாண்
படு கண்ணுங் கொக்குவாயும் உட்பட நிறை கழஞ்செ
எழு மஞ்சாடிக்கு விலை காசு மூன்று [ருச] இவன் எழுந்
தருளுவித்த நம்பி ஆரூரனுர்க்குக் குடுத்தன [ருரு]
உத்திராக்ஷம் பொன்னின் சுரி கட்டிற்று ஒன்றும்
நாண் படு கண்ணுங் கொ—

நான்காம் பகுதி

52. க்கு வாயும் உட்பட நிறை கழஞ்செ எழுமஞ்சாடிக்கு
விலை காசு மூன்று [ருசு] இவன் எழுந்தருளுவித்த
நங்கை பரவையார்க்குக் குடுத்தன [ருஎ] திரு—

திருவாலி நாட்டிலுள்ளது. இதன் மற்றொரு பெயர் குறுவாணியர் குடி. இந்நகரத்தார், முதலாம் இராசராசன் ஆட்சியின் 29ஆம் ஆண்டு வரை, ஆதித்த சூரியன் இராசராசேசுவரம் கோயிலில் செய்து வைத்த திருஞானசம்பந்தர் முதலியோர் உருவங்களுக்குக் கொடுத்த அணிகலன்களிலுள்ள இரத்தினங்கள் தட்சிண மேரு விடங்கன் என்னும் கோயில் நிறை கல்லாலும், அவைகளைப் பொதிந்த பொன், ஆடவல்லான் என்னும் நிறை கல்லாலும் நிறுத்து அளந்து கல்லில் பொறிக்கப்பட்டன

இவர்கள், திருஞானசம்பந்தர், திருநாவுக்கரையர், நம்பியாரூரர் ஆகிய மூவர் உருவங்களுக்கும் ஒவ்வோர் உருத்திராட்ச மாலையும், நங்கை பரவையார் உருவத்திற்கு தாலி ஒன்றும், பட்டைக்காறை ஒன்றும் கொடுத்தனர். உருத்திராட்சமாலை ஒவ்வொன்றும் ஒவ்வொரு திருகாணியையும் உருத்திராட்ச மணியைக் கோத்தது; பொன் நாணில் ஒரு துவாரத்தையும் கொக்கியையும் கொண்டது; 1 கழஞ்சு 7 மஞ்சாடி எடையும், $3\frac{1}{4}$ காசு மதிப்பு முடையது. தாலியும் பட்டக்காறையும் $\frac{3}{4}$ கழஞ்சு 1 குன்றி எடையுடையனது.

53. வொன்றுட்படப் பட்டைக்காறை ஒன்று பொன் முக்கா லெ குன்றி [ரு அ] இவன் எழுந்தருளுவித்த நம்பி ஆருர ஞர்க்கு நித்தவினெத வளநாட்டு

54. வெண்ணிக் கூற்றத்து உடையார் ஸ்ரீராஜ ராஜீசுவரம் உடையார் தெவதானம் வெண்ணி நகரத்தார் யாண்டு இருபத் தொன்பதாவது வரை குடுத்த

55. பொன் ஆடவல்லான் என்னுங் கல்லால் நிறை எடுத் துக் கல்லில் வெட்டின [ருகூ] திருக்கம்பி ஒன்று பொன் கழஞ்செ மஞ்சாடியுங் குன்றி [கூ௰] திருக்கம்–

இவன் எழுந்தருளுவித்த – ஆதித்த சூரியன் செய்து வைத்த; திருஞானசம்பந்தடிகளுக்கு – திருஞானசம்பந்த சுவாமி உருவத்திற்கு; இராசேந்திர சிங்க வளநாடு: இது சோழநாட்டின் பிரிவுகளில் ஒன்று. இங்ஙனம் சோழநாடு முதலாம் இராசராசன் காலத்தில் 9 வளநாடுக ளாகப் பிரிக்கப்பட்டிருந்தது. இராசேந்திர சிங்கன் என்பது இராச ராசன் சிறப்புப் பெயர்களில் ஒன்று வளநாடுகள் நாடுகளாகவும் கூற் றங்களாகவும் பிரிக்கப்பட்டிருந்தமை "இராசேந்திர சிங்க வளநாட்டு திருவாலி நாட்டு ... பரகேசரிபுரத்து நகரத்தார்", "நித்த விநேத வள நாட்டு வெண்ணிக் கூற்றத்து ... வெண்ணி நகரத்தார்", "பாண்டியகுலா சனி வளநாட்டுத் தஞ்சாவூர் கூற்றத்துத் தஞ்சாவூர்" என வரும் தொடர் களால் அறியப்படும்.

யாண்டு இருபத்தொன்பதாவது வரை – முதலாம் இராச ராசன் ஆட்சி 29வது ஆண்டு வரையும்; அஃதாவது, 29வது ஆண்டிற்கு முன் என்பது. நக்ஷிண மேரு விடங்கன் – இரத்தின முதலியவைகளை நிறுக்கும் கோயில் நிறை கல்; ஆடவல்லான் – பொன் முதலியவற்றை நிறுக்கும் கோயில் நிறை கல். கல்லால் – நிறை கல்லால்; நிறை எடுத்து– நிறுத்துக் கணக்கிட்டு; உத்திராட்சம் – உருத்திராக்கமாலை. சுரிகட்டிற்று ஒன்றும் – உத்திராக்க மணியோடு பொருத்தப் பெற்ற திருகாணி ஒன் றும்; சுரி – திருகாணி; நாண் படு கண்ணும் – கயிற்றை இடுதற்குரிய துவாரமும்; கண் – துவாரம்; தொக்குவாயும் – கொக்கியும். (The hook of a clasp in an ornament)

53–60. வெண்ணி நகரத்தார்: வெண்ணி நகரம் தஞ்சை இராச ராசேசுவரர் கோயில் இறைவனுக்குத் தேவதானமா யமைந்தது. சோழ நாட்டில் நித்த விநேத வளநாட்டிலுள்ள வெண்ணிக் கூற்றத்தில் உள்ளது முதலாம் இராசராசன் ஆட்சியின் 29ஆம் ஆண்டு வரை இந்நகரத்தார், ஆதித்த சூரியன் இராசராசேசுவரர் கோயிலில் செய்து

56. பி. ஒன்று பொன் கழஞ்செ மஞ்சாடி [சூக] திரள் மணி
வடம் ஒன்று பொன் இரு கழஞ்செ மஞ்சாடியுங் குன்றி
[சூஉ] திருக்கைய்க் காறை ஒன்று பொன் க—
57. ழஞ்செ முக்காலெ நாலு மஞ்சாடி [சூங] திருக்கைய்க்
காறை ஒன்று பொன் கழஞ்செ முக்காலெ மூன்று மஞ்
சாடியுங் குன்றி [சூச] திருக்காற்காறை
58. ஒன்று பொன் கழஞ்செ முக்காலெ நாலு மஞ்சாடியாக
இரண்டிநாற் பொன் முக்கழஞ்செ முக்காலெ மூன்று
மஞ்சாடி [சூரு] இவன் எழுந்தருளு—
59. வித்த நங்கை பரவையார்க்குக் குடுத்தன [சூசூ] திருக்
கம்பி ஒன்று பொன் முக்காலெ இரண்டு மஞ்சாடியுங்
குன்றி [சூஎ] திருக்கம்பி ஒன்று பொன் முக்—
60. காலெ இரண்டு மஞ்சாடி [சூஅ]

வைத்த நம்பியாரூரனுர், நங்கை பரவையார் உருவங்களுக்குக் கொடுத்த அணிகலன்களிலுள்ள பொன், ஆடவல்லான் என்னும் கோயில் நிறை கல்லால் நிறுக்கப்பட்டு, கல்லில் வெட்டப்பட்டன.

இவர்கள், நம்பியாரூரர் உருவத்திற்குக் கொடுத்தவை திருக்கம்பி 2, திரள்மணி வடம் 1, திருக்கைக் காறை 2, திருக்கால் காறை 2ம், நங்கை பரவையார் உருவத்திற்குக் கொடுத்தவை திருக்கம்பி 2ம் ஆகும். இவைகளெல்லாம் பொன்னுலானவை இவற்றுள் திருக்கம்பி ஒன்று, 1 கழஞ்சு 1 மஞ்சாடி 1 குன்றி எடையும், மற்றொன்று 1 கழஞ்சு 1 மஞ்சாடி எடையு முள்ளன. திரள்மணி வடம் 2 கழஞ்சு 1 மஞ்சாடி 1 குன்றி எடையுள்ளது. திருக்கைக் காறை ஒன்று $1\frac{3}{4}$ கழஞ்சு 4 மஞ்சாடி எடையும், மற்றொன்று $1\frac{3}{4}$ கழஞ்சு 3 மஞ்சாடி 1 குன்றி எடையும் உள்ளன. திருக்கால் காறை ஒன்று $1\frac{3}{4}$ கழஞ்சு 4 மஞ்சாடியாக, 2 திருக்கால் காறைகளின் எடை $3\frac{3}{4}$ கழஞ்சு 3 மஞ்சாடி ஆகும்.

நங்கை பரவையார உருவத்திற்குக் கொடுத்த திருக் கம்பி களில் ஒன்று $2\frac{3}{4}$ மஞ்சாடி 1 குன்றி நிறையுள்ளது; மற்றொன்று $2\frac{3}{4}$ மஞ்சாடி நிறையுள்ளது. உடையார் – இறைவன்; தேவதானம் – கோயிலுக்குத் தானமாக விடப்பட்ட இறையிலி நிலம்; திருக்கம்பி – காதணி வகை; திரள்மணிவடம் – உருண்டை மணி மாலை, உருத்திராக்கமாலை.

பயிற்சி வினுக்கள்

1. முதலாம் இராசராசன் காலத்துச் சாசனங்களில் பாடமாக வந்துள்ளன யாவை? அவற்றுள் இராசராசனுல் ஏற்பட்ட சாசனம் எது?

2. பொய்கைநாடு கிழவன் யார்? அவன் சாசனம் யார் யார் காலத்தில் காணப்படுகின்றன? முதலாம் இராசராசன் காலத்து அவனுடைய சாசனம் எங்குக் காணப்படுகிறது?

3. பொய்கைநாடு கிழவன் ஆதித்த சூரியன் சாசனத்தில் (முதலாம் இராசராசன் காலத்தது) கூறப்படும் செய்திகள் யாவை? அதனுல் அறியப்படுவன யாவை?

4. பொருள் தருக:— ஸ்ரீ காரியம், ப்ரதிமங்கள், சரடு, நிறை எடுத்தல், பாதாதிகேஸாந்தம், விரல், தோரை, பத்மம், பீடம், உசரம், சம சதுரம், நம்பிராட்டியார், ஸ்ரீ ஹஸ்தம், தாழ்வடம், சுரி, காறை, கண்டிகை, பொற்பூ, பட்டிகை, குதம்பை, தேவார தேவர், திருக்கம்பி, பட்டக்காறை.

5. விளக்கி எழுதுக:— உடையார், ஸ்ரீ ராஜேராஜீஸ்வரம், பொய்கைநாடு கிழவன், தென்னவன் மூவேந்த வேளான், தக்ஷிணமேரு விடங்கன், ஆடவல்லான், நம்பியாரூரனுர், நங்கை பரவையார், பெரிய பெருமாள், சந்திரசேகர தேவர், ஒலோகமா தெவியார், திருமேனி, ப்ரபை, உத்திராக்ஷச் சுரி, நாண் படு கண்ணும் கொக்குவாயும்.

6. ஆதித்த சூரியன் எழுந்தருளிவித்த உருவங்களில் பித்தளையால் செய்யப்பட்ட உருவம் எது? பெண் உருவங்கள் எவை? அவற்றின் அளவினைக் குறிப்பிடுக.

7. பரகேசரி புரத்து நகரம், வெண்ணிநகரம் – இவை எங்கு உள்ளன? பரகேசரிபுரத்து நகரத்திற்கு வழங்கிய வேறு பெயர் யாது?

8. தேவாரம் பாடிய மூவர் யார்? நங்கைப் பரவையார் யார்? இவர்கள் உருவங்களுக்கு அணி கலன்கள் வழங்கியவர் யாவர்?

9. பரகேசரி புரத்து நகரத்தார் யார் யாருக்கு அணிகலன்கள் அளித்தனர்? வெண்ணி நகரத்தார் யார் யாருக்கு அளித்தனர்? வெண்ணி நகரத்தார் அளித்தன யாவை?

10 பொய்கை நாடு கிழவன் ஆதித்த சூரியன் சாசனத்தில் காணப்படும் அணிகலன்களின் பெயர்களைக் குறிப்பிட்டு விளக்குக.

11. தக்ஷிணமேரு விடங்கன், ஆடவல்லான் – இவை யாவை? கழஞ்சு, மஞ்சாடி, மா, குன்றி – இவற்றை விளக்குக.

6. ஸ்ரீ ராஜ ராஜ கிணறு சாசனம் *

முன்னுரை

'ஸ்ரீ ராஜ ராஜ கிணறு சாசனம்' என்பது, முதலாம் இராச ராசன் பெயரால் ஏற்பட்ட கிணற்றைப் பற்றிய சாசனமாகும். எனவே இது 'முதலாம் இராச ராசன் சாசனம்' என்று பெயர் பெற்றது. இச் சாசனம் முதலாம் இராச ராசன் காலத்தில், அவனது ஆட்சியின் 29ஆம் ஆண்டில் ஏற்பட்டது. இஃது காஞ்சிபுரத்திலிருந்து வந்தவாசிக்குச் செல்லும் பெரும் பாதையில் மாமண்டூருக்குத் தென்கிழக்கில் ஐந்து கல் தொலைவிலுள்ள உக்கல் என்னும் கிராமத்தில், இப்பொழுது அழிந்த நிலையில் இருக்கும் விஷ்ணு கோயிலின் மேலைப்புறச் சுவரில் காணப்படுகிறது. தமிழ் மொழியில் கிரந்த எழுத்துக்கள் கலந்து எழுதப் பெற்றது. ஒன்பது வரிகளை யுடையது.

இச் சாசனத்தின் முற் பகுதியில் முதலாம் இராச ராசன் போர்ச் செயல்களைக் கூறும் அவனது மெய்க்கீர்த்தி † அமைந்துள்ளது. பிற் பகுதியில் இராச ராசன் வேலையாளான கண்ணன் ஆரூரன் என்பவன் உக்கலுக் கருகில் அம்மன்னன் பெயரால் ஒரு கிணற்றையும், தொட்டியையும் அமைத்து, அக் கிணற்றுக் கருகிலுள்ள தண்ணீர்ப் பந்தலிலிருந்து தண்ணீர் வார்த்தல் முதலிய பணிகளைச் செய்பவர்களுக்குக் கூலியாகக் கொடுக்கப் பட்டு வந்த நெல் முதலிய விவரங்கள் கூறப்பட்டுள்ளன.

---

* S. I. I. Vol. III, Part I, No. 4, pp. 6—8.

ஸ்ரீ ராஜ ராஜ கிணறு: இப்பெயர் இராசகேசரி முதலாம் இராச ராசனைக் குறிக்கும். இவன் 'சுந்தரசோழன்' என்னும் இரண்டாம் பராந்தகனுக்கும் வானவன் மாதேவிக்கும் பிறந்தவன்; கி. பி. 985 முதல் 1014 வரை சோழநாட்டை ஆண்டான். தஞ்சை 'இராச ராசேசுவரம்' என்னும் பெரிய கோயிலை எடுப்பித்தவனும், சைவத் திருமுறைகளைத் தொகுப்பித்தவனு மிவனே யாவன். இவன் வரலாற்றை இதற்கு முந்திய சாசனத்தின் முன்னுரைப் பகுதியில் காண்க.

† **மெய்க்கீர்த்தி:** சீர் நான்காய் இரண்டடித் தொடையால் அரசன் மெய்ப்புக ழெல்லாஞ் சொல்லியும், முடிவில் அவன் வரலாறு சொல்லியும் அவன் மனைவியுடன் வாழ்க எனச் சொல்லியும், அவன் இயற்பெயர் முன்னர் 'ஆண்டு சிறக்க' என்று கூறியும் முடிப்பது. இதன் இலக்கணம் பன்னிருபாட்டியல், வச்சணந்தி மாலை முதலிய பாட்டியல் நூல்களில் காணப்படுகிறது. சோழ மன்னர் தங்கள் மெய்க் கீர்த்திகளில் தத்தம்

முதலாம் இராசராசன் கி. பி. 985 முதல் 1014 வரை சோழ நாட்டை ஆண்டான். இச்சாசனம் அவன் ஆட்சியில் 29ஆம் ஆண்டில் ஏற்பட்டதெனவே, இதன் காலம் கி. பி. 1014 என்னலாம்.

சாசனம்

1. ஸ்வஸ்தி ஸ்ரீ —
திருமகள் போலப்[1] பெருநிலச் செல்வியுந்
தனக்கே யுரிமை பூண்டமை மனக்கொளக்[2]

வெற்றிகளையே முறையாகக் கூறுவர். பாண்டிய மன்னரோ, தங்கள் வெற்றிகளுடன் தங்கள் முன்னோர்களின் அருஞ்செயல்களையும் உடன் சேர்த்துக் கூறுவர்.

முதலாம் இராசராசன், அவன் மகன் முதலாம் இராசேந்திர சோழன் என்பவர்கள் மெய்க்கீர்த்திகளில் 'அரசனுடன் அவன் தேவியும் வீற்றிருந்தாள்' என்ற செய்தி காணப்படவில்லை.

ஸ்வஸ்தி ஸ்ரீ – இது சாசனங்களின் துவக்கத்தில் மங்கலமாக வரும் வடமொழித்தொடர். 'ஸ்வஸ்தி' என்றும் சில சாசனங்களில் வரப்பெறும். ஸ்வஸ்தி – சுவஸ்தி; 'மங்களம் உண்டாகுக' என்பதும், 'நலம் வளர்க' (Hail prosperity) என்பதும் இதன் பொருள் என்பர். ஸ்வஸ்திகா (நல நிறைவு) என்பது இதன் திரிபே எனக் கொள்ளக் கிடக்கின்றது.

திருமகள் போலப் பெருநிலச் செல்வியும்: இது முதலாம் இராச ராசன் மெய்க்கீர்த்திகளின் துவக்கமாக வரும் தொடர். இவ்வாறு முதலாம் இராசேந்திர சோழன் கல்வெட்டுக்கள் 'திருமன்னி வளர இரு நில மடந்தையும்' என்று தொடங்கும். மெய்க்கீர்த்தியை சாசனங்களின் துவக்கத்தில் கொள்ளும் இம்முறையை முதல் முதல் அமைத்துக் காட்டியவன் முதலாம் இராசராசனே யாவான்.

திருமகள் – இலக்குமி: செல்வத்திற்குத் தலைவி. இத்தொடர் இங்கு முதலாம் இராசராசன் செல்வப் பெருக்கைக் குறித்தது. பெருநிலச் செல்வி – பூதேவி. பூமியைத் தெய்வமாகக் கூறுதல் மரபாதலின், இத்தொடர் முதலாம் இராசராசன் நாட்டுப் பரப்பைக் குறித்தது. திருமகள், நிலமகள் இருவரும் திருமாலின் தேவிகள்; திருமகளையும் நிலமகளையும் தனக்கேயுரிமை பூண்டவன் என்பதால், முதலாம் இராச ராசன் திருமாலின் அமிசம் என்று குறித்தவாறு காண்க.

மனக் கொள – பகைவர் மனம் கொள்ளும்படி; யாவரும் அறியும் படியாக எனினுமாம். [2] 'மனக் கொளக்' என்றும் பாடம்.

காந்தளூர்ச் சாலைக்[3] கலமறுத் தருளி
வேங்கை நாடுங் கங்க பாடியும்
2. தடிகை பாடியும் நுளம்ப பாடியும்[4]
குடமலை நாடுங் கொல்லமும் கலிங்கமும்

காந்தளூர்ச் சாலைக் கலமறுத் தருளி: இத்தொடருக்குப் பலரும் பலவாறு பொருள் கூறுவர். காந்தளூர் என்பது, திருவனந்தபுரத்தின் ஒரு பகுதியான 'வலியசாலை' எனறும், அச்சாலையில் உண்ணவேண்டியவர்கள் இத்தனை என்று உண்கலம் வரையறுத்த செய்தியே 'கலமறுத்தல்' என்றும் கூறுவர் ஒரு சாரார். சாலை — அறச்சாலை; கல்விச்சாலை என்பாரு முளர். கலம் — உண்கலம்; அறுத்தல் — வரையறுத்தல் இனி மற்றொரு சாரார், காந்தளூர்ச்சாலை திருவனந்தபுரத்தை யடுத்த மேலைக் கடற்கரையிலுள்ள ஒரு துறைமுகமென்றும், அதிலுள்ள சேரன் மரக்கலங்களை அழித்த செய்தியே 'கல மறுத்தல்' என்றும் கூறுவர். கலம் — மரக்கலம்; அறுத்தல் — அழித்தல்

முதலாம் இராசராசன் காந்தளூர்ச்சாலையில் தன்னை எதிர்த்த சேர மன்னனையும் அவனுக்குத் துணையாக வந்த 'அமரபுஜங்கள்' என்னும் பாண்டியனையும் வென்றான் என்று வரலாறு கூறுவதால், பின்னர் கூறிய பொருளே பொருத்தமாகத் தெரிகிறது. இவ்வாறு முதலாம் இராசேந்திரன், முதலாம் இராசாதிராசன், பராந்தகதேவபாண்டியன் என்பவர்களும் காந்தளூர்ச்சாலை கலமறுத்த மன்னர்களாவர். [3]'காந்தளூர்ச்சாலை' என்றும் பாடம்.

வேங்கை நாடு: இது கீழைச் சாளுக்கிய ராட்சியின் கீழிருந்த கோதாவரி, கிருஷ்ணை சில்லாக்கள் அடங்கிய பிரதேசம். இதனை 'வேங்கி நாடு' என்றும் கூறுவர். முதலாம் இராசராசன் இதற்கு 'வேங்கை மண்டலம்' என்று பெயரிட்டான். கங்க பாடி: இது மைசூர் இராச்சியத்தின் தென்கீழ்பாலுள்ள பகுதியாகும். காவிரிக் கரையிலுள்ள தழைக்காடு இதற்குத் தலைநகர். பல்லவருள் ஒரு பிரிவினரான கங்க அரசர்கள் இதனை ஆண்டு வந்தனர். முதலாம் இராசராசன் இதற்கு 'முடிகொண்ட சோழ மண்டலம்' என்று பெயரிட்டான்.

தடிகைப்பாடி: இதனைத் 'தடிகை வழி' என்றும் கூறுவர். இது மைசூர் சில்லாவின் பகுதிகளைக் கொண்டது. கங்கபாடிக்கும் நுளம்ப பாடிக்கும் இடையிலுள்ளது. நுளம்ப பாடி: இது கங்கபாடியை யடுத்ததும், மைசூருக்கு வட திசையின்கண் ணுள்ளதும், நுளம்பர் என்ற பல்லவர் கிளையினரால் ஆளப்பட்டு வந்ததுமான நாடு. முதலாம் இராசராசன் இதற்கு 'நிகரிலி சோழ மண்டலம்' என்று பெயரிட்டான். [4]'நுளம் பாடியும் தடிகை பாடியும்' என்றும் பாடம்.

முரட்டொழிற் சிங்கள ரீழமண் டலமும்
இரட்ட பாடி ஏழரை யிலக்கமும்
முந்நீர்ப் பழந்தீவு[5] பன்னீரா யிரமுந்
3. திண்டிறல் வென்றித் தண்டாற் [6]கொண்டதன்
னெழில்வள ரூழியு ளெல்லா யாண்டுந்

முரட்டொழில் – முரண் + தொழில்; வலிய போர்த்தொழிலே யுடைய (warlike) என்பது. இனி இதனை 'முரட்டெழில்' என்று பாடங்கொண்டு 'முரட்டுத் தன்மையும் அழகும் வாய்ந்த' என்றும் பொருள் சொள்வர். ஈழ மண்டலம் – இலங்கை நாடு; இது சிங்களவர் நிறைந்த நாடாதலால் 'சிங்கள ரீழ மண்டலம்' என்று சிறப்பிக்கப்பட்டது. இதனை அக்காலத்தில் ஆண்டவன் 'மகிந்தன்' என்னு மரசன். முதலாம் இராசராசன் அவனை வென்று இந்நாட்டிற்கு 'மும்முடிச் சோழ மண்டலம்' என்று பெயரிட்டான்.

இரட்ட பாடி: இது இராஷ்டிர கூடர் என்ற வேந்தர் ஆண்ட பம்பாய் மாகாணத்தின் தென் பகுதியாகும். இதனைத், தக்கண தேசம் (Deccan) என்றுங் கூறுவர். கி. பி. 975ல் இவர்கள் வலியைத் தொலைத்து மீண்டும் மேலைச்சாளுக்கியர் இங்கு தங்கள் ஆட்சியை நிலை நிறுத்தினர். அவருள் முதல்வன் 'இரண்டாம் தைலபன்' என்னும் ஆகவ மல்லன் ஆவன்; அவன் முதலாம் இராசராசனை வென்றதாகக் கூறுவர். அதற்கு ஆதாரமில்லை இரட்ட பாடி ஏழரை இலக்கம் என்பது, இரட்ட பாடி நாட்டின் வருவாய்த் தொகையைக் குறிக்கும் என்பர். இலக்கம் – இலட்சம். இனி, இத்தொகை நில அளவை அல்லது குடி மக்கள் அளவைக் குறிக்கு மென்பாரு முளர். இவ்வாறே 'பழந்தீவு பன்னீராயிரம்' என்பதற்கும் பொருள் கொள்க.

பழந்தீவு: இலட்சத்தீவு (Laccadives), மாலைத்தீவு (Maldives) முதலிய தீவுகளைக் குறிக்கும். இவை கடல் நடுவண் இருப்பதால் 'முந்நீர்ப் பழந்தீவு' என்று சிறப்பிக்கப்பட்டன. முந்நீர் — மழை நீர், ஊற்று நீர், ஆற்று நீர் ஆகிய முந்நீரை யுடையது; அஃதாவது, கடல்.
[5] 'முன்னீர்ப் பழந்தீவு' என்றும் பாடம்.

திண்டிறல் வென்றி – வெற்றியைத் தரும் வலிமை மிக்க : தண்டு – சேனை (Army). [6]'தண்டாற்க்' என்றும் பாடம்.

தன்னெழில்– தனது வலிமை; ஊழியுள் எல்லா யாண்டும்–ஊழிக் காலத்து எல்லா ஆண்டும்.

தொழுதக[7] விளங்கும் யாண்டே[8] செழியரைத்
தேசுகொள் கோராச கேசரி வர்மரான[9]
உடையார் ஸ்ரீ ராசராச தேவர்க்கு[10] யாண்

தொழுதக—தொழுதற்குத் தகுதியான; இனி 'தொழுதகை' (தொழு + உதகை) என்று பாடமோதி, முதலாம் இராசராசன் உதகையைக் கொண்ட வரலாற்றைக் குறிப்பர். அஃதாவது, முதலாம் இராசராசன் சேர நாட்டிற்கு அனுப்பிய தன் தூதுவனை, அப்பொழுது சேர நாட்டை ஆண்ட 'பாற்கர ரவிவர்மன்' என்பான் அவமதித்து உதகை என்னுமிடத்தில் சிறைப்படுத்தினன். அது கேட்டுப் பொருத இராசராசன் தன் சேனையுடன் சேர நாட்டின்மேல் படை எடுத்துச் சென்று, காந்தளூர் என்னுமிடத்தில் சேரனையும், அவனுக்குத் துணையாக வந்த பாண்டியன் அமரபுயங்கனையும், வென்று அச் சேரனுடைய கப்பற் படைகளையும் அழித்தான். பின் உதகைக்குச் சென்று தன் தூதுவனைச் சிறை மீட்டான் என்பது. இவ் உதகை, திருவாங்கூர் இராட்சியத்திலுள்ள கல்குளம் தாலூகாவில் நாகர்கோயிலுக்கு வடமேற்கேயுள்ள ஒரு நகரமாகும். யாண்டே — எவ்விடத்தும். செழியர் — பாண்டியர்.
[7] தொழுதகை', [8] 'யாண்டே' என்றும் பாடம்.

தேசுகொள் — வெற்றிகொண்ட; தேசு - ஒளி; இங்கு அது வெற்றியால் கொண்ட புகழைக் குறிக்கும். கோ - பேரரசன் ; ராசகேசரி வர்ம: இது முதலாம் இராசராசனுக்குரிய பட்டப்பெயர். சோழ அரசர்கள் தங்கள் இயற்பெயர்களுக்கு முன் இராசகேசரி, பரகேசரி என்ற பட்டப் பெயர்களை மாறிமாறித் தரித்து வந்தனர் அதாவது, இராசகேசரி முதலாம் இராசராசன் மகன், பரகேசரி இராசேந்திர சோழன் என்று அழைக்கப்பட்டான். 'இராசகேசரி' என்பது அரசர்களுக்குள் சிங்கம் போன்றவன் என்றும், 'பரகேசரி' என்பது பகைவர்களுக்குச் சிங்கம் போன்றவன் என்றும் பொருள் கொள்ளப்படும். இவ்வாறே பிற்காலத்துப் பாண்டிய மன்னர்களும் மாறவர்மன், சடையவர்மன் என்னும் பட்டப் பெயர்களை மாறி மாறித் தரித்து வந்தனர். இம்முறைகளினால் இன்ன அரசருக்குப் பின் இன்ன அரசர் பட்ட மெய்தினர் என்பதை நாம் எளிதில் அறிந்து கொள்ள முடிகிறது வர்மன் - அரசன்.
[9] 'ஸ்ரீகோ ராஜகேஸரி வர்மரான' என்றும் பாடம்.

உடையார்: சோழ அரசர்கள், சாசனங்களில் பெரும்பாலும் 'உடையார்' என்றே குறிக்கப்படுவர். இது இறைவனுக்குரிய பெயர். அரசரும் தெய்வ அமிசமுடையவராதலின் 'உடையார்' எனப்பட்டனர். இஃது ஆங்கில அரசர்கள் 'மாட்சிமைதங்கிய' (His Majesty) என்று அழைக்கப்படுவது போன்றதாகும். சில சாசனங்களில் அவர்கள் "சர்க்கரவர்த்தி

4\. டு உ௰௯ ஆவது, ஜயங்கொண்ட சோழ[11] மண்டலத்துக்

கள்'' என்றும், 'கோநேர் இன்மை கொண்டான்' என்றும் குறிக்கப் பட்டுள்ளனர். அவர்கள் 'திரிபுவனச் சக்கரவர்த்திகள்' என்று அழைக்கப் பட்டது, முதலாம் இராசேந்திரசோழனுக்குப் பிற்பட்ட காலத்திலாகும். ஸ்ரீ ராசராச தேவர்க்கு யாண்டு – இராச ராச தேவர் ஆட்சியின் ஆண்டு; 'ஸ்ரீ' என்பது, சில விசேடித்த பெயர்களுக்கு முன் அதன் சிறப்பைக் குறித்ததற்கு வழங்கும் ஒரு வடசொல் 'திரு' என்பது அதற்குரிய நேர் தமிழ் மொழிபெயர்ப்புச்சொல். [10] 'ஸ்ரீ ராஜராஜ தேவர்க்கு' என்றும் பாடம்.

இதுவரைச் சொல்லப்பட்ட செய்யுள் வடிவமான பகுதி முதலாம் இராசராசன் மெய்க்கீர்த்தியாகும். இதில் முதலாம் இராசராசன் காந்தளூர்ச் சாலைக் கல மறுத்தது, வேங்கை நாடு, கங்க பாடி, தடிகை, பாடி, நுளம்ப பாடி, குடமலை நாடு, கொல்லம், கலிங்க நாடு, இரட்ட பாடி பழந்திவு, பாண்டியநாடு ஆகியவற்றை வென்றது முதலிய அவனது வெற்றிச் செயல்கள் முறையே குறிக்கப்பட்டுள்ளன.

யாண்டு உ௰௯ஆவது: இருபத்தொன்பதாவது ஆண்டு; இது முதலாம் இராசராசன் ஆட்சியின் இறுதி ஆண்டாகும்.

ஜயங்கொண்ட சோழ மண்டலம்: 'சயங்கொண்ட சோழன்' என்பது முதலாம் இராசராசனுக்குரிய பட்டப் பெயர்களில் ஒன்று: தொண்டை நாட்டை வென்ற அவன் இப்பெயரால் அதனைச் 'சயங் கொண்ட சோழ மண்டலம்' என்று அழைத்தான். [11] 'சோள' என்றும் பாடம்.

முதலாம் இராசராசன் காலத்திலும், அவன் மகன் இராசேந்திர சோழன் காலத்திலும், சோழ இராச்சியம் ஒன்பது மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டிருந்தது. அவை சோழ மண்டலம், சயங்கொண்ட சோழ மண்டலம் (தொண்டைநாடு), இராசராசசோழமண்டலம் (பாண்டியநாடு) மும்முடிச் சோழமண்டலம் (இலங்கைநாடு), முடிகொண்ட சோழ மண்ட லம் (கங்கவாடி), நிகரிலி சோழமண்டலம் (நுளம்பபாடி),வேங்கைமண்ட லம் (வேங்கி நாடு), மலை மண்டலம் (சேர நாடு), அதிராசராச மண்டலம் (கொங்கு நாடு) என்பன. ஒவ்வொரு மண்டலமும் பல வளநாடுகளாகவும், ஒவ்வொரு வளநாடும் பல நாடுகளாகவும் பிரிக்கப்பட்டிருந்தன. நாடு களில் சில கூற்றங்கள் எனவும் வழங்கி வந்தன. ஒவ்வொரு நாடும் சில தனியூர்களாகவும், பல சதுர்வேதி மங்கலங்களாகவும் பிரிக்கப்பட்டிருந் தன. தொண்டை மண்டல மட்டும் பழைய முறைப்படி இருபத்து நான்கு கோட்டங்களாகவே பிரிக்கப்பட்டிருந்தது.

காலியூர்க் கோட்டத்துத் தனியூர் உசாலாகிய ஸ்ரீ விக்கிரமாபரணச் சதுர்வேதி மங்கலத்தின் மேலே-

5. ப் பெருவழியில் ஸ்ரீ ராஜராஜதேவர் திருநாமத்தால்[12] கிணறுந் தொட்டியும் சமைப்பித்தான் உடையார் ஸ்ரீ ராஜராஜ தேவர் பணிமகன், சோழ மண்டலத்து தென் கரை நாட்டு நித்தா

காலியூர்க் கோட்டம்: தொண்டை மண்டலத்து இருபத்துநான்கு கோட்டங்களுள் ஒன்று. 'கோட்ட'மென்பது இக்கால 'மாவட்டம்' (District) போன்றது. தனியூர் உசால்: தன்னாட்சியையுடைய பெருநகர்; இது பல சிற்றூர்களைக் (A Village forming its own sub-division). கொண்டிருந்தது. அன்றியும் 'உசால்' என்பதை 'உக்கல்' என்பதன் மரூஉ வெனக் கொண்டு, 'தனியூராகிய உக்கல்' என்பாரு முளர்.

ஸ்ரீ விக்கிரமாபரணச் சதுர்வேதி மங்கலம்: இது ஒரு தனியூர் உசால்; சயங்கொண்ட சோழ மண்டலத்திலுள்ள காலியூர்க் கோட்டத்தைச் சேர்ந்தது. 'சதுர்வேதி மங்கல' மென்றமையின், இது அந்தணர் குடியிருக்கு மிடமென்பது வெளிப்படை. இவ்வூர் இப்பொழுது 'உக்கல்' என்ற பெயரோடு வடார்க்காட்டுச் சில்லாவிலுள்ள மாமண்டூரை யடுத்துக் காணப்படுகிறது. தனியூர், சதுர்வேதிமங்கலம் என்பனவற்றிற்கு வட்டம் (Circle) எனப் பொருள் கொள்வாரு முளர்.

மேலைப் பெரு வழியில் – மேற் றிசைக்கண் ணுள்ளதான பெரும் பாதையில். பெருவழி – Road.

திரு நாமத்தால் – பெயரால். [12]'திருநாமத்தால்க்' என்றும் பாடம். சமைப்பித்தான் – அமைத்தவன்; பணிமகன் – வேலைக்காரன் (Servant).

சோழ மண்டலம்: இது தஞ்சாவூர், திரிச்சிராப்பள்ளிச் சில்லாக்களைத் தன்பால் கொண்டது; சோழ இராச்சியத்தின் ஒன்பது மண்டலங்களில் ஒன்று; இராசேந்திர சிங்க வளநாடு, இராசாச்ரய வளநாடு, நித்தாவிநோத வளநாடு, சத்திரிய சிகாமணி வளநாடு, உய்யக் கொண்டான் வளநாடு, அருண்மொழித் தேவ வளநாடு, கேளாந்தக வளநாடு, இராசராச வளநாடு, பாண்டிய குலாசனி வளநாடு என ஒன்பது வளநாடுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது. இவ் வளநாடுகளின் பெயர்களெல்லாம் இராசராச சோழனின் இயற்பெயரும், பட்டப் பெயர்களுமேயாம்.

தென்கரை நாடு: இது நித்தா விநோத வளநாட்டின் மற்றொரு பெயர் என்று கருத இடம் தருகிறது; காவிரியின் தென்கரையில் உள்ளது போலும். நித்தா விநோத வளநாடு: 'நித்தா விநோதன்' என்ற முதலாம்

6. விநோத வள நாட்டு ஆவூர்க் கூற்றத்து ஆவூருடையான் கண்ணனாரூரன். இவனே ஸ்ரீ ராஜராஜ கிணற்றில்[13] தொட்டிக்கு நீர் இறைப்பார்க்கு அருமொழி தேவன்[14] மரக்காலால் நிசதம் நெல் ஐ உ ங ஆக
7. திங்கள் சூ க்கு நெல் ஐ ரூய களம், ஸ்ரீராஜராஜன் தண்ணீ ரட்டுவார்க்கு நிசதம் நெல் ஐ உ ங ஆக திங்கள் சூக்கு நெல்லு[15] ரூய களம், இப்பந்தலுக்கு குசக்கலம் இடு

இராசராசன் பட்டப்பெயரால் பெயர் பெற்ற வளநாடு இது சோழ மண்டலத்தைச் சேர்ந்தது; தஞ்சைத் தாலூகாவின் கீழ்ப் பகுதியையும், பாவநாசந் தாலூகாவின் மேல் பகுதியையும், மன்னார்குடி தாலூகாவின் வட பகுதியையும், அரிசிலாற்றின் தென் பகுதியையும் இடமாகக் கொண்டது.

ஆவூர்க் கூற்றம்: வளநாட்டின் பிரிவான நாடுகளில் சில 'கூற்றங்கள்' என்றும் அழைக்கப்படுமாதலின், இது நித்தா விநோத வளநாட்டின் ஒரு கூறு எனலாம் வெண்ணிக்கூற்றம், பாம்புணிக்கூற்றம், நல்லூர் நாடு, கரம்பை நாடு, முடிச்சேர் நாடு என்பன அந்நாட்டின் ஏனை உட்பிரிவுகளாகும். எனவே சோழநாடு மண்டலம், வளநாடு, நாடு அல்லது கூற்றங்களாகப் பிரிக்கப்பட்டிருந்த தென்பது போதரும். ஆவூர்க் கூற்றம் தஞ்சைச் சில்லா பாவநாசந் தாலூகாவில் தேவாரப்பாடல் பெற்ற ஆவூரைத் தலைநகராகக் கொண்ட நிலப்பரப்பாகும். இரும்புதலை, விளத்தூர் முதலியனவும் இக்கூற்றத்தில் உள்ளனவாகக் கல்வெட்டுகளில் காணப்படுகின்றன.

கண்ணன் ஆரூரன்: முதலாம் இராசராசனுடைய பணிமகன் இவன் இயற்பெயர் கண்ணன் என்பது. இவனுக்குச் சொந்தவூர் சோழ மண்டலத்துத் தென்கரை நாட்டு நித்தா விநோத வளநாட்டு ஆவூர்க் கூற்றத்திலுள்ள ஆவூராகும். ஆவூர் என்பதே ஆரூர் என்று மருவி, இவன் 'கண்ணன் ஆரூரன்' என்று அழைக்கப்பட்டான் போலும். முதலாம் இராசராசனது ஆட்சியின் இருபத்தொன்பதாவது ஆண்டில் அவன் பெயரால் ஸ்ரீ விக்கிரமாபரணச் சதுர்வேதி மங்கலம் என்னும் பெருநகரின் மேலைப் பெருவழியில் இவன் ஒரு கிணறும் தொட்டியும் அமைத்து, அதிலிருந்து நாள்தோறும் நீர் வார்ப்பதற்கு ஏற்பாடு செய்தான் என்று தெரிகிறது. [13] 'ஸ்ரீ ராஜ ராஜ கிணற்றில்த்' என்றும் பாடம்.

அருமொழி தேவன் மரக்கால்: முதலாம் இராசராசன் இயற்பெயர் 'அருண்மொழித் தேவன்' என்பது; அப்பெயரால் அவன் அரண்மனை மரக்கால் 'அருண் மொழித் தேவன் மரக்கால்'[14] எனப்பட்டது. அதற்கு மற்றொரு பெயர் 'இராசகேசரி மரக்கால்' என்பது.

8. வார்க்கு திங்கள் க க்கு நெல்லு 'வத' ஆக திங்கள் சூ க்கு நெல் ச களம், ஸ்ரீராஜராஜன் கிணற்றுக்கும் தொட்டிக்கும் சேதத்துக்கும் ஆட்டாண்டு தோறும் புதுக்குப் புறமாக வைச்ச

9. நெல்லு உ கள வத ஆக ஐ சூயசூ கள வத. இந் நெல்லுக்கு இவன் பக்கம் இவ்வூர் ஸபையோம் இறை திர

தொட்டிக்கு .... ஆக ஐ சூயசூ கள வத: தொட்டிக்கு நீர் இறைப்பார்க்கு நாளொன்றுக்கு 2 குறுணியாக 6 திங்களுக்கு 30 கலம் நெல்லும், ஸ்ரீ ராசராசன் பெயரால் நீர் அட்டுவார்க்கு நாளொன்றுக்கு 2 குறுணியாக 6 திங்களுக்கு 30 கலம் நெல்லும், குசக்கலம் இடுவார்ச்குத் திங்கள் ஒன்றுக்கு 2 தூணியாக 6 திங்களுக்கு 4 கலம் நெல்லும், ஆண்டு தோறும் புதுக்குவார்க்குப் புறமாக 2 கலம் 2 தூணி நெல்லுமாக மொத்தம் 66கலம் 2தூணி நெல் என்பது. நிசதம்-நாள்தோறும் (Daily). ஐ-நெற்கலம்; ங - குறுணி திங்கள் - மாதம்; கள - கலம்; அட்டுவார் - வார்ப்பார்; குசக்கலம் இடுவார் - பானை வனைந்து கொடுக்கும் குயவர்; குசக்கலம் - மட்பாண்டம்; வத - 2 தூணி அல்லது 8 குறுணி. குறுணி-மரக்கால். 1 தூணி - 4 மரக்கால் இதனால் ஆண்டில் ஆறு மாதங்களுக்கே தண்ணீர்ப் பந்தல்கள் நடைபெற்றன வென்று தெரிகிறது.

கிணற்றுக்கும் தொட்டிக்கும் சேதத்துக்கும் - கிணறு, தொட்டி ஆகியவைகளின் சேதத்துக்கு. ஆட்டாண்டுதோறும் -- ஆண்டாண்டு தோறும். புதுக்குப்புறமாக--பழுதுபார்ப்பதற் குரிய பொருளாக, கோயில் முதலியவற்றைப் புதுப்பித்ததற்கு வைத்த தருமச் சொத்தாக; புதுக்குதல் - புதுப்பித்தல், பழுது பார்த்தல். புறம் - இறையிலி நிலம்; மடப்புறம்' என்பதில் வரும் 'புறம்' என்பதற்கும் இப்பொருளே அமைதல் காண்க. வைச்ச - குறித்த. [15] 'நெல்' என்றும் பாடம்

இவன் பக்கல் – கண்ணனூரானிடத்து; இவ்வூர் ஸபையோம்: ஸ்ரீ விக்கிரமாபரணச் சதுர்வேதி மங்கலமென்னும் பெருநகர்ச் சபையினராகியாம்; இவர்கள் கிராம மக்களால் குடவோலையின் மூலம் ஆண்டு தோறும் தெரிந்தெடுக்கப்பட்ட ஐம்பெரும் குழுவினராவர். கிராமங்களிலுள்ள குளம், தோட்ட முதலிய போதுவிடங்கள் இவர்கள் மேற்பார்வையில் இருந்து வந்தன. கிராம ஆட்சியே இவர்கள் கையில் இருந்ததெனலாம்.

இறை திரவியம் - வரிப்பொருள்; கிரய திரவியம் – விலைப்பொருள் இங்குத் 'திரவியம்' என்பதால், விளைபொருளின் ஒரு பகுதியையே வரி,

விளைபொருளின் ஒரு பகுதியையே வரியாகக் கொடுத்து வந்தன ரென் பது தெரிகின்றது. இறை – வரி (Revenue); இறை இழிய்ச்சி - வரி யின்றி யாக்கி (having exempted from taxes).

பயிற்சி வினுக்கள்

(1) சாசனங்களின் ஆரம்பத்தில் செய்யுள் வடிவா யமைந்த பாகத் திற்கு என்ன பெயர்? அதன் இலக்கணம் யாது? அவ்விலக்கணம் எங்குக் காணப்படுகிறது? (2) மெய்க்கீர்த்தியை முன்னர் எழுதி அதனை அடுத் துச் சாசனம் தொடங்கும் வழக்கம் யார் காலத்தில் ஏற்பட்டது? (3) கல் வெட்டுக்களில் காணப்படும் மங்கல மொழிகள் யாவை? அவற்றின் பொருள் என்ன? (4) முதலாம் இராசராசன் மெய்க்கீர்த்தியின் முதற் குறிப்பு யாது? (5) ஸ்ரீ ராசராசன் எந்தெந்த நாடுகளை வென்ருன்? (6) முதலாம் இராசராசன் காலத்தில் கப்பல்கள் இருந்தன என்பதனைச் சான்றுகள் காட்டி விளக்குக. (7) 'காந்தளூர்ச் சாலைக் கலமறுத் தருளி' காந்தளூர் எவ்விடத்திலுள்ளது? இத்தொடருக்கு என்னென்ன பொருள் கள் கூறப்படுகின்றன? உரிய பொருள் யாது? (8) 'இரட்ட பாடி ஏழரை யிலக்கம்', முன்னீர்ப் பழந்தீவு பன்னீராயிரம்' – இங்கு ஏழரை யிலக்கம்' 'பன்னீராயிரம்' - என்னும் தொகைகள் எதனைக் குறிக்கும்? (9) ஈழ மண்டலம், பழந்தீவு - இவை சாசனங்களில் எவ்வாறு சிறப்பிக்கப்பட் டுள்ளன? (10) 'ஸ்ரீ விக்கிராபரணச் சதுர்வேதி மங்கலம்' எங்குள்ளது? சதுர்வேதி மங்கலம்' என்பதை விளக்கி எழுதுக. (11) இராசராசன் திருநாமத்தால் கிணறும் தொட்டியும் சமைப்பித்தவன் எவன்? எவ் விடத்து? (12) ஸ்ரீ ராச ராச தேவன் கிணறு காரணமாக ஆரூருடை யான் எவர் எவர்க்கு என்னென்ன ஊதியம் ஏற்படுத்தியிருந்தான்? (13) 'ஊர்ச் சபையோம்' – இவர்கள் யாவர்? இவர்களின் கடமை என்ன? (14) நெற்கலம், குறுணி, கலம், நாணி - இவற்றிற்குச் சாசனங்களில் குறிக்கப்பற்ற அடையாளங்கள் யாவை? (15) ஸ்ரீ ராசராசன் காலத்து முகத்தலளவைகள் யாவை? அவன் காலத்து மரக்காலுக்குப் பெயர் என்ன? (16) செயங்கொண்ட சோழ மண்டலத்திற்கும், சோழ மண்ட லத்திற்கும் உள்ள உட்பிரிவுகளின் பெயர் வேற்றுமையைத் தெரிவிக்க. (17) குறிப்பு வரைக.– நித்தா விநோத வளநாடு, கோட்டம், கூற்றம், தனியூர் உசால், கண்ணன் ஆரூரன், அருமொழி தேவன் மரக்கால், (18) பொருள் தருக:– பெருநிலச் செல்வி, செழியர், பணிமகன், அட்டு வார், நிசதம், குசக்கலம், புதுக்குப் புறம், இறை திரவியம், இறை இழிய்ச்சி, (19) கிணறுந் தொட்டியும் சமைப்பித்தமை பற்றிய கல் வெட்டால் அறியப்படும் சிறப்புச் செய்திகள் யாவை?

7. மேற்பாடி யாகிய இராசாச்ரயபுரத்து நகரத்தார் சாசனம்*

முன்னுரை.

இராசாச்ரயபுரத்து நகரத்தார் சாசனம் என்பது, மேற்பாடி[1] என்னும் இராசாச்ரய புரத்து நகரத்தார், அவ்வூர்த் திரு அரிஞ்சயேச்சுவரத்து மகாதேவர் கோவிலுக்குக் கொடுத்த தேவதானத்தைப் பற்றிய சாசனமாகும். இச்சாசனம், இராசராசகேசரி வர்மர் என்னும் சிறப்புப் பெயரையுடைய முதலாம் இராசராசன்[2] காலத்தில், அவன் ஆட்சியின் 29 ஆம் ஆண்டில் ஏற்பட்டது. வட ஆர்க்காடு மாவட்டத்திலுள்ள திருவல்லம் என்னும் ஊருக்கு வடக்கே ஆறு கல் தொலைவில் இருக்கும் மேற்பாடி என்னும் ஊரிலுள்ள சோழேச்சுவரர் கோயில் கருப்பகிருகத்தின் அடிச் சுவரில் காணப்படுகிறது. தமிழ் மொழியில் கிரந்த எழுத்துக்கள் கலந்து எழுதப்பட்டது; மூன்று பத்திகளாக அமைந்தது.

இச் சாசனத்தின் முற்பகுதியில், முதலாம் இராசராசன் வெற்றிகளைக் கூறும் அவனது மெய்க்கீர்த்தி அமைந்துள்ளது.

S. I. I., Vol. III, Part I, No. 15, PP. 22–24.

1. **மேற்பாடி:** இவ்வூர் வட ஆர்க்காடு மாவட்டத்திலுள்ள திருவல்லதிற்கு வடக்கே ஆறு கல் தொலைவில் உள்ளது. இராஷ்டிர கூட மன்னனான மூன்றாம் கிருஷ்ண தேவன் கி.பி. 959ல் இந்த வூரில் வந்து பாடி யமைத்து இருந்ததாக வரலாறு கூறுகின்றது. அன்றியும், அருகர் கடவுள் வழிபாடு செய்து வந்த வள்ளிமலை இவ்வூருக்கு மேற்கில் ஒரு கல் தொலைவில் இருக்கிறது. இங்கு இரு சிவன் கோயில்கள் உள்ளன. அவற்றுள் பெரியது சோமநாதீச்சுவரர் கோயில் எனப்படும். அதில் இப்பொழுதும் இறை வழிபாடு நடைபெற்று வருகிறது. அடுத்த கோயில் அளவில் சிறியது. சோழேச்சுவரர்கோயில் என்று வழங்குகிறது. அதன் பழைய பெயர் 'அரிஞ்சயேச்சுவரம்' என்பது தென்னிந்திய கல்வெட்டுக்களின் மூன்றாம் தொகுதியிலுள்ள 15, 16, 17, 18 ஆம் கல்வெட்டுக்கள் சோழேச்சுவரர் கோயிலிலும், 19 ஆம் கல்வெட்டு சோமநாதீச்சுவரர் கோயிலிலும் உள்ளது இவற்றுள் 18 ஆம் கல்வெட்டு ஒன்றும் முதலாம் இராசேந்திரன் காலத்தது; ஏனைய நான்கும் முதலாம் இராசராசன் காலத்தவை யாகும்.

2. முதலாம் இராசராசன் வரலாற்றை இந்நூலிலுள்ள ஐந்தாம் சாசனத்தின் முன்னுரைப் பகுதியில் காண்க.

பிற்பகுதியில், முதலாம் இராசராசன் அவன் பாட்டனுன அரிஞ் சய சோழன் பெயரால் மேற்பாடியில் கட்டிய திரு அரிஞ்சய சோழேச்சுவரர் கோயிலுக்கும், அதன் திருச்சுற்றுலயம், திரு முற்றம், திருநந்தன வனம், ம ட வி ள ா க ம் ஆகியவற்றுக்கும் 5136½ குழி நிலத்தை இறையிலி தேவதானமாக அவ்வூர்ச் சபையார் கொடுத்த செய்தி கூறப்படுகிறது.

இச் சாசனத்தால், மே ற் பா டி யூ ர், முதலாம் இராச காலத்தில் அவன் சிறப்புப் பெயரால், இராசாச்ரயபுரத்து நகரம், என்று அழைக்கப் பட்டுள்ளமையும், அவ்வூரிலுள்ள ஒரு வீதியும் ஒரு கோயிலும் அவன் சிறப்புப் பெயர்களால் மும்முடிச் சோழப் பெருந் தெரு என்றும், சோழேந்திர சிம்ம ஈஸ்வரம் என்றும் பெயர்கள் பெற்றுள்ளமையும், முதலாம் இராசராசன் எடுத்த கோயிலுக்கு ஊரார் நிலங்கொடுத்து உதவி, அதனல் கோயில் கட்டுவதற்கு அக்கால அரசரும் குடிகளும் ஒன்று பட்டுள்ளமையும் ஆகிய செய்திகள் அறியப்படுகின்றன.

முதலாம் இராசராசன் கி. பி. 985 முதல் 1014 வரை சோழ நாட்டை ஆண்டான். இச்சானம் அவன் ஆட்சியின் 29ஆம் ஆண்டு ஏற்பட்ட தெனவே, இதன் காலம் கி. பி. 1014ஆம் ஆண்டு என்னலாம்.

சாசனம்

ஸ்வஸ்தி ஸ்ரீ
திருமகள் பொலப் பெருநிலச் செல்வியுந்
தனக்கெ யுரிமை பூண்டமை மனக்கொள்க்
காந்தளூர் சாலை கலமறுத் தருளி
வெங்கை நாடுங் கங்க பாடியு
நுளம்ப பாடியும் தடிக பாடியும்

குறிப்புரை

ஸ்வஸ்திஸ்ரீ — மங்களம் உண்டாக; 'நலம் வளர்க' எனினுமாம். திருமகள் — செல்வச் சிறப்பு; பெருநிலச்செல்வி - நாட்டுச்சிறப்பு; உரிமை பூண்டமை — உரிமையாகக் கொண்டமையை; மனக்கொள் — மனத்தி லே கொண்டு; காந்தளூர்சாலை கலமறுத்தருளி — காந்தளூர் என்னும் ஊரிலுள்ள உண்ணும் சாலையின்கண் உண்பார் இத்துணைய ரென வரை யறுத்து; காந்தளூர், சேரநாட்டின் கடற்கரையி லுள்ளது. கலம்— உண்கலம்.

வேங்கை நாடு : இஃது கீழைச் சாளுக்கியர் ஆண்ட நாடு; கங்க பாடி: கங்கர் என்ற பல்லவ வகுப்பினர் ஆண்ட நாடு; நுளம்பபாடி — நுளம்பர் என்ற பல்லவ வகுப்பினர் ஆண்ட நாடு. தடிக பாடி —

குடமலை நாடுங் கொல்லமுங் கலிங்கமு
மெண்டிசை புகழ்தர வீழமண் டலமு
மிரட்ட பாடி யெழரை யிலக்கமுந்
திண்டிறல் வென்றித் தாண்டாற்க் கொண்டதந்
னெழில்வள ரூழி எல்லா யாண்டுந்
தொழுதகை விளங்கும் யாண்டெய் செழியரைத்
தெசுகொள் ஸ்ரீகொவி ராஜராஜ கெஸரிபந்ம
ராந ஸ்ரீ ராஜராஜ தெவர்க்கு யாண்டு
உ௰கூ ஆவது ஜயங்கொண்ட சொழ மண்டலத்துப்

தடிகை பாடி; இஃது கங்க பாடிக்கும் நுளம்பபாடிக்கும் இடையிலுள்ள ஒரு சிறு நாடு; 'தடிகை வழி' என்றும் சொல்லப்படும். குடமலை நாடு: கொங்காள்வார் என்னும் மரபினர் ஆண்ட நாடு; 'கொங்கு நாடு' எனவும் வழங்கும். கொல்லம் : சேரநாட்டின் ஒரு பகுதியாய் மேலைக் கடற் கரையிலுள்ள தொரு சிறு நாடு. கலிங்கம் – கலிங்க நாடு; கோதாவரிக் கும் மகா நதிக்கும் இடையிலுள்ளது; கீழைச் சாளுக்கியர் ஆட்சிக்குட் பட்டது. ஈழ மண்டலம் – இலங்கை நாடு; சிங்கள வகுப்பினர் வாழும் நாடு. இரட்டபாடி ஏழரை யிலக்கம் : மகாராஷ்டிர வகுப்பினரான இராஷ்டிர கூடர் ஆண்ட நாடு; எழரை யிலக்கம் வருவாயை யுடையது.

தண்டு - சேனை; செழியர் – பாண்டிய மன்னர்; முதலாம் இராச ராசன் பாண்டியரைப் பல தடவை வென்றுளனாதலின், 'செழியர்' எனப் பன்மையால் கூறப்பட்டனர். தேசு – வெற்றி; புகழ் எனினுமாம்.

இராஜராஜகேஸரி பந்மரான ஸ்ரீராஜராஜ தேவர்: இராசகேசரி, இராசராசன் என்பன முதலாம் இராசராசனுக்கு வழங்கிய பட்டப் பெயர்கள்; 'அருண்மொழிதேவன்' என்பது அவனது இயற் பெயர்.

ஜயங்கொண்ட சோழ மண்டலம்: இஃது தொண்டை மண்டலத் திற்கு முதலாம் இராசராசன் இட்டபெயர். செயங்கொண்ட சோழன் என்பது அவனுடைய சிறப்புப் பெயர்களுள் ஒன்று. பெரும் பாணப்பாடி; இது தமிழ் நாட்டிற்கும் தெலுங்கு நாட்டிற்கும் இடையிலுள்ளது. இதனைக் கி.பி. நான்காம் நூற்றாண்டு முதல் பெரும்பாணர் என்ற வகுப் பினர் ஆண்டு வந்தனர். பல்லவ மல்லன் காலத்தில் பெரும்பாண பாடிக்கு மகதநாடு என்றும், அதன் தலைநகருக்கு ஆறை நகர் என்றும் பெயர்கள் வழங்கின. அதனால் அதை ஆண்ட மன்னர் 'மகதேவர்' என்றும், 'ஆறைக் காவலர்' என்றும் அழைக்கப் பட்டனர். வாணாதி ராயர் என்றும் அவர்கள் பெயர் பெற்றிருந்தனர். முதலாம் இராசராசன் காலத்தில், இப்பகுதி செயங்கொண்ட சோழ மண்டல மென்னும்

பெரும் பாணப் பாடித் தூஞாட்டு மெற்ப்பாடியாகிய ராஜாச்ரய புரத்து நகரத்தொம் ஆற்றூர்த் துஞ்சின தெவர்க்குப் புள்ளிபடையாக உடையார் ஸ்ரீ ராஜராஜ தெவர் எங்கள்

தொண்டை நாட்டின் ஒரு பகுதியாய் விளங்கிற்று இப்பொழுது இது செங்கல்பட்டு மாவட்டத்தில், பாலாற்றின் உபநதியான நூவா நதியின் மேல் கரையில் 'திருவல்லம்' என்ற பெயரோடு வழங்குகிறது. இதற்கு வாணபுரம் என்ற மற்ருெரு பெயருமுண்டு; 'திக்காளி வல்லம்' என்றும் இதனை அழைப்பர்.

தூநாடு – பெரும்பாணப்பாடி என்னும் நாட்டின் பிரிவுகளில் இஃது ஒன்று. இதனை 'தூய் நாடு' என்றும் வழங்குவர். இராசாச்ரய புரம்: இது மேற்படி என்னும் ஊருக்கு முதலாம் இராசராசன் காலத்தில் வழங்கிய பெயர். இராசராசனுக்குரிய இடம் என்பது இதன் பொருள். அருண்மொழிதேவருக்குரிய சிறப்புப் பெயர்களில் இராசராசன் என்பது ஒன்று. இவ்வாறே 'மும்முடிச் சோழன்' என்னும் இவனுடைய சிறப்புப் பெயரால், இவ்வூரிலுள்ள ஒரு பெருந் தெருவும், 'சோழேந்திர சிங்கன்' என்னும் சிறப்புப் பெயரால் ஒரு கோயிலும் அழைக்கப் பட்டுள்ளமையும் இச்சாசனத்தால் அறியப்படுகிறது.

ஆற்றூர்த் துஞ்சின தெவர்– ஆற்றூர் என்னும் இடத்தில் இறந்த மன்னன்; இவன் அரிஞ்சய சோழன் என்பது, முதலாம் இராசராசன் இவனை நினைவுகூர்வதற்காக மேற்பாடியில் இவன் பெயரால் ஒரு கோயில் எடுத்துள்ளமையால் தெரிகிறது. இவன் முதற்பராந்தக சோழனுடைய மூன்றும் புதல்வன்; பரகேசரி பட்டம்பெற்றவன். கி. பி. 956 முதல் 957 வரை சோழநாட்டை ஆண்டான்; தன் தந்தையிடமிருந்து இராஷ்டிர கூட மன்னனுன மூன்றும் கிருஷ்ண தேவன் வென்ற தொண்டை நாட்டையும் திருமுனைப்பாடி நாட்டையும் வெல்லக் கருதிப் போருக்குச் சென்று அப்போரில் இவன் இறந்தான் என்று தெரிகிறது. இவன் இறந்த இடம் வட ஆர்க்காடு மாவட்டத்திலுள்ள ஆற்றூர்; எனவே, இவன் 'ஆற்றூர்த் துஞ்சிய தேவர்' என்று அழைக்கப்பட்டான். பள்ளி படையாக–ஞாபகார்த்தமாகக் கட்டப்பட்ட கோயிலாய்; பள்ளிபடை என்பது, இறந்த அரசரின் ஞாபகார்த்தமாகக் கட்டப்படும் (Temple elected in memory of kings) கோயிலாகும்.

உடையார் ஸ்ரீ ராஜ ராஜ தேவர் – முதலாம் இராசராச சோழன்; இவன் தன் பாட்டனை அரிஞ்சய சோழனது ஞாபகார்த்தமாக, மேற்பாடி என்னும் இராசாச்ரய புரத்தில் ஒரு கோயிலைக் கட்டி, பல நிவந்தங்களும் வழங்கினன். அது அரிஞ்சய சோழன் பெயரால் 'அரிஞ்சயேச்சுரம்' என்று வழங்கிற்று. இக்காலத்தில் அது 'சோழேச்சுரம்' என்று வழங்குகிறது; மிகவும் அழிந்த நிலையில் உள்ளது.

நகரத்தி லெடுப்பித் தருளின திரு அறிஞ்சிகை ஈஸ்வரத்து மஹாதெவர் ஸ்ரீ கொயிலுக்குந் திருச்சுற்றுலைக்குந் திருமுற்றத்துக்குந் திருநந்தன வனத்துக்கும்

2. மடவிளாகத்துக்குமாக நாங்களித் தெவற்குக் குடுத்த நிலத்துக் கெல்லை நுகாவென்னு மாற்றுக்கு மெற்கும் இவ்வூர் மும்மடி சொழப் பெருந்தெருவில் வியாபாரி ஆச்

எடுப்பித் தருளின – கட்டிய; திரு அறிஞ்சிகை ஈஸ்வரத்து மகாதெவர் ஸ்ரீ கோயில்: அரிஞ்சயேச்சுரம் என்பது கோயில் பெயர்; மகாதேவர் என்பது அக்கோயில் இறைவன் பெயர். திருச்சுற்றுலை- திருச்சுற்றாலயம்; அஃதாவது, பெரிய கோயிலைச் சுற்றியிருக்கும் காப்புக் கடவுளர்க் குரிய சிறு கோயில்களாகும். இதனைத் 'திருச்சுற்று மாளிகை' என்றும், 'பரிவார ஆலயம்' என்றும் வழங்குவர். திருமுற்றம் – கோயில் முன்னிடம், சுவாமி சன்னிதி (Court–yard in fornt of the chief idol of a temple): திருநந்தன வனம் – கோயில் நந்தவனம்.

2. மடவிளாகம் – மடவளாகம், கோயிலைச் சூழ்ந்துள்ள வீதி. இத்தெவற்குக் குடுத்த நிலத்துக் கெல்லை – இராசாச்ரயபுரத்து அரிஞ்சயேச்ரம் கோயில் இறைவனாகிய மகாதேவற்குத் தேவதானமாகக் கொடுத்த நிலத்திற்கு எல்லையாவன: அவை வருமாறு:—

கிழக்கே நூவா நதியும், தெற்கே நூவா நதியினின்றும் இரண்டு கோல் அகலத்தில் மேற்கு நோக்கிச் செல்லும் பெரும் பாதையும் (அது 87 கோல் நீளமுடையது; மேற்பாடி ஊரிலுள்ள மும்முடிச் சோழப் பெருந்தெருவில் குடியிருந்த வியாபாரியான ஆச்செருமான் வயிரமேகன் தோட்டத்தைச் சேர்ந்த பாழான நிலத்திற்கு வடக்கிலுள்ளது.), மேற்கே கிழக்கு மேற்காகச் செல்லும் பெருவழியின் மேற்கு முடிவிடத்திலிருந்து வடக்கு நோக்கிச் செல்லும் பெரும் வழியும் (அப்பெருவழி வடக்கே சோழேந்திர சிம்ம ஈசுவரர் கோயிலில் நாட்டிய மாடும் மகளிர் தங்கும் இடமாகிய மத்தவாணச்சேரி வரையும் சென்றது.), வடக்கே மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி நூவாநதி வரை 4 கோல் அகலத்தில் செல்லும் பெரு வழியும் (அது சோழேந்திர சிம்ம ஈஸ்வரர் கோயிலுக்குத் தெற்கேயுள்ள அதன் நந்தவனத்திற்குத் தெற்குக் கரை ஓரமாக வுள்ளது) எல்லைகளாகும்.

இவ்வூர் மும்மடி சொழப் பெருந்தெரு: மேற்பாடி என்னும் இராசாச்ரயபுரத்து நகரத்திலுள்ள ஒரு தெரு. இந்தத் தெருவில்தான் ஆச்செருமான் வயிர மெகன் என்னும் வியாபாரி குடியிருந்தான். இதனால் இக்காலத்தில் போல அக்காலத்திலும் அரசன் போன்ற பெரியார் பெயர்களை ஊர்களுக்கும், ஊர்த் தெருக்களுக்கும் இட்டு வழங்குதல் வழக்கமாயிருந்ததென்று தெரிகிறது.

செருமான் வயிரமெகன் தொட்டப் பாழான நிலத்தின் வடவருகெய் நுகாவாற்றி நின்று மிருகொ லகலத்தால் மெற்கு நொக்கிப் பொன பெருவழி எண்பத்தெழு கொலாசறுதிக்கு வடக்கு மிவ்வாசறுதியெய் வடக்கு நொக்கிச் சொளெந்ர ஸிம்ம ஈஸ்வரமுடையப தெவர் தெவரடியார் மத்தவாணச் செரியெ யெறப்பொன தெருவுக்குக் கிழக்குஞ் சொளெந்ர ஸிம்ம ஈஸ்வரமுடையார் கொயிலின் தெற்கில் திருநந்தன வனத்தின் தென்னருகெய் நுகாவென்னு மாற்றுக்கெய் கிழக்கு நொக்கி நாற்கொ லகலத்தாற் பொன பெருவழிக்குத் தெற்கு மிந்நாற் பெரெல்லையுள்ளு மகப்பட்ட நிலம் எங்களூரளந்து கூறிட்ட பதினெண் சாண் கொல்லாற் குழி ஐய்யாயிரத் தொருநூற்று முப்பத்தா றரையு மித்தெவற்குத் தெவதான இறையிலியாகக் குடுத்தொம் இந்நிலத்தாறெய் நுகாவென்னு மாற்றினின்றும் இத்தெ—

வடவருகெய் – வடக்குக் கரையோரமாக; நுகாவாற்றின் – நுவா நதியின்; இது 'நீவா' என்றும் 'பொன்னே' என்றும் வழங்கும். இதன் மேற்குக் கரையில் தான் மேற்பாடியூர் உள்ளது. இரு கொ லகலத்நால் – இரண்டு கோல் அகலத்தில்; இங்கு ஒரு 'கோல்' பதினெட்டுச் சாண் நீளமுடைய தென்பது, பின்னர் 'எங்களூரளந்து கூறிட்ட பதினெண்சாண் கொல்லால்'' என வரும் தொடரால் அறியப்படும். ஆசறுதி–கடைசி; இவ் வாசறுதியெய் – இந்தக் கடைசி இடத்திலிருந்து.

சொளெந்திர சிம்ம ஈஸ்வர முடைய தெவர்: மேற்பாடி யூரிலுள்ள சிவன் கோயில்கள் இரண்டனுள் பெரிய கோயில் 'சோழேந்திர சிம்ம ஈஸ்வரர் கோயில்' என்று பெயர் பெறும். இஃது இப்பொழுது 'சோமநாதீச்சுவரர் கோயில்' என்று வழங்குகிறது. இந்தக் கோயில் தேவதாசிகள் தான் மத்தவாணச்சேரி என்னும் இடத்தில் வசித்தனர். தேவரடியார் – தேவதாசிகள், கோயிலில் நாட்டிய மாடும் மகளிர்.

மத்தவாணச்செரியெ யெறப் போன செருவுக்குக் கிழக்கு–மத்தவாணச் சேரி என்னும் இடத்திற்கு நேராகச் சென்ற தெருவுக்கும் கிழக்கு; மத்தவாணச் சேரி என்றது, சோழேந்திர சிம்ம ஈசுவரர் கோயில் தேவரடியார் குடியிருந்த இடம்; செரு–தெரு; தென்னருகெய்– தெற்குக் கரை யோரமாக; எங்களூர் அளந்து கூறிட்ட – எங்களூரை அளந்து பங்கிட்ட; பதினெண்சாண் கொல்லால் – பதினெட்டுச் சாண் அளவுள்ள கோலால்; கோல் – அளவு கோல்.

தேவதானம் – கோயிலுக்குத் தானமாக விடப்பட்ட நிலம்; இறையிலி – வரியின்றி விடப்பட்ட நிலம்; இந்நிலத்தாறெய் – இந்த நிலத்து

3. வ ரிந்நிலத்துக்கு மிலுப்பைக் கழனிக்கு நீர் பாய்ந்த வாய்க்கால் காற் கொலகலத்தால் இத்தெவரிந் நிலத்துக்கு மிலுப்பைக் கழனிக்கு நீர் பாயப் பெறவு மிப்பரிசு தெவ தான இறையிலியாகச் சிலாலெகை செய்து குடுத்தொ மெற் பாடியான ராஜாச்ர புரத்து நகரத்தொம் இந் நகரத்தா சொல்ல எழுதினென் இந் நகரக் கரணத்தான் நாராயண னடைக்கலவனென் இவை யென்னெழுத்து இது பன்மா ஹெஸ்வர ரக்ஷெ—

வழியாக; இத்தெவர் இந்நிலத்துக்கும் – அரிஞ்சயேச்சுரம் கோயி இறைவருக்குத் தேவதானமாக வரியின்றி விடப்பட்ட இந்த 5136¾ கு நிலத்திற்கும்.

3. இலுப்பைக் கழனிக்கும் – இலுப்பை மரத்தையுடைய வய நிலத்திற்கும்; நீர் பாய்ந்த வாய்க்கால் – நீரைப் பாய்ச்சிய வாய்க்கால் அது கால் கோல் அல்லது 4½ சாண் அகலமுடையது. நூவா நதிய னின்றும் மேற்பாடியூர் நடுவே செல்வது; மேற் கூறிய தேவதான நில திற்கும், இலுப்பைக் கழனிக்கும் தண்ணீர் பாய்ச்சுவது. காற்கோல வாக – 4½ சாண் அளவில்; நீர்பாயப் பெறவும் – தண்ணீர் பாய்வத கும்; இப்பரிசு – இந்தப் படியே; தேவதான இறையிலி யாக–தேவதான மாகவும் இறையிலியாகவும்; சிலாலெகை செய்து குடுத்தோம் – கல்லி வெட்டிக் கொடுத்தோம்; சிலாலெகை – கல்வெட்டு; நகரத்தார் – நகர துச் சபையார், ஊர்ச் சபையார்.

கரணத்தான்–ஊர்ச்சபைக் கணக்கன்; இராசாச்ரயபுரத்து நகர தார் சாசனத்தைச் சபையார் சொல்ல எழுதியவன், அவ்வூர்க் கரண தானுன நாராயணன் அடைக்கலவன் என்பவ னுவான். பன்மா ஹெஸ்வர ரக்ஷெ – அடியார்க் கூட்டம் காக்க. பன்மா ஹேஸ்வரர் - சிவனடியார்கள்.

பயிற்சி வினக்கள்

1. மேற்பாடியூர் எங்கு உளது? முதலாம் இராசராசன் கால தில் அதற்கு வழங்கிய பெயர் யாது? அக்காலத்தில் அது இருந் இடம் எங்ஙனம் கூறப்பட்டுள்ளது?

2. இராசாச்ரய புரத்து நகரத்தார் சாசனம் எங்குக் காணப் ப கிறது? அதில் கூறப்படும் செய்திகள் யாவை?

3. முதலாம் இராசராசன் அடைந்த வெற்றிகள் யாவை அவன் மேற்பாடியூரில் கட்டிய கோயில் எது? எது பற்றிக் கட்டின என்பதைச் சான்று காட்டி விளக்குக.

4 குறிப்பு வரைக:— காந்தளூர் சாலை கலமறுத்தது, இரட்டபாடி ஏழரை யிலக்கம், பெரும்பாணப்பாடி, ஆற்றூர்த் துஞ்சின தேவர், திருச்சுற்றாலை, ஆச்செருமான் வயிரமேகன், மத்தவாணச்சேரி, இலுப்பைக் கழனி, சிலாலேகை செய்து கொடுத்தல், பன்மாஹேஸ்வர ரக்ஷை.

5. பொருள் தருக:— தண்டு, செழியர், பள்ளிபடை, திருமுற்றம், திருநந்தன வனம், மடவிளாகம், கோல், ஆசறு, தேவரடியார், செரு, தேவதானம், இறையிலி, கழனி இப்பரிசு, ஊர்க்கரணத்தான், பன்மாஹேஸ்வரர்.

6. மேற்பாடி யூரில் காணப்படும் இரு சிவன் கோயில்களின் முற்கால இக்காலப் பெயர்களைக் குறிப்பிட்டு விளக்குக.

7. ஆற்றூர்த் துஞ்சின தேவர் யார்? அவருக்குப் பள்ளிபடையாக யார் எவ்விடத்தில் கோயில் எடுத்தனர்? அதன் முற்காலப் பிற்காலப் பெயர்கள் எவை?

8. இராசாச்ரய புரத்து நகரத்தார் அவ்வூர்ச் சோழேந்தீசுவரர் கோயிலுக்கு இறையிலி தேவதானமாகக் கொடுத்த நிலம் எவ்வளவு? அதன் எல்லைகளைக் குறிப்பிடுக.

9. முதலாம் இராசராசன் பெயரால் மேற்பாடியூருக்கும் அவ்வூரிலுள்ள ஒரு தெருவுக்கும், ஒரு கோயிலுக்கும் வழங்கிய பெயர்களைக் குறிப்பிடுக.

10. இராசாச்ரயபுரத்து நகரத்தார் சாசனத்தை எழுதியவன் யாவன்? அச்சாசனத்தின் தொடக்க முடிவுகளைக் குறிப்பிடுக.

8. திருப்பதியம் விண்ணப்ப சாசனம்*

முன்னுரை

திருப்பதியம்–திருப்பதிகம்; அஃதாவது தேவாரம். திருப்பதியம் விண்ணப்ப சாசனம் என்பது, முதலாம் இராசராசன் தஞ்சை இராசராசேசுவரம் என்னும் பெரிய கோயிலில் தேவாரம் பாடுவதற்குச் செய்த ஏற்பாட்டைக் கூறும் சாசனமாகும். இச் சாசனம் முதலாம் இராசராசன் ஆட்சியின் 29ஆம் ஆண்டிற்கு முன்னர் ஏற்பட்டது. தஞ்சாவூர் இராசராசேசுவரக் கோயில் வடக்குச் சுற்றுப் புறச்சுவரின் வெளிப்பக்கத்தில் காணப்படுகிறது. தமிழ் மொழியில் கிரந்த எழுத்துக்கள் கலந்து எழுதப்பட்டது; பதினைந்து பத்திகளை யுடையது.

இச் சாசனத்தில் முதலாம் இராசராசன் தஞ்சைப் பெரிய கோயிலில் திருப்பதியம் பாடுவதற்கு ஏற்படுத்திய 48 பேர்களுக்கும், அப்பொழுது கொட்டி, மத்தளம் பாடும் இருவருக்குமாக ஐம்பது பேர்களுக்கு நாள்தோறும் கொடுக்கப்பட்டு வந்த நெல்[1] முதலிய விபரங்கள் கூறப்பட்டுள்ளன. முதலாம் இராசராசன் தேவாரப்பாடல்களைத் தொகுத்தான் என்பது வரலாறு கூறும் செய்தியாகும். எனவே, அவன் தேவாரப் பாடல்களைத் தொகுத்தது மன்றி, அப்பாடல்களைக் கோயில்களில் பாடுவதற்கு ஏற்பாடுகளும் செய்தான் என்பது இச் சாசனத்தால் அறியப்படுகிறது. அவன் வழிபட்டு வந்த இறைவன் தேவாரத் தேவர் என்று முன்னர் ஆதித்த சூரியன் சாசனத்தில் குறிக்கப்பட்டிருப்பதும் இதனைப் புலப்படுத்தும்.

இனி, இச்சாசனத்தில் குறிக்கப்பட்டுள்ள ஐம்பது பேர்களின் பெயர்கள் மூலம் நாம் சில உண்மைகளை அறிய முடிகிறது. தேவாரம் பாடிய மூவர்களில் திருஞானசம்பந்தன் பெயர், 'திருஞானசம்பந்தன்' என ஓரிடத்திலும் (எ), 'சம்பந்தன்' என நான்கு இடங்களிலும் (ய, உஉ, ருச, ருஅ) காணப்படுகின்றன. திருநாவுக்கரசன் பெயர், 'திருநாவுக்கரையன்' என ஏழு இடங்களில் (சு, யஉ, யச, யகூ, உஅ, சரு, சடு) உள்ளது. நம்பியாரூரன் பெயர் 'நம்பியாரூரன்' என இரண்டு இடங்களிலும் (சக, சச) 'ஆரூரன்' என இரண்டு இடங்களிலும் (யகூ, உஉ) காணப்படுகிறது. சிவனடியார்களில் சீராளதேவர் பெயர், 'சீராளன்' என இரு இடங்களில் (யகூ, யரு) வந்துள்ளது.

---

* S. I. I., Vol. II., Part III, No. 65, pp. 2–259.

1. ஒவ்வொருவருக்கும் நாள்தோறும் மூன்று குறுணி நெல் கொடுக்கப்பட்டது.

மேலும் இச்சாசனத்தில் குறிக்கப்பட்டுள்ள பெயர்களால் பெரிய புராணத்தில் கூறப்பட்டுள்ள திருவாஞ்சியம், திருவாரூர், திருவாமூர், திருமறைக்காடு முதலிய சிவதலங்களின் பெயர்களும் அறியப்படுகின்றன. அன்றியும், சிதம்பரத்திலுள்ள இறைவன் பெயர்களாக அம்பலவன் (ωக), அம்பலத்தாடி (௪, ௪க), அம்பலக் கூத்தன் (ω௪), கூத்தன் (௨ω, ௨௬, ௨௯, ௱க, ௪௯), தில்லைக் கூத்தன் (௪௯), தில்லைக் கரசு (௱௱), எடுத்த கோலம் (௯, ௨௪, ௱௨) முதலிய பெயர்களும் இச் சாசனத்தில் காணப்படுகின்றன. இவைகளால், தேவாரம் பாடிய மூவர் காலம் முதலாம் இராச ராசன் காலத்திற்கு முந்திய தென்றும், அக்காலத்தில் சைவ சமயம் தமிழ்நாட்டில் சிறப்புற் றிருந்ததென்றும் நாம் அறி கிறோம்.

முதலாம் இராசராசன் கி. பி. 985 முதல் 1014வரை சோழ நாட்டை ஆண்டான். இச்சாசனம் அவனது ஆட்சியின் 29ஆம் ஆண்டிற்கு முன்னர் ஏற்பட்டதெனவே, இதன் காலம் கி. பி. 1014க்கு முந்திய தென்னலாம்.

சாசனம்

ஸ்வஸ்தி ஸ்ரீ
திருமகள் பொலப் பெருநிலச் செல்வியுந்
தனக்கெ யுரிமை பூண்டமை மனக்கொள்க்[1]
காந்தளூர்ச் சாலை[2] கலமறுத் தருளி
வெங்கை நாடுங் கங்க பாடியுந்

---

1. ஸ்வஸ்தி ஸ்ரீ: இது சாசனங்களின் தொடக்கத்தில் மங்கலம் குறித்து வரும் வடமொழித் தொடர். இதற்கு விளக்கம் முதலாம் சாசனக் குறிப்பில் காண்க.

திருமகள் பொல பெருநிலச் செல்வியும்: முதலாம் இராசராசன் சாசனத்தில் வரும் மெய்க்கீர்த்தியின் தொடக்கம் இது.

[1]'மனக்கொள்' என்றும் பாடம்.

காந்தளூர்ச்சாலைக் கலைமறுத்து: இதற்குக் 'கடற்றுறைக் கண்ண தாகிய காந்தளூரில் உண்ணும் சாலைக்கண் நாடோறும் உண்பார் இத் துணையரென உண்கலங்களை வரையறுத்து' எனப் பொருள் கொள்வர் ஆராய்ச்சியாளர். அவர் 'காந்தளூர்ச்சாலை கலமறுத்து' என்ற பாடம் கருத்துடைய தன்று என்பர். இதன் விளக்கங்களை முந்திய சாசனக் குறிப்பில் காண்க.

[2] 'காந்தளூர் சாலைக்' என்றும் பாடம்.

வேங்கை நாடு: இது கீழைச் சாளுக்கிய நாட்டிற்குத் தலைநகர் என்று கூறுவர் திரு. L. உலகநாதபிள்ளை யவர்கள். கங்கபாடி: கங்கர்

தடிகை பாடியும் நுளம்ப பாடியுங்
குடமலை நாடுங் கொல்லமுங் கலிங்கமும்
முரட்டெழில் சிங்களர் ஈழமண் டலமும்
இரட்ட பாடி எழரை இலக்கமும்
முன்னீர்ப் பழந்தீவு பன்னீரா யிரமுந்
திண்டிறல் வென்றித் தண்டாற் கொண்டதன் —
னெழில்வள ரூழியு ளெல்லா யாண்டுந்
தொழுதக விளங்கும் யாண்டெ செழியரைத்
தெசுகொள் கொராஜ கேஸரி வன்மரான
ஸ்ரீ ராஜ ராஜ தெவர்க்கு யாண்டு—

இருபத்தொன்பதாவது வரை உடையார் ஸ்ரீ ராஜ ராஜீஸ்வரம் உடையார்க்குத் திருப்பதியம் விண்ணப்பஞ் செய்ய உடையார் ஸ்ரீ ராஜராஜ தெவர் குடுத்த பிடாரர்கள் நாற்பத்தெண்மரும், இவர்களிலெ நிலையாய் உடுக்கை வாசிப்பா—

என்ற பல்லவ வகுப்பினர் ஆண்ட இடமாதல் பற்றி இது இப்பெயர் பெற்றதென்பர்.

தடிகை பாடி: இது கங்கபாடிக்கும் நுளம்பபாடிக்கும் இடையிலுள்ளதொரு நாடு; இதனைத் '**தடிகை வழி**' என்றும் கூறுவர்.

குடமலை நாடு: இதனைக் கொங்காள்வார் என்னும் மரபினர் ஆண்டனர். **கொல்லம்:** இக்காலத்தில் கொயிலான் (Quilon) என்று அழைக்கப்படுகிறது. இது சேர நாட்டின் ஒரு பகுதியான மேலைக் கடற்கரையிலுள்ள பிரதேசமாகும். **கலிங்கம்:** கோதாவரி யாற்றுக்கும் மகாநதிக்கும் இடையிலுள்ள நாடு; கீழைச் சாளுக்கியருக்கு வாழ்விடம்; இப்பொழுது வட சர்க்காரி விருப்பது.

இரட்டபாடி எழரை இலக்கம்: மகாராட்டிய வகுப்பினரான இராஷ்டிர கூடர் ஆண்ட இடம் என்பர். எழரையிலக்கம் என்றது, அந் நாட்டின் ஆண்டு வருவாயை: இவ்வாறு நாட்டின் வருவாயையும் அந் நாட்டுப் பெயருடன் சேர்த்துச் சொல்லுதல் பண்டை வழக்குப் போலும். '**முன்னீர்**' என்றும் பாடம்.

2. **செழியர்** – பாண்டிய மன்னர்; முதலாம் இராசராசன் பாண்டிய நாட்டின் மீது பல தடவை போர் செய்து வென்றுனதலின் **செழியர்**' என்று பன்மையால் கூறினர் போலும்.

3. ன் ஒருவனும், இவர்களிலெ நிலையாய்க் கொட்டி மத்தளம் வாசிப்பான் ஒருவனும் ஆக ஐம்பதின்மர்க்குப் பெரால் நிசதம் நெல்லு முக்குறுணி நிவந்தமாய் ராஜகெஸரி யொடொக்கும் ஆடவல்லானென்னும் மரக்காலால் உடையார் உள்ளூர்ப் பண்டாரத் தெய் பெறவும் இவர்களில் செத்தார்க்கும் அனுதெசம் போனூர்க்குந் தலைமாறு அவ்வவர்க்கு அடுத்தமுறை கடவார் அந்நெல்லுப் பெற்றுத் திருப்பதியம் விண் —

ராஜகேஸரி வன்மன், ராஜராஜன்: இவை முதலாம் இராசராசனுக் குரிய பட்டப் பெயர்கள்; இவனது இயற்பெயர் 'அருண்மொழி தேவன்', 'கொராஜகேஸரி', 'ஸ்ரீராஜராஜதெவர்க்கு', என்றும் பாடம்.

இருபத்தொன்பதாவது வரை – இருபத்தொன்பதற்கு முன்னர்; ஸ்ரீராஜராஜிஸ்வரம் உடையார்க்கு –தஞ்சை இராசராசேசுவரம் கோயில் சுவாமிக்கு 'இராசராசேசுவரம்' என்பது, தஞ்சைப் பெரிய கோயிலைக் குறிக்கும்.

திருப்பதியம் – திருப்பதிகம், தேவாரம். பதியம் – பதிகம், பத்துப் பாடல்களின் தொகுதி. விண்ணப்பம் செய்ய – பாட; உடையார் ஸ்ரீராஜ ராஜ தேவர் - இராசராச சோழன்; குடுத்த – ஏற்படுத்திய; குடுத்த, வைச்ச என்பன சாசன வழக்குச் சொற்களாகும். பிடாரர் – இசை வல்லார் (musicians); பிடாரர் என்பது, இந்நாளில் பாம்பு பிடிப் பாரைக் குறிக்கும் பெயராக வழங்குதலின், அது பட்டாரகர் என்பதின் மரூஉப் பெயராகிய 'படாரர்' போலும் என்று கருதுவர் திரு. L. உலக நாத பிள்ளையவர்கள்.

உடுக்கை, கொட்டி மத்தளம்: இவை இரண்டும் அக்கால இசைக் கருவிகள்; இவை தஞ்சை இராசராசேசுவர ராலயத்தில் தேவாரம் பாடும்போது இசைக்கப்பட்டன; உடுக்கை என்பது வடமொழியில், 'குடுக்கா' எனவும், மத்தளம் என்பது மர்த்தலா எனவும் வழங்கும். 'கொட்டி மத்தளம்' என்பதற்குப் பெரிய மத்தளம்' என்று பொருள் கொள்வர் திரு. டாக்டர் உல்ஷ் துரையவர்கள். அதனைக் கோலால் இயக்கும் மத்தளம் என்பாருமுளர். வாசிப்பான் – இசைப்பான்.

3. பேரால்–பேர் பேராக (per person): நிசதம்–நாள் ஒன்றுக்கு (per day); முக்குறுணி – மூன்று குறுணி; நிவந்தம் – வேலைக் கூலி.

ராஜகெஸரியோ டொக்கும் ஆடவல்லான் என்னும் மரக்கால்; இராசகேசரி, ஆடவல்லான் இரண்டும் முதலாம் இராசராசன் காலத்து

4. ணப்பஞ் செய்யவும் அவ்வவர்க்கு அடுத்த முறை கடவார் தாந்தாம் யொக்யர் அல்லாதுவிடில் யோக்ராயிருப் பாரை ஆளிட்டுத் திருப்பதியம் விண்ணப்பஞ் செய்வித்து அந்நெல்லுப் பெறவும் அவ்வவர்க்கு அடுத்த முறை கடவா ரின்றி யொழியில் அந்த நியாயத்தாரெ யொக்கியரா யிருப் பாரைத் திருப்பதியம் விண்ணப்பஞ் செய்ய இட்டு இட்ட அவனெ அவ்வவர் பெறும்படி நெல்லுப் பெறவும் ஆக இப்படி உடையார் ஸ்ரீரா

5. ஜ ராஜ தெவர் திருவாய் மொழிந்தருளினபடி கல்லில்

முகத்தலளவைகள்; இராசகேசரி, அரண்மனை அளவை; இதற்கு 'அருண் மொழி தேவன் மரக்கால்' என்றும் பெயர் உண்டு. ஆட வல்லான், இராசராசேசுவர ராலயத்து அளவை. அக்காலத்தில் கோயிலுக்கும், நாட்டிற்கும், அரசாங்கத்திற்கும் தனித்தனி அளவைகள் இருந்தன என்று தெரிகிறது. இங்கு அரண்மனை அளவை அரசன் பெயராலும் கோயில் அளவை அக்கோயில் இறைவன் பெயராலும் வழங்கியமை நோக்கத் தக்கது. ஒக்கும்–ஒத்ததான (which is equal to); உடையார் உள்ளூர்ப் பண்டாரம்; அரசன் நகரத்துக் களஞ்சிய சாலை (city treasury); உடையார் – முதலாம் இராசராசன்.

[7] 'பண்டாரத்தேய்' என்றும் பாடம்.

அனுதெசம் பொனுர் – ஊர்விட்டுப் போனவர்; அனுதேசம் - அயல் நாடு. தலைமாறு – பதிலாக (instead of); அடுத்த முறை கடவார் – அடுத்து நெருங்கிய இனத்தவர் (the nearest relation).

4. விண்ணப்பம் செய்யவும்–முறையாகப் பாடவும்; ஓதவும் எனினுமாம்; யோக்யர்–ஒழுக்க முதலியவற்றால் தகுதியுடையவர்; ஆளிட்டு- தெரிந்தெடுத்து; ஒழியில்–நீங்கினுல்.

அந்த நியாயத்தார் – நியமனம் செய்பவர் (Incuments of such appointments); அத்தொழில் செய்வார் என்பாருமுளர். இட்டு – ஏற் படுத்தி; அவ்வவர் பெறும் படி நெல்லு – அவரவர் பெறுதற்கான அளவு நெல்.

உடையார் ஸ்ரீ ஸ்ரீராஜராஜதெவர் திருவாய் மொழிந்தருளினபடி: முத லாம் இராசராசதேவன் கட்டளைப்படி; அஃதாவது, தஞ்சை இராசரா சேசுவரர் கோயிலில் திருப்பதியம் படிக்கும் நாற்பத்தெட்டு பேர்களும், நிலையாய் உடுக்கை, கொட்டி மத்தளம் வாசிப்போர் இருவரும் ஆக ஐம்ப தின்மரும் நாள் ஒன்றுக்குத் தனித்தனி முக்குறுணி நெல் கூலியாக உள்ளூர்ப் பண்டாரத்திலே ஆடவல்லான் என்னும் மரக்காலால் பெற

வெட்டியது [க] பாலன் திருவாஞ்சியத் தடிகளான ராஜ ராஜப் பிச்சஞன சதாசிவனுக்கு நிசதம் நெல்லு முக்குறுணி [உ] திருவெணுவல் செம்பொற் சொதியான தக்ஷிண மெரு விடங்கப் பிச்சஞன ஞாநசிவனுக்கு நிசதம் நெல்லு முக் குறுணி. [௩] பட்டாலகன் அம்பலத்தாடியான மநோத்ம சிவனுக்கு நிசதம் நெல்லு முக்குறுணி [ச] பட்டாலகன் சீரு டைக் கழலான

வேண்டுமென்பதும், அவர்களில் செத்தார்க்கும் அனுதேசம் போனுர்க் கும் பதிலாக அடுத்த முறை கடவார் அந்நெல்லைப் பெற்றுத் திருப்பதி யம் பாட வேண்டுமென்பதும், அடுத்த முறை கடவார் தகுதியில்லா விடில் தகுதியுடையாரைத் தெரிந்தெடுத்துத் திருப்பதியம் பாடி அந் நெல்லைப் பெறச் செய்யவேண்டுமென்பதும், அடுத்த முறை கடவார் இல்லையாயின் நியாயத்தாரே தகுதியுடைய வேற்றவரை நியமித்துத் திருப்பதியம் பாடி அந்நெல்லைப் பெறச்செய்யவேண்டு மென்பது மாகும்.

5. **கல்லில் வெட்டியது:** அரசன் சொல்லக் கல்லில் வெட்டியது என்பதால், அக்காலத்தில் அரசன் கட்டளை கல்லில் வெட்டப்பட்டு யாவரும் அறியும்படி இருந்ததென்பது தெரிகிறது. அதுவே பிற்காலத் தில் 'கல்வெட்டு' எனப்பட்டது போலும்.

பாலன் திருவாஞ்சியத் தடிகள்: இவன் பெயர் இராஜராஜ பிச்சஞன **சதாசிவன்** என்பது. இராஜராஜ பிச்சன் என்பது, இவனது பட்டப் பெயர். பிச்சன் – பித்தன், சிவன். சதாசிவன் என்பது, இவனது இயற் பெயர்; இது இவன் தீட்சை பெற்றபோது இவனுக்கு இடப்பட்ட பெயரென்பர். திருப்பதியம் பாடிய நாற்பத்தெண்மரில் இவன் ஒருவன். இவனைத் **திருவாஞ்சியத் தடிகள்** என்பதால், இவன் திருவாஞ் சியம் என்னுந் தலத்துச் சிவன் கோயிலிடத்துள்ளவன் என்று தெரி கிறது. திருவாஞ்சியம் தஞ்சாவூர்ச் சில்லா நானிலம் தாலூகாவி லுள்ளது; தேவாரப் பாடல் பெற்ற சிவதலங்களில் இது ஒன்ருகும்.

திருவெணுவல் செம்பொற் சோதி-திருவெண்ணுவல் செம்பொற் சூடி; இவன் இயற்பெயர் ஞானசிவன்; பட்டப் பெயர் தக்ஷிணமேரு விடங்கப் பிச்சன். திருவெண்ணுவல் என்பது, திருச்சியை அடுத்த திருவரங்கத்தி திலுள்ள சிவன்கோயில் நாவல்மரத்தைச் சுட்டும். அக்கோயில் இப் பொழுது **சம்புகேஸ்வர திருவானைக்கா** என்று வழங்குகிறது.

பட்டாலகன் அம்பலத்தாடி: இவன் இயற்பெயர் மநோத்ம சிவன். பட்டாலகன் என்பது பட்டாரகன் என்றிருத்தல் வேண்டுமென்பர். பட்டாரகன் - கடவுள்; ஞானகுரு எனினுமாம். அம்பலத்தாடி என்பது, தில்லை நடராசப் பெருமானுக்குரிய பெயர்களில் ஒன்று. 'மநோத்ம

6. பூர்வ்வசிவனுக்கு நிசதம் நெல்லு முக்குறுணி [ரு] பொற்சுவரன் திருநாவுக்கரையனான பூர்வ்வசிவனுக்கு நிசதம் நெல்லு முக்குறுணி [சா] மாதெவன் திருநானசம் சம்பந்தனான ஞாநசிவனுக்கு நிசதம் நெல்லு முக்குறுணி [எ] கயிலாயன் ஆரூரான தர்மசிவனுக்கு நிசதம் நெல்லு முக்குறுணி [அ] செட்டி எடுத்த பாதமான கவசசிவனுக்கு நிசதம் நெல்லு முக்குறுணி [கூ] இராமன் சம்பந்தனான ஸதாசிவனுக்கு நிசதம் நெல்—

7. லு முக்குறுணி [ய] அம்பலவன் பத்தர்கள் ... ... டனான வாமசிவனுக்கு நிசதம் நெல்லு முக்குறுணி [யக] கம்பன் திருநாவுக்கரையனான சதாசிவனுக்கு நிசதம் நெல்லு முக்குறுணி [யஉ] நக்கன் சீராளனான வாமசிவனுக்கு நிசதம் நெல்லு முக்குறுணி [யங] அப்பி திருநாவுக்கரையனான நெத்ரசிவனுக்கு நிசதம் நெல்லு [யச] முக்முறுணி சிவக்கொழுந்து சீராளனான தர்மசிவனுக்—

சிவன்' என்பதில் 'மனோத்ம' என்பது, பார்வதிக்குரிய 'மனோன் மணி' என்றிருத்தல் வேண்டுமென்று கருதப்படுகிறது. **பட்டாலகன் சிருடைக் கழல்:** இது பூர்வசிவனுக்குரிய சிறப்புப் பெயர்.

6. **பொற்சுவரன் திருநாவுக்கரையன்:** இவன் இயற்பெயர் பூர்வ சிவன். **மாதெவன் திருஞானசம்பந்தன்:** இவன் இயற்பெயர் ஞானசிவன்; மாதெவன் என்பது, 'மகாதேவன்' அல்லது 'மாதேவன்' என்றிருத்தல் வேண்டுமென்பர். **கயிலாயன் ஆரூரன்:** இவன் இயற்பெயர் தர்மசிவன். இப்பகுதியில் தேவாரம் பாடிய மூவர் பெயர்களும் வழங்கி யிருத்தல் குறிப்பிடத் தக்கது **செட்டி எடுத்த பாதம்:** இது கவச சிவனுக் குரிய சிறப்புப்பெயர்; செட்டி என்பது; சுப்பிரமணிய கடவுளுக்கு வழங்கிய ஒரு பெயர். **இராமன் சம்பந்தன்:** இவன் இயற்பெயர் சதாசிவன்.

7. **அம்பலவன் பத்தர்கள்:** இவன் இயற்பெயர் வாமசிவன். அம்ப லவன் – தில்லை நடராசப் பெருமான்; பத்தர்கள் –அடியார்கள். **கம்பன் திருநாவுக்கரையன்:** இவன் இயற்பெயர் சதாசிவன்; **நக்கன் சீராளன்:** இவன் இயற்பெயர் வாமசிவன்; சீராளன் – சீராளதேவன்; இவன் சிவனடியாரான சிறுத் தொண்டர் மகன்; **அப்பி திருநாவுக்கரையன்–** இவன் இயற்பெயர் நேத்ரசிவன். அப்பி – அப்பன்; அப்பர் என்பது திருநாவுக்கரசருக்கு வழங்கிய மற்றொரு பெயர். **சிவக்கொழுந்து சீராளன்:** இவன் இயற்பெயர் தர்ம சிவன்.

8. கு நிசதம் நெல்லு முக்குறுணி [௰௫] ஐஞ்நூற்றுவன் வெண்காடனுன சத்யசிவனுக்கு நிசதம் நெல்லு முக்குறுணி [௰௬] அரையன் அனுக்கனுன திருமறைக்கா .... னுன தர்ம்மசிவனுக்கு நிசதம் நெல்லு முக்குறுணி [௰௭] அரையன் அம்பலக் கூத்தனுன ஒங்காரசிவனுக்கு நிசதம் நெல்லு முக் குறுணி [௰அ] ஆரூரன் திருநாவுக்கரையனுன ஞாநசிவ னுக்கு நிசதம் நெ—

9. நெல்லு முக்குறுணி [௰௯] கூத்தன் மழலைச் சிலம் பான பூர்வ்வசிவனுக்கு நிசதம் நெல்லு முக்குறுணி [உ௰] ஐஞ் நூற்றுவன் சீயாரூரான தத்புருஷ சிவனுக்கு நிசதம் நெல்லு முக்குறுணி [உக] சம்பந்தன் ஆரூரனுன வாமசிவ னுக்கு நிசதம் நெல்லு முக்குறுணி [உஉ] அரையன் பிச்ச னுன தர்ம்மசிவனுக்கு நிசதம் நெல்லு முக்குறுணி [உங]காச் சிபன் எடுத்த பாதப் பிச்சனுன உருத்ரசிவனுக்கு நிசதம்.

---

8. **ஐஞ்நூற்றுவன் வெண்காடன்:** வெண்காடன் ஐஞ்நூற்றுவன் என்றிருத்தல் வேண்டும். இவன் இயற்பெயர் சத்ய சிவன். வெண்காடு-திருவெண்காடு; இது சிதம்பரத்திற்குத் தெற்கிலுள்ள ஒரு சிவதலம். **அரையன் அனுக்கன்:** இவன் இயற்பெயர் தர்மசிவன்; இவனுக்குத் திருமறைக்கா ....என்ற பெயருமுண்டு. திருமறைக்காடு என்பது வடமொழியில் வேதாரண்யம் எனப்படும். **அரையன் அம்பலக் கூத்தன்:** இவன் இயற்பெயர் ஒங்கார சிவன்; அம்பலக் கூத்தன் என்பது, தில்லை நடராசப் பெருமானுக்குரிய ஒரு பெயர். **ஆரூரன் திருநா வுக்கரையன்:** இது ஞான சிவனுக்குரிய சிறப்புப் பெயர். இங்கு ஆரூரன் என்பது, திருவாரூரில் எழுந்தருளிய சிவபெருமானைச் சுட்டும்.

9. **கூத்தன் மழலைச் சிலம்பு:** இவன் இயற்பெயர் பூர்வசிவன். கூத்தன் – அம்பலக்கூத்தன், நடராசப் பெருமான். **ஐஞ்நூற்றுவன் சீயாரூர்**–சீயாரூர் ஐஞ்நூற்றுவன்: தத்புருட சிவன் என்பது இவன் இயற் பெயர். சீயாரூர் – ஸ்ரீ ஆரூர், திருவாரூர். இஃது முன்னர் '**ஆரூர்**' (8) என வந்திருத்தல் காண்க. திருவாரூர், தஞ்சை மாவட்டம் நாகப்பட் டினம் தாலூகாவிலுள்ளது. **சம்பந்தன் ஆரூரன்**–ஆரூரன் சம்பந்தன்; இவன் இயற்பெயர் வாமசிவன். ஆரூரன் – திருவாரூர் இறைவன். **அரையன் பிச்சன்:** இவன் இயற்பெயர் தர்மசிவன்; **காச்யபன் எடுத்த பாதம்:** இவன் இயற்பெயர் உருத்ர சிவன். எடுத்த பாதம் – எடுத்த பாதன், நடராசப் பெருமான்.

10. நெல்லு முக்குறுணி [உச] ஸுப்ரமண்ணியம் ஆச்சனுன தர்மசிவனுக்கு நிசதம் நெல்லு முக்குறுணி [உரு] கூத்தன் அமரபுஜம்ங்கனுன ஸத்ய சிவனுக்கு நிசதம் நெல்லு முக்குறுணி [உசு] ... ... வெண் காடனுன அசிகார சிவனுக்கு நிசதம் நெல்லு முக்குறுணி [உஎ] மாதெவன் திருநாவுக்கரையனுன விஜ்ஞான சிவனுக்கு நிசதம் நெல்லு முக்குறுணி [உஅ] கூத்தன் வெண்காடனுன ருத்ரசிவனுக்கு நிசதம்

11. நெல்லு முக்குறுணி [உகூ] ஐஞ்னூற்றுவன் திருவாய்மூரான அகோரசிவனுக்கு நிசதம் நெல்லு முக்குறுணி [௩0] திருமலை கூத்தனுன வாமசிவனுக்கு நிசதம் நெல்லு முக்குறுணி [௩க] ஐஞ்னூற்றுவன் எடுத்த பாதமான தர்மசிவனுக்கு நிசதம் நெல்லு முக்குறுணி [௩உ] அரையன் தில்லைக் கரைசான பூர்வ்வசிவனுக்கு நிசதம் நெல்லு முக்குறுணி [௩௩] காளி சம்மந்தனுன தர்மசிவனுக்கு நிசதம் நெல்லு முக்குறுணி [௩ச] காபா—

---

10. **சுப்ரமணியம் ஆச்சான்:** இவன் இயற்பெயர் தர்ம சிவன்; ஆச்சான் - ஆசான். **கூத்நன் அமரபுஜம்நன்:** இவன் இயற்பெயர் சத்ய சிவன்; கூத்தன்-நடராசப் பெருமான். .... **வெண்காடன் :** இவன் இயற்பெயர் அகோர சிவன்; வெண்காடு—திருவெண்காடு. **மாதெவன் திருநாவுக்கரையன் :** இவன் இயற்பெயர் விக்ஞான சிவன். மாதெவன்—மகா தேவன், இறைவன். முன்னர் மாதெவன் திருஞான சம்பந்தன் என வந்திருத்தல் இங்கு அறியற்பாலது. **கூத்நன் வெண்காடன்:** இவன் இயற்பெயர் உருத்ரசிவன்.

11. **ஐஞ்நூற்றுவன் திருவாய்மூர்** — திருவாய்மூர் ஐஞ்நூற்றுவன். இவன் இயற்பெயர் அகோரசிவன். திருவாய்மூர், தஞ்சை மாவட்டம் நாகப்பட்டினம் தாலூகாவில் உள்ளது. அப்பருக்கு வருமாறு இறைவன் கட்டளையிட அவர் சென்று வழிபட்ட இடம். **திருமலை கூத்நன்:** இவன் இயற்பெயர் வாமசிவன். **ஐஞ்நூற்றுவன் எடுத்ந பாதம்** —எடுத்த பாதம் ஐஞ்நூற்றுவன்; இவன் இயற்பெயர் தர்ம சிவன். **அரையன் தில்லைக் கரசு:** இவன் இயற்பெயர் பூர்வ சிவன்; தில்லைக் கரசு—தில்லை நடராசப் பெருமான்; தில்லை — சிதம்பரம். **காளி சம்பந்தன்:** இவன் இயற்பெயர் தர்மசிவன்; காளி என்பது சீகாழி என்னும் தலத்தைக் குறிக்கும் போலும். **காபாலிகவாலி:** இவன் இயற்பெயர் ஞான சிவன். காபாலிகன் — பிரம கபாலத்தைக் கையிலேந்திய சிவன்.

12. லிக வாலியான ஞான சிவனுக்கு நிசதம் நெல்லு முக்குறுணி [௩௫] வெண்காடன் நமசிவாயமான ருத்ரசிவனுக்கு நிசதம் நெல்லு முக்குறுணி [௩௬] சிவனனந்தனான யொகசிவனுக்கு நிசதம் நெல்லு முக்குறுணி [௩௭] சிவக்கொழுந்து சம்பந்தனான அகோரசிவனுக்கு நிசதம் நெல்லு முக்குறுணி[௩௮] இராமன் கணவதியான ஞான சிவனுக்கு நிசதம் நெலு முக்குறுணி [௩௯] பிச்சன் வெண் காடனான அகோரசி—

13. வனுக்கு நிசதம் நெல்லு முக்குறுணி [௪௰] மறைக்காடன் நம்பி ஆரூரனான ஞானசிவனுக்கு நிசதம் நெல்லு முக்குறுணி [௪௨] சத்தி திருநாவுக்கரையனான ஈசான சிவனுக்கு நிசதம் நெல்லு முக்குறுணி [௪௩] பொற்சுவரன் நம்பியாரூரனான தர்மசிவனுக்கு நிசதம் நெல்லு முக்குறுணி [௪௪] ஆச்சன் திருநாவுக் கரையனான நெத்ரசிவனுக்கு நிசதம்

14. நெல்லு முக்குறுணி [௪௫] ஐயாறன் பெண்ணொர் பாகனான இருதய சிவனுக்கு நிசதம் நெல்லு முக்குறுணி [௪௬] ராஜாதித்தன் அம்பலத்தாடியான சிகாசிவனுக்கு நிசதம் நெல்லு முக்குறுணி [௪௭] செல்வன் கணவதி தெம்பனான தர்மசிவனுக்கு நிசதம் நெல்லு முக்குறுணி [௪௮]

---

12 **வெண்காடன் நமசிவாயம்:** இவன் இயற்பெயர் உருத்ர சிவன்; வெண்காடு - திருவெண்காடு. **சிவனனந்தன்:** இவன் இயற்பெயர் யோக சிவன்; **சிவக்கொழுந்து சம்பந்தன்:** இவன் இபற்பெயர் அகோர சிவன். **இராமன் கணவதி:** இவன் இயற்பெயர் ஞான சிவன்; **பிச்சன் வெண்காடன்:** இவன் இயற்பெயர் அகோரசிவன்.

13. **மறைக்காடன் நம்பி ஆரூரன்:** இவன் இயற்பெயர் ஞான சிவன். மறைக்காடு-திருமறைக்காடு; இங்குள்ள கோயில் கதவினை அப்பர் திறக்கவும் சம்பந்தர் மூடவும் பாடினர். **சத்தி திருநாவுக் கரையன்:** இவன் இயற்பெயர் ஈசான சிவன். சத்தி–உமாதேவி. **பொற் சுவரன் நம்பி யாரூரன்:** இவன் இயற்பெயர் தர்ம சிவன். **ஆச்சன் திருநாவுக் கரையன்:** இவன் இயற்பெயர் நேத்ர சிவன். ஆச்சன் – ஆச்சாரியன்; நாவுக்கரசர் சைவ சமயச்சாரியர்களில் ஒருவர் என்பது வெளிப்படை.

14. **ஐயாறன் பெண்ணோர் பாகன் :** இவன் இயற்பெயர் இருதய சிவன்: ஐயாறு–திருவையாறு; இதனைத் திருவாடி என்றும் கூறுவர். ஐந்து ஆறுகள் சந்திக்கும் இடத்தில் இவ்வூர் உள்ளமையால் இப்பெயர் பெற்றது. இங்குள்ள சிவன் பெயர் '**பஞ்ச நதி ஈசுவரர்**' எனப் பெயர் பெற்றிருப்பதும் இதனை வலியுறுத்தும். இவ்வூர் தஞ்சாவூருக்கு வடக்கே

கூத்தன் தில்லைக் கூத்தனான ஞானசிவனுக்கு நிசதம் நெல்லு முக்குறுணி [சகூ] உடுக்கை வாசிக்கும் மத்வெதை கொமபுறத்து தத்தய க்ரமவி—

15. த்தன் மகன் சுர்யதெவ க்ரமவித்தனான ஆ...லவிடங்க உடுக்கை விஜ்ஜாதிரனான சொம சிவனுக்கு நிசதம் நெல்லு முக்குறுணி [ரு௰] கொட்டிமத்தளம் வாசிக்குங் குணப் புகழ் மருதனான சிகாசிவனுக்கு நிசதம் நெல்லு முக்குறுணி [ருக]

ஏழு கல் தொலைவில் காவிரி நதியின் வடகரையில் உள்ளது. பெண்ணொ பாகன்—அர்த்த நாரீச்சுரன், சிவன் **ராஜாதித்தன் அம்பலத்நாடி:** *இவன் இயற்பெயர் சிகாசிவன்.* **செல்வன் கணபதி தெம்பன்:** *இவன் இயற்பெயர் தர்மசிவன். கணவதி என்னும் பெயர் பத்தாம் நூற்றாண்டிற்கு முன்னரே வழக்கில் இருந்துள்ளமை குறிப்பிடத் தக்கது* **கூத்தன் தில்லைக் கூத்தன்:** *சிவன் இயற்பெயர் ஞானசிவன்; தில்லைக் கூத்தன் — சிதம்பரம் நடராசப் பெருமான்.*

உடுக்கை வாசிக்கும்—உடுக்கை கொட்டும்; உடுக்கை — சிறிய மத்தளம்; **த்வெதை கொமபுறம்:** இஃது ஓர் ஊர்; இப்பெயர் பெரிய இலெயிடன் சாசனத்தின் 158, 421 ஆம் பக்கங்களிலும் காணப்படுகிறது. **தத்தய க்ரம வித்தன்:** இவன் திருப்பதிய விண்ணப்ப சாசனத்தில் உடுக்கை வாசிப்பவனாகக் குறிக்கப்படும் சோமசிவன் என்பானுக்குத் தகப்பன். கிரமவித்தன் என்பது, வேதத்தின் கிரம பாடத்தில் வல்ல பார்ப்பனரது பழைய பட்டப் பெயர்.

15. **சோம சிவன்:** இஃது திருப்பதிய விண்ணப்ப சாசனத்தில் குறிக்கப்படும் உடுக்கை வாசிப்போன் பெயர். இவனுக்குச் சூரியதேவ கிரமவித்தன், ஆ...லவிடங்க உடுக்கை விஜ்ஜாதிரன் என வேறு பெயர்களும் உண்டு. இவன் தந்தை த்வெதைக் கொமபுபும் என்னும் ஊரிலுள்ள தத்தய கிரமவித்தன் என்பவனாவான்.

சிகா சிவன்: இஃது திருப்பதிய விண்ணப்ப சாசனத்தில் குறிக்கப்படும் கொட்டி மத்தளம் வாசிப்போன் பெயர்; கொட்டி மத்தளம் — பெரிய மத்தளம். குணம் புகழ் மருதன் என்பது, இவனுக்கு வழங்கிய மற்றொரு பெயர். மருதன் என்பது மருதூரன் என்று கருதப்படுகிறது. மருதூர் கும்பகோணம் தாலுகாவிலுள்ள திருவிடைமருதூர்.

குறிப்பு: இச்சாசனத்தில் குறிக்கப்படும் இயற்பெயர்கள் அவரவர் தீட்சைப் பெயர்களாகும். மற்றவை அவர்கள் தொழில் பற்றியும் வாழ்ந்த இடம் பற்றியும் ஏற்பட்டனவாகும்.

பயிற்சி வினுக்கள்

1. 'திருமகள் போலப் பெருநிலச் செல்வியும்' என்று தொடங்கும் மெய்க்கீர்த்தி எந்த அரசனுக் குரியது? அது அமைந்த சானங்களின் பெயர்களைக் குறிப்பிடுக.

2. மெய்க்கீர்த்தியின் இலக்கணம் யாது? முதலாம் இராசராசன் மெய்க்கீர்த்தியில் அது அமைந்த தன்மையை விளக்குக.

3. வேங்கைநாடு, கங்கபாடி, நுளம்பபாடி, குடமலைநாடு—இவற்றைப் பற்றிக் குறிப்பு வரைக.

4. சாசனம் தோன்றிய காலத்தைக் குறிப்பிடுவதில் 'இவ்வரசர்க்கு இத்தனையாவது யாண்டு' என்று கூறும் முறைக்கு வேருகவும் கூறப்பட்டுள்ள முறை யாது?

5 முதலாம் இராசராசனுக்கும் தேவாரத்திற்கு முள்ள தொடர்பு யாது?

6. திருப்பதியம் விண்ணப்பம் செய்தல் என்பது என்ன? இதன் நடைமுறை யாரால் எங்கு எவ்வாறு அமைந்தது?

7. கோயில்களில் தேவாரம் பாடும் வழக்கம் யார் காலத்தில் ஏற்பட்டது? அது எந்தச் சாசனத்தால் தெரிகிறது? அதில் கூறப் பெற்றுள்ள செய்திகளை விளக்குக.

8. இராச ராச சோழன் நியமித்த பிடாரர்களுக்கு அமைந்திருந்த ஏற்பாடுகள் எவை? விளக்கமாக வரைக.

9. திருப்பதியம் விண்ணப்பஞ் செய்யும் போது வாசிக்கப் பெற்ற வாத்தியங்கள் எவை? அவற்றை வாசிப்போர் பெயர்களைச் சாசனத்தில் உள்ளபடி குறிப்பிடுக.

10. திருப்பதியம் விண்ணப்பஞ் செய்வார்க்கு நியமிக்கப்பட்ட நிபந்தனைகள் யாவை?

11. உடையார், திருப்பதியம், பிடாரர், கொட்டி மத்தளம், நிவந்தம், உள்ளூர்ப் பண்டாரம், அனுதேசம் போனுர், தலைமாறு, அடுத்த முறை கடவார், ஆளிட்டு, அந்த நியாயத்தார், திருவாய் மொழிந்தபடி, அரையன், கிரமவித்தன் – இவற்றிற்குப் பொருள் தருக.

12. சாசனம் எழுது முறை முதலாம் இராசராசன் சாசனத்தில் எங்ஙனம் கூறப் பெற்றுள்ளது?

13. ராஜகேசரியோ டொக்கும் ஆடவல்லான், திருவாய்மொழிந்தருளினபடி கல்லில் வெட்டியது – விளக்குக.

14. சாசனங்களில் மரக்கால்கள் எவ்வெப் பெயரால் வழங்கின? வழங்கப்பட்ட இடங்கள் யாவை?

15. திருவாஞ்சியம் திருவெண்ணுவல், வெண்காடு, ஐயாறு—இவை எங்கு உள்ளன? குறிப்பு எழுதுக.

16. திருவாஞ்சியத் தடிகள் என்றது யாரை? குறிப்பு வரைக.

17. திருப்பதியம் பாடுதற்கு முதலாம் இராசராசன் செய்த ஏற்பாடுகள் எவை?

9. ஆழ்வார் பராந்தகன் குந்தவையார் சாசனம்*

முன்னுரை

முதலாம் இராசேந்திர சோழ தேவன் [1] சாசனங்கள் என்பவை, முதலாம் இராசேந்திர சோழனால் ஏற்பட்ட சாசனங்களும், அவன் காலத்தில் பிறரால் ஏற்பட்ட சாசனங்களுமாகும். அவை ஆழ்வார் பராந்தகன் குந்தவையார் சாசனம், போய்கை நாடு கிழவன் ஆதித்த சூரியன் சாசனங்கள் **1, 2, 3**, ஸ்ரீ இராசேந்திர சோழதேவன் சாசனம் என்பனவாகும். இவற்றுள், ஸ்ரீ இராசேந்திர சோழ தேவர் சாசனம் ஒன்றும், முதலாம் இராசேந்திர சோழனால் ஏற்பட்டது; ஏனைய நான்கும் அவன் காலத்தில் பிறரால் ஏற்பட்டவை.

ஆழ்வார் பராந்தகன் குந்தவையார் சாசனம் என்பது, முதலாம் இராசராசன் தமக்கையாரும், கீழைச்சாளுக்கிய மன்னனான

---

* S. I. I., Vol. II, Part I, No. 7, pp. 77–84.

1. முதலாம் இராசேந்திர சோழ தேவன் முதலாம் இராசராசனுக்கு வானவன் மகாதேவியிடம் பிறந்த மகன். மதுராந்தகன் என்பது இவனது இயற்பெயர். இவன் கி. பி 1012ல் இராசேந்திரன் என்னும் பெயரோடு இளவரசனானன். அது முதல் இவன் இராசேந்திர சோழ தேவன் என்று அழைக்கப் பட்டான். கி பி 1012 முதல் 1044 வரை 33 ஆண்டுகள் சோழ நாட்டை ஆண்டான்.

இவன் 'கோப்பரகேசரி வர்மன்' என்னும் சிறப்புப் பெயர் பெற்றவன் இவன் ஆட்சியின் மூன்றாம் ஆண்டு முதல் இவனுடைய மெய்க்கீர்த்தி காணப்படுகிறது. அது 'திருமன்னி வளர இருநில மடந்தையும்' என்று தொடங்கும். மெய்க்கீர்த்திகள் பெரும்பாலும் அரசருடைய வெற்றிகளையே கூறுவன வாதலால், அவை ஆண்டுதோறும் விரிந்து கொண்டே போகும். எடுத்துக்காட்டாக இங்குப் பாடமாக வந்துள்ள சாசனங்களில் இவன் மெய் கீர்த்தி ஒன்றைவிட மற்றொன்று விரிவாகக் காணப்படுவதைக் கூறலாம்.

இராசேந்திர சோழ தேவன் அடைந்த வெற்றிகள் பலவாகும். முதலாவது, இவன் மேலைச்சாளுக்கிய ராட்சிக் குட்பட்டிருந்த இடைதுறை நாடு, வனவாசி, கொள்ளிப்பாக்கம், மண்ணைக் கடகம் ஆகியவற்றை வென்றான். பின், இலங்கை மன்னனான ஐந்தாம் மகிந்தனை வென்று ஈழநாட்டைக் கைப் பற்றினன். சேரநாட்டின் மீது படை எடுத்துச் சேர மன்னர்க்குரிய முடியையும் மாலையையும் எடுத்துக் கொண்டதோடு பழந்தீவை வென்று, சாந்திமத்தீவில் பரசுராமனால் பாதுகாக்கப்பட்ட செம்பொன் முடியையும் கவர்ந்தான். முயங்கி என்னும் ஊரில் மேலைச் சாளுக்கிய மன்னனான சயசிங்கனை எதிர்த்து வென்று இரட்டபாடி ஏழரை இலக்கத்தையும் தன் கீழப்படுத்தினன்.

வல்லவரையன் வந்திய தேவனுக்கு மனைவியாருமான குந்தவை யார் தஞ்சைப் பெரிய கோயிலில் எழுந்தருளுவித்த திருமேனி களுக்குக் கொடுத்த அணிகலன்களைப் பற்றிக் கூறும் சாசனமா கும். இச்சாசனம் கங்கை கொண்ட சோழன் என்னும் முதலாம் இராசேந்திர சோழதேவன் காலத்தில், அவன் ஆட்சியின் மூன்ரு வது ஆண்டிற்கு முன்னர் ஏற்பட்டது. தஞ்சைஇராசராசேசுவர முடையார் கோயில் இரண்டாவது அடுக்குத் தெற்குச் சுவரில் காணப்படுகிறது. தமிழ் மொழியில் கிரந்த எழுத்துக்கள் கலந்து எழுதப் பெற்றது; ஒன்பது பத்திகளை யுடையது.

இச்சாசனத்தில் முதலாம் இராசேந்திர சோழ தேவன் 'ஸ்ரீகோப் பரகேசரி வர்மர்' என்றும், குந்தவையார் ஸ்ரீராஜ ராஜ

இதன் பின் இவன் தான் புதிதாக அமைத்த கங்கை கொண்ட சோழபுரம் என்னும் நகரையும், அந்நகரத்தில் கட்டிய கங்கை கொண்ட சோழேச்சுரம் என்னும் கோயிலையும் கங்கை நீரால் புனிதப் படுத்துவதற் காக, அதைக் கொண்டு வர வடநாடு சென்ருன். செல்லும் வழி யில் சக்கரக் கோட்டம், மாசுணிதேசம், மதுரை மண்டலம், நாமணைக் கோணம், பஞ்சப் பள்ளி, இந்திரரதன் ஆண்ட ஒட்ட விசயம், கோசல நாடு, தன்ம பாலன் ஆண்ட தண்டபுத்தி, இரணசூரன் ஆண்ட தக்கண லாடம், கோவிந்த சந்தன் ஆண்ட வங்காள தேசம், மகிபாலன் ஆண்ட உத்தர லாடம் ஆகிய நாடுகளை வென்று, கங்கைநீரையும் திரண்ட திறைப்பொருள்களையும் சோழநாட்டிற்குக் கொண்டு வந்தான். இதனை இவனுடைய 'வடநாட்டுப் போர்' என்பர். இப்போரில் தமிழர் நாகரீகம் வடநாட்டில் பரவிற்று என்றும், அந் நாட்டுச் சைவாச்சாரியர்கள் பலர் தமிழ் நாட்டிற்கு அழைத்து வரப் பெற்றனரென்றும் கூறுவர்.

இவன், கடலில் செலுத்தும் பல கப்பற் படைகளை யுடையவனு யிருந்தான் என்பது இவனது கடாரம் கொண்ட போர்ச் செயலால் அறியப்படுகிறது. இந்தப் போரில் இராசேந்திரசோழன் கடாரத் தரசனுகிய சங்கிராமவிசயோத்தமனை வென்று, அவன் பட்டத்து யானையையும், பெரும் பொருளையும், வித்தியாதரத் தோரணத்தையும் கவர்ந்து கொண்டது மன்றி, ஸ்ரீவிசயம் (சுமத்ரா), பண்ணை, மலையூர், மாயிருடிங்கம், இலங்கா சோகம், பப்பாளம், இலிம்பங்கம், வளைபந்தூர், தக்கோலம், தமாலிங்கம், இலாமுரிதேசம், நக்கவாரம் முதலியவற்றை யும் வென்ருன். இப்போர், வாணிகம் காரணமாக இந்நாடுகளில் தங்கி யிருந்த தமிழர்களின் உரிமைகளைக் காப்பாற்றும் பொருட்டு ஏற்பட்ட தென்பர்.

இவனுடைய ஆட்சியின் பிற்காலத்தில் இவன் மலைநாடு, ஈழநாடு, மேலைச் சாளுக்கிய நாடு முதலியவற்றில் மீண்டும் போர் நிகழ்த்த

தேவர் திருத் தமக்கையார், வல்லவரையர் வந்தியதேவர் மகாதேவியார், ஆழ்வார் பராந்தகன் குந்தவையார், என்றும் அழைக்கப்பட்டுள்ளனர். குந்தவையார், உமா பரமேசுவரியார் திருமேனிக்கு மகுடம் 1, வாளி 2, உழுத்து 2, மாலை 1, வாகுவலயம் 2, சந்தம் 1, கைப்பொட்டு 2, சூடகம் 2, ஆகிய அணிகலன்களைக் கொடுத்துள்ளமையும், அவற்றின் பொன் ஆடவல்லான் என்னும் நிறைகல்லாலும், இரத்தினங்கள் (வைரம், மாணிக்கம், முத்து) தட்சிண மேருவிடங்கன் என்னும் நிறைகல்லாலும் நிறுக்கப்பட்டும் மதிப்பிடப்பட்டும் கல்லில் வெட்டப்பட்டுள்ளமையும் இதில் கூறப்பட்டுள்ளன. வைரம், மாணிக்கம் முதலியவற்றின் வகைகளும், அவற்றின் ஏற்றத் தாழ்வுகளும் இச் சாசனத்தால் அறியப்படு

வேண்டிய தாயிற்று. ஆயினும் அப்போர்களை யெல்லாம் இராசேந்திரன் மகனான இராசாதிராசன் நடத்தி வெற்றி பெற்றான். இராசேந்திரனுக்கு உத்தமசோழன், சோழேந்திர சிம்மன், விக்கிரமசோழன், முடிகொண்ட சோழன், பண்டித சோழன், கடாரங் கொண்டோன், கங்கைகொண்ட சோழன் முதலிய சிறப்புப்பெயர்கள் இருந்தன. இவனே முதல் முதல் பல நாடுகளையும் செயித்து, அவைகளில் தன் மக்களை இருந்து ஆளும்படிச் செய்தவன். இவன் காலத்தில் பழையாறை என்னும் சோழர் தலைநகர் இவன் பெயரால் முடிகொண்ட சோழபுரம் என்று அழைக்கப்பட்டது. இவன் புதிதாக அமைத்த தலைநகர், இவன் சிறப்புப் பெயரால் கங்கைகொண்ட சோழபுரம் என்று பெயர் பெற்றது. கங்கைகொண்ட சோழேச்சுரம் என்பது அந்நகரத்தில் இவன் கட்டிய சிவன் கோயிலாகும். நாட்டில் பல ஏரிகளையும் குளங்களையும் இவன் வெட்டினான்; பல கோயில்களுக்கு நிவந்தங்கள் கொடுத்தான். புலவர்களை ஆதரித்துப் பண்டித சோழன் என்று பெயர் பெற்றான். இவனுக்குச் சைவாச்சாரியராக விளங்கியவர் சர்வ்வ சிவ பண்டிதர் ஆவர். அவருக்கு இவன் ஆசாரிய போகமாக ஆண்டு தோறும் 2000 கல நெல் கொடுத்தான் என்று இவன் சாசனம் கூறுகின்றது.

இராசேந்திரனுக்கு ஐந்து மனைவியரும், இராசாதிராசன், இராசேந்திரன், வீரராசேந்திரன் முதலிய பல புதல்வர்களும், அருண்மொழி நங்கை, அம்மங்கை தேவி என இரு புதல்வியரும் இருந்தனர். இவனுக்குப்பின் இவன் மக்களில் இராசாதி ராசன், இராசேந்திரன், வீரராசேந்திரன் மூவரும் ஒருவர் பின் ஒருவராகச் சோழநாட்டை ஆண்டனர். இவன் தன் மகள் அம்மங்கை தேவியைக் கீழைச் சாளுக்கிய மன்னனாகிய விமலாதித்தனுக்கும் முதலாம் இராசராசன் புதல்வியாகிய குந்தவைக்கும் பிறந்த இராச ராச நரேந்திரனுக்கு மண முடித்து வைத்தான்.

கின்றன. கழஞ்சு, மஞ்சாடி, மா, குன்றி ஆகியவை இச்சாசனத்தில் காணப்படும் நிறுத்த லளவைக ளாகும்.

முதலாம் இராசேந்திர சோழ தேவன் கி. பி. 1012 முதல் 1044 வரை முப்பத்து மூன்று ஆண்டுகள் சோழநாட்டை ஆண்டான். இச்சாசனம் அவன் ஆட்சியின் மூன்ருவது ஆண்டிற்கு முன்னர் ஏற்பட்ட தெனவே, இதன் காலம் கி. பி. 1015 ஆம் ஆண்டிற்கு முற்பட்ட தென்னலாம்.

சாசனம்

1. ஸ்வஸ்திஸ்ரீ கொப்பர கெஸரி வன்மரான உடையார் ஸ்ரீ ராஜெந்ர சொழ தெவர்க்கு யாண்டு மூன்ருவது வரை உடையார் ஸ்ரீ ராஜராஜதெவர் திருத் தமக்கையார் வல்லவரையர் வந்தியதெவர் மஹாதெவியார் ஆழ்வார் பராந்தகன் குந்தவையார் தாம் எழுந்தருளுவித்த திருமெனி

அவர்கள் இருவருக்கும் பிறந்த மகனே பிற்காலத்தில் புகழ் பெற்று விளங்கிய முதலாம் குலோத்துங்க சோழன் ஆவான். முதலாம் இராசராசன் அரசியல் அதிகாரிகளில் ஒருவஞன பொய்கை நாடு கிழவன் ஆதித்த சூரியன் இவன் காலத்திலும் இருந்து பல தருமங்களைச் செய்தான். இவனுக்கு உதவியாகப் பல அரசியல் அதிகாரிகள் இருந்தனர். இவன் தொண்டை மண்டலத்திலுள்ள பிரம தேசம் என்னும் இடத்தில் இறந்தான்.

குறிப்புரை

ஸ்வஸ்திஸ்ரீ – மங்களம் உண்டாக; 'நலம் வளர்க' எனினுமாம். **கொப்பர கெஸரி வன்மர்:** இது முதலாம் இராசேந்திர சோழனுக்குரிய பட்டப் பெயர். இவன் தந்தையான முதலாம் இராசராசன் 'இராசகேசரி' என்று அழைக்கப்பட்டதால், இவன் 'பரகேசரி' என்று அழைக்கப்பட்டான். வன்மர் - வர்மர், அரசர். **உடையார்:** இது கடவுள், அரசர், பெரியார் முதலியோர்க்கு வழங்கும் ஒரு சிறப்புப் பெயர். **யாண்டு மூன்ருவது வரை** – ஆட்சியின் ஆண்டு மூன்ருவது வரைக்கும்; **ஸ்ரீ ராஜ ராஜ தேவர்** – முதலாம் இராசராச சோழன்; இவன் குந்தவையார்க்கு உடன் பிறந்த தம்பி. **வல்லவரையர் வந்திய தேவர்:** இவன் கீழைச் சாளுக்கிய மன்னன்; குந்தவையாரின் கணவன். **ஆழ்வார் பராந்தகன் குந்தவையார்:** ஆழ்வார் பராந்தகன் என்னும் குந்தவையார்; குந்தவையாரின் சிறப்புப் பெயர் 'ஆழ்வார் பராந்தகன்' என்பதாகும். **எழுந்தருளுவித்த** செய்து வைத்த; குந்தவையார் தஞ்சைப் பெரிய கோ

என்னுங் குடி
களுக்குக் குடுத்த பொன் ஆடவல்லான் என்னுங் குடி
ஞைக் கல்லால் நிறை எடுத்தும் ரத்நங்கள் சரடுஞ் சட்டமும்
செப்பாணிகளும் அரக்கும் பிஞ்சும் நீக்கி நிறையுள்ளன
நிறை எடுத்தும் அரக்கும் பிஞ்சுங்கூட ரத்நங் கட்டி வெறு
நிறைய் அறிய உண்ணுதன அரக்கும் பிஞ்சும் உட்பட
தக்ஷிண மெரு விடங்கன் என்னுங் காசுகல்லால் நிறை

யிவில் பல பிரதிமங்களையும் திருமேனிகளையும் செய்து வைத்து, அவை சளுக்குப் பல அணிகலன்களைத் தானமாகச் கொடுத்தாள். திருமேனி கள்—கடவுள் திருவுருவங்கள்; குடுத்த-கொடுத்த; ஆடவல்லான் என்னும் குடிஞைக்கல்: ஆடவல்லான் என்பது, சிவபெருமானுக்குரிய ஒரு பெயர்; அப்பெயரால் பொன் முதலியவற்றை நிறுக்க உதவும் கோயில் நிறைகல் 'ஆடவல்லான்' என்று பெயர் பெற்றது. குடிஞைக் கல் என்பது, சோழர் காலத்தில் நாட்டில் பொன் முதலியவற்றை நிறுக்க உதவிய ஒரு நிறைகல். நிறை எடுத்தும் — நிறுத்துக் கணக்கிட்டும்.

ரத்நங்கள் — பொன் ஆபரணங்களில் பதித்த வைரம், மாணிக்கம், முத்து என்பவை சரடு - கோக்கும் கயிறு; சட்டம் — நகையின் உம்மச்சு (Socket in a jewel for insetting gems); செப்பாணி—செம்பினால் செய்யப்பட்ட ஆணி; இது இரத்தினங்களைப் பதித்து முறுக்குவதற்கு உதவும். அரக்கு—மெழுகு; இது இரத்தினங்களை ஆபரணங்களில் ஒட்ட வைப்பதற்கு உதவும். பிஞ்சு — அரும்புக் கட்டடம்; இது இரத்தினங் களைக் கட்டியாய் பிடித்துக்கொள்வதற்கு உதவும். நிறை யுள்ளன நிறை எடுத்தும்—இரத்தினங்களை ஆபரணங்களில் ஒட்ட வைப்பதற்கு பயன் படும சரடு, சட்டம், செப்பாணி, அரக்கு; பிஞ்சு ஆகியவைகளை நீக்கி நிறுக்கக் கூடிய இரத்தினங்களை நீக்கி நிறுத்துக் கணக்கிட்டும். அரக்கும் பிஞ்சும் கூட ரத்நங் கட்டி — அரக்கு, பிஞ்சு இவைகளால் இரத்தி னங்களை ஒட்ட வைத்து: வேறு நிறை அறிய உண்ணுதன - அரக்கு, பிஞ்சு முதலியவை வேறு, இரத்தினம வேறு எனப் பிரித்து நிறுத்தி அறிய முடியாதவை; உண்ணுதன—ஒண்ணுதன, கூடாதவை; உட்பட— சேர்த்து. தக்ஷிணமெரு விடங்கன் என்னும் காசு கல்லால்: தக்ஷிண மேரு விடங்கன் என்பது, தஞ்சைப் பெரிய கோயிலிலுள்ள விமானத் திற்குரிய பெயர். அப்பெயரால் இரத்தினங்களை நிறுக்கும் கோயில் நிறை கல் 'தட்சண மேருவிடங்கன்' என்று அழைக்கப்பட்டது. காசுகல் என்பது, இரத்தின முதலிய ஆபரணங்களை நிறுக்கும் நிறைகல்லுக்கு வழங்கும் பொதுப் பெயராகும்.

குந்தவையார் தஞ்சைப் பெரிய கோயிலில் எழுந்தருளுவித்த திரு மேனிகளுக்குக் கொடுத்த அணிகலன்களின் பொன், ஆடவல்லான் என் னும் கோயில் நிறைகல்லாலும், இரத்தினம் முதலியன தக்ஷிணமேரு விடங்கன் என்னும் கோயில நிறைகல்லாலும நிறுத்துக் கணக்கிடப் பட்டுக் கல்லில் எழுதப்பட்டது என்பது.

எடுத்துங் கல்லில் வெட்டின [க] தக்ஷிண மெரு விடங்கர் நம் பிராட்டியார் உமா பரமேசுவரியார்க்குக் குடுத்தன [உ] திருமகுடம் ஒன்று பொன் முன்னூற்று நாற்பத்து எண் கழஞ்சரையே மூன்று மாவும் கட்டின வயிரம் மட்டதாரை அறுநூற்று முப்பத்தாறும் மட்டதாரைச் சவக்கம் நூற்று அறுபத்தொன்பதும் மட்டதாரைச் சப்படி முப்பத்திர ....

2. ஆக வயிரம் பொறிவும் முறிவும் ரத்தபிந்துவும் காக பிந்துவும் வெந்தனவும் உடையன உட்பட எண்ணூற்றைம் பத்தொன்பதினால் நிறை எழு கழஞ்செய் முக்காலெ

தக்ஷிணமெரு விடங்கர் நம்பிராட்டியார்: தக்ஷிண மேரு என்பது தஞ்சைப் பெரிய கோயில் விமானத்திற்கு உரிய பெயர்; அவ் விமானத் தின் கீழ் எழுந்தருளிய இறைவன் 'தக்ஷிணமேருவிடங்கர்' எனப்பட் டார். அவ் இறைவன் தேவியார் 'தக்ஷிணமேரு விடங்கர் நம்பிராட்டி யார்' எனப் பட்டார். அத்தேவியாருக்கு உமா பரமேசுவரியார் என்று பெயர். குந்தவையார் அப்பிராட்டியார் திருவுருவத்தை எழுந்தருளச் செய்து, அதற்குத் திருமகுடம் 1, திருவாளி 2, திருவுழுத்து 2, திரு மாலை 1, திருப்பாகுவலயம் 2, திருச்சந்தம் 1, திருக்கைப் பொட்டு 2 திருச்சூடகம் 2, ஆகிய அணிகலன்களைக் கொடுத்தார்.

திருமகுடம் 1: இது தலையில் சூடும் ஓர் அணிகலன்; பொன்னாலா னது; வயிரம் 859ம், மாணிக்கம் 309ம், முத்து 669ம் கொண்டது. இதிலுள்ள பொன் நிறை $348\frac{1}{2}$ கழஞ்சு, $\frac{3}{10}$ மஞ்சாடி. வயிரங்களில் மட்ட தாரை 636, மட்டதாரைச் சவக்கம் 169, மட்டதாரைச் சப்படி 32 ... மொத்த நிறை $7\frac{3}{4}$ கழஞ்சு, $4\frac{2}{5}$ மஞ்சாடி. மாணிக்கங்களில் ஹளஹளம் குணவியன் 125, ஹளஹளம் 122, கோமளம் 41, நீலகந்தி 11, தளம் 10; மொத்த நிறை $14\frac{3}{4}$ கழஞ்சு, $2\frac{4}{5}$ மஞ்சாடி. முத்துக்களின் மொத்த நிறை 36 கழஞ்சு, 1 மஞ்சாடி, 1 குன்றி; ஆகத் திருமகுடத்தின் பொன், வயிரம், மாணிக்கம், முத்து இவற்றின் மொத்த நிறை 407 கழஞ்சு, 9 மஞ்சாடியும் 5000 காசு விலை மதிப்புமாகும்.

கழஞ்சரை – அரைக் கழஞ்சு; 1 கழஞ்சு $=20$ மஞ்சாடி; மா $=\frac{1}{20}$ குன்றி அல்லது $\frac{1}{10}$ மஞ்சாடி. கட்டின வயிரம் - திருமகுடத்தில் பதித்த வயிரம்; மட்டதாரை, மட்டதாரைச் சவக்கம், மட்டதாரைச் சப்படி, என வயிரம் பல திறப்படும்; வைரம்–இரத்தினங்களின் ஒரு வகை; மட்ட தாரை-மெல்லிய கரைக் கம்பியை யுடையது; சவக்கம் – சமசதுர முடையது; சப்படி – தட்டையாக இருப்பது.

2. பொறிவு, முறிவு, இரத்தபிந்து, காக பிந்து வெந்தன முதலிய வை வைரத்தில் காணப்படும் குற்றங்களாகும். பொறிவு – புள்ளி

நாலு மஞ்சாடியும் நாலுமாவும் மாணிக்கம் ஹளஹளம் குணவியன் நூற்றிருபத்தைஞ்சும ஹளஹளம் நூற்றிருபத்திரண்டும் கொமளம் நாற்பத்தொன்றும் நீலகந்தி பதினொன்றும் தளம் பத்தும் ஆக மாணிக்கம் குழிவும் ப்ரஹரமும் வெஜ்ஜமும் லஸுநியும் த்ராஸமும் கற்பற்றும் உடையன உட்படப் பரியனவும் நெரியனவும் ஆக முன்னூற்றெண்பதினுல் நிறை பதிநாற்க் கழஞ்செ முக்காலெ இரண்டு மஞ்சாடியும் எட்டு மாவும் கட்டினவும் கொத்தனவும் ஆக முத்து வட்டமும் அனு வட்டமும் ஒப்பு முத்துங் குறுமுத்தும் நிம்பொளமும் பயிட்டமும் பழமுத்தும் இப்பிபற்று அராவினவும் சிவந்த நீரும் குளிர்ந்த நீரும் வரையுங் கறையுங் குருவும் சுப்பிரமும் உடையன உட்படப் பரியனவும் நெரியனவும் ஆக முத்து அறுநூற்று அறுபத்

கொண்டது; முறிவு—ஒடிந்து போனவை; இரத்தபிந்து — செந் நிறங் கொண்டது; பிந்து—நிறம்; காகபிந்து—கரு நிறங் கொண்டது; வெந்தன— வெந்து போனவை.

நிறை — எடை; எழுகழஞ்செய் முக்காலெ — $7\frac{3}{4}$ கழஞ்சு; மாணிக்கம் — சிவப்புக்கல்: அது ஹளஹளம் குணவியன், ஹளஹளம், கோமளம், நீலகந்தி, தளம் எனப் பல திறப்படும். ஹளஹளம் - ஒலியுடையது; குணவியன் — தூய்மை, முதன்மை; தூய்மையான ஹளஹளம், 'ஹளஹளம் குணவியன்' எனப்பட்டது. கோமளம் — குறைந்த விளைச்சலுள்ளது; மென்மையுடையது எனினுமாம். நீலகந்தி — நீலநிறமுடையது; இதனை 'நீல கந்திகா' என்றும் கூறுவர். தளம் — செம்மையாக்கப் படாதது, சாணை பிடிக்காதது.

குழிவு, ப்ரஹரம், வெஜ்ஜம், லஸுநி, த்ராஸம், கற்பற்று, முதலியவை மாணிக்கத்தில் காணப்படும் குற்றங்களாகும். குழிவு — குழிந்திருப்பது; ப்ரஹரம் (பிரகரம்) — கோட்ட முடையது; வெஜ்ஜம் — வெந்திருப்பது; லஸுநி (இலசுனம்) — வெண்ணிறமான புள்ளியுடையது; த்ராஸம் (திராசம்)—பிளவுபட்டிருப்பது; கற்பற்று—கல்லையுடையதாயிருப்பது (unpolished Rubies adhering to the ore).

பரியன — பெரியவை; நெறியன — இது 'சிறியன' என்றிருத்தல் வேண்டும்; கட்டின—கட்டப்பட்டவை; கொத்தன — கோக்கப்பட்டவை.

முத்துக்கள் வட்டம், அனுவட்டம், ஒப்புமுத்து, குறுமுத்து, நிம்பொளம், பயிட்டம், பழமுத்து, இப்பி பற்று, அராவின, குளிர்ந்த நீர், சிவந்த நீர் எனப் பல திறப்படும். வரை, கறை, குரு, சுப்பிரம் என்பன அவற்றின் குற்றங்களாகும். இவற்றை முத்தின் வகை என்பாருமுளர்.

தொன்பதினல் நிறை முப்பத்தறு கழஞ்செ மஞ்சாடியுங் குன்றியும் ஆக நிறை நானூற்றெழுகழஞ்செ ஒன்பது மஞ் சாடிக்கு விலை காசு ஐய்யாயிரம் [ரூ] வாளி ஒன்று பொன் கழஞ்செ எட்டு மஞ்சாடியும் எட்டு மாவும் தைத்த முத்து வட்டமும் ஒப்புமுத்தும் நிம்பொளமும் குளிர்ந்த வரையுங்க ....

3. லும் உடையன உட்பட முத்து ஒன்பதினல் நிறை கழஞ்செய் ஒன்பது மாவும் ஆக நிறை இருகழஞ்செய் ஒன் பது மஞ்சாடியும் எழு மாவுக்கு விலை காசு பதினைஞ்சு [ச] வாளி ஒன்று பொன் கழஞ்செய் எட்டு மஞ்சாடியும்

வட்டம் — வட்ட வடிவமுடையது; அனு வட்டம் — உருண்டை வடிவமுடையது; ஒப்புமுத்து — சாணைப்பிடித்த முத்து; குறுமுத்து — சிறிய முத்து; பழமுத்து — பழுத்த அல்லது முற்றிய முத்து; இப்பி பற்று — இப்பியோடு கூடிய முத்து; அராவின — செம்மையாக்கப் பட்ட வை; குளிர்ந்த நீர் — தெளிந்த நீரோட்ட முடையது; சிவந்த நீர் — சிவந்த நீரோட்டமுடையது; குரு—சிவந்த புள்ளியுடையது; சுப்பிரம் — வெண்ணிறப் புள்ளியுடையது.

3 வாளி 2: இவை காதணிகள்; பொன்னலானவை. ஒவ் வொன்றும் 9 முத்துக்களையுடையது. ஒவ்வொன்றிலும் பொன் நிறை 1 கழஞ்சு, $8\frac{4}{5}$ மஞ்சாடி; முத்துக்களின் நிறை 1 கழஞ்சு, $\frac{9}{10}$ மஞ்சாடி; ஆகப் பொன்னும் முத்தும் சேர்ந்து 2 கழஞ்சு, $9\frac{7}{10}$ மஞ் சாடியும், 15 காசு மதிப்பு முடையது.

வாளியில் அமைந்த முத்து வகை வட்டம், ஒப்புமுத்து, நிம்பொளம் குளிர்ந்த நீர் என்பனவும், அவற்றின் குற்றவகை வரை, கறை, குரு, சுப்பிரம், திரங்கல் என்பனவும் ஆகும். தைத்த முத்து — வாளியில் வைத் தித் தைக்கப்பட்ட முத்து; திரங்கல் — சுருண்டிருப்பது.

உழுத்து 2: இவை பழங்கால அணிகல வகைகள்; பொன்னலான வை. ஒவ்வொன்றும் 2 கழஞ்சு 1 குன்றி நிறை பொன்னும், வயிரம் 6ம், மாணிக்கம் 2ம், முத்து 2ம் கொண்டது; இதனிலமைந்த வயிரம், பளிங்கு வகையைச் சேர்ந்தது; மாணிக்கம், கோமள வகையைச் சேர்ந் தது; முத்து, அம்புமுது வரை, அம்பு முது பாடன், குரு என்னும் வகையினவாகும்.

இவற்றுள் ஒரு உழுத்திலுள்ள 6 பளிங்கு வயிரம் நிறை $\frac{9}{10}$ மஞ் சாடியும், மாணிக்கக் கோமளம் 2ன் நிறை $\frac{3}{5}$ மஞ்சாடியும், அம்புமுது வரை, அம்புமுது பாடன் ஆகிய 2 முத்துக்களின் நிறை $9\frac{7}{10}$ மஞ்சாடியும் ஆகப் பொன், வயிரம், மாணிக்கம், முத்து இவற்றின் மொத்த நிறை $2\frac{1}{2}$ கழஞ்சு $1\frac{7}{10}$ மஞ்சாடியும், 15 காசு மதிப்புமுடையது. மற்றொரு

எட்டு மாவும் தைத்த முத்து வட்டமும் ஒப்புமுத்தும் நிம்பொளமும் குளிர்ந்த நீரும் வரையும் கறையும் குருவும் சுப்பிரமும் திரங்கலும் உடையன உட்பட முத்து ஒன்பதினால் நிறை கழஞ்செ ஒன்பது மாவும் ஆக நிறை இரு கழஞ்செய் ஒன்பது மஞ்சாடியும் எழு மாவுக்கு விலை காசு பதினஞ்சு [ரு] உழுத்து ஒன்று பொன் இரு கழஞ்செய் குன்றியும் பளிக்கு வயிரம் ஆறினால் நிறை ஒன்பது மாவும் மாணிக்கம் கொமளம் இரண்டினால் நிறை ஆறு மாவும் தைய்த்த முத்து அம்புமுதும் வரையும் அம்புமுது பாடனும் ஆக இரண்டினால் நிறை ஒன்பது மஞ்சாடியும் எழு மாவும் ஆக நிறை இரு கழஞ்சரையெ மஞ்சாடியும் எழு மாவுக்கு விலை காசு பதினஞ்சு [சு] உழுத்து ஒன்று பொன் இரு கழஞ்செய் குன்றியும் கட்டின பளிக்கு வயிரம் ஆறினால் நிறை ஒன்பது மாவும் மாணிக்கம் கொமளம் இரண்டினால் நிறை குன்றியும் தைய்த்த முத்து அம்புமுது பாடனும் குருவும் உடையன இரண்டினால் நிறை ஒன்பது மஞ்சாடியும் ஒன்பதுமாவும் ஆக நிறை இரு கழஞ்சரையெ மஞ்சாடியும் எட்டு மாவுக்கு வி ... ... [எ]

4. திருமாலை ஒன்று பொன் எண்பத்தறு கழஞ்சரையெ நாலு மஞ்சாடியும் அரை மாவும் கட்டின வயிரந் தூயன

உழுத்திலுள்ள பளிங்கு வயிரம் 6ன் நிறை $\frac{9}{10}$ மஞ்சாடிம், 2 மாணிக்கம் கோமளத்தின் நிறை 1 குன்றியும், அம்புமுது பாடன், குரு ஆகிய 2 முத்துக்களின் நிறை $9\frac{9}{10}$ மஞ்சாடியும், ஆகப்பொன், வயிரம், மாணிக்கம், முத்து இவற்றின் மொத்த நிறை $2\frac{1}{2}$ கழஞ்சு, $1\frac{4}{5}$ மஞ்சாடியும், 15 காசு விலை மதிப்புமுடையது

பளிங்கு வயிரம் — வயிர வகையில் ஒன்று; **மாணிக்கம் கோமளம்** — மாணிக்க வகையில் ஒன்று; **அம்புமுதும் வரையும்** — முத்து வகையில் கோடுள்ளது. அம்பு முது — முத்து வகையில் ஒன்று; வரை — கோடு; அம்புமுது பாடன் — முத்துவகையில் ஒளியுடையது; பாடன் — ஒளி; குரு-முத்து வகையில் செந் நிறப் புள்ளியுடையது.

4. **திருமாலை 1:** இது கழுத்தில் அணியும் ஓர் அணி கலன்; பொன்னாலானது. இதில் உள்ள வயிரம் 505; மாணிக்கம் 110; முத்துக்கள் 94; பொன் நிறை $86\frac{1}{2}$ கழஞ்சு, $4\frac{1}{20}$ மஞ்சாடியும், வயிரங்களில், தூயன 80, மட்டதாரை 290, மட்டதாரைச் சப்படி 53, பந்த சாரம் 4, சப்படி 5, சவக்கம் 15, உருளை 58. இவைகளின் நிறை 2 கழஞ்சு, $3\frac{19}{20}$ மஞ்சாடியும், மாணிக்கங்களில் ஹளஹள குணவியன் 20, ஹளஹளம் 30, நீலகந்தி 6, கோமளம் 33, தளம் 20, சட்டம் 1; இவைகளின் நிறை $5\frac{5}{8}$ கழஞ்சு. முத்துக்களில் ஒப்பு முத்து, குறுமுத்து, நிம்பொளம்,

எண்பதும் மட்டதாரை இருநூற்றுத் தொண்ணூறும் மட்டதாரைச் சப்படி ஐம்பத்துமூன்றும் பந்தஸாரம் நாலும் சப்படி ஐஞ்சும் சவக்கம் பதினைஞ்சும் உருளை ஐய்ம்பத்தெட்டும் ஆக வயிரம் பொறிவும் முறிவும் ரத்தபிந்துவும் காகபிந்துவும் வெந்தனவும் உடையன உட்பட ஐஞ்நூற்றைஞ்சினால் நிறை இருகழஞ்செ மூன்று மஞ்சாடியும் ஒன்பது மாவரையும் மாணிக்கம் ஹளஹளம் குணவியன் இருபதும் ஹளஹளம் முப்பதும் நீலகந்தி ஆறும் கொமளம் முப்பத்து மூன்றும் தளம் இருபதும் சட்டம் ஒன்றும் ஆக மாணிக்கம் குழிவும் ப்ரஹரமும் வெஜ்ஜமும் லஸுநியும் த்ராஸமும் கற்பற்றும் உடையனவும் உட்படப் பரியனவும் நெரியனவும் ஆக நூற்றொருபதினால் நிறை ஐங்கழஞ்சரையெய் அரைக்காலும் கொத்த முத்து ஒப்பு முத்துங் குறு முத்தும் நிம்பொளமும் பயிட்டமும் அம்புமுதும் குளிர்ந்த நீரும் சிவந்த நீரும் இப்பிபற்று அராவினவும் வரையும் கறையும் குருவும் சுப்பிரமும் உட்பட முத்துத் தொண்நூற்று நாலினால் நிறை ஒன்பதின் கழஞ்செய் குன்றியும் ஆக நிறை நூற்று முக்கழஞ்சரையெ மஞ்சாடிக்கு விலை காசு ஆயிரம் [அ] ஸ்ரீ வாஹு வலயம் ஒன்று பொன் எண்பத்தொன்பதின்

5. கழஞ்செய் மஞ்சாடியும் மாகாணியும் கட்டின வயிரந் தூயன இருபதும் மட்டதாரை நானூற்று ஆறும் மட்டதாரைச் சப்படி ஐஞ்சும் மட்டதாரைச் சவக்கம் பத்தும் ஆக வயிரம் பொறிவும் முறிவும் ரத்தபிந்துவும் காகபிந்துவும் வெந்தனவும் உடையன உட்பட நானூற்று நாற்பத்தொன்றினால் நிறை முக்கழஞ்செய் இரண்டு மஞ்சாடியும் முக்காணியும் மாணிக்கம் ஹளஹளம் குணவியன் எட்டும் ஹளஹளம்

பயிட்டம், அம்புமுது, குளிர்ந்த நீர், இப்பிபற்று அராவின முதலியவை இருந்தன. இவற்றின் நிறை 9 கழஞ்சு, 1 குன்றியும் ஆக திருமாலையிலுள்ள, பொன், வயிரம், மாணிக்கம், முத்து இவைகளின் மொத்த நிறை $103\frac{1}{2}$ கழஞ்சு மஞ்சாடியும் விலை மதிப்பு 1000 காசுமாகும்.

ஸ்ரீபாஹுவலயம் 2: இவை தோளில் அணியும் அணிகலன்கள்; 'பாஹுவலயம்' என்பதை 'வாகுவலயம்' என்றும் கூறுவர். ஸ்ரீ - திரு; பாஹு – வாகு, தோள்; இவை பொன்னா லானவை. இவைகளில் ஒரு பாஹுவலயம் 89 கழஞ்சு, $1\frac{1}{8}$ மஞ்சாடி நிறை பொன்னும், 3 கழஞ்சு $2\frac{3}{40}$ மஞ்சாடி நிறையுள்ள 441 வயிரங்களும், $6\frac{1}{2}$ கழஞ்சு $2\frac{3}{10}$ மஞ்சாடி நிறையுள்ள 54 மாணிக்கங்களும், $2\frac{3}{4}$ கழஞ்சு 3 மஞ்சாடி 1 குன்றி நிறையுள்ள 68 முத்துக்களும் உடையது. வயிரங்களில் தூயன 20, மட்டதாரை 406, மட்டதாரைச் சப்படி 5, மட்டதாரைச் சவக்கம் 10ம், அவற்றுள் பொறிவு, முறிவு முதலிய குற்றமுடையனவும் இருந்தன. மாணிக்கங்களில் ஹளஹளம் குணவியன் 8, ஹளஹளம் 17, கோமளம் 19, நீலகந்தி 2, தளம் 8ம் அவற்றுள் குழிவு, பிரகரம் முதலிய குற்ற,

பதினெழும் கொமளம் பத்தொன்பதும் நீலகந்தி இரண்டும் தளம் எட்டும் ஆக மாணிக்கம் குழிவும் ப்ரஹரமும் வெஜ்ஜமும் லஸுநியும் த்ராஸமும் கற்பற்றும் உடையன உட்படப் பரியனவும் நெரியனவும் ஆக ஐம்பத்துநாலினல் நிறை அறுகழஞ்சரையெ இரண்டு மஞ்சாடியும் மூன்றுமாவும் கொத்த முத்து வட்டமும் அனுவட்டமும் ஒப்பு முத்துங் குறுமுத்தும் பயிட்டமும் குளிர்ந்த நீரும் சிவந்த நீரும் இப்பி பற்றும் அராவினவும் வரையுங் கறையும் குருவும் சுப்பிரமும் உட்பட முத்து அறுபத்தெட்டினல் நிறை ஐங்கழஞ்செ முக்காலெ மூன்று மஞ்சாடியும் குன்றியும் ஆக நிறை நூற்று நாற்க் கழஞ்சரையே நாலு மஞ்சாடிக்கு விலை காசு, ஆயிரத் திருநூற்றைம்பது [௯] ஸ்ரீ வாஹுவலயம் ஒன்று பொன் எண்பத்தொன்பதின் கழஞ்செய் எட்டு மஞ்சாடியும் நான் மாவரையும்.

6. கட்டின வயிரந் தூயன இருபதும் மட்டதாரை நானூற்று ஒருபத்துமூன்றும் மட்டதாரைச் சப்படி ஐஞ்சும்

முடையனவும் இருந்தன. முத்துக்களில் வட்டம், அனுவட்டம் முதலியனவும் அவற்றுள் வரை, கறை முதலிய குற்றமுடையனவும் இருந்தன.

ஆக இதிலுள்ள பொன், வயிரம், மாணிக்கம், முத்து இவை $104\frac{1}{2}$ கழஞ்சு, 4 மஞ்சாடி நிறையும் 1250 காசு விலை மதிப்பு முடையது.

மாகாணி — மாவும் காணியும்; மா $=\frac{1}{20}$; காணி $=\frac{1}{80}$; இங்கு, $\frac{1}{10}$ மஞ்சாடி ஒரு மா எனவும், $\frac{1}{40}$ மஞ்சாடி ஒரு காணி எனவும் கொள்ளப்படும்.

6. மற்றொரு பாஹுவலயம், 89 கழஞ்சு $\frac{9}{20}$ மஞ்சாடி நிறை பொன்னும், 3 கழஞ்சு $2\frac{7}{20}$ மஞ்சாடி நிறையுள்ள 448 வயிரங்களும் $6\frac{1}{2}$ கழஞ்சு, $2\frac{2}{5}$ மஞ்சாடி நிறையுள்ள 53 மாணிக்கங்களும், $5\frac{1}{2}$ கழஞ்சு 1 குன்றி நிறையுள்ள 62 முத்துக்களும் உடையது. வயிரங்களில் தூயன 20, மட்டதாரை 413, மட்டதாரைச் சப்படி 5, மட்டதாரைச் சவக்கம் 10ம், அவற்றுள் பொறிவு, முறிவு முதலிய குற்றமுடையனவும் இருந்தன. மாணிக்கங்களில், ஹளஹளம் குணவியன் 8, ஹளஹளம் 15, கோமளம் 20, நீலகந்தி 2, தளம் 8ம், அவற்றுள் குழிவு, பிரகாரம் முதலிய குற்றமுடையனவும் இருந்தன. முத்துக்களில் வட்டம், அனுவட்டம் முதலியனவும் அவற்றுள் வரை, கறை முதலிய குற்றமுடையனவும் இருந்தன.

ஆக இதிலுள்ள பொன், வயிரம், மாணிக்கம், முத்து இவை $104\frac{1}{2}$ கழஞ்சு $3\frac{7}{10}$ மஞ்சாடி நிறையும் 1250 காசு விலை மதிப்புமுடையது.

மட்டதாரைச் சவக்கம் பத்தும் ஆக வயிரம் பொறிவும் முறிவும் ரத்தபிந்துவும் காகபிந்துவும் வெந்தனவும் உட்பட நானூற்று நாற்ப்பத்தெட்டினுல் நிறை முக்கழஞ்செ யிரண்டு மஞ்சாடியும் மும்மாவரையும் மாணிக்கம் ஹளஹளம் குண வியன் எட்டும் ஹளஹளம் பதினைஞ்சும் கொமளம் இருபதும் நீலகந்தி இரண்டும் தளம் எட்டும் ஆக மாணிக் கம் குழிவும் ப்ரஹரமும் வெஜ்ஜமும் லஸுநியும் த்ராஸமு கற்பற்றும் உடையனவும் உட்படப் பரியனவும் நெரியனவும் ஆக ஐய்ம்பத்து மூன்றினுல் நிறை அறு கழஞ்சரையெ இரண்டு மஞ்சாடியும் நான்கு மாவும் கொத்த முத்து வட்டமும் அனு வட்டமும் ஒப்பு முத்துங் குறு முத்தும் பயிட்டமும் குளிர்ந்த நீரும் சிவந்த நீரும் இப்பிபற்று அராவி னவும் வரையும் கறையும் குருவும் சுப்பிரமும் உட்பட அறுபத்திரண்டினுல் நிறை ஐங்கழஞ்சரையெ குன்றியும் ஆக நிறை நூற்றுநாற்க் கழஞ்சரையெ மூன்று மஞ்சாடி யும் எழு மாவுக்கு விலை காசு ஆயிரத்து இருநூற்றைம் பது [ம] ஸ்ரீ சந்தம் ஒன்று பொன் அறுபத்தொன்பதின் கழஞ்செ முக்காலெ இரண்டு மஞ்சாடியும் ஐஞ்சு மாக் காணி யும் கட்டின வயிரம் மட்டதாரை முன்னூற்றைம்பதும் மட்டதாரைச் சவக்கம்

7. நாற்ப்பதும் ஆக வயிரம் பொறிவும் முறிவும் ரத்த பிந்துவும் காகபிந்துவும் வெந்தனவும் உடையன உட்பட முன்னூற்றுத் தொண்ணூறினுல் நிறை கழஞ்சரையெ நாலு மஞ்சாடியும் ஆறுமாவும் மாணிக்கம் ஹளஹளம் குணவியன் ஐஞ்சும் ஹளஹளம் இருபதும் கொமளம் முப்பதும் நீல கந்தி நாலும் சட்டம் இரண்டும் தளம் பத்தொன்பதும் ஆக

---

7. ஸ்ரீ சந்தம் 1: இது மார்பில் அணியும் மற்றோர் அணிகலன்; பொன்னுலானது. இதில் $69\frac{3}{4}$ கழஞ்சு $2\frac{11}{20}$ மஞ்சாடி பொன்னும், $1\frac{1}{2}$ கழஞ்சு $4\frac{3}{5}$ மஞ்சாடி நிறையுள்ள 396 வயிரங்களும், 6 கழஞ்சு $3\frac{4}{5}$ மஞ் சாடி நிறையுள்ள 80 மாணிக்கங்களும், $96\frac{1}{4}$ கழஞ்சு நிறையுள்ள 1462 முத்துக்களும் கொண்டது. வயிரங்களில் மட்டதாரை 350, மட்ட தாரைச் சவக்கம் 40ம் இருந்தன. மாணிக்கங்களில் ஹளஹளம் குணவி யன் 5, ஹளஹளம் 20, கோமளம் 30, நீலகந்தி 4, சட்டம் 2, தளம் 19ம், அவற்றுள் குழிவு, பிரஹாரம் முதலிய குற்றமுடையனவும் இருந்தன முத்துக்களில் வட்டம், அனுவட்டம் முதலியனவும், அவற்றுள் வலர, கறை முதலிய குற்றமுடையனவும் இருந்தன.

மாணிக்கம் குழிவும் ப்ரஹரமும் வெஜ்ஜமும் லஸுநியும் த்ராசமும் கற்பற்றும் உடையனவும் பரியனவும் நெரியனவும் ஆக எண்பதினுல் நிறை அறு கழஞ்செ எழு மஞ்சாடியும் எட்டுமா முக்காணியும் கொத்தனவும் தைய்த்தனவும் ஆக முத்து வட்டமும் அனுவட்டமும் ஒப்பு முத்துங் குறுமுத்தும் பயிட்டமும் நிம்பொளமும் குளிர்ந்த நீரும் சிவந்த நீரும் இப்பிபற்று அராவினவும் வரையும் கறையும் குருவும் சுப்பிரமும் உட்பட முத்து ஆயிரத்து நானூற்து அறுபத்திரண்டினுல் நிறை தொண்ணூற்று அறு கழஞ்செய் காலும் ஆக நிறை நூற்று எழுபத்து நாற்க்கழஞ்செய் காலுக்கு விலை காசு ஆயிரத்தைஞ்னூறு [௰௧] திருக்கைப் பொட்டு ஒன்று பொன் பதினெண் கழஞ்செய் முக்காலெ மூன்று மஞ்சாடியும் எட்டு மாவும் மாணிக்கம் கொமளம் ஒன்று நிறை மஞ்சாடியுங் குன்றியும் கொத்த முத்து வட்டமும் அனு வட்டமும் ஒப்பு முத்துங் குறுமுத்தும் நிம்பொளமும் பயிட்டமும் குளிர்ந்த நீரும்

8. சிவந்த நீரும் வரையும் கறையும் குருவும் சுப்பிரமும் உட்பட முத்து நூற்றுமுப்பத்தெழினுல் நிறை எழு கழஞ்செய் முக்காலெ நாலு மஞ்சாடியுங் குன்றியும் ஆக நிறை

ஆக இதிலுள்ள பொன், வயிரம், மாணிக்கம், முத்து இவை $174\frac{1}{4}$ கழஞ்சு நிறையும், 1000 காசு விலை மதிப்பும் உள்ளது.

8. **திருக்கைப்பொட்டு 2:** இவை கைகளில் அணியும் அணிகலன்கள்; பொன்னலானவை. இவற்றில் ஒன்று $18\frac{3}{4}$ கழஞ்சு $3\frac{4}{5}$ மஞ்சாடி நிறை பொன்னும், மாணிக்க வகையில் 1 மஞ்சாடி 1 குன்றி நிறையுள்ள கோமளம் ஒன்றும், $7\frac{3}{4}$ கழஞ்சு 4 மஞ்சாடி 1 குன்றி நிறையுள்ள 137 முத்துக்களும் கொண்டது. முத்துக்களில் வட்டம், அனுவட்டம் முதலியனவும், அவற்றுள் வரை, கறை முதலிய குற்றமுடையனவும் இருந்தன.

ஆக இதிலுள்ள பொன், மாணிக்கம், முத்து இவை $26\frac{3}{4}$ கழஞ்சு $4\frac{4}{5}$ மஞ்சாடி நிறையும், 80 காசு விலை மதிப்பு முடையது.

மற்ரெரு திருக்கைப் பொட்டு 18 கழஞ்சு 6 மஞ்சாடி பொன்னும், மாணிக்க வகையில் $1\frac{3}{40}$ மஞ்சாடி நிறையுள்ள கோமளம் ஒன்றும், 8 கழஞ்சு 6 மஞ்சாடி நிறையுள்ள 143 முத்துக்களும் கொண்டது. முத்துக்களில் வட்டம், அனுவட்டம். முதலிய குற்றமுடையனவும் இருந்தன.

ஆக, இதிலுள்ள பொன், மாணிக்கம், முத்து இவை $26\frac{1}{2}$ கழஞ்சு $3\frac{3}{10}$ மஞ்சாடி நிறையும், 80 காசு விலை மதிப்புமுடையது. திருக்கைப் பொட்டுக்களில் வயிரம் இல்லாமை குறிப்பிடத் தக்கது.

இருபத்தறு கழஞ்செய் முக்காலெ நாலு மஞ்சாடியும் எட்டு மாவுக்கு விலை காசு எண்பது [யஉ] திருக்கைப் பொட்டு ஒன்று பொன் பதிநெண் கழஞ்செய் ஆறு மஞ்சாடியும் மாணிக்கம் கொமளம் ஒன்று நிறை மஞ்சாடியும் மூன்று மாவும் கொத்த முத்து வட்டமும் அனுவட்டமும் ஒப்புமுத்துங் குறுமுத்தும் நிம்பொளமும் பயிட்டமும் குளிர்ந்தநீரும் சிவந்தநீரும் வரையுங் கறையும் குருவும் சுப்பிரமும் உட்பட முத்து நூற்று நாற்பத்து மூன்றிநுல் நிறை எண் கழஞ்செய் ஆறு மஞ்சாடியும் ஆக நிறை இருபத்தறு கழஞ்சரையெ மூன்று மஞ்சாடியும் மூன்று மாவுக்கு விலை காசு எண்பது [யரு] சூடகம் ஒன்று பொன் எண்பதின் கழஞ்செய் நாலு மஞ்சாடியும் அறுமாவரையும் கட்டின வயிரந் தூயன முப்பதும் மட்ட தாரை நானூற்று மூன்றும், மட்டத்தாரைச் சவக்கம் எழுபதும் மட்ட தாரைச் சப்படி முப்பத்தைஞ்சும் உருளை எண்பத்திரண்டும் ஆக வயிரம் பொறிவும் முறிவும் ரத்தபிந்துவும் காக பிந்துவும் வெந்தனவும் உட்பட அறுநூற்று இருபதிநுல் நிறைநாற்க் கழஞ்செய் எழுமாவும் மாணிக்கம் ஹளஹளம் குணவியன் பத்தும் ஹளஹளம் இருபத்துநாலும் கொமளம் பதினெழும் நீலகந்தி.

9. நாலும் ஆக மாணிக்கம் குழிவும் ப்ரஹரமும் வெஜ்ஜமும் லஸூநியும் த்ராஸமும் கற்பற்றும் உடையனவும் உட்படப் பரியனவும் நெரியனவும் ஆக ஐம்பத்தைஞ்சிநுல் நிறை கழஞ்சரையெ மஞ்சாடியும் ஒரு மாவரையும்

---

9. **சூடகம் 2:** இவை கைகளில் அணியும் அணிகலன்கள்; பொன்னாலானவை. இவற்றுள் ஒன்று 80 கழஞ்சு $4\frac{7}{20}$ மஞ்சாடி நிறை பொன்னும், 4 கழஞ்சு $\frac{7}{10}$ மஞ்சாடி நிறையுள்ள 620 வயிரங்களும், $1\frac{1}{2}$ கழஞ்சு $1\frac{3}{20}$ மஞ்சாடி நிறையுள்ள 55 மாணிக்கங்களும் உள்ளன. வயிரங்களில் தூயன 30, மட்டதாரை 403, மட்டதாரைச் சவக்கம் 70, மட்டதாரைச் சப்படி 35, உருளை 82ம், அவற்றுள் பொறிவு, முறிவு முதலியனவும் இருந்தன. மாணிக்கங்களில் ஹளஹளம் குணவியன் 10, ஹளஹளம் 24, கோமளம் 17, நீலகந்தி 4ம் அவற்றுள் குழிவு, பிரகரம் முதலிய குற்றமுடையனவும் இருந்தன

ஆக இதிலுள்ள பொன், வயிரம், மாணிக்கம் இவை $85\frac{3}{4}$ கழஞ்சு 1 மஞ்சாடி, 1 குன்றி நிறையும், 800 காசு விலை மதிப்பு முடையது.

மற்றொரு சூடகம் $84\frac{3}{4}$ கழஞ்சு, 3 மஞ்சாடி பொன்னும், 4 கழஞ்சு 4 மஞ்சாடி 1 குன்றி நிறையுள்ள 675 வயிரங்களும், $1\frac{1}{2}$ கழஞ்சு 3 மஞ்சாடி 1 குன்றி நிறையுள்ள 60 மாணிக்கங்களும் கொண்டது. வயிரங்களில் தூயன 30, மட்டதாரை 456, மட்டதாரைச் சவக்கம் 70, மட்டதாரைச் சப்படி 36, உருளை 83ம், அவற்றுள் பொழிவு, முறிவு

ஆக நிறை எண்பத்தைங் கழஞ்செய் முக்காலெ மஞ்சாடியும் குன்றிக்கு விலை காசு எண்ணூறு [யசு] சூடகம் ஒன்று பொன் எண்பத்துநாற்க் கழஞ்செய் முக்காலே மூன்று மஞ் சாடியும் கட்டின வயிரந் தூயன முப்பதும் மட்டதாரை நானூற்றைம்பத்தாறும் மட்டதாரைச் சவக்கம் எழுபதும் மட்டதாரைச் சப்படி முப்பத்தாறும் உருளை எண்பத்து மூன் றும் ஆக வயிரம் பொறிவும் முறிவும் ரத்தபிந்துவும் காக பிந்துவும் வெந்தனவும் உட்பட அறுநூற்று எழுபத்தைஞ் சினல் நிறை நாற்கழஞ்செய் நாலு மஞ்சாடியுங் குன்றியும் மாணிக்கம் ஹளஹளம் குணவியன் பத்தும் ஹளஹளம் முப்பத்தொன்றும் கொமளம் பதிநாறும் நீலகந்தி மூன் றும் ஆக மாணிக்கம் குழிவும் ப்ரஹரமும் வெஜ்ஜமும் லஸு னியும் த்ராஸமும் கற்பற்றும் உடையனவும் உட்படப் பரி யனவும் நெரியனவும் ஆக அறுபதினல் நிறை கழஞ்சரை யெ மூன்று மஞ்சாடியுங் குன்றியும் ஆக நிறை தொண் ணூற்றுக் கழஞ்செய் முக்காலெ மஞ்சாடிக்கு விலை காசு எண்ணூறு [ய௫]

முதலிய குற்றமுடையனவும் இருந்தன. மாணிக்கங்களில் ஹளஹளம் குணவியன் 10, ஹளஹளம் 31, கோமளம் 16, நீலகந்தி 3ம் அவற்றுள் குழிவு, பிரகரம் முதலிய குற்றமுடையனவும் இருந்தன.

ஆக இதிலுள்ள பொன், வயிரம், மாணிக்கம் இவை 90¾ கழஞ்சு 1 மஞ்சாடி நிறையும் 800 காசு விலை மதிப்புமுடையது. சூடகங்களில் முத்துக்கள் இல்லாமை குறிப்பிடத் தக்கது.

இச்சாசனத்திலுள்ள அணிகலன்கள்:— மகுடம், வாளி, உழுத்து, மாலை, வாகுவலயம், கைப்பொட்டு, சூடகம்; இரத்தினங்கள் — வயிரம், மாணிக்கம், முத்து.

வயிரங்கள் — தூயன, மட்டதாரை, மட்டதாரைச் சவக்கம், மட்ட தாரைச் சப்படி, பளிங்கு, பந்தஸாரம், சப்படி, சவக்கம், உருளை. குற்றங் கள் — பொறிவு, முறிவு, இரத்தபிந்து, காகபிந்து, வெந்தன.

மாணிக்கங்கள் — ஹளஹளம் குணவியன், ஹளஹளம், கோமளம், நீலகந்தி, தளம், சட்டம். குற்றங்கள் — குழிவு, பிரஹரம், வெஜ்ஜம், லஸுனி, திராசம், கற்பற்று, பரியன, சிறியன.

முத்துக்கள் — வட்டம், அனுவட்டம், ஒப்புமுத்து, குறுமுத்து, நிம்பொளம், பயிட்டம், பழமுத்து, இப்பிபற்று, அராவின, சிவந்த நீர், குளிர்ந்த நீர், அம்புமுதுவரை, அம்புமுதுபாடன், குரு, அம்புமுது. குற்றங்கள் — வரை, கறை, குரு, சுப்பிரம், திரங்கல்.

இரத்தினங்களை அணிகலத்தோடு பொருத்துவதற்கு உதவுவன — சரடு, சட்டம், செப்பாணி, அரக்கு, பிஞ்சு முதலியன.

பயிற்சி விஞக்கள்

1. முதலாம் இராசேந்திரன் யார்? அவன் சாசனங்களாகக் குறிக்கப் படுவன யாவை?

2. குந்தவையாருக்கும் முதலாம் இராசேந்திர சோழதேவனுக்கும் உள்ள தொடர்பு யாது? குந்தவையாரைப் பற்றிக் குறிப்பு வரைக.

3. குந்தவையார் சாசனம் எங்குக் காணப்படுகிறது? எக்காலத்தில் ஏற்பட்டது? அதில் கூறப்படும் செய்திகள் யாவை?

4. குந்தவையார் சாசனத்தால் அறியப்படும் பண்டைச் செய்திகள் யாவை?

5. குந்தவையார் உமா பரமேசுவரியார் திருமேனிக்கு வழங்கிய அணிகலன்களைக் குறிப்பிட்டு, அவற்றுள் ஒன்றின் நிறை, விலை ஆகியவற்றைச் சாசனத்தில் கண்டபடி குறிப்பிடுக.

6. விளக்குக:— கோப்பரகேசரி வன்மர், ஆடவல்லான் என்னும் குடிஞைக்கல், தக்ஷிணமேடு விடங்கன் என்னும் காசுகல்.

7. குறிப்பு வரைக:— வல்லவரையர் வந்திய தேவர், உமா பரமேசுவரியார்.

8. பொருள் தருக:— திருமேனி, சரடு, சட்டம், செப்பாணி, அரக்கு, பிஞ்சு, மட்டதாரை, சவக்கம், சப்படி, பொறிவு, முறிவு, இரத்தபிந்து, காகபிந்து, ஹளஹளம், வாளி, விலை, காசு, உழுத்து, பாடன், குரு, குணவிலன், திரங்கல், பாகுவலயம், சூடகம், மா, காணி, கற்பற்று.

9. ஆழ்வார் பராந்தகன் குந்தவையார் சாசனத்தில் கூறப்படும் இரத்தினங்கள், அவற்றின் வகைகள், குற்றங்கள் ஆகியவற்றைக் குறிப்பிடு விளக்குக.

10. அணிகலன்களில் வயிரம், மாணிக்கம், முத்து இவைகளை அமைத்தற்குப் பயன்படுவன யாவை?

11. கட்டின வயிரம், கட்டினவும் கொத்தனவும், தைத்தமுத்து, பரியனவும் நெறியனவும் — இத்தொடர்களால் அறியப்படுவன யாவை?

12. ஆழ்வார் பராந்தகன் குந்தவையார் சாசனத்தில் வரும் நிறுத்தலளவைகள் யாவை? அவற்றின் அளவு வகை யாது? மா, காணி என்பன எவ்வாறு கணக்கிடப்படுகின்றன?

10. பொய்கைநாடு கிழவன் ஆதித்த சூரியன் சாசனம் II. *

முன்னுரை

பொய்கைநாடு கிழவன் ஆதித்த சூரியன்[1] சாசனம் என்பது, பொய்கை நாட்டுக்குத் தலைவனும், ஆதித்த சூரியன் என்னும் இயற் பெயரையுடையவனுமான பொய்கைநாடு ஆதித்த சூரியன் என்பவனால் ஏற்பட்ட சாசனம் என்று பொருள்படும்.

---

* S. I. I., Vol. II, Part II, No. 41, p. 169.

1. இவனைப்பற்றி உயர்திரு T. V. சதாசிவ பண்டாரத்தார் அவர்கள் தமது "பிற்காலச் சோழர் சரித்திரம்" என்னும் நூலில் முதல் இராசராச சோழன் வரலாற்றில் பின் வருமாறு எழுதியுள்ளார்கள்:- "இவன் சோழமண்டலத்தில் இராசேந்திர சிங்க வளநாட்டின் உள்நாடுகளுள் ஒன்றாகிய பொய்கை நாட்டின் தலைவன்; இராசராச சோழன் தஞ்சை மா நகரில் எடுப்பித்த பெரிய கோயிலில் இவ்வேந்தன் ஆணையின்படி ஸ்ரீகாரியம் செய்து வந்தவன்; சிவபெருமானிடத்தில் சிறந்த பக்தியுடையவன்; இவன் இராசராசேச்சரத்தில் திருஞான சம்பந்த அடிகள், திருநாவுக்கரையதேவர், நம்பியாரூரர், நங்கை பரவையார், மெய்ப்பொருள் நாயனார், சிறுத்தொண்ட நாயனார் என்போர்க்குச் செப்புப்படிமங்கள் எழுந்தருளுவித்து அவற்றிற்கு அணிகலன்களும் அளித்துள்ளனன். இச்செயல், இவன் சமயக்குரவர்களிடத்தும் சிவனடியார்களிடத்தும் வைத்திருந்த பேரன்பினை நன்கு புலப்படுத்துவதாகும். அன்றியும் சிவனடியார்களுள் மெய்ப்பொருள் நாயனார்க்கும், சிறுத்தொண்ட நாயனார்க்கும் இவன் பெரிய கோயிலில் படிமங்கள் எழுந்தருளுவித்தமைக்குக் காரணம் அவ்விருவரும் செய்த செயற்கரும் செயல்கள் இவன் உள்ளத்தைப் பிணித்தமையேயாம். மெய்ப் பொருள் நாயனாரது படிமத்தை வைத்த செய்தியைக் கூறும் கல்வெட்டில் அவ்வடியார் பெயரைக் கூறாமல் "தத்தா நமர்காண் என்ற மலாடுடையார்" என்று இவன் குறிப்பிட்டிருப்பது அவர்பால் இவனது உள்ளத்தில் கிளர்ந்தெழுந்த அன்பின் முதிர்ச்சியை இனிது உணர்த்துவதாகும். இவன் தன் அரசனிடத்தும் பேரன்புடையவன் என்பது தஞ்சைப் பெரிய கோயிலில் இராசராச சோழன், உலோகமாதேவி ஆகிய இருவர் படிமங்களும் எழுந்தருளுவித்து அவற்றிற்கு அணிகலன்களும் கொடுத்திருப்பதினால் நன்கு விளங்கும். இவன் கி.பி. 675 ஆம் ஆண்டில் திருச்சோற்றுத்துறைக் கோயிலில் நாள்தோறும் தேவாரப் பதிகம் பாடுவோர்க்கு நிவந்தமாகப் பொன் அளித்துள்ளனன் ஆகவே, இவன் தன் வாழ்நாளில் சிவனடியார்களிடத்தும், அரசனிடத்தும் ஒப்பற்ற அன்பு பூண்டொழுகியவன் என்பது ஒரு தலை. இராசராசன் இவனது சிறந்த பண்புகளை உணர்ந்துதான் இராசராசேச்சுரத்தில் ஸ்ரீ காரியம் செய்யும் வேலையில் இவனை அமர்த்தினன் போலும்"

இவன் சாசனம் ஒன்று, முன்னர் முதலாம் இராசராசன்[2] காலத்துச் சாசனங்களில் ஒன்ருக அமைந்துள்ளது. இவன் முதலாம் இராசராசனுடைய அரசியல் தலைவர்களில் ஒருவனுய்த் தென்னவன் மூவேந்த வேளான் என்னும் சிறப்புப் பெயர் பெற்றவன். இராசராசன் உத்தரவின்படி, தஞ்சை இராசராசேச்சுரம் கோயில் காரியங்களைக் கவனிக்கும் பணியையும் இவன் ஏற்றுச்செய்து வந்தான். முதலாம் இராசேந்திரசோழ தேவன்[3] காலத்தில் இவனுல் ஏற்பட்டனவாக மூன்று சாசனங்கள் பாடமாக வந்துள்ளன. அவற்றுள் முதலாவதான இச்சாசனம், இராசேந்திரசோழன் ஆட்சியின் மூன்ரும் ஆண்டிற்கு முன் ஏற்பட்டது. தஞ்சைப் பெரிய கோயில் மதிலின் மேற்கு மூலையிலுள்ள ஒரு மாடத்தில் காணப்படுகிறது; தமிழ் மொழியில் கிரந்த எழுத்துக்கள் கலந்து எழுதப்பட்டது. பதின்மூன்று வரிகளையுடையது.

இச் சாசனத்தில் ஆதித்த சூரியன் என்பான் தஞ்சை இராசராசேச்சுரர் கோயிலில் தான் எழுந்தருளுவித்த நம்பியாரூரர், திருஞானசம்பந்தடிகள், திருநாவுக்கரையர் ஆகியோர் பிரதிமங்களுக்கு (உருவச் சிலைகளுக்கு) 41½ பல நிறையுள்ள நிலை விளக்கு ஒன்றும், இருப்பு நாராசம் ஒன்றும் கொடுத்ததோடு பெரிய பெருமாள் பிரதிமத்திற்கு 120 பல நிறையுள்ள நிலை விளக்கு ஒன்றும், இருப்பு நாராசமொன்றும் தானமாகக் கொடுத்த செய்தி கூறப்படுகிறது. இவன் இவ்வுருவங்களைக் கோயிலில் எழுந்தருளுவித்ததும், அவற்றின் உயரம் முதலியன கோயில் முழத்தால் அளந்தும், அவைகளுக்கு இவன் கொடுத்த அணிகலன்களிலுள்ள பொன் ஆடவல்லான் என்னும் கோயில் நிறை கல்லாலும், இரத்தினங்கள் தட்சணமேருவிடங்கன் என்னும் கோயில் நிறைகல்லாலும் நிறுக்கப்பட்டும் கல்லில் வெட்டப்பட்ட செய்தி, முதலாம் இராசராசன் காலத்திலேற்பட்ட இவனுடைய முந்திய சாசனத்தால் அறியப்படுகிறது.

முதலாம் இராசேந்திரசோழன் கி. பி. 1012 முதல் 1044 வரை முப்பத்துமூன்று ஆண்டுகள் சோழ நாட்டை ஆண்டான். இச்சாசனம் அவன் ஆட்சியின் மூன்ருவது ஆண்டிற்கு முன்னர்

---

2. இவன் வரலாற்றை இந்நூலிலுள்ள ஐந்தாம் சாசனத்தின் முன்னுரைக் குறிப்பில் காண்க. (பக்கம் 35-36)

3. இவன் வரலாற்றை இந்நூலிலுள்ள ஒன்பதாம் சாசனத்தின் முன்னுரைக் குறிப்பில் காண்க. (பக்கம் 80-83)

ஏற்பட்ட தெனவே, இதன் காலம் கி. பி. 1015 ஆம் ஆண்டிற்கு முற்பட்ட தென்னலாம்.

சாசனம்

1. ஸ்வஸ்தி ஸ்ரீ உடையார் ஸ்ரீ ராஜராஜீஸ்வரம்
2. உடையார்க்கு ஸ்ரீ கார்யஞ் செய்கின்ற பொ—
3. ய்கை நாடு கிழவன் ஆதித்தன் ஸூர்யனு—
4. ன தென்னவன் மூவெந்த வெளான்
5. தான் எழுந்தருளுவித்த நம்பியாரூர—
6. நார்க்கும் திருநான சம்பந்தடிகளுக்கும் திரு—
7. நாவுக்கரையதெவர்க்கும் உடையார் ஸ்ரீ ரா—
8. ஜெந்திர சொழ தெவர்க்கு யாண்டு மூன்ருவது வரை
9. குடுத்த தரா நிலைவிளக்கு ஒன்று இருப்பு நாராசம் உட்பட நி—

குறிப்புரை.

1. **ஸ்வஸ்தி ஸ்ரீ, உடையார்:** *இவைகளுக்குரிய விளக்கத்தை முந்திய சாசனங்களின் குறிப்புரைகளில் காண்க.* **ஸ்ரீராஜ ராஜீஸ்வரம் உடையார்** - *தஞ்சைப் பெரிய கோயில் இறைவர்; அவர்* '**தட்சணமேரு விடங்கர்**' *என்று அழைக்கப்படுவர்.*

2. **ஸ்ரீ காரியம்** - *கோயில் காரியங்கள்; கோயில் காரியங்களை மேற்பார்வை செய்பவர் 'ஸ்ரீ காரியம் செய்பவர் அல்லது ஆராய்கிறவர்' என்று அழைக்கப்படுவர்.*

3–4. **பொய்கை நாடு கிழவன்** - *பொய்கை நாட்டுக்குத் தலைவன்; பொய்கை நாடு, சோழ மண்டலத்தில் இராசேந்திர சிங்க வளநாட்டிலுள்ள உள்நாடுகளில் ஒன்று. இவன் இயற்பெயர், 'ஆதித்த சூரியன்'; சிறப்புப்பெயர் 'தென்னவன் மூவேந்த வேளான்' என்பது.*

5–6. **எழுந்தளுவித்த** - *செய்து வைத்த:* **நம்பியாரூரநார், திருஞான சம்பந்தடிகள், திருநாவுக்கரைய தெவர்:** *இவர்கள் மூவரும் சைவ சமயாச்சாரியர் நால்வருள் தேவாரம் பாடிய மூவராவர்.*

7. **உடையார் ஸ்ரீ ராசேந்திர சோழ தேவர்:** *'உடையார்' என்பது அரசர்க்கு மரியாதைபற்றி வழங்கும் சொல் என்பது இத்தொடராலும், கோயில் இறைவனுக்கு வழங்கும் சொல் என்பது 'உடையார் ஸ்ரீ ராஜராஜேஸ்வரம் உடையார்' என வழங்கும் தொடராலும் புலப்படும்.*

8. **யாண்டு மூன்ருவது வரை** – *ஆட்சி ஆண்டு மூன்ருவதற்கு முன்னர். யாண்டு - ஆட்சி ஆண்டு.*

9. **தராநிலை விளக்கு** – *தரா என்னும் உலோகத்தால் செய்த குத்து விளக்கு; தரா – செம்பும் காரீயமும் சேர்ந்த ஓர் உலோகம்;*

10. றை நாற்பத்தொரு பலவரை [க] இவனெதான் எழுந்தருளுவி—
11. த்த பெரியபெருமாளுக்குக் குடுத்த தரா நிலெவிளக்கு ஒன்று
12. இருப்பு நாராசம் உட்பட நிறை நூற்றிருபதின் பலம் [உ] வெண்க—
13. ல மடல் ஒன்று நிறை நாற்பலம். [ரூ] விபூதி மடல்.

நிலெ விளக்கு – குத்து விளக்கு; இருப்பு நாராசம் இரும்பினல் செய்யப்பட்ட சலாகை; அது விளக்கைத் தூண்டுவதற்கும் அவிப்பதற்கும் பயன்படுவது போலும்.

10 நாற்பத்தொரு பலவரை:— 41½ பலம்; பலவரை—அரைப்பலம்; ஆதித்த சூரியன் நம்பியாரூரர் முதலிய மூவர் திருமேனிகளுக்கும் கொடுத்த குத்து விளக்கும், அதைத் தூண்டுவதற்குரிய நாராசமும் சேர்ந்து 41½ பலம் நிறை இருந்தது. பலம் – நிறைவகை.

11. பெரிய பெருமாள் – முதலாம் இராசராசன்; இதனே, ஐந்தாம் சாசனக் குறிப்பாலும் அறியலாம்.

12. ஆதித்த சூரியன் தான் செய்து வைத்த முதலாம் இராசராசன் படிமத்திற்கு 120 பல நிறையில் ஒரு குத்தவிளக்கும் இருப்புச் சலாகையும் கொடுத்தான். அந்தக் குத்துவிளக்கு தரா என்னும் உலோகத்தால் செய்தது. அத்துடன் அவன் அதற்கு ஒரு வெண்கல மடலும் தானமாகக் கொடுத்தான்.

13. வெண்கல மடல் :– வெண்கலம் என்னும் உலோகத்தால் செய்யப்பட்ட மடல் என்னும் கலம்; மடல் – திருநீறும் சந்தனமும் வைக்கும் கலம். அது 40 பலம் நிறையுள்ளதா யிருந்தது.

பயிற்சி விஞக்கள்

1. ஆதித்த சூரியன் யார்? அவனைப்பற்றிக் குறிப்பு வரைக.

2. தஞ்சைப் பெரியகோயில் மேலெச்சுற்று மதிலுள்ள மாடத்தில் காணப்பட்ட ஆதித்த சூரியன் சாசனத்தில் கூறப்படும் செய்தி யாது?

3. முதலாம் இராசேந்திர சோழ தேவன் காலத்தில் தேவாரம் பாடிய மூவர் பெயர்கள் வழங்கிய முறையைச் சான்று காட்டி விளக்குக.

4. குறிப்பு வரைக:– இராஜராஜேஸ்வரம், பொய்கை நாடு கிழவன், தராநிலெ விளக்கு, பெரிய பெருமாள்.

5. பொருள் தருக:– ஸ்வஸ்திஸ்ரீ, உடையார், ஸ்ரீகார்யம், மூன்ருவது வரை, நிலெவிளக்கு, நாராசம், மடல், நிறை.

11. பொய்கைநாடு கிழவன் ஆதித்த சூரியன் சாசனம் III *

முன்னுரை

பொய்கைநாடு கிழவன் ஆதித்த சூரியனை தென்னவன் மூவேந்த வேளான்[1] முதலாம் இராசேந்திரசோழ தேவன்[2] ஆட்சி காலத்தில் ஏற்படுத்திய சாசனங்களில் இச் சாசனம் ஒன்று. இஃது அவனது ஆட்சியின் மூன்ருவது ஆண்டிற்கு முன்னர் ஏற்பட்டது. தஞ்சைப் பெரிய கோயில் நடுவிடத்துக் கருப்ப கிருகத்தின் மேலைப்புறச் சுற்றுச்சுவரின் அடிப்பாகத்தில் காணப்படுகிறது. தமிழ்மொழியில் கிரந்த எழுத்துக்கள் கலந்து எழுதப்பட்டது; எட்டு பத்திகளை யுடையது.

இச்சாசனத்தில் பொய்கை நாடு கிழவன் ஆதித்த சூரியன் என்பான் தஞ்சைப் பெரிய கோயிலில் சேத்திரபால தேவர், வைரவ மூர்த்திகள் ஆகியோர்க்குத் திருமேனிகளையும், சிறுத்தொண்ட நம்பி, திருவெண்காட்டு நங்கை, சீராள தேவர் ஆகியோர்க்குப் பிரதிமங்களையும், அவை நிற்றற்குரிய பீடங்களோடும் செய்து வைத்து, அவைகளின் உயரமும், அவைகளுக்குக் கொடுக்கப்பட்ட அணிகலன் முதலியனவும் இவை எனக் கல்லில் செதுக்கிய செய்தி இதில் கூறப்பட்டுள்ளது. படிமங்களின் உயரத்தைக் கோயில் முழத்தால் அளந்தும், அவைகளுக்குக் கொடுக்கப்பட்ட அணிகலன்களிலுள்ள பொன்னை, ஆடவல்லான் என்னும் கோயில் நிறைகல்லாலும், இரத்தினங்களைத் தட்சணமேரு விடங்கன் என்னும் கோயில் நிறை கல்லாலும் நிறுத்தும கல்லில் செதுக்கப்பட்ட செய்தியும் இதனுல் அறியப்படுகிறது.

முதலாம் இராசசேந்திர சோழ தேவன் கி. பி. 1012 முதல் 1044 வரை முப்பத்து மூன்று ஆண்டுகள் சோழநாட்டை ஆண்டான். இச்சாசனம் அவன் ஆட்சியின் மூன்ரும் ஆண்டிற்கு முற்பட்டதென இச்சாசனத்தின் ஆங்கில முன்னுரைக் குறிப்பால் தெரிகிறது. எனவே இதன் காலம் கி. பி. 1015ஆம் ஆண்டிற்கு முற்பட்ட தென்னலாம்.

---

* S. I. I., Vol. II Part II, No. 43. PP. 172—174.

1. இவனைப்பற்றிய குறிப்பினை ஐந்தாம், பத்தாம் சாசனங்களின் குறிப்புரைப் பகுதிகளில் காண்க.

2. இவன் வரலாற்றினை ஒன்பதாம் சாசனத்தின் அடிக்குறிப்பில் காண்க.

1. ... ... ன் மூவெந்த வெளான் யாண்டு மூன்ரு வது வரை எழுந்தருளுவித்த செப்புத் திருமெனிகளும் ப்ரதிமங்களும் உடையார் கொயிலில்

2. முழத்தால் அளந்தும் பொன் ஆடவல்லான் என்னுங் கல்லால் நிறை எடுத்தும் ரத்நங்கள் சரடு நீக்கி தக்ஷிணமேரு விடங்கன் என்னுங் கல்லால் நிறை எடுத்துங் கல்லில் வெட்டின [க] பாதாதிகெஸாந்தம் முக்காலெ அரைக்கால் முழ உசரத்து எட்டு ஸ்ரீ ஹஸ்த்தம் உடையராகக் கனமாக எழுந்தருளுவித்த க்ஷெத்ரபால தெவர் ஒருவர் [உ] இ—

3. வர் எழுந்தருளி நின்ற ஒன்பதிற்று விரல் உசரத்து ஒன்பதிற்று விரல் சமை சதுரத்து பத்மத்தொடுங்கூடச் செய்த பீடம் ஒன்று [ஙு] இவர்க்கெ இவன் குடுத்த திரள் மணிவடம் ஒன்று பொன் கால் [ச] சுருக்கின வீர பட்டம் ஒன்று பொன் எழு மஞ்சாடி [ரு] திருக்குதம்பைத் தகடு இரண்டு பொன் முன்று மஞ்சாடி [சு] பாதாதிகெஸாந்தம் பதினெ—

குறிப்புரை

1. மூவெந்த வெளான் - *பொய்கைநாடு கிழவன் ஆதித்த சூரிய ஞன தென்னவன் மூவேந்த வேளான்*; யாண்டு மூன்ருவது வரை — *முதலாம் இராசேந்திர சோழ தேவன் ஆட்சியின் முன்ருவது ஆண்டிற்கு முன்னர்*; எழுந்தருளுவித்த - *செய்து வைத்த*: செப்புத் திருமேனிகளும் ப்ரதிமங்களும் — *செம்பினுல் செய்யப் பட்ட கடவுள் திருவுருவங்களும், மக்கள் படிமங்களும்*; திருமேனி - *கடவுள் திருவுருவம்*; பிரதிமம்—*மக்கள் படிமம்*; உடையார் கோயில் — *தஞ்சை இராசராசேசுவரம் உடையார் கோயில்.*

2. கொயிலில் முழத்தால் - *கோயில் முழக்கோலால்*; முழம் - *2 சாண்*; பொன் - *அணிகலன்களிலுள்ள பொன்*; ஆடவல்லான் என்னும் கல்; *இது தஞ்சைப் பெரிய கோயிலில் உள்ளது; பொன் முதலிய வற்றை நிறுப்பது. பொன்னிலும் விலையுயர்ந்த இரத்தினங்கள் இக் கோயிலிலுள்ள* ' தட்சணமேரு விடங்கன் ' *என்னும் நிறைகல்லால் நிறுக் கப்பட்டது*. இதனுல் *அக்காலத்தில் கோயில்தோறும் வேறுபட்ட முழக் கோல்களும், நிறை கற்களும் இருந்தன என்று தெரிகிறது.* சரடு — *இரத்தினங்களைக் கோக்க உதவும் கயிறு*; நிறை எடுத்தும் - *நிறுத்தும்*; கல்லில் வெட்டின-*அவற்றவற்றின் அளவுகள் கல்லில் வெட்டப்பட்டவை.*

2–3. க்ஷெத்ரபாலதெவர் (திருமேனி) — *அந்த இடத்திற் குரிய கடவுள் திருவுருவம்*; க்ஷேத்ரம் - இடம், *தலம்*; பாலதேவர் - *காக்கும் கடவுள்*. *இக்கடவுள் திருவுருவம் அடி முதல் முடிவரை $\frac{7}{8}$ முழம் உயர முடையது; எட்டுத் திருக்கரங்களைக் கொண்டது. செம்பினுல் கட்டி*

4. ண் விரல் உசரத்து இரண்டு ஸ்ரீ ஹஸ்த்தம் உடைய ராய் ஆடுகிருராகக் கனமாக எழுந்தருளுவித்த ஸ்ரீபெரவ மூர்த்திகள் ஒருவர் [எ] இவர் எழுந்தருளி நின்ற ஒன்பதிற்று விரல் உசரத்து எண் விரல் அகலத்து பத்மத்தொடுங்கூடச் செய்த பீடம் ஒன்று [அ] இவர்க்கெ இவன் குடுத்த திரள்மணி வடம் ஒன்று பொன் நாலு மஞ்சாடி [கூ] வடம் ஒன்றிற் கொத்த முத்துக் கறடும் இரட்டையுஞ் சப்பத்தியும் ஆக முத்து முப்—

யாகச் செய்து வைக்கப்பட்டது. 9 விரல் உயரமும் 9விரல் நீள அகலமு முடைய தாமரை வடிவமான ஆசனத்தோடு கூடிய பீடத்தையு முடையது. ஆதித்த சூரியன் இத்திருவுருவத்திற்கு ¼ மஞ்சாடி பொன் நிறையுள்ள ஒரு திரள்மணிவடத்தையும், 7 மஞ்சாடி பொன் நிறையுள்ள ஒரு வீரபட்டத்தையும் தானமாகக் கொடுத்தார்.

ஸ்ரீ ஹஸ்த்தம்-திருக்கைகள்; கனமாக - கட்டியாக; விரல் - 8 தோரை; தோரை - 1 நெல் அளவு; சமை சதுரம் - நீள அகலம் சமமாகவுள்ளது; பத்மம் — தாமரை வடிவமாகச் செய்த ஆசனம்; பீடம் - ஆசனத்தைத் தாங்கும் இருப்பு; திரள்மணி வடம் - கழுத்தில் அணியும் ஒரு வகை மாலை; இதனை 'அக்கு மணி மாலை' என்பர். சுருக்கின வீர பட்டம் - தலையைச் சுற்றிக் கட்டிய வீரபட்டம்; வீரபட்டம்-வெற்றிக்கு அறிகுறியாக வீரர் நெற்றியிலணியும் ஒரு வகைப் பொற்றகடு; இதனை 'வீர பட்டிகை' என்றும் கூறுவர்; திருக்குதம்பைத்தகடு — தகடாகச்செய்த காதணி வகை; குதம்பை - காதணி.

4. பெரவ மூர்த்திகள் (திருமேனி) - பைரவ வடிவத்தில் செய்யப் பெற்ற சிவபெருமான் திருவுருவம். இவர் சிவ மூர்த்திகளுள் ஒருவரான வைரவக் கடவுள்; பைரவம் - பயங்கரம்; மூர்த்தி — திருவுருவம் இஃது அடி முதல் முடி வரை 18 விரல் உயரமுடையது. இரண்டு திருக்கைகளையும் உயர்த்தி ஆடுகின்ற நிலையில் அமைந்தது. செம்பினுல் கட்டியாகச் செய்து வைக்கப்பட்டது. 9 விரல் உயரமும், 8 விரல் அகலமும் உடையதாய்த் தாமரை வடிவமுள்ள ஆசனத்தோடு கூடிய பீடத்தை யுடையது. இத்திருவுருவத்திற்கு ஆதித்த சூரியன் 4 மஞ்சாடி பொன் நிறையுள்ள ஒரு திரள்மணி வடமும், கறடு, இரட்டை, சப்பத்தி என்னும் முத்து வகைகளில் 33 முத்துக்கள் கோத்ததும், ½ கழஞ்சு 4 மஞ்சாடி 1 குன்றி நிறையுள்ளதும், ¼ காசு விலை மதிப்புள்ளதுமான ஒரு வடமும், கறடு, இரட்டை, சப்பத்தி என்னும் முத்துவகைகளில் 37 முத்துக்கள் கோக்கப்பட்டதும், 8 மஞ்சாடி

5. பத்து மூன்றிநால் நிறை அரைக் கழஞ்செ நாலு மஞ்சாடியுங் குன்றிக்குக் காசு கால் [யி] வடம் ஒன்றிற் கொத்த முத்துக் கறடும் இரட்டையுஞ் சப்பத்தியும் ஆக முத்து முப்பத்தெழினுல் நிறை எட்டு மஞ்சாடிக்கு காசு கால் [யிக] பாதாதிகேஸாந்தம் பதினெழு விரல் உசரத்து இரண்டு கை உடையராகக் கனமாகச் செய்த சிறுத் தொண்ட நம்பி ஒருவர் [யிஉ] இவர்க்கெ இவன் குடுத்தன [யிரு] திரள்மணி வ—

நிறையுள்ளதும், ¼ காசு விலை மதிப்புள்ளதுமான மற்றொரு வடமும் யும் கொடுத்தான். வடம் – மாலை; கொத்த முத்து – கோக்கப்பட்ட முத்துக்கள்; கறடு, இரட்டை சப்பத்தி: இவை முத்து வகைகள். கறடு-செப்பமாக்கப் படாதது; இரட்டை - இரட்டையாக வுள்ளது; சப்பத்தி-தட்டையாக வுள்ளது; இதனைச் 'சப்படி' என்றும் சொல்லுவர்.

5. சிறுத்தொண்ட நம்பி (பிரதிமம்) – சிறுத்தொண்ட நாயனர் படிமம்; சிறுத்தொண்டருடைய இயற்பெயர் பரஞ்சோதியார். திருச்செங்காட்டங்குடி இவருடைய ஊர். இவர் முதலாம் நரசிம்ம பல்லவனுக்குப் படைத்தலைவனுய் இருந்தார். சாளுக்கியர் தலைநகரான வாதாபி மேல் படை எடுத்துச்சென்று, அதை அழித்துத், திரண்ட பொருட்களைக் கவர்ந்து கொண்டு வந்தார். பிற்காலத்தில் இவரிடத்தில் காணப்பட்ட சிவபத்தியின் காரணமாக, நரசிம்ம பல்லவன் இவருக்குத் திரளான பொருள் கொடுத்து, இவரை ஓய்வெடுத்துக் கொள்ளும்படிச் செய்தார். அன்றுமுதல் இவர் தம் ஊரில் குடியிருந்து அடியார்களுக்குத் திருவமுது செய்விக்கும் பணியில் ஈடுபட்டார். இவருடைய மனைவியாரின் பெயர் திருவெண்காட்டு நங்கை; மகன் பெயர் சீராளன். அடியாராகத் திருவமுது செய்ய வந்த சிவபெருமானுக்கு அவர் விரும்பியபடி இவர் தமது ஒரே மகனை சீராளனைக் கொன்று கறி சமைத்து உணவு கொடுக்க முன் வந்தார் என்று புராணங்கள் கூறும்

ஆதித்த சூரியன் சமைத்து வைத்த இவருடைய படிமம் அடி முதல் முடி வரை 17 விரல் உயரமுடையது; இரண்டு கைகளைக் கொண்டது. செம்பினுல் கட்டியாகச் செய்யப்பட்டது. இதற்கு ஆதித்த சூரியன் 3 மஞ்சாடி 1 குன்றி பொன் நிறையுள்ள திரள்மணி வடம் ஒன்றும், உத்திராக்கம் நீக்கி ⅞ கழஞ்சு 1 மஞ்சாடி பொன் நிறையுள்ள உத்திராக்கக் காறை ஒன்றும் தானமாகக் கொடுத்தான். ருத்ராக்ஷ காறை – கழுத்திலணியும் உத்திராக்கமாலை; காறை–கழுத்தாணி.

6. டம் ஒன்று பொன் மூன்று மஞ்சாடியுங் குன்றி [௰௪] ருத்ராக்ஷக் காறை ருத்ராக்ஷம் நீக்கி பொன் அரைக் கழஞ்செ மஞ்சாடி [௰௫] பாதாதிகெஸாந்தம் பதினை விரல் உசரத்துக் கனமாகச் செய்த திருவெண்காட்டு நங்கை ஒருவர் [௰௬] இவர்க்கெ இவன் குடுத்தந [௰௭] பட்டைக் காறையிற் கொத்த தாலி உட்பட பொன் ஒன்பது மஞ் சாடியுங் குன்றி [௰௮] பாதாதிகெஸாந்தம் பன்னிரு விரல் உசரத்து இரண்டு கை உடை—

7. யராகக் கனமாகச் செய்த சீராள தெவர் ஒருவர் [௰௯] இவர்க்கெ இவன் குடுத்தன [௨௰] சுருக்கின வீர பட்டம் ஒன்று பொன் நாலு மஞ்சாடி [௨௧] திருக்குதம் பைத் தகடு இரண்டு பொன் மஞ்சாடியுங் குன்றி [௨௨] பட்டைக்காறையுஞ் சூலமும் பொன் அரைக்கழஞ்செ நாலு மஞ்சாடியுங் குன்றி [௨௩] ப்ரதிமங்கள் மூவரும் நின்ற இருபத்துமூ விரல் நீளத்து எழு விரல் அகலத்து பத்மத் தொடுங் கூட எண் விரல்

8. உசரத்து பத்மத்தொடுங்கூடச் செய்த பீடம் ஒன்று [௨௪]

---

6. திருவெண்காட்டு நங்கை (பிரதிமம்) – சிறுத்தொண்டர் மனைவி யாரான திருவெண்காட்டு நங்கை என்பார் படிமம். இஃது அடிமுதல் முடிவரை 15 விரல் உயரமுடையது; செம்பினால் கட்டியாகச் செய்யப் பட்டது. ஆதித்த சூரியன் இதற்குத் தாலி கோத்ததும், 9 மஞ்சாடி 1 குன்றிப் பொன் நிறை யுள்ளதுமான ஒரு பட்டக் காறையைத் தான மாகக் கொடுத்தான். பட்டக்காறை என்பது, சிறப்புக்கு அறிகுறியாக நெற்றியிலணியும் ஒரு வகைப் பொற்றகடு; தாலி - மணஞ் செய்யப்பட்ட தற்கு அடையாளமாக மனைவி கழுத்தில் அணிந்து கொள்ளும் ஒரு சின்னம்.

7. சீராளதெவர் (பிரதிமம்) – சிறுத்தொண்டர் மகனுரான சீராள னுடைய படிமம் இஃது அடி முதல் முடி வரை 12 விரல் உயர முடையது. இரண்டு கைகளைக் கொண்டது; செம்பினால் கட்டியாகச் செய்யப்பட்டது. 4 மஞ்சாடி பொன் நிறையுள்ள வீரபட்டம் ஒன்றும் 1 மஞ்சாடி 1 குன்றி பொன் நிறையுள்ள இரண்டு திருக்குதம்பைத் தகடு களும் ½ கழஞ்சு 4 மஞ்சாடி 1 குன்றி பொன் நிறையுள்ள ஒரு பட்டைக் காறையும், சூலமும் ஆதித்த சூரியன் இதற்குக் கொடுத்தான். சூலம் என்பது, சூலக் குறியிட்ட ஒரு அணிகலன் போலும்.

8. சிறுத் தொண்ட நம்பி, திருவெண்காட்டு நங்கை, சீராளதெவர்: இம் மூவர் பிரதிமங்களும் ஒரு பீடத்தில் நிறுத்தப்பட்டிருந்தன. அந்தப் பீடம் 23 விரல் நீளமும், 7 விரல் அகலமும் உள்ளது; தாமரை வடிவ மாகச் செய்த ஆசனத்தைக் கொண்டது.

12. பொய்கை நாடு கிழவன் ஆதித்த சூரியன் சாசனம் IV. *

முன்னுரை

பொய்கைநாடு கிழவன் ஆதித்த சூரியனுன தென்னவன் மூவேந்த வேளான் முதலாம் இராசேந்திர சோழ தேவன் ஆட்சி காலத்தில் ஏற்படுத்திய சாசனங்களில் இச்சாசனம் ஒன்று. இஃது அவனது ஆட்சியின் மூன்ருவது ஆண்டில் ஏற்பட்டது. தஞ்சைப் பெரிய கோயில் நடுவிடத்துக் கருப்ப கிருகத்தின் மேற்குச் சுற்றுப்பிரகாரத்திலுள்ள இரு தூண்களில் காணப்படுகிறது. தமிழ் மொழியில் கிரந்த எழுத்துக்கள் கலந்து எழுதப்பட்டது; நாற்பத்தேழு வரிகளை யுடையது.

பயிற்சி வினக்கள்

1. முதலாம் இராசேந்திர சோழதேவர் ஆட்சியின் மூன்ரும் ஆண்டிற்கு முன்னர் ஏற்பட்ட ஆதித்த சூரியன் சாசனங்கள் எவை? அவை எங்கெங்குக் காணப்படுகின்றன?

2. ஆடவல்லான், தட்சணமேரு விடங்கன் – இவை யாவை? இச் சாசனத்தில் இவை எதெதற்குப் பயன் பட்டன?

3. க்ஷேத்ரபாலதேவர், பைரவ மூர்த்திகள் – இவர்கள் யாவர்? இவர்களுக்கு எடுத்த திருவுருவங்களோடு, வேறு யார் யாருக்குப் படிமங்கள் எடுக்கப்பட்டன? ஒவ்வொன்றிற்கும் கொடுக்கப்பட்ட அணிகலன்கள் யாவை?

4. திருமேனிகள், பிரதிமங்கள் - இவைகளை விளக்கி, இவைகள் சமைக்கப்பட்ட முறையையும், கோயிலில் எழுந்தருளுவித்த முறையையும் குறிப்பிடுக.

5. குறிப்பு வரைக:– க்ஷேத்ரபாலதேவர், பைரவ மூர்த்திகள், சிறுத்தொண்ட நம்பி, திரள் மணி வடம், பாதாதிகேஸாந்தம்.

6. பொருள் தருக:- முழம், சரடு, க்ஷேத்ரம், பைரவம், விரல்' சமைசதுரம், உசரம், பத்மம், பீடம, காசு, மஞ்சாடி, குதம்பை, கறடு' இரட்டை, சப்பத்தி, வடம், சூலம், வீரபட்டம். பட்டைக்காறை.

7. ஆதித்த சூரியனின் கடவுள் பத்தியும் அடியார் பத்தியும் இச் சாசனத்தால் எங்ஙனம் அறியப்படுகின்றன?

8. இச்சானத்தில் வரும் அணிகலன்கள், இரத்தினங்கள், நிறைகற்கள், நிறுத்தலளவைப் பெயர்கள், அடியார்கள், தெய்வங்கள் இவற்றைக் குறிப்பிடுக.

---

*S. I. I., Vol. II, Part II, No. 40, 166—169

இச்சாசனத்தில் பொய்கை நாடு கிழவன் ஆதித்த சூரியன் என்பான் தஞ்சைப் பெரிய கோயிலில் மெய்ப்பொருள் நாயனூர்க்கு ஒரு பிரதிமம் செய்து வைத்து, அதற்கு ஒரு அக்குமணியைத் தானமாகக் கொடுத்த செய்தி கூறப்படுகிறது. இதில் மெய்ப் பொருள் நாயனூர் பெயர், "தத்தா நமரேகாண் என்ற மிலாடுடையார" எனக் குறிப்பிட்டிருப்பது, ஆதித்த சூரியன் அவ்வடியாரிடத்துக் கொண்ட பத்திமையையும், அவரது வரலாற்றுண்மையில் அவனுக்குள்ள ஈடுபாட்டையும் புலப்படுத்தும்.

முதலாம் இராசேந்திர சோழ தேவன் கி. பி. 1012 முதல் 1044 வரை சோழ நாட்டை ஆண்டான். இச்சாசனம், அவன் ஆட்சியின் மூன்றும் ஆண்டில், ஏற்பட்டதெனவே, இதன் காலம் கி. பி. 1015 ஆம் ஆண்டு என்னலாம்.

சாசனம்

முதலாவது தூணில் கிழக்கு முகத்தில் வெட்டப்பட்டவை.

1. ஸ்வஸ்தி ஸ்ரீ கொ —
2. ப்பரகெஸரி பன்ப
3. ரானஸ்ரீ ராஜெஂர
4. சொழ தெவர்க்கு
5. யாண்டு முன்ருவ —
6. து உடையார் ஸ்ரீ ரா
7. ஜ ராஜீஸ்வரம் உடை —
8. யார்க்கு ஸ்ரீ கார்யஞ் —

1–5. **ஸ்வஸ்திஸ்ரீ, கொப்பரகெஸரி:** இவற்றின் விளக்கத்தை முந்திய சாசனக் குறிப்புகளில் காண்க. **கொப்பரகெஸரி பன்மர்** - கோப்பரகேசரி என்னும் சிறப்புப்பெயருடைய அரசர்; **ஸ்ரீ ராஜெந்ரசொழ தெவர்** - முதலாம் இராசேந்திரசோழ தேவர்; தேவர் - மன்னர்; **யாண்டு மூன்ருவது** - ஆட்சியின் மூன்ருவது ஆண்டு; இவ்வாண்டு முதலேதான் கல்வெட்டுக்களில் முதலாம் இராசேந்திர சோழதேவன் மெய்க்கீர்த்தி **'திருமன்னி வளர இருநில மடந்தையும்'** என்ற தொடக்கத்துடன் காணப்படுகிறது. ஆயினும் இவ்வாண்டில் அவன் மெய்க்கீர்த்தி இல்லாத சாசனங்களும் காணப்படுகின்றன. அவற்றுள் இச் சாசனமும் ஒன்று. எனவே, இது அவனது வெற்றிகளுக்கு முன்னர் ஏற்பட்டதென்று தெரிகிறது.

6–13. **உடையார் ஸ்ரீ ராஜெ ராஜீஸ்வரம் உடையார்க்கு** - தஞ்சைப் பெரிய கோயில்; இராசராசேசுவரம் - தஞ்சைப் பெரியகோயில் இறைவற்கு; **ஸ்ரீகார்யம் செய்கிற** - கோயில் காரியங்களைக் கவனித்து வருகிற; **ஸ்ரீகாரியம்** - கோயில் காரியம். **பொய்கைநாடு கிழவன்**-பொய்கை நாட்டுக்குத் தலைவன்; இவன் இயற்பெயர் ஆதித்த சூரியன்; சிறப்புப் பெயர் தென்னவன் மூவேந்த வேளான்.

9. செய்கின்ற பொய் —
10. கை நாடு கிழவன் ஆ —
11. தித்தன் ஸூர்யன்ஞ —
12. ன தென்னவந் முவெ
13. ந்தவெளான் யாண் —
14. டு மூன்ருவது வரை
15 செய்வித்த செப்பு
16. ப்ரதிமங்கள் உடை —
17. யார் கொயிலில் மு —
18. ழத்தால் அளந்து —
19. ம் ரத்நங்கள் தக்ஷி —
20. ணமெரு விடங்கநெ —
21. ன் னுங் கல்லால் நி —
22. றை எடுத்துங் கல் —
23. லில் வெட்டின [க] பா—
24. தாதிகேஸாந்தம் இ —
25. ருபதிற்று விரல் உசர —
26. த்து இரண்டு கைய்யு —
27. டையராகக் கனமா —
28. கச் செய்த தத்தா ந —
29. மரெகாண் என்ற மி —
30. லாடுடையார் ஒருவர்[உ]
31. இவர் நின்ற பதிற்று

14–23. யாண்டு மூன்ருவது வரை செய்வித்த - *முதலாம் இராசேந்திர சோழதேவன் ஆட்சியின் மூன்ருவது ஆண்டு வரைக்கும் செய்து வைத்த* ; **செம்பு ப்ரதிமங்கள்** - *செம்பினுல் செய்த மக்கட் படிமங்கள்* ; *ப்ரதிமங்கள் - மக்கள் படிமம்*; **உடையார் கோயில் முழம்** - *இராசராசேசுவரம் கோயில் முழககோல்*; **தக்ஷிணமெரு விடங்கநென்னுங் கல்** - *இராசராசேசுவரம் கோயிலுக்குரிய நிறை கல் ; இது இரத்தின முதலியன நிறுத்தற் குரியது.* **நிறை எடுத்தும்** - *நிறுத்தும்* ; **கல்லில் வெட்டின** - *கல்லில் வெட்டியவை.*

24 30. தத்தா நமரே காண் என்ற மிலாடுடையார் ஒருவர் (பிரதிமம்) : *தத்தா நமரே என்றவர் மெய்ப்பொருள் நாயனுர். இவர் அறுபத்துமூன்று நாயன்மார்களில் ஒருவர். குறுநில மன்னருள் மலையமான் மரபினைச் சேர்ந்தவர். சோழநாடு, சோணுடு என்ருயது போல மலையமான் நாடு, மலாடு என்ருகி, இவர் 'மலாடர்கோமான்' என்றும், 'மலாடுடையார்' என்றும் அழைக்கப்பட்டார். இவருடைய பகைவனுன* **முத்திநாதன்** *இவரை வெல்ல வேண்டிப், பொய்த்தவ வேடங்கொண்டு இவரிடம் வந்து, ஆகமநூலை இவருக்கு ஓதுவதாகக் கூறி, தான் மறைத்து வைத்திருந்த படையால் இவரைத் தாக்கினுன். அதைக் கண்ணுற்ற வாயிற் காவலனுன* **தத்தன்** *என்பான், தன் உடைவாளை உருவி அவனை வெட்ட முற்பட்டபோது, நாயனுர், "தத்தா நமர்" என்று கூறி அவனைத் தடுததார் என்பது வரலாறு.*

இவருடைய படிமம் அடிமுதல் முடிவரை 20 விரல் உயரமுண்டையது ; இரண்டு கைகளைக் கொண்டது. செம்பினுல் கட்டியாகச் செய்யப்பட்டது.

பாதாதிகெஸாந்தம் - *அடிமுதல் முடிவரை* ; **விரல்** - *8 தோரை (நெல்)* ; **உசரம்** - *உயரம்* ; **கனமாக** - *கட்டியாக* ; *மெய்ப் பொருள்*

இரண்டாவது தூணில் கிழக்கு முகத்தில் வெட்டப்பட்டவை.

32. விரல் நீளத்து எ —
33. ண்விரல் அகலத் —
34. து எண்விரலுசர —
35. த்து பத்மத்தொடு —
36. ங் கூடச் செய்த பீ —
37. டம் ஒன்று [௺] இவ —
38. னெ இவர்க்குக் —
39. குடுத்தன [௪] உத்ரா —
40 க்ஷம் ஒன்றிற்கட் —
41. டின பொன் எழு ம —
42. ஞ்சாடி உட்பட உத்ரா
43. க்ஷம் ஒன்று நிறை அ —
44. ரைக் கழஞ்செ நா —
45. லு மஞ்சாடியுங் கு —
46 ன்றிக்கு விலெ காசு
47. ஒன்று [௫]

நாயனார் இடத்துக் கொண்ட பத்தியாலும், பயத்தாலும், அவர் பெயரைக் கூருது, 'தந்தா நமரே காண் என்ற மிலாடுடையார்' என்று இங்குக் கூறியிருப்பது அறியத் தக்கது.

31 – 37. இவர் நின்ற - இந்த அடியார் படிமம் நின்ற (பீடம்); இவர் நின்ற பீடம் தாமரை வடிவமான ஆசனத்தோடு கூடியது; 10 விரல் நீளமும், 8 விரல் அகலமும், 8 விரல் உயரமு முடையது. பத்மம் - தாமரை; இங்குத் தாமரை வடிவமாகச் செய்த ஆசனத்தைக் குறித்தது.

38 – 47. இவன் - ஆதித்த சூரியன்; இவர்க்கு - மெய்ப் பொருள் நாயனார் படிமத்திற்கு; குடுத்தன - தானமாகக் கொடுத்தவை; ஆதித்த சூரியன் மெய்ப்பொருள் நாயனார் படிமத்திற்கு ஓர் உத்ராக்கத்தை (அக்கு மணியை)த் தானமாகக் கொடுத்தான். அதில் கட்டின பொன் 7 மஞ்சாடி நிறையுள்ளது: பொன்னும் உத்ராக்கமும் சேர்ந்து ½ கழஞ்சு 4 மஞ்சாடி 1 குன்றி நிறையும், ஒரு காசு விலை மதிப்பு முள்ளது. உத்திராக்ஷம் - அக்குமணி; காசு - பொற்காசு.

பயிற்சி வினாக்கள்

1. மெய்ப்பொருள் நாயனார் யார்? அவருக்குச் சாசனத்தில் வழங்கிய பெயர் யாது?
2. மெய்ப்பொருள் நாயனார்க்குப் படிமம் எடுத்த சாசனம் எப்பொழுது ஏற்பட்டது? எங்குக் காணப்படுகிறது?
3. மெய்ப்பொருள் நாயனார் படிமத்தின் உயரம், அது நின்ற பீடத்தின் அமைப்பு ஆகியவை எங்ஙனம் கூறப்பட்டுள்ளன?
4. மெய்ப்பொருள் நாயனார் படிமத்திற்குக் கொடுக்கப்பட்ட அணிகலன் யாது? அதன் நிறையும் விலையும் குறிப்பிடுக.
5. 'தந்தா நமர் காண் என்ற மிலாடுடையார்' - வரலாறு யாது? இத்தொடரால் அறியப்படுவது யாது?
6. முழம், விரல், கழஞ்சு மஞ்சாடி, காசு — இவைகளால் அறியப்படும் அளவை முறைகளைக் குறிப்பிடுக.

13. சாமுண்டப்பை வைத்த திருநுந்தா விளக்குச் சாசனம். *

முன்னுரை

சாமுண்டப்பை என்பாள், பெரும்பாணப்பாடி என்னும் கரைவழிமல்லியூர் வியாபாரியான நன்னப்பயனுக்கு மனையாள்; அவள் வைகாவூர் ஸ்ரீ குந்தவை சினலயத்திற்குத் தானமாகக் கொடுத்த திருநுந்தா விளக்கைப்பற்றிய சாசனம், 'சாமுண்டப்பை வைத்த திரு நுந்தாவிளக்குச் சாசனம்' என்று பெயர் பெற்றது. இச்சசானம் முதலாம் இராசேந்திர சோழ தேவன் ஆட்சியின் 12 ஆம் ஆண்டில் ஏற்பட்டது. இது போளூரை அடுத்த திருமலை என்னும் மலையின் உச்சியில் ஒரு துண்டுப் பாறையின் மேல் காணப்படுகிறது. தமிழ் மொழியில் கிரந்த எழுத்துக்கள் கலந்து எழுதப்பட்டது. பதினன்கு பத்திகளை யுடையது.

இச்சானத்தின் முற்பகுதியில் முதலாம் இராசேந்திரசோழ தேவன் அவன் ஆட்சியின் 12 ஆம் ஆண்டு வரை செய்த வெற்றிகளைக் கூறும் மெய்க்கீர்த்தி காணப்படுகிறது பிற்பகுதியில் வைகாவூர் ஸ்ரீகுந்தவை சினலயம் என்னும் சமணப்பள்ளிக்குச் சாமுண்டப்பை என்பாள் ஒரு நந்தா விளக்கு வைத்து, அதன் செலவுக்கு இருபது காசும், அக்கோயில் தேவர் திருவமுதுக்குப் பத்துக் காசும் தானமாகக் கொடுத்த செய்தி கூறப்படுகிறது. இதனல் சோழமன்னர்கள் சமயப் பொதுநோக் குடையவர்களாய்க், குடிகள் சமய உரிமை பெற்று வாழ இடமளித்துள்ளனர் என்று தெரிகிறது.

முதலாம் இராசேந்திரசோழ தேவன் கி. பி. 1012 முதல் 1044 வரை 33 ஆண்டுகள் சோழ நாட்டை ஆண்டான். இச்சாசனம் அவன் ஆட்சியின் 12 ஆம் ஆண்டில் ஏற்பட்டதெனவே, இதன் காலம் கி. பி. 1024 ஆம் ஆண்டு என்னலாம்.

சாசனம்

ஸ்வஸ்தி ஸ்ரீ

திருமன்னி வளர விருநில மடந்தையும்

---

* S. I. I., Vol, I, No. 67, pp. 95 – 99.

குறிப்புரை

ஸ்வஸ்தி ஸ்ரீ: இது சாசனங்களில் மங்கலம் குறித்து வரும் வடமொழித் தொடர்; விளக்கம் முதலாம் சாசனக் குறிப்பில் காண்க.

திருமன்னி வளர: இது முதலாம் இராசேந்திர சோழனது மெய்க்கீர்த்தியின் தொடக்கமாக வரும் தொடர்; இலக்குமி அமர்ந்து விளங்க என்பது இதன் பொருள்; அஃதாவது, செல்வம் நிரம்பி வளர என்பது.

பொர்ச்சயப் பாவையுஞ் சீர்த்தனிச் செல்வியுந்
தன்பெருந் தெவிய ராகி இன்புற
நெடிதியல் ஊழியுள் இடைதுறை நாடுந்
துடர்வன வெலிப் படர்வன வாசியுஞ்
சுள்ளிச் சூழ்மதிட் கொள்ளிப் பாக்கையு
நண்ணற் கருமுரண் மண்ணைக் கடக்கமும்

இரு நில மடந்தையும் — பூதேவியும் (goddess of the great earth); 'பெருநிலச் செலவியும்' என முதலாம் இராசராசன் மெய்க் கீர்த்தியில் வந்திருத்தல் காண்க.

'போர்ச்சயப் பாவையும் – போரில் வெற்றியைத் தரும் தேவதையும் (goddess of victory in battles). சீர்த்தனிச் செல்வியும் – கீர்த்தியில் ஒப்பற்ற தேவதையும் (the matchless goddess of fame); சீர் – சீர்த்தி, கீர்த்தி; தனி – ஒப்பற்ற.

தன்பெருந் தெவிய ராகி இன்புற: நாடு, வெற்றி, புகழ் இவைகளைத் தனக்குரிய தேவியராகக்கொண்டு இன்பமடைய.

ஆரம்பகாலப் போர் - வரி: 4-7.

இடைதுறைநாடு, வனவாசி, கொள்ளிப்பாக்கை, மண்ணைக் கடக்கம் இவைகளைக் கொண்ட செய்தி முதலாம் இராசேந்திரனுடைய மூன்றும் ஆண்டுச் சாசன முதலே காணப்படுகின்றது ஆதலின் இவை முதலாம் இராசேந்திரன் ஆட்சியின் ஆரம்ப காலப்போர் எனப்பட்டன.

இடை துறை நாடு; இதனை 'இடைதுறை நாடு இரண்டாயிரம்' என்றும் கூறுவர். இது வடக்கே கிருஷ்ண நதிக்கும், தெற்கே துங்கபத்திரா நதிக்கும் இடைப்பட்ட சமவெளியாகும். தற்கால இரேய்ச்சூர்ச் சில்லாவை இப்பகுதியாகக் கூறலாம். ஊழியுள் நெடிது இயல் – ஊழிக் காலம் வரை நிலையாகவுள்ள.

வனவாசி; இது தொடர்ந்த காடுகளை அரணாகக் கொண்டது. தக்கணத்தின் தென்மேற்குக் கோடியிலுள்ள குந்தள நாட்டின் தலைநகர்; இப்பொழுதுள்ள கன்னடநாடே பண்டைக் குந்தளநாடாகும். துடர்வன வெலிப்படர் - தொடர்ச்சியாகவுள்ள காட்டரணையுடைய.

கொள்ளிப் பாக்கை; இதனைக் 'கொள்ளிப் பாக்கை ஏழாயிரம்' என்றும் கூறுவர். இது ஐதரபாத்துச்கு நாற்பத்தைந்து கல் வடக்கிலுள்ள 'கூல் பாக்' (kolpick) என்னும் இடமாகும். சுள்ளி சூழ் மதில் - சுற்றிலும் சுள்ளிமரங்களை மதிலாகவுடைய; சுள்ளி - ஆச்சா மரம்; ஞாழல் மரம் எனினுமாம்.

மண்ணைக் கடக்கம்; இது ஆதியில் இராஷ்டிர கூட வேந்தர்களுக்கும், பின் மேலைச் சாளுக்கிய மன்னர்களுக்கும் தலைநகரமாயிருந்த 'மான்ய கேடம்' என்னும் நகரமாகும். நண்ணற் கரு முரண் - நெருங்குதற்கு அரிய வலிய மதிலினையுடைய.

பொருகடல் ஈழத் தரசர்த முடியும்
ஆங்க/வர் தெவிய ரொங்கெழின் முடியு
முன்னவர் பக்கல்த் தென்னவர் வைத்த
சுந்தர முடியும் இந்திர நாரமுந்
தெண்டிரை ஈழ மண்டல முழுவதும்
எறிபடைக் கெரளர் / முறைமையிற் சூடுங்
குலதன மாகிய பலர்புகழ் முடியுஞ்
செங்கதிர் மாலேயும் சங்கதிர் வெலேத்

ஈழப்போர் — வரி: 8 - 12.

ஈழமென்பது, இலங்கை நாடு; இது கடல் நடுவ ணுள்ளது. முதலாம் இராசேந்திரன் காலத்தில் ஈழநாட்டை ஆண்ட மன்னன் ஐந்தாம் மகிந்தன் அவன் முதலாம் இராசேந்திரனே எதிர்த்துப் போரில் தோற்றனன். அவனுடையதும், அவன் தேவியருடையது மாகிய முடிகளேயும், ஆடை ஆபரணங்களேயும், பொன்மணிகளேயும் முதலாம் இராசேந்திரன் கைப்பற்றினன் ; அன்றியும், சுமார் ஒரு நூற்றாண்டுக்கு முன் பாண்டியமன்னர் ஈழமன்னரிடம் கொடுத்து வைத் திருந்த சுந்தர முடியையும், பாண்டியர் குலத்திலே நெடுங்காலமாக இருந்துவந்த இந்திரன் ஆரத்தையும் அவனிடமிருந்து எடுத்துக்கொண் டான். இறுதியில், ஈழ மண்டல முழுவதும் சோழர் வசமாயிற்று.

பொருகடல் ஈழம் – இலங்கைத் தீவு; எழில் - அழகு; முடியும் - கிரீடமும்; சுந்தர முடியும் - அழகிய கிரீடமும்; இந்திரன் ஆரம்- இந்திரன் பாண்டியனுக்குக் கொடுத்த மூத்தாரம். தெண்டிரை - தெளிந்த அலேகளேயுடைய கடல். முன்னவர் - ஈழத்தரசர்; தென்னவர்-பாண்டியர்.

மலேநாட்டுப் போர்—வரி: 13-20.

மலே நாடு என்பது, மலேயும் கடலும் சூழ்தரப் பரசுராமனுல் ஆதி யில் அமைக்கப்பட்ட இடமென்பர்; இதனேச் 'சாந்திமத்தீவு' என்றும் கூறுவர். பழந்தீவும் இதனுள் அடங்கும். காந்தளூர்ச் சாலே, இதன் கடற்றுறைப் பட்டினங்களில் ஒன்று முதலாம் இராசராசனுல் செயிக் கப்பட்ட இந்நாட்டில், அமைதியை நிலேநாட்டுதற்கு அவன் மகன் முதலாம் இராசேந்திரன் படை எடுத்துச் சென்றான். போரில் சேரனே வென்று, அவனது முடியையும் மாலேயையும் கவர்ந்தான்.

எறிபடைக் கெரளர் – சேரமன்னர்; எறிபடை - எறிஈட்டி போன்ற படைகள்; முறைமையிற் சூடும் - பரம்பரையாக அணியும்; குல தனம் - குலத்திற்குரிய செல்வம்; அஃதாவது கிரீடம். செங்கதிர் மாலே- செங்கதிர்போல் ஒளி விடும் முத்துமாலே; செங்கதிர் - சூரியன்.

தொல்பெருங் காவற் பலபழந் திவுஞ்
செருவிற் சினவி / இருபத் தொருகா
லரைசுகளை கட்ட பரசு ராமன்
மெவருஞ் சாந்திமத் திவவரண் கருதி
இருத்திய செம்பொற் றிருத்தகு முடியும்
பயங்கொடு பழிமிக முசங்கியில் மு/துகிட்
டொளித்த சயசிங்கன் அளப்பரும் புகழொடும்
பீடியல் இரட்ட பாடி ஏழரை
இலக்கமு நவநெதிக் குலப்பெரு மலைகளும்

சங்கதிர் வேலைத் தொல்பெருங் காவல் - சங்கினங்கள் அதிருகின்ற கடலாகிய பழம்பெருங் காவலையுடைய; அஃதாவது, கடலைத் தனக்கு அரணாகவுடைய என்பது. பல் பழந்திவு; இவை மேலைக் கடலில் உள்ள 'பழந்திவு பன்னீராயிரம்' என்பது.

செருவிற் சினவி .. ..சாந்திமத் தீவு: போரில் கோபித்து இருபத்தொரு தலைமுறையாக அரசகுலத்தை அழிப்பதையே விரதமாகக் கொண்ட பரசுராமன் இருந்து வந்த சாந்திமத்தீவு என்பது. இது மேலைக்கடலில் உள்ளதென்பர். பரசுராமன் தந்தையான சமதக்கினி முனியைக் கார்த்தவீரியார்ச்சுனன் என்னும் அரசன் கொன்றுவிட்டமையின், பரசுராமன் இருபத்தொரு தலைமுறைகளாக அரசகுலத்தவரைக் கொன்று வந்தான்.

செரு - போர்; கால் - தலைமுறை; கட்டுதல்—பிணித்தல்; மெவரும்- வீற்றிருந்த; அரண் கருதி யிருத்திய – பாதுகாப்பு என்று கருதி வைத்த.

மேலைச் சாளுக்கியப் போர்—வரி: 21-24.

மேலைச் சாளுக்கிய நாடு என்பது, இரட்டபாடி ஏழரையிலக்கத்தைக் குறிக்கும்; இந்நாட்டை ஆண்டுவந்த ஐந்தாம் விக்கிரமாதித்தனுடைய தம்பியான செயசிங்கன் தான் முன்னர் இழந்த நாடுகளைச் சோழர் வசமிருந்து மீட்க முயன்றான். இதனால் முதலாம் இராசேந்திரன் இவனை 'முயங்கி' என்னுமிடத்தில் எதிர்த்துப் போரிட்டான். போரில் தோல்வியுற்ற இவன், பயமும் பழியுமுண்டாகப் புறங்காட்டி ஓடி ஒளிந்தான். இவன் நாடும், நவநிதிக் குவியல்களும் முதலாம் இராசேந்திரன் வசமாயின.

பயங்கொடு பழிமிக - பயத்தோடு பழியுமுண்டாக. முயங்கியில் முதுகிட்டு – முயங்கி என்னுமிடத்தில் புறங்காட்டி; முயங்கி என்பதை, பல்லாரி சில்லாவிலுள்ள 'உச்சங்கி துர்க்கம்' என்பர்; ஐதராபாத்து சமத்தானத்திலுள்ள 'மாஸ்கி' என்பாருமுளர். முயங்கி, முசங்கி என்றும் வழங்கும்.

விக்கிரம வீரர் சக்கர கொட்டமு/
முதிரபட வல்லை மதுரை மண்டலமும்
காமிடை வளைய நாமணைக் கொணமும்
வெஞ்சிலை வீரர் பஞ்சப் பள்ளியும்
பாசுடைப் பழநன் மாசுணி தெசமும்
அயர்வி/ல்வண் கிர்த்தி யாதிநக ரகவையிற்

செயசிங்கன்: இவன் கி பி. 1015 முதல் 1042 வரை மேலைச் சாளுக்கிய வேந்தனாக இருந்தான். பீடியல் - பெருமை மிகுந்த; நவ நிதிக் குலப்பெரு மலைகளும் - நவநிதிக்குவியல்களாகிய மிகப் பெரு மலைகளும.

கங்கை கொண்டது - வரி: 25-46.

கங்கை கொண்ட தென்றது, கங்கை நீரைக் கொண்டு வந்ததைக் குறிக்கும். முதலாம் இராசேந்திரன் தான் புதிதாக அமைத்த நகரையும், கோயிலையும், ஏரியையும் புனிதப் படுத்துவதற்கென்று கங்கைநீரைக் கொண்டு வர வடநாடு சென்றான்.

சக்கரக் கொட்டம்: இது விசாகப்பட்டணம் சில்லாவுக்கு மேற்கில் மத்திய மாகாணங்களிலுள்ள பஸ்தர் (Bastar) சமத்தானத்தின் தலைநகரான இராசபுரத்திற்கு எட்டு கல் தூரத்திலுள்ள 'சித்திர கோடா'- என்னும் ஊராகும். இதில் பலம் பொருந்திய வீரர் பலர் இருந்தனர் போலும். விக்கிரமம் - வலிமை.

மதுர மண்டலம்: இது ஒரிசாவிலுள்ள மதுபன் என்னும் சமத்தானத்தை யொட்டிய பகுதியாகும். இதில் பழம்பெருங் கோட்டைகள் இருந்ததாகத் தெரிகிறது. முதிர்பட – முதிர்ந்த பழமையான; வல்லை – கோட்டை.

நாமணைக்கோணம்: இது சிறு கிராமங்கள் இடையிடையே மலிந்த பெருநகர். காம் – கிராமம்; இனி 'காமிடை' என்பதற்குச் 'சோலைகள் மிடைந்த' எனப் பொருள் கொள்ளினுமாம். இடை வளைய – இடையிடை மலிந்த.

பஞ்சப்பள்ளி: பஞ்சவர் பள்ளி கொண்ட இடமென்பர். இங்குப் போர் வீரர் பலர் இருந்தனர். சினவீரர் – போர்வீரர்.

மாசுணிதேசம்: மாசுணி – பாம்பு; நாக வமிசத்தவர் ஆண்ட தேசமாதல் பற்றி இது இப் பெயர் பெற்றது போலும். இது வயல்கள் நிறைந்த இடம். பாசடை – பசுமையான இலை; பழனம் – வயல்; மதுரமண்டலம், நாமணைக்கோணம், பஞ்சப்பள்ளி, மாசுணிதேசம்: இவை நான்கும் வேங்கிநாட்டை யடுத்துள்ள பகுதிகளாகும்.

ஆதிநகரகவையில் – ஆதி நகரில் நடந்த போரில்; இது இந்திரதன் ஆண்டு வந்த கோசல நாட்டிற்குத் தலைநகர்; அயர்வில்; சோர்வில்லாத; வண் – சிறந்த. அகவை – இடம்.

சந்திரன் றெல்கு லத்தி ரதனை
விளையமர்க் களத்துக் கிளையொடும் பிடித்துப்
பலதனத் தொடுநிறை குலதனக் குவை/யுஞ்
கிட்டருஞ் செறிமிளை யொட்ட விஷையமும்
பூசுரர் செர்நல்க் கொசலை நாடுந்
தன் பாலனை வெம்முனை யழித்து
வண்டுறை சொலைத் தண்ட புத்தியு
மிரண / சூரனை முரணுறத் தாக்கித்
திக்கணை கிர்த்தித் தக்கண லாடமுங்
கொவிந்த சந்தன் மாவிழிந் தொடத்

சந்திரன் தொல்குலத்து இந்திரதன் - பழங்காலமாயுள்ள சந்திர குலத்தில் தோன்றிய இத்திர ரதன் என்பது. இவனை முதலாம் இரா சேந்திரன் ஆதிநகர் என்னுமிடத்தில் எதிர்த்து, இவன் இனத்தவரோடு தப்பவிடாது பிடித்தான்; இவனது பலதனக் குவியல்களைக் கொள்ளை கொண்டான். முடிவில் இவன் ஆண்ட ஒட்டவிசயமும், கோசலநாடும் சோழர் வசமாயிற்று.

களம் – போர்க்களம்; **கிளை** – மனைவி மக்கள் முதலியோர். **பலதனம்** – பலவகைச் செல்வம். **நிறைதுலதனக் குவையும்** - நிறைந்த பெருத்த பொருட் குவியலும்.

கிட்டரும் செறிமிளை – நெருங்குவதற்கரிய செறிந்த காவற்காடு; **ஒட்ட விசயம்** – ஒட்டரதேசம்.

பூசுரர் – அந்தணர்; **கோசல நாடு** – இது ஒட்டாதேசத்துக்குப் பக்கத்திலுள்ள **தென்கோசலம்** அல்லது **மகாகோசலம்** என்று கூறப்படும் பூமியாகும். ஒட்டரதேசம் – ஒரிசா நாடு; **வெம்முனை** – கொடிய போர் முனை.

வண்டுறைச் சோலை – வண்டுகள் தங்கும் பூஞ்சோலை; **தண்ட புத்தி:** இதனைப் **பீரார்** என்று சிலரும், **பீஹார்** என்று வேறு சிலரும் கருதுகின்றனர். இது ஒட்டாதேசத்திற்கும் வங்காளத்திற்கும் மத்தியில், சுவர்ண ரேகை நதிக்கு இருகரையிலுமுள்ள நாடாக **இருத்தல் வேண்டும்.** தண்ட நாயகன் ஒருவனுக்குச் சொந்தமானதுபற்றித் '**தண்ட புத்தி**' எனப்பட்டது போலும், முதலாம் இராசேந்திரன் காலத்தில் இதனைத் **தன்ம பாலன்** என்பவன் ஆண்டான்; அவன் **பால** வமிஷத்தைச் சேர்ந்தவன் என்பர். **முரண் அற** – வலிமை கெட. **திக்கு அணை கிர்த்தி** – நான்கு திசையிலும் பொருந்திய கீர்த்தி.

தங்காத சாரல் வங்காள தேசமுந்
தொடுகடற் சங்கு கொட்டன் மஹிபாலனை /
வெஞ்சமர் வளாகத் தஞ்சுவித் தருளி
ஒண்டிறல் யானையும் பெண்டிர்பண் டாரமும்
நித்தில நெடுங்கட லுத்திர லாடமும்
வெறிமணற் திர்த்தத் தெறிபுனற் கங்கை / மாப்

தக்கண லாடம்: வங்காளத்தின் ஒரு பாகம்; இது அக்காலத்தில் 'ராடா' (Radhas) என்று பெயர் பெற்றிருந்தது. இரண சூரன் இதனை ஆண்டான். மா இழிந்து ஓட – குதிரையினின்றும் இறங்கி ஓட.

தங்காத சாரல் – தடைபடாது பெய்யும் மழை வங்காள தேசம்: இது கிழக்கு வங்காளத்தைக் குறிக்கும். இதனைக் கோவிந்த சந்தன் என்பவன் ஆண்டான்.

தொடுகடல் சங்குகொட்டன் மஹிபாலன்: இவன் பதினோராம் நூற்றாண்டின் துவக்கத்தில் உத்திரலாடத்தை ஆண்டுவந்த பால வமிசத்து அரசனுவான் தண்டபுத்தியை யாண்ட தன்மபாலனும், தக்கண லாடத்தை யாண்ட இரணசூரனும், வங்காளத்தை யாண்ட கோவிந்த சந்தனும் இவனுட்சிக்குட்பட்டு ஆண்டு வந்தனர். போர்க் களத்தில் முதலாம் இராசேந்திரனுடைய சேனையின் ஆரவாரத்தைக் கேட்ட இவன் எல்லாவற்றையும் விட்டு ஓடினன். இராசேந்திரன் இவனுடைய யானைகளையும், பெண்டிர் பண்டாரத்தையும் எடுத்துக்கொண்டு கங்கைக் கரையை அடைந்தான். தொடுகடல் சங்கு கொட்டன் – வீரக்கழலையும் சங்காதத்தையும் உடைய; இனி, 'வீரக்கழலையும், சங்குமணியையும் காதணியையுமுடைய' என்பாருமுளர். சங்கு – சங்காரம்; ஒட்டல் – காதணி.

வெஞ்சமர் வளாகத்து – போர்க்களத்து; 'விளாகத்து' என்றும் பாடம்; ஒண்டிறல் – ஒண்திறல், மிக்க வலிமையுடைய; பெண்டிர் பண்டாரம் – பெண்களின் ஆபரணங்கள்; நித்தில நெடுங்கடல் – முத்துக்களையுடைய பெரிய கடல்; அழகிய கடல் எனினுமாம்.

வெறிமலர்த் திர்த்தத்து எறிபுனற் கங்கையும்: வெறிமலர் - வாசனை மிக்க தாமரை முதலிய மலர்கள்; தீர்த்தம் – புனித நீர்; அலையாக மோதி வீசப்படும் நீர் தாமரை மலர்களுக்கிடையில் தனித்தனியே தீர்த்தங்களாயின என்பது. எறிபுனற் கங்கை – மோதி வீசப்படும் நீரையுடைய கங்கை யாறு. இத்தொடரால் கங்கை புண்ணிய நதிகளில் ஒன்று என்பது போதரும்.

12. பொரு தண்டாற்கொண்ட – போர்செய்து தன் சேனையால் வெற்றிபெற்ற; கொப் பரகெசரி பன்மரான உடையார் ஸ்ரீராஜெந்ர சோழ தெவற்கு – கோப்பர கேசரி என்னும் சிறப்புப் பெயரையுடைய மன்ன

12. பொருதண்டாற் கொண்டாற் கொண்ட கொப்பர
கெசரி பன்மரான உடையார் ஸ்ரீ
ராஜெந்ர சொழதெவற்கு யாண்டு
யஉ ஆவது ஐயங் கொண்ட சொழ மண்டலத்து பங்
கள நாட்டு நடுவில்
13. வகை முகை நாட்டுப் பள்ளிச் சந்தம் வைகவூர்த் திரு
மலை ஸ்ரீ குந்தவை ஜிநாலயத்து தெவற்குப் பெரும்பாணப்
பாடிக்கரை வழிமல்லியூர் இருக்கும் வ்யா.
14. பாரி நந்நப்பயன் மணவாட்டி சாமுண்டப்பை வைத்த

ரான திரு. இராசேந்திரசோழ தெவற்கு; இராசேந்திரதெவர் - முதலாம் இராசேந்திரசோழ தேவர்; யாண்டு 12 ஆவது – ஆட்சி ஆண்டு பன்னிரண்டாவது; ஐயங்கொண்ட சோழமண்டலம்: இது முதலாம் இராசராசன் காலமுதல் தொண்டை நாட்டிற்கு வழங்கிய பெயராகும்; இது பலநாடுகளாகவும் கூற்றங்களாகவும் பிரிக்கப்பட்டிருந்தது. பங்கள நாடு இதன் உட்பிரிவுகளில் ஒன்று

13. வகை முகை நாடு – வைகிய முகைநாடு: இது ஐயங்கொண்ட சோழமண்டலத்திலுள்ள பங்களநாட்டின் நடுவில் உள்ளது. பள்ளிச் சந்தம் – சைன பௌத்த கோயில்களுக்கு விடப்பட்ட கிராமம்; வைகாவூர்: முகைநாட்டிலுள்ளது; ஒரு பள்ளிச் சந்தமாக அமைந்தது இங்குள்ள திருமலையில் ஸ்ரீகுந்தவை சினயம் உள்ளது; சினாலயம் - சைனப் பள்ளி. குந்தவை என்னும் பெயருடையார் இருவர் உள்ளனர்; ஒருவர் முதலாம் இராசராசன் உடன் பிறந்தவள்; மற்றொருவா முதலாம் இராசராசன் மகளா ராவர். இவர்களில் குறிக்கப் பெற்றவர் முதலாம் குந்தவையராவர். இவரைப்பற்றிய செய்தியை 4, 5ஆம் சாசனக் குறிப்புக்களில் காண்க

பெரும் பாணப் பாடிக்கரை வழி மல்லியூர்: பெரும்பாணப்பாடி, ஆதியில் வாணர் என்னும் ஒரு வகுப்பார் ஆண்ட ஒரு சிறு நாடாக இருந்தது. அப்பொழுது அது வாணகப்பாடி என்றும், அதன் தலை நகரம் வல்லம், வாணபுரம் என்றும் அழைக்கப்பட்டன. வடுக வழிமேற்கு என்பதும் அதனையே குறிக்கும். பின்னர் தொண்டை மண்டலம் பல்லவர், சோழர் ஆட்சிகளுக் குட்பட்டதும் அதன் ஒரு பகுதியாகிய இந்த நாடும் சிதைவுற்றுச் சிற்றூர்களாக மாறிவிட்டது. எனவே 'பெரும்பாணப்பாடிக் கரை வழி மல்லியூர்' என்பதற்குப் 'பெரும்பாணப் பாடியைச் சேர்ந்த கரைவழி மல்லியூர்' என்று பொருள் கோடல் தகும். இந்த ஊரில் இருந்த வியாபாரியான நன்னப்பயன் மனைவியாகிய சாமுண்டப்பை ஸ்ரீ குந்தவை சினலயத்திற்கு ஒரு நுந்தா விளக்கைத் தானமாகக் கொடுத்து அதன் செலவுக்கு 20 காசும், அக்கோயில் தேவர் திருவமுதுக்கு 10 காசும் கொடுத்தாள்.

14. வியாபாரி நன்னப்பயன் - நன்னப்பயன் என்னும் வியாபாரி; இவன் பெரும்பாணப்பாடியைச் சேர்ந்த கரைவழிமல்லியூரினன்;

திருநந்தா விளக்கு ஒன்றிநுக்குக் காசு இருபதும் திருவமு துக்கு வைத்த காசு பத்தும்.

இவன் மனைவி பெயர் சாமுண்டப்பை. மணவாட்டி - மனைவி; வைத்த- தானமாகக் கொடுத்த; திரு நந்தா விளக்கு - கோயிலுக்குத் தானமாகக் கொடுத்த நந்தா விளக்கு; இதனைத் 'தூண்டா விளக்கு' என்றும் கூறுவர். காசு - ஒரு வகைப்பொன் நாணயம்; திருவமுது - நிவேதன உணவு (Boiled rice offered to an idol or great person).

பயிற்சி வினாக்கள்

1. 'சாமுண்டப்பை வைத்த திருநந்தா விளக்குச் சாசனம்' எங் குக் காணப்படுகிறது? அதன் காலம், அதில் சொல்லப்பட்ட செய்திகள் யாவை?

2. 'திருமன்னி வளர இருநில மடந்தையும்' என்று தொடங்கும் மெய்க்கீர்த்தி யாருக் குரியது? எங்கெங்கு காணப்படுகிறது?

3. 'தொடர்வன வேலிப் படர்வன வாசி,' 'வேலைத் தொல்பெருங் காவல்', 'வாகையம், பொருகடல் கும்பக் கரியொடு மகப்படுத், தூரிமை யிற் பிறங்கிய பருநிதிப் பிறக்கமும்'—இவற்றை விளக்குக.

4. சயசிங்கன், விக்கிரமவீரர், இந்திரதன், தன்மபாலன், இரண சூரன், கோவிந்தசந்தன், மகிபாலன் – இவர்களைப் பற்றிக் குறிப்பு வரைக.

5. முயங்கி, ஊதிநகர் – இவ்விடங்களில் உண்டான வெற்றிகளை எழுதுக

6. முதலாம் இராசேந்திர சோழனின் வீரச் செயல்களைப் பற்றி இருபக்கங்களுக்குக் குறையாமல் எழுதுக.

7. பொருள் கூறுக:- மடந்தை, பாவை, தென்னவர், கௌரர், பீடு, சுள்ளி, காம அகவை, தீர்த்தம், தண்டு, சினலயம், மணவாட்டி, நந்தா விளக்கு, திருவமுது, காசு.

8. "தொடர்வன வேலி .. ... திருத்தகு முடியும்" - என்ற தொடர் களால் அறியப்படும் செய்திகள் யாவை?

9. இடைதுறைநாடு, மண்ணைக்கடக்கம், பழந்தீவு – இவற்றின் சிறப்புக்கள் யாவை?

10. தொடர் வனவேலி, சுள்ளிச் சூழ் மதில் – இவை எதெதற்கு அடைமொழி யாகும்?

11. இராசேந்திரனுடைய ஈழப்போரைக் குறிப்பிடுக.

12. 'முன்னவர் பக்கல் தென்னவர் வைத்த, சுந்தர முடியும் இந்திர னாரமும்' – கொண்ட வெற்றி எம் மன்னருக்கு எவ்வாறாகியது? இவ் வடியின் பொருள் யாது?

13. பரசுராமன் என்ற பெயர் எந்தச் சாசனத்தில் வருகின்றது? அச்சாசனத்தில் அவனைப்பற்றி நீங்கள் தெரிந்துகொள்வ தென்ன?

14. ஸ்ரீராஜேந்திரசோழதேவர் சாசனம்*

முன்னுரை

ஸ்ரீராஜேந்திர சோழ தேவர் என்பான், முதலாம் இராஜேந்திர சோழ்தேவ ஞவன்; அவன் பெயரால் செய்யப்பட்ட தானத்தைக் குறிக்கும் சாசனம், 'ஸ்ரீ இராஜேந்திர சோழதேவர் சாசனம்' என்று பெயர் பெற்றது. இச்சாசனம் அவனது ஆட்சியின் 19 ஆம் ஆண்டு 242 ஆம் நாள் ஏற்பட்டது. இது தஞ்சைப் பெரிய கோயில் நடுவிடத்துக் கருப்ப கிருகத்துத்தெற்குச் சுவரில் முதல் இரண்டு அடுக்குகளில் காணப்படுகிறது. தமிழ் மொழியில் கிரந்த எழுத்துக்கள் கலந்து எழுதப்பட்டது; பதினறு பத்திகளை யுடையது.

இச்சாசனத்தின் முற்பகுதியில் முதலாம் இராசேந்திர சோழ தேவன் ஆட்சியின் பத்தொன்பதாம் ஆண்டு வரை ஏற்பட்ட அவனது வெற்றிகளைக் கூறும் மெய்க்கீர்த்தி அமைந்துள்ளது. பிற்பகுதியில் அவன் தனக்குச் சைவாசாரியராக விளங்கிய சர்வ சிவ பண்டிதற்கும் அவருடைய சீடர்களுக்கும் ஆசாரிய போகமாக ஆண்டுதோறும் இரண்டாயிரம் காலம் நெல் தானமாகக் கொடுத்த செய்தி கூறப்படுகிறது. இதற்கு முந்திய சாசனத்தில் அவனது ஆட்சியின் 12ஆம் ஆண்டு வரையுள்ள இவனது வெற்றிகள் கூறப்பட்டன. இதில் அவனது ஆட்சியின் 12ஆம் ஆண்டுக்கும் 19 ஆம் ஆண்டுக்கும் இடைப்பட்ட காலத்தில் அவன் கடாரங் கொண்ட வெற்றியும் உடன் சேர்த்துக் கூறப்பட்டுள்ளது. மெய்க்கீர்த்திகள் அரசரது ஆண்டு நிகழ்ச்சிகளைக் கூறுவனவாதலால், அவை ஆண்டுதோறும் வளர்ந்து கொண்டே போகும் என்பதற்கு இச்சாசனம் சிறந்த சான்ருகும்.

முதலாம் இராசேந்திர சோழ தேவன் கி. பி. 1012 முதல் 1044 வரை சோழநாட்டை ஆண்டான். இச்சாசனம் அவனது ஆட்சியின் 19 ஆம் ஆண்டு ஏற்பட்ட தெனவே, இதன் காலம் கி. பி. 1031 ஆம் ஆண்டு என்னலாம்.

---

14. இராசேந்திரசோழ தேவன் கங்கைகொண்ட செய்தியை விளக்கி எழுதுக

15. ஜெயங்கொண்ட சோழமண்டலம், பள்ளிச்சந்தம், ஸ்ரீகுந்தவை சினலயம் பெரும்பாணப்பாடி, திருநந்தாவிளக்கு, திருவமுது - இவற்றை விளக்கி எழுதுக

16. ஸ்ரீகுந்தவை சினலயம் எங்கு உள்ளது? அதற்கு திருநந்தா விளக்குத் தானமாகக் கொடுத்தது யார்? வேறு யாது கொடுத்தனர்?

17. நந்நப்பயன், சாமுண்டப்பை – குறிப்பு வரைக.

* S. I. I., Vol. II, Part I, No. 20., pp. 105–109.

ஸ்வஸ்தி ஸ்ரீ
திருமன்னி வளர விருநில மடந்தையும்
பொர்ச்சயப் பாவையுஞ் சீர்த்தனிச் செல்வியுந்
தன்பெருந் தெவிய ராகி இன்புற
நெடிதியல் ஊழியுள் இடைது றை நாடுந்
துடர்வன வெலிப் படர்வன வாசியுஞ்
சுள்ளிச் சூழ்மதிள்[2] கொள்ளிப் பாக்கையு
நண்ணற் கருமுரண் மண்ணைக் கடக்கமும்
பொருகடல் ஈழத் தரசர்த முடியும்
ஆங்கவர் தெவிய ரோங்கெழின் முடியு
முன்னவர் பக்கல் தென்னவர் வைத்த
சுந்தர முடியும் இந்திர நாரமுந்
தெண்டிரை ஈழ மண்டல[3] முழுவதும்
எறிபடைக் கெரளர் முறைமையிற் சூடுங்
குலதன மாகிய பலர்புகழ் முடியுஞ்
செங்கதிர் மாலையும் சங்கதிர் வெலைத்
தொல்பெருங் காவற் பலபழந் திவுஞ்
செருவிற் சினவி இருபத் தொருகா
லரைசுகளை கட்ட பரசு ராமன்

---

1. 'திருமன்னி வளர விருநில மடந்தையும்': இது முதலாம் இராசேந்திர சோழதேவன் மெய்க்கீர்த்தியின் தொடக்கம்; நில மடந்தை – நாடுகள்; தன்பெருந் தெவியராகி – செல்வம், நாடு, வெற்றி, புகழ் இவற்றைத் தனக்குத் தேவியராகக்கொண்டு; தேவி - பட்டத்தரசி.

இடை துறை நாடு, வனவாசி, கொள்ளிப் பாக்கை, மண்ணைக் கடக்கம்; இவை முதலாம் இராசேந்திரன், அவன் ஆட்சியின் துவக்க காலத்தில் வெற்றி பெற்றவை. விளக்கம், முந்திய சாசனக் குறிப்புரையில் காண்க.

2. ஈழத்தரசர், ஈழமண்டலம்: முதலாம் இராசேந்திரன் ஈழநாட்டுப்போரில், ஈழத்தரசர் முடி, அவர் தேவியர் முடி, அவர் பக்கல் பாண்டியர் அடைக்கலமாக வைத்த சுந்தரமுடி, இந்திரன் ஆரம் ஆகியவற்றைக் கவர்ந்து, ஈழமண்டலத்தையும் தன் ஆட்சிக்குட்படுத்தினான்.

3. கெரளர் – சேரமன்னர்: இராசேந்திரன் மலைநாட்டுப் போரில் சேரமன்னரை வென்று, அவர்கள் முடி, மாலை ஆகியவற்றைக் கவர்ந்து, மேலைக்கடல் நடுவிலுள்ள பல தீவுகளையும் வென்றான்.

4. பரசுராமன், சாந்திமத் தீவு: மேலைக்கடலிலுள்ள சாந்திமத்தீவு, ஆதியில் இருபத்தொரு தலைமுறையாக அரசகுலத்தவரை அழித்து

[4]மெவருஞ் சாந்திமத் திவவரண் கருதி
இருத்திய செம்பொற் றிருத்தகு முடியும்
பயங்கொடு பழிமிக முசங்கியில் மு/துகிட்
டொளித்த சயசிங்கன் அளப்பரும் புகழொடும்
பீடியல் இரட்ட பாடி எழரை
இலக்கமு நவநெதிக் குலப்பெரு மலைக[5]ளும்
விக்கிரம வீரர் சக்கர கொட்டமு/
முதிரபட வல்லை மதுரை ம்ண்டலமும்
காமிடை வளைய நாமணைக் கொணமும்
வெஞ்சிலை வீரர் பஞ்சப் பள்ளியும்
பாசுடைப் பழநன் மாசுணி தெசமும்
அயர்வி/ல்வன் கிர்த்தி யாதிநக ரகவையிற்
சந்திரன் றெல்கு லத்தி ரதனை
விளையமர்க் களத்துக் கிளையொடும் பிடித்துப்
பலதனத் தொடுநிறை குலதனக் குவை/யுஞ்
கிட்டருஞ் செறிமிளை யொட்ட விஷெயமும்
பூசுரர் செர்நல்க் கொசலை நாடுங்

வந்த பரசுராமனால் ஆட்சி செய்யப்பட்ட தீவு; முதலாம் இராசேந்திரன் அதன்மீது படையெடுத்துச் சென்று, வென்று அங்குள்ள செல்வங்களை யெல்லாம் கவர்ந்தான்.

இரட்ட பாடி ஏழரை இலக்கம்: இதனை 'மேலைச் சாளுக்கியர் நாடு' என்றும் கூறுவர். ஐந்தாம் மகிந்தன் என்பவன் ஆண்டு வந்தான். அவன் தம்பி செயசிங்கன் முதலாம் இராசேந்திரனை முயங்கி என்னுமிடத்தில் எதிர்த்தான். இராசேந்திரன் போரில் அவனைப் புறமிடச் செய்து, அவன் நாட்டிலுள்ள விலையுயர்ந்த பல பொருட்களையும் கவர்ந்து கொண்டான்.

5. சக்கர கொட்டம், மதுர மண்டலம், நாமணைக்கொணம், பஞ்சப்பள்ளி, மாசுணி தேசம்: இவை வேங்கிநாட்டை அடுத்துள்ள பகுதிகளாகும். முதலாம் இராசேந்திரன் தன் வடநாட்டுப் போரில் இவைகளை வென்றான்.

6. ஆதிநகர், இந்திரதன்: ஆதிநகர் கோசல நாட்டிற்குத் தலைநகர்: இந்திரதன் அதனை ஆண்டான். ஒட்டவிசயம், தென் கோசல நாடு முதலியவை அவனாட்சிக்குட்பட்டு இருந்தன. முதலாம் இராசேந்திரன் இவனை ஆதிநகரில் எதிர்த்து வென்று, இவன் நாடுகளிலுள்ள செல்வங்களையும் கவர்ந்தான்.

தன் பாலனை வெம்முனை யழித்து
வண்டுறை சொலைத் தண்ட புத்தியு
மிரண/சூரனை முரணுறத் தாக்கித்
திக்கணை கிர்த்தித் தக்கண லாடமுங்
கொவிந்த சந்தன் மாவிழிந் தொடத்
தங்காத சாரல் வங்காள தெசமுந்
தொடுகடற் சங்கு கொட்டன் மஹிபாலனை
வெஞ்சமர் வளாகத் தஞ்சுவித் தருளி
ஒண்டிறல் யானையும் பெண்டிர்பண் டாரமும்
நித்தில நெடுங்கட லுத்திர லாடமும்
வெறிமணற் திர்த்தத் தெறிபுனற் கங்கையும் /

---

7. தண்டபுத்தி, தக்கணலாடம், வங்காளதேசம்: இவற்றுள் தண்டபுத்தியை தன்மபாலனும், தக்கணலாடத்தை இரண சூரனும், வங்காளத்தைக் கோவிந்த சந்தனும் ஆட்சிபுரிந்து வந்தனர். இவர்களுக்குப் பேரரசன் மஹிபாலன். இவன் உத்திரலாடத்தை ஆண்டு வந்தான். இராசேந்திரன் இவர்களைப் புறமிட்டு ஓடச்செய்து, இவர்கள் நாட்டுச் செல்வங்களையும், பெண்டிர் பண்டாரத்தையும் கவர்ந்து கொண்டான்.

8. வெறிமலர்த் தீர்த்தத் தெறிபுனல்க் கங்கை: முதலாம் இராசேந்திரன் தான் புதிதாக அமைத்த சோழபுரம் என்னும் தலைநகரையும், அந்நகரில் எடுத்த சோழீச்சுரம் என்னும் கோயிலையும், ஏரியையும் புனிதப்படுத்துவதற்கு கங்கை நீரைக் கொண்டுவர வடநாட்டின்மீது படை எடுத்துச்சென்றான்; கங்கைக்கரை வரையும் உள்ள மன்னர்களை வென்றான்; அவர்கள் செல்வங்களை யெல்லாம் கவர்ந்துகொண்டான்; இறுதியில் கங்கை நீரையும் எடுத்து வந்தான். கங்கை நீரின் புனிதத் தன்மை, 'தீர்த்தத் தெறிபுனல் கங்கை' என்பதால் விளங்கும்.

கடாரம் கொண்டது - வரி: 47-67.

கடாரம் என்பது, மலேயாத் தீபகற்பத்தின் தென்பகுதியில் மேலைக் கடற் கரையின்கண் உள்ள 'கெடா' என்று வழங்கப்பட்டு வரும் இடமே யாகும். இது வடமொழியில் 'கடாஹம்' என்றும், தமிழ்மொழியில் 'காழகம், கடாரம்' என்றும் வழங்கும். இதனை ஆண்டவன் விசயோத் துங்க வர்மன்' என்பவன்.

முதலாம் இராசேந்திரன் கடலில் பல கலம் செலுத்திக் கடாரம் சென்று, முதலில் விசயோத்துங்க வர்மனை வாகை சூடி, அவனது

அலைகடல் நடுவுட் பலகலஞ் செலுத்திச்
சங்கிராம விசையொத் துங்க வர்ம
ஞகிய கடாரத் தரைசனை வாகயம்
பொரு(9)கடல் கும்பக் கரியொடு மகப்படுத்
துரிமையில் பிறக்கிய பெருநெதிப் பிறக்கமும்
ஆர்த்தவ னகனகர் பொர்த்தொழில் வாசலில்
விச்சா தித்தொ ரணமும் மொய்த்தொளிர்
புனைமணிப் புதவமும் கனமணிக் கதவமும்
நிறைசீர் விசையமுந் துறை(10)நீர்ப் பன்னையும்

யானையையும், வித்யாதரத் தோரணம் முதலியவற்றையும் கவர்ந்தான், அதன் பின்னர் ஸ்ரீவிசயம், பன்னை, மலையூர், மாயிருடிங்கம், இலங்கா சோகம், மாப்பப்பாளம், மேவிலிம்பங்கம், வளைப்பந்தூரு, தலைத்தக் கோலம், மாதமர் லிங்கம், இலாமுரிதேசம், மாநக்கவாரம் முதலிய ஊர் களைப் பிடித்தான். இறுதியில் கடாரம் முழுவதும் அவன் வசமா யிற்று.

கலம் — மரக்கலம்; 'அலைகடல் நடுவுட பல கலம் செலுத்தி' என வரும் தொடரால் சோழ மன்னர்கள் கப்பல் படைகளையுடையவர்களா யிருந்தனர் என்பது புலப்படும். அலைகடல் — அலைகளையுடைய கடல்.

சங்கிராம விசையோத்துங்க வர்மன்: இது போரில் வல்ல கடாரத் தரசன் பெயர்; சங்கிராமம் — போர்; வாகையம் — வெற்றி.

9. பொருகடல் கும்பக் கரி — பொருகின்ற கடல் போல் முழங்கும் மத்தகக் கரி; பொருகடல் என்பதற்குப், 'போர்க்களம்' என்று பொருள் கொள்வாருமுளர். கும்பம் — மத்தகம்.

உரிமையில் பிறக்கிய பருநிதி — உரிமையோடு சேர்த்த பெருஞ் செல்வம். பிறக்கம் — குவியல் (heap).

ஆர்த்து - எழுந்து; அகநகர் — தலைநகர்; போர்த் தொழில் வாசலில் — போர் செய்யும் வழியிடத்து.

விச்சாதிரத் தோரணம் — போர்த்தொழில் செய்யும் வாயில் வளை வின் பெயர்; மொய்த்து — செறிந்து; ஒளிபுனை — பிரகாசம் பொருந் திய; புதவம் - கதவு; கதவம் — கதவு. 'புதவக்கதவமும் புடைத்தனன் ஓர் நாள்' என்பது சிலப்பதிகாரம்.

சீர் விஷயம்: சுமத்திரா தீவிலுள்ள 'பாலம்பாங்' என்னும் இராச தானியாகும். சீர் — திரு; விஷயம் — நாடு; அஃதாவது திருநாடு என்பது; 'விச்சாதிரத் தோரணம், புனைமணிப்புதவம், கனமணிக் கத வம் இவைகளையுடைய ஸ்ரீ விஷயம்' என்று கொள்க.

10. துறைநீர்ப்பன்னை: நீர்த்துறைகளையுடைய பன்னை என்பது; இது சுமத்திரா தீவின் கீழ்கரையிலுள்ள பனி (Pani) அல்லது பனை (Panie) என்னு மூராகும்.

வன்மலை யூரெயிற் றொன்மலை யூரும்
ஆழ்கட லகழ்சூழ் மாயிரு டிங்கமும்
கலங்கா வல்வினை இலங்கா சொகமும்
காப்புறு நிறைபுனல் மாப்பப் பாளமும்
காவலம் புரிசை மெவிலிம் பங்கமும்
விளைப்பந் தூறுடை வளைப்ப(11)ந் தூறும்
கலைத்தக் கொர்புகழ் தலைத்தக் கொலமும்

வன்மலை யூரெயிற் றொன்மலையூர்: வலிய 'மலையூ' என்னும் நதியை அரணாகக் கொண்ட பழமையான மலையூர் என்பது. இது சுமத்திரா தீவின் கீழ்கரையி லிருந்தது என்று சிலரும், மேல் கரையி லிருந்தது என்று வேறு சிலரும், மலேயா தீபகற்பத்தின் தென் பகுதியில் இருந்தது என்று மற்றொரு சாராரும் கூறுகின்றனர். ஜம்பி (Jambi) என்னும் நாடே இது என்று டச்சு ஆராய்ச்சியாளர் கூறுவர். எனவே, ஸ்ரீ விசயம், பன்னை, மலையூர் முதலியன சுமத்திரா தீவிலுள்ள ஊர்கள் என்பது போதரும்.

மாயிருடிங்கம்: மலேயா தீபகற்பத்தின் மத்திய பாகத்தில் கடலை யடுத்துள்ளது. ஆழ்கட லகழ் – ஆழமான கடலாகிய அகழி.

இலங்கா சோகம்: மலேயா தீபகற்பத்தில், 'கெடா' என்னுமிடத்திற்குத் தெற்கே யுள்ளது. கலங்கா வல்வினை – நிலைகலங்காத வன்மையுடைய.

கோப்புறு – ஒன்றாகத் தொடர்ந்த; மாப்பபாளம்: இது மகா வமிசத்தில் 'பப்பாளமா' என்று குறிக்கப்பட்டுள்ளது; 'க்ரா' பூசந்திக்குப் பக்கத்தில் இருந்தது.

11. மேவலிம்பங்கம், வளைப்பந்தூரு: இவை இருந்த இடம் இப்பொழுது தெரியவில்லை. காவலம் புரிசை - காவல் நிறைந்த கோட்டையையுடைய; விளைப்பந்தூரு – வளைபந்தூரை யடுத்த ஒரு சிற்றூர் போலும்.

தலைத்தக்கோலம்: கிரேக்க ஆசிரியரான தாலமி என்பவர் இதனைத் 'தகோலா' என்று குறித்துள்ளார். இது 'க்ரா' பூசந்திக்குத் தெற்கே, மலேயா தீபகற்பத்தின் மேல்புறமாக இருந்தது. இப்போது 'தகோபா' (Takopa) என்று வழங்கப்படுவது இதன் தலைநகராகும். கலைத்தக்கோர் – கலை வல்லார்.

தீதும் திமர் வல்வினை மாதமா லிங்கமும்
கலாமுதிர் கடுந்திறல் இலாமுரி தெசமும்
தெனக்க வார்பொழில் மானக்க வாரமும்
தொடுகடல்க் காவல்க் கடுமுரட் கடாரமும்
மா(12)ப்பொரு தண்டாற் கொண்ட கொப்பர
கெஸரி வன்ம ரான உடையார்
ஸ்ரீராஜெங் ரசொழ தெவற்கு யாண்டு
௰௯ ஆவது நாள் இருநூற்று நாற்பத்திரண்டினால்
உடையார் ஸ்ரீ ராசேந்திர சோழதேவர் கங்கைகொண்ட

மாதமா லிங்கம்: மலேயாவின் கீழ்ப் பிரதேசத்தில் 'க்வாண்டன்' நதியின் முகத்துவாரத்திலுள்ள தெமிலிங் (Temiling) அல்லது தெம்ப லிங் (Tembeling) என்று சொல்லப்படும் இடமாகும். தீதமர் வல்வினை— தீமை நிறைந்த கொடிய வினை.

இலாமுரி தேசம்; இது சுமத்திரா தீவின் வட பகுதியில் உள்ள நாடாகும். இதனை 'லாமுரி' என்றும், லம்பரி (Lambri) என்றும் கூறு வர். கலாமுதிர் – கலை நிரம்பிய; கடுந்திறல் – மிக்க திறமை.

மாநக்கவராம்: இது இப்பொழுது 'நித்கோபார் தீவு' என்று வழங்கு கிறது. தேனக்க வார் பொழில் – தேனிறைந்த நீண்ட சோலை.

தொடுகடல் காவல் - ஆழமான கடலாகிய காவலையுடைய; கடு முரண் – கடிய முரட்டுக் குணமுடைய; எனவே மாயிருடிங்கம், இலங் காசோகம், மாப்பபாளம், மேவிலிம்பகம், வளைப்பந்தூரு, தலைத்தக் கோலம், மாதமாலிங்கம் முதலியன மலேயா தீபகற்பத்திலுள்ள ஊர் களாகும்.

12. மா பொரு தண்டால் – பெரும்போரைச் செய்யும் சேனை யால்,

யாண்டு ௰௯ ஆவது நாள் இருநூற்று நாற்பத்திரண்டினால்: 19ஆம் ஆண்டு 242ஆம் நாள் என்பது. சாசனங்களில் நாள் குறிக்கும் போது பெரும்பாலும் அக்காலப் பேரரசரது ஆட்சியின் ஆண்டினைக் குறிப் பது வழக்கம். சில சாசனங்களில் ஆட்சியின் ஆண்டோடு நாளும் உடன் குறிக்கப்பட்டிருக்கும். அப்படிப்பட்ட சாசனங்களில் இதுவும் ஒன்று.

கங்கைகொண்ட சோழபுரம்: முதலாம் இராசேந்திரசோழன் அமைத்த பெரிய நகரம். இதைப் புனிதப்படுத்துதற்குக் கங்கை நீர் கொண்டு வருவதற்கே அவன் வடநாட்டு யாத்திரை செய்து பல நாடு களையும் செயித்தான். இஃது, இப்பொழுது திருச்சிராப்பள்ளி சில்லா

13. சொழபுரத்துக் கொயிலினுள்ளால் முடிகொண்ட சோழன் திருமாளிகையில் வ ட ப க் க த் து தேவாரத்துச் சுற்றுக் கல்லூரியில் தாநஞ் செய்தருளா இருந்து, உடையார் ஸ்ரீ ராஜராஜ ஈஸ்ரவமுடையார் கோயிலில் ஆசார்ய்ய போகம் நம் உடையார் ஸர்வ்வ சிவ பண்டித

14. சைய்வ்வாசார்ய்யர்க்கும் இவ்வுடையார் சிஷ்யரும் பிர சிஷ்யரும்ஆய் ஆர்ய்ய தேசத்தும், மத்திய தேசத்துத் தான் கௌடதெசத்துத்தான் உள்ளாராய் யொக்யரா யிருப்பார்க்கெ ஆட்டாண்டுதொறும் இத்தேவர் கொயிலில் ஆடவல்லானெ

விலுள்ள உடையார்பாளையம் தாலூகாவில் ஒரு சிறு ஊராகக் காணப் படுகிறது.

13. கோயிலினுள்ளால் - அரண்மனையினுள்; அரண்மனையின் ஒரு பகுதிக்குப் பெயர் என்பாருமுளர். முடிகொண்ட சோழன் திருமாளிகை— முதலாம் இராசேந்திரன் பட்டப்பெயர்களில் 'முடிகொண்ட சோழன்' என்பது ஒன்று. அப்பெயரால் கட்டிய அரண்மனை இதுவாகும்.

தேவாரத்துச் சுற்றுக் கல்லூரி: முதலாம் இராசேந்திர சோழன் அரண்மனைப் பூங்காவனத்தைச் சுற்றியிருந்த கல்லூரி (That College which surrounds the King's flower garden); பூசிக்கப்படும் இட மென்பாரு முளர்.

தாநம் செய்தருளா இருந்து – தருமம் செய்து; ஆசாரிய போகம் – ஆசாரியராகவிருந்து அநுபவிக்கும் செல்வம்.

14 உடையார் சர்வ்வசிவ பண்டிதர்: 'உடையார்' என்ற பெயர் கடவுளுக்கும், கடவுளையொத்த அரசர்க்கும், கடவுளடியார்க்கும் வழங்கும் பெயராகக் காணப்படுகிறது. சர்வ்வசிவ பண்டிதர் தஞ்சைப் பெரிய கோயிலில் பூசை செய்து வந்தவர். முதலாம் இராசேந்திரனுக்கு ஆசாரியராய் இருந்தார். இவரும், இவருடைய சீடர்களும் எந்த நாட் டிலிருந்தாலும் அவர்களுக்கு ஆசாரிய போகமாய்க் கொடுக்கும்படியாக ஆண்டுதோறும் இரண்டாயிரம் கலம் நெல் அளப்பதற்கு முதலாம் இராசேந்திரன் தன் அரண்மனையில் இருந்தபடியே ஆணை பிறப்பித் தான்

இவ்வுடையார் சிஷ்யரும் - சர்வசிவ பண்டிதருடைய சீடரும். பிற சிஷ்யரும் - சர்வசிவ பண்டிதர் சீடர்களின் சீடர்களுமாய்.

ஆர்ய்ய தேசத்தும், மத்திய தேசத்துத்தான், கௌட தேசத்துத்தான்: ஆரியதேசம், மத்திய தேசம், கௌட தேசம் என்பது. இவைகளில் சர்வசிவபண்டிதருடைய சீடர்களிருந்தனர். கௌடதேசம் – வங்காள தேசம். இத்தேவர் கோயிலில்-முதலாம் இராசேந்திரசோழ தேவர் அரண் மனையில்.

15 ன்னும் மரக்காலால் உள்ளூர்ப் பண்டாரத்தே நிறைச்சளவாக இரண்டாயிரக் கல நெல்லு ஆட்டாண்டு தொறும் சந்திராதித்தவல் பெறத் திருவாய் மொழிந்தருளத் திருமந்த்ரி ஒலை செம்பியன் விழுப்பரையன் எழுத்திநு

16. ல்...த் திருவாய்க் கெழ்விப்படி கல்லில் வெட்டித்து இது இவ்வம்சத்துள்ள சைய்வ்வ ஆசார்ய்யர்களே இத் தன்மம் ரக்ஷிக்க உ.

---

15. நிரைச்சளவாக – *நிரம்பிய அளவில்*; சந்திராதித்தவல் – *சந்திரன் ஆதித்தன் உள்ள காலமளவும்*; ஆதித்தன் – *சூரியன்*. திருவாய் மொழிந்தருள – *கட்டளையிட*; திருமந்த்ரி ஓலை – *திருமந்திர ஓலை, அரசனது ஆணையை எழுதுபவன்*. ஸ்ரீ ராஜேந்திர சோழ தேவன் *கட்டளையை ஓலையில் எழுதி வாசித்தவன்* செம்பியன் விழுப்பரைய னுவான்.

16. திருவாய்க் கேழ்விப்படி கல்லில் வெட்டித்து: திருவாய்க் கேழ்வி- *திருவாய்க் கேள்வி; அஃதாவது அரசனது ஆணை என்பது. இதனுல் அரசன் தான் செய்யக் கருதும் தானத்தைத் தன் அரண்மனையிலிருந்தபடியே சொல்ல, திருமந்திரவோலை அதை எழுதுவான் என்றும், பின் அது ஊர்ச்சபை முன் வாசிக்கப்பட்டு அம்முறையே கல்லில் வெட்டப்படும் என்றும் தெரிகிறது.*

இவ்வம்சத்துள்ள சைய்வ்வ ஆசாரியர்களே – *இந்தப் பரம்பரையில் தோன்றிய சிவாச்சாரியர்களே என்பது*; இந்தன்மம் – *இந்தத் தருமம்*; ரக்ஷிக்க – *காக்கக் கடவர்.*

பயிற்சி வினுக்கள்

1. ஸ்ரீ ராஜேந்திர சோழ தேவர் சாசனம் *எதைப் பற்றியது? அது எங்குக் காணப்படுகிறது? அதன் காலத்தைக் குறிப்பிடுக.*

2. *இராசேந்திர சோழன் அவனுடைய ஆட்சியின் 12ஆம் ஆண்டுக்கும் 17ஆம் ஆண்டுக்கும் இடையில் அடைந்த வெற்றிகள் யாவை? அவ்வெற்றிகளில அவன் கைக்கொண்ட இடங்கள் பலவற்றுள் ஆறு இடங்களின் பெயர்களையும், தனித்தனியே அவைகளுக்குரிய சிறப்புக்களையும் வரைக.*

3. *இராசேந்திர சோழன் கடாரத்தரசனை வென்று அவன்பால் கைக்கொண்ட மூன்று சிறந்த பொருள்கள் எவை?*

4. தேவாரத்துச் சுற்றுக் கல்லூரி, ஆசாரியபோகம், சர்வசிவ பண்டிதர், திருமந்திரவோலை, செம்பியன் விழுப்பரையன், திருவாய்க் கேள்வி – *குறிப்பு வரைக.*

5. *முதல் இராசேந்திர சோழனுக்கு ஆசாரியராய் இருந்தார் யாவர்? அவர் சீடர்கள் எந்தெந்தத் தேசத்தவராய் அறியப்படுகின்றனர்?*

6. *இராசராசேசுவரத்தில் ஆசாரிய போகம் பெற்றிருந்தார் எத்தேசத்தார்? எதனை ஊதியமாகப் பெற்றனர்?*

15. மணிமங்கலம் சபையோர் சாசனம் *

முன்னுரை

மணிமங்கலம் என்பது ஓர் ஊர்; அவ்வூர்ச் சபையினரால் ஏற்பட்ட சாசனம் 'மணிமங்கலம் சபையோர் சாசனம்' எனப் பட்டது. இச்சாசனம் இராசகேசரிவர்மன் என்னும் முதலாம் இராசாதிராச சோழன் † காலத்தில், அவன் ஆட்சியின் 29 ஆம் ஆண்டு ஏற்பட்டது. அதனல் இது முதலாம் இராசாதிராச தேவன் சாசனம் என்றும்பெயர் பெறும். இது செங்கல்பட்டு மாவட்டம், காஞ்சீவரம் தாலூகாவிலுள்ள மணிமங்கலம் என்னும் ஊரிலுள்ள இராச கோபாலப்பெருமாள் கோயில் கருப்ப கிருகத்தின் வடக்குச் சுவரிலும், கிழக்குச்சுவறிலும் காணப்படுகிறது. தமிழ் மொழியில் கிரந்த எழுத்துக்கள் கலந்து எழுதப்பட்டது. பன்னிரண்டு பத்திகளை யுடையது.

இச்சாசனத்தின் முற்பகுதியில் முதலாம் இராசாதிராச தேவன், அவன் ஆட்சிக்குட்பட்ட சேரநாடு, சாளுக்கிய நாடு, பாண்டிய நாடு, கங்க நாடு, கன்னியாகுப்ஜம் ஆகியவற்றை ஆளுவதற்கு அவன் இனத்தவரை நியமித்த செய்தியும், பல்லாரிச் சில்லாவிலுள்ள காம்பிலி என்னுமிடத்திலிருந்த சாளுக்கிய

---

7. அரசன் ஆணையிடும் அறங்கள் அரசியல் தலைவர்களால் எம் முறைப்படி உறுதிப்படுத்தப் பெற்று வந்தன? ஆதாரம் காட்டி எழுதுக.

8. முதலாம் இராசேந்திர சோழன் ஏகாதிபத்தியத்தில் அடங்கியிருந்த நாடுகளைப் புலப்படுத்துக.

* S. I. I., Vol. II, Part I, No. 28., pp. 57–58.

† இவன் முதலாம் இராசேந்திர சோழனுக்கு முதல் மகனவான்; இராசேந்திரன் இவனைக் கி பி. 1018ல் இளவரச னக்கினன். எனவே, இவனது ஆட்சி கி.பி. 1018முதல் எண்ணப்பட்டது, இவன் கி பி.1053 வரை ஆண்டான் என்பர். இவன் தன் சிறிய தந்தை முதலிய உறவினர்களுக்கும் நாடு கொடுத்து ஆட்சி புரியச் செய்தான். பாண்டியர், சேரர், மேலைச் சாளுக்கியர், இலங்கை மன்னர் முதலியவர்களோடு போர் செய்து வெற்றி பெற்றான். ஆகையால் இவன் 'செயங்கொண்ட சோழன்' என்றும் அழைக்கப்பட்டான். இவன் மேலைச் சாளுக்கியரோடு காம்பிலி என்னுமிடத்தில் நடத்திய போர் பிரசித்தமானது. இவன் மனு நெறி தவருது ஆட்சி புரிந்தான்; அசுவமேதேயாகம் செய்து பெயர் பெற்றான. வில்லவர், மீனவர், வேள்குலர், சாளுக்கியர், வல்லவர், கௌசலர், வங்கணர், கொங்கணர், சிந்துரர், ஐயணர், சிங்களர், பங்களர், ஆந்திரர் முதலியோர் இவனுக்குத் திறை செலுத்தி வந்தனர். இவன் குடிகளிடத்தில் ஆறிலொரு கடமை வாங்கி வந்தானென்பது இச் சாசனத்தால் தெரிகிறது.

மன்னர் மாளிகையை அழித்த செய்தியும் கூறும் அவனது மெய்க்கீர்த்தி அமைந்துள்ளது. பிற் பகுதியில் [மணிமங்கலம் சபையோர், கோயில் பணத்திலிருந்து நூறு காசு கடன் வாங்கி அக்கடனுக்கு வட்டியாக அவ்வூரிலுள்ள சில நிலங்களை ஈடாகக் கொடுத்த செய்தி கூறப்படுகிறது. அஃது இராசாதிராச தேவன் ஆட்சியின் 29ஆம் ஆண்டு தனுஞாயிற்று (in the month of Dhanus) பூர்வபட்சத்து (bright fort-night) துவிதையும் (The Second Tithi) புதன்கிழமையும் கூடிய திருவோண நாளில் (The day of Sravana) நடைபெற்ற]தென்பது குறிப்பிடத் தக்கது.

முதலாம் இராசாதிராச தேவன் கி. பி. 1018 ஆம் ஆண்டு முதல் 1054 வரை சோழ நாட்டை ஆண்டான். இச்சாசனம் அவன் ஆட்சியின் 29 ஆம் ஆண்டு ஏற்பட்டதெனவே, இதன் காலம் கி. பி. 1046 ஆம் ஆண்டு என்னலாம்.

சாசனம்

இராசாதிராசன்

(1) ஸ்வஸ்திஸ்ரீ
திங்களேர் தருதன் றொங்கல்வெண் குடைக்கீழ்
நிலமக ணிலவ மலர்மகட் புணர்ந்து
செங்கோ லொச்சிக் கருங்கலி கடிந்து
தன்சிறிய தாதை யுங்[1] திருத் தமையனுங்[2]

ஸ்வஸ்திக் ஸ்ரீ: இது சாசனங்களில் மங்கலமாக வரும் வடமொழித் தொடர்.

திங்களேர்தரு— திங்களையொத்த; இவன் சாசனம் 'திங்களேர் தரு' 'திங்களேர் பெறவளர்' என்ற தொடக்கம் உடையன. தன் தொங்கல் வெண் குடை – தனது மாலை தொங்கவிடப் பெற்ற வெண்கொற்றக் குடை ' திங்களைப் போற்றுதும் திங்களைப் போற்றுதும், கொங்கலர்தார்ச் சென்னி குளிர்வெண் குடைபோன்றிவ், வங்கண் உலகளித்தலான் ' என்ற சிலப்பதிகார அடிகள் இங்கு நினைக்கற்பாலன.

நிலமகள் நிலவ – பூதேவதை தங்க; மலர்மகள் புணர்ந்து – இலக்குமி கூடியிருந்து; செங்கோலோச்சி – ஆட்சிபுரிந்து; கருங்கலி கடிந்து – துன்பம் நீக்கி; தன் சிறிய தாதை: இவன் பெயர் இங்குக் குறிக்கப்படவில்லை; இரண்டாம் இராசேந்திரன் மெய்க்கீர்த்தியில் தன் சிறிய தாதையாகிய எறிவலி கங்கைகொண்ட சோழனை ' என்று காணப்படுகிறது.

[1] 'சிறிய தாதையையும்' என்றும் பாடம். திருத்தமையன்; இவன் பெயர் இரண்டாம் இராசேந்திரன் மெய்க்கீர்த்தியில் ' அரும்பெறற் றமயனை முன் வந்தான் யிரும்புவி புகழ் இராசராசனென் றொளிர்மணி முடிசூட்டி ' என்று குறிக்கப்பட்டுள்ளது. இவன் பெயர் ' ஆளவந்தான் ' என்பாருமுளர்.

[2] 'தமையனையும்' என்றும் பாடம்.

குறிகொள்தன் னிளங்கோக் களையும் நெறியுணர்
தன்றிருப் புதல்வர் தம்மையுந் துன்றெழில்[4]
வானவன் வல்லவன்[5] மினவன் கங்க
னிலங்கையர்க்[6] கிறைவன் பொலங்கழற்[7] பல்லவன்
கன்னகுச் சியர்கா வலனெனப்[8] பொன்னணிச்
சுடர்மணி மகுடஞ் சூட்டிப் படர்புக[9]
ழாங்கவர்க் கவர்நா டருளிப் பாங்குற[10]
மன்னுபல் லூழியுட் டென்னவர் மூவருள்
மானு பரணன் பொன்முடி யானுப்[11]

குறிகொள் – பெயர்பெற்ற, இளங்கோக்கள் – தம்பியர்; இவர்கள் பெயர் இரண்டாம் இராசேந்திரன் மெய்க்கீர்த்தியில் மும்முடிச்சோழன், வீரசோழன், மதுராந்தகன், பராந்தகன் என்று குறிக்கப்பட்டுள்ளன, [3] 'தன்னிளங் கோக்களையும்' என்றும் பாடம்.

நெறியுணர் தன் திருப்புதல்வர் – அரசியல் நெறியுணர்ந்த தன் மக்கள்; துன்று எழில் – அழகமைந்த. [4] 'துன்றிய தெறுசில்' என்றும் பாடம். வானவன் – சேரமன்னன்; வல்லவன் – சளுக்கிய மன்னன்; [5] 'வில்லவன்' என்றும் பாடம். மீனவன் – பாண்டிய மன்னன்; கங்கன் – கங்கபாடி மன்னன்.

இலங்கையர்க் கிறைவன் – இலங்கை மன்னன்; பொலங்கழல் – பொன்னாலான வீரக்கழல். [6] 'கங்க நிலங்கையற் கிறைவன்', [7] 'புலங் கழல்' என்றும் பாடம். கன்னகுச்சியர் – கன்னியாகுப்ஜம் என்னும் இடத்தவர்; காவலன் – அரசன். [8] 'காவலநென' என்றும் பாடம்; பொன்னணிச் சுடர்மணி மகுடம் சூட்டி – பொன்னு லழகு செய்த மணிகள் பதித்த மகுடம் சூட்டி என்பது. படர்புகழ் – புகழ்பெற்ற. [9] 'பலர்புகழ்' என்றும் பாடம்.

ஆங்கவர்க்கு அவர் நாடருளி: தன் சிறிய தாதை, தமையன், புதல்வர் ஆகியவர்களுக்குச் சேரர், சாளுக்கியர், பாண்டியர், கங்கர், இலங்கையர், பல்லவர், கன்னகுச்சியர் என்பவர்களின் நாட்டை ஆளும்படிக் கொடுத்து என்பது. பாங்கு உற – சிறப்பாக; பக்கத்தில் பொருந்திய என்பாருமுளர் [10] 'பாங்குறு' என்றும் பாடம்.

மன்னுபல் ஊழி – நிரம்பிய பல ஆண்டில்; [11] 'ஆநாப்' என்றும் பாடம். தென்னவர் மூவர் – இலங்கையர், சேரர், பாண்டியர் ஆகிய மூவர்; பாண்டியர் மூவர் என்பாருமுளர்.

பருமணிப்(2)பசுந்தலை பொருகளத் தரிந்து
வாரள வியகழல் வீரகே ரளனை
முனைவயிற் பிடித்துத் தனது வாரணக்[12]
கதக்க ளிற்றினு[13] லுதைப்பித் தருளி
அந்தமில் பெரும்புகழ்ச் சுந்தர பாண்டியன்
கொற்றவெண் குடையும் கற்றைவெண் கவரியும்
சிங்காதனமும் வெங்களத் திழந்துதன்
முடிவிழத் தலைவிரித் தடிதளர்ந் தோடத்
தொல்லை[14] முல்லையூர்த் துரத்தி யொல்கலில்
வேணாட் டரசைச் சேணாட் டொதுக்கி

---

2. மானபரணன் .... அரிந்து: மானாபரணன் — மானத்தை ஆபரணமாக வுடையவன். இது பாண்டியர்களுக்கும், இலங்கை மன்னர்க்கும் பொதுவாக வழங்கப்பட்ட பெயர். இப்பெயரையுடைய இலங்கை மன்னன் ஒருவன் முதலாம் இராசாதித்தனால் தலை கொய்யப் பட்ட செய்தி இதுவாகும்.

வாரளவிய கழல் - நீண்டு அகன்ற கழல்; வாரால் இறுக்கிக் கட்டப் பட்ட கழல் எனினுமாம். வீரகேரளன் — இவன் சேரநாட்டை ஆண்ட மன்னன்.

முனைவயில் — போர்முனையிடத்து. வாரணக் கதக் களிறு — 'அத் திவாரணம்'என்னும் பெயரையுடைய கோப மிகுந்த யானை என்பது. இது சோழ மன்னனுக் குரியது. உதைப்பித்தருளி — யானையின் காலால் தலையை இடறச் செய்து; இவ்வாறு தலை இடறப்பட்டவன் வீரகேரளனாவான். [12] 'தனத் திவாரணக்', [13] 'கதக் களிற்று' என்றும் பாடம்.

அந்தமில் — முடிவில்லாத; சுந்தரபாண்டியன்: இவன் முதலாம் இராசாதித்தனுக்குத் தோற்று தன் வெண்கொற்றக் குடை, வெண் கவரி, சிங்காதனம் முதலியவற்றை இழந்தான். சோழன் இவனைப் பின் தொடர்ந்து துரத்த, இவன் தலைவிரி கோலமாய் முல்லையூர் வரை யோடி ஒளிந்தான். வெங்களம் — போர்க்களம். முடிவிழ — கிரீடம் கீழே விழ.

தொல்லை முல்லையூர் — பழமை தாங்கிய முல்லையூர்; [14]'தொல்லைய்' என்றும் பாடம். ஒல்கல் — பின் வாங்குதல்; குறைவு எனினுமாம்.

வேணாட் டரசை சேணாட் டொதுக்கி: இக்காலத்தில் மலைநாடு பல பகுதிகளாகப் பிரிந்து ஒவ்வொரு பிரிவும் தனித்தனி அரசர்களால் ஆளப்பட்டு வந்தது. அவ்வாறு பிரிந்த பகுதிகளில் வேணாடும் ஒன்று. இதனைத் திருவாங்கூர் என்பர். முதலாம் இராசாதிராசன் தன் மலை நாட்டுப் போரின் தொடக்கத்தில் வேணாட்டைத் தாக்கி, அதன் அரசனை விண்ணகத் தேற்றினான். சேணாடு — சுவர்க்கம்.

மேவுபுக ழிராமகுட மூவர்கெட முனிந்து
மிடல்கெழு[15] வில்லவன் குடர்மடிக் கொண்டுதன்
நா(3)டுவிட் டோடிக் காடுபுக் கொளிப்ப
வஞ்சியம் புதுமலர் மலைத்தாங் கெஞ்சலில்
வேலைகெழு காந்தளூர்ச் சாலை[16] கலமறுத்[17]
தாகவ மல்லனு மஞ்ச கேவுதந்[18]
தாங்கரும் படையா லாங்கவன் சேனையுட்[19]
கண்டப் பயனும் கங்கா தரனும்
வண்டமர் களிற்றொடு மடியத் திண்டிறல்

இராமகுட மூவர் கெட முனிந்து: இராமகுட மென்பது, எலிமலைக்குப் பக்கத்திலே யிருந்த ஒரு சிறு இராச்சியமாகும். அவ்விடத்தில் ஆண்டுவந்த அரசர்கள் மூஷிக வம்சத்தைச் சேர்ந்தவர்கள். அவர்களில் கண்டார் கார்வர்மன் ஒருவன்; அவனுக்கு மற்றொரு பெயர், 'இராம குட மூவர் திருவடி' என்பது. அவனுடன் முதலாம் இராசாதிராசன் போர் செய்து, அவனை அழித்தான். இனி, இத் தொடரை 'இரா + மகுடம் எனப் பிரித்து 'மகுடமிழந்த இலங்கையரசன், வீரகேரளன், சுந்தர பாண்டியன்' ஆகிய மூவர் என்று பொருள் கொள்வாருமுளர். முன்னர் கூறியவாற்றால் அது பொருந்தாமை காண்க.

மிடல்கெழு வில்லவன் – வல்லமை மிக்க சேரன்; வில்லவன்-வில்லைக் கொடியாக வுடையவன் [15] 'விடல்கெழு' என்றும் பாடம். குடர்மடிக் கொண்டு - வயிற்றை மடித்துக்கொண்டு; முதலாம் இராசாதிராசன், சேரன் ஒருவனை வயிறு மடித்துக் கொண்டு ஓடும்படி செய்தான் என்றபடி.

[3] வஞ்சியம் புதுமலர் மலைந்து – வஞ்சிமாலை சூடி; எஞ்சலில் – ஒய்வில்லாத. வேலை கெழு – கடல் மோதும்; காந்தளூர்ச்சாலை கலமறுத்து-காந்தளூர் அறச்சாலையில் உண்ணவேண்டியவர்கள் இத்தனை பேர் என உண்கலம் வரையறுத்து என்றும், பிறவாறும் இதற்குப் பொருள் கூறுவர். இதன் விளக்கத்தை 'ஸ்ரீ இராஜராஜ கிணறு' என்னும் சாசனக் குறிப்பில் காண்க. [16] 'சாலைக்' [17] 'கலமறுப்பித்' என்றும் பாடம்.

ஆகவமல்லனு மஞ்ச – ஆகவமல்லனும் அஞ்ச; – கேவுதந்; கேவுதன்; இவன ஆகவமல்லன் படைத் தலைவர்களில் ஒருவன் போலும். [18] 'மஞ்சகேதுவுந்', மஞ்சகேதுவுந்தன், என்றும் பாடம்.

தாங்கரும் படையால் – சோழனது எதிர்பதற்கரிய படைவலியால்; அவன் சேனை – ஆகவமல்லன் படை [19] 'சேனையிற்' என்றும் பாடம்.

கண்டப்பயனும் கங்காதரனும்: இவர்கள் இருவரும் ஆகவமல்லன் படைத் தலைவர்கள்; வண்டமர் களிற்றொடு மடிய: போரில் கண்டப் பயனும் கங்காதரனும் தங்கள் களிறுகளோடும் மடிய என்பது. வண்டமர் களிறு – மதக்களிறு; வண்டுகள் மொய்க்கும் படியான மதப்பெருக்கினை யுடைய களிறு என்றபடி.

விருதர்[20] விக்கியும் விசயா தித்தனுங்
கருமுரட் சாங்க மய்யனு[21] முதலினர்
சமர பீருவொத் துடைய விரிசுடர்
பொன்னே டைக்கரி[22] புரவியொடும் பிடித்துத்[23]
தன்னு டையிற் சயங்கொ(4)ண் டொன்னுர்
கொள்ளிப் பாக்கை யுள்ளெரி மடுப்பித்
தொருதனித் தண்டாற் பொருகட லிலங்கையர்[24]
கோமான் விக்கிரம பாகுவின் மகுடமும்
முன்றனக் குடைந்த[25] தென்றமிழ் மண்டல
முழுவ தும்மிழ்ந் தெழுகட[26] லீழம்

விருதர்விக்கியும் விசயாதித்தனும்: ஆகவமல்லன் மக்களான விக்கிரமாதித்தனும், விசயாதித்தனும் என்பது; விருதர் - வீர மிக்கவர்; விக்கி - விக்கிரமாதித்தன். [20] 'விருதரை' என்றும் பாடம்.

கருமுரட் சாங்கமய்யனும் – மிக்க வலிமையுடைய சாங்கமய்யன்; இவனும் ஆகவமல்லன் படைத் தலைவர்களில் ஒருவன். [21] 'சாங்கமயனும்' என்றும் பாடம். முதலினர் – விக்கிரமாதித்தன், விசயாதித்தன், சாங்கமய்யன் முதலியோர்.

சமரபீரு ஒத்து உடைய - சமரில் அச்சங்கொண்டு உடைந்தோட; சமரபீரு – சமரில் கொள்ளும் அச்சம் (Coward); சமர் - போர்.

பொன் னேடைக் கரி – அழகிய நெற்றிப் பட்ட முடைய யானை; [22] 'பொன்னே டயங்கரி' என்றும பாடம். புரவி – குதிரை. [23] 'பிடித்து' என்றும் பாடம். தன்னுடையில் – தன் முயற்சியில்.

4. ஒன்னர் – பகைவர்; கொள்ளிப்பாக்கை: இது நிஜாம் இராச்சியத்துச் சிக்கந்தரபாத்துக்கு நாற்பத்திரண்டு கல் தூரத்திலுள்ளது; அக்காலத்தில் இது சாளுக்கிய ராட்சியின் கீழ் இருந்தது.

ஒரு தனித் தண்டு - ஒப்பற்ற பெரும்படை; இலங்கையர் கோமான் விக்கிரமபாகு: இவன் இயற்பெயர் காசிபன் என்பது; மகிந்தனுக்கு மகன். முதலாம் இராசேந்திரன் கி. பி. 1017ஆம் ஆண்டு ஈழமண்டல முழுவதையும் கொண்டு, மகிந்தனைச் சோழ நாட்டில் சிறைப்படுத்தி வைத்திருந்தான். அவன் மகன் காசிபனைச் சிங்களவர்கள் இரகசியமாக வளர்த்து, ஏற்ற காலத்தில் இலங்கையின் ஒரு பகுதியான உரோகண நாட்டிற்கு அரசனுக்கி 'விக்கிரமபாகு' என்ற பெயரோடு கி. பி 1029 ஆம் ஆண்டு முடிசூட்டி வைத்தனர். அவன் முதலாம் இராசாதிராசன் படைகளால் வெல்லப்பட்டு, முடியிழந்தான் [24] 'இலங்கையார்' என்றும் பாடம்.

முன் தனக்குடைந்த – முன்பு தனக்குத் தோற்ற; [25] 'உடைத்து' என்றும் பாடம். தென் தமிழ் மண்டலம் – பாண்டிய மண்டலம்; எழுகடலீழம் – அலையெழும் கடல் நடுவணதாகிய ஈழநாடு. [26] 'ஏழ்கடல்' என்றும் பாடம்

புக்கவிலங் கேச னுகிய[27] விக்கிரம
பாண்டியன் பருமணி மகுடமும் காண்டகு
தன்ன வாக்கித்தன்[28] கன்னகுச் சியினும்[29]
ஆர்கலி யீழஞ் சீரிதென் றெண்ணி
உளங்கொளந் நாடு[30] தன் னுறவொடும்[31] புகுந்து
விளங்குமுடி கவித்த வீரசலா மெகன்

ஈழம் புக்க இலங்கேசனுகிய விக்கிரமபாண்டியன்: விக்கிரம பாண்டியன் தமிழ் நாட்டின் தென் பாகத்தை ஆண்டு வந்தவன். இவன் தன் நாட்டை இழந்து பகைவருக்குப் பயந்து இலங்கை நாட்டுக்கு ஓடி, அதை ஆண்டு வந்தான்; ஆதலால் 'ஈழம் புக்க இலங்கேசன்' என்று அழைக்கப்பட்டான் என்று தெரிகிறது. மகாவம்சத்தில் கூறப்படும் விக்கிரம பாண்டும், இவனும் ஒருவர் என்பர். அவன் தன் பகைவருக்குப் பயந்து இலங்கையை விட்டுத் துளுவ நாட்டில் வந்து சிலகாலம் இருந்தான் என்றும், பின் தன் தந்தை மகாலானசித்தி என்பவன் இறந்த செய்தி கேட்டு மீண்டும் இலங்கை புக்கு, தந்தை ஆண்ட உரோகண நாட்டை ஆண்டு வந்தானென்றும் மகாவம்சம் கூறும். [27] 'விலங்கேசுரநாகிய' என்றும் பாடம்.

இதனுல் இக்காலத்தில் பாண்டிய கேரள மன்னர்களும், இலங்கையரசர்களும் தங்களுக்குள் மணவினை செய்துகொண்டு உறவு பெற்றிருந்தனர் என்றும், அவர்கள் தங்கள் மூவருக்கும் பொதுவான எதிரியாயிருந்த சோழர்களை வெல்லப் பெரிதும் முயன்றனர் என்றும் தெரிகிறது. காண்டகு – காணத் தக்கதாக, வெளிப்படையாக.

தன் கன்னகுச்சியினும் – தன்னுட்சிக் குட்பட்ட கன்யாகுப்ஜம் என்னும் நாட்டை விட. [28]'தன்னதாகிய', [29]'கன்னக்குச்சியினும்' என்றும் பாடம். ஆர்கலி – கடல்; ஈழம் – ஈழ நாடு; சீரிதென்று – சிறப்புடையதென்று.

உளங்கொளந்நாடு – உள்ளத்தைக் கொள்ளை கொண்ட அந்த இலங்கை நாடு; [30] 'உளங்கொ டன்னுடு' என்றும் பாடம். தன் உறவொடும் – தன் இனத்தவரோடும்; [31] 'உறவோடும்' என்றும் பாடம்.

விளங்கு முடி கவித்த வீரசலாமேகன்: இவன் கன்யாகுப்ஜத்தினின்றும் இலங்கைக்குச் சென்று, அதைப் பிடித்து ஆண்டவன்; இலங்கையரசனுகிய விக்கிரமபாண்டு என்பவன் இவனேடு பொருது இவனுல் தலை துணிக்கப்பட்டான். மகாவமிசத்தில் ஜகதீபாலன் என்று கூறப்படுபவன் இவனே என்பர். இவன் போரில் முதலாம் இராசாதிராசனுக்குப் பயந்து, தன் யானையினின்றும் இழிந்து பலர் பழிக்கப் புறங்காட்டி ஓடினனென்றும், சோழர்கள் இவன் தேவி, தமக்கை இருவரையும் சிறைப்படுத்தி, தாயை மூக்கரிந்து அவமானப் படுத்தினர் என்றும், அவ்வவமானம் தாங்கமாட்டாத இவன், மீண்டும் வந்து வாட் போர் செய்து

பொ(5) ர்க்களத்[32] தஞ்சித்தன் கார்க்களி றிழிந்து
கவ்வையுற் றேடக்[33] காதலி யொடுந்தன்
றவ்வையைப் பிடித்து[34] தாயைமுக் கரிய
ஆங்கவ மானம் நீங்குதற் காக
மீட்டும்[35] வந்து வாட்டொழில்[36] புரிந்து
வெங்களத்து லந்த[37]வச் சிங்கலத் தரசன்[38]
பொன்னணி முடியும் கன்னரன் வழிவந்
துரைகொ ளீழத் தரசனு கிய[39]சீ
வல்லவ மதன ராசன்[40] மெல்லொளித்
தடமணி முடியுங் கொண்டு வடபுலத்
திருகா லாவதும் பொருபடை நடாத்திக்[41]
கண்டரன்[42] தினகரன் நாரணன் கணவதி

போர்க்களத்தே மாண்டான் என்றும் தெரிகிறது [32] 'பொருகளத்' என்றும் பாடம்.

5. கார்க்களிறு – கரிய யானை; கவ்வை - பழிச்சொல்; [33] கவ்வை யிறனடி' என்றும் பாடம். காதலி – தேவி; தவ்வை – தமக்கை; [34]'பிடித்துத்' என்றும் பாடம். அவமானம் – இழிவு.

வாட்டொழில் புரிந்து – வாட்போர் செய்து. [35] 'மீண்டும்' [36]'விட்டெழுழில்' என்றும் பாடம்.

வெங்களத் துலந்தவர் சிங்களத் தரசன்: போர்க்களத்தே மடிந்த சிங்களத் தரசனாக வீரசலாமேகன் என்பது. [37] 'உலர்ந்த' [38] 'சிங்களத் தரைசன்' என்றும் பாடம்.

கன்னரன் வழிவந்து: கிருஷ்ணன் வம்சத்தில் தோன்றி என்பது; கன்னரன் – கன்னரதேவன், கிருஷ்ணன்.

உரைகொள் – புகழ் பெற்ற; 'உறைகொள்' என்று பாடமோதின், 'தங்கிய' என்று பொருள் கொள்க. ஈழத் தரசனுகிய சீவல்லவ மதன ராசன்: இவன் கன்னரன் வழிவந்து ஈழத்திருந்து ஆட்சி புரிந்தவன்; சிவல்லவ மதனராசன் என்பது இவனது இயற்பெயர். முதலாம் இராசாதிராசன் ஆட்சியில், இலங்கையர் கோமானுகிய முதலாம் விக்கிரமபாகு, இலங்கேசனுகிய விக்கிரமபாண்டியன், வீரசலாமேகன், ஈழத்தரசனுகிய சீவல்லவ மதனராசன் ஆகிய இலங்கை மன்னர் நால்வர் முடிகளும் கொள்ளப்பட்டன என்று தெரிகிறது.

வடபுலம் – வடநாடு; அஃதாவது, மேலைச் சாளுக்கிய நாடும், அதனைச் சார்ந்தனவு மாகும்.

இருகா லாவதும் – இரண்டாவது தடவையும்; பொருபடை – போர் செய்யும் படை; [41] 'நடாத்தி' என்றும் பாடம்.

6. கண்டரன்.........றெனைப் பல வரைசரை: கண்டரன் முதலியோர் வடபுலத்தின் பகுதிகளை யாண்ட சிற்றரசர்கள். வண்டலர் தெரி

(6)வண்டலர் தெரியன் மதுசூ தனனென்[43]
றெனைப்பல வரைசரை [44]முனைவயிற் றுரத்தி[45]
வம்பலர் தருபொழிற் கம்பிலி நகருட்
சளுக்கியர் மாளிகை தகர்ப்பித் திளக்கமில்[46]
வில்லவர் மீனவர் வேள்குலச் சளுக்கியர்[47]
வல்லவர் கௌசலர் வங்கணர் கொங்கணர்
சிந்துர ரையணர் சிங்களர் பங்களர்
அந்திரர் முதலிய வரைசரிடு திறைகளும்
ஆறிலொன் றவனியுட் கூறுகொள் பொருள்களும்
உகந்து[48] நான் மறையவர் முகந்துகொளக் கொடுத்து[49]

யல் – வண்டுகள் மொய்க்கப் பெற்ற மலர் மாலை. முனைவயின் – போர்க்களத்து;[42] ' கண்டர் '[43] ' வண்டலர் தெரியல் மதிசூதன றெனைப்'[44] ' அரையரை,[45] ' பிடித்து ' என்றும் பாடம்.

வம்பலர் தருபொழில் கம்பிலி நகர்: புதிய மலர்களைத் தருகின்ற சோலைகள் நிறைந்த கம்பிலி நகர் என்பது. இது பல்லாரிச் சில்லா, ஹொஸ்பெட் தாலூகாவிலுள்ளது. இப்பொழுது இதனைக் ' கம்பிலித் தோட்டம் ' என்பர். இதில் சாளுக்கியர் மாளிகை யொன்றிருந்தது.

தகர்ப்பித்து – அழித்து; இளக்கமில் – இரக்கமில்லாத; பணியாத எனினுமாம்[46] ' தகப்பித்திளக தமில் ' என்றும் பாடம்.

வில்லவர் – சேரர்; மீனவர் – பாண்டியர்; வேள்குலச் சளுக்கியர் – கங்கர் குலத்துச் சாளுக்கியர்;[47] ' வேளகுலர் சளுக்கியர் ' என்றும் பாடம். வல்லவர் – பல்லவர் குலத்துச் சாளுக்கியர்; கொசலர் – கோசல நாட்டவர்; வங்கணர் – வங்காளத்தவர்; கொங்கணர் – கொங்கு நாட்டவர்; கன்னர தேசத்தவர் என்பாரு முளர்; சிந்துரர் - சிந்து நாட்டவர்; சிங்களர் - சிங்கள நாட்டவர்; பங்களர் - பங்காள தேசத்தவர்.

அந்திரர் - ஆந்திரர்; அரைசரிடு திறைகளும் - சேரர் முதலிய அரசர்கள் தரும் திறைப்பணங்களும் என்பது. இதனால் முதலாம் இராசாதிராசன் ஆட்சியின் கீழ் சேரர், பாண்டியர், வேள்குலச் சாளுக்கியர், வல்லவர், கோசலர், வங்கணர், கொங்கணர், சிந்துரர், சிங்களர், பங்களர், ஆந்திரர் முதலியோர் சிற்றரசராயிருந்து திறை செலுத்தினர் என்று தெரிகிறது.

ஆறிலொன்றவனியுட் கூறுகொள் பொருள்களும்: முதலாம் இராசாதிராசன் தன் குடிகளிடத்து ஆறிலொரு கடமை கொண்டான் என்பது இதனால் போதரும். அவனி – இராச்சியம்; கூறுகொள் - பங்காகக் கொண்ட.

உகந்து–பெற்றுக்கொண்ட; [48]'முகந்து' என்றும் பாடம் கொள்வர். முகந்துகொள – பெற; [49]'குடுத்து' என்றும் பாடம். விசுவலோகம்–தேவ

விசுவலோ கத்தும் விள(7)ங்கமனு நெறிநின்
றசுவமே தஞ்செய்[51] தரைசுவீற் றிருந்த
சயங்கொண்ட சோழ னுயர்ந்த பெரும்புகழ்க்[52]
கோவிரா சகேசரி வர்ம ரான[52]
உடையார் ஸ்ரீராசாதிராச தேவர்க்கு யாண்டு –

உ௰௬ ஆவது ஜயங்கொண்ட சோழமண்டலத்து செங் காட்டுக் கோட்டத்து மாகணூர் நாட்டு மணிமங்கலமான ராஜசூளாமணிச் சதுர்வ்வெதி மங்கலத்து மஹா ஸபையோம்

லோகம்; எல்லா உலகும் என்பாருமுளர் [50]'விஸ்வலோகத்து' என்றும் பாடம். விளங்க – புகழுண்டாக.

7. மனுநெறி நின்று - மனுவென்னு மரசன் வகுத்த வழியே நின்று; அசுவமேதம் செய்து-அசுவமேதம் என்னும் யாகத்தைச் செய்து; அசுவமேதம் என்பது, உத்தமமான ஒரு குதிரையின் நெற்றியில் அரச னது வீரம் முதலியவைகளை வரைந்த பட்டத்தைக் கட்டி, அதைப் பூமி பிரதட்சணம் செய்வித்து, பின் யாக கிரியை செய்வது. இங்கு அசுவம் தெய்வமாகக் கருதப்படும். இதனல் அரசன் 'ஏகசக்கிராதிபதி' என்ற பெயர் பெறுவான். [51] 'அஸ்வமெதஞ்செய்' என்றும் பாடம்.

சயங்கொண்ட .... - ......ராச கேசரிவர்மன்: சயங்கொண்ட சோழன், இராசகேசரி வர்மன் என்பன முதலாம் இராசாதிராசனுக் குரிய சிறப்புப் பெயர்கள். [52] 'பெரும்புகழ்,' [53] 'கொவிராஜகேஸரி வர்ம ரானு' என்றும் பாடம்.

சயங்கொண்ட சோழமண்டலம் - சோழ இராச்சியத்தின் ஒன்பது மண்டலங்களில் ஒன்ருன தொண்டை நாடு

செங்காட்டுக் கொட்டத்து மாகணூர் நாட்டு: தொண்டை நாடு, சோழராட்சியின் கீழ் சயங்கொண்ட சோழமண்டலமென்று பெயர் பெற்றுப் பல கோட்டங்களாகவும், ஒவ்வொரு கோட்டமும் பல நாடுக ளாகவும் பிரிக்கப்பட்டிருந்தது. மாகணூர் நாடு, செங்காட்டுக் கோட்டத் தைச் சேர்ந்தது

மணிமங்கலம்: இதன் மற்றொரு பெயர் 'இராச சூளாமணிச் சதுர் வேதி மங்கலம்' என்பது. மகாசபையோம்-ஊர்ச் சபையினராகிய யாம். இவ்வாறு ஊர்ச் சபையினர் செய்தி 3, 4, 7 ஆம் சாசனங்களிலும் வந்திருத்தல் காண்க.

ப்ரஹ்ம ஸ்தானம் - வேதம் கற்பிக்கும் இடம்; எனவே, அக் காலத் தில் மாணவர் கல்வி கற்குமிடத்திலும் ஊர்ச் சபைகூடும் வழக்கமிருந்த தென்று தெரிகிறது. இதற்குப் 'பஞ்சாயத்துக் கூடும் இடம்' என்று பொருள் கூறுவாருமுளர்.

எம்மூர் ப்ரஹம ஸ்தானத்தே தனுநாயற்று பூர்வ்வபக்ஷத்து த்விதியையும் புதன்கிழமையும் பெற்ற திரு

8. வொணத்தி நாள்க் கூட்டக் குறைவறக் கூடி யிருந்து பணிப்பணியால் பணித்த இவ்வூர் ஸ்ரீமத் த்வாரா பதியான ஸ்ரீகாமக் கோடி விண்ணகர் ஆழ்வார்க்கு திருவ முதுக்கும் அர்ச்சனு போகத்துக்கும் இத் தேவர் பண்டார த்தே நூறுகாசு பொலிசைக்கு கொண்டு, இக்காசு நூற்ற் லும் வந்த பொலிசைக்கு இறைகரத்தூட்டாக இறையிழிச் சிக் குடுத்த நிலமாவது பெருநல்வதிக்கு வடக்கு பாதிரிக் கழனி மெ

தனு நாயறு– *தனுர் மாதம், மார்கழி மாதம்* (Month of Markali: Decemper—January). *இங்கு 'ஞாயிறு' என்பதற்கு 'மாதம்' என்ற பொருள் வந்திருத்தல் நோக்கத் தக்கது* பூர்வபக்ஷம் - *வளர்பிறை காலம்;* த்விதியை - *இரண்டாவது திதி.*

8. திருவோணம்: *இருபத்திரண்டாவது நாள்;* கூட்டக் குறைவறக் கூடி யிருந்து - *சபை கூட்ட எல்லாரும் கூடியிருந்து;* பணிப் பணியால் பணித்த - *முறையாய்த் திருத்தொண்டு செய்யப் பெற்ற.*

ஸ்ரீமந்: *ஸ்ரீமதி என்பதன் ஆண்பாற் பெயர்; இஃது இறைவன் பெயருக்கும், இறைவனருள் பெற்றோர் பெயருக்கும் முன் வழங்கும் ஒரு மரியாதைச் சொல்.* த்வாராபதி: *துவாரகைக்கு அதிபதி;* கிருஷ்ணன் *என்பது.*

ஸ்ரீ காமக்கொடி விண்ணகர் ஆழ்வார்: *இது மணிமங்கலத்து கோயில் திருமாலின் பெயர்.* திருவமுது - *நிவேதன வுணவு* (Boiled rice offered to an idol or great person). அர்ச்சனுபோகம்-*கோயில் அர்ச்சகர்களுக்கு விடப்படும் மானிபம்; 'அருச்சனைப் பொருள்' என் பாருமுளர்.*

இந்தேவர் பண்டாரம் - *இக்கோயில் பணம்;* பொலிசைக்குக் கொண்டு - *வட்டிக்கு வாங்கி;* பொலிசை - *வட்டி* (Interest); இறைகரத்தூட்டாக - *நிலவரி, குடி வரிகளை அநுபவிக்கும்படியாக* (with the enjoyment of Revenue and Taxes); இறை - *நிலவரி* (Revenue); *கரம் - குடிவரி* (Taxes); இறை யிழிச்சி – *வரி நீக்கி.*

பெருநல் வதிக்கு வடக்கு: *சாசனங்களில் நிலங்களுக்கு எல்லை கூறுங்கால் பெரும்பாலும் பெரும் பாதைகளையும், வாய்க்கால்களையுமே கூறுவது வழக்கம். உதாரணமாக, பெருநல்வதிக்கு வடக்கு, சுண்டிலேரி வதிக்குக் கிழக்கு என்றும், பாதிரிக்கழனி மேலைக்காலுக்குக் கிழக்கு, நடுவிற்காலுக்கு மேற்கு, மனையறுதி வாய்க்காலுக்குக் கிழக்கு, நந்தவனத் தோட்டக்காலுக்கு மேற்கு, பாவை துறை வாய்க்காலுக்கு வடக்கு என்றும் வந்திருத்தல் காண்க. இனி, 'திருவையோத்திதேவர் நிலம் குழி இரு நூற்றைம்பதுக்குக் கிழக்கு' என்பதால் சிறுபான்மை அயலார் நிலமும் எல்லையாகக் கூறப்படும் என்று தெரிகிறது.* வதி – *வழி.*

9. லைக் காலுக்கு கிழக்கு விளைநிலங் குழி முன்னூறும், பாதிரிக் கழனி நடுவிற்காலுக்கு மேற்கு விளைநிலங் குழி இருனூறும், பெருநல்வதிக்கு தெற்கு ஆலை

10. மேட்டில் மனையறுதி வாய்க்காலுக்கு கிழக்கு விளை நிலம் குழி நானூறும், இக்காலுக்கு கிழக்கு விளைநிலம் குழி இருனூறும், தெந்த்ரிய மரத்தின் மேலைக்காலுக்கு மேற்கு நிலம் குழி முன்னூறும், சுண்டிலேரி வதிக்கு கிழக்கு விளை நில

11. ம் குழி நானூறும், பாவை துறை வாய்க்காலுக்கு வடக்கு திருவையோத்தி தேவர் நிலங்குழி இருனூற்றைம் பதுக்கு கிழக்கு தடி யிரண்டிநால் குழி இருனூறும் ஆகத் தேவர் நிலங் குழி இரண்டாயிரத் திருனூறும் இரைகரத் தூட்டாக சந்த்ரா.

12. தித்தவர் நிற்பதாகத் திருவமுதுக்கும் அச்சநாபோ கத்துக்கும் இறையிழிச்சி சிலாலேகை செய்து குடுத்தோம்.

---

9. குழி: இது ஒரு நீட்டளவை; தென்னாட்டில் 33 அங்குல நீள அகலமுள்ள இடத்தை ஒரு 'குழி' என்பர்.

பாதிரிக் கழனி — பாதிரி மரத்தினையுடைய வயல்; கழனி — வயல்; மேலைக்கால்—மேலைப் பக்கத்துக் கால்; கால் - வாய்க்கால்; நடுவிற்கால் — நடுவிடத்து வாய்க்கால்.

10. ஆலைமேடு; கருப்பஞ்சாறு எடுக்கும் ஆலையுள்ள மேட்டு நிலம் போலும். நந்தவனம் - பூந்தோட்டம்; தோட்டக்கால் - கிணற்றுப் பாய்ச்சலுள்ள கொல்லை நிலம்; தெந்த்ரிய மரம் — தெந்திமரம், நேர் வாளம்; சுண்டிலேரி வதி: சுண்டிலேரிக்குச் செல்லும் வழி என்பது; சுண்டில் — தொட்டால் வாடி என்னும் ஒரு பூண்டு வகை; அப்பூண்டு அங்கு அதிகம் வளருதல் காரணமாக அவ்வேரி அப்பெயர் பெற்றது போலும். ஏரி - குளம்.

11. பாவை துறை வாய்க்கால்: பாவை — பதுமை; துறை - நீர்த் துறை; அத்துறையில் சிறு கோயில் ஒன்று இருந்ததென்று கொள்ள வேண்டும். திருவையோத்தி தேவர்: இவருக்கு மணிமங்கலத்தில் 2200 குழி நிலம் இருந்ததென்று கூறப்படுகிறது.

தடி இரண்டிநரல் — வயல் இரண்டாக; தடி - வயல். இச் சொல் இப்பொழுது 'தளை' என்று வழங்குவதாகக் கூறுவர். 'தடி இரண்டிநால் குழி இருனூறு' என்பது, வயல் இரண்டாகக் குழி இருநூறாக, நானூறுகுழி நிலமும் என்க. எனவே, குழி இரண்டாயிரத்து இருநூறு என்று கணக்கு வருதல் காண்க.

ஆகத் தேவர் நிலம் குழி இரண்டாயிரத் திருநூறும்:— ஆகக் கோயில் நிலம் 2200 குழியும் என்பது. தேவர் நிலம் - கோயில் நிலம்.

12. சந்திராதித்தவர் நிற்பதாக - சந்திர சூரியர் உள்ள காலமளவும் நடைபெறுவதாக; சிலாலேகை செய்து - கல்லில் எழுதி; சிலை - கல்; இலேகை — எழுத்து. குடுத்தோம் — (மணிமங்கலம் மகா சபையோம்) கொடுத்தோம் என்பது.

பயிற்சி வினுக்கள்

(1) இராசாதிராசன் காலத்திய மணிமங்கலம் சபையோர் சாசனத்தில் கூறப்படும் செய்தி யாது? (2) 'திங்களேர் நருதன் றெுங்கல் வெண்குடை' என்று தொடங்கும் மெய்க்கீர்த்தி யாருடையது? அவ்வரசரைப் பற்றிக் குறிப்பு வரைக. (3) தன்னுறவினர்கட்குப் பல நாடுகளை வழங்கியவராய்க் குறிக்கப் பெற்ற அரசர்கள் யாவர்? வழங்கிய தன் கருத்து என்ன? (4) இராசாதிராசனுல் தோல்வியுற்ற பாண்டிய மன்னர் யாவர்? அவர் எத்தகைய சிறப்பினர்? (5) "மேவுபுகழி ராமகுட மூவர்கெட முனிந்து" — இத்தொடரின் பொருள்களை ஆராய்க. (6) இராசாதிராசன் மலைநாட்டுப் போர், இலங்கைப் போர் - இவற்றை விளக்குக. (7) இராசாதிராசனுல் வீரசலாமேகன், சுந்தரபாண்டியன், வேணுட்டரசர், சாளுக்கியர் ஆகிய இவர்களுக்கு நேர்ந்தவை என்ன? (8) இராசாதிராசன் கம்பிலியில் செய்த வீரச் செயல்கள் யாவை? (9) அக்காலத்து நில வருவாயுள் எத்தனையில் ஒரு பங்கு வரியாக வாங்கப்பட்டதென்று எத்தொடரால் அறியப்படுகின்றது? (10) "கிட்டருஞ் செறிமிளை யொட்ட விஜையமும்", "கங்க நிலங்கையற் கிறைவன்" - இவற்றிலுள்ள பிழைகளைத் திருத்திப் பொருள் எழுதுக. (11) அசுவமேதம் நடாத்திய சோழன் யாவன்? அவன் எவ்வகைப் பொருள் கொண்டு எவர் முகந்து கொளக் கொடுத்தான்? (12) தொண்டை நாட்டிற்குச் சாசனங்களில் வழங்கும் பெயர் யாது? (13) மணிமங்கலத்திற்கு மற்ருெரு பெயர் யாது? (14) சாசனங்களால் தெரிய வந்த சபையாரியல்புகளையும் செயல்களையும் பற்றி எழுதுக (15) தெளிவாகக் காலம் குறிக்கப்பட்ட சாசனங்கள் எவை? அக்காலத் தரசர் யாவர்? (16) சாசனங்களில் காலத்தை எங்ஙெங்த முறையில் தெரிவித்திருக்கிறுர்கள்? (17) மார்கழி மாதம் என்பதற்குச் சாசனங்கள் கூறும் பெயர் யாது? அது பழைய தமிழ் வழக்கோடு எங்ஙனம் வேறுபடுகின்றது? (18) மணிமங்கலத்தில் எழுந்தருளிய திருமாலுக்கு அக்காலத்தில் பெயரென்ன? (19) ஸ்ரீ காமக்கோடி விண்ணகராழ்வார் எவ்விடத்திலுள்ள மூர்த்தியின் பெயர்? அவருக்கு நிலம் தானம் செய்யப் பெற்ற தமிழ் ஆண்டையும் அதற்குரிய ஆங்கில ஆண்டையும் குறித்திடுக. (20) தேவர் பண்டாரத்திலிருந்து கடன் வாஙகும் வழக்கத்தை எவ்வாறு அறியலாம்? (21) 'நூறு காசு பொலிசைக்குக் கொண்டு' - இத் தொடர்மொழியின் பொருள் யாது? இஃது எதற்காகக் கூறப்பட்டுள்ளது? (22) கல்லெழுத்து என்பதற்குச் சாசனங்களில் வழங்கும் பெயர் யாது? (23) பொருள் தருக:– விச்சாதிரத் தோரணம், சமரபீரு, பொலியூட்டு, வதி, கன்னக்குச்சியர், பொலிசை, இறையிழிச்சி (24) குறிப்பு வரைக:– ப்ரஹ்ம ஸ்தான மண்டபம், விளங்கு முடிகவித்த வீரசலா மேகன், கம்பிலி, இராமகுட மூவர்.

16. அமண்பாக்கம் சாசனம் *

அமண்பாக்கம் என்பது ஓர் ஊர். அவ்வூரிலுள்ள சில நிலங்களை மணிமங்கலம் ஸ்ரீ காமக்கோடி விண்ணகராழ்வார்க்குத் தானமாகக் கொடுத்த செய்தி பற்றிய சாசனம் 'அமண்பாக்கம் சாசனம்' என்று பெயர் பெற்றது. இச்சாசனம் பரகேசரிவர்மன் என்னும் சிறப்புப் பெயரையுடைய இரண்டாம் இராசேந்திர சோழன் † காலத்தில், அவன் ஆட்சியின் நான்காம் ஆண்டில் ஏற்பட்டது. அதனால் இது 'இராஜேந்திர சோழன் சாசனம்' என்றும் வழங்கும். இது செங்கல்பட்டு மாவட்டம், காஞ்சீபுரம் தாலூகாவிலுள்ள மணிமங்கலம் என்னும் ஊர் இராசகோபாலப்பெருமாள் கோயில் உட்பிரகாரத்துக் கிழக்குச் சுவரின் வெளிப் பக்கத்தில் காணப்படுகிறது; தமிழ்மொழியில் கிரந்த எழுத்துக்கள் கலந்து எழுதப்பட்டது. இருபத்து நான்கு பத்திகளையுடையது.

இச்சாசனத்தின் முற்பகுதியில் இரண்டாம் இராசேந்திர சோழனுடைய கொப்பத்துப் போரைப் பற்றிக் கூறும் அவனது மெய்க் கீர்த்தி அமைந்துள்ளது. அஃதாவது, இரண்டாம் இராசேந்திர சோழன் இரட்ட மண்டலத்தின் மீது படை எடுக்க, அதை ஆண்டு வந்த மேலைச் சாளுக்கிய மன்னனான முதலாம் சோமேசுவரன் என்னும் பெயரையுடைய ஆகவமல்லன் அவனைக் கொப்பம் என்னும் இடத்தில் எதிர்த்துத் தோல்வி யுற்றான்; அப்போரில் அவனுடைய படைத் தலைவர்கள் பலர் இறந்தனர் என்ற செய்தி இதில் கூறப்படுகிறது. சாசனத்தின் பிற்பகுதியில், இரண்டாம் இராசேந்திர சோழன் ஆட்சியின் நான்காவது

---

* S. I. I., Vol. III, Part I, No. 29, pp. 58—64

† **இராசேந்திர சோழன்:** இவன் முதலாம் இராசேந்திரசோழதேவனுக்கு மகன்; முதலாம் இராசாதிராசதேவனுக்குத் தம்பி. முதலாம் இராசாதிராசன் ஆட்சி காலத்தில் இவன் இளவரசனாக இருந்தான். அவன் கொப்பத்துப் போரில் இறந்ததும், இவன் சோழ நாட்டிற்கு அரசனானான். இவனை **இரண்டாம் இராசேந்திர சோழன்** என்றும், **விஜயராசேந்திரன்** என்றும் கூறுவர். இவன் மேலைச் சாளுக்கியரோடு கொப்பத்தில் நடத்திய போரும், இலங்கையில் நடத்திய போரும் குறிப்பிடத் தக்கனவாகும். இவன் கி. பி. 1051 ஆம் ஆண்டு முதல் 1063 வரை சோழநாட்டை ஆண்டான்.

ஆண்டு எண்பத்திரண்டாவது நாள் இராசசூளாமணிச் சதுர் வேதி மங்கலம் என்னும் மணிமங்கலத்து மகா சபையினர் அமண் பாக்கம் என்னும் கிராமத்திலுள்ள சில நிலங்களை மணிமங்கலம் ஊர்க் கோவிலுக்குத் தானமாகக் கொடுத்த செய்தி காணப்படு கிறது.

இரண்டாம் இராசேந்திர சோழன் கி. பி. 1051 முதல் 1063ஆம் ஆண்டு வரை சோழநாட்டை ஆண்டான். இச்சா சனம் அவனது ஆட்சியின் நான்காவது ஆண்டு ஏற்பட்ட தெனவே, இதன் காலம் கி. பி. 1054 ஆம் ஆண்டு என்னலாம்.

சாசனம்

(1)ஸ்வஸ்திஸ்ரீ
திருமாது புவியெனும் பெருமாத ரிவர்தன்[1]
மாதே வியர்க ளாக மீதொளிர்[2]
வெண்குடை யுயர்த்துத்[3] திண்கலி பெயர்த்துத்[4] தன்
சிறிய தாதை யாகிய யெறிவலி[5]
கங்கை கொண்ட சோழனைப் பொங்கிதல்[6]
இருமுடிச் சோழ[7] னென்றும் பொருமுரட்
டன்றிரு(2)த் தம்பியர் தம்முள் வென்றிகொள்

ஸ்வஸ்தி ஸ்ரீ: இது சாசனங்களின் தொடக்கத்தில் மங்கலமாக வரும் வடமொழித் தொடர்.

1 **திருமாது புவியெனும் பெருமாதர்:** இது இரண்டாம் இராசேந் திர சோழன் மெய்க்கீர்த்தியின் தொடக்கமாக வரும் தொடர்; இவ னுடைய மற்றொரு சாசனம் 'திருமகள் மருவிய' என்று தொடங்குகிறது. திருமாது - இலக்குமி; புவியெனும் பெருமாது - பூதேவி.

இவர்தன் மாதேவியர்களாக: திருமாது பூமாது ஆகிய இவர்கள் தனக்கு மாதேவியர்களா யிருக்க என்பது. [1]'இவர் தந்' என்றும் பாடம். **மீதொளிர் வெண்குடை யுயர்த்து** – மேலெழுந்து பிரகாசிக்கின்ற வெண் கொற்றக் குடையைத் தாங்கி என்பது. மீது – மேல்; [2] 'மிதொளி', [3] 'யுயர்ந்து' என்றும் பாடம். **திண்கலி பெயர்த்து**–கொடிய துன்பத்தை நீக்கி; கலி – துன்பம். [4] 'பெயர்ந்து' என்றும் பாடம்

தாதை - தந்தை; **எறிவலி** - பகைவர்களை எறிதலில் வலிமை மிக்க எறிதல் = கொல்லுதல்; [5] 'வெறுழ் வலிக்' என்றும் பாடம். **கங்கை கொண்ட சோழன்:** இவன் இரண்டாம் இராசேந்திர தேவனுக்குச் சிறிய தந்தை: அவனல் '**இருமடிச் சோழன்**' என்று பெயர் பெற்றவன். **பொங்கிதல்** – பொங்கு இகல், வீரஞ்செறிந்த. [6] 'பொங்கிகல்', [7] 'இரு மடி சோழநென்றும்' என்றும் பாடம

2 **பொருமுரட் டன்றிருத் தம்பியர்:** மும்முடிச்சோழன்; வீர சோழன், மதுராந்தகன், பராந்தகதேவன் என்பவர்கள்; இவர்கள் இரண்டாம் இராசேந்திர தேவன் தம்பியர் ஆவர். இவர்களுக்கு அவன்

மும்முடிச்[8] சோழனைத் தெம்முனை யடுதிறற்
சோழ பாண்டிய னென்றுங்[9] கோழிமன்
ஞெடுகழல் வீர சோழனைப் படிபுகழ்[10]
கரிகால சோழ னென்றும்[11] பொருதொழில்
வாள்வலித் தடக்கை மதுராந் தகனைச்[12]
(3)சோழ கங்க னென்றுங்[13] தோள்வலி
மேவிகல் பராந்தக தேவனைச் சோழ[14]
வயோத்திய ராச னென்றும்[15]
இருதயத்[16] தன்பொடு கருது காதலருள்
இத்த லம்புக ழிராசேந்திர[17] சோழனை
உத்தம சோழ னென்றுங்[18] தொத்தணி
முகையவி ழலங்கன் முடிகொ(4)ண்ட சோழனை

முறையே சோழபாண்டியன், கரிகால சோழன், சோழகங்கன், சோழ வயோத்தியராசன் என்று பெயரிட்டு, அங்கங்கே தனக்குப் பிரதிநிதிகளாக நியமித்தான். பொருமுரண் – பொருவதில் வலிமையுடைய; திரு-அழகு; [8] ‘ மும்மடி ’ என்றும் பாடம். வென்றி – வெற்றி.

தெம்முனை – பகைவர் போர்முனை; அடுதிறல் – அடுதலில் திறமை மிக்க; அடுதல் – அழித்தல்; [9] ‘ சோழபாண்டியநென்றும் ’ என்றும் பாடம் கோழிமன்ஞெடுகழல் – கோழியூரில் நிலைபெற்ற வீரக் கழலணிந்த என்பது. கோழி – உறையூர்; மன்னுதல் – வாசம் செய்தல்: [10] ‘ படிபுகழ்க் ’ [11] ‘ கரிகால சோழநென்றும் ’ என்றும் பாடம்.

பொரு தொழில் வாள்வலித் தடக்கை- பொருகின்ற தொழிலில் வாள் வலிமை மிக்க பெரிய கையினையுடைய என்பது. பொருதல்-போர் செய்தல்; [12] ‘மதுரந்தகனை’ என்றும் பாடம்.

3. தோள்வலி மேவிகல் – தோள் வலிமை பொருந்திய. [13] ‘சொழ’ [15] ‘வயோத்தியராஜநென்றும்’ என்றும் பாடம்

இருதயத் தன்பொடு கருது காதலர்: மனத்தில் விரும்பி துணை செய்யும் மக்கள் என்பது காதலர் - மக்கள்; அவர்கள் இராசேந்திர சோழன், முடிகொண்ட சோழன், சோழகேரளன், கடாரங்கொண்ட சோழன், பல்புகழ் முடிகொண்ட சோழன், இரட்டபாடி கொண்ட சோழன் என்பவர்களாவர். இரண்டாம் இராசேந்திரன் அவர்களுக்கு உத்தம சோழன், விசயாலயன், சோழகேரளன், சோழ சனகராஜன், சுந்தரசோழன், சோழகன்னகுச்சியராசன் என்று பெயரிட்டு உத்தியோகத்திலமர்த்தினன். [16] ‘துயரத்’ என்றும் பாடம். தலம் – பூமி; [17] ‘புகழ் இராஜேந்திர ’, [18] ‘ சோழநென்றும் ’ என்றும் பாடம்.

4. தொத்தணி முகையவி ழலங்கல் – தொன்று தொட்டு அணியும் முகையவிழ்ந்த மாலை என்பது. முகை – மொட்டு; அலங்கல் – மாலை;

இகல்விச யாலய னென்றும்[19] புகர்முகத்
தேழுயர் களிற்றுச் சோழ[20]கே ரளனை
வார்சிலைச் சோழ[21] கேரள னென்றும்
திண்டிறற் கடாரங் கொண்ட சோழனைத்
தினகரன் குலத்து சிறப்பமர் சோழ[22]
சனக ராச னென்றுங்[23] கனைகடற்
படி(5)கொண்ட பல்புகழ்[24] முடிகொண்ட சோழனைத்
சுந்தர சோழ னென்றுஞ்[25] செந்தமிழ்ப்
பிடிக்களிற்[26] றிரட்ட பாடி கொண்ட
சோழனைத்[27] தொல்புவி யாளுடைச் சோழ
கன்னகுச் சியராச னென்னும்[28] பின்னுந்தன்
காதலார்[29] காதலர் தம்முள் மேதகு
கதிராங் கனைகழ (6)ல் மதுராந் தகனை
வெல்படைச் சோழ வல்லப னென்றும்[30]
மானச்[31] சிலைக்கையோ ரானைச்சே வகனை[32]

இகல் – வலிமை; [19] ' விஜயாலயநென்றும் ' என்றும் பாடம். புகர்முகத் தேழுயர் களிற்று – புள்ளிகள் பொருந்திய முகத்தினையுடைய எழு பெரிய களிறுகளைக் கொண்ட; புகர் – புள்ளி; ' ஏழுயர் களிறு ' என்பதற்கு எழு முழம் உயர்ந்திருக்கும் களிறு என்பாரு முளர். வார் சிலை – நீண்ட வில்; [20], [21] ' சோள ' என்றும் பாடம்.. தினகரன் குலம் – சூரிய குலம்; தினகரன் – சூரியன்; [22] ' சோள ', [23] ' ஜனகராஜநென்றும் ', என்றும் பாடம்.

5. கனைகடல் படி – ஒலிக்கின்ற கடலால் சூழப்பட்ட உலகம் என்பது. [24] 'பலபுக்ழ்' [25] 'சோழநென்றும்' என்றும் பாடம்.

செந்தமிழ்ப் பிடி களிற்று - செந்தமிழ் நாட்டுப் பிடியினது களிற்றினையுடைய என்றபடி; பிடிகளிறு - பிடியும் களிறும் கொண்ட சேனை எனினுமாம். பிடி - பெண் யானை; களிறு - ஆண் யானை. இனி, [26] பிடிகல் எனப் பாடங்கொண்டு, 'தாங்கு கல்' (the rock of support) என்று பொருள் கொள்வாருமுளர். [27] 'சோழனே' என்றும் பாடம் காதலார் காதலர் - மக்களுடைய மக்கள்; [28] 'ராஜநென்றும்', [29] 'காதலர்' என்றும் பாடம். மேதகு - மேலான.

6. கதிராங்கனை கழல் - சூரியனையொத்தவனும் ஒலிக்கின்ற கழலினையுடைய; கதிர் - சூரியன்; ஒளி எனினுமாம். கனைத்தல்-ஒலித்தல்; வெல்படை - வெல்லும் சேனை; [30] 'வல்லபனென்றும்' என்றும் பாடம். மானச் சிலக்கை – பெரிய வில்லைத் தாங்கிய கை; [31] 'மான்' என்றும் பாடம். ஓரானைச் சேவகன் – ஒரு யானைப்பலம் பொருந்திய வீரன்;

நிருபேந்திர சோழ னென்றும்[33] பருமணிச்
சுடர்மணி[34] மகுடஞ் சூட்டிப் படிமிசை
நிகழு நாளினு ளிகல்வேட்[35] டெழுந்துசென்
றொண்டிற லிரட்ட மண் (7)டல மெய்தி
நதிகளும் நாடும் பதிகளு மனேகம்
அழித்தனன் வளவனெனு[36] மொழிப்பொருள் கேட்டு
வேகவெஞ் சளுக்கி யாகவ மல்லன்
பரிபவ மெனக்கிதன் றெரிவிழித் தெழுந்து
செப்பருந் திறத்த[37] கொப்பத் தகவையிற்
சென்றெதி (8) றேன்றமர் தொடங்கிய[38] பொழுதவன்
செஞ்சர மாரிதன் குஞ்சர முகத்தினுந்
தன்றிருத் துடையினுங்[39] குன்றுறழ்[40] புயத்தினுங்[41]
தைக்க வுங்[42] தன் னுடன்களி றேறிய
தொடுகழல் வீரர்கள் மடியவும் வகையா

---

[2] 'யொராணைச்செவகணே', [33]'சோழநென்றும்' என்றும் பாடம். பருமணிச் சுடர் – பெரிய முத்துக்கள் ஒளிவிடும். [34] 'நெடு' என்றும் பாடம். படிமிசை - உலகில் நிகழு நாளினுள் – ஆட்சி நிகழும் நாளையில்; இகல் வேட்டு–போரை விரும்பி; [35]'வெட்டெழுந்து, என்று பாடம் ஒண்டிறல்– வலிமை மிக்க; பதிகளும் – ஊர்களும்.

7. அழித்தனன் ... கேட்டு: சோழன் இரட்ட மண்டலத்தின்மீது படையெடுத்து அதை அழித்தான் என்ற செய்தியைச் சளுக்கியனுன ஆகவமல்லன் கேட்டு. வளவன் – சோழன்; [36]'வளவநென்றும்' என்று பாடம். மொழிப் பொருள் – செய்தி; வேகவெஞ் சளுக்கி – மிகக் கொடிய சாளுக்கிய மன்னன்; இங்கு ஆகவமல்லனைக் குறித்தது

பரிபவம் – இழிவு; எரிவிழித்து எழுந்து -- எரி போல் சீறி எழுந்து; எரி – நெருப்பு; செப்பரும் – செப்ப அரும், சொல்லுதற்கரிய; [37]'திரத்த' என்றும் பாடம். கொப்பத் தகவையில் – கொப்பம் என்னுமிடத்தில்; இது பேராறு என்னும் கிருஷ்ண நதியின் கரையிலுள்ளது; அக்காலத்தில் இது ஒரு விசேட தலமாகக் கருதப்பட்டது. எனவே 'செப்பருந் தீர்த்த கொப்பத்து' என்று மேற்கூறிய தொடரை அமைத்துக் கூறுவாரு முளர்.

8. எதிரேன்று – எதிரே நின்று; அமர் – போர்; [38]'துடங்கிய' என்றும் பாடம். செஞ்சரமாரி – கூரிய அம்புத் தொகுதி; சரம் – அம்பு; மாரி – மழைத் தொகுதி; குஞ்சரம் – யானை; [39]'துடையிலும்' என்றும் பாடம். குன்றுறழ் புயம் – மலையொத்த பருத்த புயம்; உறழ் – போல, உவமை யுருபு. [40]'குன்றுறள்', [41]'புயத்திலும்'; [42]'தைக்கவும்' என்றும் பாடம். வகையால் - யானை, குதிரை முதலிய படை வகையால்; அக்

லொருதனி[43] யநேகம் பொருபடை (9)வழங்கியம்
மொய்ம்பமர் சளுக்கி தம்பிசய சிங்கனும்
போர்ப்புல கேசியுந்[44] தார்த்தச பன்மனு
மானமன் னவரின்[45] மண்டலியசோ கையனும்[46]
ஆனவண் புகழா[47] மாரையனுந் திண்டிறல்
நன்னி நுளம்பனு மெனு (10)மிவர் முதலினர்[48]
எண்ணிலி யரைசரை விண்ணகத் தேற்றி
வன்னிய ரேவனும் வயப்படைத் துத்தனுங்
கொன்னவில் படைக்குண்ட மய்யனு மென்றின[49]
வெஞ்சின வரைசரோ[50] டஞ்சிச் சளுக்கி
குலகுல குலைந்து[51] தலைமயிர் விரித்து
வெந்நுற் றொளித்துப்[52] பின்னுற(11)நோக்கிக்[53]

காலத்தில் நாலுவகைப் படைகளில் தேர்ப்படை இருந்ததாகத் தெரிய வில்லை; ஏனைய மூன்று படைகளோடு, கப்பல் படையுமிருந்த தென்று தெரிகிறது; ஒருதனி – ஒப்பற்ற; [43] 'தொருதனி' என்றும் பாடம்.

9. வழங்கி – செலுத்தி; மொய்ம் பமர் – கொடிய போர்; போர்ப்புலகேசி– போரில் வல்ல புலிகேசி என்போன்; [44] 'புலக்கேசியும்' என்றும் பாடம். தார்த் தசபன்மன் – வெற்றிமாலையுடைய தசபன்மன் என்போன்; தார்–மாலை. [45]'மன்னவரில்', [46] 'மண்டலகசோகனும்' என்றும் பாடம். வண்புகழா— சிறந்த புகழினையுடைய; [47] 'புகழாளும்' என்றும் பாடம். தேனிவர் மட்டவி ழலங்கல்-தேன் சொரியும் மொட்டு கள் அவிழப் பெற்ற மாலை என்பது. இவர்தல்–நிரம்பி வடிதல்; மட்டு-மொட்டு; தேன் எனினுமாம்.

10. முதலினர் – முதலியோர். [48] 'முதலியர்', என்றும் பாடம். எண்ணிலியரைசரை: கணக்கில்லாத அரசர்களை; அதாவது, கொப்பத்துப் போரில் சயசிங்கன், புலிகேசி, தசபன்மன், மண்டலிய சோகையன், ஆரையன், மொட்டயன், நன்னிநுளம்பன் முதலிய கணக் கில்லாத அரசர் மடிந்தனர் என்பது. விண்ணகத் தேற்றி – கொன்று; வன்னியர் ஏவனும் – வன்னியர்களின் ஏவன் என்பானும்; வன்னியர் – படைத் தலைவர்.

வயப்படை – வலிய படை; வயம்–வலிமை; கொன்ன வில் படை – விசையினை யுடைய வில் படை; என்றின - என்று சொல்லப்பட்ட; அக் காலத்தில் வில்லும் அம்பும் முக்கிய ஆயுதங்களாய்க் கருதப்பட்டதாகத் தெரிகிறது. [49] 'மய்யனு மென்றினன்', [50] 'அரைசரொடு' என்றும் பாடம்.

குலகுல குலைந்து – பெருமை கெட்டு; 'குலங் குலை குலைந்து' என் பாரு முளர்; [51] 'குலங்குலை குலைந்து' என்றும் பாடம். வெந்நுற்று –

கால்பரிந் தோடி மேல்கடற் பாயத்[54]
துரத்திய பொழுதச் செருக்களத் தவன்விடு
சத்துருபயங் கரன்கர பத்திரன் மூல[55]
பத்திர சாதி பகட்டரை சநேகமும்
எட்டுநிரை[56] பரிகளு மொட்டக நிரைகளும்
வராகவெல் கொடிமுத லிரார்பரிச் சின்னமும்[57]
(12)ஒப்பில்சத்தி யவ்வைசாங் கப்பையென் றிவர்முதல்
தேவியர் குழாமும் பாவைய ரீட்டமு
மினையன[58] பிறவு முனைவயிற் கொண்டு
விசையாபி டேகம் செய்துதென் றிசைவயிற்[59]
போர்ப்படை நடாத்திக் கார்க்கட லிலங்கையில்
விறற்படை கலிங்கர்ம(13)ன் வீரசலா மேகனைக்
கட[60]களிற் றெருடுபடக்[61] கதிர்முடி கடிவித்

புறங்காட்டி; வெந் — முதுகு; [52] 'வெனுற நெளித்துப்' என்றும் பாடம். பின்னுற நோக்கி - பின் பக்கம் பார்த்து; [53] 'நோக்கி' என்றும் பாடம்.

11. கால் பரிந்து-காலால் விரைந்து நடந்து; மேல் கடல் -மேலைக் கடற்கரை; [54] 'பாய' என்றும் பாடம். செருக்களம் — போர்க்களம். பகட்டரைசநேகமும்—அரச யானைகள் பலவும்; அவை சத்துரு பயங்கரன், கரபத்திரன்,மூலபத்திர சாதி என்பன. ஆகவமல்லன் அவைகளைப் போர்க் களத்தே விட்டுப் புறங்காட்டி ஓடினன். [55] 'கரபத்திரமூல' என்றும் பாடம். எட்டு நிரை — எட்டு வரிசை; எட்டு நடை என்பாரு முளர். பரி — குதிரை; [56] 'எட்டுநடை' என்றும் பாடம். ஒட்டக நிரைகளும் — ஒட்டக வரிசைகளும்.

வராக வெல்கொடி முதல் — பன்றிக்கொடி முதலிய; வராகம் — பன்றி; இராசபரிச் சின்னம் — அரச சின்னங்கள். [57] 'ராஜபரிச்சந்தமும்' என்றும் பாடம்.

12. ஒப்பில் — விலை மதிப்பற்ற; சத்தியவ்வை, சாங்கப்பை: இவர்கள் அரசன் மாதேவியராவர். இவர் முதல் — இவர்கள் முதலிய தேவியர்; குழாமும் — அரசமாதர்களும்; பாவையர் ஈட்டமும் — உயர்குலப் பெண்களும், காமக் கிழத்தியர் கூட்டமும்; இனையன பிறவும் — இவை போல்வன பிறவும்; [58] 'மெனையன' என்றும் பாடம். விசையாபிடேகம் செய்து — வெற்றிப்பட்டம் கட்டி; வயின் — இடம். [59] 'விஜய அபிஷேகம் செய்து தெந்றிசை வயிர்ப்' என்றும் பாடம். கார்க்கடல் — கரிய கடல்.

13. விறற்படைக் கலிங்கர்மன் வீரசலா மேகன்: வீரசலாமேகனிடம் கலிங்கர்படை ஒன்றிருந்தமையின் அவன் இவ்வாறு அழைக்கப்பட்டான் போலும். மன்—தலைவன்; கடகளிறு—மதயானை; [60] 'கடற்' என்றும் பாடம். பட — அழிய; [61] 'ரெருடு மகப்பட' என்றும் பாடம். கதிர்முடி

திலங்கையர்க் கிறைவன் மாறு பரணன்[62]
காதல ரிருவரைக் களத்திடைப் பிடித்து
மாப்பெரும்புகழ் மிகவளர்த்த கோப்பரகேசரிவர்மரான[63]
உடையார் ஸ்ரீ ராசேந்திர தேவர்க்கு யாண்டு நாலாவ

14. து நாள் ௨௱௨ ஐயங்கொண்ட சொழ மண்டலத்து செங்காட்டுக் கொட்டத்துமாகணூர் நாட்டு ராஜசூளாமணிச் சதுருப்பெதி மங்கலத்து மஹா சபையொம் இவ்வாட்டை ஸிம்ஹ நாயற்று அபர பக்ஷத்து அஷ்டமியும் வியாழக்கிழமையும்

15. பெற்ற ரோஜணி நாள் எம்மூர் ப்ரஹ்ம ஸ்நாத மண்டபத்தெ கூட்டக் குறைவறக் கூடியிருந்து எங்களூர் ஸ்ரீமத் த்வாராபதியான ஸ்ரீ காமக்கோடி விண்ணகராழ்வார்க்கு குடுத்த நிலமாவது எங்களூர் தென்பிடாகை அமண் பாக்கத்து நில

கடிவித்து – முடியிழக்கச் செய்து. மாறுபரணன் காதலர் — மாறுபரணன் மக்கள்; இவன் இலங்கை மன்னன். [62] ‘ நிலங்கையற் கிறைவன் மாநாபரணந்’ என்றும் பாடம். களம் – போர்க்களம்.

பரகேசரி வர்மர்: இது இரண்டாம் இராஜேந்திரனுக்குரிய பட்டப் பெயர்; இம் முறையில் முதலாம் இராசராசன் ‘ இராசகேசரி ’ என்றும், முதலாம் இராஜேந்திர சோழன் ‘பரகேசரி’ என்றும், முதலாம் இராசாதிராசன் ‘ இராசகேசரி ’ என்றும், அவனுக்குப் பின் வந்த இரண்டாம் இராசேந்திரதேவன் ‘பரகேசரி’என்றும் அழைக்கப்பட்டிருத்தல் காண்க. [63] ‘ கொப்பர கெசரி பந்மராந ’ என்றும் பாடம்.

14. ராஜசூளாமணிச் சதுருப்பெதி மங்கலம்: இதன் மற்றொரு பெயர் மணிமங்கலம் என்பது. இது இப்பொழுதுள்ள செங்கல்பட்டுச் சில்லாவி லுள்ளது. மஹா சபையோம் – ஊர்ச் சபையினர்.

இவ்வாட்டை – இவ்வாண்டு; அஃதாவது, இரண்டாம் இராசேந்திர தேவன் ஆட்சியின் நான்காவது ஆண்டு; ஸிம்ஹ ஞாயிறு - ஐந்தாவது மாதம், ஆவணி மாதம் (Month of Avani=August–September): ஸிம்ஹம்–சிங்க ராசி; நாயறு– சூரிய கதியினுல் ஏற்படும் மாதம். அபர பக்ஷம் – தேய்பிறைக் காலம்; அஷ்டமி – எட்டாவது திதி.

15. ரோஜனி நாள் – நாலாவது நாள். ப்ரஹ்ம ஸ்தாநம்–வேதம் கற்பிக்கும் இடம்; கூட்ட-சபை கூட்ட; குறைவரக் கூடியிருந்து-எல்லோரும் கூடியிருந்து. பிடாகை - உட்கிடையூர், சிறு கிராமம் (hamlet)

16. ங் கீழ்பாற்கெல்லே மண்ணிக்காலுக்கு மெற்கும், தென்பாற்கெல்லே மண்ணிக்காலுக்கு வடக்கும், மேல்பாற் கெல்லே

17. அரைசங் குட்டத்துக்கும் நங்காசி யென்னும் புலத் துக்குங் கிழக்கும், வடபாற்கெல்லே பழுவூர் நக்கப்புத்தெரி கரைக்கு தெ

18. ற்கும், இத்தேவர்க்கு முன்பு சிலாலேகை பண் ணின நிலத்துக்கு தெற்கும் ஆக இன் நாற்பாற்கெல்லேக்கும் நடுவுபட்ட நி

19. லமும் ஓடையு முடைப்பும் மேநோக்கின மரமும், கீணோக்கிய கிணறும் இன் நாற்பாற் கெல்லேக்கும் நடுவு பட்ட

20. தெல்லாம் ஸேனுதிபதிகள் ஐயங் கொண்ட சொழ ப்ரஹ்மாதிராஜர் தாயார் காமக்கவ்வையள் பக்கல் ஸ்வம் கொண்டு சந்திரா

21. தித்தவற் இன் நிலத்துக்கு இறையிறுத்துக் குடுப் போ மாநோம் மஹா சபையோம் ஸபைய்யு

22. ளிருந்து கரையிட்டுக் கரைப் பொங்து பணித்த காராம்பிசெட்டு நாராயணக் கிரமவித்தனும் இராயூர் ச

---

16. கீழ்பாற்கெல்லே-கிழக்கு எல்லே; பாற்கு—பக்கம்.

17. அரைசங் குட்டம் - *அரச குட்டம்*; குட்டம் - சிறுகுளம். நங்காசி—வயலின் பெயர்; புலம் – நிலம்; பழுவூர் நக்கப்புத்தேரி—பழுவூர் நக்கன் என்னும் சிவனடியாரால் வெட்டப்பட்ட புதியகுளம்.

18 சிலாலேகை பண்ணின-சிலேயில் எழுதிக் கொடுத்த; சிலே-கல். உடைப்பு – ஓடைக் கரை; நீர் எனினுமாம்.

19. மேநோக்கின-மேல் நோக்கி வளர்ந்த மரஞ்செடிகள். கீணோக் கின – கீழ் நோக்கிக் குழிந்த கிழங்கு வகைள்.

20. காமக் கவ்வையள்: இவள் சேனுதிபதி சயங்கொண்ட சோழ பிரமாதிராசருக்குத் தாய்; பிரமாதிராசர் என்ற பெயர் மாணிக்க வாசகருக்குப் பாண்டியன் அளித்த 'பிரமராயன்' என்ற பட்டப் பெயர் போல்வது. பக்கல் – இடம்; ஸ்வம் கொண்டு—சொந்தமாகப் பெற்று.

21. சந்திராதித்தவர்—சந்திர சூரியர் (உள்ள அளவும்); இறை யிறுத்து— வரி நீக்கி.

22. கரையிட்டு – கரை கண்டு; கரை – நிலப்பகுதி (block of land); கரைபொந்து பணிந்த – நிலத்தைப் பார்வையிட்டுக் கூறிய; 'போந்து' என்பதன் குறுக்கமே 'பொந்து' போலும்.

காராம்பி செட்டு: விவசாயத் தொழிலுக்குரிய கருவிகளே விற்கும் தொழில், வியாபாரம்; அதைச் செய்து வந்தவன் 'காராம்பிசெட்டு நாரா யணக் கிரமவித்தன்' எனப்பட்டான்; காராம்பி—எருது பூட்டி நீரிறைக்

23. ந்திரதெவ அத்தாழிக் கிரமவித்தனும், ஸஹணே மாதவக் கிரமவித்தனும் பணிப்பணியால்

24. பணிகெட்டு எழுதினென் இவ்வூர் ஊர்க்கரணத் தான் அலங்காரன் சீராமநென் இவை என் எழுத்து.

கும் கருவி வகை; செட்டு—வியாபாரம்; **கிரமவித்தன்**—வேதத்தின் கிரம பாடத்தில் வல்ல பார்ப்பாரது பழைய பட்டப்பெயர். (Ancient Brahman title, as one skilled in the Krama method of reciting the Vedas).

23. **பணித்த...... பணிப்பணியால்:** மகா சபையிலுள்ள காராம்பி செட்டு நாராயணக் கிரமவித்தன், இராயூர் சந்திரதேவ அத்தாழிக் கிரம வித்தன், ஸஹணே மாதவக் கிரமவித்தன் ஆகிய இவர்கள் மூவரும் இட்ட கட்டளையால்.

24. **பணிக்கேட்டு**—அக் கட்டளையை அவர்கள் சொல்லக் கேட்டு; **ஊர்க்கரணத்தான்:** ஊர்ச்சபை நிகழ்ச்சிகளை எழுதும் எழுத்ததாளன்; இவனுக்கு 'மத்தியஸ்தன்' என்ற பெயரும் உண்டு. அமண் பாக்கம் சாசனத்தை எழுதிய ஊர்க் கரணத்தான், **'அலங்காரன் சிராமன்'** என்போன் ஆவான்.

பயிற்சி வினுக்கள்

1. அமண்பாக்கம் சாசனம் எங்குக் காணப்படுகிறது? அதற்கு வழங்கும் வேறு பெயர் யாது? அதில் கூறப்படும் செய்திகள் யாவை?

2. அமண்பாக்கம் சாசனம் ஏற்பட்ட காலமாகக் குறிக்கப் பெற்ற ஆண்டு பொருத்த முடையதா? ஆராய்க.

3. இரண்டாம் இராசேந்திர தேவன் மெய்க் கீர்த்தியின் முதற் குறிப்பு யாது? அவனுடைய மற்ருெரு மெய்க்கீர்த்தியின் முதற்குறிப்பு எது?

4. ஒரே அரசனுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட மெய்க்கீர்த்தி வரு மாற்றை உங்கள் பாடப் பகுதி கொண்டு இரு சான்றுகள் காட்டி ஆராய்க.

5. இராசேந்திர தேவன் பட்டம் வழங்கியவர்களில் நால்வர் பெயரையும், அப்பட்டப்பெயர்களின் பெயர்களையும் எழுதுக.

6. இராசேந்திர தேவன் ஆகவமல்லனுடன் போர் புரியக் காரண மென்ன? அப்போரில் அவன் எவ்வெவ் வரசனை விண்ணகத் தேற்றி ஞன்?

7. கொப்பத்துப்போர் எவ்வெவ் கல்வெட்டுகளில் காணப்படு கிறது? அதன் நிகழ்ச்சியைச் சாசனத்தில் கூறுமாறு எழுதுக.

8. கொப்பத்தில் போர் புரிந்தார் யாவர்? அச் செய்தியுள்ள கல்வெட்டு எக்கோயிலின் சுவரி லுள்ளது?

9. கொப்பத்து யுத்தத்தில் சம்பந்தப்பட்டவர்கள் யாவர்? வென்றவர் யார்?

10. கொப்பத்துப் போரைப் பற்றிய விரிவான செய்தி கூறப் பெற்றுள்ள சாசனம் இன்னதென்று கூறி, அதில் கூறியுள்ளபடி தொகுத்து எழுதுக.

11. கொப்பத்துப் போரில் சோழ மன்னன் கைப்பற்றிய மூன்று யானைகளின் பெயரென்ன?

12. இராசேந்திர தேவனுடைய இலங்கைப் போரைப் பற்றிய செய்தி யாது?

13. விசயாபிஷகம் என்பது யாது? அதனைச் செய்த சோழ மன்னர் யாவர்?

14. மணிமங்கலம் எங்குள்ளது? அதற்கு இராசேந்திர தேவன் சாசனத்தில் வழங்கும் பெயர் யாது?

15. ஸ்ரீ காமகோடி விண்ணகராழ்வார்க்கு நிலம் தானம் செய்யப் பட்ட தமிழ் ஆண்டு முதலியவற்றையும், அதற்குச் சமமான ஆங்கில ஆண்டையும் குறிப்பிடுக.

16. ஸ்ரீ காமகோடி விண்ணகராழ்வார்க்குத் தானமாகக் கொடுக் கப்பட்ட நிலத்தை யாரிடத்திலிருந்து ஊர்ச் சபையினர் பெற்றனர்?

17. அமண்பாக்கம் சாசனத்தை எழுதும்படி பணித்த மூவர் யாவர்? எழுதியது யார்?

18. அரைசங்குட்டம், நங்காசி — இவை எவ்விடத் துள்ளன?

19. பொருள் தருக:—, பகட்டரைசு, இராசபரிச்சின்னம், பிடாகை, சிலாலேகை, ஸ்வம்கொண்டு, காராம்பிசெட்டு, ஊர்க் கரணத் தான்.

20. குறிப்பு வரைக:— வராகவெல்கொடி, சத்தியவ்வை சாங்கப் பை, வீரசலாமேகன், மானுபரணன், ப்ரஹ்ம ஸ்நாந மண்டலம், ப்ரஹ் மாதி ராஜர், காமக்கவ்வையள், கிரமவித்தன்.

17. செயங்கொண்ட சோழ பிரமாதிராயர் அர்சனுபோக சாசனம். *

செயங் கொண்ட சோழ பிரமாதிராயர் என்பார், இரண்டாம் இராசேந்திரசோழன், முதலாம் வீரராஜேந்திரசோழன் இவர்கள் காலத்தில் இருந்த சோழர் படைத் தலைவர்களில் ஒருவர். இவர் மணிமங்கலம் கோயில் இறைவனுக்கு அர்ச்சனுபோக

---

*S. I. I,, Vol-'III., Part I, No 30, Pp. 64-71.

1. வீரராசேந்திர தேவன், முதலாம் இராசேந்திர சோழ (கங்கை கொண்ட சோழ)னது நான்காவது மகன் இவன் கி. பி. 1063 முதல் 1070 வரை சோழநாட்டை ஆண்டான். இவன் தன் உறவினர்களுக்கு நாட்டின் பகுதிகளை ஆளும்படி கொடுத்தான். கூடல் சங்கமம் என்னும் இடத்தில் ஆகவமல்லனோடு ஐந்து தடவைகள் போர் செய்து வெற்றி கொண்டான். மற்றும் பொத்தப்பிநாட்டு மன்னனையும், சேரன் ஒருவனையும் வென்றான். சனநாதன் தம்பியின் தலையை வெட்டி வாகை சூடினான்; சீவல பாண்டியன் மகன் வீரகேசரியையும் தோற்கடித்தான்.

இவனுடைய கல்வெட்டுக்களில் இவன் மெய்க் கீர்த்திகள் இரண்டு வகையாகக் காணப்படுகின்றன. ஒன்று 'திருவளர் திரள்புயத்து' என்று தொடங்குகிறது மற்றொன்று 'வீரமே துணையாகவும் தியாகமே அணியாகவும்' என்று தொடங்குகிறது. இவற்றுள் முன்னது மிக நீண்டது; பின்னது மிகச் சிறியது. இரண்டும் இவன் காலதது வரலாறுகளை அறிவதற்குப் பேருதவி புரிகின்றன. இவன் 'வீரசோழன்' என்றும் அழைக்கப்பட்டான். இவன் பெயரால், பாண்டிய மண்டலத்து மிழலைக் கூற்றத்திலுள்ள பொன்பற்றி என்னும் நகரை யாண்ட புத்தமித்திரன் என்பான். ஐந்திலக்கணத்தையும் கூறும் 'வீரசோழியம்' என்னும் தமிழ் இலக்கண நூலை இயற்றினன் என்பது குறிப்பிடத் தக்கது.

இவன் பட்டத்தரசியின் பெயர் உலக முழுதுடையாள். இவனுக்கு மதுராந்தகன், கங்கைகொண்டசோழன் என இரு புதல்வர்களும் ஒரு புதல்வியும் இருந்தனர். இவர்களில் மதுராந்தகனுக்குச் சோழேந்திரன் என்னும் பட்டப் பெயரைத் தந்து தொண்டைமண்டலத்தை ஆளவும், கங்கைகொண்ட சோழனுக்குச் சோழபாண்டியன் என்னும் பட்டப் பெயரைத் தந்து பாண்டிய மண்டலத்தை ஆளவும் பணித்தான். ஆயினும் இவர்களில் இவனுக்குப்பின் சோழமன்னனான இவன் மகன் அதிராசேந்திரசோழன் இன்னானென்று தெரியவில்லை. இவன் புதல்வியை மேலைச்சாளுக்கிய மன்னனான ஆறும் விக்கிரமாதித்தன் மணஞ் செய்து கொண்டான்.

மாகக் கொடுத்த நிலத்தைப் பற்றிய சாசனம், 'சேயங்கொண்ட சோழபிதிமாதிராயர் அர்ச்சனுபோக சாசனம்' என்று பெயர் பெற்றது. இச்சாசனம் முதலாம் வீர ராசேந்திரசோழன் காலத்தில், அவன் ஆட்சியின் ஐந்தாம் ஆண்டில் ஏற்பட்டதால், 'முதலாம் வீர ராசேந்திர தேவர் சாசனம்' என்றும் பெயர் வழங்கும். இது செங்கல்பட்டு மாவட்டம் காஞ்சிபுரம் தாலூகா மணிமங்கலம் என்னும் ஊரிலுள்ள இராசகோபாலப் பெருமாள் கோயில் மண்டபத்தின் வடக்குச் சுவரில் காணப்படுகிறது. தமிழ் மொழியில் கிரந்த எழுத்துக்கள் கலந்து எழுதப்பட்டது. நாற்பத்தேழு பத்திகளையுடையது.

இச் சாசனத்தின் முற்பகுதியில் முதலாம் வீரராசேந்திரன் பொத்தப்பி வேந்தனையும், கேரளனையும், ஜனநாதன் தம்பியையும், பாண்டியன் சீவல்லவன் மகன் வீரசேகரியையும் கொன்ற செய்தியும், சேர மன்னரைவென்று திறை பெற்ற செய்தியும், மேலைச்சாளுக்கிய மன்னனை ஆகவமல்லனோடு ஐந்து தடவைகள் போர் செய்து வெற்றி பெற்ற செய்தியும் கூறும் அவனது மெய்க் கீர்த்தி அமைந்துள்ளது. பிற்பகுதியில் மணிமங்கலம் சபையோரிடமிருந்து சேயசிங்க குலாந்தக பிரமராயர் என்பவர் விலை கொடுத்து வாங்கி அனுபவித்து வந்த 4450 குழி நிலத்தை அவர் மகனான சேனாதிபதி செயங்கொண்ட சோழ பிரமாதிராயர் [2]மணிமங்கலம் கோயில் ஸ்ரீமத் துவாராபதியான காமகோடி விண்ணகராழ்வார்க்கு அர்ச்சனா போகமாகக் கொடுத்த செய்தி கூறப்பட்டுள்ளது. மணிமங்கலத்தை யடுத்த அமண்பாக்கம் என்னும் ஊரிலுள்ள சில நிலங்களை வாங்கி, மணிமங்கலம் கோயில் காமகோடி விண்ணகராழ்வார்க்குத் தானமாகக் கொடுக்கப் பொருள் கொடுத்து உதவிய காமக்கவ்வை என்பாள் இவர் தாயார் என்பது இங்குக் குறிக்கற்பாலது.

முதலாம் வீர ராசேந்திர சோழன் கி. பி. 1063 முதல் 1070ஆம் ஆண்டு வரைச் சோழ நாட்டை ஆண்டான். இச் சாசனம் அவன் ஆட்சியின் ஐந்தாம் ஆண்டில் ஏற்பட்டதெனவே, இதன் காலம் கி. பி. 1068ஆம் ஆண்டு என்னலாம்.

---

2. இவர் இரண்டாம் இராசேந்திரசோழன் படைத் தலைவர்களில் ஒருவர். வீர ராசேந்திரசோழன் காலத்திலும் இவர்படைத்தலைவராயிருந்தார். இவர் தந்தை பெயர் மஞ்சிப்பயனார் என்னும் செயசிங்க குலாந்தக பிரமாதிராயர்; தாயார் பெயர், காமக்கவ்வை. இவர்கள் மணிமங்கலம் கோயில் ஸ்ரீகாமகோடி விண்ணகராழ்வாரிடம் அதிக பக்தி கொண்டவர்கள் என்பது, இவர்கள் அக்கோயில் இறைவனுக்குச் செய்துள்ள தானங்களால் தெரிகிறது.

சாசனம்

(1) ஸ்வஸ்திஸ்ரீ

திருவளர திரள் புயத் திருநில வலையந்
தன்மணிப் பூணெனத் தாங்கிப் பன்(2)மணிக்
கொற்றவெண் குடைநிழல் குவலையத் துயிர்களைப்
பெற்ற தாயினும் பெணி மற்றுள
வறை(3) கழ லரயர்த நடிநிழ லொதுங்க
வுறைபிலத் துடைகலி ஒதுங்க முறைசெய்து
விரைமலற் றெரியல் [1] விக்கலன் றன்(4)னொடு
வரிசிலைத் தடக்கை மாசா மந்தரைக்
கங்க பாடிக் களத்திடை நின்றுந்
துங்கபத் திரிபுகத் துரத்தி யாங்கவர்

குறிப்புரை.

ஸ்வஸ்தி ஸ்ரீ: *சாசனங்களின் துவக்கத்தில் மங்களமாக வரும் வடமொழித் தொடர்;* **திருவளர திரள் புயத்து:** *இது முதலாம் வீர ராசேந்திர சோழன் மெய்க்கீர்த்தியின் தொடக்கத் தொடர்;* **இருநில வலயம்**—*பெரிய பூமி வட்டம்;* **இருநிலம்** - *பூமி;* **வலயம்** - *வட்டம்;* **மணிப் பூண்** — *அழகிய ஆபரணங்கள்; 'புயத்து நிலவலயம் பூணெனத் தாங்கி' என்று முடிக்க.*

2. **பன்மணி** — *பலவகை முத்துக்களையுடைய;* **குவலயம்** — *உலகம்;* **உயிர்** - *உயிரினங்கள்;* **பெற்ற தாயினும் பெணி** — *பெற்ற தாயினை விட அதிகமாய்ப் பாதுகாத்து;* **அறைகழல்** - *ஒலிக்கும் வீரக் கழல்.*

3. **உறை பிலத்துடை கலி ஒதுங்க** — *கலி நீண்ட பாதாளத்தில் போய் ஒதுங்கும்படியான; அஃதாவது துன்பம் நீங்கும்படி என்பது. கலி- துன்பம், வறுமை;* **முறை செய்து** - *ஆட்சி செய்து;* *இதனால் வீர ராசேந்திரன் தன் நாட்டைத் தனக்குரிய ஆபரணமாகக் கொண்டு, தன் நாட்டிலுள்ள குடிகளைத் தாயைப்போல பாதுகாத்து, அவர்கள் வறுமையை நீக்கி, முறை செய்து ஆட்சி செய்தான் என அவனது ஆட்சி கூறப்பட்டது* **விரை மலர்த்தெரியல்** -*நறு மணமுள்ள மலர்மாலை;* **'விரை மலற்றெரியல்'** *என்றும் பாடம்.* **விக்கலன்** — *விக்கிரமாதித்தன்;* *இவன் ஆகவமல்லன் மக்களில் இரண்டாவது மகன்; இவனை* **'விக்கி'** *என்றும் அழைப்பர். இவனை, ஆகவமல்லன் படைத்தலைவர்களில் ஒருவன் என்பாருமுளர்.*

4. **மாசாமந்தர்** — *தானைத்தலைவர்;* **கங்கபாடி களம்** — *கங்கபாடி என்னும் இடத்துப் போர்களம்;* **துங்கப்பத்திரி** — *துங்கப்பத்திரா நதி; துங்கப்பத்திரா நதியும் கிருஷ்ணா நதியும் சந்திக்குமிடத்தில்தான் 'கூடல் சங்கமம்' இருந்தது.* **புகத் துரந்து** — *செல்லும்படி துரத்தி.*

வெங்கைநா ஞட்டிடை மீட்டு(5)மவர் விட்ட
தாங்கரும் பெருவலித் தண்டுகெடத் தாக்கி
மாதண்ட நாயகன் சாமுண்ட ராயனைச்
செற்றவன் சிரத்தினை யறுத்து மற்றவ
னொருமக ளாகிய (6)இருகயன் றெவி
நாகவை யென்னுந் தொகயஞ் சாயலை
முகத்தொடு மூக்குவெ ருக்கி பகைத்தெதிர்
மூன்ரும் விசையினு மென்றெதிர் பொருது
பரிபவ(7)ந் திர்வந'எனக் கருதிப் பொருபுனல்

ஆகவமல்லன் தன் மகன் விக்கிரமாதித்தனைச் சோழநாட்டு எல்லையைச் சேர்ந்த கங்கபாடி, வனவாசி, சாந்தனிகே, துளம்பபாடி முதலிய மாகாணங்களுக்கு அதிகாரியாக நியமித்தான் வீர ராசேந்திர சோழன் தன் ஆட்சியின் இரண்டாவது ஆண்டு (கி பி. 1064) இவனோடு பொருது பல சாமந்தர்களைக் கொன்று, பகைவரைத் துங்கப் பத்திரை வரையும் துரத்தினன். இஃது வீர ராசேந்திரன் ஆகவ மல்லனோடு செய்த முதற் போராகும். வேங்கை – வேங்கை நாடு; மீட்டும் – மேலும்.

5. அவர் விட்ட - சாளுக்கியர் விட்டு வைத்த; பெரும் வலித்தண்டு - வலிமை மிக்க பெரும் சேனை ; கெடத் தாக்கி – அழியும்படித் தாக்கி; மாதண்ட நாயகன் – மாபெருஞ் சேனைத் தலைவன்: இஃது இங்குச், சாமுண்டராசனைக் குறிக்கும். இவன் வேங்கை நாட்டிடை ஒரு பெருஞ் சேனையுடன் தங்கி இருந்தான். வீரராசேந்திரன் வேங்கை நாட்டில் புகுந்து இவன் சேனையைத் தாக்கி, இவனது தலையையும் அறுத்தான். இஃது வீரராசேந்திரனுக்கும் ஆகவமல்லனுக்கும் நடந்த இரண்டாவது போராகும். சிரம் - தலை.

6. அவன் ஒரு மகள்: இவளை ஆகவமல்லனுடைய ஒரே மகள் என்பர். இவள் இயற்பெயர் நாகலை; இருகையன் என்பானுக்கு மனைவி; ஆதலால் 'இருகயன் தேவி நாகவை' என்ருர். இவள் இயற்கை அழகுடையவள் என்பது, 'தொகையஞ் சாயல்' என்னும் அடைமொழித் தொடரால் விளங்குகிறது. தோகை - மயில்; சாயல் - அழகு; வீர ராசேந்திரன் இவளைப் பிடித்து இவளது முகம், மூக்கு வேருக அரிந்து, இவளை அவமானப்படுத்தினன். மூன்ரும் விடையினும் – மூன்ருவது தடவையாகவும்; இஃது வீரராசேந்திரன் ஆகவமல்லனோடு செய்த மூன்ருவது போர் என்பது. என்று எதிர் பொருது - எதிர்த்து நின்று போர் செய்து; பரிபவம் - இழிவு, அவமானம்.

7. திர்வந - தீர்வன; 'தீர்வது' என்றும் பாடம். பொருபுனல் - மோதும் அலைநீர்; கூடல் சங்கமம்: கிருஷ்ண, பஞ்சகங்கை (துங்கப்

கூடல் சங்கத் தாகவ மல்லன்
மக்க ளாகிய விக்கலன் சிங்கண
னென் றிவர் தம்மொடு மெணில்சா மந்தரை
வென்றடு தூ(8)சிமுனை விட்டுத் தன் றுணை
மன்னருந் தானும் பின்னடுத் திருந்து
வடகட லென வகுத்தவத் தானையைக்
கடக்களி றென்றுற் கலக்கி அடற்பரி
கொசலை சிங்கனை கொ(9)டிப்படை முன்னல்
தூசிவெங் களிற்றொடுந் துணித்து கெசுவ
தண்ட நாயகன் [3]தாற்கெத் தரயன்
திண்டிறல் மாரயன் சினப்பொத் தரய

பத்திரை) ஆகிய இரு நதிகளும் கூடும் இடம். வீரராசேந்திரன் தன்னைக் கூடல் சங்கமம் என்னும் இடத்தில் வந்து எதிர்த்த ஆகவமல்லனோடு போர்செய்து, அவன மக்களாகிய விக்கலன், சிங்கணன் என்பவர்களோடு பல படைத்தலைவர்களையும் வென்றான். அவனுக்குத் துணையாக வந்த மன்னர் பலர் புறமிட்டு ஓடினர். **விக்கலன், சிங்கணன்:** இவர்கள் இருவரும் ஆகவமல்லன் மக்கள். **எணில் சாமந்தர்:** எண்ணிக்கைக்கு அடங்காத படைத்தலைவர்கள்; அடுதூசி — அடுகின்ற தொழிலையுடைய தூசிப்படை; அடுதல் - கொல்லுதல்; தூசிப்படை - படைவீரர்; 'குதிரைப் படை' எனினுமாம்.

8. **அடுதூசி ... ... கலக்கி** — போர்செய்து அடுதலில் வல்ல தூசிப் படையாக வந்த அவன் சேனையை முன்னர் செலுத்தி, அதன்பின் தானும் தனக்குத் துணையாக வந்த மன்னர்களும் செல்லும் படி வகுக்கப்பட்ட அச்சேனையை வீரராசேந்திரன் ஒரு யானைப் படையை விட்டுக் கலங்கச்செய்து என்பது. **துணை மன்னர்** — துணையாக வந்த மன்னர்கள்; **வடகடல்** — வடவைக் காலத்துக் கடல்; **தானை** - சேனை; **கடகளிறு** - மதயானை; இங்கு யானைப் படையைச் சுட்டியது. **அடல்பரி** - அடல் புரி, எதிர்த்துப் போர் செய்யும்; **கோசலை சிங்கனை** — கோசல நாட்டுச் சிங்கன் என்பானை.

9. **கொடிப்படை முன்னல்** — முன்னணிச் சேனைக்கு முன்னர்; **தூசி ரெவம் களிற்றொடுந் துணித்து** — தூசி, வெங்களிறு ஆகியவற்றை வெட்டி; தூசி - குதிரை; வெங்களிறு - யானைகள்.

கெசுவ தண்ட .... சிந்த பின்னஞ்செய்து: கேசவதண்ட நாயகன், கேத்தரயன், போத்தபயன், இரெச்சயன், மூவத்தி என்று சொல்லப்பட்ட போரில் வல்ல தானைத் தலைவர்களை அழித்து என்பது. தார் - வெற்றிமாலை; திண்டிறல் - மிக்க வலிமை; சினம் - கோபமிக்க; பொற்கோதை - பொன்மாலை யணிந்த.

னிரெச்சய னியல்[4]செபொற் (10)கொதைமு வத்தியென்
ருர்த்தடு துப்பி லநெகசா மந்தரை
சிந்ந பின்னஞ் செய்து பின்னே
முதலி யான மதுவண னொட
விரித்தலே யொடு விக்கல (11)னொட
செருத்தொழி லழிந்து சிங்கண ஞெட்ட[5]
அண்ணம முதலிய ரனேவரு மமர்பொர்ப்
பண்ணிய பகடிழிந் தொட நண்ணிய
வாகவ மல்லனு மவற்கு[6]மு னொ(12)ட
வெகவெங் களிற்றினே விலக்கி வாகைகொண்
டங்கவர் தாரமு மவர்குல தனமுஞ்
சங்குந் தொங்கலுந் தாரையும் பெரியும்
வெண்சா மரையு மெக டம்பமும்
சூகரக் கொடியும் (13)மகரதொ ரணமும்

---

10. என்று ஆர்த்து அடு துப்பில் அநேக சாமந்தர் – என்று கூவி அழைத்து, போரில் பகைவர்களேக் கொல்லும் அநேகப் படைத்தலேவர்கள் என்பது. சிந்ந பின்னஞ் செய்து – அழித்து; பின்னே – பின்னர்: முதலி - போர்த்தலேவன்

11. செருத்தொழில் – போர்த் தொழில்; அழிந்து – தோல்வியுற்று; அமர் போர்ப் பண்ணிய – இருந்து போர் செய்த; பகடு இழிந்து ஓட - யானேயிலிருந்து இறங்கி ஓட; ஆகவமல்லனும் அவர்க்கு முந்நோட – நான்காவது தடவையாக முதலாம் வீரராசேந்திரனேடு போர் செய்த ஆகவமல்லன், போரில் தோற்று தங்கள் யானேகளிலிருந்து இறங்கி ஓடிய மதுவணன், விக்கலன், சிங்கணன், அண்ணலன் முதலிய படைத்தலேவர்களுக்கு முன் தான் ஓடி உயிர் பிழைத்தான் என்பது.

12. வெக வெங்களிறு: இது முதலாம் வீரராசேந்திரன் ஏறி வந்த யானேயின் பெயர். விலக்கி - செலுத்தி; வாகை கொண்டு - வெற்றி கொண்டு; அவர் தாரம் - அவர்கள் மனேவியர்; குலதனம்- பெருஞ் செல்வம்; சங்கு - சங்கினல் செய்த கைவளேகள்; 'வெற்றிச் சங்கு' எனினுமாம் தொங்கல் - காதணி வகை; தாரையும் பெரியும் - தாரை, பேரிகை என்னும் இரு அரச சின்னங்களான ஊது குழல்கள் (Trumpets); வெண்சாமரை - அரச சின்னமாகக் (canopies) கொள்ளப்படும். கவரி மானின் மயிர்க் கற்றை; மெகடம்பம்–மேகாடம்பரம், நிழல்செய்யும் மேற்கட்டி; அம்பரம் – ஆடை. சூகரகொடி – காக்கைக் கொடி; சூகரம் – காக்கை; இது மேலேச்சாளுக்கிய மன்னருக் குரியது.

13. மகர தொரணம் – மகர வடிவமாகச் செய்த அணிகலன்; மகரம் – ஒரு வகைமீன்; புட்பகபிடி – புட்பகம் என்னும் பெண் யானே;

புட்பகப் பிடியும் பொருகளிற் றீட்டமும்
பாய்பரித் தொகையொடும் பறித்து செயொளி
வீரசிங் காசநம் பார்தொழ வெறி
எழில்தர உலக முழுதுடை யாளொ(14)டும்
விசைய மணிமகுட மெய்ந்து எழில்கொள்
தத்துமா புரவிப் பொத்தப்பி வெந்தனே
வாரணே வன்கழற் கெரளன் றன்னே
ஜன நாதன் றம்பியைப் பொ(15)ர்க்களத்
தலங்கல்சூழ் பசுந்தலே யரிந்து [7]புலங்கழல்
தென்னனே ஸ்ரீவல்ல வன்மகன் சிறுவன்
மின்னவில் மணிமுடி வீர கெசரியை
மதவரை யொன்ரு (16)லுதைப்பித் துலகையிற்
கெரளர் தங்குல செங்கீரை யொடும்
வெரறப் பறிந்தொடி மெல்கடல் வீழ
வாரண மருகுளி செலித்தி[8] வாரியி

பிடி – பெண்யானை; பொருகளிற்று ஈட்டம் – போர் செய்ய வல்ல யானைப்படை; பரித்தொகை – குதிரைப் படை; பறித்து – எடுத்துக் கொண்டு; செயொளி – செவ்விய ஒளி; எழில்தர – அழகு பொருந்த; உலக முழுதுடையாள்: இவள் முதலாம் வீரராசேந்திரன் பட்டத்தரசி.

14. விசைய மணிமகுடம் – வெற்றி முடி; எய்ந்து - சூடி; தத்துமா புரவி - விரைந்து பாயும் குதிரையை யுடைய; பொத்தப்பி வேந்தன் – பொத்தப்பி நாட்டிற்கு அரசன்; பொத்தப்பி நாடு சித்தூர்ச் சில்லாவிலுள்ள காளத்தியைச் சேர்ந்ததென்பர். பொத்தப்பி வேந்தனை .... தலே யரிந்து – பொத்தப்பி வேந்தன், கேரளன், ஜனநாதன் தம்பி ஆகிய இவர்களுடன் போர்செய்து, இவர்கள் தலேகளைத் துணித்து என்பது. சனநாதன் சக்கரக்கோட்ட மண்டலத்தை ஆண்ட ஓர் அரசன். அவன் 'தாராவர்சன்' என்றும் அழைக்கப்படுவான். அலங்கல் - மாலே.

15. பொலங்கழல் - பொன்னுலான கழல்; தென்னன் – பாண்டியன்; ஸ்ரீ வல்லவன் மகன் சிறுவன் – சீவல்லவன் மகனுன சிறுவன் என்பது; இவன் பெயர் 'வீரகேசரி' என்பதாகும். இவன் தலேயை வீரராசேந்திரன் யானேயின் காலால் இடறச் செய்தான். மின்னவில் – மின்னலேப் போன்று ஒளி வீசும்; மதவரை - மதயானே.

16. உலகையில் கெரளர் .... செலுத்தி: இது வீரராசேந்திரன் கேரள மன்னருடன் செய்த போரைப் பற்றியது. உலகை - உதகை; இது பாண்டியனுக்குச் சொந்தமான இடமென்பர்; இங்கு வந்து எதிர்த்த கேரள மன்னரை வீரராசேந்திரன் வென்று, அவர்கள் குழந்தைகள் முதலாகக் கொன்ருன். அவனுக்குப் பயந்து ஓடிய அவர்களே

லெண்ணருங் களிற்றின்(17)இரட்டரைக் கவர்ந்த
கன்னியர் களிற்ருெடுங் கட்டி பண்ணுப்
பிடியொடு மாங்கவர் விடுதிறை கொண்டு
மீண்டு சூழ்புனற்
கொண்டாற் றுறவிற் குறித்த வெம்(18)பொரில்
தண்ட நாயகர் தம்மில் திண்டிறல்
மல்லிய ணனையு மஞ்சிப் பயனையும்
பில்குமதக் களிற்றுப் பிரமதெ வனையுங்
தண்டா ரசொகயன் றன்னையு மொண்டி(19)றற்
சத்தி யணனை யுஞ்சந்து விக்ரஹப்
பத்தி யணன் றன்னையு மததகு[9]
தெமரு தெரியல் வீமயன் றன்னையு

இவன் மேலைக்கடல் வரை பின் தொடர்ந்து சென்ருன்; தன் யானையைக் மேலைக்கடலில் நீராடச்செய்து தன் பெருமையை நிலை நாட்டினுன். செங்கிரை – குழந்தைகள்; வேர் அற பறிந்து – முழுவதுமாக அழித்து; வாரணம் - யானை; விழ - கோளர் மேலைக்கடலில் ஓடி ஒழிக்க; அருதுளி செலுத்தி – மேலைக்கடலின் ஓரமாக நடத்தி; வாரி - கடல்; எண்ணருங் களிறு - கணக்கில்லாத யானை.

17. இரட்டர் - மேலைச் சாளுக்கியர்; இவர்கள் பெரும் யானைப் படையை யுடையவர்களா யிருந்தனர். இவர்கள் படையுடன் கன்னியர் படைகளும் சேர்ந்து வந்தது. கவர்ந்த – பின் தொடர்ந்து வந்த; கன்னியர் என்பார், குமரிக்கு உரியவரான பாண்டியராவர். இவர்களையும் இவர்கள் யானைகளையும் வீரராசேந்திரன் பிடித்துக் கட்டி, இவர்களிடம் அழகிய பிடிகளோடு திறைப் பொருளையும் பெற்று மீண்டான். பண்ணுப்பிடி - அழகிய பெண் யானை; திறை - திறைப்பொருள்.

18. தண்டநாயகர் – படைத்தலைவர்கள்; அவர்களாவார் மல்லியணன், மஞ்சிப்பயன், பிரமதேவன், அசோகையன், சத்தியணன், பத்தியணன், விமயன், வங்காரன், கங்கன், நுளம்பன் காடவர்கோன், வைதும்பராயன் முதலியோர். போரில் வீரராசேந்திரன் இவர்களைப் பிடித்து இவர்கள் தலைகளை அரிந்தான். திண்டிறல் – மிக்க வலிமை; மல்கு மதக்களிறு – மதம் பொழியும் யானை: தண்டார் அசோகையன்- புதிய மாலை யணிந்த அசோகையன்; முந்திய சாசனத்தில் மண்டலிக சோகையன் என்பான் ஒருவன் கொப்பத்துப் போரில் இறந்தான் என்ற செய்தி இங்கு நோக்கத் தக்கது. ஒண்டிறல் – வலிமை.

19. சந்துவிக்ரஹ பத்தியணன்: பத்தியணன் என்பான் பகைவர்களைச்; சந்து செய்விப்பவனும், எதிர்த்தால் அழிப்பவனுமான ஒரு தலைவன். சந்து – உடன்பாடு; விக்ரஹம் - அழிவு; மததகர் – மதம் பொழியும் யானைபோல; 'மததகு' என்றும் பாடம். தெமருதெரியல் – தேன்

மாமதி வங்கா ரணையும் நாமவெற்
கங்கனை நுள(20ம்பனைக் காடவர் கோனை
மங்குமத யானை வைதும்ப ராயனை
யிருந்தலை யரிந்து பெரும்புனற் றனுது
கங்கை மாநகர் தைத்தமின் திங்களில்
வழிவரு சளுக்கி (21)பழியொடு வாழ்வதிற்
சாவது சால நன்றென் றெவ்முற்
றிந்நிய சிந்தய னாகி முன்னம்
புதல்வருந் தாநு முதுகிட் டுடைந்த
கூடலங் களமெனக் குறித்த கூடலி(22)ல்
வாரா தஞ்சினர் மன்னவ ரல்லர்

நிறைந்த மாலை; மாமதி — சிறந்த அறிவுடைமை; நாமவேல் — அச்சத்தை தரும் வேல; கங்கன்—பல்லவரின் ஒரு பிரிவான கங்கர் தலைவன்; நுளம்பன்—நுளம்ப பாடி நாட்டையாண்ட பல்லவர் தலைவன்.

20 காடவர்கோன் - பல்லவர் தலைவன்; இவன் செஞ்சி நாட்டிற்குத் தலைவன்; மங்கு மதம் - குறைந்த மதம்; அஃதாவது வீராசேந்திரன் வீரத்தைக் கண்டு அஞ்சியதால், பகைவீரர் யானைகள் மதம் பொழிவதை விட்டு ஒழிந்தன என்பது. இனி 'மல்குமத' மெனக் கொண்டு, 'நிறைந்த மதத்தினையுடைய' எனப் பொருள் கொள்ளினுமாம். பெரும் புனல் தனுது கங்கை மாநகர் - மிக்க புகழுடைய கங்கை நீரால் தூய்மை செய்யப் பெற்ற தனது தலைநகரான கங்கை கொண்ட சோழபுரம்; இதனை முதலாம் இராசேந்திரசோழன் கட்டினுன் என்பது அவன் வரலாற்ருல் அறியப்படும். தைத்ந - வைத்த, சிறையாக்கிக் கொண்டுவரப்பட்ட என்பது. மின் திங்களில் வழி வரு சளுக்கி — ஒளி பொருந்திய திங்கள் குலத்தில் தோன்றிய சாளுக்கிய மன்னனுன ஆகவமல்லன்; இவனுக்கு முதலாம் சோமேசுவரன் என்ற பெயரும் உண்டு; மேலைச் சாளுக்கிய (இரட்டபாடி) நாட்டிற்கு இவன் மன்னன். முதலாம் இராசேந்திர சோழன் ஆட்சியின் இறுதிக் கால முதல் இவன் நான்கு தலைமுறைகளாகச் சோழர்களுடன் போர் செய்து வந்துள்ளான்.

21. பழி — இழி சொல்; எவம் உற்று — துன்பமடைந்து, வருந்தி; எவ்வம்—துன்பம்; உந்நிய சிந்தயனுகி - நினைந்த மனத்தவனுகி; புதல்வர்-மக்கள்; அவராவார் விக்கலனும் சிங்கணனும். முதுகிட்டு — தோல்வியுற்று; உடைந்த - ஓடிய; கூடலங் களம் என - கூடல்சங்கம மென்னும் இடமே போர் செய்யு மிடமென்று.

22. கூடலில் வாராது அஞ்சினர் மன்னர் அல்லர் - கூடல் சங்கமம் என்னும் இடத்தில் போர் செய்ய வராது அஞ்சியவர்கள் மன்னர் என்று கருதப்படார்; முன்பு ஒரு தடவை வீரராசேந்திரனேடு

பொர்ப்பெரும் பழிப் பிரட்ட ரா்கவென்
றியாவரு மறிய வெழுதிய [22]பதக
மெவரு மொலே விடையொடுங் குடுத்த
விரட்ட (23)பாடிப் பிரட்டர்கள்
கங்கா கெத்தனே யெவ அங்கவன்
வந்தடியிணே வணங்கிய் வாசக முணர்த்தலும்
சிந்தையு முகமுந் திருப்புய மிரண்டு
மெந்தெழி லுகவையொ டிரு(24) மடங்கு பொலியப்
பொந்த பொர்க்களம் புகுந்து காந்தையில்
வல்லவர் கொனே வரவுகா ணது
சொல்லிய நாளின் மெலுமொர் திங்கள்
பார்த்தி ருந்த பி(25)ன்னேப் பொத்தவன்
கால்கெட வொடி மெல்கட லொளித்தலுந்

கூடல் சங்கமம் என்னும் இடத்தில் போர்செய்து புறங்காட்டிய ஆகவமல்லன் இவ்வாறு தன் தூதர் மூலம் வீரராசேந்திரனுக்குச் சொல்லி அனுப்பினன். போர்–போரில்; பழிப் பிரட்டர்–பழித்தற்குரிய பொய்யர்; பிரட்டு-புரட்டு, பொய்; பதகம்: இது 'சபதம்' என்றிருத்தல் வேண்டும்; 'பதிகம்' என்றும் பாடம். மெவரும் ஓலே - முக்கியமான கடிதம்; விடையொடும் கொடுத்து–தன் ஆணே முத்திரையோடும் கொடுத்து; இரட்டபாடி பிரட்டர்கள் – இரட்டபாடிக்கு மன்னஞன ஆகவமல்லன் அமைச்சர்கள்; பிரட்டர் என்பது இங்கு அமைச்சரைக் குறித்தது.

23. வாசகம் உணர்த்தலும் – கடிதத்தின் செய்தியை வீரராசேந்திரனுக்குச் சொல்லலும்; இவ்வாறு உணர்த்தியவன், இரட்டபாடி அமைச்சர்களில் ஒருவனுகிய கங்காகேத்தன் என்பவனுவான். திருப்புயம்–அழகிய தோள்கள்; உவகை – மகிழ்ச்சி.

24 பொலிய – விளங்க; பொந்து – படை எடுத்து வந்து; அப் போர்க்களம் – கூடல் சங்கமம்; காந்தையில்: காந்தை என்பது ஓர் ஊர்; இது கரந்தை என்றிருத்தல் வேண்டும். வல்லவர் கோன் – ஆகவமல்லன்; சொல்லிய நாள் – குறிப்பிட்ட நாள்; ஆகவமல்லன் ஓலேயில் குறிப்பிட்ட நாளில் வீர ராசேந்திரன், கூடல் சங்கமத்திற்கு வந்தான்; ஆகவமல்லன் அங்கு வரவில்லே; அவன் வரவுக்காக வீரராசேந்திரன் அவன் குறிப்பிட்ட நாளுக்கு மேலாக ஒரு திங்கள் அங்குள்ள கரந்தை என்னுமிடத்தில் பாடிவீடு அமைத்துக் காத்திருந்தான். திங்கள் – மாதம்.

25. பொத்து – பேர்த்து, அவ்விடத்தை விட்டு; அவன் கால் கெட ஓடி – ஆகவமல்லன் தன் கால் சோரும்படி பயந்து ஓடி; மெல் கடல் – மேலேக் கடல்; ஆகவமல்லன், வீரராசேந்திரனேடு ஐந்தாவது தடவையாகச் செய்த போரில் அவனுக்குப் பயந்து மேலேக் கடலில் ஓடி ஒளித்தான் என்பது; ஆனல் பிற வரலாறுகள், அவன் சுரங் கண்டு

தெவ நாதனுஞ் சித்தியுங் கெசியு
முவருந் தனித்தனி[12] முதுகிடப் பரவரு
மிரட்ட பாடி யெழரை யிலக்க
(26) முரட்டொழி லடக்கி முழங்கெரி முட்டி[13]
வெங்கதிற் புலியெறு வியந்து விளையாடத்
துங்கபத் திரிக்கரை ஜயபத் திரத்தூண்
நாநிலம் பரச நாட்டி மெநாள்
வ(27) ந்த பிரட்டனை வல்லவ நாக்கிச்
சுந்தரக் கண்டிகை கட்டி
புரச யானை[14] புழைக்கையிற் பிழைத்திவ்
வுலக மறிய வொடிய பரிசொரு

திடீரென்று இறந்தான் என்று கூறுகின்றன. தேவநாதன், சித்தி, கெசி: இவர்கள் மூவரும் ஆகவமல்லன் படைத்தலைவர்கள்; இரட்டபாடிப் பகுதியில் வீரராசேந்திரனை எதிர்த்துப் போர்புரிந்து, முதுகிட்டனர். பரவரும் - புகழ்தற்கரிய.

26. முரட்டொழில் அடக்கி – வலிமையால் அடக்கி; எரிமுட்டி – தீக்கொளுவி; வெங்கதிர் புலி எறு – சூரியனும் புலியும்; இவை இரண்டும் சோழர்க் குரியன; சூரியன் சோழரின் குலச் சின்னம்; புலி, அவரது அரச சின்னம். விளையாட – பறக்கும்படியாக; தூங்கபத்திரிக்கரை – துங்கபத்திரா நதியின் கரையில்; ஜய பத்திரத் தூண்–வெற்றிகளைப்பற்றி எழுதிய தூண்; ஜெயபத்திரம் – வெற்றிச் செய்திகள்; நாநிலம் பரச – உலகத்தார் புகழும்படி; வீரராசேந்திரன் தான் ஆகவமல்லனை ஐந்து தடவை புறங்கண்ட செய்தியை ஒரு தூணில் எழுதி இரட்டபாடியை யடுத்த துங்கப்பத்திரா நதிக்கரையில் நாட்டினான்; அதில் சோழர்களுக் குரிய சூரிய கதிர்களும், புலியேறும் எழுதப்பட்டிருந்தன. மேநாள் - முன்னாள்.

27. மேநாள் வந்த பிரட்டன்–முன்னாளில் போர் தொடுத்து வந்தவன்;இவன் ஆறும் விக்கிரமாதித்தன் எனத் திருக்கழுக்குன்றத்திலுள்ள வீரராசேந்திரனது ஏழாவது ஆண்டுக் கல்வெட்டு கூறுகின்றது. வல்லவ நாக்கி–சாளுக்கிய மன்னவனாக்கி; சுந்தரக் கண்டிகை-அழகிய கண்டிகை; இது விக்கிரமாதித்தன் அரசனானதற்கு அடையாளமாக அவன் கழுத்தில் அணியப்பட்டது. முன்பு ஒரு நாள் வீரராசேந்திரன் இவனை வென்று தன் பட்டத்து யானையால் கொல்லும்படி கட்டளையிட்டபோது இவன் அதற்குத் தப்பி எல்லாரும் அறியும்படி ஓடி மறைந்தான்; அச் செய்தியை வீரராசேந்திரன் ஒரு பலகையில் எழுதி இவன் கழுத்தில் தொங்கவிட்டான் என்பது. இச் செய்தியைச் சிறிது மாற்றி, வீர ராசேந்திரன் ஆகவமல்லன் இறந்தபின், அவன் உருவத்தைச் செய்து, அதன் கழுத்தில் கண்டிகையையும், தனக்கு அவன் தோல்வியுற்ற செய்திகள் எழுதிய பலகை ஒன்றையும் தொங்கவிட்டான் என்பாருமுளர். புரசயானை–பட்டத்து யானை; புழைக்கை–துதிக்கை; பிழைத்து–தப்பி; பரிசு – தன்மை, செய்தி.

பலகையிற் பழுதற வெழுதிய பின்னே
சார்த்தி(28)ன வுறையுஞ் சளுக்கிப தம்பெற்ற
பூத்தின மார்வொடும் பூட்டிப் பெர்த்துக்
தான்கைக் கொண்ட வெங்கைநன் நாடு
மீட்டுக் கொண்டலால் மீள்கிலங் கெட்டிநீ
வல்ல னுகில் வந்து(29)காக் கென்று
சொல்லி யெடுத்தவத் தானை விசைய
வாடையொ டடுத்த பெராற்றில் தடுத்த
ஜனநா தனையுந் தண்டநா யகனு
மினமார் கடக்களிற் றிராஜ மயனையு
முப்பர சனையு முதலாக வுடைய

---

28. **சார்த்தின வுறையும்** – *அம்புகள் வைக்கப்பட்ட அம்புறுத் தூணியும்; உறை – அம்புகள் வைக்கும் பை;* **சாளுக்கிய பதம் பெற்ற** – *சாளுக்கிய மன்னன் என்று பட்ட மெய்திய; பதம் – பட்டம், பதவி; பூத்தின மார்பு – அழகிய மார்பு.*

ஆகவமல்லன் என்னும் முதலாம் சோமேசுவரன் கி. பி. 1068ல் இறந்தான்; அவன் முதல் மகன் **இரண்டாம் சோமேசுவரன்;** *இரண்டாவது மகன்* **விக்கிரமாதித்தன்;** *மூன்றுவது மகன்* **செயசிங்கன்;** *ஆகவமல்லனுக்குப்பின் அவன் முதல் மகனுன இரண்டாம் சோமேசுவரன் மேலைச் சாளுக்கிய மன்னனுனன்; ஆனல் அவன் ஆட்சியை யாரும் விரும்பவில்லை அதனுல் விக்கிரமாதித்தனுக்கும் அவனுக்கும் பகை ஏற்பட்டது; விக்கிரமாதித்தன் வீரராசேந்திரனைக் கூடல் சங்கமத்தில் போய் அடைக்கல மடைந்தான். அவன் தம்பி, செயசிங்கனும், கடம்ப வேந்தனுகிய உபகேசியும் அவனை ஆதரித்தார்கள். அதனுல் வீரராசேந்திரன் இரண்டாம் சோமேசுவரனைச் செயித்து விக்கிரமாதித்தனை* **'ஆரும் விக்கிரமாதித்தன்'** *என்ற பெயரால் மேலைச் சாளுக்கிய மன்னனுக்கினன். அன்றியும் அவன் தன் மகளேயும் விக்கிரமாதித்தனுக்கு மணஞ்செய்து கொடுத்தான். இவ்விக்கிரமாதித்தனே முன்பு ஒரு தடவை வீரராசேந்திரனுல் பிணிக்கப்பட்டு, அவன் பட்டத்து யானையால் கொல்ல ஏவப்பட்டவன். ஆனல் இவன் அதிலிருந்து அப்பொழுது தப்பித்துக் கொண்டான்.*

பெர்த்து – *கூடல் சங்கமம் என்னும் இடத்திலிருந்து புறப்பட்டு;* **கைக்கொண்ட** – *முன்னர் விக்கிரமாதித்தன் கைப் பற்றிய; 'ஆகவமல்லன்' கைப்பற்றிய எனினுமாம்;* **நீ வல்லனுகில்** - *நீ வலிமையுடையவனுல்; இங்கு 'நீ' என்றது, அப்பொழுது வேங்கைநாட்டை ஆண்ட சாளுக்கிய தண்டத் தலைவனைக் குறிக்கும்.*

29. **எடுத்த** – *எழுந்த;* **தானை** - *சேனை;* **விசயவாடை** *என்பது, இப்பொழுது 'பெஜவாடா' என்று வழங்குகிறது; கிருஷ்ண நதி இதன் பக்கமாக ஓடுகிறது.* **பெராற்றில்** – *கிருஷ்ண நதியில்;* **தடுத்த** - *எதிர்த்த; வேங்கை நாட்டை மீட்கச் சென்ற வீரராசேந்திரன் தானையைக் கிருஷ்ண நதிக் கரையில் மேலைச் சாளுக்கிய தண்ட நாயகரான சன*

வப்பெருஞ் சேனையை அடவிற் பாச்சி
கொதா விரியில்தன் பொதக நீடுண்ணக்
கலிங் கமுங்கடந் தப்பால்
சக்கர கொட்டத் தப்பு(30)றத் தளவு
மெவருந் தானைத் தாவடி செலுத்தி
வெங்கைக ஞடு மீட்டுக் கொண்டுதன்
பூங்கழற் கடைக்கலம் புகுந்த படைக்கலத்
தடக்கை விஜெ (31)யா தித்தற் கருளி
விசைகொடு மீண்டுவிட் டருளிஇகலிடைப்

நாதன், இராசமய்யன், முப்பரசன் என்போர் பெரும் படையுடன் வந்து எதிர்த்தனர். ஆனல் அப்போரில் இம்மூவரும் புறமிட்டுக் காடுகளுக்குள் ஓடி மறைந்தனர்.

தண்ட நாயகன் – படைத்தலைவன்; இனமார் கடக்கயிறு – மதம் பொழியும் யானைப் படை; அடவியில் பாச்சி – காட்டிற்குள் ஓட்டி; போதகம் – யானை; வீரராசேந்திரன் தன் வெற்றிக் கறி குறியாக தன் யானையைக் கோதாவரியில் நீருண்ணச் செய்தான்; கலிங்கம் – கலிங்க நாடு; இது கோதாவரிக்கும் மகா நதிக்கும் இடையில் உள்ளது; கீழைச் சாளுக்கியருக்குச் சொந்தமானது. இப்பொழுது இது வட சர்க்காரில் இருக்கிறது. சக்கரக் கொட்டத்து அப்புறத் தளவும் மெவரும் தானை – கலிங்க முதல் சக்கரக் கோட்டத்திற்கு அப்பால் வரையும் செல்லும் பெருஞ்சேனை; இஃது வீரராசேந்திரன் சேனைப் பெருக்கத்தைக் காட்டும்.

சக்கரக் கோட்டம் என்பது, விசாகப் பட்டணம் சில்லாவிற்கு மேற்கில் மத்திய மாகாணத்தைச் சேர்ந்த பஸ்தர் (Bastar) சமத்தானத்தின் தலைநகரான இராசபுரத்திற்கு எட்டுக்கல் தொலையில் உள்ள 'சித்திர கோடா' என்னும் ஊராகும்.

30. தாவடி செலுத்தி – தாவிச் செல்லும் படியாக நடத்தி; மீட்டு– வென்று; தன் பூங்கழற்கு – தன் பாதங்களில்; படைக்கலத் தடக்கை – படை ஏந்திய பெரிய கையினையுடைய; படைக்கலம் - படை, ஆயுதம்; விஜெயாதித்தற்கு அருளி – விசயாதித்தன் என்னும் வேங்கை நாட்டு மன்னனுக்குக் கொடுத்து; விசயாதித்தன் முதற் குலோத்துங்க சோழன் சிறிய தந்தையாவான்; இவனை ஏழாம் விசயாதித்தன் என்பர். இவன் சோழராட்சிக் குட்பட்டு கீழைச் சாளுக்கிய நாட்டின் ஒரு பகுதியான வேங்கை நாட்டை ஆண்டு வந்தான்; இதனை ஆகவமல்லன் மகனுன விக்கிரமாதித்தன் பிடித்து தன் தண்டநாயகர் மேற்பார்வையில் வைத்திருந்தான்.

31. இசைகொடு – புகழோடு; மீண்டு விட்டு அருளி - திரும்பவும் விசயாதித்தற்குக் கொடுத்து; இகலிடை பூண்ட - போரில் கொண்ட;

பூண்டஜயத் திருவொடுங் கங்காபுரி புகுந்தருளி
அங்கே ராஜாதி ராஜ ராஜந்(32)நெனத்
தாரதிப ராகத் தம் [17]நியமத் தியற்றிப்
படியில் மன்னவ ரடிதொழு தெத்த
[18]வின்மணிப் பீடத் திருந்து
வெங்கை நுட் டிநிற் கொண்ட
(33)விருநெதிப் பிறக்கம் வரிசையிற் காட்டி
ஆழியு நிகளமுங் கழற்றி யாங்கவர்
வாழிய விரத மாற்றி [19]பூழிமஞ்
செது வரம்பாட் செங்கோல் (34)செலுத்தி
மெதினி விளக்கி மீதுயர் வீரத்
தநிக்கொடி தியாகக் கொடியொடு மெற்பவர்
வருகென்று நிற்ப பொர்த்தொழி லுரிமையி

ஜயத்திருவொடும் - வெற்றியோடும்; கங்காபுரி - கங்கைகொண்ட சோழபுரம்; இது சோழநாட்டின் தலைநகர்; ராஜாதிராஜ நெந்: இப்பெயரை வீரராசேந்திரன் தன் வெற்றிற்கு அடையாளமாகக் சூடிக்கொண்டான்; கங்கை கொண்ட சோழபுரம் சாசனத்தில் இப்பெயர் 'இராசாதி ராஜன் — இராசராசன்' என்று காணப்படுகிறது.

32. தராதிபராக — உலகத்து மன்னராக; தம் நியமத்து இயற்றி — தன் முன்னோரின் வழியே ஏற்று; படி — உலகம்; மன்னவர் — பிற அரசர்கள்; விண்மணிப் பீடம் — ஒளி பொருந்திய முத்துக்கள் பதித்த சிம்மாசனம்; வெங்கை நறுட்டி நிற்கொண்ட — வெங்கை நாட்டினின்றும் திறையாகக் கொண்டு வந்த.

33. இரு நெதிப் பிறக்கம்—செல்வக் குவியல்; வரிசையில் காட்டி — ஒவ்வொன்றாகக் காட்டி; ஆழியும் நிகளமும் கழற்றி — சிறைப்பட்டோர் கட்டுகளையும் சங்கிலிகளையும் நீக்கி; அஃதாவது சிறைப்பட்டோரை விடுவித்து என்பது. ஆழி — காப்பு, கட்டு; 'கட்டளை' எனினுமாம். நிகளம் — கைகளைப் பிணிக்கும் சங்கிலி; அவர் வாழிய விரத மாற்றி — சிறையிலிருந்தும் விடுவிக்கப்பபட்டோர் சுதந்திரமாய் வாழும்படியாக தான் கொடுத்த வாக்கை நிறைவேற்றி; விரதம் — வாக்கு; ஆற்றி — நிறைவேற்றி; பூழிமம் செது வரம்பாக — பனி நிறைந்த இமய முதல் சேது (இராமேசுவரம்) வரையுமாக; 'சூழிமம்' என்றும் பாடம்.

34. மேதினி விளக்கி — உலகத்தில் புகழுண்டாகச் செய்து; மீது உயர் — மேலே உயர்த்தப்பட்ட; வீரத்தனிக் கொடி — ஒப்பற்ற வெற்றிக் கொடி; தியாகக் கொடி — தியாகத்திற்கு (கருணைக்கு) அறிகுறியான கொடி; ஏற்ப்வர் — பணிந்து வேண்டுவோர்; இஃது வீரராசேந்திரனது அருளுடைமையைக் குறித்தது. போர்த்தொழில் உரிமை-போர்த் தொழிலைத் தனக்குச் சொந்தமாகக் கொண்டமை.

லெ(35)ய்தி அரசு[20]வீற் றிருந்து
மெவரு மநுநெறி விளக்கிய கொராஜ
கெசரி வந்ம ரான உடையார்
ஸ்ரீவீர ராஜெந்திர[21] (36)தெவர்க்கு யாண்டு

அஞ்சாவது ஜயங்கொண்ட சொழ மண்டலத்து செங்காட்டுக் கொட்டத்து மாகணூர் நாட்டு மணி மங்கலமான ராஜ சூளாமணிச் சதுர் வெதி மக்கல—

37. த்து மஹா ஸபெயொம் இவ்வாட்டைக் கன்னி நாயற்று அமரபக்ஷத்து சதுர்த்தஸியுந் திங்கட்கிழமையும் பெற்ற உத்திரத்து நாள் எம்முர்[22] பிர்ம்மஸ்தா

38. னம் பெரிய மண்டபத்தெ தர்மம்[23] செய்து கூட்டக் குறைவறக் கூடியிருந்து இவ்வூர் ஜீவிதமுடைய ஸெநாபதிகள் [24]ஜயங் கொண்ட சொழ பிர்ம்மாதிராஜர் தமப்பநா—

39. ர் மஞ்சிப்பயநாரான ஜயசிங்க குலாந்தக ப்ரம

---

35. மெவரு மநுநெறி விளக்கிய – *செய்தற்கரிய மநுவென்னும் மன்னன் வகுத்த வழி நின்ற*; கொராஜ கெசரிவந்மர் : *இது வீரராசேந்திரனுக்குரிய சிறப்புப் பெயர்*; உடையார் - *மன்னர்.*

36 ராஜ சூளாமணிச் சதுர்வெதி மங்கலம்: *இதன் மற்றொரு பெயர்* மணி மங்கலம்; *இது செயங்கொண்ட சோழ மண்டலத்தில் (தொண்டை நாட்டில்) செங்காட்டுக் கோட்டத்தில்*, மாகணூர் *நாட்டில் உள்ளது.* இதனல் *வீரராசேந்திரன் காலத்தில் தொண்டை நாடு செயங்கொண்ட சோழமண்டலம் என்று அழைக்கப்பட்டதென்றும், அது பல கோட்டங்களாகவும், நாடுகளாகவும் பிரிக்கப்பட்டிருந்த தென்றும் நாம் அறிகின்றோம்.*

37. மஹாசபெயொம் – *மணி மங்கலம் ஊர்ச் சபையோம்*; இவ்வாட்டை – இந்த *ஆண்டு; அஃதாவது, வீரராசேந்திரன் ஆட்சியின் ஐந்தாம் ஆண்டு* (கி. பி. 1068); கன்னி ஞாயிறு – *புரட்டாசி மாதம்*; அமரபக்ஷம் – *தேய்பிறைக் காலம்*; உத்திரத்து நாள் : இருபத்தேழு *நாட்களில் பன்னிரண்டாவது நாளாகிய உத்திர நாளில்; அது சதுர்த்தசியும் திங்கட்கிழமையும் கூடியது*; சதுர்த்தசி - *நான்காவது திதி*; பிரமஸ்தானம் - *கருப்ப கிருகம், கருப்ப கிருகத்தையடுத்த மண்டபம்*; இதுவே 'பிரமஸ்தான பெரிய மண்டபம்' *என்று கூறப்பட்டது.*

38. தர்மஞ் செய்து – *பூசை செய்து*; கூட்ட – *அழைக்க*; குறைவறக் கூடி – *ஒருவரும் விடாமல் வந்து*; இவ்வூர் ஜீவிதம் உடையார் – *இந்த ஊரில் வாழுபவர்; ஜீவிதம் – வாழ்க்கை*; ஸெநாபதிகள் ஜயங்கொண்ட சொழ பிர்ம்மாதிராஜர்: *இவரைப்பற்றிய குறிப்பினை இச்சாசன முன்னுரைக் குறிப்பில் காண்க.* தமப்பநார் – *தகப்பனார்.*

39. மஞ்சிப்பயநாரான: *செயங்கொண்ட சோழ பிரம்மாதி ராசர் தகப்பனர் பெயர் மஞ்சிப்பயனர்*; இவருக்கு ஜயசிங்க குலாந்தக பிரம

ராயர் பக்கல் நாங்கள் ஸ்வங்கொண்டு முன்பிவர்க்கு இறை யிலியாகக் குடுத்து இவருதா யிவர் அ

40. நுபவித்து வருகிற நிலமாவது இவ்வூர் பெருந் தூம்பு நின்றும் பொன பெருங்காலுக்கு கிழக்கு[25] பாரத வாய்க்காலுக்கு வடக்கு இவர் விலெ கொண்டுடை

41. ம[26] கமுகந்தொட்டங் குழி இருநூற்றைம்பதும் பெரியெரி கரைக்கு கிழக்கு பனை யந்தஞ்செரித் தூம்புக் காலுக்கு (த்தெற்கும்) வடக்கு கொரஞ்சி உருத்ரகிரமவித்தந்

42. தொட்டத்துக்கு தெற்கு பெருவதிக்கு மெற்கு (ங் கிழக்கு) மற்று தெவதானம் நீக்கி குழி நாலாயிரத்து இரு நூறும் ஆக இவ்வூர்க் கொலா—

43. ல் குழி நாலாயிரத்து நாநூற்றைம்பதும் இவ்வூர் ஸ்ரீமத் த்வாராபதி ஸ்ரீ காமக்கொடி விண்ணகர் ஆழ்வார்க்கு [27]அர்ச்சநா பொகமாக இந்த

ராயர் என்ற பெயருமுண்டு. முன்னது இலரது இயற்பெயரும், பின்னது சிறப்புப் பெயருமாகும். நாங்கள் – ஊர்ச் சபையோம்; ஸ்வம் கொண்டு- பொருள் பெற்று; இவர்க்கு – ஜயசிங்க குலாந்தக பிரமராயருக்கு; இறையிலியாக – வரியில்லாது; இறை – வரி; இவருதாய் – இவருக்குச் சொந்தமானதாக.

40–41. கமுகந் தொட்டங்குழி இருநூற்றைம்பதும்: இது மஞ்சிப் பயனுர் விலேக்கு வாங்கியது; மணிமஙகலம் கலிங்கலிலிருந்து தண்ணீர் பாயும் பெரிய வாய்க்காலுக்குக் கிழககிலும், பாரத வாய்க்காலுக்கு வடக் கிலும் உள்ளது. எனவே, தெற்கிலும் மேற்கிலும் மணிமங்கலம் ஊர் இருந்ததென்று ஊகிக்கலாம். பெருந்தூம்பு – பெரியமடை, கலிங்கல். பெருங்கால் – பெரிய வாய்க்கால்; விலேகொண்டுடைய – விலேக்கு வாங்கிய.

கமுகந்தோட்டம் – பாக்குமரச் சோலே; குழி–33 அங்குல நீள அகலமுள்ள நிலம்; விளக்கம் முந்திய சாசனக் குறிப்புக்களில் காண்க.

42. தேவதானம் நீக்கி குழி நாலாயிரத்து இருநூறும்: இது இரண் டாவது நிலம்; இதில் தேவதான நிலமும் கலந்திருந்தது. இதற்கு மேற்கில் பெரிய ஏரிக் கரையும், தெற்கில் பனேயந்தஞ்சேரி மதகி லிருந்து தண்ணீர் பாயும் வாய்க்காலும், வடக்கில் கோரஞ்சி ருத்ரக் கிரமவித்தன் தோட்டமும், கிழக்கில் பெருவழியும் எல்லேகளாக இருந் தன. பெருவதி – பெரியவழி, பாதை; தேவதானம் – கோவிலுக்குத் தானமாக விடப்பட்ட நிலம்; இவ்வூர் கோலால்–இந்த ஊரில் வழங்கும் அளவுக் கோலால்.

43. ஸ்ரீமத் த்வாராபதி: இது மணிமங்கலம் இராசகோபாலப் பெருமாள் கோயில் இறைவன் பெயர். இவரது மற்ருெரு பெயர் ஸ்ரீ காமக் கொடி விண்ணகர் ஆழ்வார் என்பது. அர்ச்சனு பொகம் - கோயில் அர்ச்சகர்களுக்கு விடப்படும் மானிபம்; 'அர்ச்சனேக்கு உரிய பொருள்' என்பாருமுளர்; அர்ச்சனேக்குரிய செலவு எனினுமாம்.

44. மஞ்சிப்பய:நார் மகநார் ஸெநாபதிகள் ஜயங்கொண் ட சொழ பிர்மாதி ராஜர் குடித்தார் இன்நிலம் நாலாயிரத்து நா நூற்றைம்ப—

45. து குழியும் சந்ரநதி த்தவத்[28] இந்த ஆழ்வார்க்கு ஸஹெறயொமெ இறையிறுத்துக் குடுப்பொ மாநொம் மஹா ஸபெ யொம் ஸபெயு—

46. ளிருந்து கரையிட்டு கரைப் பொந்து பணித்தார் பிருந்தூர் பவநந்தி ஸஹஸ்ரநும் அரணைப் புறத்து திண்ட கூள மாதவக் ரமவித்தநும் ஈவு—

47. ணி மாதவ க்ரமவித்தநும் பணிப் பணியால் பணி கெட்டு எழுதிநென் ஊர்க்கரணத்தான் வடுகன் பாக்கரநென் இவை என் எழுத்து.

---

44. **மஞ்சிப்பயநார் மகநார்** : இவர் சேனபதிகள் ஜயங்கொண்ட சோழ பிரமாதிராசர் ஆவர். குடுத்தார் - கொடுத்தார்.

45 **சந்திராதித்தவந்** – *சந்திர சூரியர் உள்ள அளவும்;* **இந்த ஆழ்வார்க்கு**–*இந்த இறைவற்கு; அஃதாவது காமக்கோடி விண்ணகராழ் வார்க்கு;* **இறை இறுத்து** – *வரி நீக்கி; அஃதாவது அந்த நிலத்திற்குரிய வரியை நாங்கள் கொடுத்து, இறைவன் வரியின்றி அனுபவிப்பதற்குக் கொடுப்போம் என்பது.*

46. **கரையிட்டு கரைபொந்து** - *எல்லையிட்டு அளந்து, சரிபார்த்து;* **பணித்தார்** – *சொன்னர்; அவராவார்,* **பிராந்தூர் பவணந்திசகஸ்ரன், அரணைப்புறம் திண்டகுல மாதவ கிரமவித்தன், ஈவுணி மாதவ கிரமவித்தன்** *ஆகியோர்.*

47. **பணிப்பணியால்** – *ஒவ்வொருவரும் சொல்ல;* **பணிகேட்டு** – *அவரால் சொல்லியவற்றைக் கேட்டு;* **ஊர்க்கரணத்தான்** – *ஊர்ச்சபைக் கணக்கன்; இவனை* **'மத்தியஸ்தன்'** *என்றும் கூறுவர்.* **வடுகன் பாக்கரன்** – *வடுகனுகிய பாஸ்கரன்.* **இவை என் எழுத்து** : *இவ்வாறு சாச னத்தை எழுதியவர் சாசனத் திறுதில் எழுதுவது வழக்கம்.*

பயிற்சி விளுக்கள்

1. *செயங்கொண்ட சோழ பிரமாதிராயர் என்பார் யார்? அவரைப் பற்றிக் குறிப்பு வரைக.*

2. *செயங்கொண்ட சோழ பிரமாதிராயர் சாசனம் யார் காலத்தில் ஏற்பட்டது? அது எங்குக் காணப்படுகிறது?*

3. *செயங்கொண்ட சோழ பிரமாதிராயர் சாசனத்தில் காணப் படும் மெய்க்கீர்த்தியில் வீரராசேந்திரனது எந்தெந்த வெற்றிகள் கூறப் பட்டுள்ளன? அதில் கூறப்படும் செய்திகள் யாவை?*

4. *பதப் பொருள் தருக:— நிலவயம், சாமந்தர், தண்டு, தண்ட நாயகன், பரிபவம், அசி, வடகடல், தானை, கொடிப்படை, முதலி,*

வாகை, தாரம், குலதனம், மெகடம்பம், சூகரம், பரித்தொகை, தென்னன், மதவரை, செங்கீரை, வாரணம், வாரி, திறை, பிரட்டர், பதகம், வல்லவர்கோன், திங்கள், சளுக்கு பதம், அடவி, பொதகம், ஆழி, நிகளம், பிறக்கம், விரதம், ஆட்டை, கன்னி நாயறு, அமரபக்ஷம், பிரமஸ்தானம், ஜீவிதம், தமப்பநார், ஸ்வம், இறையிலி, அம்பு, பெருவதி, தேவதானம், இறையிறுத்து, ஊர்க்கரணத்தான்.

5. தொடர்களை விளக்குக:–'நீ வல்லவன் மகன் சிறுவன்,' 'பெரும் புனற் றுறை கங்கைமாநகர்,' 'பூழிமசேதுவரம்பா' 'மநுநெறி விளக்கிய கொ', அர்ச்சனு போகம், கரையிட்டுக்கரை பொந்து, பணிப் பணியால்.

6. குறிப்பு வரைக:— விக்கலன், கங்கபாடிக் களம், சாமுண்டராயன், நாகவை, கூடல் சங்கம், கோசலை சிங்கன், உலகமுழுதுடையாள், உலகை, கன்னியர், கங்காகெத்தன், காந்தை, விசய வாடை, விசயாதித்தன்.

7. இச்சாசனத்திலிருந்து வீரராசேந்திரன் ஆட்சிச்சிறப்பு, வெற்றி, புகழ், நாட்டின் எல்லை இவற்றைக் குறிப்பிடுக

8. "ஆகவ மல்லனு மவற்குமுன் னோட" எவர்க்கு முன்னோடினன்? எவ்விடத்தில்?

9. கூடல் சங்கமத்தில் வீரராசேந்திரன் செய்த போரைக் குறிப்பிட்டு, அதில் அவன் கொண்ட பொருட்களையும் எழுதுக.

10. வீரசிங்காசநம் பார்தொழ வெறி' 'சிந்தையு முகமுந் திருப்புயமிரண்டு, மெங்தெழி லு•வையொ டிருமடங்கு பொலிய', 'ஜயபத்திரத் தூண் நாகிலம் பரச நாட்டி', 'வல்லனுகில் வந்து காக்கென்று'– இவை நிகழ்ந்த இடஞ்சுட்டி வரலாற்றுக் குறிப்புத் தருக

11. பழியொடு வாழ்வதிற் சாவது சால நன்றென்று', 'கூடலில் வாரா தஞ்சினர் மன்னவ ரல்லர்'—இவ்வாறு, ஆகவமல்லன் எவ்வெவ்விடங்களில் கூறினன்? நிகழ்ந்தன யாவை?

12. வீரராசேந்திரன் இரட்டபாடி எழரை இலக்கத்தைச் செயித்த போது முதுகிட்ட மூவர் யாவர்? தன் வெற்றிக்கு அடையாளமாக அவன் அங்குச் செய்தன யாவை?

13. வீரராசேந்திரனை வேங்கை நாட்டில் எதிர்த்த மூவர் யாவர்? அவர்கள் முடிவு யாது?

14. அங்கே ராஜாதி ராஜரா ஜந் னெனத்,
தராதிப ராகத் தம்பியத் தியற்றி"—இயற்றியவர் யார்? எப்பொழுது? வரலாறு தருக.

15. மணிமங்கலம் எங்குளது? அதற்கு வழங்கிய மறுபெயர் யாது?

16. வீரராசேந்திரன் காலத்தில் தொண்டை மண்டலத்துக்கு என்ன பெயர்? அது எவ்வாறு பிரிக்கப்பட்டிருந்தது? சான்று காட்டி விளக்குக.

17 மஞ்சிப்பயனர், ஸ்ரீத் வராபதி–இவர்கள் யாவர்? இவர்களுக்கு வழங்கிய வேறு பெயர்கள் யாவை?

18. வீரராஜேந்திர தேவன் சாசனத்தில் ஸ்ரீத்வராபதிக்கு அர்ச்சனுபோகமாகக் கொடுக்கப்பட்ட நிலத்தைக் கரையிட்டு கரைபோந்து பணித்தார் யாவர்? அச்சாசனத்தை எழுதிய ஊர்க்கரணத்தான் யாவன்?

18. முதலாம் குலோத்துங்க சோழன் மெய்க்கீர்த்தி சாசனம் *

முன்னுரை

முதலாம் குலோத்துங்க சோழன் சாசனங்கள் என்பவை, முதலாம் குலோத்துங்க சோழனல் ஏற்பட்ட சாசனமும், அவன் காலத்தில் பிறரால் ஏற்பட்ட சாசனமு மாகும். அவை முதலாம் குலோத்துங்க சோழன் மெய்க்கீர்த்தி சாசனமும், வில்லவராயன் சாசன முமாம். அவற்றுள்முன்னது, குலோத்துங்க சோழன்[1] ஆட்சியின் பதினைந்தாம் ஆண்டு வரையுள்ள நிகழ்ச்சிகளைக் கூறும் அவன் மெய்க் கீர்த்தி மட்டும் அமைந்தது.

* S. I. I., Vol. II, Part II, No. 58, pp. 229–236

1. முதலாம் குலோத்துங்க சோழன் கீழைச் சாளுக்கிய மன்னனை இராசராச நரேந்திரனுக்கு அவன் மனைவியும், முதலாம் இராசேந்திர சோழன் மகளுமான அம்மங்கைதேவியிடத்தில் பிறந்த மகன். இராசேந்திரன் என்பது இவனது இயற்பெயர்.

இவன் வேங்கி நாட்டிற்கு இளவரசனானபோது, 'விஷ்ணு வர்த்தனன்' என்னும் சிறப்புப் பெயரைப் பெற்றான். இளமையில் தந்தை இறக்கவே, இவன் சிறிய தந்தையான விசயாதித்தன் கீழைச் சாளுக்கிய நாட்டை ஆண்டான். அப்பொழுது இராசேந்திரன் தன் அம்மானான வீர ராசேந்திரன் மேலைச் சாளுக்கியரோடு செய்த போர்களில் உதவியாயிருந்து போர் செய்தான். வீரராசேந்திரன் கி. பி. 1070ல் இறந்தான். அவனது ஆட்சியின் 1067ஆம் ஆண்டு இளவரசுப் பட்டமெய்திய அவன் மகன் அதிராசேந்திரன் அதே ஆண்டில் சோழநாட்டிற்கு மன்னனானான்; ஆனால் அவன் சில மாதங்களே சோழமன்னனாயிருந்து, பின் நோய் கண்டு திடீரென்று இறந்து விட்டான். அதிராசேந்திரனுக்குப் பிள்ளையில்லாததால், சோழநாடு அரசனின்றித் தத்தளித்தது.

அப்பொழுது வடபுலத்தில் போர் செய்துகொண்டிருந்த இராசேந்திரன், சோழநாட்டிற்குத் திரும்பி வந்து, தனது தாய்வழி உரிமை பாராட்டி கி. பி. 1070ல் சோழ நாட்டிற்கு மன்னனாகி, குலோத்துங்கன் என்னும் பெயரைச் சூடிக்கொண்டான். வீரராசேந்திரன் பரகேசரி எனவும், அவன் மகன் அதிராசேந்திரன் இராசகேசரி எனவும், குலோத்துங்கன் பரகேசரி எனவும் பெற்றுள்ள பட்டப் பெயர்களால் குலோத்துங்கன் அதிராசேந்திரனுக்குப்பின் சோழ மன்னன் ஆனான் என்பதை அறியலாம்.

முதலாம் குலோத்துங்கசோழன் சக்கர கோட்ட மண்டலத்தை யாண்ட தாராவர்ஷனை வென்று அவன் நாட்டிலுள்ள வைராகரம் என்னுமிடத்தில் யானைகளைக் கைப்பற்றியது, வீரராசேந்திரனுக்கு உதவியாகச் சென்று குந்தள நாட்டில் போர் நிகழ்த்தியது ஆகியவை இவனது இளமைக் காலப் போர்களாகும். இவன் சோழ நாட்டிற்கு மன்னனான பின், முதலில் தன்னை வடபுலத்திலிருந்து எதிர்த்த

இச் சாசனம் தஞ்சைப் பெரிய கோயில் நடுவிடத்துக் கருப்ப கிருகத்து மேலைப்புறச் சுற்றுச் சுவரின் வெளிப் புறத்தில் காணப்படுகிறது. இச் சாசனமும் இதனோடு சேர்ந்த இராசேந்திரன் காலத்துச் சாசனங்கள் நான்கும் பூமிக்குள் ஐந்தடி ஆழத்தில் புதைந்து கிடப்பதால், இதன் மெய்க்கீர்த்தி யடங்கிய பகுதி மட்டுமே படி யெடுக்க முடிந்தது என்பர். இது தமிழ் மொழியில் கிரந்த எழுத்துக்கள் கலந்து எழுதப்பட்டது; நான்கு பகுதிகளையுடையதாய், அறுபத்து நான்கு வரிகளைக் கொண்டது.

இம் மெய்க்கீர்த்தி சாசனத்தின் துவக்கத்தில் முதலாம் குலோத்துங்கசோழன் தன் இளமைப் பருவத்தில் வெங்கிநாட்டி

மேலைச்சாளுக்கிய மன்னனான ஆருவது விக்கிரமாதித்தனோடும், அவனுக்கு உதவியாக வந்த அவன் தம்பி செயசிங்கனோடும் போர் செய்து நங்கிலி என்னுமிடத்தில் வெற்றி பெற்றான். அதனால் கங்க மண்டலமும் சிங்கண மென்னும் கொண்காணமும் (வனவாசி) இவன் வசமாயின

பின்னர், இவன் பாண்டிய நாட்டின்மீது படை எடுத்துச் சென்று, அங்குத் தன்னை வந்து எதிர்த்த பாண்டியர் ஐவரையும் வென்று, அங்கங்கே வெற்றித் தூண்கள் நாட்டினான் அப்போரில், முத்துச்சலாபத்திற்குரிய பகுதியும், பொதியில் கூற்றமும், சையமலையும், கன்னியாகுமரிப் பகுதியும் இவன் வசமாயின.

இதன் பின்னர், இவன் சேரநாட்டின் மீது படை எடுத்துச் சென்று, மேலைக் கடற் கரையிலுள்ள விழிஞம், காந்தளூர்ச்சாலை, கோட்டாறு முதலிய இடங்களில் சேர மன்னனுடன் போர் செய்து வென்று, அங்கங்கே தன் படைகளை நிறுவி மீண்டான்.

இனி, இவனது தென்கலிங்கப்போர் இவன் மகன் விக்கிரம சோழனாலும், வடகலிங்கப்போர் இவனது படைத் தலைவனான கருணாகரத்தொண்டைமானாலும் நடைபெற்றன வடகலிங்கப்போரைச் சிறப்பித்துப் பாடிய நூலே சயங்கொண்டார் பாடிய கலிங்கத்துப் பரணி என்னும் நூலாகும்.

முதலாம் குலோத்துங்கசோழன் கடாரம், கம்போச நாடு, கன்னௌசி நாடு, பர்மா முதலிய அயல் நாடுகளுடன் தொடர்பு கொண்டிருந்தான் தன் நாட்டில் சுங்க வரியை நீங்கிச் 'சுங்கந் தவிர்த்தோன்' என்னும் சிறப்புப் பெயரைப் பெற்றான். தன் நாட்டிலுள்ள நிலங்களை யளந்து நில வரியை ஏற்படுத்தினான். இவனுடைய பட்டத்தரசி இரண்டாம் இராசேந்திர சோழனுடைய மகளான மதுராந்தகி என்பவளாகும். இவனுக்கு இராசராச சோழகங்கன், இராசராச மும்முடிச் சோழன், வீரசோழன், விக்கிரமசோழன் முதலிய எழு புதல்வர்களும், இரு புதல்வியரும் இருந்தனர். இவனது ஆட்சி காலத்தில் அரசியல் தலைவர்கள் பலரும், குறுநில மன்னரும் வாழ்ந்து வந்தனர்.

விருந்து வடபுலம் சென்று சக்கரகோட்டத்தை வென்று, அதனை ஆண்ட தாராவர்ஷனிடம் திறை பெற்றதும், மேலைச் சாளுக்கியர் நாடான குந்தளநாட்டின்மீது படை எடுத்துச் சென்று, நங்கிலி முதலிய இடங்களில் ஆறுவது விக்கிரமாதித்தனை வென்றதும், கங்க மண்டலம், சிங்கண முதலிய நாடுகளைச் செயித்ததுமான செய்திகள் கூறப்படுகின்றன. பின்னர் அவன் தன் தாய்வழி உரிமை பாராட்டி முதலாம் குலோத்துங்கன் என்னும் பெயரொடு சோழ நாட்டிற்கு மன்னனானதும், அவனது ஆட்சிச் சிறப்பும், பாண்டி மண்டலத்தில் பஞ்ச பாண்டியரை வென்று வெற்றிக் கொடி நாட்டியதும், பொதியில், சையம், கன்னியாகுமரி முதலிய இடங்களை வென்றதும், குடமலை நாட்டில் புகுந்து கோட்டாறு முதலிய இடங்களில் தன் படைகளை நிறுவியதுமான செய்திகள் அமைந்துள்ளன. இவை முதலாம் குலோத்துங்கன் வரலாற்றை அறிவதற்குப் பெரிதும் உதவுவதோடு, கலிங்கத்துப் பரணியில் அவனைப் பற்றிக் கூறப்பட்டவற்றை உறுதிப்படுத்தவும் உதவுகின்றன.

முதலாம் குலோத்துங்க சோழன் கி. பி. 1070 முதல் 1120 ஆம் ஆண்டு வரைச் சோழ நாட்டை ஆண்டான். இச் சாசனம் அவனது ஆட்சியின் பதினைந்தாம் ஆண்டில் ஏற்பட்டதெனவே, இதன் காலம் கி. பி. 1085 ஆம் ஆண்டு என்னலாம்.

சாசனம்

(1)ஸ்வஸ்திஸ்ரீ
புகழ்சூழ்ந்த புணரி யகழ்சூழ்ந்த புவியிற்
பொன்னெமி யளவுந் தன்னெமி நடப்ப
விளங்கு சயமகளை யிள(2)ங்கொப் பருவத்து
சக்கர கொட்டத்து விக்கிரமத் தொழிலால்
புதுமணம் புணர்ந்து மதவரை யீட்டம்
வயிரா கரத்து வாரிஅயின் முனை(3)க்—

குறிப்புரை.

1. **புகழ் சூழ்ந்த புணரி யகழ்சூழ்ந்த புவியில்:** இது முதற் குலோத்துங்கசோழன் மெய்க்கீர்த்தியின் துவக்கத்தொடர். இவனுடைய மெய்க்கீர்த்திகளில் சில **'புகழ்மாது விளங்க செயமாது விரும்ப'** என்றும், வேறு சில, **'திருமன்னி விளங்கும்'** என்றும் தொடங்கும்.

புணரியகழ் – கடலாகிய அகழி; புணரி–கடல். 'புகழ் சூழ்ந்த புவி, புணரி யகழ் சூழ்ந்த புவி' என்று கூட்டுக. **பொன்னெமி யளவும்** – பொன்மலை வரையும்; பொன்மலை –மேரு மலை; **தன்னெமி** - தன் ஆணை; நேமி—ஆணை, கட்டளை; **விளங்கு சயமகள்** – புகழ் விளங்கும் வெற்றி; இங்கு வெற்றி ஒரு பெண்ணாக உருவகம் செய்யப்பட்டுள்ளது. **இளங் கோப் பருவத்து** - இளவரசனாயிருந்த காலத்தில்.

2. **சக்கர கொட்டம்:** இது மத்திய மாகாணத்திலுள்ள வத்ஸ ராச்சியத்தில் உள்ளது. இதனை இப்பொழுது இந்திராவதி நதிக்கரையில்

கொந்தள வரைசர் தந்தள மிரிய
வாளுறை கழித்துத் தொள்வலி காட்டிப்
பொர்ப்பரி நடாத்திக் கீ(4)ர்த்தியை நிறுத்தி
வடதிசை வாகை சூடித் தென்திசை
தெமரு கமலப் பூமக(5)ள் பொதுமையும்

உள்ள 'சித்திரக் கூடம்' என்பர். இதைத் தலைநகராகக் கொண்டது சக்கரகோட்டக மண்டலமாகும். இராசேந்திரன் என்னும் முதற் குலோத்துங்கன் இளவரசனுயிருந்த காலத்தில், திக்கு விசயம் செய்தற்கெண்ணி வடபுலம் நோக்கிச் சென்று, இதை யாண்ட தாராவர்ஷனைச் செயித்து, அவனிடம் திறை கொண்டான் என்பது வரலாறு. விக்கிரமந் தொழில்—வீரத்தொழில்; விக்ரமம் — வீரம்.

புதுமணம் புணர்ந்து—சயமகளை இளங்கோப் பருவத்துப் புதுமணம் புணர்ந்து என்றபடி. அஃதாவது, குலோத்துங்கன் இளவரசனுயிருந்த காலத்தில் வடபுலம் சென்று தன் வீரத் தொழிலால் சக்கரக் கோட்டம் முதலிய பல புதிய நாடுகளைச் செயித்து என்பது. **மதவரை யீட்டம்** — யானைகளின் தொகுதி; யானைப்படை; வரை — மலை; மதம் பொழியும் வரை 'மதவரை' எனப்பட்டது; **வயிராகரத்து வாரி** - வயிராகரம் என்னும் இடத்தில் கைப்பற்றி; வயிராகரம் என்பது, மத்திய மாகாணத்திலுள்ள தோரூர் அந்த யானைகளும், வைரச் சுரங்கங்களும் அதிகம் உண்டு என்பர் குலோத்துங்கன் தன் வடபுல யாத்திரையில் அவ்வூரிலுள்ள எண்ணிறந்த யானைகளைக் கைப்பற்றினுன் என்று தெரிகிறது. அயின்முனை—கூரிய முனை; இங்கு, வாள் முனையைக் குறித்தது.

3. **கோந்தள வரைசர்தந்** - மேலைச் சளுக்கிய அரசர்களுடைய; கொந்தளம் - மேலைச் சளுக்கிய ராண்ட நாடு. முதற் குலோத்துங்கன் தன் வடபுல யாத்திரையில் சளுக்கிய ராண்ட பகுதியையும் தாக்கினுன் என்று இதனுல் தெரிகிறது. **தளம்** - சேனை; **இரிய** - புறங்காட்டி ஓட; **வாளுறை கழித்து** – வாளெடுத்து; **தோள்வலி காட்டி** —போர் செய்து; **போர்ப்பரி நாடாத்தி** — போர் செய்யும் குதிரைகளைச் செலுத்தி.

4 **வடதிசை வாகை சூடி** – வடக்குத் திசையில் பகைவர்களை வென்று வெற்றி மாலைச் சூடி; மத்திய மாகாணத்திலுள்ள வயிராகரத்தை எரியூட்டி அதிலுள்ள யானைகளைக் கைப்பற்றியதும், சக்கரக் கோட்டக மண்டலத்தை யாண்ட தாராவர்ஷனைச் செயித்துத் திறைகொண்டதும், கொந்தளர் சேனையை முறிய வடித்ததும் முதற் குலோத்துங்கன் வட திசையில் கொண்ட வெற்றிகளாகும். **தெந்றிசை** – தென்றிசையிலுள்ள பாண்டிய நாட்டில்.

5. **தேமரு கமலப் ………… தநிமையும் தவிர:** வீரராசேந்திரன் இறந்த பின்னர், சோழநாட்டை ஆளுதற் குரியார் இல்லாமல், உள்நாட்டுக் கலகங்கள் உண்டாகத் தலைப்பட்டன; தெற்கே பாண்டிய

பொ(6)ன்னி யாடை நன்னிலப் (7) பாவை
தனிமையுந் த(8)விரப் புனிதற் றிருமணி
மகுடம்² (9) முறை மையிற் சூடித்
தந்னடி யிர(10)ண்டுந் தடமுடி யாகத்
தொன்னில வெ(11)வந்தர் சூட முன்னை
மனுவாறு பெருக (12)கலியாறு வறுப்பச்
செங்கோல் திசை(13)தொறுஞ் செல்ல வெண்குடை
யிருநில (14)வளாக வெங்கணுந் தனுது
திருநிழல் வெ(15)வண்ணிலாத் திகழ ஒருதநி

மன்னர் போரிட்டுத் தங்கள் அடிமைத் தளைபை நீக்க முயன்றனர். இவ்வாறு பொதுமையிலும், தனிமையிலும் கிடந்து வாடிய சோழ இராச்சியத்திற்குத் துணை செய்வான் வேண்டி, வேங்கி நாட்டையாண்ட இரண்டாம இராசேந்திரன் தன் தாய் வழி உரிமை பாராட்டிக் 'குலோத்துங்கன்' என்னும் பெயரோடு சோழ நாட்டிற்கு அரசனானான் அச் செய்தியை இவ்வடிகள் புலப்படுத்துகின்றன.

நேமரு கமலப் பூமகள்: இலக்குமி; அது இங்கு சோழராட்சியாகிய செல்வத்தைக் குறித்து நின்றது. பொதுமை – பொதுத் தன்மை

6. பொன்னி – காவிரி; காவிரி நதி பாயப் பெற்ற சோழநாடு, 'பொன்னி யாடை நந்நிலப் பாவை' எனப்பட்டது.

7–8. தனிமை – உதவியற்ற நிலை; தவிர – நீங்க; புனிதற் றிருமணி மகுடம் - சிறந்த மதிப்பிற்குரிய மணி முடி; 'புனிதத்திரு' என்றும பாடம்.

9. முறைமையில் சூடி – முறையான உரிமை கொண்டாடி முடி சூடி; முதற் குலோத்துங்கன் முதலாம் இராசேந்திர சோழனுக்குப் பௌத்திரனும், வீரராசேந்திரனுக்கு மருமகனுமாவா னுதலின், சோழ ராச்சியத்திற் குரியவர் வேறு ஒருவரும் இல்லாத நிலையில், அவன் தன் தாய்வழி யுரிமை கொண்டாடி முடி சூடினுன்.

10-11 தந்னடி ....வெந்தர் சூட: தன் பாதங்களில் நிலவேந்தர் பலர் விழுந்து வணங்க; தடமுடி - கிரீடம்; முன்னை - ஆதியில்; மனுவாறு-மனு வேந்தன் வகுத்த நெறி; பெருக – நடக்க.

12 கலியாறு வறுப்ப – துன்பமாகிய தொடர் குறைய; கலியாறு என்பதற்குத் 'துன்பக்கடல்' எனப்பொருள் கொள்ளினுமாம். செங்கோல்-ஆட்சி

13–14 திசை தோறும் – நாற்றிசையும்; இருநில வளாகம் – உலகம்; 'எங்கணும் தனுது திருநிழல் வெண்ணிலாத் திகழ' என்று கொளக; தனுது - தனது

15. வெண்ணிலாத் திகழ – வெண்ணிலாவினைப் போல ஒளி வீச; ஒரு தநி மெரு - ஒப்பற்ற மேரு மலை; புலி விளையாட–புலிக்கொடி பறக்க; புலிக்கொடி சோழருக் குரியது

மெருவிற் புலி(16)விளை யாட வார்கடற்
றீவாந்தரத்து பூபாலர்(17) திறைவிடு தந்த
கலஞ்சொரி களிறு முறை(18)முறை நிற்ப விலங்கிய
தென்னவன் க(19)ருந்தலை பருந்தலைத் திடத்தன்
பொ(20)ன்னகர் புறத்திடைக் கிடப்ப இன்னாள்
பி(21)ற்குலப் பிறை பொல் நிற்பிழை யென்று(22)ஞ்
சொல்லெதிர் கொடிற் றல்லது தன்(23)கை
வில்லெதிர் கொடா விக்கலங் கல்லதர்
ந(24)ங்கிலி துடங்கி மணலூர் நாடுவென்த

16–17. **வார்கடற் றீவாந் தரத்து பூபாலர்:** *கடல் நடுவணுள தாய தீவுகளிலுள்ள அரசர்கள்; வார்கடல் – நீண்ட கடல்;* **திறை விடு தந்த–** *திறையாகச் செலுத்திய;* **கலஞ்சொரி களிறு** – *மதக்களிறு; கலஞ்சொரி– கல மளவாக மதத்தைச் சொரியும்;* **முறை முறை நிற்ப** – *வரிசை வரிசையாக நிற்ப.*

18–19. **விலங்கிய**–*புகழ் விளங்கும்; 'பகைத்து வேறுபட்ட' எனினுமாம்.* **கருந்தலை** – *பெரிய தலை;* **பருந்தலைத் திட** – *பருந்து உண்ணும்படித் துணித்திட என்பது.*

20. **பொன்னகர்ப் புறத்திடைக் கிடப்ப**–*தென்னவன் கருந்தலை பொன்னகர்ப் புறத்திடை பருந்தலைத்திடக் கிடப்ப என்பது. பொன்னகர் என்பது, கங்கைகொண்ட சோழபுரத்தினைப் போலும். இஃது விக்கிரமாதித்தனுக்கு துணையாகத் திரிபுவன பாண்டியனுடன் முதற் குலோத்துங்கசோழன் நாடாத்திய போராய் இருத்தல் வேண்டுமென்றும், இது அவனுடைய ஆட்சியின் ஐந்தாவது ஆண்டில் நடந்திருத்தல் வேண்டுமென்றும் ஆராய்ச்சியாளர் கூறுவர்.* **இன் நாள்**–*இதே சமயத்தில்.*

21–22. **பிற்குலப் பிறைபோல்**–*இளம் பிறைச் சந்திரனைப் போல;* **'பிழைபோல்'** *என்றும் பாடம்.* **நிற் பிழை** – *நிலையான குற்றம்;* **சொல்லெதிர் கோடிற்றல்லது** – *சொல்லுக்கு மாறாகக் கோடிற்று அல்லாமல்; அஃதாவது 'நிற் பிழை' என்னும் சொல் பிழை பட்டதல்லாமல் என்பது.*

23. **தந்கை வில்லெதிர் கொடா விக்கலந்** – *தன்னுடைய கைவிலின் குறி தவறாத விக்கலன்;* **விக்கலன்**-*விக்கிரமாதித்தன்;* **கல்லதர்**–*குன்றுகளுக்கிடையிலுள்ள பாதை* (Rocky roads); *அதர்–வழி.*

24. **நங்கிலி துடங்கி மணலூர் நடுவென்:** *முதற் குலோத்துங்கன் ஒரு படையுடன் வடக்கு நோக்கிச் சென்று விக்கிரமாதித்தன் தம்பி செயசிங்கன் ஆண்டு வந்த வனவாசியைக் கைப்பற்றினன்; அதனால் விக்கிரமாதித்தன் கோலார் சில்லாவிலுள்ள நங்கிலி என்னுமிடத்தில் அவனை எதிர்த்துப் போர் புரிந்தான். போரில் குலோத்துங்கன் வெற்றிகொண்டு விக்கிரமாதித்தனைத் துங்கபத்திரைக்கு அப்பால்

து(25)ங்க பத்திரை யளவும் (26)வெங்கணும்[5]
பட்ட வெங்களிறும் (27) விட்டதந் மா(28)னமுங்
கூறிந வீரமுங் கிடப்ப (29) எறிந
மலைகளு முதுகு நெளிப்ப (30)இழிந்த
நெதிகளுஞ் சுழன் றுடை(31)ந் தொட விழுந்த
கடல்களுந் தலைவி(32) ரித் தலமரக் குடதிசை
தன்நா ளுகந்து (33)தானுந் தாதையும்
பன்னு ளிட்ட பல(34)பல முதுகும்
பயந்தெதிர் மாறிய ஜயப்(35)பெருந் திருவும்
புகழிந் செல்வியும்
வாளா ரொண்(36)கண் மடந்தைய ரிட்டமும்
மீளாது குடுத்த வெ(37)ங்கரி நிரையுங்
கங்க மண்டமுஞ் சிங்கண மெ(38)ன்நும்
பாணி இரண்டும் ஒருவிசைக் கொண்டு

போகத் துரத்திச் சென்றான். அங்ஙனம் துரத்திச் சென்றவன் இடையிலுள்ள மணலூர், அளத்தி முதலான இடங்களில் மீண்டும் அவனைப் புறங்கண்டான் என்பது. இப்போர் முதற் குலோத்துங்கனது ஆட்சியின் பதினொன்றாம் (கி.பி.1081) ஆண்டில் நடைபெற்றிருக்க வேண்டும்.

25–28. துங்கபத்திரை யளவும் எங்கணும்: நங்கிலி தொடங்கித் துங்க பத்திரை அளவாகவுள்ள எல்லா இடங்களிலும் என்பது. இது இறுதியில் துங்க பத்திரை நதிக் கரையில் நடந்த போரைப் பற்றியது. நங்கிலி துடங்கி ......எங்கணும்' என்பதற்குப் பதிலாக, 'அளத்தியி விட்ட களிற்றின் றிட்டமும்' என்ற பாடம் சில பிரதிகளில் காணப்படுகிறது. பட்ட வெங்களிறு–இறந்துபட்ட யானைகள்.

29–31. விட்ட தந் மானம்–பெருமை; கூறின வீரமுங் கிடப்ப – வீரக் கூற்றும் போர்க்களத்தே நிற்க; எறிந மலைகளும் முதுகு நெளிப்ப–எறிச் சென்ற மலைகளிலெல்லாம் பாதைகள் உண்டாக; இழிந்த நெதிகள் – சேனைகள் இறங்கிய நதிகள்; கடல்களும் தலைவிரித் தலமர – கடலகள் ஒலிக்க; அது இங்குச் சேனைத் திரளைக் குறிக்கும்.

32–39. குடதிசை தன்நா ளுகந்து .... கொண்டு ஈண்டிய புகழெடு: துங்க பத்திரைக் கரையில் நடந்த போரில், விக்கிரமாதித்தனும் அவன் தம்பி சயசிங்கனும் தோல்வியுற்று ஓடி ஒளிந்தனர். பொருட் குவியலும், மடந்தைய ரீட்டமும், எண்ணிறந்த யானைகளுமன்றி, கங்க மண்டலம், சிங்கணம் என்னும் இருநாடுகளும் குலோத்துங்கன் வசமாயின என்பது. குடதிசை – மேலைத்திசையில்.

பன்னுளிட்டமும் பல பல முதுகும் – பல நாட்களாகப் புறங் காட்டிய வீரர்களும்; பயந்தெதிர் மாறிய – பயந்து பின் வாங்கிய; ஜயப் பெருந் திரு – வெற்றி; வாளா ரொண் கண் மடந்தையர் –

(39)ஈண்டிய புகழொடு பாண்டி மண்டிலங்
(40)கொள்ளத் திருவுளத் தருளி வெள்ள
வருபரி தரங்கமும் (41)பொருகரித் தரங்கமுந்
தந்திர வாரியு முடைத்தா(42)ய்
வடகடல் தென்கடல் படர்வது பொலத்
த(43)ன்பெருஞ் சேனை ஏவிப் பஞ்வர்
ஐய்வரும் பொ(44)ருத பொர்க்களத்து அஞ்சி
வெருவி முதுகுநெ(45)ளித் தொடி அரணெநப்புக்க
காடு துடைத்து (46)நாட்டடிப் படுத்து

வாள் போன்ற கூரிய கண்களையுடைய பெண்கள்; ஈட்டம் – கூட்டம், தொகுதி; மீளாது குடுத்த – மீட்க இயலாது விட்ட; வெங்கரி நிரை – யானைக் கூட்டங்கள்; சிங்கணம் – சிங்கணம என்னும் நாடு; இதனைக் கொண்கானம் என்றும் கூறுவர். பாணி இரண்டும் – நாடுகள் இரண்டையும்; அவை கங்க மண்டலமும் கொண்கானமும்.

39–41 ஈண்டிய புகழொடு– நிறைந்த புகழோடு; திருவுளத் தருளி– எண்ணங்கொண்டு; வெள்ள வருபரி தரங்கமும் – வெள்ளமாய் வரும் குதிரைகளாகிய அலைகளும்; வெள்ளம் – கூட்டம்; தரங்கம் - அலை. பொருகரித் தரங்கம் – போர் செய்யும் யானைகளாகிய அலைகளும்; தந்திர வாரியும் -போர் வீரர்களாகிய கடலும்; இங்குச், குலோத்துங்கன் காலாட் படை கடலாகவும், குதிரைப் படையும் யானைப் படையும் அக்கடலிடை எழும்பும் அலைகளாகவும் உருவகிக்கப் பட்டுள்ளன

42. வடகடல் தென்கடல் படர்வது பொல - வடகடல், தென்கடல் மேல் படர்வது போல வடக்கேயுள்ள சோழர் படை தெற்கேயுள்ள பாண்டியர் படை மேல் பாய்ந்து என்பது

43–46. பஞ்வர் ஐய்வரும் பொருத : வீரராசேந்திர தேவன் காலம் வரை சோழ மன்னர்களின் ஆட்சிக்குட்பட்டு திறை செலுத்தி வந்த பாண்டியர்கள் அதிராசேந்திரன் பட்ட மெய்தியதும், சுயாதீனமடைந்து பாண்டிய நாட்டை ஐந்து பிரிவுகளாகப் பிரித்துத் தனித்தனியாட்சி புரிந்து வந்தனர். அவர்களே 'பஞ்சவர் ஐவர்' எனப்பட்டனர். அவர்களைத் தன்னடிப் படுத்த முதற் குலோத்துங்கன் கி. பி. 1084ஆம் ஆண்டு படை எடுத்து வாகை சூடினுன். பாண்டியர் ஐவரும் புறங்காட்டி ஓடி ஒளிந்தனர். முதற் குலோத்துங்கன் தான் வென்ற பகுதிகளில் வெற்றித் தூண்களை நாட்டினுன் கோட்டாறு என்னும் இடத்தில் தன் படைகள் தங்குவதற்கு ஒரு படை வீடு அமைத்தான். இப்போரில் இவன் கைப்பற்றிய நாடுகளுள் முத்துச் சலாபத்திற் குரிய மன்னார் குடாக் கடலைச் சார்ந்த நாடும், பொதியில் கூற்றமும், கன்னியாகுமரிப் பகுதியும் சிறந்தவை யாகும்.

வெருவி – பயந்து; நெளித்தொடி – புறங்காட்டி ஓடி; அரணெநப் புக்க காடு துடைத்து – தக்க காவல் என்று புகுந்த காட்டை அழித்து; நாட்டடிப் படுத்து – நாட்டை தனக்கு அடிமைப் படுத்தி

மற்றவர் தம்ம(47)ம வனசரர் திரியும்
பொற்றை (48)வெஞ்சுர மெற்றிக் கொற்ற
வி (49)ஜய ஸ்தம்பம்எத் திசைதொறும் நிறு(50)த்தி
முத்திங் சலா(51)பமும் முத்தமிட் பொதியிலும்
மத்த(52)வெங் கரிபடு மைய்யச் சய்யமுங்
கன்நி(53)யுங் கைக்கொண் டருளி தென்நாட்
டலைகாட் டி(54)ய்குட மலைநா டுள்ள
சாவெ றெல்லாம் இரு(55)விசும் பெற
மாவெ றியதங் வருதநித் தலைவரை(56)க்
குறுகலர் குலையக் கொட்டா றுட்படட
நெறிக(57)ளில் நிலைகளிட் டருளி பொங் கொளி
யாரமும் (58)திருப்புயத் தலங்கலும் பொல்
வீரமுந் தி(59)யாகமும் விளங்க வீற்றிருந்
தருளிந கொவி ராஜகெ(60)கசரி வந்ம
ராநசக்ர வத்திகள் ஸ்ரீகொலொத் துங்க

47–50. வனசரர் – வேடர்; பொற்றை வெஞ்சுரம் – *சிறு குன்றுகளை யுடைய பாலைவனம்;* எற்றி – *தாக்தி;* கொற்ற விஜய ஸ்தம்பம் – *வெற்றித் தூண்கள்.*

51–52. முத்தமிட் பொதியிலும்: *முத்தமிழ் பேசப்படும் பொதியில் கூற்றமும்; கூற்றம் – நிலப்பகுதி;* மத்தவெங் கரிபடு – *யானைகள் நிறைந்த;* மைய்யச் சய்யமும் – *மேலைத் தொடர்ச்சி மலைப்பகுதியும்; சய்யம் – மலை;* கன்நி–*கன்னியாகுமரிப் பகுதி.*

53. தென்னுட் டலை காட்டி – *கன்னியா குமரியைச் சோழ நாட்டின் தெற்கு எல்லையாகக் காட்டி என்பது.*

54–55 குடமலை நாடு - *கொங்கு நாடு;* சாவெறு - *சாவேறு, பகையரசனைச் சூழ்ந்து காக்கும் படை மீது ஒரு முகமாய்ப் பாய்ந்து ஊடறுத்துச் செல்ல முயன்று அங்நிலையில் உயிர் துறத்தலையே விரதமாகக் கொண்ட வீரர் தொகுதி* (heroses); இரு விசும் பெற – *மடிய* மா–*குதிரை;* வரு தநித் தலைவர்-*படைத் தலைவர்.*

56–59. குறுகலர் குலைய - *பகைவர் அழிய;* கொட்டாறு : *கன்னியா குமரியை யடுத்த ஒரு நகர்;* இதில் *குலோத்துங்கன் படைவீடு ஒன்றிருந்தது.*

நெறிகளில் நிலைகளிட் டருளி: *குலோத்துங்கன் படை எடுத்துச் சென்ற வழிதோறும் படைவீடு அமைத்தது என்பது.* ஆரம் – *முத்து மாலை;* அலங்கல் – *பூமாலை; ஆரமும் அலங்கலும் போல வீரமும் தியாகமும் விளங்க என்றபடி.*

60. ராஜகெசரி வந்மர்: *இது குலோத்துங்கன் பட்டப்பெயர்; இவனுக்கு முன் முடி சூடிய அதிராசேந்திரன் 'பரகேசரி' என்று அழைக்கப்பட்டான்.* சக்கரவத்திகள்: *சோழ அரசர்கள் பெரும்பா*

(61)சொழ தெவற்க்கு யாண்டு பதினஞ்சா
(62)வது உடையார் ஸ்ரீ வீரராசெக்ர தெவர் நம்பிராட்
(63)டியாரான அருமொழிநங்கை யாராந ஸிம்ஹன்மஹா
(64) தெவியார் ....

லும் 'உடையார்' என்றே அழைக்கப்பட்டனர்; முதலாம் குலோத்துங்கன் கால முதல் அவர்கள் 'சக்கரவர்த்திகள்' என்றும், 'திரிபுவன சக்கர வர்த்திகள்' என்றும் அழைக்கப்பட்டனர்.

61–64 யாண்டு பதினஞ்சாவது – ஆட்சியின் பதினைந்தாவது ஆண்டு; உடையார் ஸ்ரீ வீரராசேந்திர தேவர்; இவன் சோழநாட்டை கி பி 1063 முதல் 1070 வரை ஆண்டான்; முதலாம் குலோத்துங்க னுக்கு இவன் அம்மான் முறையினன். இவனது பட்டத் தரசியின் பெயர் உலக முழுதுடையாள். இவனுக்கு அருமொழி நங்கை என்னும் மற் றொரு மனைவியும் உண்டு என்பது, இச்சாசனத்தால் அறியப்படுகிறது.

நம்பிராட்டியார் - மனைவியார்; அருமொழி நங்கையரான ஸிம்மன் மஹா தெவியார் : அருமொழி நங்கை என்பது இயற்பெயர்; ஸிம்ஹன் மஹாதெவியார் என்பது சிறப்புப்பெயர். இவள் வீரராசேந்திரன் மனைவியருள் ஒருத்தி. இவள் தன் கணவனான வீரராசேந்திரன் இறந்த பின்னும், பதினைந்து ஆண்டுகள்வரை உயிரோடிருந்தாள் என்பது இச் சாசனத்தால் அறியப்படுகிறது.

பயிற்சி வினாக்கள்

1. முதலாம் குலோத்துங்க சோழன் மெய்க்கீர்த்தி சாசனம் எங்குக் காணப்படுகிறது? அது எப்பொழுது ஏற்பட்டது? அதில் காணப்படும் செய்திகள் யாவை?

2. முதற் குலோத்துங்கன் மெய்க்கீர்த்திகளின் தொடக்கங்கள் சிலவற்றை எழுதுக.

3. குலோத்துங்கன் இளமைப் பருவத்தில் அடைந்த வெற்றிகள் யாவை?

4. குறிப்பு வரைக:— சக்கர கோட்டம், வயிராகரம், விக்கலன், நங்கிலி, முத்தின் சிலாபம், பொதியில், சையம், கோட்டாறு, பஞ்சவர்.

5. "தேமரு கமல......தனிமையுந்தவிர" குலோத்துங்கன் செய்தது யாது?

6. முதற் குலோத்துங்கன் காலத்துச் சோழ நாட்டு எல்லையைச் சாசனக் குறிப்பு கொண்டு எழுதுக.

7. விளக்கம் தருக:– பிற்குலப் பிறைபோல் நிற்பிழை எனும் சொல், வடகடல் தெங்கடல் படர்வது போல, 'சாவெறெல்லாம் தவி விசும் பேற......... நிலைகளிட் டருளி'

8. 'பாணி இரண்டும் ஒரு விசைக் கைக்கொண்டு' - கொண்டது யார்? பாணி இரண்டு எவை?

முதலாம் குலோத்துங்க சோழன் சாசனங்கள்

19. வில்லவராயன் சாசனம் *

முன்னுரை

வில்லவராயன் சாசனம் என்பது, வில்லவராயன் என்னும் பெயருடைய ஒருவன் திருவானைக்கா திரிபுவனபதியார்க்கு உரிய தான தேவதான நிலத்தை அக்கோயில் கன்மிகளிடம் விலைக்கு வாங்கி, அதனை உழுது திருத்தி அக்கோயிலில் அவன் எழுந்தருவித்த இடங்கை நாயகற்கும் நம்பிராட்டியார்க்கும் தானமாகக் கொடுத்ததைப் பற்றிய சாசனமாகும். (இச்சாசனம் முதலாம் குலோத்துங்கன்† காலத்தில் அவன் ஆட்சியின் நாற்பத்தேழாம் ஆண்டில் ஏற்பட்டது. (இஃது திருச்சிராப்பள்ளி மாவட்டம் திருவரங்கம் சம்புகேசுவரர் கோயில் இரண்டாவது பிரகாரத்தின் கீழைச் சுவரில் காணப்படுகிறது.) தமிழ் மொழியில் கிரந்த எழுத்துக்கள் கலந்து எழுதப்பட்டது.) இருபத்தொரு பத்திகளையுடையது.

இச் சாசாசனத்தின் முற்பகுதியில் முதலாம் குலோத்துங்கன் வெற்றிகளையும், கன்னியாகுமரி முதல் தங்கபத்திரை வரையுள்ள அவனது நாட்டுச் சிறப்பினையும், அவன் தன் பட்டத்தரசியான உலகமுழுதுடையாளோடும் வீற்றிருந்த சிறப்பினையும் கூறும் அவனது மெய்க்கீர்த்தி அமைந்துள்ளது. பிற்பகுதியில், வில்லவராயன் என்போன், திருவானைக்கா எம்பெருமான் கோயில் நிலமாய்ப் பயனின்றிக் கிடந்த நிலத்தை விலைக்கு வாங்கி நன்றாகப் பண்படுத்திப் பயிரிட்டு, ஆண்டு ஒன்றுக்கு அக்கோயிலில் அவன் எழுந்தருளச் செய்த இடங்கை நாயகர்க்கும் நம்பிராட்டியார்க்கும் நாள் பூசைக்கும் திருவிழாவிற்குமாக, இருபத்து முக்கலனே இருதூணிக் குறுணி நெல்லைக் கார்பாதி, பசானம் பாதியாக அளப்பதாக அக்கோயில் கன்மிகளிடம் உறுதி செய்து கொடுத்த செய்தி அமைந்துள்ளது.

---

9. குலோத்துஙசன் பெயரோடு சேர்த்துச் சொல்லப்பட்ட அடைமொழிகள் யாவை? அவன் வெற்றிச் சிறப்பைத் தருக.

10 குலோத்துங்க சோழனைப் பற்றிக் கூறும் சாசனங்கள் எவை? அவை அவன் ஆட்சியில் எந்தெந்த காலங்களில் ஏற்பட்டன? அவைகளால் அறியப்படும் குலோத்துங்கன் செய்திகள் எவை?

11. பொருள் தருக:— கண்ணாறு, சாவேறு, விச்சாதிரம், ஒருமா.

12. அருமொழி நங்கை யாவர்? அவளுக்கு வழங்கிய வேறு பெயர் யாது?

* S. I. I., Vol. III, Part, II, No. 76, pp. 168–172.

† முதலாம் குலோத்துங்கன் வரலாற்றினை இதற்கு முந்திய சாசன முன்னுரைக் குறிப்பில் கண்டு கொள்க.

முதலாம் குலோத்துங்க சோழன் கி. பி. 1070 முதல் 1120 ஆம் ஆண்டு வரை சோழநாட்டை ஆண்டான். இச் சாசனம் அவனது ஆட்சியின் 47ஆம் ஆண்டு ஏற்பட்டதெனவே, இதன் காலம் கி. பி. 1117ஆம் ஆண்டு என்னலாம்.

சாசனம்

(1)ஸ்வஸ்திஸ்ரீ
புகழ்சூழ்ந்த புணரி யகழ்சூழ்ந்த புவியில்
பொங்நெமி யளவுந் தங்நெமி நடப்ப
விளங்கு சயமகளை யிளங்கொப் பருவத்து
சக்கர கொட்டத்து விக்கிரமத் தொழிலால்
புதுமணம் புணர்ந்து மதவரை யீட்டம்
வயிரா கரத்து வாரிஅயிர்(2) முணக்—
கொந்தள வரசர் தந்தள மிரிய
வாளுறை கழித்துத் தொள்வலி காட்டிப்
பொர்ப்பரி நடாத்திக் கீர்த்தியை நிறுத்தி
பொன்னி யாடை நன்னிலப் பாவை
தனிமையுந் தவிரப் புனிதற் றிருமணி
மகுடம் முறை மையிற் சூடித்

---

1. ஸ்வஸ்தி ஸ்ரீ: *இது சாசனங்களில் மங்கலம் குறித்து வரும் வடமொழித்தொடர்.* புகழ் சூழ்ந்த புணரி யகழ் சூழ்ந்த புவியில்: *முதலாம் குலோத்துங்கன் சாசனங்களுள் சிலவற்றில் வரும் மெய்க் கீர்த்தியின் தொடக்கம் இது. புணரி — கடல்; அகழ் — அகழி.* பெந்நேமி யளவும்— *பொன் மலையாகிய மேரு வரையும்;* தந்நேமி *- தன் ஆணை;* சயமகள் — *வெற்றி யென்னும் பெண்;* இளங்கோ பருவம் — *இளவரசனுயிருந்த காலம்.*

சக்கர கொட்டம்: *இது மத்திய மாகாணத்திலுள்ள வத்ஸ ராச்சியத்திலுள்ளது; இதனைக் குலோத்துங்கன் காலத்திலாண்டவன் தாரா வர்ஷன் என்பவனுவான்.* விக்கிரமத் தொழில்—*வீரத் தொழில்.*

புதுமணம் புணர்ந்து—*வெற்றிகொண்டு;* மதவரை யீட்டம் — *யானைகள்;* வயிராகரம்: *இது சக்கர கோட்டக மண்டலத்தை யடுத்திருந்த ஓர் ஊர்; குலாத்துங்கன் இதனை எரியூட்டி, இங்குள்ள யானைகளைக் கைப்பற்றினன்.*

2. கொந்தளவரசர் — *சாளுக்கிய மன்னர்; மேலைச் சாளுக்கிய மன்னனுன விக்கிரமாதித்தன் ஆட்சிக்குட்பட்ட பல சிற்றரசர் இருந்தனர்; அவர்களில் கொந்தள அரசர்களும் ஒரு சிற்றரச மரபினராவர். இவர்களை நுளம்ப பாடியை ஆண்ட 'பாண்டிய மன்னர்' என்பர் இக் கால ஆராய்ச்சியாளர்.*

தேமரு கமலப் பூமகள் — *சோழ ராச்சியம்;* பொந்நியாடை நன் நிலப்பாவை — *காவிரி நதி பாயும் சோழ நாடு.*

தங்கடி யிரண்டுங் தடமுடி யாகத்
தொங்கில வெங்தர் சூட முங்ணே
மனுவாறு பெருக கலியாறு வறுப்ப
செங்கொல திசைதொறுஞ் செல்ல வெண்குடை
யிருநில விளாகம் வெண்கணுங் தனது
திருநிழல் விண்ணிலாத் திகழ (4)ஒருதநி
மெருவில் புலிவிளை யாட வார்கடற்
றிவாங் தரத்துப் பூபாலர் திறைவிடுதங்த
கலஞ்சொரி களிறு முறைநிற்ப விலங்கிய
தெங்னவங் கருங்தலை பருங்தலைத் திடத்தங்
பொங்னகர்ப் புறத்திடைக் கிடப்ப விநாள்
பிற்குலப் பிறைபொல் நிற்பிழை எங்னுஞ்
சொல்லதிர் கொடிற் றல்(5)லது தங்கை
வில்லது கொடா வெழ்குலத் தரசர்
அளத்தியி லிட்ட களிற்றின தீட்டமும்
பட்டமும் பரியும் விட்டதங் மாநமும்
கூறிந வீரமும் கிடப்ப எறின
மலைகளு முதுகு நெளிப்ப யிழிங்த

---

3. **மகுடம் உரிமையில் சூடி:** *சோழ நாட்டிற்குரிய மகுடத்தைத் தன் தாய் வழி உரிமையோடும் சூடி;* **தொந்நில வெந்தர் சூட:** *தனது ஆட்சியினை பழமையான வேந்தர் பலரும் ஏற்றுத் திறை செலுத்த;* **மனுவாறு** – *மனுநெறி;* **இருநில விளாகம்** – *உலகம்.*

4. **மெருவில் புலி விளையாட:** *மேரு மலையில் புலிக்கொடி பறக்க; அதாவது மேருமலை வரை தன் ஆட்சி நடக்க என்பது.* **தீவாந்தரத்துப் பூபாலர்:** *கடலில் தீவுகளிடை யிருந்து ஆளும் அரசர்கள்;* **கலஞ்சொரி களிறு** – *மதயானை.*

விலங்கிய தெந்னவந்: *தன்னாணையை மறுத்த பாண்டியன்;* **பருந் தலைத்திட** – *பருந்துகள் உண்ண;* **வில்லது கொடா வெழ குலத் தரசர்:** *வில் வைத்துக் குறி தவறாது எய்யும் சாளுக்கிய குல மன்னர் என்பது; வேழ குலமென்பது, வேள்குல மென்றும், வேளகுல மென்றும் சாசனங்களில் காணப்படுகிறது.*

5. **அளத்தியிலிட்ட**–*அளத்தி என்னுமிடத்தில் விட்டுப் போன; நங்கிலி என்னுமிடத்தில் நடந்த போரில் குலோத்துங்கன் விக்கிரமாதித்தனைத் துங்கபத்திரை நதிவரைத் துரத்திச் சென்றான். அங்ஙனம் துரத்திச் சென்றவன், இடையிலுள்ள மணலூர், அளத்தி முதலான இடங்கள்ளிலும் அவனைப் போரில் புறங்கண்டான் என்பது வரலாறு. 'அளத்தி' என்பது மைசூர் ராச்சியத்தி லுள்ளதோர் ஊர்.*

பரியும் – *குதிரைப்படையும்;* **வீரமும் கிடப்ப** – *மானத்தோடு வீரமும் சொல்லளவில் நிற்ப;* **மலைகளும் முதுகு நெளிப்ப**-

நதிகளுஞ் சூழன் றுடைந் தொட விழுந்த
கடல்களுந் தலைவிரித் தலமரக் குடதிசைத்
தந்நா ளுகந்து தானும் தானை(6)நயும்
பந்நா ளிட்ட பலபல முதுகும்
பயந்தெதிர் மாறின ஜயப்பெருந் திருவும்
பழியுகந்து குடுத்த புகழிந் செல்வியும்
வாளா ரொண்கண் மடந்தைய ரீட்டமும்
மிளாது குடுத்த வெங்கரி நிரையும்
கங்கமண் டலமுஞ் சிங்கண மெந்நும்
பாணரி யிரண்டும் ஒருவிசைக் கைக்கொண்
(7) டீண்டிய புகழொடு பாண்டி மண்டலங்
கொள்ளத் திருவுளத் தடைத்து வெள்ள
வருபரித் தரங்கமும் பொருபரிக் கலங்களும் பொலத்
தந்திர வாரியு முடைத்தாய் வந்து
வடகடல் தெங்கடல் படர்வது பொலத்
தங்பெருஞ் செனையை யெவிப் பஞ்சவர்
ஐவரும் பொருத பொர்க்களத் (8) தஞ்சி
வெருநெளித் தொடி அரணெனப் புக்க
காடறத் துடைத்து நாட்டடிப் படுத்து

நதிகளோடு மலைகளும் நடந்து செல்வதற்கு இடங் கொடுப்ப; விழுந்த கடல்களுந் தலைவிரித் தலமர — தோல்வியுற்ற சேனைத்திரளும் வருந்த.

6. பந்தாளிட்ட பல பல முதுகும் ... ... ஜெயப் பெருந் திருவும்: பல நாட்களாகப் போரில் புறங்காட்டிய பல வீரர்கள் பயந்து தன் பக்கம் சேர்ந்ததாகிய வெற்றியும் என்பது. மிளாது கொடுத்த — மீட்க இயலாது விட்டு விட்ட; நிரை — கூட்டம், தொகுதி; பாணி — நாடு; ஒரு விசை — ஒரே தடவையில்

7. ஈண்டிய — மிகுந்த; திருவுளத் தடைத்து — எண்ணங்கொண்டு; வெள்ளவரு — வெள்ளம்போல வரும் மிகுதியாக வரும்; தரங்கம் — அலை; பொருபரி; இஃது 'பொருகரி' என்றிருத்தல்வேண்டும்; போர் செய்யும் யானை என்பது இதன் பொருள். கலம் — மரக்கலம்.

தந்திரவாரி — காலாட் படையாகிய கடல்; தந்திரம் — காலாள் படை; வாரி — கடல். வடகடல் தெங்கடல் படர்வது போல — வடகடல் தென் கடல் மீது பாய்வதுபோல; வட கடலும் தென்கடலும் கலப்பது போல எனினுமாம். பஞ்சவர் ஐவர்: இதற்குரிய விளக்கத்தை முந்திய சாசனக் குறிப்புரையிடத்துக் காண்க.

8. வெரு — வெருவி, பயந்து; நெளித்து — பின் வாங்கி; காடறத் துடைத்து — காடு முழுவதையும் அழித்து. நாட்டடிப் படுத்து — நாட்டைத் தன் வசப்படுத்தி; வனரசர் — வேடர்.

மற்றவர் தம்மை வனசரர் திரியும்
பொச்சை வெஞ்சுர மெற்றி கொற்ற
விஜய ஸ்தம்பந் திசைதொறு நிறுத்தி
முத்திந் சலாபமும் முத்தமிட் பொதியிலு
மத்தவெங் கரிபடு மைய்(9)யச் சய்யமுங்
கந்நியுங் கைக்கொண்டு புநிதத் தெந்நாட்
டெல்லை காட்டிக் குட்மலை நாட்டுள்ள
சாவெ றெல்லாந் தநிவிசும் பெற
மாவெ றியதந் வருதினித் தலைவரைக்
குறுகலர் குலையக் கொட்டா றுட்பட
நெறிதொறும் நிலைகளிட் டருளித் திறல்கொள்
வி(10)ரஸிம் ஹாசனந் திரியவிட் டருளிப்
பொங்கொளி யாரமுந் திருப்புயத் தலங்கலும்பொல்
விரமுந் தியாகமும் விளங்கப் பார்மிசைச்
சிவநிடத் துமையெநத் தியாக வல்லி

பொச்சை – பொற்றை, சிறு குன்று; வெஞ்சுரம் - பாலை நிலைப் பகுதி; எற்றி – துரத்தி; கொற்றம் – வெற்றி; விஜய ஸ்தம்பம் – வெற்றிக் கறிகுறியாக நாட்டும் தூண்கள்.

முத்நின் சலாபமும் ...... கந்நியும் கைக்கொண்டு: பாண்டிய நாட்டுப் போரில் குலோத்துங்கன் முததுச் சலாபத்திற்குரிய மன்னார் குடாக் கடலைச் சார்ந்த நாட்டையும், பொதியில் கூற்றத்தையும், மேலை மலை தொடர்ந்த பகுதியையும், கன்னியா குமரிப் பகுதியையும் கைக் கொண்டான் என்பது. கந்நி – கன்னியாகுமரிப் பகுதி; கரிபடு மைய்யச் சையம்–யானைகளையுடைய பசுமையான மேலைமலை தொடர்ந்த பகுதி; சையம் – மலை.

9. புநிதத் தெந்நாட் டெல்லை காட்டி: புனித மிக்க கன்னியாகுமரியைத் தென்னாட்டின் எல்லையாகக் குறித்து என்பது. குடமலை நாடு – கொங்குநாடு; சாவெறு - சாவர், வீரம் மிக்கவர்கள்; தநி விசும்பெற – மடிய; மாவெறிய – குதிரையின் மீது எறிப் போர் செய்த; வருதினி - படை ; குறுகலர் -பகைவர்.

கொட்டாறுட்பட – கோட்டாறு முதல்; இது கன்னியாகுமரியையடுத்த தோர் ஊர்; இங்கு குலோத்தங்கன் ஒரு படைவீடு அமைத்திருந்தான். நெறிதொறும் நிலைகளிட்டருளி: செல்லு மிடங்களிலெல்லாம் வெற்றித் தூண்கள் நாட்டி என்பது. நிலைகள் - தூண்கள்.

10 ஆரமும் திருப்புயத்........வீரமுந்தியாகமும் விளங்க: ஆரம்-முத்து மாலை; அலங்கல் - பூமாலை; வீரம் ஆரத்திற்கும், தியாகம் அலங்கலுக்கும் உவமை. பார் தொழ - உலகத்தவர் வணங்க.

சிவநிடத்.......... உலகுடையாளிருப்ப: மதுராந்தகிக்குப் பின், குலோத்துங்கன் இரண்டாவது மனைவியான தியாகவல்லி என்பாள்

உலகுடை யாளி ருப்ப அவளுடந்
கங்கைவிற் றிருந்தெந மங்கை(11)யர் திலதம்
எழிசை வல்லபி எழுலகுமுடையாள்
வாழி மலர்ந்திநி திருப்ப ஊழியுந்
திருமா லாகத்துப் பிரியா தெந்று
திருமகளி ருந்தென விரஸிம் ஹாசனத்து
உலகுடை யாளொடும் விற்றிருந் தருளிய
கொவிராஜ கெஸரி வந்ம ராந
திரிபுவந்நச் சக்கர(12) வத்திகள் ஸ்ரீகுலோத்
துங்க சொழ தெவர்க்கு யாண்டு
சயிள ஆவது பாண்டி குலாசநி வளநாட்டு மீகொழை தெ

பட்டத் தரசியானுள்; அவள் பெருமையும், அரசன்பால் அவள் கொண்டிருந்த மதிப்பும் இத் தொடரால் விளக்கமுறும்.

அவளுடந் கங்கை......மலர்ந்திநி திருப்ப: குலோத்துங்கனுடைய மூன்ருவது மனேவியின் பெயர் எழிசை வல்லபி என்பது இவள் 'மங்கையர் திலதம்' என்றும், 'எழுலகமுடையாள்' என்றும், 'தியாகவல்லியுடன் கங்கை வீற்றிருந்ததென' என்றும் சிறப்பித்துக் கூறப்படுகிருள். கங்கை-கங்காதேவி; கங்கையும் உமையும் சிவனுடைய மனேவியர் என்பது புராண வரலாறு.

11. ஊழியும் – ஊழிக் காலத்தும்; ஆகம் – மார்பு; திருமகள் - இலக்குமி; 'ஊழியும், திருமா லாகத்துப் பிரியா தெந்று, திருமக ளிருந்தென.........உலகு டையாளொடும் வீற்றிருந் தருளிய'' என்ற அடிகளால் இவள் பட்டத்தரசி என்று தெரிகிறது.

கொவிராஜ கெஸரி பந்மராந திரிபுவந்நச் சக்கரவத்திகள்: – குலோத்துங்கனது சிறப்புப் பெயர்களில் இராசகேசரி, திரிபுவன சக்கரவர்த்திகள் என்பன பரம்பரையாக வந்த பட்டப் பெயர்கள். இவை அவனுடைய எல்லாச் சாசனங்களிலும் பொருந்தி வரும். 'கோ' என்ற சொல் தமிழகத்தில் பேரரசர்களாய் ஆண்ட பண்டைய மன்னர்களேக் குறித்தது; கோப்பெருஞ் சோழன், கோநெடுமாறன் என்ற பெயர்களேக் காண்க. சோழ ராச்சியத்தை யாண்ட பேரரசர்களே இராசகேசரி வர்மன், பரகேசரி வர்மன் என்ற பட்டங்களுடன் 'கோ'என்ற சொல்லேயும் சேர்த்து வழங்கி வந்தனர். அம்முறையில் குலோத்துங்கன் 'கோவிராசகேசரி' என்றழைக்கப்பட்டான்.

12. பாண்டி குலாசநி – பாண்டிய குலத்திற்கு இடிபோன்றவன்; அசனி–இடி. இது குலோத்துங்கனது சிறப்புப் பெயர்களில் ஒன்று போலும். இப்பெயரால் ஒரு வளநாடு 'பாண்டிய குலாசநி வளநாடு' எனப் பட்டது. மீ கொழை-மீ கொள், மேலாகக் கொள்ளும் என்பது. இதனேப் பாண்டி குலாசனி வளநாட்டின் ஒரு பிரிவு என்பாருமுளர்.

வதாந பிரமதெயம் திருவாணைக்காவில் திருவெண்ணுவல்கி ழிநிதமர்ந் தருளிய த்ரிபுவனபதிக்கு முலப்ருத்தியநாகிய ஸ

13. ண்டெஸ்வரந் ஆதெஸம் ஜயசிங்கதுலகால வளநாட்டு மிசெங் கிளி நாட்டு வளம்பகுடி அரயமகந் முனையந் அருமொழி தெவநான வில்லவராயனுக்கு நாம் விற்றுக்

தெவ தாநம்: *கோயிலுக்கு விடப்பட்ட இறையிலி நிலம்*; பிரமதெயம் – *பிராமணருக்குத் தனமாகக் கொடுக்கப்பட்ட ஊர்* திருவணைக்கா: *இது இப்பொழுது 'சம்புகேசுவரம்' என்றழைக்கப்படுகின்றது; திருச்சிராப்பள்ளிச் சில்லாவுக்கு அருகி லிருக்கிறது.* திருவெண்ணுவல் கீழ்: *இந்த இடம் இப்பொழுது 'சம்புகேசுவர சுவாமி ஆலய' மெனத் திகழுகிறது; சம்பு – நாவல்மரம்*

த்ரிபுவனபதி: *இது சம்பு கேசுவர ராலயத்தில் வீற்றிருக்கும் கடவுளின் ஆதிப் பெயர்; இப்பொழுது அக்கடவுள் 'சம்புகேசுவர சுவாமி என்று அழைப்படுகிறார்.*

மூல ப்ருத்யந் – *மூலப்பிருத்தியன், மூலத்தானத்துச் சேவகன், தொண்டன், அடிமை என்பது.*

13. ஸண்டெஸ்வரந்: *நாயன்மார் அறுபத்து மூவருள் ஒருவர்; இவருடைய அரிய சேவைக்குப் பரிசாகச் சிவ பெருமான் இவருக்குச் சண்டேசுவரபதம் அளித்தாரென்பர்; அஃதாவது அடியார் தலைவராய் மூலத்தானத்திலிருந்து சிவபெருமானுக்குரியவற்றை இவரே பெற்று அநுக்கிரகிக்கும் பதத்தை இவர் பெற்றார் என்பது.* ஆதெசம்- *கட்டளை; அக்காலத்தில் கோயில் நிலங்களை அந்தந்தக் கோயில் மூலப் பிருத்தியனான சண்டேஸ்வரன் கட்டளைப்படி விற்றதாகக் கூறுவது வழக்கம் போலும்.*

வில்லவராயன்: *இவனுடைய முழுப்பெயர் முனையன் அருண் மொழித் தேவனான வில்லவராயன் என்பது. வளம்பகுடி அரையன் என்பது இவனது தந்தை பெயர்; இவனுக்குச் சொந்த ஊர் செயசிங்க குல கால வளநாட்டு, மீசெங்கிளி நாட்டு வளம்பகுடி என்பதாகும். புதுக்கோட்டை ராச்சியத்தில் ஆலங்குடி தாலுகாவில் உள்ள* வாராய்ப் பூரும், *குளத்தூர் தாலுகாவிலுள்ள* திருவெங்கை வாசல், கீரனூர் *முதலியனவும் செயசிங்ககுல கால வளநாட்டில் உள்ளன. அது வட சிறுவாயில் நாடு, குளமங்கலம் நாடு, தென்மீ பொழில் நாடு, தென்கவிர் நாடு முதலிய பல நாடுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது.* மிசெங்கிளி நாடு – *மேல் செங்கிளி நாடு; இது புதுக்கோட்டை ராச்சியத்தில் குளத்தூர் தாலுகாவிலுள்ள மலையடிபட்டி என்னும் ஊர் முதலியவற்றைக் கொண்டது.* நாம் விற்றுக் குடுத்த நிலம்: *சண்டேஸ்வரன் உள்ளிட்ட கன்மிகளாகிய நாம் வில்லவராயனுக்கு விற்றுக்கொடுத்த நிலம் என்பது.*

குடுத்த நிலமாவது உடையார் திருவானைக்காவுடைய எம்பெருமாந் தெ—

14. வதாநம் தெங்கரை ஊர்களில் பாண்டி குலாசநிவள நாட்டு மீகொழை ஆளிகுடியில் இவனுக்கு விற்றுக் குடுத்த நிலத்துக் கிசைந்த கிழ்பார்க் கெல்லை பிள்ளை கொள்ளி வாய்க் காலுக்கு மெற்கும் தெங்பார்க் கெல்லை களத்தில் வடக்கில கைய் வா—

15. ய்க்காலுக்கு வடக்கும் மீபார்க்கெல்லை உத்தம சிலிச் சருப்பெதி மங்கலத்து தெங்பிடாகை புதுக்குடி எல்லை க்கு கிழக்கும் வடபார்க்கெல்லை தெங்நாற்றங்கரைப் பெரு வழிக்கு தெற்கு ஆக இவ்விசைந்த பெருநாந் கெல்லையுள் பட்ட நிலம்.

16. ச தெ ($4\frac{3}{4}$)இங்நிலம் நாலெ முக்காலும் இத்தெவர்க்கு யாண்டு நாற்பத்தெழாவது வரை பயிரிலி புங்செய்யாய்க் குட்டமு மண்ணுமிட்டுக் கிடந்தமையி லங்நிலம் முனையங் அருமொழி தெவநான வில்லவ ராயனுக்கு விற்றுக் குடுத்து—

உடையார் திருவானைக்காவுடைய எம்பெருமாந்: *இஃது திருவானைக் காவில் திருவெண்ணுவல்கீழ் அமர்ந்தருளிய திரிபுவனபதியைக் குறிக் கும்; உடையார் – சுவாமி.*

14. **தென்கரை ஊர்களில்:** *முன்னர்த் 'தென்கரை நாட்டு' என வந்திருத்தலும் இதனையே குறிக்கும் போலும்.* **நிலத்துக் கிசைந்த**–*நிலத் தோடு பொருந்திய;* **பிள்ளை கொள்ளி வாய்க்கால்:** *இது 'பிள்ளை கொல்லி வாய்க்கால்' என்றிருத்தல் வேண்டும் என்று தெரிகிறது.*

களம் – *திட்டு நிலம்;* **மிபார்க்கெல்லை** – *மேலைப்புற எல்லை;* **தென் பிடாகை** – *தென்பக்கத்துச் சிற்றூர்;* **புதுக்குடி** *என்பது,* **உத்தமசீலிச் சருப்பெதி மங்கலத்துக்குத் தென் பக்கத்திலுள்ள ஒரு சிற்றூராகும். உத்தமசீலிச் சதுருப்பெதி மங்கலம், இப்பொழுது 'உத்தமசீலி' என்று வழங்குகிறது. இதுவும், புதுக்குடியும் பாண்டி குலாசனி வளநாட்டி லுள்ளன.*

16. **இவ்விசைந்த** – *இப்படிப்பட்ட;* **நிலம் ச தெ** - *நாலே முக் கால் குழி நிலம்; இனி, நாலே முக்கால் வேலி நிலம்' எனக் கூறி அதற்குச் சான்றாக இச்சாசனத்தில் வரும் 'புன்செய் வரிசையால் வேலி ஒன்றுக்கு நெல் ஐங்கலமாக இராசகேஸரி மரக்காலால் இந்நிலம் நாலே முக்காலுக்கும் அளப்பதான நெல் இருபத்து முக்கலனே இரு தூணிக் குறுணி' என்னுந் தொடரைக் காட்டுவர்.* **பயிரிலி புந்செய்யாய்**- *பயிர் விளையாத புன்செய் நிலமாய்;* **குட்டமு மண்ணுமிட்டுக் கிடந்த மையிந்**–*பள்ளமு மேடுமாய்க் கிடந்ததால்;* **குட்டம்** – *குழிந்த நிலம்;* **மண்** – *மண் திட்டு.*

17. க் கொள்வதாக எம்மி லிசைந்த விலைப்பொருள் அந் றூடு நற்காசு சப5 இக்காசு நாலெ மாகாணியுங் கைக் கொண்டு திருவானைக்காவுடைய எம் பெருமாந் ஸ்ரீ பண்டா ரத்து ஒடுக்கி முனையந் அருமொழிதெவனா வில்லவராய னுக்கு விற்றுக் குடுத்—

18. து இவந் உடையார் திருவானைக்காவுடைய எம் பெருமாந் கொயிலில் இடங்கை நாயகரெந்று எழுந்தருளு வித்த இஷபவாஹனதெவர்க்கும் நம்பிராட்டியார்க்கு திரு மஞ்சநங்களுக்கு திருவமிர்து படிக்கு இரண்டு திருநாளிலும் இரண்டு நாள் திருவிழா எழுந்தருளுகைக்கு உள்ளிட்டு

19. வெண்டும் நிமந்தங்களுக்கு இந்நில சு தெ கல்லித் திருத்தி ஸ்ரீ பண்டாரத்து புந்செய் வரிசையால் வெலி ஒந் றுக்கு நெல் ஐங்கலமாக ராஜகெஸரி மரக்காலால் இந்நிலம் நாலெ முக்காலுக்கும் அளப்பதாக ஐ உயிரு கள் வத ங இந் நெல் இருபத்து முக்கலநெ இருதூணிக் குறு—

20. ணியும் அளக்குமிடத்தில் கார் பாதி பசாநம் பாதி அளப்பதாகவும் இதில் மிகுதி கொண்டு இவந் இடங்கை

---

17. எம்மி லிசைந்த-யாம் சம்மதித்த; அந்றூடு – நாளொன்றுக்கு; நற்காசு – பொற்காசு. இனி 'அந்றூடு பொற்காசு' என்பதற்கு 'அந் நாளில் வழங்கிய பொற்காசு என்னும் நாணயம்' என்று பொருள் கொள்ளினுமாம். சப5 $= 4\frac{1}{16}$; கைக்கொண்டு – பெற்று.

ஸ்ரீபண்டாரம் – கோயில் பண்டாரம்; ஒடுக்கி – சேர்த்து; விற்றுக் குடுத்து – விலைக்குக் கொடுத்து; இடங்கை நாயகர் - இடங்கை குலத்த வருக்குத் தலைவர்; இடங்கையர் என்பார் சோழருக்குள் மரியாதை செலுத்து முறைமையின் காரணமாகப் பிரிந்த ஒருகுலப் பிரிவினர் என் பர். வில்லவராயன் அக்குலத்தவனா யிருந்து, சம்புகேசுவராலயத்தில் 'இடங்கை நாயகர்' என்ற பெயருடன் இடபவாகனரை எழுந்தருளப் பண்ணினதாகத் தெரிகிறது.

18. இஷபவாஹந தேவர் – சிவபெருமான்; இஷபம் – இடபம். திருமஞ்சனம் – அபிடேகம்; திருவமுது - நிவேதன உணவு; நிமந்தம் – கோயில் செலவு; கல்லித் திருத்தி – வெட்டித் திருத்தி.

19. ராஜகெஸரி மரக்கால்: இது அரண்மனை மரக்கால்; இராசராச சோழன் சாசன முதலியவற்றிலும் இப்பெயர் வந்திருத்தல் காண்க- ஐ உயிரு கள வத ரு-நெல் இருபத்து முக்கலனே இரு தூணிக் குறுணி; ஐ - நெல்; உயிரு - இருபத்துமூன்று; கள - கலம்; வத-இரு தூணி; ங - குறுணி.

20. கார் - கார் காலத்தில் விளையும் நெல்; கார் காலம் – மழைக் காலம்; பசாநம் – பசான் என்னும் ஒருவகைச் சம்பா நெல்; இது சித்திரை மாதத்தில் அறுவடை யாகும்.

நாயக ரெந்று எழுந்தருளுவித்த இஷபவாஹந தெவர்க்கும் நம்பிராட்டியார்க்கும் திருமஞ்சனபடிகளுக்கும் திருவமுது படிக்கும் இரண்டு திருநாளிலும் இரண்டு நாளெழுளந் தருளுகைக்கு

21. உள்ளிட்டு வெண்டு நிமந்தங்களுக்கு நிமந்தஞ் செய்து குடுத்தோம் முனையந் அருமொழிதெவநான வில்ல வராயநுக்கு திருவாணைக்காவுடைய எம்பெருமானுக்கு முல ப்ருத்தியநாகிய ஸண்டெஸ்வரந் உள்ளிட்ட கந்மிகளோம் இது பந்மாஹேஸ்வர ரக்ஷை

இதில் மிகுநிகொண்டு – *இதைக்கொண்டு;* **திருமஞ்சனபடி** – *அபி டேகம் செய்ய ஆகும் செலவு; படி – செலவு.* **எழுந்தருளுகைக்கு** – *உலா வருவதற்கு.*

21. **உள்ளிட்டு** – *சேர்த்து;* **நிமந்தம் செய்து குடுத்தோம்** – *கோயில் ஊழியத்திற்கு ஏற்பாடு செய்து குடுத்தோம்;* **உள்ளிட்ட கந்மிகளோம்** – *கோயில் அதிகாரிகளாகிய யாம்;* **பந்மா ஹெஸ்வர ரக்ஷை** –*அடியார் கூட்டம் காக்க.*

பயிற்சி வினாக்கள்

(1) வில்லவராயன் சாசனம் எங்கு காணப்படுகிறது? அதில் கூறப் படும் செய்தி யாது? (2) முதற் குலோத்துங்க சோழன் ஆட்சியின் நாற்பத்தேழாம் ஆண்டில் அமைக்கப்பட்ட சாசனத்திலுள்ள மெய்க் கீர்த்தியின் தொடக்கம் யாது? அதிலிருந்து அம்மன்னனைப்பற்றி நாம் அறியக் கூடியன யாவை? (3) சம்புகேசுவர ராலயத்தில் பொறிக்கப் பட்ட சாசனங்கள் எவை? எக்காலத்தில் ஏற்பட்டன? அவற்றின் பெயரும், அவை கூறும் செய்தியும் எழுதுக. (4) முதற் குலோத்துங் கன் மெய்க் கீர்த்தியோடு கூடிய சாசனங்களுள் எவையேனும் இரண்டு சாசனங்களுக்கு இடம், ஏற்பட்ட காலம் இவற்றை வரைக. (5) குறிப்பு வரைக:— சக்கர கோட்டம், மதவரை யீட்டம், தீவாந் தரத்து பூபாலர், கலஞ்சொரி களிறு, வருபரித்தரங்கமும் பொருபரிக் கலங்களும், திரிபுவனச் சக்கரவர்த்திகள். (6) பாண்டி குலாசனி வள நாடு — எங்குளது? அதனை இப்பொழுது எப்பிரதேசமாகக் கொள்ள லாம்? (7) 'திருவானைக்கா' எங்குள்ள தென்பதைச் சாசனச் சான்று காட்டி விளக்குக. (8) மூல ப்ருத்யநாகிய சண்டேஸ்வரன் ஆதேசம்'- பொருள் என்னே? சண்டேசுவர ஆதேசமாகக் கூறியது எது பற்றி? (9) வில்லவராயன் யார்? அவனது ஊரின் பெயரும், அது அமைந் துள்ள நாடு, வளநாடுகளின் பெயர்களும் யாவை? (10) பொருள் தருக:- சையம், வரூஉதினி, பிடாகை, பசானம், ஸ்ரீ பண்டாரம், திருமஞ்சனம், நிமந்தம், கன்மிகள். (11) அந்றூடு நற்காசு சுபந் – இதன் பொருளை விளக்குக. (12) 'இந் நெல் இருபத்து முக்கலநே இரு தூணிக் குறுணி'–

20. காணி காரளவு உரிமைச் சாசனம் *

முன்னுரை

விக்கிரம சோழன் சாசனங்கள் என்பவை விக்கிரமசோழன்† ஆட்சியில் அவனுல் ஏற்பட்டதும், பிறரால் ஏற்பட்டதுமான சாசனங்களைக் குறிக்கும். இங்கு அவனது ஆட்சியின் நான்காம் ஆண்டு ஏற்பட்ட காணி காரளவு உரிமைச் சாசனமும், பதினைந் தாம் ஆண்டில் ஏற்பட்ட அவனது தில்லைத் திருப்பணி சாசனமும் அமைந்துள்ளன. இவற்றுள், காணி காரளவு உரிமைச் சாசனம் தஞ்சைப் பெரிய கோவில் நடுவிடத்துக் கருப்ப கிருகத்தின் வட புறத்துச் சுற்றுச் சுவரின் வெளிப் பக்கத்தில் காணப்படுகிறது. இது தமிழ் மொழியில் கிரந்த எழுத்துக்கள் கலந்து எழுதப் பட்டது; நான்கு பத்திகளை யுடையது.

இதனைக் குறியீட்டெழுத்தால் எழுதுக. (13) அக்காலத்தில் வழங்கிய நிறுத்தலளவைப் பெயர், முகத்தலளவைப்பெயர் ஆகியவைகளைக் குறிப் பிடுக. (14) நஞ்செய் நிலங்களில் இரு போகங்களைக் குறிக்கும் பெயர் கள். எவை? (15) 'புகழ் சூழ்ந்த புணரி அகழ் சூழ்ந்த புவியில்' என்று தொடங்கும் சாசனம் யாருடையது? (16) 'பொங்கொளி ஆரமும் திருப்புயத் தலங்சலும் போல், வீரமுந் தியாகமும் விளங்க'— இதற்குக் குறிப்புரை வரைக. (17) சோழ மன்னரின் ஈழப் படை எடுப்பினைச் சுருக்கி எழுதுக.

* S. I. I. Vol., II, Part III, No. 68, pp. 307–312.

† விக்கிரம சோழன் முதற்குலோத்துங்கனுடைய நாலாவது மகன். இவனுடைய தாய் பெயர் மதுராந்தகி. இராசராச சோழ கங்கன், இராசராச மும்முடி சோழன், வீர சோழன் மூவரும் இவன் தமையன்மார். இவர்கள் ஒருவர் பின் ஒருவர் இறக்க, இவன் கி. பி. 1118ல் இளவரசனுகி, முதலாம் குலோத்துங்கனுக்குப் பின் 1120 ஆம் ஆண்டு முதல் சோழ மன்னனுனன். பரகேசரி என்பது இவனுக்கு வழங்கிய சிறப்புப் பெயர்.

இளமையில் இவன் வேங்கி நாட்டிலிருந்து ஆட்சி புரிந்தான். அப் பொழுது தென் கலிங்கத்தை ஆண்ட தெலுங்க வீமனைப் போரில் புறங் கண்டான். அதன் சிறப்பினை ஒட்டக் கூத்தர் ஒரு பரணி நூலால் பாடினர். அந்நூல் இப்பொழுது காணப்படவில்லை. இவனுக்குத் தியாக சமுத்திரம், அகளங்கன் என்ற சிறப்புப் பெயர்களும் உண்டு. இவனுடைய கல்வெட்டுக்களில் இரு வகையான மெய்க் கீர்த்திகள்

இச்சாசனத்தின் முற்பகுதியில் 'பூமாலை மிடைந்து' என்று தொடங்கும் விக்கிரம சோழனது மெய்க்கீர்த்தி அமைந்துள்ளது. அதில் அவன் இளமையில் தெலிங்க வீமனோடு போர் செய்து வென்ற செய்தியும், குடிகளை அவன் ஆண்ட சிறப்பும், செழியர், சேரலர், சிங்களர், கங்கர் (கன்னடர்), கொங்கணர் முதலி யோர் அவனுக்குத் திறை செலுத்தியமையும், அவன் தன் தேவி யரான முக்கோக்கிழானடி, தியாக பதாகை ஆகியவர்களோடு சிம்மாசனத்தில் வீற்றிருந்த சிறப்பும் கூறப்படுகின்றன.

பிற்பகுதியில் விக்கிரம சோழன், தஞ்சைப் பெரிய கோயிலி லும், அக்கோயிலுக்குச் சொந்தமான ஊர்களிலும் வரும் கோ யில் நெல்லை யளந்து கோயில் களஞ்சியத்தில் சேர்க்கும் பணியை இராசராச பல்லவரையன் என்னும் ஆவுயைடயான் அரையன் உடையானுக்கு உரிமையாக்கிய செய்தியும், பின் அவன் இறக்க, அவன் மகன் உடையான் கல்லாலையை அந்த வேலைக்கு நியமித்த செய்தியும் கூறப்படுகிறது. எனவே, இக்காலத்தில் அரசியலி லும் கோயில்களிலும் பணி செய்வார் தலைமுறை தலைமுறை யாகச் செய்து வந்தனர் என்று இச்சாசனத்தால் அறியப்படு கிறது.

விக்கிரமசோழன் கி. பி. 1120 முதல் 1136ஆம் ஆண்டு வரை சோழநாட்டை ஆண்டான். இச்சாசனம் அவன் ஆட்சி யின் நான்காம் ஆண்டில் ஏற்பட்டதெனவே, இதன் காலம் கி. பி. 1124 ஆம் ஆண்டு என்னலாம்.

காணப்படுகின்றன. ஒன்று "பூமாலை மிடைந்து பொன்மாலை திகழ்தர" என்று தொடங்குகிறது. அது பெரிது. மற்றொன்று "பூமாது புணர புவிமாது வளர" என்று தொடங்குகிறது.

இவனுக்கு முக்கோக்கிழானடிகள், தியாக பதாகை, நேரியன் மா தேவி என மூன்று மனைவியர் இருந்தனர். இவர்களில் முதல் இருவரும் ஒருவர் பின் ஒருவர் பட்டத் தரசியாயிருந்தனர். இரண்டாம் குலோத் துங்க சோழன் இவனுடைய மகனாவான். விக்கிரம சோழன் கி. பி. 1120 முதல் 1136 ஆம் ஆண்டு வரை சோழநாட்டை ஆண்டான். இவன் ஆட்சியின் காலத்தில் ஒட்டக் கூத்தர் முதலிய புலவர்கள் இருந் தனர். அரசியல் அதிகாரிகள் பலர் இவன் காலத்தில் சிறந்து விளங் கினர். இவன் தில்லையில் செய்த திருப்பணிகள் குறிப்பிடத் தக்கன.

சாசனம்

(1)ஸ்வஸ்திஸ்ரீ
பூமாலை மிடைந்து பொன்மாலை நிகழ்தரப்
பாமாலை மலிந்த பருமணித் திரள்புயத்
திருநில மடந்தையொடு ஜயமக ளிருப்பத்
தந்துணை மார்வந் தனதெனப் பெற்றுத்
திருமகள் ளொருதனி யிருப்பக் கலைமகள்
சொற்றிறம் புணர்ந்த கற்பின ளாகி
விருப்பொடு நாவகத் திருப்பத் திசைதொறும்
திகிரியொடுஞ் செங்கோல் நடப்ப அகில
புவனமுங் கவிப்ப தொருபுது மதிபோல்
வெண்குடை மீமிசை நிற்பக் கருங்கலி
ஒளித்து வன்பிலத் திடைக்கிடப் பக்குளத்
தெலிங்க விமன் விலங்கல்மிசை யெறவுங்

குறிப்புரை

1 ஸ்வஸ்தி ஸ்ரீ: *சாசனங்களின் தொடக்கத்தில் பெரும்பாலும், சிறுபான்மை இறுதியிலும் வரும் ஒரு வடமொழித்தொடர்; 'மங்களம் உண்டாக' என்பது இதன் பொருள்.*

பூமாலை மிடைந்து – *பூமாலை சூடி;* **பொன்மாலை நிகழ்தர** – *பொன் மாலையும் விளங்க;* **பாமாலை மலிந்த** – *பாமாலைகளால் புகழப்பட்ட; பாமாலை – பாடல்கள்; இக்கு ஒட்டக்கூத்தர் இவன் மீது பாடிய உலா, பரணி முதலியவற்றைக் குறிக்கும்.* **பருமணித் திரள்புயம்**-*பெரிய அழகிய திரண்ட கைகள்;* **இரு நில மடந்தை** – *சோழநாடு;* **ஜயமகள்**–*வெற்றி;* **திருமகள்** – *செல்வம்;* **கலைமகள்** – *கல்வி.*

நிலமடந்தை செயமகள் இருவரும் திரள்புயத்திலும், திருமகள் மார்பிலும், கலைமகள் நாவிலும் இருந்தனர் என்பது.

திகிரி – *ஆணை;* **செங்கோல்** – *ஆட்சி;* **அகில புவனம்** – *உலகம் முழுவதும்;* **கவிழ்தல்** – *நிழல் செய்தல்;* **வெண்குடை மீமிசை நிற்ப** – *வெண் கொற்றக் குடைமேலே நின்று நிழல் செய்ய;* **கருங்கலி**–*வறுமை;* **வன்பிலம்** – *பாதாளம்;* **குளத்தெலிங்கவிமன்:** *குளமென்பது, ஓர் ஊர். அது வேங்கிநாட்டைச் சேர்ந்த கொலாறு என்னும் குளக்கரையி லுள் ளது. இப்பொழுது கோதாவரி மாவட்டத்திலுள்ள கோலாறு என்னும் குளக் கரையிலுள்ள எலூரை அவ்வூர் என்பர். இதிலிருந்து தெலிங்க வீமன் ஆட்சிபுரிந்தவனு யிருத்தல் வேண்டும். இனிக், குளமென்பதை தெலிங்க வீமன் குலப்பெயர் என்பாரு முளர். தெலிங்க வீமன் என் பான், கலிங்க நாட்டை ஆண்டு வந்தவன். விக்கிரம சோழன் இளவரச னுயிருந்த காலத்தில், வேங்கி நாட்டினின்றும் இவன்மீது படை எடுத்து சென்று, இவனை வென்றான். இவன் விக்கிரமசோழனுக்குத் தோற்று, தன் சேனைகளுடன் மலையின்மீது ஏறி ஒளித்தான்.*

கலிங்க பூமியைக் கனெயெரி பருகவும்
ஐம்படைப் பருவத்து ......படை தாங்கி
வெங்கை மண்டலத்துத் தாங்கிநி திருந்து
வடதிசை வாகை சூடித் தெந்(2)றிசைத்
தெமரு கமலப் பூமகள் பொதுமையும்
பொன்னி யாடை நன்நிலப் பாவையின்
தநிமையுந் தவிர்த்து புநிதத் திருமணி
மகுட முறை மையிற் சூடித்
தன்நளி பரப்பித் தநித்தநி பரந்து
மண்முழுதுங் களிப்ப மணிஞ வொடுங்க
விசையமும் புகழு மெல்மெ லொங்கச்
செழியர்வெஞ் சுரம்புக செரலர் கடல்புக
அழிதரு சிங்கள ரஞ்சிநெஞ் சலமாகக்
கங்கர் திறையிடக் கன்நடர் வென்நிடக்
கொங்க ரொதுங்கக் கொங்கணர் சாயமற்
றெத்திசை மன்நருந் தந்தமக் கரணெநத்

விலங்கல் மிசை ஏறவும்–மலைகளின் மேல் ஏறி ஒழிக்கவும். கலிங்க பூமி – கலிங்க நாடு; கனை எரி பருகவும் – மிக்க தீயினுல் அழியவும்; ஐம்படை பருவத்து – ஐம்படைத்தாலி அணிந்த இளமைப் பருவத்தில்; ஐம்படை என்பதற்கு ஐங்கணை எனப் பொருள் கொள்வருமுளர். வேங்கை மண்டலம்: கீழைச் சாளுக்கிய நாடு; விக்கிரம சோழன் இளவரசஞயிருந்தபோது இந்நாட்டிலிருந்து ஆட்சி புரிந்தான். அப்பொழுதுதான் தெலிங்க வீமனுடன் கலிங்கப்போர் நிகழ்ந்தது. வடதிசை வாகை சூடி – வடக்கே தெலிங்க வீமனை வென்று.

2. பூமகள் பொதுமை - நாட்டின் பொதுவுடைமை; தென்னுடு பலருக்கும் பொதுவாக இருந்தமையை விக்கிரம சோழன் நீக்கித் தன்னதாக்கினுன் என்பது. பொன்னியாடை நன்னிலப்பாவை – காவிரி நதி பாயப் பெற்ற சோழ நாடு; பொன்னி - காவிரியாறு; தநிமை - தனித்த நிலைமை; அஃதாவது, சோழ நாடு மட்டும் ஆட்சி புரிவதென்பதைக் குறிக்கும். 'தெமரு.........உரிமை நிற்றஞ்ச' என்பது வரை விக்கிரம சோழனது ஆட்சிச் சிறப்புக் கூறப்பட்டுள்ளது. மணிமகுடம்-முடி; அளி பரப்பி–அன்பு செலுத்தி; மண் முழுதும் களிப்ப – நாட்டாரெல்லாரும் மகிழ; மணிநா ஒடுங்க – ஆராய்ச்சி மணி ஒலிக்காது; குடிகள் வழக்குக் கூருது என்பது. விசையம் – வெற்றி; செழியர்–பாண்டியர்; சிங்களர் – இலங்கை மன்னர்; வெஞ்சுரம் – காடு; செரலர் – சேர மன்னர்; இவர்கள் எதையும் அழிக்கும் இயல்பின ரென்பார் 'அழிதரு சிங்களர்' என்ருர். நெஞ்சலமாக – நெஞ்சு அலமர, மனம் வருந்த; கங்கர் – கங்க பாடி மன்னர்: திறை - கப்பம்; நொங்கர் ஒதுங்க – கன்னட நாட்டார் புறங்காட்ட; கங்கர் என்பது, இங்குக் 'கன்னர்' என்றித்தல் வேண்டும். கொங்கணர் – கொங்கு நாட்டவர்;எத்திசை மன்னரும் - எல்லாத் திசை

திருமலற் செவடி உரிமையில் நிற்றஞ் சத்
தொல்லே யெழுலகுந் தொழுதெழத் தொந்றிய
முல்லே வாணகைய் முக்கொக் கிழாநடி
உமையொடுஞ் சங்கரன்
இமையத்திருந் தாநெனப் பொருந்தி இனி திருப்ப
ஆங்கவன் மகிழு கங்கையொப் பாகிய
தெரிவையர் திலதம் தியாகப தா(3)கை
புரிகுழல் மடப்பிடி புனிதகுண வனிதை
திரிபுவந முழுதுடையா ளிவன்திருவிளத் தருள்
முழுதுடை யாளெனஅமைந்தினி திருப்பச்
செம்பொன் நின்வீர ஸிம்ஹா ஸனத்து
வீற்றிருந்தருளிய கொப்பரகெசரி பந்மரான திபுவநச்
சக்கரவத்திகள் ஸ்ரீவிக்கிரம சொழ தெவற்கு யாண்டு

யிலுமுள்ள அரசர்களும்; அரண் - பாதுகாவல், அடைக்கலம்; திருமலற் செவடி உரிமையில் நிற்றஞ்ச - மலர் போன்ற பாதங்களில் முறையாக நின்று வணங்க: நிற்றஞ்ச - நின்று இறைஞ்ச.

தொல்லே......... . இனி திருப்ப: இஃது விக்கிரம சோழன் தன் பட்டத்தரசியான முக்கோக்கிழானடிகளோடு வீற்றிருந்த சிறப்புக் கூறுகின்றது. தொல்லே – பழமையான; எழுலகம் - எழு உலகத்தாரும்; முல்லே வாணகை - முல்லே மலர் போன்ற அழகிய பற்களையுடையவள்; முக்கோக்கிழானடிகள் விககிரமசோழனேடு சிமமாசனத்தில் வீற்றிருந்த தன்மை உமாதேவியோடு சிவபெருமான் இமயமலேயில் இருந்ததொத்த தென்பது. சங்கரன் – சிவன்.

ஆங்கவன்...........அமைந்தினி திருப்ப: இத்தொடர் விக்கிரம சோழன் இரண்டாவது மனேவியான தியாகபதாகை என்பாள் அவனுடன் வீரசிம்மாசனத்தில் வீற்றிருந்த சிறப்பைக் கூறுகின்றது. ஆங்கவன் மகிழும் – சிவபெருமான் விரும்பும்; கங்கையொப்பாகிய - கங்காதேவியை யொப்ப; இதில் தியாக பதாகை என்பாள், 'தெரிவையர் திலகம்', 'புரிகுழல் மடப்பிடி', 'புனித குணவனிதை', 'திரிபுவந முழுதுடையாள்', 'திருவுளத் தருள் முழுதுடையாள்' என்னும் தொடர்களால் சிறப்பித்துக் கூறப்பட்டிருப்பது குறிப்பிடக் தக்கது. இச்சாசனத்தில் முக்கோக்கிழானடி உமாதேவிக்கும், தியாகபதாகை கங்கை தேவிக்கும், சங்கரன், விச்கிரம சோழனுக்கும் உவமையாகக் கூறப்பட்டுள்ளனர்.

செம்பொன்னின் வீரஸிம்ஹாஸனம்: செம்பொன்னுல் செய்யப்பட்ட வெற்றிச் சிம்மாசனம்; கோ - மன்னர்; பரகெஸரி பந்மர் – பரகேசரி வர்மர்; இது சோழ மன்னர் தமக்குள் சிறப்பாக இட்டுக் கொள்ளும் பரகேசரி, இராசகேசரி என்னும் பட்டப்பெயர்களில் ஒன்று; திரிபுவநச் சக்கரவத்திகள்: சேர, சோழ பாண்டியம் என்னும் மூன்று நாடுகளுக்கும்

ஞுலாவது உடையார் ஸ்ரீராஜ ராஜீஸ்ர முடையார் கொயி லில் காரளக்கும் ராஜ ராஜப் பல்லவரயநுக்கு தன் பாட்டன் நிலையாய் வருகிற காணிகாரளவுக்கு காணியாக குடுத்தொ மென்று திருவாய் மொழிந் தருளி உடையார் ஸ்ரீ ராஜராஜீஸ் வரம் உடையார் கொயில் சீகாரியஞ் செய்வாநுக்கும் பரியார மூலப்பட்டுடைப் பஞ்சா சாரியத் தெவர் கன்மிகளுக்கும்

தலைவர் என்பது இதன் சொருள். திரிபுவனம் — மூன்று நாடு; அவை சேர, சோழ பாண்டிய நாடுகள்; சக்கர வர்த்திகள் — பேரரசர்; விக்கிரம சோழன் ஆட்சி தமிழ் நாடு மூன்றிலும் நடைபெற்ற தென்பது இதனுல் தெரிகிறது.

யாண்டு நாலாவது — ஆட்சியின் நான்காவது ஆண்டு; அஃதாவது கி. பி. 1124 ஆம் ஆண்டு. உடையார் — இறைவன்; ஸ்ரீ ராஜராஜீஸ்வர முடையார் கொயில் - தஞ்சைப் பெரிய கோவில்; கார் அளக்கும் - கோயி லுக்கு வரும் கார் காலத்து நெல்லை அளந்து கணக்கெடுக்கும்; கார் - கார் காலத்தில் விளையும் நெல்; எனவே தேவதான நிலங்களில் பயிர் செய்வோர் கார் காலத்து நெல்லைக்கொண்டு வந்து கோயிலுக்கு அளப் பர் என்பது போதரும் ராஜ ராஜ பல்லவரயந் இவன் தன் பாட்டன் நிலையாய் செய்து வந்த காரளவு என்னும் பணியை விக்கிரம சோழன் கட்டளைப்படி செய்து வந்தான் இவனுடைய மற்றொரு பெயர் புது வுடையான் அரயன் உடையான் என்பது. இவன் இறந்த பின் அக்கா ரளக்கும் பணி இவன் மகனுன உடையான் கல்லாலைக்கு உரிமையாக்கப் பட்டது. தன் பாட்டன் — அவன் பாட்டன்.

நிலையாய் வருகிற — நிலையாகச் செய்து வந்த; காணி காரளவு : இது அரசியலார் மேற்பார்வையில் நடைபெறும் கோயில் அலுவல்க ளில் ஒன்று; கோயில் நிலங்களில் இருந்து வரும் நெல்லை அளந்து களஞ்யத்தில் சேர்ப்பதாகும். காணியாக—உரிமையாக; காணி—நிலம் வுரி மை; திருவாய் மொழி — அரச கட்டளை; உடையார் ஸ்ரீ ராஜராஜீஸ்வரம் உடையார் கோயில்-தஞ்சைப் பெரிய கோயில்: அது முதலாம் இராசராச னுல் கட்டப்பட்டது. அங்குள்ள இறைவன் பெயர் இராசராசேசுவரர். உடையார் என்பது, சிறப்புப் பற்றி அரசனுக்கும் இறைவனுக்கும் வழங்கும் ஓர் அடைமொழி. ஸ்ரீ காரியம் செய்வான் - கோயில் காரியம் செய்பவன், கோயில் அதிகாரி.

பரியார மூலப்பட்டுடைப் பஞ்சா சாரிய தெவர் கன்மிகளுக்கும் என்பது, பரியார மூலப் பட்டுடைப் பஞ்சாசாரியர்க்கும் தேவர் கன்மி களுககும் என்றிருத்தல் வேண்டும். பஞ்சாசாரியர் - கோயில் அருச்சகர்; பரியாரம் — பரிகாரம், பணி; மூலம் — கோயில் இறைவன் எழுந்தருளி யிருக்கும் இடம்; கோயில் அருச்சகர் மூலத்தானம் இறைவன் எழுந்தருளி யிருக்கும் இடத்தில் பணி செய்யும்போது பட்டாடை அணிந்திருப்பர். அதனுல் அவர்கள் 'பரியார மூலப் பட்டுடைப்பஞ்சாசாரியர்' எனப்பட்

ப்ரஸாதம் செய்து வந்த திருமுகப்படி கல்லில் வெட்டியது முன்பு காரளந்து வருகிற புதுவுடையான் அர—

4 யன் உடையான் மரித்தமையில் இவந் மகனாந உடையாந் கல்லாலேக்கு தஞ்சாவூர்த் தெவர்க்கு அடைத்த நாட்டுப் பண்டாரங்களும் அளந்து இத்தால் வந்த காரளவு மாடம் உள்ளிது ஒடுக்கி வருகிற பரிசு தெவர் பண்டாரத்தெ ஒடுக்க கடவநாகவும் தனக்கும் தந் வர்க்கத்தார்க்கும் சந்ரா தித் தவந் செல்ல வைத்த பங்கு ஒன்று.

டனர். தேவர் கன்மிகள் – கோயில் பூசகர்; இவர்கள் அருச்சகருக்கு உதவியாய் நிற்பவர்கள்.

ப்ரசாதம் செய்து வந்த – அரசனது ஆணைப் பொறி இடப்பட்டு வந்த; **திருமுகம்** – ஓலை; அரசனது கட்டளை எழுதப்பட்ட ஓலை, அவனது ஆணைப் பொறி யிடப்பட்டு வெளிவரும் என்பது இதனால் தெரிகிறது. **'திருமுகப்படி கல்லில் வெட்டியது'** என்பதால், அரசனது ஆணை முதலில் ஓலையில் எழுதப்பட்டுப் பின் கல்லில் செதுக்கப்படும் என்பது போதரும். **முன்பு கார் அளந்து வருகிற** – முன்பு அரசன் ஆணைப்படி கார் அளக்கும் தொழிலைப் புரிந்து வந்த என்பது.

4. **புது உடையான் அரையன் உடையான்:** – இவனுடைய மற்றெரு பெயர் இராசராச பல்லவரயன் என்பது. இவன் இறக்க, இவன் மகன் உடையான் கல்லாலை என்பவனுக்குக் காரளக்கும் பணி அரசனுணையால் உரிமையாக்கப் பட்டது. **தஞ்சாவூர் தெவர்** – தஞ்சைப் பெரிய கோயில் இறைவன்; **அடைந்த**–உரிமையான; **நாட்டுப் பண்டாரங்களும் அளந்து** – நாட்டுப்புறங்களிலுள்ள களஞ்சியங்களுக்கு வரும் நெல்லையும் அளந்து; இதனால் தஞ்சைப் பெரிய கோயில் இறைவனுக்கு அக்கோயிலில் மட்டுமென்றி, நாட்டுப் புறங்களிலும் அங்கங்கே நிலங்களும் அந்நிலங்களிலிருந்து வரும் நெல்லைச் சேர்த்து வைக்கும் களஞ்சியங்களும் இருந்தன என்று தெரிகிறது. **இத்தால் வந்த காரளவும்**-இதன் மூலம் வந்த நெல்லும்; **மாடம் உள்ளிது ஒடுக்கி வருகிற பரிசு** – களஞ்சியத்தியத்தினுள்ளே சேர்த்து அதனால் வரும் கூலி; **மாடம்** - கோயில் களஞ்சியம்; **ஒடுக்கு** – சேர்த்து; **பரிசு** - காரளப்பதற்குக் கூலியாக வரும் நெல்; **தேவர் பண்டாரம்** –தஞ்சைப் பெரிய கோயிலிடத்துப் பண்டாரம்; நாட்டுப்பண்டாரம் இதனின் வேறாகும். **தன் வர்க்கத்தார்**- தன் சந்ததியார், தன் வழியினர். **சந்திராதித்தவல் செல்ல** – சந்திர சூரியர் உள்ள காலம் வரை நடைபெற; **வைத்த பங்கு ஒன்று**–கொடுத்த ஒரு பகுதி; எனவே காணி காரளக்கும் பணி பல விடங்களிலும், நடைபெற்றதென்றும், அதில் ஒரு பகுதி உடையான் கல்லாலைக்குப் பகிர்ந்து கொடுக்கப்பட்டது என்றும் தெரிகிறது.

21. தில்லை திருப்பணி சாசனம் *

முன்னுரை

தில்லை திருப்பணி சாசனம் என்பது, விக்கிரம சோழன் தில்லையில் செய்த திருப்பணிகளைப் பற்றிக் கூறும் சாசனமாகும். இச்சாசனம் அவனது ஆட்சியின் 15ஆம் ஆண்டில் ஏற்பட்டது. இது திருச்சி மாவட்டம் உடையார் பாளையம் தாலுகா திருமழபாடி என்னும் ஊரிலுள்ள வைத்தியநாதர்கோயில் இரண்டாவது பிரகாரத்தின் தெற்குச் சுவரில் காணப்படுகிறது. தமிழ் மொழியில் கிரத்த எழுத்துக்கள் கலந்து எழுதப்பட்டது. நாற்பத்திரண்டு வரிகளையுடையது.

இச் சாசனம் முழுவதும் காணப்படவில்லை. முதலாம் குலோத்துங்க சோழன் மெய்க்கீர்த்தி சாசனத்தைப் போல, இதுவும் விக்கிரம சோழனது "பூமாலை மிடைந்து" என்று தொடங்கும் மெய்க் கீர்த்தி மட்டும் அமைந்ததொரு சாசனமாயுள்ளது. ஆனால், இம் மெய்க்கீர்த்தி விக்கிரம சோழனது 4 ஆம் ஆண்டு மெய்க் கீர்த்தியினும் நீளமுள்ளதாய், அவன் தில்லையில் செய்த திருப்பணிகளைக் கூறுகின்றது. சாசனங்களில் அமைந்த மெய்க் கீர்த்திகள், ஆண்டுதோறும் நீண்டு காணப்படும் என்பதற்கு இச்சாசனமும் ஒரு சான்று யமைகிறது.

பயிற்சி வினாக்கள்

1. காணி காரளவு உரிமைச் சாசனம் என்பது யாது? அது யார் காலத்தில் எப்பொழுது ஏற்பட்டது? எந்த இடத்தில் காணப்படுகிறது?

2 காணி காரளவு உரிமைச் சாசனத்தில் கூறப்படும் செய்திகள் யாவை?

3. விக்கிரம சோழன் மெய்க்கீர்த்தி எவ்வாறு தொடங்குகிறது? அதில் கூறப்படும் அவனது ஆட்சிச் சிறப்புக்களும், வெற்றிச் சிறப்புக்களும் எவை?

4 "குள தெலுங்க வீமன் விலங்கன்மிசை ஏறவும்" - பொருள் யாது? குளதெலுங்கவீமன் என்பதில், 'குளம்' என்றது எதனை? வரலாறு தருக.

5. விக்கிரம சோழன் மனைவியர் யாவர்? அவனது திருவோலக்கச் சிறப்பு எங்ஙனம் கூறப்பெற்றுள்ளது?

6. பொருள் தருக:— பாமாலை, திகிரி, கருக்கலி; வன்பிலம் விலங்கல்; செழியர், திறை, வெந்நிட.

7. விளக்கம் தருக:— குளதெலிங்க வீமன், ஐம்படைப் பருவம் மணிநா வொடுங்க.

8. 'அகில, புவனமும் கவிப்ப தொருபுது மதிபோல' உமையொடு சங்கரன் இமயத்திருந் தானென' — இடஞ்சுட்டி உவமேயங் கூறி விளக்குக

இச் சாசனத்தின் முற்பகுதியில் விக்கிரம சோழன் வெற்றிச் சிறப்பும் ஆட்சிச்சிறப்பும், அவன் தன் ஆட்சியின் பத்தாம் ஆண்டில் தான் பெற்ற திறைப்பொருளால், தில்லையில் பொன்னம்பலத்தைச் சுற்றியுள்ள திருமாளிகை, கோபுரவாசல் கூடசாலைகள், பலி வளர் பீடம், திருத்தேர்க்கோயில் முதலியவற்றைப் பொன்னால் வேய்ந்தது, தான் பிறந்த உத்திரட்டாதி நாளில் பெருவிழா ஒன்று தோற்றுவித்து, கோயில் இறைவனைத் தேரில் வரச்செய்து அவ்விறைவன் திருமேனிக்கு முத்துமாலைகள் பல கொடுத்தது, கோயில் திருமாளிகையைச் சுற்றி, தன் பெயரால் ஒரு திருநெடு வீதி எடுத்தது, இறைவன் திருவமுது கொள்ளும் பரிகல முதலாகக் கற்பகத்தரு, பரிச்சின்ன முதலியவைகளைப் பொன்னால் செய்வித்தது முதலிய திருப்பணிகளும், செழியர் சேரலர், சிங்களர், கங்கர், கன்னடர், கொங்கர், கொங்கணர், முதலியவர்களை வென்று அடிமைப்படுத்தியதும், தனது பட்டத்தரசியான திரிபுவனமுழுதுடையாளோடும் வீர சிம்மாசனத்தில் வீற்றிருந்ததும் ஆன செய்திகளைக் கூறும் அவனது மெய்க்கீர்த்தி அமைந்துள்ளது.

பிற்பகுதியில், விக்கிரமசோழன் ஆட்சியின் பதினைந்தாமாண்டு, திருமழுவாடி உடையார் கோயில் ஆதி சண்டேஸ்வர தேவர் அருளால், கோயில் அதிகாரிகளான ஸ்ரீமகேஸ்வரர், ஸ்ரீகாரியம் செய்வார், கோயில் கணக்கு நெல் குப்பை ஆகியயோர் எழுதிய சாசனம் அமைந்துள்ளது. இச்சானம் முழுவதும் இப்பொழுது காணப்படவில்லை. இதில், அள்ளியூருடையான் திருமழ பாடி கோயிலில் திருநந்திதெவர் திருமேனி யொன்றை எழுந்தருளச் செய்ததாகத் தெரிகிறது.

இச் சாசனத்தால் விக்கிரமசோழன் வெற்றிச் சிறப்பினும் அவனது திருப்பணிச் சிறப்பு மிக்கதென்று தெரிகிறது. அன்றியும் அக்காலத்தில் கோயில் தேர், 'தேர்க்கோயில்' என்று அழைக்கப் பட்டுள்ளமையும் குறிப்பிடத் தக்கது.

விக்கிரம சோழன் கி.பி. 1120 முதல் 1136ஆம் ஆண்டு வரை சோழ நாட்டை ஆண்டான். இச்சாசனம் அவனது ஆட்சியின் பதினைந்தாம் ஆண்டில் ஏற்பட்டதெனவே, இதன் காலம் கி. பி. 1135 ஆம் ஆண்டு என்னலாம்.

சாசனம்

(1) ஸ்வஸ்திஸ்ரீ
பூமாலை மிடைந்து பொன்மா(2)லை திகழப்
பாமாலை மலிந்த பருமணித் திரள்புயத்
திரு(3)நில மடந்தையொடு ஜெயமக ளிருப்பதக்
கநவரை (4)மார்வந் தநதெநப் பெற்றுத்
திருமக ளொருதநி யிருப்பக் (5)கலைமகள்
சொற்றிறம் புணர்ந்த கற்பின ளாகி
விருப்பொடு நா(6)வகத் திருப்ப திசைதொறுந்
திகிரியொடு செங்கோல் நடப்ப அகில
புவநமுங் கவிப்(7)ப தொர்புது மதிபோல்
வெண்குடை மிமிசை நிழற்ற கருங்கலி
யொளித்து வந்பிலத் திடை(8)க்கிடப்பக் குளத்திடை
தெலுங்க வீமங் விலங்கல்மிசை யெறவுங் [டைத்

1 பூமாலை மிடைந்து — பூமாலை சூடி: சாசனங்களில் "ை" என்னும் துணை எழுத்து "ெ" எனப் பெரும்பாலும் அதன் பண்டை வடிவத்தில் காணப்படுதல் குறிப்பிடத் தக்கது.

2. திகழ - விளங்க; பாமாலை மலிந்த - பாமாலைகளால் புகழப்பட்ட; பாமாலை - பாடல்கள்; இங்கு ஒட்டக்கூத்தர் இவன் மீது பாடிய உலா, பரணி முதலியவற்றைக் குறிக்கும்.

3. இருநில மடந்தை - சோழநாடு; ஜெயமகள் - வெற்றி; கனவரை மார்வம் - கனத்த மலையொத்த மார்பு; வரை - மலை; மார்வம் - மார்பு: அம், சாரியை பெற்று நின்றது.

4. திருமகள் — செல்வம்; ஒருதநி இருப்ப — தான் ஒருத்தியே தனித்து இருக்கவும்.

5. கலைமகள் —கல்வி; சொற்றிறம் புணர்ந்த கற்பினள் ஆகி-சொல் வன்மை படைத்த தூய தன்மையுடையதாகி; கற்பு — தூயதன்மை;

6. நாவகம் — நாவிடத்து; திகிரி — ஆணை; செங்கோல் - ஆட்சி; நடப்ப — நடைபெற; அகிலபுவனம் — உலக முழுவதும்; கவிப்பது — மூடுவது.

7. புதுமதி — புதிய திங்கள்; மிமிசை — மேலாக நின்று; நிழற்ற— நிழலைச் செய்ய; கருங்கலி — வறுமை, நோய் முதலியன; ஒளித்து — ஒழித்து, நீக்கி; வன்பிலம் — பாதாளம்.

8. குளத்திடை—குளம் என்னும் ஊரில் வாழ்ந்த; விலங்கல் மிசை ஏறவும் — மலையின் மீது ஏறி ஒளிக்கவும்; கலிங்க பூமி — கலிங்க நாடு; கநலெரி பருகவும் - நெருப்பால் அழிக்கப் படவும்.

விக்கிரம சோழன் பூமாலை, பொன் மாலைகளுடன் பாமாலைகளும் சூடப் பெற்றவன்; நாடு, வெற்றி, செல்வம், கல்வி ஆகியவற்றை ஒருங்கே

கலிங்க பூமியெைக் கநலெ(9)ரி பருகவும்
ஐம்படைெப் பருவத்து வெம்படைெ தாங்கியும்
வெங்கைெ மண்டலத் தாங்கிநி திருந்து
வட(10)திசைெ வடிப்படுத் தருளி தெந்றிசைெ சத்
தருமமுந் தவமுந் தானமுந் தழைெப்ப
வெதமும் மெய்(11)மைெயு மாதியுகம் பொலத்
தலைசிறப்ப வந்தருளி வெலற்கரும் பொர்ப்புலி
யாணை பார்த்திவர் சூட நிறைெ (12)நமணி
மகுடம் முறைெமைெயிற் சூடி
மந்நுயிற்க் கெல்லா மிந்நுயிற்தாய் பொலத்
தந்ஞெளி பரப்பித் தநத்தநி பா13)ர்த்து
மண்முழுதுங் களிப்ப மநுநெறி வளர்த்து

பெற்றவன்; நான்கு திசைகளிலும் தன் ஆணையும் ஆட்சியும் நடை பெற, உலக முழுவதையும் நிழல் செய்யும் ஒரு புதிய திங்களைப் போல தன் வெண்கொற்றக் குடையால் தண்ணளி செய்தவன்; நாட்டில் வறுமை முதலியவவற்றை நீக்கியவன் என்பது.

9. **ஐம்படைெப் பருவம்**—இளமைப் பருவம்; **ஐம்படை**—ஐம்படைத் தாலி: அது வில், வாள், தண்டு, திகிரி,சங்கு இவை ஐந்தின் வடிவமாகச் செய்து குழந்தைகளில் கழுத்தில் அணியப்படும் ஒரு வகைக் காப்பணி. **வெங்கைெ மண்டலத் தாங்கிநிதிருந்து** - விக்கிரம சோழன் இளவரசனு யிருந்தபோது, வேங்கி நாட்டிலிருந்து ஆட்சி செய்தான்; அப்பொழுது தான் அவன் கலிங்கப் போரை நடத்தித் தெலிங்கவீமனைப் புறமிட்டோ டச் செய்தான்.

10. **வடதிசைெ அடிப்படுத்தருளி** — வடதிசையில் கலிங்க வீமன் நாட்டைத் தன்னுட்சிக் குட்படுத்தி; **தெந்றிசைெ** — தென்னுட்டில்: இது முதல் இச்சாசனம் முந்திய சாசனத்தின் மெய்க் கீர்த்தியினின்றும் வேறுபட்டு, விக்கிரம சோழனின் ஆட்சிச் சிறப்புக் கூறுகின்றது. **தருமம்**—அறநெறி; **தவம்**- ஒழுக்கம்; **தானம்** — கொடை; **தழைப்ப** — வளர.

11. **ஆதியுகம் போலத் தலை சிறப்ப**· திரேதா, கிரேதா, துவாபர, கலி என்னும் நால்வகை யுகங்ளில் திரேதாயுகம் முதல் யுகமாகும். அந்த யுகத்தில் நாட்டில் அறம், ஒழுக்கம் முதலியன கானப்பட்டன. அதுபோல விக்கிரமன் ஆட்சியிலும் விளங்கிற்று என்பது. **வந்தருளி** — தோன்றி; **புலி ஆணை**—புலிக்கொடி தாங்கிய விக்கிரமசோழன் கட்டளை; **பார்த்திவர் சூட** — ஏனைய மன்னர்கள் ஏற்றுக்கொள்ள.

12. **மகுடம்** — முடி: **மன்னுயிர்** - உலகத்து மக்கள்; **இன்னுயிர்த் தாய் போல**-இனிய உயிரைத் தரும் தாயைப் போல; **தன்னெளி பரப்பி**-தன்புகழைக் காட்டி; **தநித்தநி பார்த்து**—தானே நேரில் போய்க் கண்டு.

13. **மண் முழுதும் களிப்ப** — நாடு முழுவதும் மகிழ; **மநுநெறி வளர்த்து** — மநு வென்னும் மன்னனுல் ஏற்பட்ட ஆட்சி முறையைக்

தங்கொயிற் கொற்ற வாசல் புறத்து
மணிநா வொடுங்க முரசு(14)கள் முழங்க
விசெயமும் புகழும் மென்மெலோங்க
வாழி வாழி இம்மா நிலங்காக்கத்
திருமணிப் பொற்றெ(15)ட் டெழுதுபத் தாண்டு
வருதிறை முந்நெ மந்நவர் சுமந்து
திறை நிரைத்துச் சொரிந்த செ(16)ம்பொற் குவை
தங்குல நாயகந் தாண்டவம் பயிலுஞ் [யால்
செம்பொந் நம்பலஞ் சூழ்திரு மா(17)ளிகையும்
கொபுர வாசல் கூடசா லைகளும்

கடைப் பிடித்து; **தன் கோயில் கொற்ற வாசல் புறம்** – *தன் அரண்மனை வாயிலுக்கு வெளியிடம்;* **மணிநா ஒடுங்க** - *ஆராய்ச்சி மணி அடி படாது கழிய; அஃதாவது நாட்டில் குடிகளுக்குக் குறைவு ஒன்று மின்றி ஆட்சி நடை பெற என்பது.* **முரசுகள்**—*வெற்றி முரசு, மண முரசு முதலியன*

14. **முழங்க** – *ஒலிக்க;* **விசெயம்** – *வெற்றி;* **மென்மெலோங்க** – *மேலும் மேலும் வளர; இது முதல் இம்மெய்க்கீர்த்தி விக்கிரம சோழன் தில்லையில் செய்த திருப்பணியைக் கூறுகின்றது.* **வாழி வாழி மாநிலம் காக்க** – *'வாழி வாழி இம்மா நிலம் காக்க' என்று;* **திருமணி பொற்றேடு எழுது** – *அழகிய பொன்னேட்டில் எழுதப்படும்; இவ்வாறு எழுதுவதை 'அரசர்க்கு ஆண்டெழுதுவது' என்று கூறுவர். இது மன்னன் ஆட்சியின் ஒவ்வொரு ஆண்டு தவக்கத்திலும் எழுதப்படும் அப்பொழுது அவர் ஆட்சிக்குட்பட்ட மன்னர் திறை கொண்டு வந்து செலுத்துவர்.*

15. **பத்தாண்டு வரு திறை** – *கடந்த பத்து ஆண்டுகளாக பிற மன்னர்களால் கொண்டுவரப்பட்ட திறைப் பொருள்: இனி, 'வருதிறை என்பதை, 'வருமுறை' எனக் கொள்ளின், முறையாகக் கொண்டு வரப் படும் என்று பொருள் கொள்ளத் தகும்.* **முந்நே**—*கடந்த பத்து ஆண்டுகளாக;* **மந்நவர்** – *தன்னாட்சிக்குட்பட்ட மன்னர்கள்;* **திறை** - *திறைப் பொருள்;* **நிரைத்து** – *சேர்த்து;* **சொரிந்த** – *கொண்டு வந்து தந்த.*

16 **செம்பொன் குவை** – *பொற்குவியல்;* **தங்குல நாயகன்** – *தன் குலத் தெய்வமான தில்லை நடராசப் பெருமான்;* **தாண்டவம் பயிலும்** - *திருநடனம் செய்யும்; தாண்டவம் - நடனம்;* **செம் பொன் அம்பலம்**— *திருச்சிற்றம்பலம்; இது தில்லையில் உள்ளது.*

17. **திருமாளிகையும் கோபுர வாசல் கூடசாலைகளும்:** *இங்குத் திருமாளிகை என்பது கோயில் திருமதிலை யொட்டி உட்புறத்து அமைந் துள்ள கட்டடங்களை குறிக்கும்; அவைகளில் பெரியோர் வாழ்வர். கூட சாலை என்பது, தாழ்வாரம். இவை இரண்டையும் விக்கிரம சோழன் தான் திறைப் பொருளாகக் கொண்ட பொன்னால் வேய்ந்தான். அப் பொழுது, அத் திருமாளிகை, இவ்வுலகைச் சுற்றி மதில் போல் நிற்கும்*

உலகு வலங்கொண் டொளிவிளங்கு நெமிக்
கு(18)லவரை உதைய குன்றமொடு நின்றெனப்
பசும்பொந் மெய்ந்து பலிவளர் பீடமும்
விசும்பொளி (19) தழைப்ப விளங்குபொந் மெய்ந்து
இருநிலந் தழைப்ப இமையவர் களிப்ப
பெரிய திருநாள் பெரும்(20)பியர் விழாவெநும்
உயர்புரட் டாதி உத்திரட் டாதியில்
அம்பல நிறைந்த அற்புதக் கூத்தர்
இங்(21)பர் வாழ எழுந்தருளுவ தற்குத்
திருத்தெற் கொயில் செம்பொந் மெய்ந்து
பருந்திரள் முத்திந் (22) பயில்வடம் பரப்பி
நிறைமணி மாளிகை நெடுந்திரு வீதிதந

சக்கரவாளக் கிரியையும், கோபுரவாசல் கூடசாலைகள் உதயகிரியை யும் ஒத்து விளங்கின என்பது. ஒளி விளங்கு - ஒளி வீசும்; நெமிக் குல வரை - சக்கரவாளக் கிரி; இது உலகைச் சுற்றிலும் மதில் போல் வளைந்துள்ள தென்பர். குலவரை - பெரியமலை.

18. உதய குன்றம்—ஞாயிறு தோன்றும் மலை; இதனை 'உதயகிரி' என்பர். பசும்பொந் மெய்ந்து – பசும் பொன்னால் மூடி; பலிவளர் பீடம்— காணிக்கை படைக்கும் இடம்; பலி—காணிக்கை; விசும்பு ஒளி தழைப்ப— ஆகாயத்தில் அதன் ஒளி வீச.

19. இருநிலம் – உலகத்தார்; இமையவர் – தேவர்கள்.

20. பெரிய திருநாள் பெரும் பியர் விழா – பெரிய திருநாள் என்று சொல்லப்படும் பெரும் பெயர் விழா; இது விக்கிரம சோழன் பிறந்த நாளாகிய உத்திரட்டாதி நாளில் நடை பெற்றது இது இரு நாட்கள் நடைபெற்றதென்பது, 'உயர் பூரட்டாதி உத்திரட்டாதியில்' என்ற தொடரால் தெரிகிறது. பூரட்டாதி – 25ஆம் நாள்; உத்திரட் டாதி – 26 ஆம் நாள். அம்பலம் நிறைந்த அற்புதக் கூத்தர்—சிதம்பரம் கோயிலாகிய பொன்னம்பலத்தில் எழுந்தருளிய நடராசப் பெருமான்; இங்பர் – அன்பர், அடியார்; இவ்வுலகத்தவர் எனினுமாம்.

21. திருத்தெற் கோயில் – அழகிய தேராகிய கோயில்; இது, திரு நாட்களில் தில்லைப் பொன்னம்பலத்திலுள்ள நடராசப் பெருமான் திரு வுருவசதை எழுந்தருளச் செய்து, வீதி வருவதற்கு உரியது; முற் காலத்தில் மரத்தினால் செய்யப்பட்ட தேரே, இறைவன் எழுந்தருளிய கோயிலாக இருந்ததென்பது இதனால் தெரிகிறது. விக்கிரம சோழன் தில்லைக் கோயில் தேரையும் பொன்னால் வேய்ந்தான் என்க. பருதிரள் முத்து – பருத்துத் திரண்ட முத்துக்கள்; அம்முத்துக்களாலான மாலை, 'முத்திக் பயில் வடம்' எனப்பட்டது. இது தேர்க் கோயிலில் எழுந் தருளும் இறைவன் திருவுருவத்திற்குச் அணிவதற்கு அளிக்கப்பட்டது.

22. மாளிகை நெடுத்திரு வீதி – திருச்சுற்றுமாளிகையை யடுத்த நீண்ட வீதி; இது இவன் பெயரால் 'விக்கிரம சோழன் வீதி' என்று

திருவளர் பியரால்ச் செ(23)ய்துசமைத் தருளி
பைம்பொற் குழித்த பரிகல முதலால்
செம்பொற் கற்பகத் தொடுபரிச் சிந்(24)நமும்
அளவி லாதந வொளிபெற வமைத்துப்
பத்தா மாண்டில் சிந்திரைத் திங்கள்
அத்த(25)ம் பெற்ற ஆதித்த வாரத்துத்
திருவளர் மதியிந் த்ரயொதசிப் பக்கத்து
இந்ந பலவும் இநிது(26)சமைத் தருளி
ஒருகுடை நிழக்கீழ் தலமுழுதுங் கவிப்பச்
செழியர்வெஞ் சுரம்புக செரலர் க(27)டல்புக

அழைக்கப்பட்டது. **திருவளர் பியரால்ச் செய்து**—விக்கிரமசோழன் என்னும் தன் பெயரால் உண்டாக்கி.

23. **சமைத்தருளி** – அமைத்து; **பைம்பொன் குழித்த பரிகலம் முதலால்** – பசிய பொன்னால் குழி குழியாகச் செய்த உண்ணும் பாத்திரம் முதலாக; பரிகலம் – உண் கலம்; இதில் இறைவனுக்குச் சமைத்த நிவேதன உணவு வைக்கப்படும். அவ்வுணவு பல திறப்பட்டன வாயிருக்குமாதலால், அவைகளைத் தனித்தனியே வைத்தற்கு அவ் வுண்கலம் பல குழிகளையுடையதாயிருந்த தென்பது. **செம்பொன் கற்பகம்** – செம்பொன்னால் செய்த கற்பகத்தரு; இது தில்லைக் கோயிலிடத்துள்ளது. **பரிச்சிந்நம்** – கடவுள், அரசர் முதலியோர்க்குரிய அடையாளப் பொருட்கள்; இவை மரியாதைக்காக விழாக் காலங்களில் வெளியே கொண்டுவரப் படும்.

24. **அளவிலாதந** – கணக்கில்லாதவை; **பத்தா மாண்டில்**-பத்தாவது ஆண்டு; அஃதாவது, கி. பி. 1026 ஆம் ஆண்டு; **சித்திரைத் திங்கள்** – சித்திரை மாதம்.

25. **அத்தம் பெற்ற ஆதித்த வாரம்** – அத்த நாளும் ஞாயிற்றுக் கிழமையும் கூடிய; அத்தம் – அஸ்தநாள்; அஃதாவது பதின்மூன்றாம் நாள்; ஆதித்தவாரம் – ஞாயிற்றுக்கிழமை; **வளர்மதியின்**—வளர் பிறை காலத்தில்; **த்ரயொ தசி பக்கம்** – பதின் மூன்றாவது திதி; பக்கம்—15 நாள். திதி என்பது ஆகாயத்தில் சந்திரனுக்கும் சூரியனுக்குமுள்ள தூரம். **இந்நபலவும்**—இவ்வகையான திருப்பணிகள் பலவற்றையும்.

26. **சமைத்தருளி** – செய்து முடித்து; விக்கிரம சோழன் தனது தில்லைத் திருப்பணிகளையெல்லாம் அவனது ஆட்சியின் பத்தாம் ஆண்டு சித்திரைத் திங்கள் அத்தநாளும் ஞாயிற்றுக்கிழமையும் கூடிய வளர்பிறை திரையோதசி பக்கத்தில், (கி பி. 1028 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 15 ஆம நாள்) செய்து முடித்தான் என்பது. **தலமுழுதும் கவிப்ப** – உலக முழுவதும் அடங்க; **செழியர்** —பாண்டியர்; சுரம் – காடு.

அழிதரு சிங்கணர் அஞ்சிநெஞ் சலமர
கங்கர் திறையிடக் கந்நடர் வெந்நிட
கொங்(28)க ரொதுங்க கொங்கணர் சாயமற்
றெத்திசை மந்ந(29)ருந் தந்தமக் கரணென
திருமலற் செவடி உரிமை (30)யி லிறைஞ்ச
ஆங்கவந் மகிழுங் கங்கையொப் பாகிய
(31)தெரிவையர் திலதந் தியாக பதாகை
புரிகுழல் மடப்பி(32) டி புநிதகுண வநிதை
திரிபுவன முழுதுடை யாள்அவந் தி(33)ருவுளத்

27. சிங்கணர் – சிங்கள மன்னர்; அலமர – எங்க; கங்கர் திறை இட - கங்க மன்னர் திறை செலுத்த; கந்நடர் – கன்னடர்; வெந்நிட– புறங்காட்டி ஓட.

28. கொங்கர் ஒதுங்க – கொங்கு நாட்டவர் பின் வாங்க; கொங் கணர் சாய – கொண்காண நாட்டவர் மடிய.

29 அரண் – அடைக்கலம், ஒதுக் கிடம்; திருமலர்ச்சேவடி - தாமரை மலர் போன்ற செவ்விய பாதங்கள்; உரிமை–சொந்தமானது.

30. இறைஞ்ச – வணங்க; விக்கிரம சோழனோடு போர் செய்த வர்களில் பாண்டியர் காட்டிற்கு ஓடினர்; சேரர் கடலில் புகுத தனர்; சிங்கள மன்னர் பயந்து எங்கினர்; கங்கர் திறை செலுத்தினர்; கன்னடத்தார் புறமிட் டோடினர்; கொங்கு நாட்டவர் பின் வாங்கினர்; கொங்கணர் மடிந்தனர். பிற நாட்டு மன்னர்கள் எல்லாரும் இவன் பாதங்களே அடைக்கலமென வந்து பணிந்தனர் என்பது. அவன் மகிழும் கங்கை – சிவபெருமான் விரும்பும் கங்காதேவி.

31. தெரிவெயர் திலதந் தியாக பதாகை – தெரிவையர் திலத மாகிய தியாக பதாகையுடன்; இச் சாசனத்தில் இவனுடைய முதல் மனைவியான முக்கோக் கிழானடிகள் பெயர் குறிக்கப் பட வில்லை. முந்திய சாசனத்தில், "முல்லை வாணகைய் முக்கோக் கிழானடி, உமை யொடும் சங்கரன், இமையத்திருந்தா நெனப் பொருந்தி இனிதிருப்ப" என வந்திருப்பதால், இவனது ஆட்சியின் 15 ஆம் ஆண்டில் அவள் இல்லை என்பது போதரும்.

தியாக பதாகை என்பாள், இச்சாசனத்தில் கங்கை யொப்பாகிய தெரிவையர் திலதம், புரிகுழல் மடப்பிடி, புநிதகுண வநிதை, திரிபுவனமு ழுதுடையாள், என்பன முதலாகச் சிறப்பித்துக் கூறப்படுகிறாள்.

32. திரிபுவநமுழுதுடையாள் – மூன்று உலகத்தையும் தனக்கு உரிமையாவுடையவள் என்பது; திரிபுவனம் – சேர, சோழ, பாண்டிய நாடுகள்; முதலாம் குலோத்துங்க சோழன் முதலியோர் 'திரிபுவன சக்கர வர்த்திகள்' என அழைக்கப்படுதலும் காண்க.

தருள்முழு துமுடெையாளென வுடனிருப்ப
ஊழி அந்நெடு மாலா கத்துப்
(34) பிரியா தென்றுந் திருமக ளிருந்ததென
மாதர் மடமயில் பூதலத் தருந்ததி
அரணிய (35) கற்பிற் தரணி(முழு துடையா
ளிவந்திரு மார்வத் தருளொடு மிருப்பச்
செம்பொந் வீரஸி(36)ம் ஹாஸநத்து
திரிபுவன முழுதுடையாளொடும் விற்றிருந் தருளிய
கொப்பரகெசரி வந்மரான (37)திரிபுவநச் சக்ரவர்த்திகள்
ஸ்ரீவிக்கிரம சொழ தெவற்கு யாண்டு
௰௫ ஆவது(38)திரிபுவந முழுதுடை வளநாட்டுப் பொய்
கை நாட்டு உடையார் திருமழு

---

33. **அவன் திருவுளத் தருள் முழுதுமுடையாள்** – *விக்கிரம சோழனது அருளுக்கு உரிமையானவள் தியாக பதாகை என்பது.* **ஊழி அந்நெடுமா லாகத்து .... திருமார்வத் தருளொடு மிருப்ப :** இவ்வடிகள் உலக முழுதுடையாள் என்னும் மற்றொரு மனைவி விக்கிரமச் சோழனுடன் அவன் சிம்மாசனத்தில் இருந்த செய்தி கூறு கின்றன; அஃதாவது, உலக முடிவில் திருமாலின் திருமார்பினைப் பிரியா திருக்கும் இலக்குமியைப் போன்று, மாதர் மடமயில் என்றும், பூதலத் தருந்ததி என்றும், அரணிய கற்புடையாள் என்றும சிறப்பித்துக் கூறப் படும் **தரணி முழுதுடையாள்** விக்கிரமச் சோழன் மனதை விட்டு நீங் காது இருப்ப எனபது. இத்தகைய தொடர் ஒன்று முதலாம் குலோத் துங்க சோழன் சாசனத்திலும் வந்திருசதல் குறிப்பிடத் தக்கது. **தரணி முழுதுடையாள்** என்பாள் இவனது மூன்றாவது மனைவியாய் இருசதல் வேண்டும் போலும்.

36. **திரிபுவன முழுதுடையாளொடும் வீற்றிருந்தருளிய:** விக்கிரம சோழன், கங்கையொப்பாகிய **தியாகபதாகையும்,** நெடுமா லாகத்துத் திருமகள் இருந்தென **தரணி முழுதுடையாளும்** உடனிருப்ப **திருபுவன முழுதுடையாளொடு** வீரசிம்மாசனத்து வீற்றிருந்தான் என்பதால், இம மூவரும் இவன் தேவியர் எனக் கருத இடமிருக்கிறது. **கொப்பர கேசரி :** விக்கிரம சோழன் பரகேசரி எனவே, இவனுக்குப்பின் ஆட்சி செய்த இரண்டாம் குலோத்துங்க சோழன் இராசகேசரி என்பது போதரும்

37 **திரிபுவநச் சக்கரவர்த்திகள் :** இப்பெயர் முதலாம் குலோத் துங்க சோழன் காலமுதல் சோழமன்னருக்கும் பாண்டிய மன்னருக்கும் வழங்கி வருவது குறிப்பிடத் தக்கது. **முதலாம் குலோத்துங்க சோழன், விக்கிரம சோழன், குலசேகர தேவர், சுந்தர பாண்டியதேவர்** முதலியோர் திரிபுவன சக்கரவர்த்தி பட்டம் பெற்றவர்களாவர்.

38. **திருமழுவாடி உடையார் கோயில்** – திருமழுவாடி என்பது இப்பொழுது திருமழபாடி என்று வழங்குகிறது. இது விக்கிரமசோழன்

39 வாடி உடெயார் கொயிலில் ஆதிசண்டெச்வர தெவர் ஆதெசம் அருளால் இ—

40. க் கொயிலில் ஸ்ரீ மாஹெச்வரொமும் ஸ்ரீ காரியஞ் செய்வாரும் இக்கொயில் கணக்கு

41 நெல் குப்பெயுடெயானும் உள்ளிட்ட ஸ்தாநத் தொம் எழுத்து இக்கொயிலில்

42. ஸ்ரீ நந்திகெச்வரதெவரெ எழுந்தருளுவித்த அள்ளி யூரு டெயாந் எச்சில் மண்.

காலத்தில் திரிபுவந முழுதுடை வளநாட்டு, பொய்கை நாட்டில் இருந் தது. இப்பொழுது, திருச்சி மாவட்டம் உடையார் பாளையம் தாலூகா வில் உள்ளது.

திரிபுவந முழுதுடெ வளநாடு என்பது முதலாம் இராசராசன் காலத்தில், அவன் சிறப்புப் பெயரால் இராசேந்திர சிங்கவள நாடு என்று வழங்கியது. இது காவிரிநதிக்கு வடக்கே வெள்ளாறுவரை பரவி இருந்தது என்பர். இது முதலாம் குலோத்துங்கன் காலத்தில் 'தியாக வல்லி வளநாடு' என்று பெயர் பெற்றிருந்தது.

திருமழுவாடி உடையார் கோவில், இப்பொழுது 'வயித்திய நாத சுவாமி கோயில்' என்று அழைக்கப்படுகிறது. இங்குப் பங்குனி மாதம் நந்தி தேவருக்குத் திருக்கல்யாண விழா நடை பெறுகிறது.

39. ஆதி சண்டெச்வரதெவர் ஆதெசம் அருளால்—ஆதி சண்டேசு வரர் அருளாலும் கட்டளையாலும் : ஆதி சண்டேச்வரரைப் பற்றி இந் நூல் வில்லவராயன் சாசனம் 185ஆம் பக்கத்தில் காண்க. ஆதெசம்— கட்டளை.

40. ஸ்ரீமாஹெச்வரோமும் – கோயில் அதிகாரிகளாகிய யாமும்; ஸ்ரீ காரியம் செய்வாரும் – கோயில் காரியங்களை மேற்பார்வை செய் வாரும்; ஸ்ரீகாரியம் செய்வார்—கோயில் மேலாளர்; கோயில் கணக்கு— கோயில் கணக்கன்; இவன் ஊர்ச்சபைக் கணக்கனை கரணத்தானின் வேறானவன். திருமழ பாடி உடையார் கோயில் கணக்கன் பெயர், நெல் குப்பை யுடையான் என்பதாகும்.

41. உள்ளிட்ட – கூடிய, சேர்ந்த; ஸ்தாநத்தோம்—கோயில் தலை வர்கள். ஸ்தானம் – கோயில். ஸ்தாநத்தோம் எழுத்து என்பது, ஆதி சண்டேஸ்வர தேவர் கட்டளையாலும் அருளாலும், கோயில் அதிகாரி களான ஸ்ரீமாகேஸ்வரர், ஸ்ரீ காரியம் செய்வார், கோயில் கணக்கு ஆகி யோர் எழுதிய சாசனம் என்று பொருள் படும்; எழுத்து - சாசனம்.

42. அள்ளியூருடையான் : இவன் அள்ளியூருக்குத் தலைவன்; திருமழுவாடி உடையார் கோயிலில் திருநந்தீச்சுவரர் திருமெனி ஒன்றை எழுந்தருளச் செய்தான். 'எச்சில் மண்' என்பன பற்றிய விளக்கம் தெரியவில்லை.

பயிற்சி வினாக்கள்

1. தில்லைத் திருப்பணி சாசனம் என்பது யாது? விக்கிரம சோழன் தில்லையில் செய்த திருப்பணிகளைக் குறிப்பிடுக.

2. தில்லைத் திருப்பணி சாசனம் எங்குக் காணப்படுகிறது? அச் சாசனத்தில் வரும் அள்ளிபூருடையானைப் பற்றி அறியப்படும் செய்தி யாது?

3. விக்கிரமசோழன் மெய்க்கிர்த்தி எவ்வாறு தொடங்குகிறது? அவனது 4ஆம் ஆண்டு மெய்க்கீர்த்திக்கும் 15ஆம் ஆண்டு மெய்க்கீர்த்திக்கும் இடைப்பட்ட செய்திகளாகக் கூறப்படுவன யாவை?

4 விக்கிரமசோழன் மெய்க்கீர்த்தியில் காணப்படும் அவனுடைய வெற்றிகள் யாவை? அவன் ஐம்படைப்பருவத்து வெம்படை தாங்கிச் செய்த போரினை விளக்குக.

5 விக்கிரம சோழனது ஆட்சிச் சிறப்பினைக் குறிப்பிடுக. 'அகில புவனமும் கவிப்பதோர் புதுமதிபோல', 'ஆதியுகம் போல', 'மன்னுயிர்க் கெல்லா மின்னுயிர்த் தாய்போல' என்பனவற்றால் விளக்குவன யாவை?

6. பொருள் தருக:— பாமாலை, கருங்கவி, வன்பிலம், விலங்கல், திருமாளிகை, கூடசாலை, வடம், பரிகலம், கற்பகம், பரிச்சின்னம், திங்கள், அத்தம், வாரம், பக்கம்.

7. விளக்கம் தருக:— குளத்திடைத் தெலுங்க வீமன், ஐம்படைப் பருவம், மனுநெறி வளர்த்து, மணிநா வொடுங்க, பொற்றேட்டு எழுபத் தாண்டு, தன்குல நாயகன், அம்பலம் நிறைந்த அற்புதக் கூத்தர், திருத் தேர்க்கோயில்.

8. 'நேமிக்குலவரை யுதயகுன்றமொடு நின்றென — நின்றன' யாவை? விளக்கி எழுதுக.

9. பெரிய திருநாட் பெரும் பெயர் விழா நடை பெற்ற நாட்கள் எவை? சாசனச் சான்று காட்டி விளக்குக.

10. விக்கிரமசோழன் செம் பொன்னால் வேய்ந்தன யாவை?

11. விக்கிரம சோழன் தில்லையில் செய்த திருப்பணி முடிந்த நாள் எது? அதற்குச் சரியான இந்நாளைய காலம் எது?

12. இச்சாசனத்தில் கூறப்படும் விக்கிரம சோழன் தேவியர் யாவர்? அவர்கள் சிறப்புக்கள் யாவை?

13. கங்கை, திருமகள்—இவர்களுக்கு ஒப்பான விக்கிரம சோழன் தேவியர் யாவர்? அவர்கள் எங்ஙனம் சிறப்பித்துக் கூறப்படுகின்றனர்? 'திரிபுவனமுழுதுடையாள்' என்பதற்குச் சொற்பொருள் தருக.

22. மூன்ரும் இராசராச சோழன் சாசனம்.

முன்னுரை

மூன்ரும் இராசராச சோழன் சாசனம் என்பது, மூன்ரும் இராசராசன் † காலத்தில் ஏற்பட்ட சாசனம் என்று பொருள் படும். இச்சாசனம் மூன்ரும் இராசராச சோழன் ஆட்சியின் பதினெட்டாம் ஆண்டில் ஏற்பட்டது. இது செங்கல்பட்டு மாவட்டம் காஞ்சிபுரம் தாலூகா மணிமங்கலம் என்னும் ஊரிலுள்ள இராசகோபாலசுவாமி கோயில் மண்டபத்தின் கிழக்குச் சுவரில் காணப்படுகிறது. தமிழ்மொழியில் கிரந்த எழுத்துக்கள் கலந்து எழுதப்பட்டது. எட்டு வரிகளையுடையது.

† மூன்ரும் இராசராச சோழன், மூன்ரும் குலோததுங்க சோழனுக்கு மகன் என்று கருதப்படுகிறது. விக்கிரம சோழனுக்குப் பின் அவன் மகன் இரண்டாம் குலோத்துங்க சோழன் (கி.பி. 1133–1150), அவன் மகன் இரண்டாம் இராசராச சோழன் (கி பி. 1146–1163), விக்கிரம சோழன் பெயரனுன எதிரிலிப்பெருமாள் என்னும் இரண்டாம் இராசாதிராசன் (கி. பி. 1163–1178), அவன் தம்பி என்று கருதப் படும் மூன்ரும் குலோத்துங்கன் (கி பி. 1178–1218) ஆகியோர் ஆண்டனர். மூன்ரும் குலோத்துங்க சோழன் மகனுன மூன்ரும் இராசராச சோழன் கி. பி. 1216 முதல் 1256 வரை சோழநாட்டை ஆண்டான். இவன் இராசகேசரி பட்டம் பெற்றவன்.

இவன் காலத்தில் வடமேற்கே ஹொய்சளரும், தெற்கே பாண்டியரும், மகதநாட்டு வாண கோவரையர், திருமுனைப்பாடி நாட்டுக் காடவராயர் முதலிய குறுநில மன்னரும் இவனுக்குப் பகைவராயிருந்து பல துன்பங்களைத் தந்தனர். **முதல் மாறவர்மன் சுந்தர பாண்டியன்** இவனோடு போர் செய்து, இவன் நாட்டைப் பிடித்துத் தன் ஆட்சிக்குட்படுத்தினன். ஆனல் போசள மன்னனுன **வீர நரசிம்மன்**, மாறவர்மன் சுந்தர பாண்டியனை வென்று, மீண்டும் இராசராசன் சோழநாட்டை ஆளும் படிச் செய்தான்.

இவனுடைய கல்வெட்டுக்கள் தென்னர்க்காடு, வடார்க்காடு, செங்கல் பட்டு, சேலம், சித்தூர், கடப்பை, நெல்லூர் முதலிய மாவட்டங்களில் காணப்படுகின்றன. இவனுக்குச், 'சீர் மன்னி இருநான்கு திசை மன்னும்'' எனவும், ''சீர் மன்னு மலர்மகளும்'' எனவும் தொடங்கும் இரு வகை மெய்க் கீர்த்திகள் உள்ளன. இவன் காலத்தில்தான் சைவ சித்தாந்த சாத்திரங்களுள் ஒன்ருன **சிவஞான போதம்** என்னும் நூல், திருவெண்ணெய் நல்லூர் மெய்கண்ட தேவரால் எழுதப் பெற்றது.

இராசராசன் பட்டத்தரசி **புவனமுழுதுடையாள்** எனப்படுவாள். மூன்ரும் இராசேந்திர சோழன் இவனுக்கு மகனுவான். இவனுக்குப் பகைவரும், நண்பருமான பல குறு நில மன்னரும், அரசியல் தலைவர்களும் இவன் காலத்தில் வாழ்ந்தனர். இவன் கி. பி. 1256ல் இறந்தான் என்பர்.

இச்சாசனத்தில் மூன்ரும் இராசராசசோழன், 'திரிபுவனச் சக்கரவர்த்திகள் ஸ்ரீ ராஜராஜ தேவர்' என்று குறிக்கப்பட்டுள்ளான். அவனது ஆட்சியின் 18 ஆம் ஆண்டு, மார்கழி மாதம், வளர்பிறை ஐந்தாம் திதியும் புதன்கிழமையும் கூடிய அவிட்ட நாளில், மணிமங்கலம் வண்டுவராவதி எம்பெருமான் கோயில் அபிசேக மண்டபத்திற்கு அடியில் புலிமுக மிடப்பட்ட படிக் கட்டு வொன்றை கல்லால் கட்டுவதற்கு வேண்டும் பொன்னை, மணிமங்கலம் உடையான் பஞ்சநெதி இலச்சுமணன் மலை கினிய நின்ருன் மூத்த மகனை பிரமபிரியனும், அவன் தம்பி ஆகவமல்லதேவனும் தானமாகக் கொடுத்த செய்தி கூறப்படுகிறது. அக்காலத்தில் கோயில் மண்டப முதலியன ஒவ்வொருவர் பெயரால் கட்டப்பட்டன என்பதற்கு இச் சாசனம் ஒரு சான்ருகும்.

மூன்ரும் இராசராச சோழன் கி. பி. 1216 முதல் 1256ஆம் ஆண்டு வரை சோழ நாட்டை ஆண்டான். இச்சானம் அவனது ஆட்சியின் 18ஆம் ஆண்டில் ஏற்பட்ட தெனவே, இதன் காலம் கி. பி. 1234 ஆம் ஆண்டு என்னலாம்.

சாசனம்

1. ஸ்வஸ்தி ஸ்ரீ திருவாய்க்கெழ்வி முன்ருக திரிபுவனச் சக்கரவத்திகள் ஸ்ரீ ராஜராஜ தெவற்—

2. கு யாண்டு ௰அ வது தநுநாயற்று பூர்வ்வ பக்ஷத்து பஞ்சமியும் புதன் கிழமையும் பெ—

3. ற்ற அவிட்டத்தி ஞள் ஐயங்கொண்ட சொழ மண்டலத்துப் புலியூர்க் கொட்டமான குலொத்து—

குறிப்புரை

1. **திருவாய்க் கெழ்வி** - *அரசன் ஆணையைக் கேட்டு அறிவிப்பவன்*; **முன்ருக** – *சான்ருக; முன்னிலையில் எனினுமாம்*; **திரிபுவனச் சக்கரவத்திகள் ஸ்ரீ ராஜராஜ தெவர்** – *மூன்ரும் இராசராச தேவன்; இவன் திரிபுவன சக்கரவர்த்திகள் என்னும் பட்டம் பெற்றவன்; இவன் வரலாற்றை இச்சாசன முன்னுரை அடிக்குறிப்பில் காண்க.*

2 **தநு நாயிறு** – *மார்கழித் திங்கள்*; **பூர்வ்வ பக்ஷம்** – *முதல் பக்கம்; அஃதாவது வளர்பிறை காலம்*; **பஞ்சமி** -- *ஐந்தாவது திதி.*

3. **அவிட்டத்தின் நாள்** – *இருபத்து மூன்ருவது நாள்*; **ஐயங்கொண்ட சொழ மண்டலம்** - *தொண்டை நாடு*; **புலியூர்க் கொட்டம்:** *இது மூதற் குலோத்துங்கன் காலத்தில் குலோத்துங்க சோழ வளநாடு; என்று பெயர் பெற்றிருந்தது இப்பொழுது செங்கல்பட்டு மாவட்டத்தைத் சேர்ந்த சைதாப்பேட்டை, பொன்னேரி முதலிய தாலூகாக்கள் அடங்கிய பகுதியைக் குறிக்கும் என்பர்.*

4. ங்கசொழவளனுட்டுக் குன்றத்தூர் நாட்டு மணிமங் லமான கிராமசிகாமணிச் சதுவெதி மங்—

5. கலத்து வண்டுவராபதி எம்பெருமான் கொயிலில் அபிஷெக மண்டபத்துக்கு கீழைப்—

6. புலிமுகமான சொபானத்துக்கு வெண்டும் பொன் னிட்டுக் கல்காரஞ் செய்வித்தான் மணிமங்—

7. கலமுடையான் பஞ்சநெதி இலக்ஷுமணன் மலேகினி ய நின்றுன் பிரம பெரியன் பெரிய பிள்—

---

4. குன்றத்தூர் நாட்டு மணி மங்கலம் : இது செயங்கொண்ட சோழமண்டலத்துப் புலியூர்க் கோட்டத்தில் உள்ளது; புலியூர்க் கோட்டம், முதற்குலோத்துங்கன் காலமுதல் 'குலோத்துங்க சோழ வளநாடு' என்று பெயர் பெற்றதால், மணிமங்கலம் என்னும் ஊர், அவ்வளநாட்டு குன்றத்தூர் நாட்டில் உள்ளதாயிற்று. முதல் இராசாதிராசன், இரண்டாம் இராசேந்திரன், முதலாம் வீர ராசேந்திரன் முதலியோர் காலத்தில், மணிமங்கலம்' ஜெயங்கொண்ட சோழ மண்டலத்துச் செங்காட்டுக் கோட்டத்து, மாகனூர் நாட்டில் இருந்ததென்பது அன்னூர் காலத்துச் சானங்களால் அறிகின்ரேம்.

கிராமசிகாமணி சதுர்வெதிமங்கலம் : இது மூன்ருூம் இராசராசன் காலத்தில் மணி மங்கலத்திற்கு வழங்கிய மற்ரேரு பெயர். ஆனுல் முதல் இராசாதிராசன் முதலியோர் காலத்தில் அது இராசசூளாமணி சதுர்வேதி மங்கலம் என்று அழைக்கப்பட்டது.

5 வண்டுவராதி எம்பெருமான் : மணிமங்கலம் கோயில் இறைவன் பெயர். இவருக்குக் 'காமக் கோடி விண்ணக ராழ்வார்' என்ற மறுபெயரு முண்டு. அபிஷேக மண்டபம் – இறைவன் திருவுருவத்தைத் திருமஞ்சனம் செய்யுமிடம்; கீழை – அடிப் பகுதியில்.

6. புலிமுகமான சொபானம் – புலிமுக வடிவத்தில் செய்யப்பட்ட படிக்கட்டு; சோபானம் – படிக்கட்டு; பொன்னிட்டு–பொன்னேச் செலவு செய்து; கல்காரம் - கல்லால் செய்யப்படும் பணி; காரம் என்பது தாரம் என்றிருத்தல் வேண்டும். தாரம் – பணி, வேலே.

மணி மங்கலம் கோயில் அபிசேக மண்டபத்தினடியில் கல்லால் படி கட்டுவதற்கு, அவ்வூர் மணிமங்கல முடையான் பஞ்சநெதி இலச்சுமணன் மலேகினிய நின்றுன் மூத்த மகனுன பிரம பெரியனும், அவன் தம்பி ஆகவமல்ல தேவனும் பொன் கொடுத்தனர் என்பது.

7. மணிமங்கலமுடையான் பஞ்சநெதி இலக்ஷுமணன் மலேகினிய நின்ருன் பிரமபெரியன் பெரிய பிள்ளே என்பது, "மணி மங்கல முடையான் பஞ்ச நெதி இலக்ஷுமணன் மலே கினிய நின்றுன் பெரிய

8. ளேயும் இவன் தம்பி ஆகவமல்லதெவனும் இவர்கள் தன்மம்

பிள்ளேயான பிரம பெரியன்'' என்றிருத்தல் வேண்டும் 'மலே குனிய நின்ருன்' என்பது திருவேங்கடமுடைய இறைவன் திருப் பெயர்களில் ஒன்ருதலால், 'மலே கினிய நின்ருன்' என்பது, 'மலே குனிய நின்ருன்' என்றிருத்தல் வேண்டுமென்று தெரிகிறது. பெரிய பிள்ளே — மூத்த மகன்.

8. இவன் தம்பி — பிரம பெரியன் தம்பி; இவர்கள் தன்மம் — இது இவர்கள் தானம்; தன்மம் — தானம்.

பயிற்சி வினுக்கள்.

1. மூன்ரும் இராசராச சோழன் சாசனம் எங்குக் காணப்படுகிறது? அது எக்காலத்தில் ஏற்பட்டது?

2. மூன்ரும் இராசராச சோழன் சாசனத்தில் கூறப்படும் செய்தி யாது? அதில் அவனுக்கு வழங்கிய பெயர் யாது?

3. விளக்கம் தருக:— திருவாய்க் கேள்வி முன்னுக, தநுநாயற்று பூர்வ பக்ஷத்து பஞ்சமியும் புதன்கிழமையும் பெற்ற அவிட்டத்தினுள்

4. விளக்குக:— ஐயங்கொண்ட சோழமண்டலம், வண்டுவராபதி எம்பெருமான், அபிஷேகமண்டபம், புலிமுகமான சோபானம், கல்காரம் செய்வித்தல்.

5. மணிமங்கலம் எங்கு உள்ளது? அது இரண்டாம் இராசேந்திர சோழன், மூன்ரும் இராசராச சோழன் காலத்தில் எங்கெங்கு உள்ளதாகக் கூறப்படுகிறது?

6. மணி மங்கலத்துக்கு வழங்கிய வெவ்வேறு பெயர்களே, அந்தந்தக் காலக்குறிப்புடன் கூறுக.

7. பிரம பெரியன் யார்? அவன் தந்தை, தம்பி ஆகியோர் பெயர்கள் யாவை? அவன் செய்த திருப்பணி யாது?

23. மாறன் சடையன் சாசனம் *

முன்னுரை

மாறன் சடையன் சாசனம் என்பது, மாறன்சடையன் என்னும் பாண்டியன் † காலத்தில் ஏற்பட்ட சாசனம் என்று பொருள்படும். இச்சாசனம் மாறன் சடையன் ஆட்சியின் பதினேழாம் ஆண்டில் ஏற்பட்டது. இஃது புதுக் கோட்டையைச் சேர்ந்த ஆலங்குடி தாலூகா திருக்கோகர்ணம் என்னும் ஊரிலுள்ள கோகர்ணேச்வரர் கோயில் நடுவிடத்துக் கருப்பகிருகத்தின் தெற்குச் சுவரில் காணப்படுகிறது. தமிழ் மொழியில் கிரந்த எழுத்துக்கள் கலந்து எழுதப் பெற்றது; இருபத்தொரு வரிகளை யுடையது.

---

* Pudukkottai State Inscriptions, No. 239, P 133.

† மாறன்சடையன் என்பான், கி.பி. 765க்கும், 790க்கும் இடைப்பட்ட காலத்தில் பாண்டிய நாட்டை ஆண்ட ஒரு பாண்டிய மன்னனுவான். இவனது அண்ணுமலைக் கல்வெட்டுக்களால் இவன் **மாறன்** என்பானுக்கு மகன் என்றும், இவனது இயற்பெயர் **சடையன்** என்றும் தெரிகிறது. திருச்சிராப் பள்ளிக் கல்வெட்டுக்கள் இவனைப் **பாண்டியாதிராச வரகுணன்** என்று குறிப்பிடுகின்றன. இவனே, **நெடுஞ்சடையன் பராந்தகன்** என வேள்விக்குடி சாசனத்தால் அறிகின்றேம். இவன் ஏறக்குறைய 50 ஆண்டுகள் ஆட்சி புரிந்தான் என உயர்திரு K. A. நீலகண்ட சாஸ்திரி அவர்கள் கூறுவர்.

இவன் காவிரியின் தென்கரையிலுள்ள **பெண்ணுடகம்** என்னும் இடத்தில் நிகழ்ந்த போரில், பல்லவர்களை வென்ருனென்றும், வேணுட்டரசனுகிய **ஆய்வேளோடு** போர் செய்து அவனைப் புறங்கண்டான் என்றும் வேள்விக்குடிச் சாசனம் கூறும். காவிரியின் வடகரையிலுள்ள ஆயிரவேலி, அயிரூர், புகழியூர் முதலிய இடங்களில் கொங்கு நாட்டு மன்னனை **அதியனை** வென்ற செய்தி சென்னைப் பொருட்காட்சி சாலையிலுள்ள இவனது செப்பேடுகளால் தெரிகிறது. இவன் பரம வைஷ்ணவன் என்றும், கொங்கு நாட்டிலுள்ள காஞ்சிவாய்ப் பேரூரில் திருமாலுக்குக் குன்ற மன்னதோர் கோயில் எடுத்தான் என்றும் கூறுவர். இவனுட்சி காலத்தில்தான் **பெரியாழ்வார்** வாழ்ந்தாரென்பதும், அவர் இவனைத் தமது திருமாலிருஞ் சோலைப் பாசுரங்களில் புகழ்ந்து பாடியுள்ளார் என்பதும் குறிப்பிடத் தக்கவை.

வேள்விக்குடிச் செப்பேடுகளும், சீவரமங்கலத்துச் செப்பேடுகளும் இவன் பிறப்பித்தனவே யாகும். வரலாற்ருராய்ச்சிக்கு இவை பெரிதும் பயன் படுகின்றன.

இச் சாசனத்தில் வல்லநாட்டுக் கவிப்பால் கல்குறிச்சி என்னும் ஊரிலுள்ள வரகுணவதி அரையன் என்னும் நக்கஞ் செட்டி என்பான் திருக்கோகர்ணம் [திருவெள்ளூர்] கோயில் இறைவர்க்கு ஒரு நந்தா விளக்கு வைத்து அதன் செலவுக்கு இரவும் பகலுமாகப் பல இடங்களில் யாசித்துப் பதினைந்து பொன் முதலாகக் கொடுத்த செய்தி கூறப்படுகிறது.

மாறன் சடையன் கி. பி. 765க்கும் 790க்கும் இடைப்பட்ட காலத்தில் பாண்டிய நாட்டை ஆண்டான் என்று தெரிகிறது. இச்சாசனம் அவன் ஆட்சியின் பதினேழாம் ஆண்டில் ஏற்பட்டது. எனவே, இதன் காலம் கி. பி. 781–782 ஆம் ஆண்டு என்னலாம்.

சாசனம்

1 ஸ்வஸ்திஶ்ரீ கொமாற–
2. ஞ் சடையார்க்கு யா–
3. ண்டு யிஎ ஆவது
4. வல்ல நாட்டு கவி—
5. ப்பால் கல்குறிச்—
6. சி வரகுணவதி
7. அரையன் ஆன
8. நக்கஞ் செட்டி உ—

குறிப்புரை

1. **கொமாறஞ்சடையார் :** இவன் பாண்டிய மன்னருள் ஒருவன்; சடையன் என்பது இவன் இயற்பெயர். மாறன் என்பது இவன் தந்தை பெயர். இவன் கி. பி. 765 முதல் 790 வரை பாண்டிய நாட்டை ஆண்டான் என்பர்.

3. **யாண்டு யிஎ ஆவது –** ஆட்சியின் 17 ஆம் ஆண்டு; அஃதாவது கி. பி. 781–782.

4 **வல்ல நாடு :** இது பாண்டிய நாட்டின் ஒரு பகுதி; கவிர் என்னும் மாவட்டத்தைத் தன்னில் கொண்டது. அக்காலத்தில் இது இராசராச வளநாட்டைச் சேர்ந்திருந்தது. **கவிப் பால்:** இது வல்லநாட்டினுளடங்கிய ஒரு மாவட்டம்.

5. **கல் குறிச்சி ;** இது கற்குறிச்சி என்றும் வழங்கும்; இதன் பழைய பெயர் 'திருக்கட்டளை' என்பது.

6. **வரகுணவதி அரையன் :** இது நக்கஞ் செட்டி என்பவனுக்கு வழங்கிய சிறப்புப் பெயர்.

8. **உஞ்ஞூட்டு –** பிச்சை எடுத்து; உஞ்சும், உஞ்சு விருத்தி என்பன அரிசிப் பிச்சை ஏற்று நடாத்தும் வாழ்க்கையைக் குறிக்கும் பதிப்பாசிரியர், 'உஞ்ஞூட்டு' என்பதற்கு, 'உண்ணி ஆற்றுதல்' என்று பொருள் கொண்டு, உண்ணுதல் என்பது, கோயில் காரியத்திற்காக யாசித்துச் சேர்த்தல் என்று பொருள் கூறுவர். உண்ணி – உண்பவன்; 'அப்பன் இரந்துண்ணி' என வருமிடத்தில் இப்பொருள் படுதலைக் கூறலாம்.

9.	ஞ்ஞட்டு திருவெ—	16.	வெத்த பொன்
10.	ள்ப்பூர் கொகர்—	17.	ழிடு பதின் அஞ்—
11.	ணத்து மாதெ—	18.	கழஞ்சு இப்—
12.	வர்க்கு நொந்தா—	19.	பொன் நாட்டார் ர—
13.	விளக்கினுக்கு ராவு—	20.	க்ஷெயாக வெத்த
14.	ம் பகலும் நொந்—	21.	பொன்
15.	தா விளக்குனுக்கு		

இங்ஙனம் ஒர் உறுதி செய்து ஊர்தோறும் சென்று பிச்சை ஏற்றுச் சேர்த்துக் கடவுளுக்குக் காணிக்கையாகக் கொடுக்கும் வழக்கம் இன்னும் தென்னாட்டில் வழக்கமாதல் வெளிப்படை.

9. **திருவெள்ப்பூர்:** இக்காலத்தில் இவ்வூரின் பெயர் 'திருவாப்பூர்' என்று வழங்குகிறது. எனவே, திருக்கோகர்ணம் என்பதன் பழைய பெயர் இதுவா யிருக்கலாம் என்று கருதப்படுகிறது.

10. **கொகர்ணத்து மாதெவர்** – திருக்கோகர்ணம் கோயில் இறைவனாகிய கோகர்ணச்வரர்.

11–12. **கோகர்ணம்** – திருக்கோகர்ணம்; இது திருவாப்பூரைச் சேர்ந்தது; இப்பொழுது ஆலங்குடித் தாலுகாவில் உள்ளது. **மாதேவர்** மஹாதேவர்; இஃது திருக்கோகர்ணத்து இறைவன் பெயர்.

13–14. **நொந்தா விளக்கு** – நந்தா விளக்கு; இதனைத் 'தூண்டா விளக்கு' என்றும் கூறுவர். **ராவும் பகலும்** – இரவும் பகலும்.

16–18. **வெத்த** – சேமநிதியாக வைத்த; **பொன்** – பொன் நாணயம்; இது $1\frac{1}{4}$ ரூபாய் மதிப்புள்ள தென்பர். **பதின் அஞ் கழஞ்சி** – 15 கழஞ்சு. கழஞ்சு என்பது பொன்னை நிறுக்கும் ஒரு நிறுத்த லளவை. இக்காலத்தில் அது $\frac{1}{6}$ அவுன்ஸ் எடையைக் குறிக்கும் இதனால் ஒரு பொன், கழஞ்சு எடையுள்ள தென்றும், அது $1\frac{1}{4}$ ரூபாய் மதிப்புள்ள தென்றும் தெரிகிறது.

19–20. **நாட்டார்** – நாட்டாண்மைக்காரர்; நாட்டு மகா சனம் எனினுமாம். எண்பேராயத்துள் இவர்கள் ஒருவராயிருத்தல் கூடும். **ரக்ஷெயாக வைத்த** – காவலாக வைத்த; ரக்ஷை – காப்பு.

21. **பொன்** – பொற் காசு.

பயிற்சி வினக்கள்

1. கோமாறன் சடையன், நக்கஞ் செட்டி, உஞ்ஞட்டு – இவற்றைப் பற்றிக் குறிப்பு வரைக.

2. மாறஞ் சடையன் சாசனத்தின் காலம் எது? அது எங்குக் காணப்படுகிறது? அதில் கூறப்படும் செய்தி யாது?

3. விளக்குக:- வல்ல நாட்டு கவிப்பால் குறிச்சி, வரகுண அரையன் ஆன நக்கஞ்செட்டி, திருவெள்ப்பூர், கொகர்ணத்து மாதெவர், நாட்டார் ரக்ஷெயாக வெத்த.

24. குலசேகர தேவர் சாசனம் *

முன்னுரை

குலசேகரத் தேவர் சாசனம் என்பது, சடையவர்மன் குலசேகரதேவ பாண்டியன் காலத்தில் ஏற்பட்ட சாசனம் என்று பொருள் படும். இச்சாசனம் அவன் ஆட்சியின் மூன்ருவது ஆண்டில் ஏற்பட்டது. இது புதுக்கோட்டையைச் சேர்ந்த திருமய்யம் தாலூகாவில் மலையக்கோயில் என்னும் ஊரிலுள்ள குடபோகக்கோயிலின் வாயில் வடபுறச் சுவரில் காணப்படுகிறது. தமிழ் மொழியில் கிரந்த எழுத்துக்கள் கலந்து எழுதப்பெற்றது; இருபத்தொன்பது வரிகளையுடையது.

இச்சாசனத்தின் முற்பகுதியில் 'பூவின் கிழத்தி மேவிவீற்றிருப்ப' என்று தொடங்கும் குலசேகரதேவ பாண்டியன் மெய்க்கீர்த்தி அமைந்துள்ளது. அதில் அவன் புகழ், அவனுடைய முன்னோருடைய புகழுடன் சேர்த்துக் கூறப்படுகிறது. மேலும், அவனுட்சியின் கீழ் வில்லவர், செம்பியர், விராடர், மராடர், பல்லவர் முதலியோர் இருந்து திறை செலுத்திய செய்தியும் காணப்படுகிறது. பிற்பகுதியில்,கல்வாயில் நாடுடையான் என்னும் அரசியல் அதிகாரி ஒருவன், திருவோதிக்காலை என்னும் ஊரிலுள்ள தேவதான

---

* Pudukkottai State Inscriptions, No. 246, pp. 136–137

† குலசேகர தேவ பாண்டியன், மூன்ரும் குலோத்துங்க சோழனுக்குத் திறை செலுத்தி வந்த மாறவர்மன் விக்கிரம பாண்டியன் மகன். இவனே **முதலாம் சடையவர்மன் குலசேகர பாண்டியன்** என்று வரலாற்ருசிரியர் கூறுவர். இவன் கி. பி 1190ல் முடி சூடி, 1216ஆம் ஆண்டு வரை பாண்டிய நாட்டை ஆண்டான்.

இவனுடைய மெய்க் கீர்த்திகள், **'பூதலமடந்தை'** என்றும், **'பூவின் கிழத்தி'** என்றும், **'பூதலவனிதை'** என்றும் பல வகையாகத் தொடங்குகின்றன. அவைகளில் இவனுடைய புகழ் ஒன்றே சிறப்பாகக் கூறப்படுகிறது. வரலாற்றுக் குறிப்புகள் எதுவும் காணப்படவில்லை. **செம்பியர், வில்லவர் மாளவர், பல்லவர்** முதலியோர் இவனுட்சியின் கீழ் இருந்து திறை செலுத்தி வந்ததாக இவன் சாசனம் கூறுகின்றது.

இவனுடைய சாசனங்கள் மதுரை, திருநெல்வேலி, இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களில் காணப்படுகின்றன. இவனுடைய சிங்காதனங்கள் **மழவராயன்** என்றும், **முனைய தரையன்** என்றும் பெயர் பெற்றிருந்ததாகத் தெரிகிறது. **சேரமான் கோதை ரவிவர்மன்** என்னும் மலைநாட்டரசன் இவனுக்கு மைத்துன முறையினன் என்பது திருநெல்வேலிச் சாசனத்தால் அறியப்படுகிறது. **களவழி நாடாழ்வானுகிய சயங்கொண்ட சோழ சிவல்ளுவன்** என்பான் இவனுடைய அரசியல் தலைவர்களில் முதன்மையானவன்.

நிலமான பாணிதம் பற்றிற்கும், விருதராச பயங்கர வளநாட்டு, கான நாட்டு ஸ்ரீவரமுடைய நாயனுர் தேவதான நிலப்பகுதிக்கும் உரிய கடமை, வரி, அந்தராயம் என்னும் வரிகளை நீக்கி, சூரிய சந்திரர் உள்ளளவும் அனுபவிக்குமாறு உறுதிசெய்து கொடுத்த செய்தி காணப்படுகிறது. இவற்றுள் கடமை என்பது அரசனுக்குக் குடிகள் விளைச்சலிலிருந்து செலுத்த வேண்டும் ஒரு பகுதி. வரி என்பது, பணமாக அரசாங்கத்திற்குச் செலுத்தவேண்டுவது. அந்தராயம் என்பது, ஊர்ச் சபையாருக்குக் கொடுக்க வேண்டுவது.

சடையவர்மன் குலசேகர தேவ பாண்டியன் கி. பி. 1190 முதல் 1216ஆம் ஆண்டு வரை பாண்டிய நாட்டை ஆண்டான். இச்சாசனம் அவனுட்சியின் மூன்ரும் ஆண்டில் ஏற்பட்டதெனவே, இதன் காலம் கி. பி. 1192–1293ஆம் ஆண்டு என்னலாம்.

சாசனம்

(1) ஸ்வஸ்தி ஸ்ரீ
பூவின் கிழத்தி மெய்விற் றி(2)ருப்ப
மெதிநில மாது நிநியி வபுநா
(3) வியத்பொர் மடண்தை செயற்புயத் தி(4)ருப்ப
மாக்களை மடந்தை வாக்கி நி(5)ல் விளங்க
திக்கிரு ஞங்குந் விசை(6)நிள வெறிப
ம மநுநெறி நகழ

குறிப்புரை

1. **பூவின் கிழத்தி** – *திருமகள்*; **மெய் விற்றிருப்ப** (– *மேவி வீற்றிருப்ப*)– *பொருந்தி இருக்க.*

2. **மெதி நில மாது** (– *மேதினி மாது*)–*நிலமகள், நாடுகள்*; **நிநியிவ புநா** (–*நீதியில் புணர*)–*அறநெறியில் வந்து சேர.*

3 **வியத பொர் மடண்தை** (– *வியப்போர் மடந்தை*) – *வியத்தற்குரிய போர் மகள்; 'பகைவரை வென்று ஏவல் கொள்ளும் போர் மகள்' எனினுமாம்; வியம் – ஏவல். இனி, 'வயப்போர்' எனக்கொண்டு. 'வலிய போர்' என்றும் பொருள் கொள்ளலாம்.* **செயற்புயத் திருப்ப** (– *ஜய புயத் திருப்ப*)-*வெற்றியுடைய தோளில் இருக்க.*

4 **மாக்களை மடந்தை** (– *மாக்கலை மடந்தை*) - *சிறந்த கலைமகள்*; **வாக்கிநில் விளங்க** (– *வாக்கினில் விளங்க*) - *நாவிடத்து இருப்ப.*

5. **திக்கிருஞங்கும்**(–*திசையிரு நான்கும்*)- *எட்டுத் திசைககளிலும்*; **விசைநிள வெறிப** (–*இசை நிலா வெறிப்ப*)- *புகழாகிய திங்கள் ஒளி வீச; குலசேகர தேவ பாண்டியன் செல்வம், நாடு, வெற்றி, கல்வி இவைகளை ஒருங்கே பெற்று, எட்டுத்திசைகளிலும் தன் புகழ் உண்டாக ஆண்டான் என்பது.*

6. **ம மநு நெறி நகழ** (– *மறைநெறி வளர, மநுநெறி நகழ*) - *வேதநெறியின் படியும் மநு வென்னும் அரசன் வகுத்த வழியின்படியும் ஆட்சி நடை பெற.*

அறுந(7) ன்ற சமையங்கள் ஆறுத்தமைப்ப
கா(8)நில் வெங்கை விளலுடந் நுடன்து
நிந்(9)நவர அங்களாகாசள தன்தை விற்றிரு
(10)ப்ப எங்கிகிசு எழுகடல் எழு பொழி
வெ(11)ன்கு நிழற்ற செங் கொல் நடப்ப
கொடு(12)ங்கலி நங்கி நெடும்பிலங் கொழிப்ப
(13)பி.......வர் செம்பியர் வில்லவ ஆடலர்
பல்லவர் (14)திறை உறடன் முறை முறைபமிய
இருநெ(15) மிந் ஆளவம ஒரு நெதி ஓங்க

---

7. அறு நன்ற சமையங்கள் ஆறுத் தமைப்ப (—அறநெறிச் சமயங்கள் ஆறும் தழைப்ப)—ஆறு சமயங்களும் வளர; உலகாயிதம், புத்தம் சமணம், மீமாஞ்சை, பாஞ்சராத்திரம், பாட்டாசாரியம் இவை அறு சமயங்கள். இனி, சைவம், வைணவமும், சக்தம், சௌரம், கணபதியம், கௌமாரம் என்பாருமுளர். விளக்கம் அடுத்த சாசனக்குறிப்பில் காண்க.

8 காநில் — கானில், காட்டில்; வெங்கை விளலுடன் (— வேங்கை வில்லுடன்) —புலிக்கொடியையுடைய சோழனும் விற்கொடியையுடைய சேரனும்; நுடன்து (— தொடர்ந்து உற) — சேர்ந்து மறைய.

9. நிந்ந வர அங்களாகா சளத்தை விற்றிருப்ப (— மீனங் கனகா சலத்து வீற்றிருப்ப) —மீன்கொடியை இமயத்தில் பொறித்து விளங்க; மீனம் -மீன்கொடி; அது பாண்டியர்க் குரியது. கனகாசலம்—இமயமலை. பாண்டியர் வடநாடு சென்று இமயத்தில் தங்கள் மீன்கொடியைப் பொறித்த வரலாறு இங்கு நினைத்தற் குரியது. இனி, 'மேருமலை' எனக்கொண்டு மதுரைக் கோயில் கோபுரத்தைக் குறிப்பாருமுளர்.

10. எங்கிகிசு (— எண்கிரி சூழ்ந்த)- எட்டு மலைகளும் சூழ்ந்த; கிரி—மலை. எழுகடல் எழுபொழி வென்கு நிழற்ற (— எழுகடல் எழுபொழில் வெண்குடை நிழற்ற)-உலகைச் சுற்றி எட்டு மலைகளும், எழு கடல்களும் எழு பொழில்களும் விளங்க; இது புராண வரலாறு.

11. செங்கொல் நடப்ப — ஆட்சி நடைபெற.

12. கொடுங்கலி நங்கி (— கொடுக்கலி நடுங்கி)- கொடிய வறுமை நீங்கி; கலி — துன்பம், வறுமை நெடும் பிலந் கொழிப்ப (— நெடும்பிலத், தொழிப்ப) - நீண்ட பாதாளத்தில் போய் மறைய; பிலம் — பாதாளம்.

13 பி...வர் (— வில்லவர்)-சேரர்; - செம்பியர் - சோழர்; வில்லவ-விராடர்; ஆடலர் - மராடர்; பல்லவர்—பல்லவ அரசர்; விராடர், மராடர் இன்னுரென்று தெரியவில்லை.

14. திறை உறடன் முறை முறை பமிய(—திறையுடன் முறைமுறை பணிய)—திறை கொண்டு தந்து முறையாக நின்று பணிய; திறை—கப்பம்.

15. இரு நெமிந் ஆளவம (-இருநேமி யளவும்)- அகன்ற உலக முழுவதும்; நேமி - உலகம். ஒரு நெதி ஓங்க (- ஒரு நேமி ஓங்க)— தன் ஒரு ஆட்சியே நடை பெற; நேமி — சக்கரம், ஆணை. இந்நமு தளாநிப - இன்னமு தாகிய) இனிய அமுதமாகிய.

இங்கமு தளாதி(16)ப இல்விசை நாடம
மங்கி வள்ளர மணிஅ(17)னி விரஸிஹஸநது
விதறிரு தருழிய கொச்ச(18)டைய பற்மராக
த்ரிபுவந சக்கரவத்திகள்
19. (திரிபுவந சக்கரவத்திகள்) ஸிரி குலெசெகரதெ—
20. வற்க்கு யாண்டு ரூ ஆவது காந நாடாந விருத—
21. ராஜ பயங்கரவளநாட்டு காந நாட்டு திரு—
22. வொதி கால்லயில் காநநாட்டு ஸ்ரீ வரமுடைய—
23. ா யந்நா தெவதானம் பாணிதம் பற்றில்—

---

16 இல்விசை நாடம (-இயலிசை நாடகம்) – இயல் தமிழும் இசைத் தமிழும் நாடகத் தமிழும்; மந்நி வள்ளர – நிலை பெற்று வளர; மணி அனி – மணிகள் தொங்கவிடப்பட்ட; அனி – அணி, அழகு.

17. விரஸிஹஸநது விற்றிரு தருழிய – வெற்றிச் சிம்மாசனத்தில் வீற்றிருந்த; கொச்சடைய பற்மர் : இஃது குலசேகர தேவ பாண்டிய னுக்கு வழங்கிய சிறப்புப் பெயர்; சோழ மன்னர்கள் தமக்குள் இராச கேசரி, பரகேசரி என்னும் சிறப்புப் பெயரை மாறி மாறி வைத்து வழங்கி யது போல, பாண்டிய மன்னர்கள் மாறவர்மன், சடையவர்மன் என்னும் சிறப்புப் பெயர்களைத் தமக்குள் மாறி மாறி வைத்து வழங்கி வந்தனர். குலசேகரதேவ பாண்டியன் அவைகளில் 'சடையவர்மன்' என்னும் சிறப் புப் பெயர் பெற்றவன்.

18-10. திரிபுவந சக்கரவத்திகள் : பாண்டிய மன்னருள் சடைய வர்மன் குலசேகர தேவன், மாறவர்மன் சுந்தர பாண்டியன் முதலியோர் திரிபுவன சக்கரவர்த்தி' பட்டம் பெற்றவர்களாவர். இதன் விளக்கத் தினை முந்திய சாசனங்களில் காண்க. ஸிரிகுலெ செகர தெவர்–முதலாம் சடைய வர்மன் குலசேகர தேவ பாண்டியன்; ஸிரி – திரு.

20–21. காந நாடாந விருதரரஜ பயங்கர வள நாடு : கான நாடு என்பது விருதராச பயங்கர வளநாட்டின் பழைய பெயர். விருத ராசன் என்பது முதலாம் குலோத்துங்க சோழனுடைய சிறப்புப் பெயர்களில் ஒன்று புதுக்கோட்டையைச் சேர்ந்த திருமய்யம் தாலூகாவே இந் நாடு என்று கூறலாம்.

22. காந நாட்டு திருவொதி கால்லயில் : வளநாட்டின் உட்பகுதி நாடு, சதுர்வேதிமங்கலம் முதலியன வாகும். இங்குக் கானநாடு என்பது, கான நாடு என்னும் விருதராச பயங்கர வளநாட்டிலுள்ள ஒரு பகுதியா கும். 'திருவொதி கல்வாயில்' என்பது இங்குத்திரிந்து, 'திருவொதி கால் லயில்' என்று அமைந்துள்ளது; இதன் பழம் பெயர் 'மலையக் கோயில்' என்பது. இதனைத் 'திருவோதிக்கால்' என்றும் வழங்குவர்.

ஸ்ரீவரமுடையா யந்நா – ஸ்ரீவரமுடைய நாயனர்.

24. உள்ள தெவதானம் உள்ள நிலத்தில் க—
25. டமையும் வரியும் அன்தராயம் இவா—
26. ண்டு முதல் தவித்தொம் சந்திராதி—
27. த்தவரை செல்வதாக செய்து குடு—
28. த்தென் கல்வெட்டி குடுத்தெ—
29. ன் கல்வாயில் நாடாழ் வாங்நென்

23-24 தெவதானம் - கோயிலுக்குத் தானமாக விடப்பட்ட நிலம். இங்கு ஸ்ரீ வரமுடைய நாயனுருக்குத் தானமாக விடப்பட்ட நிலம் என்பது. பாணிதம் பற்று : பற்று என்பது நாட்டின் ஒரு பகுதிக்கு வழங்கும் பெயர். பாணிதம் பற்றில் உள்ள தேவதானம் என்பது, பாணிதம் பற்று என்னும் ஊரிலுள்ள தேவதானமும் என்று பொருள்படும். உள்ள நிலத்தில் – ஸ்ரீ வரமுடைய நாயனுர் தேவதானமும், பாணிதம் பற்றில் உள்ள தேவதானமும் உள்ள நிலத்தில் என்பது.

25. கடமையும் வரியும் அண்தராயம் : இவை வரி வகைகள். இவற்றுள் கடமை என்பது, நிலத்தில் விளையும் ஒரு பகுதியை அரசனுக்கு வரியாகக் கொடுப்பது; 'ஆறி லொரு கடமை' என்னும் சொல் வழக்கு காண்க. வரி என்பது, அரசாங்கத்திற்குப் பணமாகச் செலுத்துவது. அந்தராயம், என்பது அந்தர் + ஆயம் என விரியும்; அந்தர் – உள்ளிடம்; ஆயம் – வரி; எனவே உள்ளிடத்து வரி, ஊர் வரி என்று பொருள் படும். இது ஊர்ச் சபைக்குக் கொடுக்க வேண்டுவது.

தவித்தோம் – நீக்கினேம் : சந்திராதித்த வரை – சந்திர சூரியர் உள்ள வரையும்.

27–28. செல்வதாக செய்து குடுத்தென் -- நடை பெறும் படி உறுதி செய்து கொடுத்தேன் : கல் வெட்டி குடுத்தேன் -- கல்லில் வெட்டியும் கொடுத்தேன். எனவே, ஒன்றை உறுதி செய்து கொடுத்து, அதனைக் கல்லில் வெட்டுவது 'சாசனம்' என்பது போதரும்.

29. கல்வாயில் நாடாழ்வாந்நென் : கல்வாயில் நாடாழ்வான் என்பான், கல்வாயில் நாட்டுக்குத் தலைவனுவான்; இவன் பாண்டியராட்சிக்கு உட்பட்டு, கல்வாயில் நாட்டை ஆண்டு வந்த செய்தி, புதுக்கோட்டைச் சாசனங்கள் பலவற்றால் தெரிகிறது. இவனுடைய மற்றொரு பெயர் 'கண்டன் ஆளுடையான்' என்பது. கல்வாயில் நாடு, கேரளசிங்க வள நாட்டையும் கல்வாயில் நாட்டையும், கொழுந்திற் கூற்றம் முதலிய பிரிவுகளையும் தன்னில் கொண்டது. புதுக்கோட்டையைச் சேர்ந்த திருமய்யம் தாலூகாவிலுள்ள சில ஊர்கள் இந்நாட்டி லடங்கியன வாகும்.

கண்டன் ஆளுடையானன கல்வாயில் நாடாழ்வான் என்பான், கான நாடான விருதராச பயங்கர வளநாட்டு, கான நாட்டு, திருவோதிக்கல்

வாயிலிலுள்ள கானநாட்டு ஸ்ரீ வரமுடைய நாயனூர் தேவாதனத்திலும், பாணிதம் பற்றிலுள்ள தேவதானத்திலும் அடங்கிய நிலங்களுக்குரிய கடமை, வரி அந்தராயம் ஆகிய வரிகளை நீக்கி, அவற்றிற்கு உறுதி மொழியாகக் கல்லில் வெட்டிக் கொடுத்த செய்தி இதனுல் அறியப்படுகிறது.

பயிற்சி விஞக்கள்.

1. குலசேகர தேவ பாண்டியன் சாசனம் எங்குக் காணப்படுகிறது? அதன் காலம் எது? அதில் கூறப்பட்டுள்ள செய்தி யாது?

2. குலசேகர தேவ பாண்டியன் மெய்க்கீர்த்தியின் தொடக்கம் யாது? அவனுடைய முன்னேர் செயல்களாகவும், அவனது செயல்களாகவும் கூறப்படுவன யாவை?

3. 'திக்கிருணங்கு .... பொழிவென்கு நிழற்ற' – இதனைத் திருத்தி எழுதுக.

4. குலசேகர தேவ பாண்டியனுக்கு வழங்கிய சிறப்புப்பெயர்கள் யாவை?

5. விளக்கம் தருக: கான நாடாந விருத ராஜபயங்கர வளநாடு, கான நாட்டு திருவொதி கால்லயில், கான'நாட்டு ஸ்ரீ வரமுடைய நாயனூர், பாணிதப்பற்று, கல்வாயில் நாடாழ்வான்.

6. குலசேகர தேவ பாண்டியன் சாசனத்தில் கூறப்படும் வரிகளின் பெயர்களையும், அவற்றின் பொருளையும் எழுதுக.

7. குலசேகர தேவன் சாசனத்தில் எந்தெந்த வரிகள் நீக்கப்பட்டுள்ளன? நீக்கிய வரலாறு தருக.

25. சுந்தரபாண்டியன் சாசனம் *

முன்னுரை

சுந்தர பாண்டியன் சாசனம் என்பது, முதலாம் மாற வர்மன் சுந்தரபாண்டியன் காலத்தில் ஏற்பட்ட சாசனம் என்று பொருள்படும். இச்சாசனம் அவன் ஆட்சியின் மூன்ருவது ஆண்டில் ஏற்பட்டது. இது புதுக்கோட்டையைச் சேர்ந்த திருமய்யம் தாலுகாவிலுள்ள கண்ணனூர் பாலசுப்பிரமணிய சுவாமி கோயில் நடுவிடத்துக் கருப்ப கிருகத்தின் வடக்குச் சுவரில் காணப்படுகிறது. தமிழ்மொழியில், கிரந்த எழுத்துக்கள் கலந்து எழுதப் பெற்றது. இருபத்தெட்டு வரிகளை யுடையது.

இச் சாசனத்தின் முற்பகுதியில் 'பூமருவிய திருமடத்தையும்' என்று தொடங்கும் சுந்தரபாண்டியன் மெய்க்கீர்த்தி அமைந்துள்ளது. இதில் பாண்டிய மன்னரின் முன்னோர் அருஞ்

---

* Pudukkottai State Inscriptions, No. 250, pp. 139-140

† சுந்தரபாண்டியனை வரலாற்ருசிரியர் **முதலாம் மாறவர்மன் சுந்தர பாண்டியன்** என்று குறிப்பிடுவர். இவன் சடையவர்மன் குலசேகர தேவ பாண்டியனுக்குத் தம்பி; விக்கிரமபாண்டியன் இரண்டாம் புதல்வன். குலசேகர தேவபாண்டியனுக்குப் பின் கி. பி. 1216 முதல் 1238 வரை பாண்டிய நாட்டை ஆண்டான்.

இவன் கி. பி. 1219ல், சோழ மண்டலத்தின்மீது படை எடுத்துச் சென்று, மூன்ரும் இராசராசனை வென்று ஆயிரத்தளி (அமராவதி) என்னுமிடத்திலுள்ள அபிசேக மண்டபத்தில் வீராபிசேகம் செய்து, தில்லைப் பொன்னம்பலவாணரைத் தரிசித்துத் திரும்பினன். இதனல் இவன் **'சோனுடு கொண்டருளிய ஸ்ரீ சுந்தரபாண்டியன்'** எனச் சாசனங்களில் புகழப் பெற்ருன். பின்னர் மூன்ரும் இராசராசன் கேட்டுக்கொண்டபடி, இவன் அவனுக்கு மீண்டும் சோழநாட்டைக் கொடுத்து **'சோனுடு வழங்கி யருளிய சுந்தரபாண்டியன்'** என்று பெயர் பெற்ருன்.

இவன் கி.பி. 1235ஆம் ஆண்டு மீண்டும் மூன்ரும் இராசராசனேடு போர் செய்து வென்று, அவன் தலைநகரங்களில் ஒன்ருன முடிகொண்ட சோழபுரத்தில் வீராபிசேகம் செய்து கொண்டான். அதனல் இவன், சாசனங்களில் **'ஸ்ரீ கோமாறவர்மரான திரிபுவனச் சக்கரவர்த்திகள் சோனுடு கொண்டு முடிகொண்ட சோழபுரத்து வீராபிசேகம் பண்ணியருளிய ஸ்ரீ சுந்தரபாண்டிய தேவர்'** என்று அழைக்கப்பட்டுள்ளான்.

இவனுடைய சாசனங்கள் தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, புதுக்கோட்டை முதலிய மாவட்டங்களில் காணப்படுகின்றன. இவனுடைய

செயல்களோடு, சுந்தரபாண்டியன் சோணாடு கொண்ட செய்தியும் கூறப்படுகிறது. பிற்பகுதியில், கான நாடான விருத ராச பயங்கர வளநாட்டுத் திருமாநாட்டுத் திருநாவலூராரும், அஞ்சனமங்கலமென்னு மூராரும் செலுத்தி வந்த இறையை, அவர்கள் கேட்டுக்கொண்டபடி, இலேசாக்கிக் கல்லில் வெட்டிக் கொடுத்த செய்தி கூறப்படுகிறது.

முதலாம் மாறவர்மன் சுந்தரபாண்டியன் கி. பி. 1216முதல் 1238ஆம் ஆண்டு வரை பாண்டிய நாட்டை மதுரையிலிருந்து ஆண்டான். இச்சாசனம் அவன் ஆட்சியின் மூன்றாவது ஆண்டு ஏற்பட்டதெனவே, இதன் காலம் கி.பி. 1218–1219ஆம் ஆண்டு என்னலாம்.

சாசனம்

(1) ஸ்வஸ்திஸ்ரீ
பூமருவிய திருமடந்தையுஞ் செயமடந்தையும் புயத்திருப்ப
நாமருவிய (2)கலைமடந்தையுஞ் செயமடந்தையும் நலஞ்சிறப்பக்
கொளாந்த சினப்புலியுங் (3)கொடுஞ்சிலையுங் குலைந்தொளிப்ப
வாளார்ந்த பொற்கிரிமெல் வரிக்கயல்கள் (4)விளையாட

மெய்க்கீர்த்தி 'பூமருவிய திருமடந்தையும்' என்று தொடங்குகிறது.

உலக முழுதுடையாள் இவனுடைய பட்டத்தரசி யாவாள். உய்ய நின்றுநிவானான குருகுல தரையன் இவன் அமைச்சன் என்றும், கண்டன் உதயஞ்செய்தான் காங்கேயன், திருக்கானப் பேருடையான் மழவச் சக்கரவர்த்தி முதலியோர் இவனுடைய அரசியலதிகாரிக ளென்றும், காராணை விழுப்பரையர் இவனுடைய அவைக்களப் புலவர் என்றும் சாசனங்கள் கூறுகின்றன. இவனுக்குப் பின் சடையவர்மன் குலசேகர பாண்டியன் பட்ட மெய்தி, சில திங்கள் பாண்டிய நாட்டை ஆண்டான் என்று கூறுவர்.

குறிப்புரை

1. பூமருவிய திருமடந்தை – செந்தாமரை மலரில் பொருந்திய திருமகள்; செயமடந்தை : இது 'பூவிமடந்தை' என்றிருத்தல் வேண்டும். திருமாலை அரசனாவும், அவர் தேவியரான திருமகள், புவிமகள் இருவரையும் அரசன் தேவியராகவும் கூறுவது தமிழ் மொழியின் மரபு. நாமருவிய – நாவிடத்துப் பொருந்திய.

2. கலைமடந்தை – கலைமகள்; செயமடந்தை–வெற்றிக்குரிய தேவதை; நலஞ் சிறப்ப – பெருமை அடைய; கொளாந்த சினப்புலி – கொல்லும் இயல்புடைய புலிக்கொடியை யுடைய சோழன்.

3. கொடுஞ் சிலையும் – வளைந்த விற்கொடியையுடைய சேரனும்; குலைந்து – போரில் தோற்று; வாளார்ந்த பொற்கிரி மேல் - ஒளி பொருந்திய மேருமலையின் உச்சியில்; வரிக்கயல்கள் விளையாட - பாண்டியனுக்குரிய மீன் கொடி பறக்க; இங்கு, மேருமலை என்றது, மதுரைக் கோயில்

இருங்கடல் வலயத் தறம் பெருகக்
கருங்கலி கடிந்து செங்கொல் நடப்ப
ஒருகு(5)டை நிழ லருநிலங் குளிர
முவகைத் தமிழு முறைமையில் விளங்க
நால்வகை வெதமும் நவின்று டன்(6)வர
ஐய்வகை வெழ்வியுஞ் செய்வினை யியற்ற
அறுவகைச் சமயமு மழகுடஞ் திகழ

கோபுரத்தின் உச்சியைக் குறிக்கும் பாண்டியனுக்குரிய மீன் கொடி மதுரைக் கோயில் உச்சியில் பறக்க என்பது கருத்து. குலசேகர தேவ பாண்டியன் சாசனத்தில் 'வேங்கை வில்லுடன் தொடர்ந்துற, மீனங் கனகாசலத்து வீற்றிருப்ப' என வந்திருத்தலும் இக் கருத்ததே.

4. இருங்கடல் வலயம் — பெரிய கடலால் சூழப்பட்ட உலகம். கருங்கலிகடிந்து—வறுமையை நீக்கி; செங்கொல் நடப்ப-ஆட்சி நடைபெற.

5. ஒரு குடை நிழலரு நிலங் குளிர (—ஒரு குடை நீழல் இருநிலம் குளிர) — பாண்டியனது ஒரு வெண் கொற்றக் குடையின் கீழ் இந்த உலகம் முழுவதும் இருந்து பயன்பெற; இனி, 'இரு நிலம்' என்பதை 'சோழநாடும், பாண்டிய நாடும்' என்று பொருள் கொள்வாரு முளர்.

முவகைத் தமிழ் — முத்தமிழ்; அவை இயல் தமிழ், இசைத் தமிழ், நாடகத் தமிழ்; இவற்றுள் இயற்றமிழ் என்பது, செய்யுளும் உரை நடையும்; இசைத்தமிழ் என்பது, இசையோடு கூடிய தேவாரம், திருவாசகம் முதலியன; நாடகத் தமிழ் என்பது, இயலும் இசையும் கலந்து நடித்தற்குரிய தமிழ் ஆகும். நால்வகை வேதம்—ருக், யஜுர், சாமம், அதர்வணம் என்பன; நவிலுதல்— ஓதுதல்.

6. ஐய்வகை வெழ்வி : இதனைப் 'பஞ்ச மகா யக்ஞம்' என்று கூறுவர். அவை கடவுள் வேள்வி (தேவயக்ஞம்),பிரமவேள்வி (பிரமயக்ஞம்), பூதவேள்வி (பூதயக்ஞம்), மனித வேள்வி (மானிட யக்ஞம்), தென் புலத்தார் வேள்வி (பித்ரு யக்ஞம்) என்பனவாம். அவற்றுள் கடவுள் வேள்வி என்பது, கடவுளை வழிபடல்; பிரம வேள்வி என்பது, வேத மோதுதல்; பூத வேள்வி என்பது, உயிர்களுக்கு உணவளித்தல்: மனித வேள்வி என்பது, சுற்றத்தாருக்கு உணவளித்தல். தென் புலத்தார் வேள்வி என்பது, இறந்துபோன முன்னோர்களுக்குக் கொடுத்தலாம் செய்வினை இயற்ற — நடைபெற.

அறுவகைச் சமயம் — சைவம், வைணவம், சக்தம், சௌரம், கணபதியம், கௌமாரம் என்பன. சைவம் என்பது, சிவனை வழிபடுவது; வைணவம் என்பது, சக்தியை வழிபடுவது; சௌரம் என்பது, சூரியனை வழிபடுவது; கணபதியம் என்பது, கணபதியை வழிபடுவது. கௌமாரம் என்பது, குமரக் கடவுளை (சுப்பிரமணியனை) வழி படுவது.

எழு(7)வகைப் பாடலு மியலுடங் பரவ
எண்டிசை யளவுஞ் சக்கரஞ் செல்லக்
கொங்கர் கலிங்கர் கொ(8)காசலர் மாளுவர்
சிங்களர் தெலிங்கர் சினர் குச்சரர்
வில்லவர் மகதர் விக்கலர் செம்மியர்
பல்(9)லவர் முதலிய பார்த்திவ ரெல்லா
முறைவிட மருளெங் ஞெருவர் முங்ஒருவர்
முறைமுறை கடவ(10)தந திறைகுணங் திறைஞ்ச
இலங்கொளி மணிமுடி இந்திரன் பூட்டிய
பொலங்கதி ரார மா(11)ர்பினிற் பொலிய
பனிமலர்த் தாமரைத் திசைமுகங் படைத்த

---

7 எழுவகைப் பாடல்–வெண்பா முதலிய நால்வகைப் பாக்களும் தாழிசை துறை, விருத்தமென்னும் பாவினங்களும் ஆகுமென்பர். இனி, 'எழுவகைச் சுரங்களினுல் பாடப்பெறும் பாடல் வகைகள்' என்பாருமுளர். 'ஏழிசையாவன சட்சம், ரிடபம், காந்தாரம், மத்திமம், சஞ்சமம், தைவதம், நிடாதமெனு இவை' என்று கூறுவர் அடியார்க்கு நல்லார். இயலுடன் பரவ–இலக்கண முறைப்படி நடைபெற.

எண்டிசை யளவும்–எட்டுத் திசைகள் வரையும்; சக்கரம் செல்ல ஆணை நடைபெற; கொங்கர் – கொங்கு நாட்டு மன்னர்; கலிங்கர் – கலிங்க நாட்டு மன்னர்.

8 கொசலர் : இது கொய்சலர் என்றிருத்தல் வேண்டும். மாளுவர்-மாளுவ நாட்டு மன்னர்; மாளுவ நாடு, மைசூருக்கும் கூர்சர நாட்டுக்கும் இடையிலுள்ளது. சினர்-சீன நாட்டார்; இவா சீனநாட்டுத் தூதுவராகப் பாண்டியன் அவையிலிருந்தவர். குச்சரர்–கூர்சர நாட்டவர்; வில்லவர்–சேரர்; மகதர் – மகதை நாட்டவர்; இது வாணர்களைக் குறிக்கும். விக்கலர் – மேலைச் சாளுக்கியர்; செம்பியர் – சோழர்; பல்லவர்- பல்லவர் தலைவர்கள்.

9. பார்த்திவர் எல்லாம் - மன்னர்கள் எல்லாரும்; உறைவிடம் – அடைக்கலம்; அருளெந்ஞெருவர் முந் ஒருவர் முறை முறை கடவ – தருவாயாக என்று ஒருவர் முன் ஒருவர் தாம் முறையாகச் செலுத்தக் கடமைப் பட்டதான.

10. தநநிறை குணந்திறைஞ்ச – தத்தமது திறைப் பொருட்களைக் கொண்டுவந்து கொடுத்து வணங்க: இந்திரன் பூட்டிய பொலங்கதி ராரம்-இந்திரன் மார்பில் அணிந்திருந்த பொன் மாலை; பொலம் – பொன்; ஆரம் – மாலை; இம்மாலையைப் பாண்டிய மன்னர் பரம்பரையாக அணிந்து வந்தனர். இச்செய்தியைச் சிலப்பதிகாரம் மதுரைக் காண்டத்திலும், திருவிளையாடல் புராணத்திலும் காண்க.

11. பொலிய – விளங்க; பனிமலர்த் தாமரைத் திசைமுகன்–குளிர்ந்த இதழ் விரிந்த தாமரை மலரில் தோன்றிய பிரமன். இவனுடைய மரபில் தோன்றியவன் மனுவென்னும் மன்னனுவான்.

மனுநெறி தழைப்ப (12)மணிமுடி சூடி
விளங்கிய மணிபணி விரசிங்கா சநத்து
வளங்கெழு கவரி இருமருங் கசைப்ப(13)க்
கடலென முழங்குங் கரிநல்லி யானை
வடபுல வெந்தர்த மணிபுயம் பிரியா
இலங்கி 14)ழை யரிவையர் தொழுதுநின் றெத்த
உலகமுழு துடையாளொடும் விற்றிருந் தருளிய
ஸ்ரீகொ(15)மாற பன்மராந திரிருபுவன சக்கரவத்திகள்
சொணூடு கொண்டருளிப
ஸ்ரீ சுந்தர பர்ண்டிய (16)தெவற்கு யாண்டு
நூவது பிரஸாதஞ் செய்தருளின திருமுகப்படி கான
ணுடான விருதராஜ பய—

---

12. மணி பனி – முத்துக்களால் பணி செய்யப்பட்ட; இருமருங்கும் - இரண்டு பக்கங்களிலும்.

13. கடலென முழங்கும் – கடல் போல் ஒலிக்கும்; கரிநல்யானை வடபுல வேந்தர்- சரியையும் யானையையுமுடைய வடநாட்டு மன்னர்கள்; கரி–ஆண்யானை; யானை – பெண் யானை. மணி புயம் பிரியா – அழகிய தோள்களை விட்டு நீங்காத.

14. இலங்கு இழை அரிவையர்-ஒளி விடும் அணிகலன்களையுடைய மகளிர்; இவர்கள் வடபுலவேந்தர் உரிமை மகளிர்; இவர்கள் பாண்டியனால் சிறைபிடித்துக் கொண்டு வரப்பட்டு, அவன் அவையில் பணிப் பெண்களாயிருந்தனர் என்பது. தொழுது நின்று ஏத்த–பணிந்து நின்று துதிக்க.

உலக முழுதுடையாளொடும் விற்றிருந்தளிய – உலக முழுதுடையாள் என்னும் பட்டத்தரசியோடும் சுந்தர பாண்டியன் தன் சிம்மாசனத்தில் வீற்றிருந்த; இவ்வாறு முதலாம் குலோத்துங்க சோழன் தன் தேவியான உலக முழுதுடையாளோடும், விக்கிரமசோழன் தன் தேவியான முக்கோக்கிழானடிகள், தியாகபதாகை முதலியவர்களோடும், அரிகேசரி பராந்தக சோழன் தன் தேவியான உலக முழுவதுடையாளொடும் சிம்மாசனத்தில் வீற்றிருந்ததாக அவர்கள் சாசனங்கள் கூறுகின்றன.

15. கொமாறபன்மர்: இது சுந்தரசோழனுக்குரிய சிறப்புப் பெயர். இவன் 'திரிபுவன சக்கரவர்த்திகள்,' 'சோணாடு கொண்டருளிய ஸ்ரீ சுந்தர பாண்டிய தேவர்' எனவும் இச்சாசனத்தில் அழைக்கப்பட்டுள்ளான்.

16. பிரஸாதம் செய்தருளிய திருமுகப்படி–சுந்தர சோழன் ஆணையிட்டு எழுதிய ஓலையின்படி; பிரஸாதம் - ஆணை, கட்டளை; திருமுகம்–அரசனது ஆணை எழுதிய ஓலை; நிருபம் எனினுமாம்.

17. ங்கர வளநாட்டுத் துறுமா நாட்டுத் திருநாவலூரும் அனுமன் தாயான அஞ்சன மங்கலமும் முன்பு

18. இறுத்து வருகிற இறையிலெ உலகுடைய நாயனுர் திருமெனிக்கு நன்ருக இலெசு பெறவெணுமென்

19. று பிள்ளையார் அழகப் பெருமாள் நாயனுர்க்கு விண்ணப்பஞ் செய்து நினைப்புமிட்டு நிரும் வார்த்துத் த

20. ருவித்தருளிய பி ர ஸா த ஞ் செய்தருளின திருமுகப்படி பயிரெழுத முதல் கொண்ட நிலத்துக்கு மாத்தா லி

---

17. **திருநாவலூரும்...அஞ்சன மங்கலமும் :** இவை இரண்டு ஊர்களும் முன்பு கானநாடு என்று பெயர் பெற்றிருந்த விருதராச பயங்கர வளநாட்டின் ஒரு பகுதியான **துறுமாநாட்டி** லுள்ளவை. இவற்றுள் அஞ்சனமங்கலத்திற்கு வழங்கிய மற்ெருருபெயர் 'அனுமந்தாய்'என்பது. அது **'அனுமந்தராய்'** என்றிருத்தல் வேண்டும். இனி, 'அனுமன்தாய்' என்பதற்கு 'அஞ்சனுதேவி' எனப் பொருள்கொண்டு, அவள் பெயரால் ஏற்பட்ட ஊர் 'அஞ்சன மங்கலம்' என்று பெயர் பெற்றதெனக் காரணம் கூறுவாருமுளர்.

18. **முன்பு இறுத்து வருகிற** – முன்பு செலுத்தி வருகிற; இறுத்தல் – வரி செலுத்துதல். **இறையிலெ** – வரிப் பொருளில்; இறை – அரசியல் வரி; **உலகுடைய நாயனுர்:** இது இடைக்காலத்தில் அரசனுக்கு வழங்கிய பொதுப்பெயர்; இங்கு அது சுந்தரபாண்டியனைக் குறித்தது. **திருமேனிக்கு நன்ருக** - அரசன் உடல் நலம் பெற்று நீடு வாழ; திருமேனி என்பது, கடவுள் உடலுக்கும், உருவத்திற்கும் வழங்கும் பெயர்; அரசனும் 'இறை' எனப்படுவதால் அவன் உடலையும் 'திருமேனி' என்ருர் போலும். **இலெசுபெற வேணுமென்று**–குறைக்க வேண்டுமென்று; இலெசு- குறைத்தல், தளர்த்தல்.

19. **பிள்ளையார் அழகப் பெருமாள் :** அழகப் பெருமாள் என்பது இயற் பெயர்; பிள்ளையார் என்பது, அரசனுடைய நெருங்கிய சுற்றத்தார்க்கும், நெருங்கிய தொடர்புடைய அரசியலதிகாரிகளுக்கும் வழங்கும் பொதுப்பெயர். அழகப்பெருமாள், சுந்தர பாண்டியனுக்கு மைத்துன முறையினன். இவன் சுந்தரபாண்டியன் ஆட்சியில் ஓர் அரசியலதிகாரியாய் இருந்து பணி செய்தான். **நாயனுருக்கு விண்ணப்பம் செய்து**-அரசர்க்கு அறிவித்து; திருநாவலூராரும், அஞ்சனமங்கலத்தாரும் தாங்கள் செலுத்திவந்த வரியைக் குறைக்கும்படி, அரசியல் அதிகாரியான அழகப் பெருமாளைக் கேட்டுக்கொண்டனர்; அவன் அதைச் சுந்தரபாண்டியனுக்குத் தெரிவித்து நினைவுப்படுத்திஞன் என்பது. **நாயனுர்** என்பது, அரசனுக்கு வழங்கிய பெயர். முன்னர், **'உலகுடைய நாயனுர்'** என வந்திருத்தலும் காண்க. **நினைப்பு மிட்டு**–நினைவுப் படுத்தி; **நீரும் வார்த்து தருவித்தருளிய**-சுந்தரபாண்டியன் தண்ணீர் வார்த்து உறுதி செய்து கொடுத்த.

20. **பிரஸாதம் செய்தருளிய திருமுகப்படி**–அரசன் ஆணை எழுதிய ஓலையின்படி; **பயிர் எழுத முதல்கொண்ட நிலம்**–பயிராகி மேனி கண்ட

21. ருகல நெல் தாழ்த்து மாத்தால் ஐங்கலனெ இரு தூணிப் பதக்கு நானுழி நெல்லிறுப்பதாவும் இவ்

22. வூர்களில் நிரிலி நிலமாய் வரிசைப்படி இறுத்து வருகிற நிலங்களுக்கு மாத்தால் முக்கலனெ இருதூணி மு

23. க்குறுணி முவுழக்கு நெல் இறுப்பதாகவும் நவிரை இன்னெல்லி லொன்று முக்கா லிறுப்பதாகவும்

24. வரகு இன்னெல்லில் ஒன்று பாதி இறுப்பதாகவும் எள்ளுந் திணையும் இன் நெல்லில் நான்கொன்று இறுப்

25. பதாகவும் உலகுடைய நாயனுர் எழுந்தருளினுல் திருவெழுச்சிக் குடிமை முதலா க நாடென்றவரிகள் எப்

நிலம்; அஃதாவது, முதல் தரமான நிலம் என்பது **மாத்தால்** — ஒருமா நிலத்துக்கு; மா — நூறு குழி.

21. **இருகலனுகத் தாழ்த்து**-இரண்டு கலம் நெல் வீதம் குறைத்து; கலம்-96நாழி; **மாத்தால் ஐங்கலனே இரு தூணி பதக்கு நானுழி நெல்**— ஒருமா நிலத்திற்கு 5 கலன் 2 தூணி 1 பதக்கு 4 நாழி (564 நாழி) நெல்; எனவே, முன்னர் ஒரு மா நிலத்திற்கு 7 கலன் 2 தூணி 1பதக்கு 4நாழி (756நாழி)நெல் வரியாகச் செலுத்தி வந்தனர் என்பது போதரும். தூணி - 32 நாழி; பதக்கு - 16 நாழி

22. **நிரிலி நிலமாய்** — நீர் இலி நிலமாய், தண்ணீர் இல்லாத நிலமாக; **வரிசைப்படி இறுத்து வருகிற** - அரசியல் திட்டப்படி செலுத்தி வருகிற; **மாத்தால் முக்கலனெ இருதூணி முக்குறுணி மூவுழக்கு நெல்** — ஒரு மா நிலத்திற்கு 3 கலன் 2 தூணி 3 குறுணி $\frac{3}{4}$ நாழி (376$\frac{3}{4}$நாழி) நெல். குறுணி — 8 நாழி; உழக்கு - $\frac{1}{4}$ நாழி; எனவே 4 உழக்கு = 1 நாழி; 8 நாழி = 1 குறுணி; 2 குறுணி - 1 பதக்கு; 2 பதக்கு = 1 தூணி; 3 தூணி — 1 கலன் என்பன அக்காலத்தில் நெல் முதலியன அளத்தற்குரிய முகத்தளவைப் பெயர்களும், அளவுகளுமாகும்.

23. **நவிரை** : இது ஒரு வகை நெல்; ஆடி மாதத்தில் விதைக்கப் படுவது. **இன்னெல்லில் ஒன்று முக்கால் இறுப்பதாகவும்** — நீரிலி நிலத்திற்குக் கொடுத்து வந்த நெல்லில் ஒன்றுக்கு முக்கால் வீதம் செலுத்தவும்; ஒரு மா நீரிலி நிலத்துக்கு 376$\frac{3}{4}$ நாழி நெல் இறுத்தல் வேண்டுமென்ற குறிப்பை 22ஆம் வரியில் காண்க.

24. **வரகு** — வரகு கொடுப்பதானுல் : **இன்னெல்லில் ஒன்று பாதி இறுப்பதாகவும்**-மேலே நீரிலி நிலத்திற்குக்குறிப்பிட்ட நெல்லளவில் ஒன்றுக்குப் பாதி செலுத்தவும். **எள்ளும் திணையும்** - எள்ளும் திணையும் கொடுப்பதானுல்; **நான்கொன்று** — நான்கில் ஒன்று.

25. **உலகுடைய நாயனுர்** - சுந்தரபாண்டியன் : **எழுந்தருளினுல்**— அந்த ஊர்களுக்கு வந்தால்; **திருவெழுச்சி குடிமை முதலாக**: திருவெழுச்சிக்குடிமை என்பது, அரசன் ஓர் ஊருக்கு வருதற்குச் செலவாகும்

26. பெர்பட்டனவும் ஒன்று பாதி இறுப்பதாகவும் வெட்டி முடடை ஆள் செயாதிதாகவும் பிரஸா

27. தஞ் செய் தருளின திருமுகப்படி ப்ரமதேஸங் திரு நாவலூ ரர்க்கும் அனுமன்ருயான அஞ்சன மங்கலத்துக்—

28. கு இறுக்கும்படி கல்வெட்டிக் குடுத்தென் அவனி நாராயண தெவனென் உ ஸ்வஸ்தி ஸ்ரீ

தொகைக்குக் கொடுக்கும் வரிவகை; முதலாக–தொடங்கி; நாடென்ற வரிகள்-நாட்டைக் காத்தற்குக் கொடுக்கும் வரி; இதனை, 'நாடுகாவல்' என்றும் கூறுவர்.

26. எப்பெர் பட்டனவும்-எல்லா வரிகளுக்கும்; ஒன்று பாதி இறுப்ப தாகவும் - நீரிலி நிலத்துக்குக் குறிப்பிட்ட நெல்லளவில் ஒன்றுக்குப் பாதி செலுத்தவும்

வெட்டி முடடைஆள் - வெட்டியும் முட்டையாளும்; இங்கு வெட்டி என்பது, ஊர்ப் பொது நலக் காரியங்களுக்கு அமர்த்தப்பட்டுக் கூலியின்றி செய்யும் வேலை; அதுபற்றி ஊர்ச்சபையாருக்குக் கொடுக்கும் கடமையும் (வரியும்)இப்பெயர் பெறும். முட்டையாள் என்பது, 'முட்டா வாள்' என்று சொல்லபபடும். இடையருமல் தொடர்ந்து பொது வேலை நடப்பதற்குக் கூலியின்றி ஆள் அளிக்கும் கடமை; அதற்கான செலவும் அப் பெயர் பெறும். செயாதிதாகவும் – (கூலியின்றி வேலை செய்வதையும், அவர்களுக்குக் கொடுக்கப்படும் உணவினையும்) நீக்கவும்.

27. பிரஸாதம் – அரசனது ஆணை, கட்டளை; திருமுகம் – ஓலை; ப்ரமதெயம் திருநாவலூரர்க்கும் – பிரமதேயமான திருநாவலூர் மக்களுக்கும்; பிரமதேயம் – கோயிலுக்குத் தானமாகக் கொடுக்கப்பட்ட நிலம், ஊர் முதலியன; அநுமந்தாயான - 'அனுமன்தராய்' என்று சொல்லப் படும்.

28. இறுக்கும்படி – செலுத்துமாறு; கல்வெட்டிக் குடுத்தேன் – அரசனது கட்டளையைக் கல்லில் வெட்டிக் கொடுத்தேன் என்பது; இவ் வாறு இச்சானத்தை வெட்டியவன் அந்த இடத்து அரசியல் தலைவனுன நாராயணதேவன் என்போன். உ–உபயம், தானம்; இவ்வாறு முன்னர் 14ஆம் சாசன முடிவில் வந்திருத்தலும் காண்க. 'ஸ்வஸ்திஸ்ரீ': இது மங்கலமொழியாகச் சாசனத்தின் முதலில் வரும்; சாசனத்தின் முடிவிலும் இதுவரும் என்பதற்கு இச்சாசனம் ஒரு சான்ருகிறது.

(1) பயிர் எழுந்த முதல் தரமான ஒருமா நிலத்திற்கு 2 கல நெல் குறைத்து 5 கலன் 2 தூணி, 1 பதக்கு 4 நாழி நெல் கொடுக்கவும், (2) தண்ணீர் குறைவான ஒரு மா நிலத்திற்கு 2 கல நெல் குறைத்து 3 கலன் 2 தூணி, 3 குறுணி 3 உழக்கு நெல் கொடுககவும், (3) அதுவே 'நவிரை' என்னும் நெல்லாயின் முன் கூறிய வீதத்தில் ஒன்றுக்கு முக்கால் பாகம் கொடுக்கவும், (4) வரகு கொடுப்பதாயின் முன் கூறிய

வீதத்தில் ஒன்றுக்குப் பாதி கொடுக்கவும் (5) எள், தினை கொடுப்பதாயின் முன் கூறிய வீதத்தில் நான்கில் ஒன்று கொடுக்கவும், (6) மன்னர் எழுந்தருளிபதற்குக் கொடுக்கப்படும் திருவெழுச்சிக்குடிமை முதல் நாடென்ற வரிகள் எல்லாவற்றிற்கும் முன் கூறிய வீதத்தில் ஒன்றுக்குப் பாதி கொடுக்கவும், (7) வெட்டி முட்டையாள் என்னும் வரிகளை நீக்கவும் அரசன் ஆணை எழுதி அனுப்ப அவனிநாராயணன் என்பான் அதைக் கல்லில் வெட்டினான் என்பது.

பயிற்சி வினாக்கள்.

1. சுந்தரபாண்டியன் யார்? அவன் காலத்துச் சாசனங்களாக கூறப்படுவன எங்கெங்கு உள்ளன? அவற்றின் காலத்தைக் குறிப்பிடுக.

2. சுந்தரபாண்டியன் மெய்க்கீர்த்தியின் தொடக்கம் யாது? அதில் அவன் செயலாகவும், அவன் முன்னோர் செயலாகவும் கூறப்படுவன யாவை?

3 சோழர் மெய்க்கீர்த்திக்கும் பாண்டியர் மெய்க்கீர்த்திக்கும் உள்ள வேறு பாட்டைக் குறிப்பிடுக.

4. திருநாவலூர், அஞ்சன மங்கலம் என்னும் ஊர்கள் எங்கு உள்ளன? அவ்வூரார்க்குக் குறைக்கப்பட்ட இறைகள் யாவை?

5. விளக்கம் தருக:— கொளார்ந்த ....விளையாட', "ஐவகை வேள்வி" "அறுவகைச் சமயம்" "எழுவகைப் பாடல்" "இந்திரன் பூட்டிய பொலங்கதி ராரம்" திசைமுகந் படைத்த மனுநெறி' 'பிரசாதம் செய்தருளின திருமுகப்படி' "நீர் வார்த்து"

6. அஞ்சனமங்கலம், விருதராச பயங்கர வளநாடு —இவைகளுக்கு வழங்கிய வேறு பெயர்கள் யாவை?

7. பொருள் தருக:— இறை, உலகுடைய நாயனார், பிள்ளையார், திருமேனி, இலேசு, பிரசாதம், திருமுகம், நவிரை, திருவெழுச்சிக் குடிமை, நாடென்றவரி, வெட்டி, முட்டையாள், பிரம தேயம்.

8. உலகுடைய நாயனார், பிள்ளையார், அழகப்பெருமாள், அவனி நாராயணன் — குறிப்பு வரைக

9. இச்சாசனத்தில் காணப்படும். அளவைப் பெயர்களைக் குறிப்பிடுக.

26. சுந்தரபாண்டியன் சாசனம்-II *

முன்னுரை

சுந்தர பாண்டியன் சாசனம் என்பது, முதலாம் மாறவர்மன் சுந்தர பாண்டியன் † காலத்தில் ஏற்பட்ட சாசனம் என்று பொருள்படும். இச்சாசனம் அவன் ஆட்சியின் ஐந்தாம் ஆண்டிற்கு எதிரான ஆறும் ஆண்டு ஏற்பட்டது. இஃது புதுக்கோட்டையைச் சேர்ந்த திருமய்யம் தாலூகாவில் நெய்வாசல் என்னுமூரிலுள்ள அகத்தீசுவரர் கோயில் நடுவிடத்துக் கருப்பகிருகத்தின் தெற்குச்சுவரில் காணப்படுகிறது. தமிழ்மொழியில் கிரந்த எழுத்துக்கள் கலந்து எழுதப்பட்டது. இருபத்தெட்டு வரிகளையுடையது.

இச்சாசனத்தின் தொடக்கத்தில் சுந்தரபாண்டியன் பெயர், 'கோமாற பன்மரான திரிபுவன சக்கரவர்த்திகள் சோழநாடு கொண்டருளிய சிரி வீர சுந்தர பாண்டியதேவர்' என்று குறிக்கப்பட்டுள்ளது. பின்னர், அவன் ஆட்சியின் ஆறும் ஆண்டு இடப ஞாயிறு (வைகாசித் திங்கள்), இருபத்திரண்டாம் நாள் திங்கட்கிழமைக்குச் சரியான ஏழாவது நாளான புனர்பூச நாளில், கூத்தன் தில்லை நாயகன் என்னும் ஒரு வியாபாரி வண்டாங்குடி கள்ளரிடமிருந்து, காராண் கிழமையாக விலைக்கு வாங்கிய வண்டாங்குடி என்னு மூரைச் சுற்றியுள்ள நிலங்களுக்குரிய இறை, குடிமை, அந்தராயம், நாடேன்றவரி, வாரமங்கலம், சுணக்கப் பேறு முதலிய எல்லா வற்றிற்கும் நெல்வாயில் திரு அகத்தீசுவரம் உடைய நாயனுற்குப் பசானபோகம் மா ஒன்றுக்கு இருகல நெல்லும் அந்தராயம் கால் திரமமும், குறுவை நெல் மா ஒன்றுக்கு ஒரு கல நெல்லும் அந்தராயம் அரைக்கால் திரமமும், எள், தினை, வரகு ஆகியவை மா ஒன்றுக்கு தூணிப்பதக்கு நெல்லும், அந்தராயம் மாகாணித் திரமமும் வரியாகச் செலுத்துவதாகவும், அவற்றுள் கடமையாகச் செலுத்தும் நெல்லைக் கல்வாயில் நாட்டு கடமை அளக்கும் மரக்காலால் அளந்து கொடுப்பதாகவும், திரமத்தை ஐந்து வீதம் செலுத்துவதாகவும், கண்டன் ஆளுடையானுன கல்வாயில் நாடாழ்வான் என்னும் அரசியல் அதிகாரிக்கு உறுதி செய்து கற்பூரவிலையும் கொடுத்த செய்தி கூறப்படுகிறது.

சுந்தர பாண்டியன் கி. பி. 1216 முதல் 1238 ஆம் ஆண்டு வரை பாண்டியநாட்டை மதுரையிலிருந்து ஆண்டான்.

---

* Pudukottai state Inscriptions No. 260, pp. No, 145-146

† இவனைப் பற்றிய வரலாற்றை முந்திய சாசனக் குறிப்பில் காண்க.

இச் சாசனம் அவன் ஆட்சியின் ஆருவது ஆண்டு ஏற்பட்ட தெனவே, இதன் காலம் கி. பி. 1222 ஆம் ஆண்டு என்னலாம்.

சாசனம்

1. ஸ்வஸ்தி ஸ்ரீ கொமாறபன்மரான திரிபுவன ச
2. க்கரவத்திகள் சொழநாடு கொண்டருளிய சிரி விர சுந்தர
3. பாண்டிய தெவற்கு யாண்டு ரு ஆவதின் எதிரா மாண்
4. டு இசப நாயிற்று யிருபத்திரண்டாந் தியதியும் தி—
5. ங்கட்கிழமை புணர்பூசத்து நாள் கண்டன்
6. ஆளுடையானுன கல்வாயில் நாடாழ்வானெ—
7. ன் காளையர் கால பெருந்தெருவில் வியாபாரி வெண்
8. ணை நல்லூருடையான் கூத்தன் தில்லை நாயகன்
9. திருத்தியூர் முட்டத்தாரான வண்டாங் குடிக் கள்
10. ளர் பக்கல காராண் கிழமையாக விலைகொண்டுடை

1–2 **சிரி விர சுந்தரபாண்டிய தெவர்:** முந்திய சாசனத்தில் இவன் பெயர், 'ஸ்ரீ சுந்தரபாணடிய தேவர்' என வந்துள்ளது. இச்சாசன முதல் இவன் 'வீர' என்னும் அடைமொழி கொடுத்து வழஙகப்படுகிருன். **கோமாற பன்மர், திரிபுவனசக்கரவர்த்திகள், சோழநாடு கொண்டருளிய வன்** என்பன இவனுக்கு வழங்கிய சிறப்புப் பெயர்களாகும்.

3 **யாண்டு ரு ஆவதின் எதிராமாண்டு –** ஆட்சி ஆண்டு ஐந்தாவ தற்கு அடுத்த ஆண்டு; அஃதாவது ஆருவது ஆண்டு என்பது.

4 **இசப ஞாயிறு –** இடப ஞாயிறு, இரண்டாவது திங்களான வைகாசித் திங்கள்; தியதி – நாள்.

5. **புணர்பூசத்து நாள் –** புனர் பூசம் என்னும் ஏழாவது நட்சத் திரம்.

6. **கண்டன் ஆளுடையானுன கல்வாயில் நாடாழ்வான்:** கண்டன் ஆளுடையான் என்பது இயற்பெயர்; கல்வாயில் நாடாழ்வான் என்பது சிறப்புப்பெயர். இச் சிறப்புப் பெயரால் முந்திய 24ஆம் சாச னத்திலும் இவன் அழைக்கப்பட்டிருத்தல் காண்க. கல்வாயில் நாட்டுக் குத் தலைவன், 'கல்வாயில் நாடாழ்வான்' என்று பெயர் பெற்ருன்.

7–10. **கூத்தன் தில்லை நாயகன்:** இவன் ஒரு வியாபாரி;இவனுக் குச் சொந்தவூர் வெண்ணெய் நல்லூர். காளையர் காலப் பெருந் தெரு வில் இருந்து வியாபாரம் செய்து வந்தான். வண்டாங்குடி என்னு மூரி லுள்ள கள்ளர்களிடம் அவ்வூருக்கு உட்பட்டதும், அவ்வூரைச் சுற்றி யிருந்ததுமான நிலங்களைப் பயிரிடுவதற்கென்று விலைக்கு வாங்கினுன்.

காளையர் கால பெருந்தெரு : இது காளையார் கோயில் என்னும் ஊரிலுள்ள ஒரு பெருந்தெரு போலும். காளையார் கோயில், இராமநாத புரம் மாவட்டத்தி லுள்ளது. **வெண்ணெய் நல்லூர் :** இப்பெயருடைய ஊர் தஞ்சை மாவட்டக்தில் உள்ளது திருவெண்ணெய் நல்லூராயின்

11. ய வண்டாங்குடி வளையிற் சுற்றுமுற்றுக்கும் யி—
12. றை குடிமை அந்தராயம் நாடென்றவரி வாரமரக்—
13. கலம் கணக்கபெறு மற்றும் எப்பெற்பட்ட சி—
14. ல் ஆயம் கடமை உள்ளவயிற்றுக்கும் நெல்வாயில்
15. திருவகத்திசிரம் உடைய நாயநாற்கு கொல் குடிதா
16. ங்கியால் புள்ளிபுக்க நிலம் ஒரு மாவுக்கு பசானபொ
17. கத்துக்கு கரும்புட்பட மாத்தால் யிருகல நெல்லு—

அது தென்னூர்க்காட்டு மாவட்டத்திலுள்ளதைக் குறிக்கும் திருத்தியூர் முட்டத்தார் - இது வண்டாங்குடி கள்ளர்களுக்கு வழங்கிய மற்றொரு பெயர். முட்டத்தார் — முற்றத்தார்.

11. வண்டாங்குடி வளையில்–வண்டாங்குடி என்னும் ஊர் எல்லையில்; சுற்றுமுற்றுக்கும் – வண்டாங்குடியைச் சுற்றியுள்ள நிலங்களுக்கும்; முற்றுதல் – சூழ்தல்.

12. இறை–அரசாங்கத்திற்குச் செலுத்தும் வரி, நிலவரி; குடிமை-நாட்டின் குடியாக வாழுவதற்குச் செலுத்தும் வரி; அந்தராயம்-உள்வரி, உள் வருமானம்; ஊர்ச் சபை, நாட்டவர்போல்வார்க்குக் கொடுக்கும் வரி; நாடென்ற வரி – நாட்டவர்க்குக் கொடுக்கும் வரி; இதனை, 'நாடுகாவல்' என்றும் கூறுவர்; இது நாடுகாவலுக்காகக் கொடுக்கப் படு, வது. வாரமங்கலம்–வரிவகைகளில் ஒன்று.

13. கணக்கப் பெறு–கணக்கப்பேறு, கிராமக் கணக்கனுக்கு நெல்லாகக் கொடுப்பது; எப்பெற்பட்ட – எல்லா விதமான.

14. சில் ஆயம் – சில்லறை வரிகள்; இதனைச் சில்விறை, சில் வரி என்றும் கூறுவர். கடமை என்பது, அரசாங்கத்திற்குச் செலுத்த வேண்டும் வரிகளின் பொதுப் பெயர்; இங்கு இறை முதலியவை நீங்கிய ஏனைய வரிகள் என்று பொருள்படும். உள்ளவயிற்றுக்கும் – உள்ளன வாய் ஏற்பட்ட வரிகளுக்கும்.

15. நெல்வாயில் திருவகத்திசிரம் உடைய நாயனூர் – நெல்வாயில் என்னும் ஊரிலுள்ள திருவகத்தீசுவரம் கோயில் சிவன். நெல் வாயில் என்பது, இப்பொழுது 'நெய் வாசல்' என்று வழங்குகின்றது. கொல்குடி தாங்கி – குடிதாங்கிக் கோல்; இஃது நிலமளக்கும் ஓர் அளவுக்கோல்; நெல் வாயில் திருவகத்திசிரத்துக் கோயிலுக்குரியது; நாட்டில் வழங்கி வந்த அளவுக்கோலினும் பெரியது

16. புள்ளி புக்க நிலம்–கணக்கில் வந்த நிலம்; அளந்து கணக்கிட்ட நிலம்; புள்ளி – கணக்கு. ஒரு மாவுக்கு – ஒரு மா நிலத்துக்கு; மா — 100 குழி. பசானபோகம்–சித்திரைத் திங்களில் அறுவடையாகும் ஒரு வகை நெல்; பசானம்– சம்பா நெல்; போகம் – நெல் விளைச்சல்.

17. கரும்புட்பட - கரும்பு நட்ட நிலமும் சேர்த்து; மாத்தால் இரு கலநெல்லும் – ஒரு மா நிலத்திற்கு 2 கலம் நெல்லும்; இது நிலவரி; கலம் — 96 நாழி.

18. ம் அந்தராயத்துக்கு காற்திரமமும் ஆடி குறுவை
19. அற்பிசிக் குறுவைக்கு மாத்தால் கலநெல்லும் அ—
20. ரைக்கால் திரமமும் எள் திணைவரகுக்கு மாத்தால்தூ
21. ணி பதக்கு நெல்லும் மாகாணி திரமமும் இறுப்பதாக—
22. வும் இவ்விறை கல்வாயில் நாட்டு கடமை காலாலெ யிறுப்—
23. பதாகவும் திரமம் அஞ்சுமெனி இறுப்பதாகவும் இதுக்கு
24. இவன் பக்கலெ கற்பூர விலையும் கொண்டு இப்படி சந்தி—
25. ராதித்தவற் செல்வதாக சம்மதித்தொம் கண்டன் ஆளு
26. டையானுன கல்வாயில் நாடாழ்வனெள் வெண்ணை நல்லூ—

---

18. **அந்தராயத்திற்கு காற்திரமமும்**-*உள்வரிக்குக் கால் திரமமும்; அந்தராயம்—ஊர் வரி, சபையாருக்குக் கொடுப்பது;* **திரமம்** *—ஒருவகைக் கிரேக்க நாணயம்* (Drachma); **ஆடி குறுவை அற்பிசிக் குறுவை**—*ஆடித் திங்களிலும் ஐப்பசித் திங்களிலும் அறுவடையாகும் குறுவை நெல்; குறுவை—ஒருவகை நெல்.*

19. **மாத்தால்** - *ஒரு மா நிலத்துக்கு* **கலநெல்லும்** — *ஒரு கலம் நெல்லும்.*

20–21. **திணை**—*திணைப்பயிர்:* **மாத்தால் தூணிப்பதக்கு நெல்லும்**;—*ஒரு மா நிலத்திற்கு* 1 *தூணி* 1 *பதக்கு* (48 *நாழி*) *நெல்லும்; தூணி* — 32 *நாழி; பதக்கு* - 16 *நாழி;* **இறுப்பதாகவும்**—*செலுத்துவதாகவும்.*

22. **இவ் இறை** — *நெல்லாகக் கொடுக்கும் இந்த வரி;* **கல்வாயில் நாட்டுக் கடமை காலாலே**—*கல்வாயில் நாட்டில் கடமை அளக்கும் மரக் காலால்; கடமை* - *இறை; கால்* - *மரக்கால்.*

23. **திரமம் அஞ்சுமெனி இறுப்பதாகவும்**—*திரமமென்னும் நாணய வரியை ஐந்து தடவையாகக் கொடுப்பதாகவும்;* **அஞ்சுமெனி** — *ஐந்து தடவை; 'ஐந்து திரமம் வீதம்' என்பாரு முளர்.* **இதுக்கு** — *இதற்கு.*

24. **இவன் பக்கல்** — *இவனிடத்தில்;* **கற்பூரவிலை**—*கோயில் நிலங்களை வாங்குதற்குரிய விலை; இவ்வாறு கோயில் நிலங்களுக்கு விலை கொடுத்து, அதை அனுபவிப்பதற்கு விளைச்சலில் ஒரு பகுதியை கோயிலுக்குக் கொடுப்பது அக்கால வழக்காகும்.*

25. **சந்திராதித்தவல் செல்வதாக** — *சந்திர சூரியர் உள்ள காலம் அளவும் நடைபெற;* **சம்மதித்தோம்** — *ஒப்புக்கொண்டோம்.*

26–27. **கண்டன் ஆளுடையானுன கல்வாயில் நாடாழ்வான்** : *இவன் பெயர் முன்னர்க் குலசேகர தேவர் சாசனத்தில்* **'கல்வாயில்**

27. ருடையான் கூத்தன் தில்லை நாயகனுக்கு இது
28. பன்மாஹெஸ்வர ரகெஷை.

நாடாழ்வான்' என வந்திருத்தல் காண்க. கண்டன் ஆளுடையான் என்பது இவனது இயற்பெயர் போலும். சம்மதித்தோம் கூத்தன் தில்லை நாயகனுக்கு – கூத்தன் தில்லை நாயகனுக்குக் கொடுக்கச் சம்மதித்தோம் என்பது

சுந்தரபாண்டியன் ஆட்சியின் ஐந்தாவதற்கு எதிரான ஆறும் ஆண்டு வைகாசித் திங்கள் 22ஆம் நாள் திங்கட்கிழமை புனர் பூசத்தில், வெண்ணெய்நல்லூருடையானும், காளையர் காலப் பெருந்தெருவில் வியாபாரம் செய்தவனுமான கூத்தன் தில்லை நாயகன் என்பான் திருத்தியூர் முட்டத்தாரான வண்டாங்குடி கள்ளர்களிடம், அவர்கள் ஊர் எல்லையில் அவ்வூரைச் சுற்றியிருந்த நிலங்களில் பயிர்த் தொழில் செய்யும் உரிமை பெறுதற்கு விலை கொடுத்து வாங்கி, அந்நிலத்திற்குச் செலுத்தி வந்த இறை, குடிமை, அந்தராயம் நாடென்ற வரி, வாரமங்கலம், கணக்கப்பேறு முதலிய சில்லாயம், கடமை ஆகியவற்றுக்குப் பதிலாக, நெல்வாயில் திருவகத்தீசுவரம் கோயில் சிவபெருமானுக்கு, அவ்வூரில் வழங்கிய குடிதாங்கிக் கோலால் அளந்து கணக்கிடப்பட்ட நிலத்தில், பசான போகமாக கரும்பு நட்ட நிலத்திற்கும் சேர்த்து ஒரு மா நிலத்திற்கு இரண்டு கல நெல்லும், அந்தராயமாக $\frac{1}{4}$ திரமமும், ஆடித் திங்கள் ஐப்பசித் திங்களில் குறுவை நெல் விளையும் ஒரு மாநிலத்திற்கு ஒரு கல நெல்லும் அந்தராயமாக $\frac{1}{8}$ திரமமும், எள், தினை, வரகு ஆகியவை விளையும் ஒருமா நிலத்திற்குத் தூணிப் பதக்கு (48 நாழி) நெல்லும் அந்தராயமாக $\frac{1}{8}$ திரமமும் கொடுக்க ஒப்புக்கொண்டு, கண்டன் ஆளுடையானான கல்வாயில் நாடாழ்வானிடம் அந்த நிலத்திற்குரிய கற்பூரவிலையும் கொடுக்க அவன் அதற்குச் சம்மதித்தான் என்பது.

28. இது பன்மா ஹேஸ்வர ரகெஷை – சிவனடியார் கூட்டம் (Company of Saiva devotees) காக்கக் கடவர் : ரக்ஷை – இரட்சிக்க, காக்கக் கடவர். இவ்வாறு 19ஆம் சாசனத் திறுதியிலும் வந்திருத்தல் காண்க.

பயிற்சி வினாக்கள்.

1. அகத்தீசுவரர் கோயில் சுந்தர பாண்டியன் சாசனம் எக்காலத்தது? அதில் கூறப்படும் செய்தி யாது?

2. அகத்தீசுவரர் கோயில் சாசனத்தில் சுந்தரபாண்டியன் பெயர் எவ்வாறு குறிக்கப் பெற்றுள்ளது? அதில் ஆண்டு குறித்துள்ள முறைக்கும் பிறவற்றிற்கு முள்ள வேறுபாடு யாது?

3. கல்வாயில் நாடாழ்வான், கூத்தன் தில்லை நாயகன், வண்டாங்குடி கள்ளர் – இவர்களுக்கு வழங்கிய வேறு பெயர்கள் யாவை? குறிப்பு வரைக.

27. அரிகேசரி பராக்கிரம பாண்டியன் சாசனம் I*

முன்னுரை

அரிகேசரி என்பது பராக்கிரம பாண்டியனுக் குரிய மற்றொரு பெயர். இஃது 'அரிகேசரி தேவர்' எனவும் வழங்கும். இவன் திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்த தென்காசி விசுவநாதசுவாமி கோயிலுக்குக் கொடுத்த தானத்தைப் பற்றிய சாசனம், 'அரிகேசரி பராக்கிரம பாண்டியன் சாசனம்' எனப் பட்டது. இச்சாசனம் இவனது ஆட்சியின் இருபத்தொன்பதாவது ஆண்டில் ஏற்பட்டது. இஃது தென்காசி விசுவநாத சுவாமி கோயில் நடுவிடத்துக் கருப்ப கிருகத்தின் மேலைப்புற அடிச்சுவரிலும் தெற்குப்புற அடிச்சுவரிலும் காணப்படுகிறது. தமிழ் மொழியில் கிரந்த எழுத்துக்கள் கலந்து எழுதப்பட்டது. இருபத்தெட்டு வரிகளையுடையது.

இச்சாசனத்தில் முற்பகுதியில் "பூமிசை வனிதை மார்பினில் போலிய" என்று தொடங்கும் இவனது மெய்க்கீர்த்தி அமைந்

---

4. காராண்கிழமை, சில் ஆயம், கோல் குடிதாங்கி, புள்ளி புக்க நிலம், பசானபோகம், கல்வாயில் நாட்டுக் கடமைக் கால், அஞ்சுமேனி, கற்பூரவிலை, சந்திராதித்தவல், பன்மாஹேஸ்வரர் ரக்ஷை — விளக்கம் தருக.

5. பொருள் தருக:- இசப ஞாயிறு, தியதி, புணர்பூசம், இறை, குடிமை, அந்தராயம், கணக்கபேறு, கோல், கால், புள்ளி, போகம், குறுவை, பசானம், திரமம், மா, மேனி.

6. இச்சாசனத்தில் குறிக்கப்பட்ட நாட்பெயர்கள், வரிகள், அளவைப் பெயர்கள் முதலியவற்றைக் குறிப்பிடுக.

7. இச்சாசனத்தின் மூலம் அறியப்படும் பண்டைச்செய்தி யாது?

---

* Pudukottai State InscriptionsNo. 260, pp. 145–146

† இவன் சடையவர்மன் பராக்கிரம பாண்டியன் என்றும், அரிகேசரிதேவர் என்றும் அழைக்கப்பட்டான். பிற்காலப் பாண்டிய மன்னர்களில் இவன் பெயர் பெற்றவன். செந்தமிழ்ப் புலமையும், வடமொழிப் பயிற்சியுமுடையவன். சிவபக்தி யுடையவன். இவனை அக் காலத்தி லுள்ளவர்கள் 'பொன்னின் பெருமான்' என்றும், மான கவசன் என்றும் பாராட்டி வந்தனர்.

இவன் சிங்கை, அனுரை, இராசை (சங்கரநயினார் கோயில்) செண்பை (குற்றாலம்), விந்தை (விந்தனூர், சாம்பூர் வடகரை) அரந்தை, முதலை (முதலைக்குளம்), வீரை (வீரகேரளம்புதூர்), வயப்பாறு முதலிய இடங்களில் பகைவர்களை வென்றான் என்று கூறப்படுகிறது. இவன் விந்தனூர்முதலிய ஐந்து ஊர்களில் அகரங்கள் அமைத்து அந்தணர்களைக்

துள்ளது. அதில் இவனது வெற்றிகளும், திருப்பணிகளும், குணச் சிறப்பும் கூறப்பட்டுள்ளன. பிற்பகுதியில் இவன் தென் காசியில் கட்டிய விசுவநாத சுவாமி கோயில் நாள்வழி பாட்டிற் கும், ஆண்டு விழாக்களுக்கும் தெனுவிநாட்டிலுள்ள தென்காசி (செங்கோட்டை) வாலயன் குடியிருப்பு, கடைப்பற்று, பராக்கிரம பாண்டிய நல்லூர் பற்று ஆகிய ஊர்களையும், வடவாரி நாட்டி லுள்ள பைம்பொழில் பற்றைச் சேர்ந்த நல்லாண் பெற்ருன் பற்று, விசுவநாத தேசுவரிபற்று ஆகிய ஊர்களையும் இறையிலி தேவ தானமாகக் கொடுத்ததோடு, தென்னுவி நாட்டைச் சேர்ந்த இராசகுலராம நல்லூர் என்னும் புலியூர் பாத்து, வீரபாண்டிய நல்லூர் ஆகியவற்றையும் தானமாக கொடுத்த செய்தி கூறப் படுகிறது.

அரிகேசரி பராக்கிரமபாண்டியன் கி.பி. 1422 முதல் 1463ஆம் ஆண்டு வரை தென்காசியில் இருந்து தென் பாண்டிய நாட்டை ஆட்சி செய்தான். இச்சாசனம் இவன் ஆட்சியின் இருபத் தொன்பதாவது ஆண்டு ஏற்பட்ட தெனவே, இதன் காலம் கி. பி. 1462ஆம் ஆண்டு என்னலாம்.

குடியிருக்கச் செய்தான். செண்பகவனம் (திருக்குற்ருலம்), மருதூர் (திருப்புடை மருதூர்) ஆகிய இவ்வூர்களிலுள்ள சிவாலயங்களில் மண்ட பங்கள் கட்டினுன். வேணுவனம் என்னும் திருநெல்வேலி சிவன் கோயிலில் அர்த்தயாம வழிபாட்டிற்கு நிபந்தங்கள் கொடுத்தான்.

இவன் தென்காசிப் பெரிய கோயிலைக் கட்டி அதன் நாள் வழி பாட்டிற்கும் ஆண்டு விழாவிற்கும் தேவதான இறையிலியாகப் பல ஊர் களைக் கொடுத்தான். அக்கோயிலைக் கட்டி முடிக்கப் பதினேழாண்டுகள் சென்றன என்பர். ஆயினும் இவன் அக்கோயிலில் எடுத்த ஒன்பது நிலைக் கோபுரத்தின் திருப்பணி முடிவதற்கு முன் இறந்து விட்டான். அக்கோயிலைப் பாதுகாத்து வருமாறு சிவனடியார்களுக்கும், அவர்கள் வழி தோன்றல்களுக்கும் பணித்து அப்பணியை இவ்வரசனே செய்யு ளில் பாடி கோயில் கோபுரத்தில், இன்றும் எல்லாரும் காணும்படி பொறித்தான். பிற்கால பாண்டிய மன்னர் முடி சூட்டு விழாக்கள் இக் கோயிலிலேயே நடை பெற்று வந்துள்ளமை குறிப்பிடத் தக்கது.

குடிமக்கள் நலத்தின் பொருட்டு விஸ்சுவநாதப் பேரேரி என ஓர் ஏரி யை இவன் வெட்டுவித் துள்ளான். சிவபக்தியிலும், ஆட்சி நலத்திலும் சிறந்து விளங்கிய இவன் கி. பி. 1422 முதல் 1463 ஆம் ஆண்டு வரை ஆட்சி புரிந்தான். கி. பி. 1463ல் இறந்தான்.

(1) சுபமஸ்து—
பூமிசை வனிதை மார்பினிற் பொலிய
நாமிசை கலைமகள் நலனுற விளங்கப்
புயவரை மீது சயமகள் புணரக்
கயலிணை யுலகின் கண்ணெனத் திகழச்
சந்திர குலத்து வந்தவ தரித்து
முந்தையோர் தவத்தின் முளையென வளர்ந்து
தென்கலை வடகலை தெளிவுறத் தெரிந்து
மன்பதை புரக்க மணிமுடி புனைந்து
சங்கர சரண பங்கயஞ் சூடிச்
செய்கோ லோச்சி வெண்குடை நிழற்றி
வான வாரியு மன்னருள் வாரியுந்
தான வாரியுந் தப்பா தளித்து

---

1. **சுபமஸ்து:** *இது கடிதம் முதலியவற்றின் தொடக்கத்திலும் இறுதியிலும் வாழ்த்துதலாக வரும் ஒரு வடமொழித்தொடர். 'மங்கள முண்டாகுக' என்பது இதன் பொருள். முந்திய சாசனங்களின் தொடக்கத்தில் 'ஸ்வஸ்திஸ்ரீ' எனத் தொடங்கியுள்ளமையும் அறிதற் பாலது.*

பூமிசை வனிதை – *திருமகள்;* **நாமிசை கலைமகள்** – *சரசுவதி;* **நலமுற**–*நன்றாக;* **புயவரை** – *புயங்களாகிய மலை;* **சயமகள் புணர** – *வெற்றி பொருந்த; செல்வம், கல்வி, வெற்றி இவை ஒருங்கே யமைய என்றபடி.*

கயலிணை– *இணையான இரு கயல்கள்; பாண்டிய மன்னரது கொடிகளில் இணையான இருகயல்கள் வரையப் பெற்றிருக்கும்; அவை, உலகத்திற்கே இரு கண்ணெனத் திகழும் என்பது.*

சந்திரகுலம்: *சேர, சோழ, பாண்டிய மன்னர்கள் முறையே அக்கினி குலத்தையும், சூரிய குலத்தையும், சந்திர குலத்தையும் சேர்ந்தவர்கள்.* **முந்தையோர்** – *முன்னோர்;* **முளை** – *தோன்றல்;* **தென்கலை** – *தமிழ் நூற் பயிற்சி;* **வடகலை** – *வட மொழி நூற் பயிற்சி.*

மன்பதை – *உலகத்து மக்கள்;* **சங்கர சரண பங்கயஞ் சூடி** – *சிவ பெருமானிடத்தில் பக்திகொண்டு என்றபடி; சங்கரன் - சிவன்; சரணம்- பாதம்; பங்கயம் – தாமரை.*

செங்கோலோச்சி வெண்குடை நிழற்றி: *செங்கோல், வெண்குடை இரண்டும் அரசனது ஆணையையும் ஆளுகையையும் குறிக்கும்.* **ஓச்சி** – *செலுத்தி;* **நிழற்றி** – *நாட்டி*

வானவாரி–*மழை; அரசன் அறநெறி நிற்பின் மழை பெய்யுமென்பது பற்றி, அரசனே வானவாரி அளித்தான் என்று கூறப்பட்டது.* **மன் அருள் வாரி** – *நிலையான கருணை;* **தானவாரி** – *கொடை; வாரி என்றது, இங்கு மிகுதியைக் குறித்து நின்றது.*

மறக்களை பறித்துநல் லறப்பயிர் விளைத்துச்
சிங்கையி லனுரையி லிராசையிற் செண்பையில்
விந்தையி லறந்தையில் முதலையில் வீரையில்
வைப்பாற் ெ... ... ... ன்னரை வென்கண்
டெப்பாற் றிசையு மிசைவிளக் கேற்றிப்
பதினெண் ... ... கம் போற்றப்
பதினெண் பாஷைப் பார்த்திப ரனைவரும்
திறையுஞ் சின்னமு முறைமுறை குணர்ந்து
குறைபல விரந்து குரைகழ லிறைஞ்ச
வவரவர் வேண்டிய தவரவர்க் கருளி

மறக்களை பறித்துநல் அறப்பயிர் விளைத்து: *மறத்தைக் களையாகவும் அறத்தைப் பயிராகவும் இவ்வடியில் உருவகித்துள்ளார். மறம்—தீமை; அறம் – தருமம்.*

சிங்கையில் .... மிசை விளக்கேற்றி: *சிங்கை, அனுரை இராசை, செண்பை, விந்தை, அறந்தை, முதலை, வீரை, வைப்பாறு இவ்விடங்களில் பகை மன்னரை வென்று எல்லாத் திசையிலும் தன் புகழைப் பரப்பி என்றபடி.*

இராசை – *சங்கரநயினர் கோயில்; இது சங்கரநயினர்கோயில் தாலூகாவிற்குத் தலைநகர்.* **செண்பை**: *இது செண்பக வனம் என்னும் திருக்குற்றாலத் தலமாகும்; தென்காசித் தாலூகாவிலுள்ளது. இதனை நாங்குனேரியை யடுத்த சண்பகராசபுரம் என்பாருமுளர்.*

விந்தை – *விந்தனூர்; இது தென்காசியை யடுத்த செங்கோட்டைப் பகுதியிலுள்ளது. 'பராக்கிரம பாண்டியன் சதுர்வேதி மங்கலம்' என்றும் இதற்கு ஒரு பெயர் உண்டு. இப்பொழுது அது 'விந்தைகோட்டை' என்று வழங்குகிறது. இதனைச் 'சாம்பூர் வடகரை' என்பாரு முளர்.* **அறந்தை**: *இவ்வூர் எந்த இடத்தில் உள்ளதென்று இப்பொழுது விளங்கவில்லை.* **முதலை**–*முதலைக்குளம் என்னும் ஊர். இது நாங்குனேரித் தாலூகாவிலுள்ளது.* **வீரை**: *வீரகேரளம்புதூர்; செங்கோட்டைப் பகுதியிலுள்ளது.*

வைப்பாறு–*வைப்பாறு ஓடும் பகுதி; இது தென்காசி வழியே ஓடும் ஒரு நதி.* **வென்கண்டு** – *புறங்கண்டு, வெற்றிகொண்டு;* **எப்பாற்றிசையும்** –*எல்லாத் திசையும்;* **இசை விளக்கேற்றி** – *புகழ் பரப்பி.*

பதினெண் பாஷைப் பார்த்திப ரனைவரும் — *பதினெண் மொழி வழங்கும் பதினெண் நாட்டு அரசர்களும்;* **திறையும் சின்னமும்** – *திறைப் பணமும் அடையாளப் பூ முதலியனவும்.* **முறை முறை** – *வரிசையாக.*

குறைபல விரந்து – *தமக்குண்டான பல குறைகளையும் கூறி;* **குரை கழ லிறைஞ்ச** – *அடிகளில் விழுந்து வணங்க. வீரக்கழல் அணியும் அடிகளாதலின், அரசன் அடிகள் 'குரைகழல்' எனப்பட்டன.*

அந்தண ரனேகர் செந்தழ லோம்ப
விந்தை முதல்அகர மைந்திடத் தியற்றிச்
சிவனெறி யோங்கச் சிவாற்சனை புரிந்து
மருதூ ராற்கு மண்டப மமைத்து
முன்ஒரு தூர்மூங்கி லுள்புக் கிருந்த
சிற்பரர் தம்மைத் திருவத்த சாமத்துப்
பொற்கலத் தமுது பொலிவித் தருளிச்
சண்பக வனத்துச் சங்கரர் தமக்கு
மண்டப மமைத்து மணிமுடி சூட்டி

சிங்கை, அனுரை இராஜசை, செண்பை, விந்தை, அறந்தை, முதலை, வீரை முதலிய இடங்களில் பகை மன்னரை வென்றதும், பதினெண் மொழி வழங்கும் பதினெண் நாட்டு அரசர்களிடத்தும் திறை வாங்கிய தும் அரிகேசரி பராக்கிரம பாண்டிய தேவன் வெற்றிகளாகும்.

செந்தழலோம்ப – யாகம் வளர்க்க; விந்தை முதல் அகரம் ஐந்திடத் தியற்றி – விந்தனூர் முதலிய ஐந்து இடங்களில் அந்தணர் தங்கி வாழ் வதற்கு அகரங்கள் ஏற்படுத்தி என்பது. விந்தை – செங்கோட்டைப் பகுதியிலுள்ள விந்தனூர். விந்தை முதல் என்றது, விந்தனூர் அறந்தை, முதலை, வீரை, வைப்பாறு ஆகிய ஐந்திடங்களையும் குறிக்கும். அகரம் – அக்கிரகாரம், அந்தணர் தங்குமிடம்.

சிவநெறி – சைவம்; சிவாற்சனை — சிவ பூசை; அந்தணர்களைக் கொண்டு சைவ சமயம் வளரும்படிச் சிவ பூசை முதலியன செய்து என்பது.

மருதூரார் — திருப்புடை மருதூரில் எழுந்தருளிய சிவபெருமான்; திருப்புடை மருதூர் அம்பாசமுத்திரம் தாலூகாவிலுள்ளது. அங்குள்ள கோயில் மண்டபத்தை அரிகேசரி பராக்கிரம பாண்டியதேவன் கட்டி னன்.

முன்னொரு.........சிற்பரர்: முன்னொரு காலத்தில் மூங்கிலடியில் எழுந்தருளிய சிவபெருமான் என்பது. இது திருநெல்வேலித் தலத்துச் சிவபெருமானைக் குறிக்கும். தூர்மூங்கில் — மூங்கில் அூர், மூங்கிலடி அத்த சாமம் – நள்ளிரவு; அரிகேசரி பராக்கிரம பாண்டிய தேவன் திருநெல்வேலியில் எழுந்தருளிய சிவபெருமானது அர்த்தயாம வழி பாட்டிற்கு நிபந்தங்கள் கொடுத்தான் என்பது.

சண்பகவனத்துச் சங்கரர்: சண்பகவனமென்னும் திருக்குற்றலத் தில் எழுந்தருளியுள்ள சிவபெருமான். அரிகேசரி பராக்கிரம பாண்டிய தேவன் இங்குள்ள சிவன் கோயிலுக்கு மண்டப மமைத்ததுமன்றி, திருமஞ்சன மாட்டுதல் முதலிய திருவிழாச் சிறப்பும் செய்வித்தான்.

(2)விழாவணி நடாத்தி விரைப்புன லாடல்
வழாவகை நடாத்த நின்மன் னருள்தனுல்
வற்ரு வருவியும் வற்ற வற்கட
முற்றவிக் காலத் துறுபுனல் நல்கென
வேண்டியப் பொழுதே வேறிடத் தின்றிச்
சேண்டரு புனலிற் செழும்புன லாட்டி
மின்கால் வேணி விசுவநா தர்க்குத்
தென்கா சிப்பெருங் கோயில் செய்து
நல்லா கமவழி நைமித் திகமுடன்
எல்லாப் பூசையும் எக்கோ யிலினும்
பொருள்முத லனைத்தும் புரையற நடாத்தித்
திருமலி செம்பொற் சிங்கா சனமிசை
உலக முழுதும் உடையா ருடனே
இலகு கருணை யிரண்டுரு வென்ன

---

2. **விழாவணி** – *திருவிழா.* **விரைப் புனலாடல்** – *திருமஞ்சன மாடுதல்.* **வழாவகை** – *தவருதபடி.* **வற்ரு அருவி**–*குறையாத நீர், வீழ்ச்சி.* **வற்கடம் உற்ற இக்காலத்து**–*பஞ்சம் உண்டான இந்த நாளில்;* **நின்மன் அருள் த(ன்)னுல் உறுபுனல் நல்கென** – *உனது நிலையான கருணையால் நல்ல நீர்பெற அருள்வாய் என்று வேண்ட என்றபடி.* **வேண்டி யப்பொழுதே** – *உறுபுனல் நல்கெனவேண்டிய அப்பொழுதே*

சேண்டரு புனலில் – *சேணிடத்திருந்து கொண்டுதரப்பட்ட நீரில்; சேண் –சேய்மை, தூர இடம். 'நின்மன் னருள்தனுல்.........வேறிடத் தின்றி' என்பதால், இங்கு மழையைக் குறிக்கும் போலும்.* **செழும்புன லாட்டி** –*திருமஞ்சனம் செய்து.*

மின்கால்வேணி – *மின்னலைக் கக்குகின்ற சடை.* **விசுவநாதர்:** *இது தென்காசிப் பதியில் எழுந்தருளிய சிவபெருமான் பெயர்.* **தென் காசிப் பெருங்கோயில்** – *தென்காசிப் பதியிலுள்ள பெரிய கோயில்.*

ஆகமவழி – *ஆகம நூல் கூறு முறை;* **நைமித்திகம்** – *விசேஷ காலங்களில் நிகழ்வது;* **பொருள் முதல் அனைத்தும்** – *எல்லாவற்றையும்;* **புரையற** – *குற்றம் நீங்க.*

திருமலி – *திருமகள் பொலிந்த;* **உலக முழுதும் உடையார்:** *இது அரிகேசரி பராக்கிரம பாண்டிய தேவனது பட்டத்தரசியை குறிக்கும்.* **இலகு கருணை யிரண்டுரு வென்ன** – *விளங்கும் கருணையே இரண்டு உருவெடுத்தாற் போல; இது உலக முழுதுடையாளுடன் அரிகேசரி பராக்கிரம பாண்டிய தேவன் வீற்றிருந்தமைக்கு உவமை.*

அம்மையு மப்பனு மாயனைத் துயிர்க்கும்
இம்மைப் பயனும் மறுமைக் குறுதியும்
மேம்பட நல்கி விற்றிருந் தருளிய
ஸ்ரீ அரி .... தேவரான
பராக்ரம பாண்ட்ய தேவர்க்கு யாண்டு—

இருபத்தெட்டாவதின் எதிராவது ....ற்று இருபத் தொன்றுந் தியதியும் பூர்ணையும் வெள்ளிக்கிழமையும் பெற்ற சோதி நாள், தென் வாரி நாட்டு சித்ரநதி உத்தர தீரத்தில் தக்ஷிண காசியிலே உடையார் விஸ்வநாதனுக்கு அபிநவமாக உபாநாதி ஸ்தூபி பரிய்யந்தமுந் திருப்பணி செய்து உடையார் விஸ்வநாத னையும் பிரதிஷ்டித்து அர்த்த மண்டபம், இடைநாழிகை, மஹா

அம்மையு மப்பனுமாய் – தாயும் தந்தையுமாக **இம்மைப் பயன்** – புகழ்; **மறுமைக்குறுதி** – முத்திநெறி.

விந்தை முதல் ஐந்திடங்களில் அந்தணர்களைக் குடியேற்றுவித்துச் சிவார்ச்சனை புரிவித்தது, மருதூராற்கு மண்டப மமைத்தது. மூங்கிலடி யிலெழுந்தருளிய சிற்பரர்க்கு அர்த்தயாமத்து வழிபாட்டிற்குரிய நிவந்த மளித்தது, செண்பகவனத்துச் சங்கரர்க்கு மண்டப மமைத்துத் திரு மஞ்சன மாட்டுதல் முதலிய திருவிழா நடத்துவித்தது, தென்காசிப் பெரிய கோயிலைக் கட்டி பூசை முதலியன செய்வித்தது முதலியவை அரிகேசரி பராக்கிரம பாண்டியதேவன் செய்த திருப்பணிகளாகும்.

யாண்டு இருபத்தெட்டாவதின் எதிராவது – இருபத்தொன்பதாவது ஆண்டு; **தியதி** – தேதி; **பூர்ணை** – பௌர்ணமி, பதினைந்தாவது திதி; **சோதி நாள்**–பதினைந்தாவது நாளான சுவாதி நாள் – நாள் நட்சத்திரம்.

அரிகேசரி பராக்கிரம பாண்டிய தேவன் அவன் ஆட்சியின் இரு பத்தொன்பதாவது ஆண்டு .... இருபத் தொன்றுந் தேதி பௌர ணமியும் வெள்ளிக்கிழமையும் கூடிய சோதி நாள் தென்வாரி நாட்டுச் சித்திரா நதியின் வடகரையிலுள்ள தென்காசிப் பதியில் விசுவநாத சுவாமிகோயிலைக் கட்டி, சுவாமியின் திருவுருவத்தை அதில் பிரதிஷ் டித்தது மன்றி, மண்டபங்களும் கட்டி, விசேஷ பூசை, திருநாள் செலவு முதலியவைகளுக்குப் பல ஊர்களைத் தானமும் செய்தான் என்பது.

தென்வாரி நாடு – இது பாண்டிய நாட்டின் தென்பகுதி போலும்; **சித்ரநதி உத்தர தீரத்தில்** – சித்திரா நதியின் வடகரையில்; சித்திரா நதி தென்காசி வழியாய் ஓடும் ஒரு சிற்றாறு. **உடையார் விஸ்வநாதர்**: இது தென்காசிப் பதியில் எழுந்தருளிய சிவன் பெயர். **அபிநவமாக**–புதிதாக.

உபாநாதி ஸ்தூபி பரிய்யந்தமும் – அடிமுதல் முடிவரையும்; **திருப் பணி செய்து** – கோயில் கட்டி முடித்து; **விஸ்வநாதனையும் பிரஷ்டித்து**– விசுவநாத சுவாமியின் படிவத்தையும் உள்ளே வைத்து; **அர்த்த மண்ட பம்** – கருப்ப கிருகத்தைச் சார்ந்த மண்டபம்,

மண்டபம், ஸோபாநம் இவையுந் திருப்பணி செய்து, திருப்பள்ளி அறை நாச்சியார் முதலாக உள்ள திருவுடம்புகளும் ஏறி அருளப் பண்ணுவித்து, ஆவரண கோபுராதிகளும் ஆரம்பித்து மேல்–

3. உடையார் விஸ்வநாதந் பூஜைக்கு அமுதுபடி சாத்துப்படி திருமாலைத் திருப்பரிவட்டந் திருவிளக்கு உட்பட்ட பல நித்ய நியமங்களுக்கும் பல விசேஷ பூஜை திருநாட் செலவுக்கும் முன்னுள் இரண்டாவதின் எதிர் இருபத்து மூன்றுவது முதலுக்கு நாம் தேவதானமாக விட்ட பற்றுகளில் தென்வாரி நாட்டுத் தென்காசிக்குப் பெருநான் கெல்கையாவது–கீழ் எல்கை புலியூற் பற்றுன காராண் குளத்தில் நீர்நக்கலுக்கும், பரிம்புக்கும் புலியூர் அகரப்பற்றில் புஞ்சைக்கும், நாராயண ஸ்ரீ பாதங்கள் மடப்

இடை நாழிகை – அர்த்த மண்டபத்திற்கும், மகா மண்டபத்திற்கும் இடைப்பட்ட இடம்; மகா மண்டபம்–அர்த்த மண்டபத்தை யடுத்தள்ள பெரிய மண்டபம்; ஸோபாநம் – படிக்கட்டு; தாழ்வாரம் எனினுமாம். திருப்பள்ளி அறை – கோயில் மூர்த்தி இரவில் பள்ளிக்கு எழுந்தருளும் அறை; நாச்சியார் – பெண் தெய்வம்.

திருவுடம்புகள் – விக்கிரகங்கள். ஏறி அருளப் பண்ணுவித்து–எழுந்தருளும்படிச் செய்து, பிரதிஷ்டை செய்து; ஆவரணம் – சுற்றுமதில்; கோபுராதி – கோபுர முதலிய; ஆரம்பித்து–தொடங்கி; எனவே, இவன் கோபுரம் கட்டி முடிக்கவில்லை என்று தெரிகிறது. மேல்–அதன் பின்பு

3. திருப்பரி வட்டம் — தெய்வத்துக்குச் சாத்தும் ஆடை; நித்ய நியமம் – தினசரி செய்ய வேண்டுவன; முன்னுள் – இருபத்தொன்பதாவது ஆண்டுக்கு முன்பு; இரண்டாவதின் எதிர்–மூன்றுவது; அஃதாவது இருபத்து ஆறுவது ஆண்டு என்றபடி; இருபத்தைந்தாவது என்பாருமுளர் முதலுக்கு – இருபத்தாறுவது ஆண்டு முதல் என்பது.

பற்று – பல கிராமங்களையுடைய நாட்டுப் பகுதி; தென்காசிப் பெருநான் கெல்லை – தென்காசிப் பற்றுக்கு நான்கு எல்கையாவது; புலியூர்: இது தென்காசித் தாலூகாவிலுள்ளது; 'இராசகுல ராமநல்லூர்' என்பது இதன் மற்றொரு பெயர். புலியூர் பற்றுன காராண் ...... நீர்நக்கலுக்கும் — புலியூர்ப்பற்றைச் சேர்ந்த காராண் குளத்து நீர் நக்கலுக்கும் என்றபடி. நீர்நக்கல் – ஏரியின் உள்வாய் நீர் தேங்கும் பகுதி; வாய்க்கால் எனினுமாம். பரிம்பு–காராண் குளத்து நீர் நக்கலை யடுத்த பரிம்பு; பரிம்பு – பாழ் நிலம்; இக்காலத்தில் 'பரம்புக்காடு' என்பர்.

புலியூர் அகரப்பற்று – புலியூர் அக்கிரகாரம் என்பது. நாராயண ஸ்ரீபாதங்கள்: இவர் ஒரு வைணவ அடியார் என்று தெரிகிறது. இவர் வாழ்ந்த மடம் 'நாராயண ஸ்ரீ பாதங்கள் மடம்' எனப்பட்டது. மடப்புறம் – மடத்திற்குத் தானமாக விட்ட நிலம்.

புறத்தில் மேல் எல்கைக்கு மேற்கும், தென் எல்கை சித்ர நதிக்கு வடக்கு, மேல் எல்கை குன்றக்குடிப் பரிம்புக்குக் கிழக்கும், வ ......சென்னைப் பொற்றைக்கும் குத்துக் கல்லுக்கும் தெற்கும் ஆக இன்னான் கெல்......ட்ட பற்றும், இந்த நதிக்கு தக்ஷிண தீரத்தில் வாயுளான் குடிப்பற்றுக்குப் பெருநான் கெல்லையாவது கீழ் எல்கை புலியூர் அணைக்கும் திருச்சாலைக் குடிப்பற்றுக்கும் ஆழங்காலுக்கு மேற்கும், தென் எல்கை திருச்சாலைக் குடிப் பற்றுக்கும் பராக்கிரம பாண்டிய சதுர்வேதி மங்கலத்து பட்ட கள் அகரப் பற்றில் வடவெல்கைக்கும் உடையார் திருக்குற்றால முடைய நாயனார் பழந் தேவதானத்துக்கு வடக்கும், மேல் எல்கை வாயுளான் குடி அணைக்குக் கிழக்கும், வட எல்கை சித்ர நதிக்குத் தெற்கும் ஆக இன்னான் கெல்கைக் குட்பட்ட பற்றும் குன்றக்குடிப் பற்றுக்குப் பெருநான்—

குன்றக்குடிப் பரிம்பு; இது தென்காசிப் பற்றுக்கு மேற்கு எல்கை யாக அமைந்துள்ளது; மேலே, குன்றக்குடிப் பற்று என்று ஒருநிலப் கூறப்பட்டுள்ளது; அதனை யடுத்துள்ளது போலும் இக் குன்றக்குடிப் பரிம்பும்.

தென்காசிப் பற்று, கிழக்கே புலியூர்ப் பற்றிலுள்ள காராண்குளம் நீர்நக்கல், அதனை யடுத்த பரிம்பு, அங்குள்ள அகரப்பற்று நஞ்சை நிலம், நாராயண ஸ்ரீ பாதங்கள் மடப்புறம் ஆகியவற்றையும், **தெற்கே** சித்திரா நதியையும், **மேற்கே** குன்றச்குடிப் பரிம்பையும், **வடக்கே** செந்நாய்ப் பொற்றை, குத்துக்கல் ஆகியவைகளையும் எல்கைகளாக உடையது.

இந்த நதிக்குத் தக்ஷிண தீரத்தில் – சித்திரா நதிக்குத் தென் கரை யில்; **ஆழங்கால்:** இது ஓர் ஊரின் பெயர். **பராக்கிரம பாண்டிய சதுர் வேதி மங்கலம்:** இது செங்கோட்டையை யடுத்த விந்தனூருக்குரிய மற்றொரு பெயர்; **பட்டகள் அகரப்பற்று** – பட்டர்கள் வாழும் அக்கிர காரம் போலும். **உடையார் திருக்குற்றாலமுடைய நாயனார்** – சண்பக வனத்துச் சிற்பரர்; **பழந் தேவதானம்** - முன்புள்ள தேவதானம்.

வாயுளான் குடிப்பற்று, கிழக்கே புலியூர் அணை, திருச்சாலைக் குடிப் பற்று, ஆழங்கால் ஆகியவற்றையும், **தெற்கே** திருச்சாலைக் குடிப்பற்று, விந்தனூர், பட்டகள் அகரப்பற்று, குற்றாலம் சிவன் கோயில் தேவ தானம் ஆகியவற்றையும், **மேற்கே** வாயுளான்குடி அணையையும், **வடக்கே** சித்திரா நதியையும் எல்கைகளாக உடையது. **இலத்தூர்:** இது செங் கோட்டையை யடுத்ததோர் ஊர்; **நிலம் ஒன்பதுமா முந்திரிகையின் முன்றுமா முக்காணியும்** – $599\frac{1}{2}$ குழி; மா - $\frac{1}{20}$ வேலி, 100 குழி நிலம்; முந்திரிகை – $\frac{1}{320}$; காணி – $\frac{1}{80}$.

4. கெல்கையாவது – கீழ் எல்கை இடைமலைப் பரிம்புக்கு மேற்கும், தென் எல்கை சித்ர நதிக்கு வடக்கும், மேல் எல்கை செங்கோட்டை பிடாரியார் கோயிலுக்கும் இலத்தூற்குப் போகிற பெருவழிக்குக் கிழக்கு, வட எல்லை கடமர் குளத்துக் குத் தெற்கு ஆக இன்னன் கெல்லைக்குட் பட்ட பற்றில் உடையார் திருக்குற்றலமுடைய நாயனர் தேவதானமான நிலம் ஒன்பதுமா முந்திரிகையின் மூன்றுமா முக்காணியும் நீங்கலாக உள்ள பற்றும், பராக்கிரம பாண்டிய நல்லூர் பற்றுக்குப் பெரு நான் கெல்கையாவது–கீழ் எல்கை இலுப்பைத் தொண்டிற் பெருவழிக்கு மேற்கும், தென் எல்கை இக்குளத்தின் நீர்நக்க லுக்கு வடக்கும், மேல் எல்கை உடையார் திருக்குற்றலமுடை ....ா பழந் தேவதானமான திருச்சாலைக்குடிப் பற்றுக்குக் கிழக்கும், வட எல்கை சித்ர.........தெற்கும் ஆக இன்னன் கெல்கைக்குட்பட்ட பற்றில் இருங்கிண்டி ஸ்ரீ பத்மநாபன் தான இறையிலி நில மிரண்டுமாவும் நீங்கலாக உள்ள பற்று, நல்லூர் பற்றில் வள்ளை மூட்டமும், இக்குளத்தில் நீர் பாயு நிலமாய் வடஆற் பற்றில் நின்றுங் கூட்டின நிலம் மூன்றுமா அரையும் ஆக இப்பற்றுக்குப் பெருநான் கெல்கையாவது–கீழ் எல்கை காடேற்றிப் பற்றுக்குப் மேற்கும், தென் எல்கை வடவூர் பற்றில் செங்குளத்தில் நீர்பாயு நிலத்துக்கும் தஞ்சாவூற் பெருங்காலுக் கும் அனுபோகமழகியான் குளத்தில் நீர்பாயும் பற்றுக்கு வடக்கும் மேல் எல்லை—

---

4 **குன்றகுடிப் பற்று:** இது செங்கோட்டைப் பகுதியிலுள்ளது. கிழக்கே இடைமலைப் பரிம்பையும், தெற்கே சித்திரா நதியையும், மேற்கே செங்கோட்டைப் பிடாரியார் கோயிலுக்கும் இலாத்தூருக்கும் போகிற பெருவழியையும், வடக்கே கடமர் குளத்தையும் எல்லைகளாக உடையது. இவ்வெல்லைக்குட்பட்ட நிலத்துள் ஒன்பதுமா முந்திரிகையின் மூன்று மா முக்காணி நிலம், திருக்குற்றலம் சிவன் கோயில் தேவதானமாகும்

இக்குளத்தின்: இது இலுப்பைத் தொண்டிக்குளம் போலும் **திருச் சாலைக் குடிப்பற்று:** இது திருக்குற்றலம் சிவன் கோயில் தேவதானம்; பராக்கிரம பாண்டிய நல்லூர்ப் பற்றுக்கு மேற்கெல்லையாகவும், வாயு ளான் குடிப் பற்றுக்குக் கிழக்கெல்லையாகவும் உள்ளது. **இருங்கிண்டி;** இது ஓர் ஊரின் பெயர்.

பராக்கிரமபாண்டிய நல்லூர்ப்பற்று: இது பராக்கிரம பாண்டியன் பெயரால் பெற்ற பெயர்; கிழக்கே இலுப்பைத்தொண்டிப் பெருவழியை யும், தெற்கே இலுப்பைத் தொண்டிக் குளத்து நீர் நக்கலையும், மேற்கே திருக்குற்றல முடையார் தேவதானமான திருச்சாலைக்குடிப் பற்றையும், வடக்கே சித்திரா நதியையும் எல்லைகளாக வுடையது. இப்பற்றில் இரண்டுமா நிலம், இருங்கிண்டி ஸ்ரீ பத்மநாபன் தேவதானமாகும்.

5. இக்குளத்தில் நீர் நக்கலுக்கும், தவணை பற்றுக்குங் கிழக்கு, வட எல்கை தஞ்சாவூரில் நின்றும் தவணைக்குப் போகிற பெருவழிக்குத் தெற்கும் ஆக இன்னன் கெல்கைக்குட்பட்ட பற்றும், வடவாரி நாட்டுப் பைம்பொழிற் பற்றில் நல்லாண் பிள்ளைப் பெற்ருளுக்கும் விஸ்வநாதப் பேரேரிக்கும் பெருநான் கெல்கையாவது—கீழ் எல்கை செங்கோட்டைப் பிடாரியார் கோயிலுக்கும் இவ்வூரில் நின்றும் இலத்தூற்குப் போகிற பெரு வழிக்கு மேற்கு, தென் எல்கை ஆற்றுக்கு வடக்கு, மேல் எல்கை பைம் பொழிலில் நின்றும் நல்லூருக்குப் போகிற பெருவழிக்கு முழங்கால் முட்டிப் பாறைக்குங் கிழக்கு, வட எல்கை தேனிடு பொற்றைக்குத் தெற்கு ஆ..................ன் கெல்கைக் குட்பட்ட பற்றும், முப்பதாவது மேஷ ஞாயிற்று இருபத்தெ......திய்தியும் பூர்வ பக்ஷத்து பஞ்சமியும் திங்கட்கிழமையும் பெற்ற புனர் பூசத்து நாள் நாம் முன்பு விட்ட பற்றுக்கள் நீக்கலாக நாளது

---

5. நல்லூர்ப் பற்றும், வடவூர்ப் பற்றும் சேர்ந்த நிலம்: இது கிழக்கே காடேற்றிப் பற்றையும், தெற்கே வடவூர்ப் பற்றில் செங்குளத்து நீர்பாயும் நிலம், தஞ்சாவூர்ப் பெருங்கால், அனுபோக மழகியான் குளத்து நீர்பாயும் பற்று ஆகியவற்றையும், மேற்கே நல்லூர்ப் பற்றுக் குளத்தில் நீர் நக்கல், தவணைப் பற்று ஆகியவற்றையும், வடக்கே தஞ்சா ஆரினின்று தவணைப் பற்றுக்குப் போகிற பெருவழியையும் எல்கை களாக வுடையது.

பைம்பொழில்: இது தென்காசித் தாலுகாவிலுள்ள ஓர் ஊர் இவ் ஆரை யடுத்த பகுதி 'பைம்பொழில் பற்று' எனப்பட்டது இப்பற்றின் ஒரு பகுதி, கிழக்கே செங்கோட்டைப் பிடாரியார் கோயிலுக்கும் இலாத் தூருக்கும் போகிற பெருவழியையும், தெற்கே ஆற்றையும், மேற்கே பைம்பொழிலினின்று நல்லூருக்குப் போகும் வழி, முழங்கால் முட்டிப் பாறை ஆகியவற்றையும், வடக்கே தேனிடு பொற்றையையும் எல்கை களாகவுடையது.

செங்கோட்டைப் பிடாரிமார் கோயில் பெருவழி: இது குன்றக்குடிப் பற்றுக்கு மேல் எல்கையாகவும், பைம்பொழில் பற்றுக்குக் கீழ் எல்கை யாகவும் உள்ளது. செங்கோட்டை திருநெல்வேலிச் சில்லாவில் தென்காசித் தாலுகாவிலுள்ளது.

முப்பதாவது — யாண்டு முப்பதாவது; மேஷ ஞாயிறு – சித்திரை மாதம்; பூர்வ பக்ஷம் - வளர் பிறைக் காலம்; பஞ்சமி–ஐந்தாவது திதி. புணர்பூசத்து நாள் – ஏழாவது நட்சத்திரம்; ப்ராக்கிரம பாண்டியன் ஆட்சியின் முப்பதாவது ஆண்டு, மேஷ ஞாயிறு .... தேதி, பூர்வ பட்சத்துப் பஞ்சமியும், திங்கட்கிழமையும் கூடிய புனர்பூசத்து நாள் என்றபடி.

நாம் முன்பு விட்ட பற்றுக்கள்–தென்காசிப் பற்று, வாயுளான் குடிப் பற்று, குன்றக்குடிப் பற்று, நல்லூர்ப் பற்று, பைம்பொழில் பற்று என் பன. நாளது பூஜெச் செலவுக்கு - மேல்வரும் பூசைச் செலவுக்கு.

பூமெஜச் சிலவுக்கு விட்ட தென்வாரி நாட்டு இராசகுல ராம நல்லூரான புலியூர்ப் பற்றுக்கும், வீரபரண்டிய நல்லூர்ப் பற்றுக்கும் பெருநான் கெல்கையாவது - புலியூர்ப்பற்றுக்குப் பெருநான்கெல்கைக்கீழ் எல்கை திருவெண்காட்டு முதலியார் மடப்புறமான பாட்டக் குறிச்சிப் பற்றுக்கு மேற்கு, தென் எல்கைச் சிற்ருற்றுக்கு வடக்கு, மேல் எல்கை பழந்தேவதானமான

6. தென்காசிப் பற்றுக்குக் கிழக்கு, வட எல்கை ஆயக்குடி பற்றுக்குத் தெற்கு ஆக இன்னுன் கெல்கைக்குட் பட்ட பற்றில் உடையார் திருக்குற்ருலமுடைய நாயனுர் தேவதானமும், உடையார் விக்ரமப் பாண்டீஸ்வரமுடைய நாயனுர் தேவதானமும், நயினுர் திருவிருந்த பெருமாள் திருவிடை யாட்டமும், ஸ்ரீக்ருஷ்ணந் திருவிடையாட்டமும், பராக்ரம பரண்டிய நல்லூரில் நயினுர் திருவேங்கட நாதன் திருவிடையாட்டமும், முகந்தானத்து நாராயண ஸ்ரீ பாதங்கள் மடப்புறமும், அகரப்

மடப்புறம்–மடத்திற்குத் தானமாகக் கொடுக்கப்பட்ட நிலம்; பாட்ட குறிச்சிப் பற்று : இது திருவெண்காட்டு முதலியார் மடத்துக்குத் தானமாகக் கொடுக்கப்பட்ட நிலம்; புலியூர்ப் பற்றுக்குக் கீழ் எல்கையாயுள்ளது.

பழந் தேவதானமான தென்காசிப் பற்று: இது முன்னுள் பராக்கிரம பாண்டியனுல் தென்காசிக் கோயிலுக்குத் தானமாகக் கொடுக்கப்பட்ட நிலம்.

புலியூர்ப்பற்று: இதன் மற்ருெரு பெயர் 'இராசகுல ராமநல்லூர்' என்பது. இது தென்வாரி நாட்டைச் சேர்ந்தது: கிழக்கே பாட்டக் குறிச்சிப் பற்றையும், தெற்கே சிற்ருற்றையும், மேற்கே தென்காசிப் பற்றையும், வடக்கே ஆயக்குடிப் பற்றையும் எல்கைகளாக வுடையது. இதில் திருக்குற்ருலமுடைய நாயனுர் தேவதானம், உடையார் விக்கிரம பாண்டீஸ்வர நாயனுர்தேவதானம், நயினுர் திருவிருந்தப் பெருமாள் திருவிடையாட்டம், ஸ்ரீ கிருஷ்ணன் திருவிடையாட்டம், நாயனுர் திருவேங்கடநாதன் திருவிடையாட்டம், முகந்தானத்து நாராயண ஸ்ரீ பாதங்கள் மடப்புறம், அகரப்பற்று ஆகியவையும் அடங்கி இருந்தன.

தேவதானம் – சைவ, வைணவக் கோயில்களுக்குத் தானமாகக் கொடுக்கப்பட்ட நிலம். திருவிடையாட்டம் - தேவதான மாணியம்; இது வைணவ கோயில்களுக்குக் கொடுக்கப்படுவது போலும். அகரப்பற்று - அந்தணர் வாழுமிடம்.

பற்றும் நீங்கலாக இன்னன் கெல்கைக்குட்பட்ட பற்றும், வீர பாண்ட்ய நல்லூருக்குப் பெருநான் கெல்கையாவது-கீழ் எல்கை தட்டான் குளத்துப் பரிம்புக்கு மேற்கு, தென் எல்கை திருச்சிற்றம்பலத்துக்குக் காலான இராசகுலரா.......காலுக்கும் நயினர் திருவிருந்த பெருமாள் திருவிடையாட்ட மான ஆகவராம .... துக்கும் வடக்கு மேல் எல்கை திருவெண்காட்டு முதலியார் மடப்புறமான பாட்டக் குறிச்சிப் பற்றுக்குக் கிழக்கு, வட எல்கை விந்தனூர்ப் பெருவழிக்குத் தெற்கு ஆக இன்னன கெல்கைக்குட்பட்ட பற்றும் ஆக இப்பற்றுக்களில்ப் பெருநான்கெல்கைக் குட்பட்ட நஞ்செய், புஞ்செய், மாவடை, மரவடை, பட்டடை, கொடித்தோட்டம், செக்கிறை மற்றுமுள்ள ஸமஸ்த ப்ராப்திகளும் முப்பதாவது பசான முதலுக்குத் தேவதானமாக விட்ட அளவுக்கு இம்மாதிரியிலே இவ்வோலே பிடிபடாகக் கொண்டு ஆசந்த்ர தாரவத் இவ்வாலயம் உள்ள அளவும்

வீரபாண்டிய நல்லூர்ப் பற்று: இது கிழக்கே தட்டான் குளத்துப் பரிம்பையும், தெற்கே திருச்சிற்றம்பலத்துக் கால், திருவிருந்தப் பெருமாள் திருவிடையாட்டம் ஆகியவற்றையும், மேற்கே பாட்டக் குறிச்சிப் பற்றையும், வடக்கே விந்தனூர்ப் பெருவழியையும் எல்கைகளாக வுடையது.

நஞ்செய்—நெல் முதலியன விளையும் நல்ல நிலம்; **புஞ்செய்**-நஞ்செய் யல்லாத நிலம்; **மாவடை**—நிலத்திலடங்கிய விலங்குகள்; கிராமத்தில் கால் நடை அடையும் இடம் எனினுமாம். **மரவடை** – நிலத்திலடங்கிய மரங்கள்; மரங்களுக்குரிய வரி எனினுமாம்.

பட்டடை — இறைப்புப் பசானத்தால் பயிரிடப்படும் நிலம்; குடிவாரம் எனினுமாம். **கொடித் தோட்டம்** — படர்கொடித் தோட்டம்; வெற்றிலைத் தோட்டம் என்பாருமுளர். **செக்கிறை** — செக்கு ஆட்டி எண்ணெய் எடுப்பதற் கேற்பட்ட வரி.

ஸமஸ்த ப்ராப்திகளும் – சகல அனுபவங்களும்; **முப்பதாவது பசான முதலுக்கு** – முப்பதாவது ஆண்டு பசான முதலாக. **பாசனம்:** சித்திரை மாதத்தில் அறுவடையாகும் ஒருவகை நெல்; எனவே, இங்குச் சித்திரை மாதம் முதலாக என்றபடி. வருடம் என்பாருமுளர்.

இம்மரியாதியிலே – இந்த முறையில்; **இவ்வோலே பிடிபாடாக** – இந்தப் பத்திரம் ஆதாரமாக; பிடிபாடு – ஆதாரம். **சந்த்ர தாரவம்:** இது சாசனங்களில் வழங்கும் ஒரு தொடர்; சந்திரனும் நட்சத்திரங்களும் உள்ள வரை என்பது இதன் பொருள். **இவ்வாலயம்** – பராக்கிரம பாண்டியனல் கட்டபட்ட தென்காசிப் பெரிய கோயில்.

7. கையாண்டு கல்லினுஞ் செம்பிலும் வெட்டிப் பூசையுந் தாழ்வற நடத்திப் போதவும் பாற்க. இவை கிடாரத்தூருடையான் எழுத்து உ துல்யம்.

---

7. கையாண்டு–அனுவித்துக் கொள்ளும்படி என்க. தாழ்வற – தடையின்றி. நடத்திப் போதவும் பாற்க – நடத்திவரும்படிக் கவனித்துக் கொள்ளவும் என்றபடி.

கிடாரத்தூருடையான்: இவன் அரிகேசரி தேவர் சாசனத்தை எழுதியவன்; இவனுக்குச் சொந்தவூர் கிடாரம் போலும். துல்யம் – சரி; கையொப்பம் எனினுமாம். அரசன் கொடுத்த சாசனமாயின் 'அரசன் கையொப்பம்' என்று பொருள்படும்.

பயிற்சி வினக்கள்

(1) அரிகேசரி பராக்கிர பாண்டிய தேவன் சாசனம் எங்குளது? அது எப்பொழுது ஏற்பட்டது? அதில் கூறப்படும் செய்திகள் யாவை? (2) அரிகேசரி பராக்கிரம பாண்டிய தேவனின் இயற்பெயர், அவனது மெய்க்கீர்த்தியின் மூதற் குறிப்பு முதலியன யாவை? (3) அரிகேசரி வரலாருக அவன் சாசனத்தால் அறியப் படுவனவற்றைத் தொகுத்து எழுதுக. (4) அரிகேசரி பராக்கிரம பாண்டியனது சமயப் பற்றினையும் அவன் செய்த திருப்பணிகளையும் எழுதுக. (5) பராக்கிரம பாண்யன் செயல்களாகத் தென்காசிச் சாசனம் தெரிவிப்பன யாவை? (6) இராசை, செண்பை, விந்தை, வீரை, மருதூர், சண்பகவனம்– இவற்றுள் எவையேனும் நான்கற்கு இக்காலத்து வழங்கும் பெயர்களைப் புலப்படுத்துக. (7) சண்பகவனத்துச் சங்கரர், மூங்கிலுட்புக்கிருந்த சிற்பரர், மருதூரார், விசுவநாதர்—இவர்களுக்கு அரிகேசரி தேவர் செய்த திருத்தொண்டுகள் யாவை? இம்மூர்த்திகள் எழுந்தளிய தலங்களின் பெயர்களை இக்காலத்தில் வழங்குகிறபடி தெரிவிக்க. (8) விந்தை முதலகரமைந்திடத் தியற்றியவன் யாவன்? அவன் புதிதாக இயற்றிய திருப்பணி யாது? (9) மருதூரார்க்கு மண்டப மமைத்தார் யார்? அவர் செய்த வேறிரண்டு திருப்பணிகளை எடுத்தெழுதுக. (10) தென்காசி எங்குளது? அங்கு விசுவநாதர் ஆலயம் எடுத்தது யார்? அவன் அத்தேவர்க் கமைத்த நித்யநியமங்க ளெவை? (11) "இலகு கருணை இரண்டுருவென்ன, அம்மையு மப்பனுமாய் ....வீற்றிருந்தருளிய" — வீற்றிருந்தது யார்? விளக்கம் தருக. (12) தக்ஷிண காசி எது? அங்குச் கோயில் கொண்டுள்ள 'கடவுள் திருநாமம் என்ன? அக்கோயிலுக்குப் பராக்கிரம பாண்டியன் செய்த திருப்பணி யாது? (13) அரிகேசரி தேவன் யார்? அவன் சிறந்த குணங்கள் எவ்வாறு பாராட்டப் பட்டுள்ளன? (14) தென்காசிப் பற்று, பைம்பொழிற் பற்று இவை எந்நாட்டி

லுள்ளன? தென்காசிப் பற்றுக்கும், பராக்கிரம பாண்டியதேவர் பற்றுக்கும் நானான்கு எல்லைகள் எவை? (15) 'நிலம் ஒன்பதுமா முந்திரிகையின் மூன்றுமா முக்காணி' — இதனை இக்கால அளவின்படி இவ்வளவென்பதை விளக்குக. (16) புலியூருக்கு மற்றொரு பெயர் யாது? அது எந்நாட்டிலுள்ளது? அதில் முன்பு எத்தெந்தக் கோயில்களுக்கு நிலமிருந்தது? (17) 'இவ்வோலை பிடிபாடாக' என்பதால் யாது விளங்குகிறது (18) அரிகேசரி தேவர் சாசனம் எழுதியவர் யார்? அதன் துவக்க மங்கலச் சொல்லும், முடிவுச் சொல்லும் எவை? அவற்றின் பொருள்கள் யாவை? (19) விசுவநாதசுவாமி கோயிலில் பொறிக்கப்பட்ட சாசனம் யார் காலத்தில் ஏற்பட்டது? அவர் செய்த திருப்பணிகள் யாவை? (20) உங்கள் பாடப் பகுதியாக அமைந்துள்ள சாசனங்களில் காணப்படும் பாண்டிய அரசர் யாவர்? அவர்களைக் கால வரையறையைப் படுத்தி எழுதுக. (21) பொருள் தருக:- தென்கலை, வானவாரி, சின்னம், அகரம், அத்தசாமம். வற்கடம், நைமித்திகம், அபிநவமாக, இடை நாழிகை, ஸோபாநம், திருவுடம்பு, ஆவரணம், நித்திய நியமம், தேவதானம், பரிப்பு, மடப்புறம். பொற்றை, தக்ஷிண தீரம், நீர் நக்கல், இறையிலி நிலம், மா, பூர்வபக்ஷம், மாவடை, மரவடை, பட்டடை, கொடித்தோட்டம், செக்கிறை, பசானம், பிடிபாடு, துல்யம். (22) குறிப்பு வரைக:- உலக முழுதுடையார், தென்வாரி நாடு, தக்ஷிணகாசி, திருப்பரி வட்டம், பற்று, அகரப்பற்று, நாராயண ஸ்ரீ பாதங்கள், மடப்புறம், செங்கோட்டைப் பிடாரியார் கோயில், இருங்கிண்டி ஸ்ரீ பத்மநபன், தஞ்சாவூர் பெருங்கால், மேஷஞாயிறு, திருவெண்காட்டு முதலியார் மடப்புறம். (23) விளக்கி எழுதுக:— இருபத்தெட்டாவதின் எதிராவது, உபாநாதி ஸ்தூபி பரிய்யந்தம், முன்னாள் இரண்டாவதின் எதிர் இருபத்து மூன்றாவது முதலுக்கு, பட்டகள் கரப்பற்று, நிலம் மூன்றுமா அரை, ஸமஸ்த ப்ராப்திகள், ஆசந்த்ர தாரவத். (24) நிலங்களுக்கு எல்லை கூறுமிடத்துப் பொதுவாக எதனை எல்லைகளாகக் கூறுவது பண்டை வழக்கம்? அரிகேசரி தேவர் சாசனத்திலிருந்து ஆதாரந் தருக.

28. அரிகேசரி பராக்கிரமபாண்டியன் சாசனம்-II

முன்னுரை

அரிகேசரி பராக்கிரம பாண்டியன் இரண்டாவது சாசனம் என்பது, அரிகேசரி பராக்கிரம பாண்டியன் † தென்காசியில் செய்த திருப்பணிகளைப் பற்றிய சாசனமாகும். இச் சாசனம் அவன் ஆட்சியின் இருபத்தைந்தாவது ஆண்டு ஏற்பட்டதாகத் தெரிகிறது. இது செய்யுள் வடிவில் அமைந்தது; தென்காசி விசுவநாதசுவாமி கோயிலுக்கு முன்னர் இடிந்த நிலையிலுள்ள கோபுரத்தின் சுவர்களில் காணப்படுகிறது. தமிழ் மொழியில் கிரந்த எழுத்துக்கள் கலந்து எழுதப்பட்டது; அறுபத்து மூன்று வரிகளையுடையது.

இச் சாசனம் "சுபமஸ்து உ" என்று தொடங்கி, பதினறு செய்யுட்களைக் கொண்டுள்ளது. அவற்றுள் ஆசிரிய விருத்தம் நான்கு; கட்டளைக்கலித்துறை பதினென்று; வெண்பா ஒன்று. முதல் செய்யுளில் கோயில் கட்டத் தொடங்கிய நாள் குறிக்கப்பட்டுள்ளது. இரண்டாவது செய்யுளில், கோயில் கருப்பகிருகத்தில் இறைவன் திருமேனியை எழுந்தருளுவித்த நாள் குறிக்கப்பட்டுள்ளது. 3, 4, ஆம் செய்யுட்களில் கோயில் கோபுரம் கட்டத்தொடங்கிய நாளும், 5, 6, 7 ஆம் செய்யுட்களில், அரிகேசரி பராக்கிரம பாண்டியனும், பிற அரசிளங் குமரரும் கோயிலைப் பாதுகாக்கவும் சிறப்பிக்கவும் கோயிலதிகாரிகளை வேண்டிக்கொண்டமையும், 8 ஆம் செய்யுளில் கோபுரம் கட்டத் தொடங்கி கல் வரிசை முடிந்த ஆறும் ஆண்டில் அரிகேசரி பராக்கிரம பாண்டியன் இறந்தமையும், 9 முதல் 12 செய்யுட்களில், மீண்டும் கோயில் அதிகாரிகளை வேண்டிக்கொண்டமையும், 13ஆம் செய்யுளில் அரிகேசரி பராக்கிரம பாண்டியன் இறந்த நாளும், 14ஆம் செய்யுளில், அவன் இறந்தமை குறித்த கையறு நிலையும், 15, 16ஆம் செய்யுட்களில், அரிகேசரி பராக்கிரமபாண்டியன் புகழும் கூறப்பட்டுள்ளன.

அரிகேசரி பராக்கிரம பாண்டியன் சக ஆண்டு 1344 முதல் 1385 வரை ஆண்டான்; அதாவது, கி. பி. 1422 முதல் 1463ஆம் ஆண்டு வரை ஆண்டான். இச்சாசனம் சகம் 1368 ஆம ஆண்டுக்கு மேலாக ஏற்பட்ட தெனவே, இதன் காலம் கி. பி. 1447 ஆம் ஆண்டு என்னலாம்.

---

* T. A. S., Vol. I, No. III, p p. 95–98.

† இவனுடைய வரலாற்றினை முந்திய சாசனக் குறிப்பில் காண்க.

சாசனம்

(1) சுபமஸ்து உ

(எண்சீர் கழிநெடிலாசிரிய விருத்தம்)

அன்பினுடன் சகாத்த மாயிரத்து முன்னூற்
 றறுபத் (2)தெட் டதன்மேல்வைய் காசித் திங்கள்
மன்தியதி யீரைந்திற் பூர் (3) வ பக்க
 மருவுதெச மியில்வெள்ளி வாரந் தன்னில்
மின்திகழுத் திரநாள்(4)மீ னத்தில் வாகை
 வேலரிகேசரிபராக்கிறம மகீபன்
தென்திசையிற் கா(5)சிநகர்க் கோயில்காணச்
 சென்று நின்று கர்ஷணைதான் செய்வித் (6)தானே உ 1
அடைவுதிகழ் சகாத்த மாயிரத்து முன்னூற்
 றறுபத்(7)தொன் பதின்மேற்செல் மிதுன ஞாயற்
றிடைமருவு தியதி பதினெ—
 ... ...
(8) விற்சனி வார மதனில் மீனத்தில் மன
 ... ...(9)... ... ...(10)
(உ)டையவரைத் தென்காசிச் சிவலயத்தி
 னுள்ளமைத்துத் தெள்ளமுத மூட்டி (11 னானே உ. 2

குறிப்புரை.

சுபமஸ்து உ: இது இச்சாசனத்தின் தொடக்கத்தில் அமைந்த மங்கலமொழி; சுபமஸ்து - மங்களம் உண்டாக; உ - உபயம்; நன்மை. **சகாத்த மாயிரத்து முன்னூற்றறுபத்தெட்டதன் மேல்:** சக ஆண்டு 1368கு மேலாக; இது கி. பி. (1368 + 1 + 78) 1447 ஆம் ஆண்டுக்குச் சமமாகும். சகம் என்பது, சாலிவாகன சகாப்தம் எனவும் சொல்லப் படும். அது கி. பி. 78ஆம் ஆண்டில் தொடங்குவது **வைய்காசித் திங்கள்** — வைகாசி மாதம்; **பூர்வபக்கம்** - வளர்பிறை; **தெசமி** — பத்தாம திதி; **வெள்ளி வாரம்** - வேள்ளிக்கிழமை; **உத்திர நாள்** — உத்திர நட்சத்திரத்தன்று; **வாகை** - வெற்றி; **பராக்கிறம மகிபன்** - பராக்கிரம பாண்டியன். **காசி நகர்** - தென்காசி என்னும் ஊர்; **கோயில் காணுதல்** -கோயில் கட்டுதல்; **கர்ஷணை** - தொடக்கத்திற்கு அடையாளமாக ஒரு தூணை நடுதலாகிய நிகழ்ச்சி; காழ் — தூண். இதனால் அரிகேசரி பராக்கிரம பாண்டியன் தென்காசியில் கோயில் கட்டுவதற்குச் சகம் 1369 (கி. பி. 1447) ஆம் ஆண்டு வைகாசித் திங்கள் 10ஆம் நாள் பூர்வபட்சம் தசமி திதி வெள்ளிக்கிழமை உத்தர நட்சத்திரத்தில் தொடக்க விழா நிகழ்த்தினன் என்று தெரிகிறது.

2. **அடைவுதிகழ்** - முறையாக வரும்; **சகாத்தம்** — சக ஆண்டு; **மிதுனஞாயிறு** - ஆனிமாதம்: **தியதி** - நாள்; **சனிவாரம்** - சனிக்கிழமை; **மீனம்**-நாள், நட்சத்திரம்; **(உ)டையவர்** - இறைவன்; இங்குத் தென்காசி விசுவநாதர் திருவுருவத்தைக் குறிக்கும்; **ஆலயத்னுள்ளமைத்தல்**- எழுந்தருளச் செய்தல்; **தெள்ளமுது** - நிவேதன உணவு; பராக்கிரம பாண்டி

(12) பன்னு கலியுக நாலாயிரத் தைஞ் நூற்றைம்
 பத்தெட்டின் மேலெவரும் பணிந்து போற்றச்
செந்நெல்வயற் றென்காசி நகரில் நற்காத்
 திகைத் திங்கட் டியதியைந்திற் செம்பொன் வார
(14) மன்னிய மார்கழி நாளில் மதுரைவேந்தன்
 வடிவெழு தொண்ணூத பராக்கிறம மகீபன்
சொன்னவரை போல் (15) திருக் கோபுரமும் காணத்
 துடியிடை யாயுபான முதல் துடங்கி ஞனே
ஏராருஞ் சகா(16)த்த மாயிரத்து முன்னூற் 3
 றெழுபத் தொன்பதின்மேல் காத்திகை மாதத்திற்
சீராரு(17)தியதியைந்தில் குருவார ரத்திற்
 சிங்க முகுற்த்தத்தில் மிருகசீ ரிஷந்(18)தன்னி
 ... ...
 லரனருளால் வழுதி பராக்கிறம மகீபன்
கூரா(19)பானமுதல் ... ...
 ... ... கோட்டி ஞனே உ. 4

யன் சகம் 1370 (கி. பி. 1448)ஆம் ஆண்டு ஆனித்திங்கள் 17ஆம் நாள் சனிக்கிழமை காசி விசுவநாதன் திருவுருவத்தைக் கோயிலில் எழுந்தருளச் செய்து. பூசை முதலியன நடத்தினன் என்பது. இப்பாடலில் திதி நாள் முதலியன பற்றிய வரிகள் சிதைந்துள்ளன. இதனால் இக் கோவில் கி. பி. 1447 வைகாசியில் கட்டத்தொடங்கி 1448 ஆனியில் கட்டி முடிந்ததென்பது பொருந்தாது; அந்நாளில் கோயில் கருப்ப கிருகத்தைக் கட்டுதற்குரிய நிகழ்ச்சி நடந்ததென்னலாம். ஏனெனில் தென்காசிக்கோயில் கட்டுதற்குப் பதினேழு ஆண்டுகள் சென்றன என்று இக்கால வரலாற்றாசிரியர் கூறுகின்றனர்.

3. கலியுகம் – கலி ஆண்டு: இது சக ஆண்டிலும் 3179 ஆண்டுகள் மிக்கும், கி. பி. ஆண்டினைவிட 3101 ஆண்டுகள் மிக்கும் எண்ணப்பட்டு வந்தது. எனவே, கலியுகம் 4558 மேல் என்பது சகம் 1379 எனவும், கி பி. 1457 எனவும் சொல்லப்படும். கார்த்திகைத் திங்கள்- கார்த்திகை மாதம்; தியதி ஐந்து - ஐந்தாம் நாள் ; செம்பொன் வாரம் – வியாழக்கிழமை; மார்கழி நாள் – மிருக சீரிட நட்சத்திரம்; மதுரை வேந்தன் – மதுரையை யாண்ட மன்னனான பராக்கிரம பாண்டியன்; சொன்னவரைபோல் – சொர்ன வரையைப் போல, மேரு மலையைப்போல; காண – கட்ட; துடியிடையாய்: இது மகடூஉ முன்னிலை; உபானம் – அடியிடம்; அஸ்திவாரக்கல். எனவே பராக்கிரம பாண்டியன் தென்காசிக்கோயில் கோபுரத்தை கி. பி. 1457ஆம் ஆண்டு கட்டத் தொடங்கினன் என்பது.

4. இப்பாடல் முந்திய பாடலில் கலியுக ஆண்டாகக் கூறியவற்றைச் சக ஆண்டு முறையில் கூறுகின்றது. சகாத்தம் 1379ன் மேல் என்பது கலியுக ஆண்டு 4558க்குச் சரி. கார்த்திகை மாதம்–கார்த்திகைத் திங்கள்; குருவாரம் – வியாழக்கிழமை; இதனை

(20) சேலே றியவயற் றென்காசி யாலையந் தெய்வசெய
லாலே சமைந்த திங்கென் (21) செயலல்ல வதனையின்ன
மேலே விரிவுசெய் தேபுரப் பாரடி வீழ்ந்தவர் (22) தம்
பாலே வல்செய்து பணிவன் பராக்கிறம பாண்டியனே உ. 5

மனத்தால் (23) வகுக்கவு மெட்டாத கோயில் வகுக்கமுன்னின்
றெனைத்தான் பணிகொண்ட (24 நாதன்றென் காசியை
யென்று மண்மேல்
நினைத்தா தரஞ்செய் துதங்கா வல் (25) பூண்ட நிருபர்பதந்
தனைத்தாழ்ந் திறைஞ்சித் தலைமீதி யானுந் தரித்தனனே உ 6

(26) பூந்தண் பொழில்புடை சூழுந்தென் காசியைப் பூதலத்திற்
தாந்தங் கிளைவுட (27) னேபுரப் பார்கள்செந் தாமரையாள்
காந்தன் பராக்கிறமக் கைய்த (28) வன் மான கவசன்கொற்கை
வேந்தன் பணிபவ ராகியெந் நாளும் விளங்குவரே உ. 7

காண்டகு சீர்புனை தென்காசிக் கோபுரக் கற்பணியா
றுண்டில் முடி (30) த்துக் கயிலைசென் றுனகி லேசர்பதம்
பூண்டுறை சிந்தை யரிகே சரிவிந்தை (31 ப் போர்கடந்த
பாண்டியன் பொன்னின் பெருமாள் பராக்கிறம பாண்டியனே உ. 8

முந்திய பாடலில் 'செம்பொன் வாரம்' என்றார். சிங்க முகூர்த்தம் - சிங்க ராசி; முந்திய பாடலில் இராசி (ஓரை) கூறப்படவில்லை; மிருக சீரிஷம் -மிருக சீரிட நாள்: இது முந்திய பாடலில் 'மார்கழி நாள்' என்று கூறப் பட்டிருத்தல் காண்க. அரனருளால் - சிவபெருமான் அருளால்; வழுதி - பாண்டியன்; மகிபன் - மன்னன்; கூர் உபானம் – ஆழமான அடிப் படைக் கல்; கோட்டினுன் – கட்டத்தொடங்கினுன்.

5. சேலேறிய வயல் – மீன்கள் தவழும் வயல்; சேல் - கெண்டை மீன்; சமைந்தது – கட்டப்பட்டது; விரிவுசெய்து – விரிவாகக் கட்டி; புரப்பார் - பாதுகாப்பார்; ஏவல்செய்து – பணிசெய்து.

6. மனத்தால் வகுக்கவும் - மனத்தால் நினைக்கவும்; வகுக்க -கட்ட; பணிகொண்ட – ஏவல்கொண்ட; நாதன் – தென்காசி விசுவநாதன்; ஆதரம் செய்து - பாதுகாத்து; நிருபர் - மன்னர்; தலைமீதியானும் தரித் தனனே – தலையால் வணங்கினேன்.

7. பொழில் – சோலை; புடை – பக்கம்; பூதலம் – உலகம்; புரப் பார் - காப்பார்; செந்தாமரையாள் காந்தன் - திருமகளுக்குக் கணவன், திருமால். திருமால், காக்கும் கடவுளாதலின், அவர் பராக்கிரம பாண்டிய னுக்கு உவமையாகக் கூறப்பட்டார்: திருமகள் என்பது இங்கு நாட் டிற்கு உவமை. இப்பாடலில் பராக்கிரம பாண்டியன், செந்தாமரை யாள் காந்தன் எனவும், பராக்கிறம கைய்தவன் எனவும், மான கவசன் எனவும்; கொற்கை வேந்தன் எனவும் குறிக்கப்பட்டிருத்தல் குறிப்பிடத் தக்கது.

8. சீர்புனை - சிறப்புக்கள் நிறைந்த; கற்பணி – கல்லால் கட்டப் பட்ட கோபுரம்: ஆறு ஆண்டில் முடித்து கயிலை சென்றுன் – கற்கோபு

(32) ஆராயினு மிந்தத் தென்காசி மேவும்பொன் னுலயத்து
வாரா(33) தோர்குற்றம் வந்தாலப் போதங்கு வந்ததனை
நேராக வே(34)யொழித் துப்புரப் பார்களை நீதியுடன்
பாரா ரறியப் பணிந்தேன்(35)ப ராக்கிறம பாண்டியனே உ. 9

அரிகே சரிமன் பராக்கி றமமா றனருளால்
(36)வரிசேர் பொழிலணி தென்காசிக் கோயில்வ குத்துவலம்
புரிசேர் கடற்புவி (37)போற்றவைத் தேனன்பு பூண்டிதனைத்
திரிசேர் விளக்கெனக் காப்பார்பொற் (38)பாதமென் சென்னி
யதே உ. 10

சாத்திரம் பார்த்திங்கி யான்கண்ட பூசை(39)கள் தாம்நடா த்தி
யேத்தியன் பால்விசு வநாதன்பொற் கோயிலெ(40)ன் றும் புரக்கப்
பார்த்திபன் கொற்கை பராக்கிறம மாறன் பரிவு(41) டனங்
கோத்திரந் தன்னிலுள் ளார்க்கு படைக்கலங் கூறினனே உ. 11

ரம் கி பி. 1458ல் கட்டத்தொடங்கி ஆறு ஆண்டுகளுக்குப் பின் இறந்தான். எனவே அவன் கி.பி. 1463ஆம் ஆண்டு இறந்தான் என்பது போதரும். இப்பாடலிலும் அவன் ‘அகிலேசர் பதம் பூண்டு உறை சிந்தை அரிகேசரி’ எனவும், ‘விந்தைப்போர் கடந்த பாண்டியன்’ எனவும், ‘பொன்னின் பெருமாள்’ எனவும் சிறப்பித்துக் கூறப்பட்டுள்ளான். அகிலேசர் – சிவபெருமான்; விந்தைப்போர் – விந்தனூரில் நடந்த போர்; பொன்னின் பெருமாள் - திருமால்.

9. ஆராயினும் - எவராலும்; மேவும் - பொருந்திய; பொன்னுலயம் - அழகிய கோயில்; பாரார் - உலகத்தார்; இக்கோயிலுக்கு எத்தகையோரால் கேடு வரினும் அதைத் தீர்த்து வைப்பவர்களை யான் பணிந்தேன் என்பது.

10. அரிகேசரிமன் - அரிகேசரி மன்னனுன; மாறன் - பாண்டியன்; வரிசேர்பொழில் - வண்டுகள் சூழ்ந்த சோலை; வகுத்து -கட்டி; வலம் புரிசேர் கடல் - வலமாகச் சூழ்ந்துள்ள கடல்; கடல்புவி - கடலால் சூழப்பெற்ற உலகத்தில் உள்ள மக்கள் கூட்டம்; திரிசேர் விளக்கு - எரியும் விளக்கு; சென்னி - தலை; இங்குத் தலையால் வணங்குதலைக் குறித்தது.

11. சாத்திரம் பார்த்து - சாத்திர முறைப்படி; கண்ட - செய்து வந்த; விசுவநாதன் - தென்காசிக்கோயில் இறைவன் பெயர்; புரக்க - காத்து வர; பார்த்திபன் பராக்கிறம மாறன் – அரிகேசரி பராக்கிரம பாண்டியன்; பரிவு - தயவு, அன்பு; கோத்திரம் தன்னிலுள்ளார் – தன் குலத்தோர்; படைக்கலம் - இது அடைக்கலம் என்றிருத்தல் வேண்டும்; கையடையாகக் கொடுத்தல் இதனுல் பராக்கிரம பாண்டியன் தென்

(42)மென்காசை மாமல ரன்னமெய் யோற்கும் விரிஞ்சனுக்கு(43)ம்
வன்காசு தீர்த்திடும் விச்சுவ நாதன் மகிழ்ந்திருக்கப்
(44)பொன்காசை மெய்யென்று தோட்ட கைக்குமிப் பூதல(45)த்து
தென்காசி கண்ட பெருமான் பராக்கிறம தென்னவனே உ. 12

(46)ஏரார் சகாத்தமுந் நூற்றுட னுயிரத் தெண்பத்தஞ்சிற்
சீராரு(47)மார்கழி சித்திரை நாளிற் சிறந்துகுற்றம்
வாராத பூரணை யினிற்பராக் கிறம மாறனெ ....
... ... (48)......... ரா ... ... ரகயிலா யந்தான்
... ...கண்டனனே உ. 13

(49)கோதற்ற பத்தி யறுபத்து மூவர்தங் கூட்டத்திலோ
தீதற்ற வெள்ளிச் சிலம்(50)பகத் தோசெம்பொனம்பலத்தோ
வேதத்தி லோசிவ லோகத்தி லோ(51)விசுவ நாதனிரு
பாதத்தி லோசென்று புக்கான் பராக்கிறம பாண்டியனே உ. 14

காசி விசுவநாதன் கோயிலைத் தனக்குப் பின் புரந்து வருதற்கு அதனைத் தன் குலத்தவர்க்குக் கையடையாகத் தந்தான் என்பது.

12. காசைமாமலர் - காசை என்னும் மரத்தின் நீலநிற மலர்; நீலமலர் மொய்யோன் என்றது, திருமாலைக் குறிக்கும்; விரிஞ்சயன் என்றது, இந்திரனைக் குறிக்கும். இவர்கள் இருவர்க்கும் காசிவிசுவநாதன் குற்றமகற்றி அருள்புரிந்தார் என்பது புராண வரலாறு. வன்காசு—தீக்குற்றம்; பொன் காசு – பொற்காசு, பணம்; மெய்யென்று – நிலையான பொருள் என்று எண்ணி; தொட்ட கைக்குமிப் பூதலத்து: இது 'தேடிப் புதைக்குமிப் பூதலத்து' என்றிருத்தல் வேண்டுமென்பர். தென்காசி கண்ட பெருமான் - தென்காசியையும் அதன் கோயிலையும் கட்டிய மன்னன். செல்வத்தை நிலையானபொருள் என்று கருதிப் புதைத்து வைக்கும் இந்த உலகத்தில், பராக்கிரமபாண்டியன் தன் செல்வத்தையெல்லாம் தந்து தென்காசிக் கோயிலைக் கட்டினன் என்பது.

13. ஏர் – அழகு; ஆர் – நிறைதல்; சகாத்தம் முந்நூற்றுடனுயிரத் தெண்பத்தஞ்சில் – சக ஆண்டு 1385ல்; மார்கழி – மார்கழித் திங்கள்; சித்திரை நாள் – சித்திரை நட்சத்திரம்; கயிலாயந்தான் ... ... கண்டனனே - சிவனடி யடைந்தான், இறந்தான்; கயிலாயம் - சிவபதம்; இதனல் பராக்கிரம பாண்டியன் சகம் 1385 (கி. பி. 1463)ஆம் ஆண்டு மார்கழித் திங்கள் சித்திரை நாள் பௌரணமி தினத்தன்று சிவபத மடைந்தான் என்று தெரிகிறது.

14. கோதற்ற - குற்றமில்லாத, தூய மனத்தினையுடைய; பத்தி – பத்தியுடைய; அறுபத்து மூவர் கூட்டம் –சிவனடியார் அறுபத்து மூவர்; வெள்ளிச் சிலம்பகம் - வெள்ளி மலையகம், கயிலாயம்; செம்பொனம்பலம்- பொன்னம்பலம், இறைவன் நடமாடுமிடம்; புக்கான்—அடைந்தான். இச் செய்யுள் கையறுநிலை.

அரிகேசரி பராக்கிரமபாண்டியன் சாசனம்-II

[நேரிசை வெண்பா]

(52)ஓங்கு நிலையொன்ப துற்றதிருக் கோபுரமும்
(53)பாங்கு பதினொன் று பயில்தூணும் — தேங்குபு(54)கழ்
மன்னர் பெருமான் வழுதிகண்ட தென்(55)காசி
தன்னிலன் றியுண்டோ தவத்து உ. 15

[கட்டளைக் கலித்துறை]

(56)அணிகொண்ட விந்த வணங்குமோன் றேயடி யேற்குனக்கு
மணிகொண்ட வாசல் பணியும்ஒன் றெபகை மன்னரையும்
பிணிகொண்ட காரையு முன்னீரை யும்பெரும் பூதத்தையும்
பணிகொண்ட செண்பகத் தென்ன பராக்கிறம பாண்டியனே உ. 16

---

15. ஓங்கு நிலை - *மேலடுக்கு;* பாங்கு — *பக்கத்தில்;* பதினொன்று பயில் தூணும் - *பதினேரு தூண்கள் நடப்பட்ட மண்டபமும்;* தேங்கு புகழ் - *நிறைந்த புகழ்;* மன்னர்பெருமான் வழுதி — *பராக்கிரம பாண்டியன்;* கண்ட — *கட்டிய;* த வ த் து — *சலத்து, உலகத்து;* இது *தென்காசியின் சிறப்பைக் கூறுகின்றது.*

16. அணிகொண்ட - *அழகிய:* விந்த வணங்கு - *வெற்றித் தெய்வமாகிய கொற்றவை, துர்க்கை;* அடியேன் *என்றது, இப்பாடலைப் பாடிய புலவரைச் சுட்டும்;* வாசல் பணி — *கோயில் வாயிலில் செய்யும் சேவை; இதனால் தென்காசியில் பராக்கிரம பாண்டியன் கட்டிய கோயில் அவனுக்கு மட்டுமன்றி, எல்லார்க்கும் பொதுவுடைமை என்பது போதரும், முந்திய பாடல்களில், அக்கோயிலைப் புரக்கும் பணியைத் தன் குலத்தவர்க்கு மட்டுமன்றி எல்லாருடைய கடமையுமாகு மென்று குறித்துள்ளமையும் இதனை வலியுறுத்தும். பின் இரண்டடிகளில் பராக்கிரமபாண்டியன் பகை மன்னரை வென்றது, மேகம், கடல், பஞ்சபூத முதலியவைகளைப் பணிகொண்டது ஆகியவற்றைக் கூறி இதனால், அவன் செயலோடு அவன் முன்னோருடைய செயல்களையும் அவன் மேலேற்றிக் கூறி யிருத்தல் குறிப்பிடத் தக்கது.*

பிணிகொள்ளல் — *வெல்லுதல்;* கார் - *மேகம்;* முன்னீர் — *கடல்;* பெரும் பூதம் - *நிலம், நீர், கனல், வளி, வெளி என்னும் பஞ்சபூதங்கள்.* பணிகொள்ளல்—*அடிமை கொள்ளல்;* செண்பகத் தென்ன — *செண்பகன் என்னும் பெயருடைய பாண்டியனே; பாண்டியமன்னர் மேகம் முதலியவற்றைப் பணிகொண்ட வரலாறுகளைத் திருவிளையாடல் புராணத்திலும் நாநூற்றிலும் காண்க.*

பயிற்சி வினுக்கள்

1. அரிகேசரி பராக்கிரமபாண்டியன் இரண்டாவது சாசனம் எங்குக் காணப்படுகிறது? அதன் காலம் எது? அதற்கும் பிற சாசனங் களுக்குமுள்ள வேறுபாடு யாது?

2. தென்காசி விசுவநாதசுவாமி கோயில் கோபுரத்தில் காணம் படும் சாசனம் யாருடையது? அதில் கூறப்படும் செய்திகள் யாவை?

3. அரிகேசரி பராக்கிரமபாண்டியன் கடவுள் பத்தியையும், தமி ழார்வத்தையும் சான்றுகள் கட்டி விளக்குக.

4. பராக்கிரமபாண்டியன் தென்காசியில் கோயில் கட்டத் தொடங் கிய நாள், கட்டி முடித்த நாள்,இவை எங்ஙனம் குறிக்கப் பெற்றுள்ளன? இக்கால முறையில் அவை எவ்வாறு குறிககப்படும்?

5. சகாத்தம், கலியுகம் ஆண்டுகளை விளக்கி, அவை இக்காலத்து ஆண்டிற்குப் பொருந்துமாற்றையும் விளக்குக.

6. சகாத்தம், பூருவபக்கம், தெசமி, வாரம், மீனம், கர்ஷணை மிதுன ஞாயிறு, தெள்ளமுதம், கலியுகம், செம்பொன வாரம், மார்கழி நாள், சொன்னவரை, உபானம், குருவாரம், முகூர்த்தம்,வழுதி, ஆதரம், நிருபர், சித்திரைநாள், பூரணை, விந்தவணங்கு, கார், முன்னீர், பூதம்—பொருள் தருக.

7. சொன்னவரைபோல், திரிசேர் விளக்கென, மென்காசை மாமலரன்ன—எவற்றிற்கு உவமைகளாகும்? விளக்கி எழுதுக.

8. பராக்கிரமபாண்டியன் சிறப்பை விளக்கும் தொடர்கள் ஐந்தைக் குறிப்பிட்டு விளக்குக?

9. பராக்கிரமபாண்டியன் தென்காசியில் செய்த திருப்பணிகள் யாவை? அவைகளைப் பாதுகாத்ததற்கு அவன் வேண்டு மாற்றைக் குறிப்பிடுக.

10. தென்காசிக் கோயில் கோபுரம் கட்டத் தொடங்கிய நாள் எவ் வெவ்வாறு கூறப்பெற்றுள்ளது? அதனை இக்கால முறையில் குறிப் பிடுக.

11. அரிகேசரி பராக்கிரமபாண்டியன் எப்பொழுது இறந்தான்? அவனுக்குக் கையறுநிலையாகப் பாடிய பாடலின் பொருளைக் குறிப்பிடுக.

12. இச்சாசனத்தில் தென்காசியின் சிறப்பு, பராக்கிரமபாண்டி யன் பெருமை முதலியவை எங்ஙனம் கூறப் பெற்றுள்ளன?

29. குலசேகரதேவ பராக்கிரம பாண்டியன் சாசனம் *

முன்னுரை

குலசேகரதேவ பராக்கிரம பாண்டியன் சாசனம் என்பது, குலசேகர தேவர் என்னும் பராக்கிரமபாண்டியன் செய்த தானம் பற்றிய சாசனமாகும். இச்சாசனம் இவனது ஆட்சியின் மூன்ருவது ஆண்டில் ஏற்பட்டது. இது தென்காசித் தாலூகாவை யடுத்த செங்கோட்டை என்னும் தலத்திலுள்ள சிவன்கோயில் நடுவிடத்துக் கருப்ப கிருகத்தின் தெற்குச் சுவரில் காணப்படுகிறது. தமிழ்மொழியில் கிரந்த எழுத்துக்கள் கலந்து எழுதப்பட்டது; இருபத்து நான்கு வரிகளை யுடையது.

இச்சாசனத்தின் துவக்கத்தில் குலசேகர தேவ பராக்கிரம பாண்டியன் வரலாறும், அவனுக்கு வழங்கிய சிறப்புப் பெயர்களும் குறிக்கப்பட்டுள்ளன. பின்னர், அவன் சில நிலங்களைச் செங்கோட்டை சிவன் கோயிலுக்குத் தானமாகக் கொடுத்த செய்தி கூறப்படுகிறது. அது சக ஆண்டு 1467க்குச் சமமான விசுவாவசு ஆண்டு ஐப்பசிமாதம் அமரபட்சத்து ஏகாதசி கூடிய வெள்ளிக்கிழமையன்று நடை பெற்றதென்று குறித்துள்ளமை குறிப்பிடத் தக்கது. இதனுல் இவன் ஆட்சியின் தொடக்கம் சக ஆண்டு 1464; அஃதாவது, கி. பி. 1542 ஆம் ஆண்டு என்று அறிய முடிகிறது.

இச்சாசனம் குலசேகரதேவபராக்கிரம பாண்டியன் ஆட்சியின் மூன்ருவது ஆண்டான சக ஆண்டு 1467 ஆம் ஆண்டு ஏற்பட்டது; எனவே, இதன் காலம் கி. பி. 1545 ஆம் ஆண்டு என்னலாம்.

---

* T. A. S., Vol. No. VI, pp. 103–104.

† இவன் அபிராமபராக்கிரம பாண்டியனுடைய முதற்புதல்வன். இவனுடைய இயற்பெயர், 'குலசேகரபாண்டியன்' என்பது. 'இவன் சடையவர்மன் குலசேகரதேவ பராக்கிரம பாண்டியன்' என்று அழைக்கப்பட்டான். சடிலவர்மன், திரிபுவனச் சக்கரவர்த்தி, கோநேரின்மை கொண்டான் என்னும் சிறப்புப்பெயர்களும் இவனுக்கு உண்டு. இவன் சிவபக்தி யுள்ளவன். இவனுடைய கல்வெட்டுக்கள் கி. பி. 1543 முதல் 1552ஆம் ஆண்டுவரை காணப்படுகின்றன.

இவன் வரதுங்கராம பாண்டியனுக்குத் தந்தையும் அதி வீரராம பாண்டியனுக்குச் சிறிய தாதையுமாவான் என்று சொல்லப்படுகிறது. இவனைப்பற்றிய பிற செய்திகள் ஒன்றும் தெரியவில்லை.

சாசனம்

1. சுபமஸ்து ஸ்வஸ்திஸ்ரீ புவநெக வீர
2. சந்த்ரகுல ப்ரதீப கோ ஜடிலவர்ம்ம த்ரி
3. புவநச் சக்ரவர்த்தி கொநேரின்மை கொண்டான்
4. பெருமாள் அபிராம பராக்கிரம பாண்ய தேவர் நந்தந ரான
5. ஸ்ரீ பெருமான் குலசேகர தேவரான பராக்ரம பாண்ட்ய
6. தேவற்கு யாண்டு சகாப்தம் ௲சளசுயஎல் மூன்றுவது விஸ்வாவ
7. ஸுவர்ஷம் அற்பசி மாஸம் முப்பதாந் தியதியும் அபரப
8. க்ஷத்து ஏகாதசியும் சுக்ரவாரமும் வைத்ருதியோகமு
9. ம் ஸிம்ஹகரணமும் பெற்ற உத்திரத்து நாள், தென்னரி

குறிப்புரை.

1–2. **புவநேக வீர** – *புவந ஏக வீர, உலகத்துக்கு ஒரே வீரனாய்;* **சந்த்ரகுல ப்ரதீப** - *சந்திர குலத்தில் தோன்றிய விளக்கான;* **கோ ஜடிலவர்ம்ம** – *கோமகனான சடையவர்மன்; ஜடிலம் – சடை; சோழ அரசர்கள்* பரகேசரி, இராசகேசரி *என்னும் பட்டப் பெயர்களைத் தமக்குள் மாறி மாறி வழங்கியது போல, பாண்டிய மன்னர்கள்* சடையவர்மன், மாறவர்மன், *என்னும் பட்டப் பெயர்களைத் தமக்குள் மாறி மாறி வைத்து வழங்கி வந்தனர்.*

3. **கோநே ரின்மை கொண்டான்:** *இது சோழ மன்னரும் பாண்டிய மன்னரும் தம் பெயர்களுக்குமுன் சிறப்பாகத் தரித்துக் கொள்ளும் ஒரு பட்டப்பெயர். 'தனக்கு ஒப்பான அரசனை இல்லாதவன்' என்பது இதன் பொருள்.*

4–5. **பெருமாள் அபிராம பராக்கிரமபாண்டிய தேவர்:** *இது குலசேகரபாண்டியனுடைய தந்தையின் பெயர்.* பெருமாள் *என்பது* 'உடையார்' *என்பது போன்று அரசர் பெயர்களுக்குமுன் சிறப்பாக வழங்கும் சொல்.* **நந்தநர்** – *மகனார்;* பராக்கிரமபாண்டியனுடைய *மற்றொரு பெயர்* குலசேகர தேவர். *இதனால் இவன் அரிகேசரி பராக்கிரமதேவனின் வேறு என்பது போதரும்.*

6. **யாண்டு... ... ...மூன்றுவது:** *குலசேகர பாண்டியனது ஆட்சியின் மூன்றுவது ஆண்டு; அது சகம் 1467 ஆம் ஆண்டு என்பது.* இனி, *சாலிவாகன சகாப்தம் 1467ல் மூன்றுவது தடவையாகச் செய்த தருமம் என்பாருமுளர்.* **சகாப்தம்** – *சாலிவாகன சகாப்தம்: அது கி. பி. 78 முதல் தொடங்கும் ஓர் ஆண்டுமானம்.*

7. **விஸ்வாவஸுவர்ஷம்** – *விசுவாசு ஆண்டு; இது அறுபது ஆண்டுகளில் முப்பத்தொன்பதாவது ஆண்டு;* **அபரபக்ஷம்** - *கிருஷ்ண பட்சம், தேய்பிறைக் காலம்.*

8–9. **ஏகாதசி**–*முதலாவது திதி;* **திதி** *என்பது, திதி, வார்ம், நாள், யோகம், கரண மென்னும் பஞ்சாங்கங்களுள் ஒன்று.* **சுக்ரவாரம்** – *வெளிக்கிழமை;* **வைத்ருதி யோகம்** – *வைருதி யோகம், இருபத்தேழு யோகங்களில் ஒன்று.* **ஸிம்ம கரணம்**–*பதினேரு காரணங்களுள் ஒன்று.*

10. நாட்டு செங்கோட்டையில் உடையார் குலசே—
11. கரமுடைய நயினுற்கு தேவதானம் பாட்டமாக
12. குடுத்த நிலம் அரைமாவுக்கு நாம் சேர்த்துக் கொடுத்த
13. நிலமாவது, மேற்படி நாட்டு மேற்படியூரில்
14 மேற்படியார் அஞ்சாலியில் மேல்வாரம் தவிர்த்து
15. க் குடுத்த குளப்புரவு பதினென்றுங் கண்ணுறுதடி
16. ஆறு நிலம் அரைக்காணி முந்திரிகை பன்னிரண்—
17. டாங் கண்ணுறு தடி எட்டு நிலம் அரைக்காணி மு—
18. ந்திரிகை பதின்மூன்றுங் கண்ணுறு தடி அஞ்சு
19. நிலம் அரைக்காணி இதுவும் ஆக நிலம் அரை மாவும்

கரணம் – லக்கனம். உத்திரத்து நாள் - இருபத்தேழு நாட்களுள் பன்னிரண்டாவது நாள், உத்தர நாள் என்பது.

இச சாசனத்தில், சாசனம் தோன்றிய காலத்தைக் குறிக்குமிடத்து முதலில் அரசனது ஆட்சியின் ஆண்டும், பின் அதற்குச் சரியான சக வருடமும், அதன்பின் தமிழ் ஆண்டுடன் மாதம், பட்சம், திதி, வாரம், நாள், யோகம், கரண முதலியனவும் சொல்லியிருப்பது குறிப்பிடத் தக்கதாகும.

தென்னுரி நாடு: இது பாண்டிய நாட்டுப் பிரிவுகளில் ஒன்று; 'தென் வாரி நாடு' என்று இருத்தல் வேண்டும் போலும்

10–11. உடையார் குலசேகரமுடைய நயினுர்: இது செங்கோட்டை சிவன்கோயில் சுவாமியின் பெயர். தேவதானம் பாட்டமாக குடுத்த- கோயில் பாட்டமாகக் கொடுத்த; தேவதானம் என்பது, இங்குக் கோயிலையும் அதன் அதிகாரிகளையும குறிக்கும்; பாட்டம் - குத்தகை; ஒரு வகை வரி எனினுமாம்

12-18. அரைமாவுக்கு – அரைமா நிலத்தோடு; மா-100 குழி நிலம். நாம்: இங்கு குலசேகரப் பாண்டியனைக் குறிக்கும். மேற்படி...... ......மேற்படியார் - மேலே கூறிய தென்னுரி நாட்டுச் செங்கோட்டை உடையார் குலசேகர நயினுர்; அஞ்சாலி - வரி வகை; நிலவருவாயில் ஐந்தில் நான்கு பங்கைக் குடிகள் தருவது எனினுமாம் 'அஞ்சாலி' என்பதற்கு 'நெல்' என்று பொருள் கொள்வாருமுளர்.

மேல் வாரம் – விளைச்சலிலிருந்து சொந்தக்காரருக்குக் கொடுத்தற்குரிய தானியம். தவிர்த்து – நீக்கி குளப்புரவு – குளத்தின் நீர் பாய்ந்து சாகுபடியாகத் தகுந்த நிலம்; கண்ணுறு – பசான வாய்க்கால்; நஞ்செய் பிரிவு எனினுமாம்.

பதினென்றுங் கண்ணுறு தடி ஆறு – பதினோராவது கண்ணுற்று ஆருவது வயல் என்றபடி. தடி – வயல்; அரைக் காணி — $\frac{1}{160}$; முந்திரிகை – $\frac{1}{320}$.

19 ஆக நிலம் அரைமாவும்: பதினென்றும் கண்ணுற்று ஆருவது வயல் நிலத்தில் $\frac{3}{320}$ மாவும், பன்னிரண்டாம் கண்ணுற்று எட்டாவது

20. நாளது முதலுக்கு நாங்கொள்ளும் முறைபாடு எப்பேர்ப்
21. பட்டதும் நம்வரியிலார் கணக்கிலும் தவிர்த்து ஆச
22. ந்த்ர தாரவற் செம்பிலும் சிலெயிலும் வெட்டி கை—
23. ய்யாண்டு கொள்ளவும் துல்யம் பாற்க இவை
24. ... ...

வயல் நிலத்தில் $\frac{3}{320}$ மாவும், பதின்மூன்றும் கண்ணாறு ஐந்தாவது வயல் நிலத்தில் $\frac{1}{160}$ மாவும ஆக அரை மா ($\frac{1}{40}$) நிலமும என்றபடி.

20–21. **நாளது முதலுக்கு** – *நாளது தேதி முதல்; அதாவது குல சேகரபாண்டிய தேவருக்கு ஆண்டு மூன்றாவது முதல் என்றபடி;* **நாங் கொள்ளும் முறைபாடு** – *நாம் வாங்கும வரி; முறைபாடு – அரசிறை.*

23–24. **ஆசந்த்ர தாரவம்**–*சந்திரனும் நட்சத்திரங்களும் உள்ள அளவும்; தாரவம் –தாரகை, நட்சத்திரம்.* **செம்பிலும் சிலெயிலும் வெட்டி**–*செம்பிலும் கல்லிலும் வெட்டி; சிலே – கல்.* **கையாண்டு**–*அனுப வித்து; துல்யம்–இவை சரி; கையொப்பம் எனினுமாம்.*

பயிற்சி வினாக்கள்

(1) குலசேகரதேவ பராக்கிரம பாண்டியன் சாசனம் எங்குளது? அதில் காணப்படும் செய்திகள் யாவை? (2) குலசேகர தேவ பராக்கிரம பாண்டியன் சாசனத்தின் துவக்கத்தில் காணப்படும் மங்கல மொழி களையும், அவற்றின் பொருளையும் எழுதுக. (3) குலசேகர தேவ பராக் கிரம பாண்டியன் மற்றொரு பெயர் யாது? அவனுடைய தந்தை பெயர், சிறப்பு முதலியன எங்ஙனம் கூறப்பெற்றுள்ளன? (4) குலசேகர தேவ பராக்கிரம பாண்டியன் சாசனம் ஏற்பட்ட காலம் எங்ஙனம் கூறப்பெற்றுள்ளது? அதிலிருந்து நாம் தெரிந்துகொள்வது யாது? (5) குலசேகர தேவன் யாருடைய மகன்? அவன் செய்த தானத்தையும் காலத்தையும் எழுதுக. (6) குலசேகரதேவ பராக்கிரம பாண்டியன் தானமாகக் கொடுத்த அரைமா நிலத்துக்குரிய வயல் அளவுகள் எங்ங னம் குறிக்கப் பெற்றுள்ளன? சாசனத்தில் கண்டபடி எழுதுக. (7) பாண்டிய குலாசநி வளநாடு, தென்னாரி நாடு, வெங்கால நாடு, வேணாடு – இவை இப்போது எப்பிரதேசங்களாகச் சொல்லத் தக்கன? (8) சேர நாட்டுத் தலங்களாகக் குறிப்பிடப் பட்டவை யாவை? அவை யார் யார் காலத்தில் கூறப்பட்டுள்ளன? (9) பொருள் தருக:— நந்தநர், சுக்ரவாரம், பாட்டம், அஞ்சாலி, மேல்வாரம், குளப்புரவு, கண்ணாறு, தடி, மா, காணி, முறைபாடு, வரியிலார், சிலே, துல்யம், பொன்நேமி. (10) விளக்கம் தருக:- சுபமஸ்து, ஜடிலவர்ம்மன், சகாப்தம் ௲சளசூ௰எல் மூன்றாவது, தேவதானம் பாட்டமாக, பதினொன்றாங் கண்ணாறு தடி ஆறு நிலம் அரைக்காணி முந்திரிகை, ஆசந்த்ர தாரவம், கல்லிலும் சிலெயிலும் வெட்டி. (11) உடையார், பெருமாள்–இவை கல்வெட்டுக் களில் எந்தெந்தப் பொருளில் யார் யாரைச் சுட்டுகின்றன? (12) பாண் டிய அரசர்களுடைய ஆட்சியைப்பற்றிக் குறிப்பிடுக.

30. வீரபாண்டியன் சாசனம் *

முன்னுரை

வீர பாண்டியன் சாசனம் என்பது, கோச்சடையபன்மரான திரிபுவன சக்கரவர்த்திகள் ஸ்ரீ வீரபாண்டியதேவன் † காலத்தில், அவன் ஆட்சியின் நாற்பத்திரண்டாவது ஆண்டு ஏற்பட்ட சாசனமாகும். இஃது புதுக்கோட்டையைச் சேர்ந்த

* Pudukkottai State Inscriptions, No. 438, p. 308.

† இவன் மாறவர்மன் குலசேகரபாண்டியன் இரு புதல்வர்களில் ஒருவன். சடையவர்மன் சுந்தரபாண்டியன் என்பான், குலசேகரபாண்டியனுடைய மற்றொரு மனைவிக்குப் பிறந்த மகன். வீரபாண்டியன், சுந்தரபாண்டியன் இருவர்களில் வீரபாண்டியன் வயதில் இளையவன்;எனினும் குலசேகரபாண்டியன் பாண்டிய நாட்டு ஆட்சியை வீரபாண்டியனுக்கே கொடுத்தான். அதனால், கி. பி. 1310ல் சுந்தரபாண்டியன் தன் தந்தையான குலசேகர பாண்டியனைக் கொலை செய்து, பாண்டிய நாட்டைத் தன் வசப்படுத்திக் கொண்டான். வீரபாண்டியனுக்கும் சுந்தரபாண்டியனுக்கும் பெரும் பகை மூண்டது; இருவரும் பாண்டிய நாட்டின் வெவ்வேறு பகுதியில் இருந்து ஆட்சிபுரிந்து வந்தனர்.

இக் காலத்தில்தான் அல்லாவுடீன் கில்ஜியின் படைத் தலைவனான மாலிக்காபூர் பாண்டிய நாட்டின் மீது படை எடுத்து வந்து, நாட்டைக் கொள்ளை யடித்து ஏராளமான பொருள்களைக் கவர்ந்து சென்றான். இந்நிலையில் சேரமன்னனான இரவிவர்மன் குலசேகரன் என்பான் பாண்டிய நாட்டின் மீது படை எடுத்துச் சென்று, அந்நாட்டின் சில பகுதிகளைத்தன்னாட்சிக் குட்படுத்திக் கொண்டான். சிற்றரசர்களும் பாண்டிய மன்னர்களுக்குத் திறை செலுத்தாது தனியாட்சி புரியத் தலைப்பட்டனர். அவர்களில் தொண்டை மண்டலத்து படைவீட்டு இராச்சியத்து சாம்புவராயர்களும், பாண்டிய நாட்டிலிருந்த வாணதிராயர்களும் குறிப்பிடத் தக்கவராவர்.

வீரபாண்டியன் ஆட்சி காலத்தின் பிற்பகுதியில் டில்லி மகமது துக்ளாக் என்பவனால் அனுப்பப்பட்ட ஜவாலுடீன் அசன்ஷா என்ற மகமதியர் தலைவன், வீரபாண்டியனை வென்று அவன் நாட்டைக் கைப்பற்றினன். அவன் சிலகாலம் மகமது துக்ளாக் பிரதிநிதியாக மதுரையில் இருந்து ஆட்சி புரிந்தான். பின் டில்லி மன்னர் தொடர்பை நீக்கித் தனியாட்சி செய்தான். இவ்வாறு மகமதியராட்சி பாண்டிய நாட்டில் கி. பி. 1330 முதல் 1377 வரை நடை பெற்றது. இக்காலத்தில் பாண்டிய நாடு மகமதியரால் கொள்ளையடிக்கப்பட்டது; சமயக்கொள்கைகள் அடியோடு அழிக்கப்பட்டன.

கி. பி. 1364ல் பாண்டிய நாட்டு மக்களையும் சமயங்களையும் மகமதியராட்சியினின்றும் காப்பதற்கு விஜயநகர மன்னனான குமார கம்பண்ணன் என்பான் ஒரு பெரும் படையுடன் தமிழ் நாட்டில் புகுந்து மகமதிய

திருமய்யம் தாலுகா நெய்வாசல் என்னும் ஊரிலுள்ள அகத்தீசு வரர் கோயில் நடுவிடத்துக் கருப்ப கிருகத்தின் வடபுறச்சுவரில் காணப்படுகிறது. தமிழ் மொழியில் கிரந்த எழுத்துக்கள் கலந்து எழுதப்பட்டது; நான்கு பத்திகளாக அமைந்தது.

இச்சாசனத்தின் முற் பகுதியில், வீரபாண்டிய தேவன் 'கோச்சடையபன்மர்' எனவும், 'திரிபுவன சக்கரவர்த்திகள்' என வும் குறிக்கப்பட்டுள்ளான். பின்னர், கேரளசிங்க வளநாட்டு அதளையூர் நாட்டு தேனூற்றுப்போக்கி லமைந்த சூரைக்குடி என்னும் ஊரிலுள்ள 'சூரைக்குடிப்' பொன்னன் என்னும் மறு பெயருடைய அழகிய பெருமாள் என்பான், கல்வாயில் நாட்டி லுள்ள நாட்டவரிடமிருந்து சில நிலங்களை விலைக்கு வாங்கி, வரி நீக்கி, அந்நாட்டைச் சேர்ந்த நெய்வாசல் என்னும் ஊரிலுள்ள திருவகத்தீசுவரமுடையார் கோயில் இறைவற்குத் தானமாகக் கொடுத்து, அதைக் குடி நீங்காக் காணியாக அந்த நிலத்தில் பயிர் செய்வதற்குத் தானே ஏற்று, அக் கோயில் இறை வற்கு வாரமாக, பசானம் $\frac{1}{4}$ பகுதியும், கோடை $\frac{1}{5}$ பகுதியும், கரும்பு, மஞ்சள், அடைவாழை முதலியன $\frac{1}{6}$ பகுதியும் கொடுத்து வந்ததுமன்றி, அக்கோயில் ஸ்ரீகாரியஞ் செய்பவர் களுக்கும், தேவ கன்மிகளுக்கும் தனித்தனி குறுணி நெல்லும் கொடுத்த செய்தி கூறப்படுகிறது.

வீரபாண்டியன் கி.பி. 1296 முதல் 1342 வரை ஆண்டான். இச்சாசனம் அவன் ஆட்சியின் நாற்பத்திரணடாவது ஆண்டு ஏற்பட்ட தெனவே, இதன் காலம் கி. பி. 1337 ஆம் ஆண்டு என்னலாம்.

ராட்சியைக் கவிழ்த்து, அங்கங்கே வாணாதிராயர்கள் போன்ற குறுநில மன்னர்களை நியமித்து, பாண்டிய நாட்டை ஆட்சி புரிந்தான். அதனால் பாண்டிய மன்னர் தங்கள் நாட்டை யிழந்து தவிக்கலாயினர். வாணாதி ராயர்கள் தங்களை 'மதுராபுரி மகாநாயகர்' எனவம், 'பாண்டிய குலாந் தகர்' எனவும் கூறிக் கொண்டனர்.

பாண்டிய மன்னர் இவ்வாறு மதுரையைக் கைவிட்டுத் தென் பாண்டி நாட்டை அடைந்து, பதினான்காம் நூற்றாண்டின் இறுதிக்கால முதல் பதினேழாம் நூற்றாண்டின் இறுதிக்காலம் வரை ஆட்சி புரிந் தனர். அவர்களில் ஒருவன் வீரபாண்டியன். இவன் கி. பி. 1296 முதல் 1342வரை ஆட்சி புரிந்ததாகச் சொல்லப்படுகிறது. கோச்சடையவர்மன், திரிபுவன சக்கரவர்த்திகள் முதலியன இவனுக்கு வழங்கிய சிறப்புப் பெயர்களாகும்.

சாசனம்

1. ஸ்வஸ்திஸ்ரீ கொச்சடைய பன்மரான திரிபுவந சக்ர வத்திகள் ஸ்ரீ விரபாண்டிய தெவற்கு யாண்டு சயிஉவது தநு நாயற்று அபரபக்ஷத்து துவாதஸியும் வெள்ளிக்கிழமையும் பெற்ற அனிஷத்துநாள் கெரளசிங்க வளநாட்டு அதளையூர் நாட்டுத் தெநாற்றுப் பொக்கு சூரைக்குடி பொன்னன் அழகிய

குறிப்புரை

1. கொச்சடைய பன்மரான திரிபுவந சக்ரவத்திகள் ஸ்ரீ விரபாண்டிய தேவர்: *கோச் சடையபன்மர், திரிபுவந சக்கரவர்த்திகள் இரண்டும் வீரபாண்டிய தேவனுக்கு வழங்கிய சிறப்புப் பெயர்கள்.* இப்பெயர்கள் *முன்னர் குலசேகர தேவனுக்கும் வழங்கியுள்ளமை காண்க.* யாண்டு சயிஉவது—*ஆட்சியின் 42வது ஆண்டில்; வீரபாண்டியன் கி. பி. 1396ல் பட்டமெய்தினன். எனவே அவன் ஆட்சியின் 42வது ஆண்டு என்பது கி பி. 1337 ஆம் ஆண்டாகும்.*

தநு ஞாயிறு – *தநுமாதம், மார்கழி மாதம்* (Month Markali—January): *இங்கு தநுஞாயிறு என்பதற்கு, தநுராசியில் ஞாயிறு இருந்த காலத்தைக் குறிக்கும்.* அமரபக்ஷம் — *தேய்பிறை காலம்;* துவாதஸியும் வெள்ளிக்கிழமையும் பெற்ற அனிஷந்துநாள் – *இரண்டாவது திதியும் வெள்ளிக்கிழமையும் கூடிய அனுட நாள்; அனிஷத்து நாள் – அனுட நாள், 19 வது நாள்; நாள்—நட்சத்திரம்.*

கெரளசிங்க வளநாட்டு அதளையூர் நாட்டுத் தெநாற்றுப் போக்கு சூரைக்குடி: *சூரைக்குடி என்னும் ஊர் கேரளசிங்க வளநாட்டைச் சேர்ந்த அதளையூர் நாட்டில் பாயும் தேனாறு என்னும் ஆற்றுப் போக்கில் இருந்தது என்பது; எனவே, வீரபாண்டின் காலத்தில் பாண்டிய மண்டலம், பல வளநாடுகளாகவும், வளநாடு பல நாடுகளாகவும், நாட்டின் பகுதிகளாகவும பிரிக்கப்பட்டிருந்தன என்று தெரிகிறது. கோளசிங்க வளநாடு இப்பொழுது இராமநாதபுரத்தி லிருக்கிறது.*

வளநாடு *என்பது, சில நாடுகளையும் கூற்றங்களையும் தன்னகத்தே கொண்டு விளங்கிய பெரு நிலப்பரப்பு; பாண்டிய மண்டலத்தில் இத்தகைய வளநாடுகள் கி பி 9 ஆம் நூற்றாண்டு முதலாக இருந்தசென்று தெரிகிறது அவை* மதுரோதய வளநாடு, வரகுணவளநாடு, கேரளசிங்க வளநாடு, திருவழுதி வளநாடு, சீவல்ல பவளநாடு, பராந்தக வளநாடு, அமிதகுண வளநாடு *முதலியனவாம்.* இவை *அனைத்தும் பாண்டிய மன்னர்களின்* இயற்பெயர், சிறப்புப் *பெயர்களோடு சார்த்திக் கூறப்பட்டிருந்தல் குறிப்பிடத் தக்கது.*

நாடு *என்பது, ஆட்சி நன்கு நடைபெறுமாறு சங்க கால முதல் தமிழ் நாடுகளில் இருந்த நிலப்பிரிவாகும். பிற்காலங்களில் சில நாடுகள்,* 'கூற்றங்கள்' *எனப்பெயர் பெற்றன வென்று தெரிகிறது. ஆதியில்* 'ஒல்லையூர் நாடு' *என்று பெயர் பெற்றிருந்த நாடு, கி. பி. 10, 11 ஆம் நூற்றாண்டுகளில்* 'ஒல்லையூர்க் கூற்றம்' *எனப்பெயர் பெற்றுள்ளமை இதற்குச் சான்றாகும். இனி, அதளையூர் நாடு,* 'அடலையூர் நாடு' *என்றும்*

பெருமாளென் நியமப் பற்றுக் கல்வாயில் நாட்டு நாட்டவர் பக்கல் நான் விலை கொண்டு நாட்டவர் பக்கல் இறையிலி பண்ணிக்கொண்ட நெல்வாசல்பால் காடவதரையர் குடிக் காடு வளையிற் சுற்றுமுற்றும் கல்வாயில் நாட்டு நெல் வாசல் உடையார் திருவகத்திஸ்வரமுடைய நாயனுற்கு அமுதுபடி உள்ளிட்ட விஞ்செனங்களுக்கு தெவதாநமாக குடுத்த காடவதரையர் குடிக்காடு வித்தலி கூழிலி

கல்வெட்டுக்களில் வழங்கியுள்ளது. தெநாற்றுப் போக்கு என்பது, 'தேனாற்றங்கரை' என்று பொருள்படும்.

சூரைக்குடி பொன்னன்: சூரைக்குடி என்னும் ஊரிலுள்ள பொன்னன்: அவன் பெயர் அழகிய பெருமாள் என்றும் வழங்கு மென்பது, 'சூரைக்குடி பொன்னன் அழகிய பெருமாள்' என வரும் தொடரால் அறியப்படுகிறது. **அழகிய பெருமாளென்**—அழகிய பெருமாளாகிய நான்; இச் சாசனம் இவன் தந்த உறுதிமொழியைக் கூறுதலின், இவ்வாறு குறிப்பிடப் பட்டது. **நியமப்பற்று** — கோயில் நிலம்; நியமம் — கோயில்; பற்று - நிலம். **கல்வாயில் நாட்டு நாட்டவர் பக்கல்** — கல்வாயில் நாட்டு சபையாரிடத்து. நாட்டவர் — ஊர்ச்சபையார்; நாட்டாண்மைக்காரர் எனினுமாம. பக்கல் -இடம.

விலைகொண்டு —விலைக்கு வாங்கி; **இறை யிலி பண்ணிக்கொண்ட**— வரியில்லாமல் ஆக்கிக் கொண்ட; இறை—வரி; இறையிலி-வரியில்லாமை; **நெல் வாசல் பால்** — நெல் வாசல் என்னும் ஊர்ப் பகுதியில்; இது இப்பொழுது 'நெய்வாசல்' என்று வழங்குகிறது.

காடவதரைமர் குடிகாடு வளைவில் — காடவதரையர் என்பார் குடியிருந்த பகுதியில்; காடவதரையர் என்பார் பல்லவர் குடியைச் சேர்ந்தவராவர். இவர்கள் **காடவர், காடவராயர்** எனவும் அழைக்கப்படுவர். **சுற்றுமுற்றும்**—சுற்றிலும்; நான்கு பக்கங்களிலும் எனினுமாம்.

நெல்வாசல் உடையர்—நெல்வாசல் எனறும் ஊரிலுள்ள இறைவன்; இவர் அகத்தீசுவரமுடைய நாயனுர் என்று அழைக்கப்படுவர். நெல் வாசல் என்னும் ஊர், கல்வாயில் நாட்டில் உள்ளது. **அமுதுபடி**—அரிசி; **உள்ளிட்ட**—உட்பட; **விஞ்செனங்களுக்கு**-கறி வகைகளுக்கு; விஞ்செனம்-வெஞ்சனம், கறியமுது, **தேவதாநம்**—கோயிலுக்குத் தானமாக இடப்பட்ட இறையிலி நிலம்; **காடவதரையர் குடிகாடு**: காடவ தரையர் குடியிருக்கும் நிலப்பகுதி; இதனை அழகிய பெருமாள் விலைக்கு வாங்கி அகத்தீசுவரர் கோயிலுக்குத் தானமாகக் கொடுத்தான் என்பது. **வித்திலி கூழிலி எரிலி**

2. எரிலியாகக் குடிநிங்காக்காணியாக நான் உழுது இந்நயினுர்க்குப் பசானம் நாலிலொன்றுங் கொடை ஐஞ்சில் லொன்றுங் கரும்பு மஞ்சன் அடைவாழை ஆறில் லொன்று மாக விழுக்காடு இடுவெனுகவும் இப்படி உழுமிடத்து தெவ கன்மிகள் ஸ்ரீ காரியஞ் செய்வார்கள் — களுக்குத் தெவர் அரசு கண்காணி மீசு குறுணியுமிட்டு இவர்கள் கண்காணிப்

யாக—விதைத்தல், பயிர் செய்தல், அறுவடை செய்தல் ஆகிய பயிரிடு தொழில் செய்வாரின்றி; வித்திலி —விதைப்பாரின்றி; வித்து — விதை; கூழிலி—பயிர் செய்வாரின்றி; கூழ் — பயிர்; எரிலி — எறிலி; அறுவடை செய்வாரின்றி; எறிதல் — அறுத்தல். இனி 'எரிலி' என்பதை 'ஏர் இலி' எனப் பிரித்து, உழுவாரின்றி' என்றும் பொருள் கொள்வர்.

2. **குடிநீங்காக்காக் காணியாக** —குடியிருப்போர் நீங்காத நிலமாக; குடி — குடியிருப்போர்; காணி — நிலம்; **இந் நாயினர்,** — நெல் வாசல் அகத்தீசுரமுடைய நாயனுர்; நாயினுர், — நாயனுர் இறைவர்," **பசானம்**— பசான் நெல்லின் அறுவடைக்காலம்; அஃதாவது சித்திரை மாத அறு வடை; பசான் என்பது சித்திரை மாதத்தில் அறுவடையாகும் ஒரு நெல் வகை. **கொடை** — கோடை, கோடைப் பயிர் அறுவடையாகும் காலம்; **அடை வாழை:** அடையும் வாழையும், வாழை இலையும் காயும்; இனி, 'வாழை அடை' என மாற்றி, 'வாழையிலை' எனப்பொருள் கொள் ளினுமாம். **விழுக்காடு**-வீதம்; **இடுவேனுகவும்**—கொடுப்பேனுகவும். பசான அறுவடையில், நாலில் ஒன்றும், கோடை அறுவடையில் ஐந்தில் ஒன்றும், கரும்பு, மஞ்சள், வாழையிலை முதலியவை ஆறில் ஒன்றும் கொடுப்பேனுகவும் என்பது **உழுமிடத்து** — உழுது பயிர் செய்யுங் காலத்தில்.

தெவ கன்மிகள் — கோயில் இறைவன் காரியங்களைச் செய்பவர்கள்; **ஸ்ரீகாரியம் செய்வார்கள்**—கோயில் காரியங்களை மேல் பார்வை செய்ப வர்கள்; **தேவர் அரசு கண்காணி மீசு**—இறைவன் காரியங்களைக் கண் காணிப் போர்க்குத் தானமாகக் கொடுக்கப்படும் கள நெல்; மீசு — பொலி; தருமச் செலவின் பொருட்டு முதலில் கொடுக்கப்படும் கள நெல்; தேவகன்மிகள், ஸ்ரீகாரியம் செய்வோர் முதலியவர்களுக்குத் தான மாகக் கொடுக்கப்படும் நெல், 'தேவர் அரசு கண்காணி மீசு' எனப்பட் டது. இதனைப் பின்னர் '**கண்காணிப்படி**' எனக் கூறியிருத்தலும் காண்க. இனி, 'மீசு' என்பதை மிராசு' எனக்கொண்டு, 'பரம்பரையாகக் கொடுக் கப்படும் உரிமைத் தானம் என்றும் பொருள் கொள்வர். **குறுணியுமிட்டு**- குறுணி நெல்லைத் தானமாகக் கொடுத்து; **பறிமாறுதல்** — கொடுத்தல்.

படிப் பரிமாறுவதாகவும் கொடடர் கூழரி உழமைச்சூடு குடிக் கலி பறையன் கண்டபடி பெறுவெனுகவும் புஞ்சை உள்ளது இம்மரியாதி பெறுவெனுகவும் இப்படி சம்மதித்து இன்ஞயனுர்க்கு இக் குடிக்காடு சந்திராதித்தவற் செல்லக் கல் வெட்டிக் குடுத்தென் அழகிய பெருமாளென் உடையார் திருவகத்திஸ்வரமுடைய நாயனுற்க்கு இப்படிக்கு அழகிய பெருமாள் எழுத்து.

3. இப்படிக்கு நாட்டுக் கணக்கு மயிலெறும்

4. பெருமாள் ஸிவஞாந தெவென் ஆன உருப நாராயண முவெந்த வெளான் எழுத்து

கொட்டர் கூழரி உழமைச்சூடு குடிக்கலி பறையன் கண்டபடி பெறுவெனுகவும்:— இதனுல் கொட்டர், கூழரி, உழமைச்சூடு, குடிக்கலி, பறையன் முதலியோர் ஊரில் கடமை பெறுபவர்கள் என்று தெரிகிறது. இவர்களில் கொட்டர் எனபோர சுழஞ்சியம் காப்போர் எனவும், கூழரி என்போர், நெற்பயிர் காப்போர் எனவும், உழமைச்சூடு என்போர், சூட்டு நெல் காப்போர் எனவும் தெரிகிறது. பறையன் என்பான் பதிணெண் குடிமக்களுள் ஒரு வகையினன்: பறை கொட்டுபவன் போலும். கண்டபடி—பெறுவது போல.

புஞ்சை உள்ளது - புஞ்சை நிலத்தில் விளையக் கூடியவை; அவை கரும்பு, மஞ்சள், வாழை முதலியன. இம்மரியாதி பெறுவெனுவும்—இந்த முறையில் பெறுவேனுவும்.

நாயனுர் — இறைவர்; குடிக்காடு — ஊர், ஊர் நிலம்; சந்திராதித்தவல் — சந்திரசூரிய ருள்ளளவும்; கல் வெட்டிக் குடுத்தென் — கல்லில் வெட்டி உறுதிசெய்து கொடுத்தேன்.

3. நாட்டுக்கு — இந்த நாட்டுக்கு; அதளையூர் நாட்டுக்கு; நாட்டுக் கணக்கு — நாட்டுக் கணக்கனுன; அதளையூர் நாட்டுக் கணக்கன் பெயர் மயிலேறும் பெருமாள் சிவஞானதேவன் என்பது; அவனது மற்றெரு பெயர். 'உருபநாராயண மூவேந்த வேளான்' என்பதாகும்.

எனவே இச் சாசனத்தில் கையொப்பமிட்டவர்கள், இச்சாசனத்தை உறுதிசெய்து கொடுத்த அழகிய பெருமாளும், இச்சானத்தை எழுதிய நாட்டுக் கணக்கு மயிலேறும் பெருமாள் சிவஞான தேவனுன உருப நாராயண மூவேந்த வேளானுமாவர் என்க.